Agatha Christie

அகதா கிறிஸ்டி

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை

AND THEN THERE WERE NONE

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை

And then there were none...

அகதா கிறிஸ்டி

தமிழில் :

கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்
சென்னை - 600 017.
தொலைபேசி : 044 - 2433 2682
கிளைகள் : மதுரை ★ கோவை ★ பாண்டி ★ வேலூர்

தமிழ்தேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

மூல ஆசிரியரின் குறிப்பு

என்னைக் கிளுகிளுக்க வைத்துப் புளகாங்கிதமடைய வைத்த இக்கதையின் கருவினை உருவாக்கி முடிப்பதில் அத்தனை சிரமங்கள் இருந்ததாலேயே நான் இந்த நாவலை எழுதினேன். கோமாளித் தனமாகவும் ஆகி விடாமல், கொலைகாரன் யார் என்பது துளியும் தெரிந்தும் விடாமல், பத்து பேர் செத்தாக வேண்டும். மாபெரும் உழைப்பையும் பிரம்மாண்டமான திட்டமிடுதலையும் செலுத்தி இக்கதையினை எழுதினேன். அப்படிப்பட்ட கடும் உழைப்பால் உருவாகியுள்ள இக்கதை எனக்குப் பூரண திருப்தியை அள்ளித் தருகின்றது. கதையில் எல்லாம் தெளிவாயிருக்கும்; ஒளிவு மறைவில் லாமல் வாசகனின் முன்னாலேயே கிடக்கும்; குழப்பி ஏமாற்றவும் செய்யவும்...; ஆனாலும் அனைத்துக்கும் ஒரு மிகச் சரியான அர்த்தமுள்ள விளக்கம் உண்டு! அதனை விளக்க ஒரு முடிவுரை அத்தியாவசியமாகின்றது. தந்திருக்கிறேன். இக்கதை விமரிசையாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மதிப்புரை வழங்கப்பட்டு, மாபெரும் பாராட்டுதல்களை திருப்திகரமாய் அள்ளித் தந்தது. ஆனால், இக்கதையின்பால், அதீத திருப்தி கொண்டுள்ள முதல் நபர், நான் தான்! ஏனென்றால், வேறெந்த விமர்சகனையும் விட, இக்கதையை நுணுக்கமாய் உருவாக்க பட்டப்பாடுகள் அத்தனையையும் அறிந்த ஒரே நபர் - நான் தான்.

அகதா கிறிஸ்டி

அவரது வாழ்க்கைக் குறிப்பில்.

மொழிபெயர்ப்பாசிரியரின் உரை

நாவல்கள் படிப்பதென்பது தனி சுகானுபவம். Novel என்றாலே புதுமை என்பது அர்த்தமாகின்றது. ஆக, கையில் கிடைக்கும் நாவலொன்றில் நிஜமாகவே புதுமையும் இருந்து விட்டதென்றால், வாசகனுக்கு அதை விட சிறந்த ஜாக்பாட் வேறொன்றுமிருந்து விட முடியாது.

அப்படிப்பட்ட ஜாக்பாட் ஒன்று தான் நேயர்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் இந்நாவல்.

உலக துப்பறியும் நாவல்களைப் பட்டியலிடும்போது தவறாது சுலபமாக முதலிடங்களைக் கைப்பற்றி விடும் நாவலாகும் இது. இதன் நாடக வடிவம் வருடக்கணக்காய் இங்கிலாந்து நகரங்களில் நடைபெற்று சலிப்பே ஏற்படுத்தாது வெற்றி கண்டுள்ளது. சில மாறுதல்களோடு கும்நாம் என இந்தியிலும் படமாக வந்துள்ள இந்நாவலிலேயே சில சில மாற்றங்களை உண்டுபண்ணி, நாடகமாக்கி, ரசிகர்களைத் திக்குமுக்காடச் செய்து மகிழ்ந்திருக்கிறார் அகதா கிறிஸ்டி என்பது கூடுதல் சுவையான சேதி.

அப்படியென்ன இந்நாவலில் புதுமையுள்ளது என கேட்கிறீர்களா?

அறிமுகமற்ற பத்து பேர், சமயோஜிதமாக, அவர்கள் அறியாமலேயே, தனித்திருக்கும் ஒரு சுற்றுலா தீவுக்குக் கடத்தப்பட்டு விடுகிறார்கள். எதற்காக? கொன்று போட!

அனைவரும் தீவில் குடியேறும் அன்று மாலையே அவர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்டு விடுகிறார்.

ஒன்பது!

தப்பித்து விடலாம் என்றால், தீவிலிருந்து இந்தாண்டை அந்தாண்டை நகர விடாமல் வானிலை படு மோசமாகி விட, திட்டமிடக் கூட நேரம் தராமல் விழுகிறது அடுத்த அடி!

எட்டு!

அப்போது தான் மீதமிருக்கும் அனைவரின் கண்களிலும் 'கூடிய பத்து சிப்பாய்களில் ஒவ்வொருவராக இறக்கத் துவங்க, கடைசியில் அங்கு ஒருவர் கூட இல்லை...' எனும் ரீதியில் செல்லும் ஒரு குழந்தைக் கவிதை படுகின்றது.

ஆக, நடப்பது திட்டமிட்ட கொலை மட்டுமல்ல! கொலைகாரன் இருப்பவர்களில் ஒருவனே!

இந்தப் புரிதல் ஜீரணிக்கப்படும் முன்னரே, அடுத்தொரு கொலை விழுந்தே விடுகின்றது.

ஏழு!

ஆஹ்! 10, 9, 8, 7, ...!

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை!

ஒருவர் கூட இல்லையா? எப்படி இது சாத்தியம்? வந்தது பத்து பேர். ஒவ்வொருவராக கொல்லப்படுகிறார்கள். இவர்களில் ஒருவன் தான் கொலைகாரன் என்றால், எப்படிப் பத்து பேரும் இறக்க முடியும்? அப்போது, வெளியிலிருந்து யாராவது இயங்கியிருப்பார்களா?

கேள்விகளோடு, உலகின் நிறம்மாறா ஒரே த்ரில்லருக்குள், விடு ஜூட்...!

அன்பன்,

முனைவர் கொரட்டூர் **கே. என். ஸ்ரீனிவாஸ்,**

மனை எண் 252, இரண்டாவது தெரு,

டி. என். ஹெச். பி. காலனி,

கொரட்டூர், சென்னை - 600 080.

தொலைபேசி: 044 - 2635 8948

மின்னஞ்சல்: srinivaskns@yahoo.co.in

கதாபாத்திரங்கள்

சிப்பாய் தீவு	இது, டேவன் கடற்கரையை ஒட்டி, கடலுக்குள் ஒரு மைல் தூரம் போல உள்ளடங்க அமைந் திருக்கும், ஓர் உல்லாசத் தீவு.
மோரீஸ்	போதை மருந்து விற்பனை- பெண்கள் மற்றும் வீடு வாங்கி விற்றல்- உல்லாசப் பிரயாணங் களுக்கு ஏற்பாடு செய்தல்- என வாழ்பவன்.
ஃப்ரெட்	படகோட்டி

சிப்பாய் தீவில் உல்லாசமாய் சில நாட்களைக் கழிக்க வரும் பிரஜைகள்:

திரு ஜஸ்டிஸ் வார்க்ரேவ்	ஓய்வு பெற்ற முதன்மை நீதிபதி
மிஸ் வெரா க்ளேதார்ன்	இளையவள் - பள்ளிக்கூட விளையாட்டு ஆசிரியை (ஹாகோவை நேசிப்பவள்)
திரு பிலிப் லாம்பர்ட்	ரௌடி - பல ஆபத்தான கட்டங்களைச் சந்தித்தே வாழும் பலசாலி
மிஸ் எமிலி ப்ரெண்ட்	முதிர் கன்னியாஸ்திரி
திரு ஜெனரல் மார்கரெட்	ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி
டாக்டர் (திரு) ஆர்ம்ஸ்ட்ராங்	பிரபல பொது மருத்துவர்
திரு டோனி ஆன்டனி மார்ட்ஸன்	உல்லாசமே குறியாய் கொண்ட ஆணழகுக் காளை
திரு ப்ளோர்	ஓய்வு பெற்ற முதன்மை துப்பறியும் இன்ஸ்பெக்டர்
திரு ரோஜர்ஸ்	சிப்பாய் தீவிலுள்ள ஒரே ஒரு வீட்டின் வேலையாள்.
திருமதி ஏத்தல்	ரோஜர்ஸின் மனைவி

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை

பத்து குட்டி சிப்பாய்கள்.

பத்து சிப்பாய் பையன்கள், விருந்து சாப்பிட போனார்கள்;
ஒருவனின் தொண்டை அடைத்துக் கொள்ள, மிஞ்சினர் ஒன்பது.

ஒன்பது சிப்பாய் பையன்கள், விடிய விடிய பேசி முடித்தனர்;
ஒருவன் மட்டும் நீ...ண்ட நேரம் தூங்கி விட, மிஞ்சினர் எட்டு.

மேலன் கூர்கூரையை எட்டு சிப்பாய் பையன்கள் கூர்ந்துக் கொண்டிருந்தனர்;
ஒருவன் அங்கேயே இருந்து விட முடிவு செய்ய, மிஞ்சினர் ஏழுவர்.

ஏழு சின்ன சிப்பாய் பையன்கள் கழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்;
ஒருவன் தன்னையே பாதியாய் வெட்டிக் கொண்டு விட, மிஞ்சினர் ஆறு பேர்.

ஆறு சிப்பாய் பையன்கள் தேன் அடையோடு விளையாடிப் பார்த்தனர்;
ஒரு குண்டுத் தேனீ ஒருவனைக் கொட்டி விட, மிஞ்சினர் ஐவர்.

ஐந்து சிப்பாய் பொடியன்கள் சட்டம் படிக்கப் போனார்கள்;
ஆலைக் கிடங்குக்குள் ஒருவன் சிக்கிக் கொண்டு விட, மிஞ்சினர் நால்வர்.

நாலு சின்ன சிப்பாய் பையன்கள், கடலுக்குள் ஆட சென்றனர்;
குட்டி மீனொன்று ஒருவனை விழுங்கி விட, மிஞ்சினர் மூவர்.

மூன்று குட்டி சிப்பாய் பையன்கள் மிருகக்காட்சி சாலை போயினர்;
பெரிய கரடி ஒருவனை இழுத்துக் கொள்ள, மிஞ்சினர் இருவர்.

இரண்டு குட்டி சிப்பாய் பையன்கள் சூரிய ஒளியில் உட்கார்ந்துக் கொண்டனர்;
ஒருவன் அப்படியே உருகி விட மிஞ்சியது ஒருவர்.

ஒரே ஒரு சின்ன சிப்பாய் பையன் தனியே விடப்பட;
அவன் ஓடிப் போய் தூக்கில் தொங்கினான்.

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை.

அத்தியாயம் 1

I

முதல் வகுப்பு ரயில் பெட்டியின் ஜன்னலோரமாய் உட்கார்ந் திருக்கும் நீதிபதி வார்க்ரேவ்... சமீபத்தில் நீதிமன்ற உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இந்த ஜஸ்டிஸ்... உதட்டிடுக்கில் பொருத்தியிருந்த சிகரெட்டில் ஓர் இழுப்பினை இழுத்து விட்டு, கையிலிருந்த டைம்ஸ் பத்திரிகையின் அரசியல் செய்திகள் மீது மிக ஈடுபாடாய் கண்களை மேய விட்டுக் கொண்டிருந்தார்.

செய்தித்தாளினை மடித்துக் கீழே வைத்து விட்டு நிமிர்ந்து கம்பிகளின் வழியே வெளியே நோட்டமிட்டார். ஸோமர்-ஸெட் எனும் பகுதியைக் கடந்துக் கொண்டிருக்கிறது ரயில். விழிகளைக் கீழிறக்கிக் கைக்கடியாரத்தைப் பார்த்தார் - இன்னும் இரண்டு மணி நேரங்கள் கடக்க வேண்டியிருக்கின்றன.

'சிப்பாய் தீவு' குறித்து இது வரை என்னவெல்லாம் செய்தித்தாள் களில் வந்திருந்தனவோ அவற்றையெல்லாம் நீதிபதி தன் சிந்தனையால் மேய ஆரம்பித்தார். உல்லாசப் படகுகளில் ஏறி கடலைச் சுற்றி வருவதில் பைத்தியக்காரத்தனமாய் ஆசை கொண்ட ஓர் அமெரிக்க மில்லியனரால் இத்தீவு முதலில் வாங்கப்பட்டுள்ளது. தேவன் கரையையொட்டி உள்ளடங்க அமைந்துள்ள இத்தீவில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பெரிய பங்களா கூட இந்த மில்லியனரின் பெயரில் உள்ளதாம் --- கிளுகிளுப்பாய் நாட்களைக் கழிக்க! இவர் தற்போது குடும்பம் நடத்திக் கொண்டிருக்கும் இவரது மூன்றாவது மனைவிக்கும் தோணி பிரயாணத்துக்கும் ஏழாம் பொருத்தம் என்பது துரதிர்ஷ்டம்! இதனால், பங்களாவையும் தீவையும் சேர்த்து விற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டு விட்டார், அமெரிக்கர். சிப்பாய் தீவின் பெருமையைப் பட்டியலிட்டுப் பல விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வந்தன. பிறகு ஒரு நாள், இத்தீவு விலைக்கு வாங்கப்பட்டு விட்டதாய் --- திரு ஓவன் என்பவரால் --- ஒரு வெளிப்படையான அறிவிப்பு வந்தது. புரளிகளைக் கிளப்பி விட்டு

எழுதும் கிசுகிசுப்பு எழுத்தாளர்களின் கைவரிசை உடனே ஆரம்பமாகியது. உண்மையாய் சிப்பாய் தீவினை வாங்கியிருப்பது --- செல்வி கேப்ரிலி டர்ல், ஹாலிவுட்டின் முன்னணி நடிகை! இது முதல் கிசுகிசு! தன் மீது வெளிச்சம் போடும் விளம்பரங்களிலிருந்தும் அன்புத் தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு தன்னந்தனியாய் சில மாதங்களைக் கழிக்க விரும்புகிறார் கேப்ரிலி டர்ல். இந்த ரீதியில் சினிமா பத்திரிகையான 'தேனீ', சில மாதங்களுக்குத் தீவினை நடிகை வாடகைக்கு எடுத்திருப்பதாய் பந்தல் கட்டியிருந்தது...! இன்னொரு பத்திரிகையோ, நாட்டின் இளவரசர், தனது தேனிலவு கொண்டாட்டத்துக்காக இத்தீவினை வாங்கியிருப்பதாக அட்டையிலேயே போட்டது! சில ரகசிய பரிசோதனைகளுக்காக, கப்பல் படையின் தலைமை, சிப்பாய் தீவினை வாங்கி விட்ட செய்தியை அம்பலமாக்குவதாக, ஓர் அரசியல் பத்திரிகை எழுதியது!

நிச்சயமாய், சிப்பாய் தீவு தான் செய்தியாக விளங்கியது!

தனது சட்டைப் பையிலிருந்து ஜஸ்டிஸ் வார்க்ரேவ் ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்தார். கொஞ்சமும் படிக்க முடியாத அளவுக்குத் தெளிவற்று இருந்தது கையெழுத்து; ஆனால், இங்குமங்குமாய் சில வார்த்தைகள் எதிர்பாரா தெளிவுடன் அமைந்திருந்தன.

என் இனிய லாரன்ஸ் ---
உன்னைப் பற்றி நான் எதுவும் கேள்விப்படாமல் எத்தனை ஆண்டுகள் ---
சிப்பாய் தீவுக்கு வந்தே தீர வேண்டும் ---
மந்திரத்தால் வசியப்படுத்தப்பட்டது போல நம்மை அப்படி மயக்கி கட்டிப் போட்டு விடும் பிரதேசம் ---
பேச அத்தனை இருக்கிறது ---
அந்த நாட்கள் ---
இயற்கையோடும் இறைவனோடும் ஒன்றிப் போகும் அனுபவம் ---
சூரிய வெயிலில் படுத்துக் கிடந்து அப்படியே குளிர் காய வேண்டும் ---
12.40க்கு ரயில் உண்டு, பாடிங்டன்னிலிருந்து --- ஓக் பாலத்தில் சந்திப்போம் ---

கடிதம் எழுதியவர், ஆத்மார்த்தமாய், **உண்மையான கல்மிங்டன்** என்று கையெழுத்திட்டிருந்தார்.

கல்மிங்டனைக் கடைசியாய் சந்தித்தது எப்போது என்பதை நினைவுக்குள் கொண்டு வர தனது சிந்தனைக் குதிரையைப் பின்னோக்கி ஓட்டித் தேடினார் ஜஸ்டிஸ் வார்க்ரேவ். ஏழு வருடங்களுக்கு... ம்ம்... எட்டு வருடங்களுக்கு முன்னால் இருக்க வேண்டும். சூரியக்குளியலுக்காகவும், அப்போது அப்படியே இயற்கையோடு இயைந்து மூழ்கி விடுவதற்காகவும், இத்தாலிக்கு போய்க் கொண்டிருந்தார் கல்மிங்டன். பிறகு அங்கிருந்து ஸிரியாவுக்கு அவர் படையெடுத்ததாய் கேள்வி. அங்கு சூரிய ஒளி இன்னும் தீவிரமாய் இருக்கும் ஆதலால் மேலும் ஆழ்ந்து சூரியக்குளியலில் மூழ்கி இயற்கையோடு இயற்கையாய் ஆகி விடப் போயிருக்க வேண்டும்!

தனது இத்தகையத் தேடலுக்காக ஒரு தீவினையே சொந்தமாக வாங்கி, தன்னைச் சுற்றிலும் ஓர் ஆச்சரியப் படலத்தை ஏற்படுத்திக் கொள்ள வல்ல தீவிரமான ஒரு பெண்மணி தான் இந்த கல்மிங்டன் என்று தனக்குள் எண்ணிக் கொண்டார் வார்க்ரேவ். தனது இம்முடிவினைத் தானே அங்கீகரித்து லேசாய் தலையசைத்துக் கொண்டு நீதிபதி, தொடர்ந்து தனது தலை சின்னச் சின்னதாய் ஆடவும் அனுமதித்தார்...

அவர் தூங்கி விட்டார்!

II

மூன்றாம் வகுப்புப் பெட்டியில், மேலும் ஐந்து பிரயாணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த வெரா க்ளேதார்ன், தலையைப் பின்னுக்குப் போட்டபடி நெட்டைக் குத்தலாய் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டார். ரயில் பிரயாணம் தான் இன்றைக்கு எத்தனை உஷ்ணமாக இருக்கின்றது! சீக்கிரமாக கடலுக்குள் போய் விழுந்தால் பிரமாதமாக இருக்கும்! ஆங்... இந்த வேலை கிடைத்தது மாபெரும் அதிர்ஷ்டம் தான்! விடுமுறை நாட்களுக்காக மட்டும் ஏதாவது வேலை தேடும் போது, கூட்டம் கூட்டமாய் இருக்கும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளத்தான் அழைப்பு வரும்! காரியதரிசியாய் இயங்கவா வேலை கிடைக்கும்...?! தரகன் கூட அப்படி ஒரு வேலை கிடைக்கும் என்று நம்பிக்கை தரவில்லை.

அப்போது தான் கடிதம் வந்தது.

'பயிற்சி பெற்ற பெண்களின் சங்கத்திலிருந்து உங்களுடைய பெயர் கிடைக்கப் பெற்றேன். உங்களைப் பற்றி சங்கம் அதிகம் தெரிந்து வைத்திருப்பதாய் அறிகிறேன்! கூடவே உங்களுக்கான பரிந்துரை கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது. நீங்கள் கேட்ட சம்பளம் தர சம்மதம். ஆகஸ்ட் எட்டு அன்று வேலையில் சேர்ந்து நீங்கள் பணியாற்ற துவங்கலாம். பாடிங்டன்னிலிருந்து ரயில் 12.40க்கு. உங்களை ஒக் பாலத்தில் சந்திப்போம். பயணச் செலவுகளுக்காக, ஐந்து, ஒரு பவுண்ட் நோட்டுகளை இணைத்துள்ளேன்.

உங்கள் உண்மையான,

U N O - யுனா நான்ஸி ஓவன்.

மேலே முகவரி முத்திரை இருந்தது. **சிப்பாய் தீவு**, ஸ்டிக்கில்-ஹேவன், டேவன் கடற்கரை.

சிப்பாய் தீவு! சமீப காலமாக செய்தித்தாள்களில் ஏன் வேறெந்த சமாச்சாரமும் இடம்பெறுவதேயில்லை! எல்லாவிதமான ஊகங்கள்... புரளிகள்... கிசுகிசுக்கள்...! இவற்றில் ஏறத்தாழ எல்லாமே பொய் என்ற போதிலும்! கற்பனைகள் அச்சாவதில் பஞ்சமில்லை! ஆனால், அந்த பங்களா, மாபெரும் கோடீஸ்வரன் ஒருவரால் கட்டப்பட்டது என்பதும்... ஆடம்பரத்தின் உச்சம், அது தான் என்பதும்... நிஜமே!

கடந்த சில மாதங்களாக இடைவெளி தராது வேலை வாங்கிய பள்ளிக்கூட பணிகளால் துவண்டுப் போயிருந்தார் வெரா க்ளேதார்ன். 'குழந்தைகளுக்கு விளையாட்டு டீச்சராய் இருப்பதைப் போன்ற பிழைப்பு இன்னொன்று கிடையாது. சே... வேறு ஏதாவது வசதி நிறைந்த பள்ளிக்கூடத்தில் வேலை கிடைத்தால் புண்ணியமாய் போகும்...' – எண்ணிக் கொண்டார் வெரா.

பிறகு, இவருடைய இதயம் முழுவதையும் சில்லிட வைக்கும் நடுக்கத்தோடு நினைத்துக் கொண்டார்: 'ஆனால் ஏதோ ஒரு வேலையில் இருப்பது தானே நல்லது. பிழைக்க வேண்டாமா...?! பிரேதப் பரிசோதனையை ஆராய்ந்து, அதன் மேல் நடக்கும் நீதி விசாரணையை யார் தான் விரும்புவார்கள்...?! நீதிபதி, நான் குற்றமற்றவள் என்றார்... அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்தார்... இருந்தாலும் தான் கேட்கிறேன்...!'

நல்ல சமயோஜிதமாகவும் துணிகர மனோதைரியத்துடனும்

பேசியதற்காக வெரா க்ளேதார்னை நீதிபதி பாராட்டிய நிமிடங்கள், இப்போது இவரது நினைவுக்கு வந்தன. ஒரு மரண விசாரணை நீதிபதியிடமிருந்து இவ்வாறு பாராட்டு பெறுவது பெரிய விஷயம். திருமதி ஹேமில்டன்... ஓஹ்... அவர் கருணையாகவே மாறிப் போனார். அந்த ஹூகோ தான்! ம்கும்! வெரா, ஹூகோவை நினைக்கவே மாட்டார்!

சட்டென்று, பெட்டிக்குள் நிலவியிருந்த வெப்பத்தையும் மீறி, வெரா நடுநடுங்கிப் போனார். அந்தக் கடல் தீவுக்குப் போகாமலே இருந்து விட்டால் தான் என்ன என்றும் கண நேரம் எண்ணிக் கொண்டார். அவரது சிந்தனைக்குள், ஒரு படம், படு சுத்தமாக எழுந்தது. லிரிலின் தலை... மர நுனியில் ஊசலாடும் கனி போல மேலும் கீழும், மேலும் கீழும்... அப்படியே ஆடியாடி பாறை நோக்கிப் போய்... தனக்கு வெகு சுலபமாய் தெரிந்த நீச்சல் அடிகளின் மூலம் நீரில் வழி ஏற்படுத்திக் கொண்டு அவன் பின்னால் நீந்தி முன்னேறினார் இவர். தண்ணீரைக் கிழித்துக் கொண்டு சீறிப் பாய்ந்தாலும், இவருக்கே கூட நிச்சயமாய் தெரியும், காலந்தாழ்ந்து விடும் என்று.

கடல் - அதன் ஆழ்ந்த நீலம் - கடல் மணலில் படுத்துக் கழித்த காலைகள் - ஹூகோ - இவரை மனசாரக் காதலிப்பதாய் சொன்ன ஹூகோ... இவரும் தான் ஹூகோவை காதலித்தார்... ஆனாலும்... ஆனாலும்...

ஹூகோவைப் பற்றி வெரா நினைக்கக் கூடாது...

பட்டென கண்களைத் திறந்து, எதிரேயிருந்த ஆடவனைக் கோபமாய் பார்த்தார் வெரா. உயரமான ஆண், மாநிற முகம், ஏறத்தாழ மூடிக் கிடந்த சிறு கண்கள், கர்வமும் மமதையும் கொடூரமும் தவழும் வாய்.

தனக்குத் தானே நினைத்துக் கொண்டார் வெரா:

'பந்தயம் கட்டுகிறேன்... இந்த மனுஷன் உலகின் சில ருசிகரமான பகுதிகளுக்கு சென்று வந்திருக்கிறான்... அங்கு சில ஆர்வத்தைத் தூண்டும் வில்லாதி வில்லங்க விஷயங்களைச் சந்தித்திருக்கிறான்...'

III

பிலிப் லாம்பர்ட், தனது விறுவிறுவென நகரும் விழிகளால் எதிரே அமர்ந்திருக்கும் பெண்ணைத் துரிதமாய் வருடி விழுங்கிய பிறகு,

நினைத்துக் கொண்டான்:

'ம்... ஈர்க்கிறாள்... கவர்ச்சியானவள் தான் - என்ன, கொஞ்சம் பள்ளிக்கூட டீச்சர் சாயல்!'

அழுத்தமானவள் - முடிவு கட்டிக் கொண்டான். காதலானாலும் பூகம்பமானாலும் தன்னை நன்கு கட்டுப்படுத்திக் கொள்ள தெரிந்தவள். அடுத்து, அவளுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள நினைப்பான் பிலிப்... இது தான் அவனது குணம்... பிறகு...

முகத்தைச் சுளித்துக் கடுமையாக்கிக் கொண்டான். வேண்டாம்! அப்படிப்பட்ட எல்லாவற்றையும் அறு. வந்திருப்பது பிஸினஸுக்கு – உத்தியோகம். மூளையை அதில் மட்டும் தான் வைத்திருக்க வேண்டும். வை.

மொத்தத்தில் அன்று அங்கு என்ன நடந்தது? – பிலிப் அதிசயித்தபடி நினைவு கூர்ந்தான்.

''கேப்டன் லாம்பர்ட்... வேணும்னா எடுத்துக்கோ. இல்லையா... விட்டுடு.''

பிலிப் சிறு சிந்தனையோடு சொன்னான்: ''நூறு தங்க நாணயங்கள்?''

நூறு தங்கங்கள் என்பது தன்னைப் பொறுத்த வரை ஒன்றுமே கிடையாது என்பது போன்ற தொனியில் தான் பிலிப் சொல்லியிருந்தான். இந்தத் தொகையைச் சொல்லி அவனை ஏமாற்றி விட்டதாகவும் பிலிப் நினைத்திருந்தான் - ஆனால் அது தான் இல்லை.

அவர் ஒப்புக் கொண்டார்.

''மேற்கொண்டு எந்தத் தகவலும் உங்களால தர முடியாதா?''

நிச்சயம் முடியாது என்று மறுத்து தனது வழுக்கைத் தலையை அசைத்தார், ஐஸக் மோரீஸ். ''முடியாது பிலிப். இந்த நிலையில தான் சமாச்சாரம் நிக்குது. எந்த இறுக்கமான சூழ்நிலையிலும் இயங்கவல்ல சாகசமான ஆள் நீ என்கிறான், என் ஆள்! நல்லது. டேவன் வரை நீ போய் வர உனக்கு நூறு தங்க நாணயங்கள் தரும் அளவுக்குத் தான் எனக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. அப்பகுதிக்கு அருகிலுள்ள ரயிலடி – ஓக் பாலம். அங்கு என்னுடைய ஆள் உன்னை சந்திப்பான். அங்கிருந்து சிறு மோட்டார் பயணம்... **சிப்பாய் தீவு**க்குப் போய் விடலாம். எனது ஆளை அப்படியே கழற்றி விட்டு அங்கு நீ தனியாகி விடுகிறாய். சரியா...?!''

லாம்பர்ட் சட்டென இடை மறித்துக் கேட்டான்: ''எத்தனை நேரத்துக்கு?''

''அதிகபட்சம்! ஒரு வாரத்துக்கு மேல் ஆகாது.''

தனது சிறு மீசையைத் தடவியபடி கேப்டன் பிலிப் லாம்பர்ட் கேட்டான்: ''நான் அங்கு எதையும் மேற்கொள்ள முடியாதுனு உங்களுக்குத் தெரியுமில்லையா --- அதாவது, சட்ட விரோதமாக...?'' இப்படிக் கேட்ட போது எதிராளியின் மேல் கூர்மையான ஈட்டிப் பார்வையை வீசினான்.

தடித்த உணர்ச்சிகளிழந்த மோரீஸின் உதடுகளில் களையற்ற சிரிப்பு விளைந்தது. ''அப்படி ஏதாவது தப்பு தண்டா பண்ணுகிற நினைப்பிருந்தால்... பிலிப், தாமதிக்காமல் உடனடியா அத மறந்துடு'' என்றார் கடுமையாய்.

அரக்கன்... மோரீஸ்... சிரிக்கிறான்! ஏதோ... கடந்த காலங்களில்... சட்ட திட்டங்களை எப்போதுமே பிலிப் மதித்தது கிடையாது என்பது அவருக்கு தெரிந்த ஒன்றே என்று குறிப்பதைப் போன்ற... ஒரு நமுட்டுச் சிரிப்பு...!

பிலிப்பின் உதடுகள் இரண்டும் தற்போது கேலிச் சிரிப்பில் விரிந்தன.

கழுத்து வரை வந்து சென்ற மரணத்தை, ஓரிரு முறை மிக மிக அருகாமையில் சந்தித்தவன் தான், இந்த பிலிப். ஆனால் ஒவ்வொரு முறையும் சுவடு தெரியாமல் தப்பித்தவன்! அப்போதெல்லாம் கூட சட்டதிட்டம்... தர்மம்... இப்படியெல்லாம் கூறு பிரித்துப் பார்த்தவன் கிடையாது பிலிப்...!

அப்படி நல்லது கெட்டது என ஆய்ந்து கோடு போடவும் இவனுக்கு வராது. எல்லாமும் நல்லவை தான்... எல்லாமும் கெட்டவை தான்...! கொன்றால் பாவம் தின்றால் போச்சு! இப்போதும்!

சிப்பாய் தீவில் அனுபவிக்கவுள்ள இன்பங்களைப் பற்றி கனா காண ஆரம்பித்தான், பிலிப்...

IV

எமிலி ப்ரெண்ட், தனது இருக்கையில், அவருக்கே உரிய வழக்கப்படி, துளியும் கூன் விழாது நெட்டைக் குத்தலாய் அமர்ந்திருந்தார். வயது அறுபத்தைந்து ஆனாலும் சொகுசாய்

மெத்தை வைத்து தைக்கப்பட்ட நாற்காலியில் இஷ்டப்படி உட்காருவது போல நீட்டி முழக்கி உட்காருவதெல்லாம் இவருக்கு சுத்தமாய் பிடிக்காதது. இவையெல்லாம், இவருடைய தந்தையார்... அந்தக் காலத்திய அரசாங்கத்தின் சேனைத் தளபதி... நடை உடை பாவனையில் ஊட்டி வளர்த்துள்ள ஒழுங்கு.

இந்தத் தலைமுறை கூட்டம், துளியும் கூச்சமோ வெட்கமோ இன்றி, இதோ... இந்த ரயில் பெட்டி போன்ற பொது இடங்களிலெல்லாம் மானாவாரியாய் நடந்துக் கொள்கின்றது. இங்கு மட்டுமா... எங்கும் தான்... எல்லாவற்றிலும் தான் ...

செய்யும் அனைத்திலும் நேர்மையும் தர்மமும் இருக்க வேண்டும் என்றும் அத்தகைய அணுகுமுறையிலிருந்து இம்மியும் வழுவாது வாழ வேண்டும் என்றும் தன்னைச் சுற்றிலும் ஒரு மதில் சுவர் எழுப்பிக் கொண்டு வாழும் எமிலி ப்ரெண்ட், அசௌகரியமும் வெப்பமும் தூக்கலாக இருக்கும் மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றார். இப்போதெல்லாம், ஒவ்வொரு வரும், செய்யும் அனைத்தையும் மிகைப்படுத்தி தேவையற்ற பரபரப்பினை உண்டுபண்ணி விடுகின்றனர்! பல்லைப் பிடுங்குமுன் மரக்க ஊசி குத்த வேண்டுமாம்! ஏன், கொஞ்சம் பொறுத்துக் கொள்ள முடியாதா...! தூக்கம் வரவில்லையென்றால் உடனே தூக்க மாத்திரையாம்... ம்...! உட்கார குஷன் நாற்காலி! அதுவும் சாய்வாய்! இந்தப் பெண்கள்... ஊஹூம்... உடம்பு எப்படித் தெரிந்தாலும் பரவாயில்லை என்று சதை மலைகளாய் அலைகிறார்கள்! கோடை வந்து விட்டால், அதையும் பெரிதுபடுத்தி முக்கால் நிர்வாணமாய் கடற்கரையில் கிடக்கிறார்கள்!

ப்ரெண்ட்டின் உதடுகள் இறுகின. இப்படிப்பட்ட ஆட்களுக்கு மத்தியில் சென்ற வருடக் கோடையை இவர் கழித்த நாட்கள் நினைவுக்கு வந்தன. இந்த வருடம் நிச்சயமாய் அப்படி இருக்காது. **சிப்பாய் தீவு...**

பல முறை தான் படித்து முடித்திருந்த ஒரு கடிதத்தினை இப்போது மறுபடியும் நினைவுக்குள் கொண்டு வந்து படித்தார்.

அன்பு நிறை எமிலி ப்ரெண்ட்,

என்னை ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன்! இருக்கிறதா? சில

வருடங்களுக்கு முன்பு... ஓர் ஆகஸ்ட் மாதத்தில், நாமிருவரும் ஒன்றாக பெல்-ஷெவன் விடுதியில் தங்கியிருந்தோம். நம்மிருவருக்கும் இடையே பற்பல விஷயங்கள் ஒத்துப் போவதை அறிந்து வியந்துப் போனோம்.

டேவன் கடற்கரையையொட்டி கடலுக்குள் அமைந்திருக்கும் சிறு தீவில் சொந்தமாக ஒரு விருந்தினர் மாளிகையை நான் ஆரம்பிக்கிறேன். கிராமிய மணம் வீசும் உணவுகளும் அவற்றைப் பரிமாற பாரம்பரியமிக்க வயதான பெண்மணியும் இருந்து விட்டால், அங்கு நன்றாய் ஓடும் என்கிறார்கள்! அதனால் தான் இந்த முயற்சி. கிராமஃபோன் இசைத்தட்டினைச் சுழல விட்டுக் கொண்டு உடையற்று பாதி ராத்திரியில் போடும் கூத்தெல்லாம் இருக்காது. எனவே, இந்தக் கோடை விடுமுறையின் போது, எப்படியாவது நேரம் உண்டாக்கிக் கொண்டு நீயும் வந்து என்னுடன் இத்தீவில் (சிப்பாய் தீவு) இருந்தால் மிகவும் சந்தோஷப்படுவேன். வாடகை கிடையாது! ஆகஸ்ட் ஆரம்பத்திலேயே முடியுமா? எட்டு?

உன் அன்பு
U N O

என்ன பெயர் அது? கையெழுத்தினைப் படிப்பது மிக சிரமமாய் இருந்தது. 'புரியக் கூடாது என்றே பலரும் இப்படி கிறுக்கலாய் கையொப்பமிடுகிறார்கள்...' – பொறுமையற்று நினைத்துக் கொண்டார் எமிலி.

நினைவுகளைப் பின்னுக்கு விரட்டி பெல்-ஷெவனில் தங்கியிருந்தவர்களை நினைவில் கொண்டு வரும் முயற்சியில் இறங்கினார் எமிலி. கோடை விடுமுறையைக் கழிக்க இரண்டு முறை அங்கு சென்று தங்கியிருக்கிறார். ஆங்... ரொம்பவும் அமரிக்கையான அந்தப் பெண்மணி அங்கு இருந்தாள்... நினைவுக்கு வந்து விட்டது... அவள் பெயர்... செல்வி... செல்வி... ச்சே... இப்போது நினைவுக்கு வர மாட்டேன் என்கின்றது... அவள் பெயர் என்ன? அவள் அப்பா கூட மாதா கோயிலில் முக்கிய அங்கத்தினராக இருந்தவரே...! ஓ என்றால்...? ஓல்ட்டன்? ஓர்மன்? ஆங்... நிச்சயம் அது ஓலிவர் தான்! ஆமாம் - ஓலிவர்!

சிப்பாய் தீவு! *சிப்பாய் தீவு குறித்து செய்தித்தாள்களில் பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கின்றது... யாரோ ஹாலிவுட் நடிகையை சம்பந்தப்படுத்தி; அல்லது, ஓர் அமெரிக்க மில்லியனர்?*

அது போன்ற இடங்கள் சல்லிசான விலைக்குக் கிடைத்து விடுகின்றன --- எல்லோருக்கும் தீவு ஒத்துக் கொள்வதில்லை, அதனால். செம உல்லாசமாக இருக்கும் என்று நம்பி தீவுகளில் இடம் வாங்கி குடி போகிறார்கள்... போன பிறகு தான் அங்கு இருக்கும் விதவிதமான அசௌகரியங்கள் எல்லாம் தெரிய வருகின்றன. விற்றால் போதும் என்றாகி விடுகிறார்கள்!

'எப்படியோ போகட்டும்... இலவசமாக இந்த விடுமுறையைக் கழிக்க எனக்கு இடம் கிடைக்கப் போகின்றது.' – நினைத்துக் கொண்டார் எமிலி ப்ரெண்ட்.

வருமானம் மளமளவென குறைந்து விட்ட இந்நிலையில்... பல தவணைகள் கட்ட வேண்டி பாக்கி இருக்கும் கதியில்... இலவசமாய் வரும் வாய்ப்பை நழுவ விடக் கூடாது தான். ஆனால் அந்தப் பெண்மணியைப் பற்றி மட்டும் சரியாய் நினைவிருந்து விட்டால் எத்தனை வசதியாய் இருக்கும்...? செல்வி...? அல்லது திருமதி...? ஓலிவர்? அல்லது வேறு ஏதாவது?

V

ஜெனரல் திரு மார்கரெட், ரயில் பெட்டியின் ஜன்னல் கம்பிகளில் நெற்றி பதித்து வெளியே பார்த்தார். ரயில், எக்ஸெட்டர் நிலையத்துக்குள் நுழைந்துக் கொண்டிருக்கின்றது. இவர் இங்கு இறங்கி வேறு ரயில் மாற வேண்டும். ஒரே ரயிலில் போக முடியாமல், மாற்றி மாற்றி ரயில் மாற வைக்கும் கிறுக்குத்தனம்! இந்த **சிப்பாய் தீவு** இருக்கிறதே! அது கல்லெறி தூரம் தான்... தொலைவே கிடையாது! இருந்தாலும் இத்தனை கூத்து!

யார் இந்த ஓவன் என்பவன் என்பதில், இன்னும் இவருக்குத் தெளிவு ஏற்படவில்லை.

'--- உங்களுடைய ஓரிரு பழைய பெருச்சாளிகளும் (நண்பர்களும்!) வருகின்றனர் --- எல்லோரும், பழைய கதைகளையெல்லாம் மறுபடியும் பேசித் தீர்க்கப் பிரியப்படுகிறார்கள் --- '

பழைய வசந்தக்கால தினங்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டாட ஒரு சந்தர்ப்பம்... இருந்து விட்டுப் போகட்டுமே! வரும் அனைவரும், தன்னைக் கூச வைக்கும்படி சில பழைய விஷயங் களைப் பேசிக் கேலி செய்து தீர்ப்பார்களோ என்று கற்பனை செய்து கொண்டார் மார்கரெட். எல்லாம் பைசா பெறாத அந்த கிசுகிசுவால் வந்தவை! எத்தனை கொடூரமான நாட்கள் அவை --- கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் கடந்து விட்டன! அந்த பட்டாளத்து தலைமைப் பயல் ஊதி விட்டது தான் எல்லாம்! அது பற்றி அவனுக்கு என்ன தெரியும்? ஓஹ்! போதும், போதும்... வீணாய் மூளையைக் குடைந்துக் கொண்டிருக்க வேண்டாம்! எல்லாம் கற்பனை! அவன் நம்மையே பார்க்கிறானோ... அவன் நம்மை பற்றியே நினைக்கிறானோ... அவன் நம்மைக் கேலி செய்வானோ... என்பது போன்ற கற்பனைகள்!

சிப்பாய் தீவு - இதைப் பார்த்துக் களிக்க வேண்டியது தான் இப்போது உள்ள ஒரே ஈர்ப்பு; வேறெதையும் நினைக்கக் கூடாது. இத்தீவு பற்றி பலப்பல கிசுகிசுக்கள் காற்றில் பறக்கின்றன... உண்மையாய் கூட இருக்கலாம் என நம்ப வைக்கும் அளவுக்கான கிசுகிசுக்கள்...! சிப்பாய் தலைமை அலுவலகம் அல்லது போர்த் தளவாட அலுவலகம் அல்லது விமான தலைமை அலுவலகம்... எந்த அரசு நிறுவனம் இத்தீவில் அலுவலகம் நிறுவியிருக்கும்?

எல்மர் ராபின்ஸன் எனும் இளைய மில்லியனர் தான் சிப்பாய் தீவினை சொந்தமாய் வாங்கியிருக்கிறார்... ஆயிரம் ஆயிரமாய் டாலர் களைக் கொட்டிச் செலவழித்திருக்கிறாராம்-சொல்லிக் கொள்கிறார் கள். அழியாப் புகழோடு திகழவல்ல அத்துணை ஆடம்பரமாம்... அலங்காரமாம்...

எக்ஸெட்டர்! ச்சே! இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டும்! ஆனால் மார்கரெட்டுக்குக் காத்திருக்க இஷ்டமேயில்லை. போய்க் கொண்டேயிருக்க வேண்டும் ...

VI

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், மோர்ரீஸ் டூலக்ஸ் காரினை லாகவமாக

வளைத்து ஓட்டிக் கொண்டு, ஸாலீஸ்பெர்ரி மைதானத்தைக் கடந்துக் கொண்டிருக்கிறார். மிக களைத்திருந்தார்... வெற்றி அதன் கூலியை வாங்கியிருக்கின்றது! அன்றைய தேதி வரை பிரபலமாயிருந்த அனைத்து நவீன மருத்துவ உபகரணங்களையும் தன்னைச் சுற்றிலும் பரப்பி வைத்துக் கொண்டு, மருத்துவருக்கே உரிய சரியான உடையைக் கச்சிதமாய் உடுத்திக் கொண்டு, காண்போரை ஈர்க்கும் நாகரீக நாற்காலிகளை வரவேற்பறையில் நிரப்பி, நோயாளியை எதிர்கொள்ளத் தயாராக, தனது மருத்துவமனையிருந்த ஹார்லி தெருவில், டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் தவமாய் தவம் கிடந்த காலமொன்று உண்டு. காத்திருந்தார்... இவருடைய மருத்துவமனை முயற்சி வெற்றி பெற அல்லது தோல்வியைத் தழுவ, வெறும் நாட்களை மட்டும் தூசு தட்டி ஓட்டிக் கொண்டு காத்துக் கிடந்தார்.

ஒருவழியாய், அம்முயற்சி வெற்றி கண்டது! இவர் அதிர்ஷ்டக்காரர்! அதிர்ஷ்டம்... கூடவே கைத்திறமையும் தான்! இவரது தொழிலைப் பொறுத்தமட்டில் வேண்டிய அளவு நல்லவராயும் சமயோஜிதமாயும் புத்திசாலியாயும் விளங்கினார்... ஆனால் வெற்றிக்கு இது மட்டும் போதாதே. கூடவே அதிர்ஷ்டமும் இருக்க வேண்டும்! இருந்தாக வேண்டும். இவருக்கு இருந்தது! பீடித்துள்ள நோய் என்ன என்று, சொல்லியடித்தால் போன்ற கண்டுபிடிப்பு --- இதில் புளகாங்கித மடைந்த சில வயோதிகப் பெண் நோயாளிகள் --- பெண்கள்... பணமும் அந்தஸ்தும் செவ்வனே கொண்ட பெண்கள் --- இந்த அதிர்ஷ்டம் போதாதா! காட்டுத் தீயாய் செய்தி பரவியது. 'ஆர்ம்ஸ்ட்ராங்கிடம் போய் காட்டுடீ! நோய் பறக்கும் பார்! சின்னப் பய! ஆனா என்ன புத்தி! கைராசி! கைப்பட்டா நோய் பறக்குதுங் கறேன்!'

வெற்றிப் பந்து சுழலத் துவங்கியது.

வெற்றியின் உச்சாணிக் கொம்பினை இப்போது டாக்டர் ஆர்ம்ஸ்ட் ராங் அடைந்தே விட்டார். எல்லா நாட்களும் நிரப்பப்பட்டு விட்டன. சாவகாசமாய் ஓய்வெடுக்க நேரமே இல்லை. எனவே, ஆகஸ்ட் மாதத்து இன்றைய இளங்காலையில், லண்டனை விட்டுக் கழற்றிக் கொண்டுத் தப்பித்து, டேவன் கடற்கரையின் உள்ளே இருக்கும் ஒரு தீவில் சில நாட்கள் இருக்கப் போகிறோம் என்ற எண்ணமே டாக்டருக்கு

மிகுந்த சந்தோஷத்தை உண்டுபண்ணித் தந்தது. இப்போது போவது கூட ஒரு முழு நேர ஓய்வாய் இருக்கப் போவது கிடையாது. இவர் கைகளுக்குக் கிடைத்துள்ள கடிதம், நிச்சயமற்ற வார்த்தைகளால் தான் நிரப்பப்பட்டுள்ளது; ஆனால் அக்கடிதத்துடன் இணைத்து வந்த காசோலை... எவ்வித சந்தேகமும் அற்ற நிச்சயம் தான்! சுண்டி விட்டாற் போல் துடித்தெழ வைக்கும் சம்பளம். இந்த ஓவன்ஸ், பணத்தாலேயே மெத்தை செய்து படுப்பவனாயிருக்க வேண்டும். சிறு பிரச்சினை தான் --- தனது மனைவியின் உடல்நலம் மீது கணவனுக்கு சிறு கிலேசம். இதற்காக மனைவியைப் பரிசோதிப்பது, அவளுக்குத் தெரியாமலேயே பரிசோதித்து விட்டு ஒரு மருத்துவ அறிக்கை தர வேண்டும். டாக்டர் என்றாலே அவளுக்கு அப்படி ஒரு பயமாம். அவளுடைய நரம்புகள்---

நரம்புகள்! டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கின் புருவங்கள் மேலெழும்பின. இந்தப் பெண்களும் அவர்களுடைய நரம்பதிர்வுகளும்! போகட்டும்... டாக்டர் உத்தியோகத்துக்கு உதவுகின்றதே! இவரை வந்து சந்தித்து ஆலோசனை பெறும் பாதி பெண்களுக்கு எந்தவித வியாதியும் இருக்காது... சொன்ன வலி பற்றியே திருப்பித் திருப்பிப் பேசி சலிப்புண்டாக்கும் கூத்து தான்...! ஆனால் இந்த உண்மையை மட்டும் சொல்லி விடக் கூடாது! வாடிக்கையாளர் குறைந்து விடும்! ஆகவே ஏதாவது ஒன்றினைத் தேடிப் பிடித்து சொல்லியாக வேண்டும்!

''கொஞ்சம் அசாதாரணமான (ஒரு நீண்ட வியாதி பெயரை இங்கு சொல்ல வேண்டும்) பலஹீனம்... அவ்ளோ தான்... வேற ஒண்ணுமே இல்லே... கவலைப்பட இதுல ஒண்ணும் கிடையாது... இருந்தாலும், சரி பண்ண தகுந்த சின்ன சிகிச்சை தரணும்... சிம்பிள்... அவ்ளோ தான்...!''

இதற்குத் தரப்படும் மருந்து வெறும் வைட்டமின் மாத்திரையாகத் தானிருக்கும்... டாக்டரின் கனிவான மேற்சொன்ன வார்த்தைகள் தான் இங்கு நிஜ மருந்தே! கூடவே இவருக்கு பண்பான நடத்தை உண்டு... திடமான நம்பிக்கையையும் நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்பையும் விதைத்து வளர்க்கவல்ல குணாதிசயம் உண்டு.

வெற்றி சேர்ந்தது! பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால்... இந்த மருத்துவமனையை உண்டுபண்ணி விட்டு... அது முன்னேறாமல் உதைத்து... அதனால் மனசும் உடம்பும் நைந்துத்

தவிடுபொடியாகி... அதிர்ந்து அலறி... ஓஹ்... கடவுளே!

மணிக்கு எண்பது மைல் எனும் வேகத்தில் சீறிக் கொண்டு, ரயில் போல காது கிழிய ஹார்னையும் எழுப்பியபடி, காற்றைக் கிழித்த ஒரு டால்மியன் ஸ்போர்ட்ஸ் கார், டாக்டரின் காரினை முந்திக் கொண்டு விரைந்தது. சாலையோரப் பள்ளத்தாக்கில் விழுந்து புரண்டு விடும் அளவுக்கு சாலையின் ஓர விளிம்பு வரை ஆர்ம்ஸ்ட்ராங்கின் கார் நழுவி பின் தப்பித்தது. வேலையற்று ஊரைச் சுற்றித் திரியும் ஓர் உதவாக்கரை! தூ! இப்படிப்பட்ட காட்டு இளைஞர்களை வெறுத்தார் ஆர்ம்ஸ்ட்ராங். மயிரிழையில் தப்பித்தேன்! அறிவு கெட்ட முட்டாள்... முட்டாள்!

VII

டோனி மார்ஸ்டன், சிங்கமாய் உறுமிக் கொண்டு பாய்ந்த டால்மியன் டூலக்ஸ் காரினைச் செலுத்திக் கொண்டே நினைத்தான்:

'வர வர சாலைகளில் வேகமாக ஓடாமல் நத்தையாய் ஊறும் கார்களின் எண்ணிக்கை... ச்சேச்சே... அதிகமாகி விட்டது! ஏதாவது ஒன்று வழியை மறித்து விடுகின்றது! போதாக்குறைக்கு... நட்டநடு சாலையில் தான் அவர்கள் ஊர்வார்கள்! பயந்தாங்கொள்ளிகள் கார் ஓட்டும் இங்கிலாந்து! பிரான்ஸில் இப்படி கிடையாது... நெட்டித் தள்ளி விடலாம்...!'

ஏதாவது குடித்து இளைப்பாற இங்கு நிறுத்தலாமா... அல்லது பறந்து கொண்டேயிருக்கலாமா? இன்னும் ஒரு நூறு மைல்களும் சொச்சமும் இருக்கின்றன! இஞ்சி போட்ட பீர் ஒன்று குடித்து விடலாம்! வியர்வையை உறிஞ்சி எடுக்கும் வெப்பம்!

சீதோஷ்ணம் மட்டும் சாதகமாக அமைந்து விட்டால்... வாவ்... அந்தத் தீவு, மறக்க முடியாத நல்லக் கொண்டாட்டமாய் அமைந்து விடும்! இந்த ஓவன் யார்... விசித்திரமாய் யோசித்தான்! பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று அறியாத கூட்டமாயிருக்க வேண்டும்!

ஆஹ்... ஓஹ்... அங்கு கிளுகிளுப்பாய் அழகிகள் இருப்பார்கள்... கற்பனை செய்து கொண்டான்...

ஓட்டலிலிருந்து வெளியே வந்ததும், முதுகைப் பின்னால் வளைத்து

அப்படியே சோம்பல் முறித்தான்; நீண்ட கொட்டாவி; நிமிர்ந்து நீல வானத்தை ஒரு பார்வை; பின் குதித்து டால்மியனுக்குள் பிரவேசம்.

இத்தனையையும் சுற்றுவட்டாரத்தில் நின்றுக் கொண்டிருந்த எல்லா இளைய பெண்களும், ஆச்சரிய வியப்புக் கொப்பளிக்கப் பார்த்தனர் --- கனக்கச்சிதமாய் மெருகேறி புடைத்திருந்த அவனது அகண்ட ஆறடி உடல்வாகு, வழ்வழுக்கும் அவனது கேசம், வெண்ணெய் முகம், துளைத்தெடுக்கும் நீலக் கண்கள்...

வெடுக்கென்று கிளப்பி அதே உறுமலோடு சாலைக்குள் காரினைச் செலுத்தினான். வயோதிகர்கள் 'கிறுக்ககன்... கிறுக்கன்!' என கடு கடுத்துக் கொண்டு பாதுகாப்பாய் ஒதுங்கினர். பொடிப் பசங்கள், புள்ளி யாய் மறைந்துக் கொண்டிருந்த டால்மியனை பிரமிப்பாய் பார்த்தனர்.

ஆன்டனி மார்ட்ஸன், தன்னுடைய கம்பீரமான கார் ஊர்வலத்தை செலுத்தினான்.

VIII

ப்ளைமூத்திலிருந்து ரயிலில் வந்துக் கொண்டிருந்தார், திரு ப்ளோர். இவரிருந்த பெட்டியில் மேற்கொண்டு ஒரே ஒரு பிரயாணி மட்டும் தானிருந்தான்; அவன், அடிக்கடி கடல் பிரயாணம் மேற்கொள்ளும் ஒரு வயோதிகன்... வெளுத்துப் போன கண்கள். தற்சமயம் அவன் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தில், கவனமாய் ப்ளோர் எழுதிக் கொண்டிருந்தார்.

''ம். இது தான் மொத்தமும்'' என தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டார். ''எமிலி ப்ரெண்ட், வெரா க்ளேதார்ன், டாக்டர் ஆர்ம்ஸ்ட் ராங், ஆன்டனி மார்ட்ஸன், ஜஸ்டிஸ் வார்க்ரேவ், பிலிப் லாம்பர்ட், ஜெனரல் மார்கரெட் மேலும் பணியாள் ரோஜர்ஸ் மற்றும் திருமதி ரோஜர்ஸ்.''

நோட்டுப் புத்தகத்தை மூடி விட்டு தன்னுடைய சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார். ரயில் பெட்டியின் மூலையையும் தூக்கத்தில்

ஆடும் ஆளையும் நோட்டமிட்டார்.

நடக்க வேண்டியவை பற்றி ஜாக்கிரதையாகவும் நேர்மையுணர் வுடனும் மனதுக்குள் துளாவினார்.

'ம்...! எல்லாம் சுலபமாகத் தான் முடியும்' – ஆழ்ந்து யோசித்துக் கொண்டார். ''என்னால் முடியுமா என்று மட்டும் நினைத்து விடாதே. வெளுத்து வாங்கி விடுவேன்.''

இப்படி சொல்லிக் கொண்டே, பரபரப்பாய் எழுந்து நின்றுக் கொண்டு, கண்ணாடியில் பிரதிபலித்த தனது பிம்பத்தைத் தீவிர சிந்தனையோடு கவனித்தார். மீசையிருப்பதால் ஒரு வித பட்டாளத் தான் தோற்றத்தை முகச்சாயல் காட்டியது.

''ஒரு மேஜரைப் போல!'' – சொல்லிக் கொண்டார் ப்ளோர்.

பிறகு, ''தென் ஆப்பிரிக்கா'' என்ற ப்ளோர், ''அது தான் நான் வந்த வழி!'' என்றார். ''இந்த கூட்டத்தில ஒருத்தனுக்குக் கூட தென் ஆப்பிரிக்காவோடு பொருத்தம் கிடையாது. இப்ப தான்... அதோ, அதன் சுற்றுலா புத்தகத்தைப் புரட்டி முடித்தேன்! எனவே என்னால அது பற்றி முழுக்க தெரிஞ்சவனைப் போல பேச முடியும்!''

அதிர்ஷ்டவசமாக இக்கூட்டத்தில் எல்லா வகையான பிரஜைகளும் இருக்கிறார்கள். ஆப்பிரிக்கா நாட்டு பழக்க வழக்கமுள்ளவன் என்று சொல்லிக் கொண்டு, எந்த சமூகத்துக்குள்ளும் சிரமமின்றி நுழைந்துப் பழகி விடலாம் என எண்ணிக் கொண்டார் ப்ளோர்.

சிப்பாய் தீவு. இன்னும் நினைவிலிருக்கும் சிறு வயதில் பார்த்த சிப்பாய் தீவு --- கரையிலிருந்து ஒரு மைல் போல தள்ளி --- பறக்கும் கடற்பறவைகளால் மூடப்பட்டு --- வாடையடிக்கும் பாறைகளால் சூழப்பட்டு ---

அங்கு போய் நிலம் வாங்கி வீடு கட்டி! கோமாளி மனிதர்கள்! கோமாளி எண்ணங்கள்! மோசமான வானிலை பொழுதுகளில் வாழ்க்கை பயங்கரமாயிருக்கும்! ஆனால் இந்த மில்லியனர்கள்... திடீர் திடீரென்று முடிவெடுக்கும் க்ஷண சித்தர்களல்லவா!

ஓரத்தில் கிடந்த வயோதிகன் விழித்தெழுந்தான். ''கடல்ல என்ன நடக்கும்னு உன்னால சொல்லவே முடியாது --- முடியவே முடியாது'' என்றான்.

ப்ளோர் ஆரூடம் சொல்பவர் போல, ''ரொம்ப சரி'' என

ஆமோதித்தார். ''நம்மால முடியாது.''

இரண்டு முறை விக்கலெடுத்து விட்டு, குற்றச்சாட்டு சொல்லி புலம்புவது போல கிழவன் சொன்னான்: ''ஒரு புயல் வருது. ஆபத்து! எச்சரிக்கையாய் இரு.''

மறுத்தார் ப்ளோர்: ''சேச்சேச்சே! இது அற்புதமான வானிலை! ஏகாந்தமான நாள்.''

கிழவன் கோபமாய் கத்தினான்: ''கலவரம் ஒண்ணு வாசல்ல நிக்குது. என்னால வாசம் பிடிக்க முடியுதுங்கறேன்!''

''ம்...! நீ சொல்றது கூட சரியா இருக்கலாம்'' – கிழவனைச் சாந்தப்படுத்தும் விதத்தில் சொன்னார் ப்ளோர்.

ரயில் ஒரு நிறுத்தத்தில் நிற்க, அந்த வயோதிகன் தள்ளாடியபடி எழுந்து நின்றான்.

''இங்கே தான் நான் இறங்கணும்'' – கதவின் வழியே இறங்க நகர்ந்தான் அவன். ப்ளோர் அவனுக்கு உதவினார்.

கிழவன் கதவருகே போய் நின்றான். அங்கு, தலை மேலே கை தூக்கி வணங்கி, அவனுடைய சோகையான கண்களை மினுமினுத்தான்.

''கவனமாய் இரு. துதி'' என்றான். ''கவனமாய் இரு. துதி. பிரார்த்தனை செய். தீர்ப்பெழுதும் நாள் உள்ளங்கைகளில் வந்து விட்டது.''

படிகள் வழி இறங்காது, நடை மேடைக்குள் குதித்து இறங்கினான் கிழவன். விழுந்த நிலையிலிருந்தபடி அப்படியே திரும்பி கண்ணியமாய் ப்ளோரைப் பார்த்தான். மிகவும் மரியாதையாய், ''உன்கிட்டே தான் பேசிக்கிட்டு இருக்கேன், வாலிபனே...!'' என்றான். ''தீர்ப்பெழுதும் நாள், ரொம்ப ரொம்ப அருகில் வந்தாச்சு.''

விரைந்து திரும்பி தன்னுடைய இருக்கையில் அடங்கினார் ப்ளோர். 'என்னை விட இவனுக்குத் தான் நேரம் நெருங்கி விட்டது!' என தனக்குள் எண்ணிக் கொண்டார்.

ஆனால், 'பாவம், மனிதன்...' என்று சொல்லி நம் நினைப்புக்கு முற்றிலும் எதிராய் சில சமயங்களில் இறைவன் மாற்றுக் கணக்குப் போட்டு விடுவது போல, ப்ளோர் எண்ணிக் கொண்டது ஒரு தப்புக் கணக்கு...

அத்தியாயம் 2

I

ஓக் பாலம் ரயில் நிலையத்துக்கு வெளியே நிச்சயமற்ற ஒரு தாற்காலிகக் குழப்பத்தோடு சில நபர்கள் கொண்ட கூட்டம் ஒன்று நின்று கொண்டிருந்தது. இவர்களுக்குப் பின்னால் பெட்டி படுக்கை களைச் சுமந்து கொண்டு போர்ட்டர்கள் நின்று கொண்டிருந்தனர். இவர் களில் ஒருவன், ''ஹேய்... ஹேய்!'' என கையசைத்து அழைத்தான்.

அங்கிருந்த டாக்ஸி ஓட்டுநர்களில் ஒருவன் முன் வந்தான்.

''நீங்க எல்லாம் சிப்பாய் தீவுக்குனு நினைக்கிறேன்?'' என்று மிருதுவாய் கேட்டான் அவன். நான்கு குரல்கள் ஒரு சேர சம்மதம் சொல்லின... அடுத்தபடியாய் உடனே ஒருவருக்கொருவர் கள்ளத் தனமாய் கீழ் பார்வை பார்த்துக் கொண்டனர்.

இந்தக் கூட்டத்திலேயே சற்று வயதானவர் என்ற கோணத்தில் ஜஸ்டிஸ் வார்க்ரேவைத் தெரிந்தெடுத்து டாக்ஸி ஓட்டுநர் பேசினான்: ''இங்கே ரெண்டு டாக்ஸிங்க இருக்கு, ஸார். இதுல ஒண்ணு, எக்ஸேட் டர் ரயில் வந்து சேரும் வரைக்கும் இங்கேயே காத்திருந்தாகணும்... ரொம்ப நேரம் காத்திருக்க தேவையிருக்காது... அது வர இன்னும் அஞ்சு நிமிஷம் தானிருக்கு... அதுல முக்கியமான ஒருத்தர் வர்றாரு. உங்கள்ல ஒருத்தர் அது வரைக்கும் காத்திருக்க முடியுமா? அப்படினா, ரெண்டு கார்லயுமா பிரிச்சு, முண்டி அடிச்சுக்காம எல்லாரும் வசதியா போகலாம்.''

வெரா க்ளேதார்ன், அவருடைய காரியதரிசி பதவி மனம் முழுதும் நிரம்பிக் கிடக்க, உடனே, ''நான் காத்திருக்கேன்'' என்றார். பிறகு ''நீங்க கிளம்பலாமே?'' என்றார் மற்ற மூவரைப் பார்த்து. வெராவின் பார்வையும், குரலின் வீச்சும், அதிகார தோரணை மிகுந்த பதவி வகித்த ஒருவரிடமிருந்து வரும் பாங்கில் அமைந்திருப்பதை நினைவூட்டின. என்ன மாதிரியான டென்னிஸ் விளையாட்டினை ஆட வேண்டும் என மாணவிகளுக்கு இப்படித் தான் அடித்து சொல்வார் போல!

''தேங்க் யூ'' என்று விறைப்பாய் சொன்னார் செல்வி எமிலி ப்ரெண்ட். டாக்ஸியின் கதவைத் திறந்து அதன் ஓட்டுநர் பிடித்திருக்க, முதுகு வளைத்து உள் நுழைந்தார் ப்ரெண்ட்.

அவரைத் தொடர்ந்தார் ஜஸ்டிஸ் வார்க்ரேவ்.

பிலிப் சொன்னான்: ''நான் இங்கேயே காத்திருக்கேன்... மிஸ்... மிஸ்...?''

''க்ளேதார்ன்'' என்றார் வெரா.

''ஆங்! ஆங்...! செல்வி வெரா க்ளேதார்னோட!'' என்றவன், தொடர்ந்தான்: ''என் பெயர் லாம்பர்ட். பிலிப் லாம்பர்ட்.''

போர்ட்டர்கள் மூட்டைகளை டாக்ஸிக்குள் அடுக்கிக் கொண்டிருந்தனர். உள்ளே, முன் ஜாக்கிரதை மிகுந்த வக்கீல் குரலில், ''அற்புதமான வானிலை மனோஹரமா வியாபிச்சிருக்கு'' என்றார் ஜஸ்டிஸ் வார்க்ரேவ்.

''ஆமாம்'' என்றார் ப்ரெண்ட்.

'மிகுந்த தராதரம் கொண்ட கௌரவமான அனுபவஸ்தர்' என உள்ளுக்குள் நினைத்துக் கொண்டார். கடற்கரை விடுதிகளுக்கு நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு வரும் சராசரி மனிதர்களைப் போன்றவர் அல்ல. அந்த செல்வியோ அல்லது திருமதியோ... அந்த ஓலிவர், நல்ல மக்களோடு தான் தொடர்பு வைத்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சாட்சி...

வார்க்ரேவ் விசாரித்தார்: ''இந்தப் பகுதியில உங்களுக்கு பழக்க முண்டா?''

''டேவனின் மற்ற பகுதிகளுக்கு... அதாவது, கார்ன்வால், டர்க்கே... இங்கெல்லாம் போன பழக்கம் உண்டு. ஆனா, இது --- புதுசு. இப்ப தான் முதல் முறையா இங்கே வரேன்.''

''எனக்கும் இந்தப் பகுதிகளோடு முன்பின் அறிமுகம் கிடையாது'' என்றார் நீதிபதி.

டாக்ஸி கிளம்பியது.

மீதியிருந்த இரண்டாவது டாக்ஸியின் ஓட்டுநர் ''ரயில் வர வரைக்கும் உள்ளே உட்காரீங்களா?'' என்று கேட்டான்.

''வேண்டவே வேண்டாம்'' என்றார் வெரா முடிவாய்.

கேப்டன் லாம்பர்ட் சிரித்தான். ''அதோ... சூரிய ஒளிப்பட்டு

தகதகக்கும் ரயிலின் முகப்பைப் பார்த்தபடி பிரமாதமா இருக்கு. அங்கே...?''

''வேண்டவே வேண்டாம்'' என்றார் வெரா முடிவாய் இதற்கும். ''நெருக்கிப் பிழிஞ்செடுத்த அந்த ரயிலை விட்டு வெளியே வந்து இப்படி காத்தாட நிக்கறதே போதும்... ஆனந்தமா இருக்கு.''

''ஆமாம்'' என்றான் பிலிப். ''இந்த வெயில்ல ரயில் பிரயாணம்... ஆளைப் பிழிஞ்சு தான் எடுக்குது.''

''இது இன்னும் தொடரும் போல --- இந்தக் கோடையைச் சொல்றேன்'' என்று வெரா சம்பிரதாயமாய் குறிப்பிட்டார். ''இந்தக் கோடை காலத்தை நம்பவே கூடாதப்பா.''

குரலில் இருந்த நிஜத் தனம் சற்றே தொய்ய பிலிப் கேட்டான்: ''இந்தப் பகுதி உங்களுக்கு நல்ல பரிச்சயமா?''

''கிடையாது. நான் இந்தப் பகுதிகளுக்கு இதுக்கு முன்னாடி வந்ததே கிடையாது.'' இப்படிச் சொல்லி விட்டு, ஏமாற்றும் நோக்கமற்ற நேரடி அறிக்கையாய், தன் நிலையை இன்னும் தீர்க்கமாய் உடனே முன் வைத்து விட வேண்டும் என்ற முடிவோடு, ''என்னை வேலைக்கு அழைச்சவங்களை நான் இன்னும் பார்த்தது கூட கிடையாது'' என்றார்.

''உங்க முதலாளி?''

''நான், ஒனுடைய காரியதரிசி.''

''ஓஓஓ... அப்படியா விஷயம்'' – விளங்கிக் கொள்ள முடியாதபடி பிலிப்பின் நடவடிக்கை சட்டென மாறியது. சொன்ன வார்த்தைகள் சற்றே தூக்கலான நிச்சயத்தன்மையோடு அமைந்திருந்தன... பாவத்தில் ஒரு சௌகரியம் உருவாகியிருந்தது.

''இது கொஞ்சம் அசாதாரணமா தோணலை?'' – கேட்டான்.

''எது?''

''திடீர்னு ஒரு செகரட்டரியை புக் பண்ணுவது.''

வெரா சிரித்தார்.

''நான் அப்படி நினைக்கலே. அவங்களுடைய காரியதரிசிக்கு திடீர்னு உடம்பு சரியில்லாம போயிருக்கு... ஆள் கேட்டு தனியார் வேலை வாய்ப்பு அலுவலகத்துக்கு தகவல் அனுப்பியிருக்காங்க. அவங்க என்னை அனுப்பினாங்க.''

''அப்படி நடந்திருக்கா! சரி... ஒரு வேளை நீங்க அங்கே போய் சேர்ந்துட்டப் பிறகு அந்த வேலை உங்களுக்குப் பிடிக்கலேனா...?!''

''இது வெறும் தாற்காலிகப் பணிங்க; விடுமுறை காலத்துல கிடைச்சிருக்கு. எனக்கு ஒரு பெண்கள் பள்ளியில நிரந்தர வேலை யிருக்கு'' என்று விட்டு வெரா மறுபடியும் சிரித்தார். ''சொல்லப் போனா, கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் சிப்பாய் தீவினைப் பார்த்தாலே... எனக்கு ஒரு பய சிலிர்ப்பு உண்டாகுது. இது பற்றி மூட்டை மூட்டையா அவ்ளோ செய்திகள் பேப்பர்ல வந்திருக்கு. அது சரி... இது உண்மையிலேயே அத்தனை கவர்ச்சிகரமான தீவா என்ன?''

''எனக்குத் தெரியாது'' என்றான் லாம்பர்ட். ''நான் போய் பார்த்தது கிடையாது.''

''ஓ, அப்படியா! இந்த ஓவன் கூட்டம், தீவு மேல பைத்தியமா கிடக்குது. அவங்கள்லாம் எப்படி? எனக்குக் கொஞ்சம் சொல்லுங் களேன்.''

'இது தர்மசங்கடம்' – நினைத்துக் கொண்டான் லாம்பர்ட். 'ஓவன் கூட்டத்தை நான் பார்த்தவனா இருக்கணுமா... அல்லது பார்க்காதவனா இருக்கணுமா...?!' சிந்தனையிலிருந்து கழன்று சட்டென சொன்னான்: ''உங்க கையில ஒரு குளவி உட்கார்ந்துக்கிட்டிருக்கு'' – சொல்லி விட்டு நம்பும்படியான ஒரு தட்டலை வெராவின் தோள் பட்டையில் அடித்தான். ''ஆங்... அதோ... பறந்துடுச்சு!''

''நன்றி, பிலிப். கோடை வந்துட்டா போதும்... ஈ தொல்லையும் குளவி தொல்லையும் அதிகமாயிடுது.''

''கோடைக் காலம் - ஒரு குளவிக் காலம்! ஆங்... நாம யாருக்காக இப்போ காத்திருக்கோம்னு உங்களுக்குத் தெரியுமா?''

''துளி ஐடியா கிடையாது.''

காதைக் கிழிக்கும் ரயில் ஹார்னின் பிளிறல் ஓசை, நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு ரயிலிலிருந்து கிளம்பி நிறைந்தது. ''அந்த ரயிலா தான் இருக்கணும்'' என்றான் லாம்பர்ட்.

நல்ல உயரமான... சிப்பாய் போன்ற உருவமைப்பு கொண்ட ஒரு முதியவர், நடை மேடையிலிருந்து வெளியே வந்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அதிகம் உதிராத அவரது நரைத்த கேசம் அழுந்த வாரப் பட்டிருந்தது. அழகாய் நறுக்கப்பட்டிருந்த வெண் மீசை வைத்திருந்தார்.

அவருடைய சுமைகளைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு தடுமாறியபடி நடந்த போர்ட்டர், வெரா மற்றும் லாம்பர்ட்

ஆகியோரைச் சுட்டிக் காட்டினான்.

வெரா, அதிகாரம் தொனிக்க முன்வந்தார். ''நான் ஓவனின் காரிய தரிசி'' என்றார். ''நமக்காக இங்கு ஒரு வாடகைக் கார் காத்துக்கிட்டி ருக்கு. கிளம்பலாம். இது, திரு லாம்பர்ட்.''

சற்று தளர்ந்திருந்தன நீல நிற விழிகள்... ஆனாலும், கூடிய வயதால் ஆட்கொள்ளப்பட்டு தொய்ந்து போயிராத துளைக்கும் ஈட்டிப் பார்வை, லாம்பர்டை அளந்தன. அக்கணத்தில் ஒரு தீர்ப்பு அவ்விழிகளில் வழிந்து நின்றது... அதைப் படித்து விட மட்டும் புத்திசாலியான ஓர் ஆள் இருந்திருந்தால்...!?

'அழகன்... ஏதோ சின்னதாய் ஒரு தப்பு இருக்கின்றது... இவனிடம்' – நினைத்துக் கொண்டார் அவர்.

மூவரும், காத்திருந்த டாக்ஸிக்குள் புகுந்துக் கொண்டனர். சலனம் அதிகமற்று தூங்கிக் கொண்டிருந்த ஓக் பாலப் பகுதியின் சாலைகளில் பயணித்தனர். பிறகு, பிரதான ப்ளைமூத் சாலையில் ஒரு மைல் தூரம் போல கடந்தனர். இறுதியாக வளைந்தும் சுழிந்தும் பள்ளமாயும் மேடாயும் பச்சை வெளியாயும் குறுகலாயும் முன்னேறிய சில சிக்கலான பாதைகளில் கார் ஓடியது.

ஜெனரல் மார்கரெட் பேசினார்: ''டேவனில் இப்படிப்பட்ட பகுதிகள் எதுவுமே எனக்குத் தெரியாது. நானிருக்கும் சின்ன பகுதி, கிழக்கு டேவனில் உள்ளது. அது தான் டேவனின் இறுதி.''

''இது ரொம்ப அழகா இருக்கு'' என்றார் வெரா. ''குன்றுகள்... சிகப்பு செம்மண் பூமி... எல்லாமே பச்சைப் பசேல்... ஓஹ்...! அற்புதக் காட்டுப் பிரதேசம்...! அதிமதுரம்...!''

இதற்கு லாம்பர்ட், ''ரொம்ப உள்ளடங்கியிருக்கு --- இது'' என்று குறை கூறும் போக்கில் சொன்னான். ''திறந்த வெளியா இருக்கிற கிராமப் பகுதிகள் தான் எனக்கு மிக விருப்பம். சுற்றிவர என்னவெல் லாம் இருக்கு... எதிர்ல என்ன வருது... எப்படிப்பட்ட வீடெல்லாம் இருக்கு... எல்லாம் அப்பத்தானே தெரியும்...!''

இதற்கு பதிலாய், ''ம்... உலகின் பல பகுதிகளுக்குப் போய் வந்திருப்பீங்க போலிருக்கு'' என்றார், ஜெனரல் மார்கரெட்.

அலட்சியமாக தோள்களைக் குலுக்கிக் காட்டினான் பிலிப். ''சும்மா இங்கேயும் அங்கேயுமா அலைஞ்சிருக்கேன், ஸார்.'' சொல்லி விட்டு

பின்வருமாறு நினைத்துக் கொண்டான்: 'இந்தக் கேள்வியின் தொடர்ச்சியாக அரசியலுக்குள் நுழைந்து, எல்லைச் சண்டை அது இது என்று கழுத்தறுக்கப் போகிறார்...!'

ஆனால் ஜெனரல் மார்கரெட் அரசியல் சண்டை இவை பற்றியெல்லாம் குறிப்பிடவில்லை.

II

நெட்டைக் குத்தலாய் போன ஒரு குன்றின் மீதும் மேலும் சுற்றிச் சுற்றி இறங்கிய மலைப் பாதையிலும் டாக்ஸியை ஓட்டிப் பிரயாணித்து 'ஸ்டிக்கில்-ஹேவன்' எனும் பகுதியை அடைந்திருந்தனர். கும்பல் கும்பலாய் குடில்கள். ஓரிரு மீன் பிடி படகுகள் கரைக்கு இழுத்துக் கட்டப்பட்டிருந்தன.

அஸ்தமனமாகிக் கொண்டிருந்த சூரியனின் ஒளிக் கிரணங்களால் ஒளியூட்டப்பட்டிருந்த **சிப்பாய் தீவின்** தரிசனத்தை முதல் முறையாய் பார்த்தனர். தெற்கு திசை நோக்கி நேர்க் கோடாய் நீண்டிருந்தது தீவு.

''ஓ... இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கே'' என்றார் வெரா, சிறு ஆச்சரியத்துடன்.

வெரா கற்பனைக்குள் பதிந்திருந்த தீவின் காட்சியே வேறு. கரையை ஒட்டி இருக்கும்... பற்பல மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கொண்டு... நவ நாகரீகமாய்...! ஆனால் இங்கிருந்து பார்க்கும் போது தீவில் ஒரே ஒரு வீடு கூட தென்படவில்லை! எல்லைக் கோடுகள் மட்டும் கொண்டு விவரம் தெரியாது தோன்றும் ஓர் ஓவியமாய், பாறைகள் மட்டுமே கண்களில் பட்டன! அவை கவிழ்ந்துக் கிடக்கும் ஒரு ராட்சசனின் தலையை நினைப்பூட்டின! கொஞ்சமாய், ஆனால் நிச்சயமாய் நடுங்கினார் வெரா.

ஒரு சிறிய உணவகத்தின் வாசலில், மூன்று பேர் உட்கார்ந்திருந்தனர். சற்று கூன் விழுந்து வளைந்த ஒருவர்... முதியவர்... ஜட்ஜ். நெட்டைக் குத்தலாகவே உட்கார்ந்துப் பழகியிருக்கும் ப்ரெண்ட். மேலும்

மூன்றாமவன் - கள்ளங்கபடுப் பேசி அறியாத வெகுளி முகம்... நல்ல குண்டு... தானாக முன்வந்து அறிமுகப்படுத்திக் கொண்டான் அவன்.

''உங்களுக்காக காத்திருக்கலாம்னு முடிவு செஞ்சோம்'' என்றான். ''ஒரே பிரயாணமா போகும்... அதனால. என் பேர் டேவிஸ். பிறப்பால் தென் ஆப்பிரிக்கன். நாடல் பகுதி'' என்று விட்டு ''ஹா ஹா'' என காற்றைக் கிழித்துக் கொண்டு சிரித்தான். சூது அற்ற சிரிப்பு அது.

'என்ன சிரிப்பு இது...?!' - ஜஸ்டிஸ் வார்க்ரேவ், அவனை வன்மம் மேலோங்க பார்த்தார். 'கோர்ட் கலையட்டும்' என்று கோப நேரங்களில் நீதிமன்றத்தில் சொல்லும் சொல்லைப் போல... இப்போது சொல்லி விடலாமா என்று கூட அவர் பதறினார்! இந்தக் கூட்டத்தை விரும்புவதா, அப்படியே விட்டுத் தொலைத்து விடுவதா என்று எமிலிப்ரெண்டுக்குப் பிடிபடவில்லை!

''நாம கிளம்பறதுக்கு முன்னாடி... ஒரு சின்ன மது விருந்து?'' - விருந்தோம்பிக் கேட்டான் டேவிஸ்.

இதற்கு ஒருவரிடமிருந்தும் ஆமோதிப்பு கிடைக்காததால், ''அப்படினா இனி தாமதிக்கக் கூடாது'' என்றவன், திரும்பி, விரல்களைத் தூக்கிக் காற்றில் அசைத்தான். ''நம்ம ஐயாவும் அம்மாவும் அங்கே காத்துக்கிட்டிருப்பாங்க'' என்று சொல்லிக் கொண்டான்.

விளக்க முடியாத ஒரு திடீர் இறுக்கம்... ஒரு கட்டுப்பாடு... தடை... கூடியிருந்தவர்களிடம் விளைந்து விட்டதை டேவிஸ் கவனித்திருக்கக் கூடும். ஐயா... அம்மா... என்ற வார்த்தைகளைச் சொன்னதுமே, விசித்திரமான ஒரு முடக்கம் இவர்கள் அனைவரிடமும் உண்டாகி விட்டதைப் போன்ற ஒரு நிலைமை.

சைகை காட்டி அழைத்த டேவிஸின் அழைப்புக்கு பதிலாய், அருகிலிருந்த சுவர் ஒன்றில் அப்படியே ஒட்டி விட்டது போல சாய்ந்து நின்றுக் கொண்டிருந்த ஒருவன், அதிலிருந்து விலகி, இவர்களை நோக்கி வந்து நின்றான். அவனுடைய அரக்கத் தனமான நடை-உடை, அவனைக் கடலுக்குள் போராடி வாழும் ஒருவனாய் தனித்துக் காட்டியது. தட்ப வெப்பம் தாக்கித் தாக்கிக் காய்த்துப் போன முகம். நிச்சயமற்ற பெரிய அலட்சியக் கண்கள். பேசிய குரல் மட்டும் பணிந்து இருந்தது.

''தீவுக்குள் போக எல்லாரும் தயாரா?'' என்றான் அவன். ''படகு காத்திருக்கிறது. இன்னும் ரெண்டு பேர் கார்ல வந்துக்கிட்டு

இருக்காங்க. ஆனா பரவாயில்லே. அவங்க எப்போ வேணும்னாலும் வந்து சேரலாம்... ஆகையால், அவங்களுக்காகக் காத்திருக்க வேண்டாம் என்பது ஓவனின் கட்டளை.''

இப்போது எமிலி ப்ரெண்ட் கேட்டார்: ''அது ரொம்ப சின்ன படகாயில்லே இருக்கு?''

''ஓ... அவ ஓர் அற்புதமான படகு, மேடம்'' என்றான் பதிலுக்குப் பெருமையாய். ''கண் சிமிட்டும் நேரத்துல ப்ளைமூத் போய் சேர்ந்துடலாம்... அத்தனை வேகம் தெரியுமா!''

நீதிபதி வார்க்ரேவ் கறாராய் சொன்னார்: ''ஏம்பா... நாங்க நிறைய பேர் இருக்கோம்ப்பா.''

''இதைப் போல ரெண்டு மடங்கு கூட்டத்தை அவ சுகமா சுமப்பா, ஸார்.''

பிலிப் லாம்பர்ட் அவனுடைய இனிமையான குரலில், அருகிலிருப்போரிடம் அமைதியாய் சொன்னான்: ''யாரும் அதிக குண்டு கிடையாது. அதியற்புதமான சூழ்நிலை. கிளம்பலாமே.''

தனது சந்தேகம் குறையாமலேயே... மற்றவர்கள் உதவியுடன் தன்னைப் படகுக்குள் போட்டுக் கொண்டார் ப்ரெண்ட். அவரை மற்றவர்கள் பின்தொடர்ந்து படகுக்குள் நுழைந்தனர். இன்னும் கூட இவர்களுக்குள் பாராட்டும்படியான சிநேக மனப்பான்மை உருவாகவில்லை. ஒருவருக்கு மற்றவர் ஒரு புதிர் போலவே இருந்தனர்.

இத்தனைக்கும் மேல் படகு கிளம்பியிருக்க வேண்டும்; கரையிலிருந்த வளையத்தோடு கட்டப்பட்டிருந்த கயிற்றினைப் படகோட்டி கழற்றி விட்டுப் படகுக்கு விடுதலை தர வேண்டியது தான் பாக்கி... ஆனால் நிதானித்தான்.

உள்ளே கிராமத்திலிருந்து இப்பகுதிக்கு வழிந்த சாலையில் ஒரு கார் வந்துக் கொண்டிருந்தது. அந்த அழகான வடிவமைப்புக் கொண்டிருந்த கார்... ஈடு இணையற்ற சக்தி கொண்ட கார்... காற்றைக் கிழித்து ஓசை உண்டாக்கியபடி இறங்கிக் கொண்டிருந்தது. அதன் ஓட்டத்தை இன்னும் விரட்டியபடி... அதில் ஓர் அதிரூப சுந்தரன் அமர்ந்திருந்தான்... அவன் கேசம் காற்றில் பின்னுக்குத் தள்ளப்பட்டு இன்னொரு கடலலையாய் படபடத்து பிரமிக்க வைத்தது. ஆரஞ்சு நிற மாலைச் சூரிய ஒளியில், அவன் ஓர் இளைஞனாய் தோன்றவில்லை... இளைய

கடவுளாய் தோன்றினான்! வானம் விட்டு இறங்கி வந்து விட்ட காதல் கடவுளாய் தோன்றினான்! 'லவ் காட்!'

காரின் ஹார்னை அவன் அமுக்க, அதிலிருந்து வழிந்த கர்ஜனை ஒலி, கரைப் பாறைகளில் மோதி மோதி எதிரொலித்தது.

இது ஓர் அற்புதக் கணம்! அழியக் கூடிய பொருளையும் தாண்டி அழியா அழகாய் அதிலிருந்த ஆன்டனி மார்ட்ஸன் தோன்றினான். பிறகு, இங்கிருக்கும் பலரும், பல முறை, நடந்து முடிந்த இந்த சில நிமிடக் காட்சியை, எண்ணியெண்ணி அசை போட்டிருக்கின்றனர்!

III

'அரியான விந்தையான கூட்டம்யா இது' என கணக்கிட்டான் படகின் மோட்டாரினை இயக்கிக் கொண்டிருந்த ஃப்ரெட். ஓவனின் விருந்தாளிகள் எப்படியிருப்பார்கள் என இவன் எண்ணி வைத்திருந்தானோ... அப்படி இல்லை இது! மொத்தத்தில் மிக உயர்ந்த ரகமாய் எதிர்பார்த்திருந்தான்! அரண்மனைப் பெண்கள் அணிவதைப் போன்ற தரை புரளும் அங்கிகள் சகித உடையலங்காரங்கள்... ஆடம்பரப் பெண்கள்... கடல் பிரயாணத்துக்கு ஏற்ற அட்டகாச உடைகள் கொண்ட ஆண்கள்... பார்த்ததுமே முக்கியப் புள்ளிகளாய் தோன்றும் மக்கள்...!

ம்! இது வெறும் கூட்டம்!

'என்ன மனுஷன் இந்த ஓவன்...! இவனையோ இல்லை இவனுடைய மனைவியையோ அல்லது குடும்பத்தையோ இன்னும் பார்க்காமலே இருக்கிறோமே... என்ன கோமாளித்தனம் இது...!' – எண்ணிக் கொண்டான் ஃப்ரெட். 'கரை பக்கமாகவும் அந்த ஓவன் வந்தது கிடையாது. பிறகு எப்படிப் பார்க்க...! இந்த மோரீஸ் பயலிடம் என்ன வேண்டும் என்று சொல்லி பணம் தந்து அனுப்பி விடுகிறார்கள். வேண்டியதைக் கறாராய் வாங்கிப் போகிறார்கள்... மிகச் சரியாய் பணமும் தந்து விடுகிறார்கள்...! இருந்தாலும் விசித்திரமாய் தான்

இருக்கிறது! இந்த ஓவன் கூட்டமே மர்மமானது என்கின்றன செய்தித் தாள்கள். எனக்கும் என்னவோ அப்படித் தான் படுகின்றது...!'

ஃப்ரெட்டின் சிந்தனை நின்றபாடாயில்லை.

'இந்தத் தீவினை நடிகை கேப்ரிலி டர்ல் தான் வாங்கியிருக்கிறார்! இதில் மாற்றுக் கருத்து கிடையாது! ஆனால், இந்த எண்ணமே, இதோ இங்கு வந்த உட்கார்ந்திருக்கும் இந்தக் கூட்டத்தினைப் பார்த்தால் நழுவிக் கரைந்து விடுகின்றதே! ஓஹ்... ம்ம்... கிடையவே கிடையாது... இந்தக் கூட்டத்திலிருக்கும் ஒருத்தருக்குக் கூட சினிமா உலகோடு தொடர்பிருப்பதாய் தெரியவேயில்லை!'

மனதில் தோன்றிய எல்லாவற்றையும் தனக்குள்ளேயே அமைதியாய் வகைப்படுத்தினான் ஃப்ரெட்:

'ஒரு கிழப் பெண் - கலியாணமாகாதவளாயிருக்க வேண்டும் - அது ஓர் அமிலம் - ஒட்டிக் கொண்டிருக்கும் பொருக்குப் போன்று, அவள் ஒரு வீண். மிலிட்டரியில் இருந்தது போல தோன்றும் ஒரு கனவான் - செருக்கியான சிப்பாய் தோற்றம். அப்புறம் அழகாய் தோன்றும் அந்தப் பெண் - ஆனாலும் சாதா - ஹாலிவுட்டுக்கே உரிய கவர்ச்சி துளியும் கிடையாது. வெகுளியாய் பேசிக் கலகலப்பூட்டும் அந்த அவர் - ஓய்வு பெற்ற வியாபாரி போல! அந்த இன்னொருத்தன் - பசியோடே இருப்பது போல மளமளவென அலை பாயும் கண்கள் - அவன் ஒரு விந்தை – ஆமாம், விந்தை தான். இவன் வேண்டுமானால் விந்தையான சினிமா உலகோடு கொஞ்சமாய் தொடர்புடையவனாக இருக்கலாம்.

இந்தப் படகில் ஒரே ஒரு திருப்தியளிக்கும் மனுஷன் தானிருக்கிறான். அவன் தான் - காரில் வந்த அவன் (ஓஹ்...! என்ன கார் அது! 'ஸ்டிக்கில்-ஹேவன்' பகுதியில் இதற்கு முன்னால் அப்படி ஒரு காரினை யாராவது பார்த்திருக்கத் தான் முடியுமா! ம்ம்! அது போன்ற ஒரு காரை ஆயிரமாயிரமாய் கொடுத்து வாங்கியிருக்க வேண்டும்! அது– கார்!). அவன் தான் சரியான ஆசாமி. காசுக்குப் பிறந்தவன் - அவன்.

இவனைப் போலவே, வந்திருக்கும் மற்றதுகளும் இருந்துத் தொலைத்திருக்கக் கூடாது...?!

இங்கு எதற்கு இப்படி ஒரு பொருந்தாத கூட்டம், ஒன்று சேர்ந்து வந்திருக்கின்றது...?! இதுகளைப் பற்றி நினைத்தாலே விசித்திரமாய் இருக்கின்றது... முழுக்கவே விசித்திரமாயும் விந்தையாயும் இருக்

கின்றது...! ரொம்ப விசித்திரம் --- துளியும் ஒழுங்கற்று --- குழப்பும் பயமாய் --- சந்தேகத்தைத் தூண்டும் ஆச்சரியமாய் --- விந்தையாய் ---'

IV

பாறையைச் சுற்றி தனக்கான வழியைக் கடைந்துக் கொண்டு நெருங்கியது இயந்திரப் படகு. இப்பொழுது, ஒரு வழியாக, கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருந்த வீடு தெரிய ஆரம்பித்தது. பாறையும் பாசியுமாய் அல்லாது, தீவின் தென்திசைப் பகுதி முற்றிலும் மாறுபட்டிருந்தது; உச்சியிலிருந்து அடுக்கடுக்காய் வியாபித்து இறங்கி அம்சமாய் கடலுக்குள் அடங்க - அங்கே, வீடு, தெற்கு பக்கம் பார்த்திருந்தது. பெரிய சதுரமாய் - நாகரீக கட்டமைப்பில் - சூரிய ஒளி அத்தனையையும் வீட்டுக்குள் விட அநேக வட்ட வடிவ ஜன்னல்கள் கொண்டு!

கிறங்கடிக்கும் அமைப்பு - எதிர்பார்த்திருந்த அனைத்தையும் பூர்த்தி செய்யும் வீடு!

ஃப்ரெட் இயந்திரத்தை அணைத்தான். பாறைகளுக்கு இடையே தரையிறங்குவதற்காக வடிவாகியிருந்த சிறு சமதளப் பிரதேசத்தை நோக்கிப் படகு ஊர்ந்தது.

பிலிப் லாம்பர்ட் குறி வைத்தாற் போல் சொன்னான்: ''வானிலை மோசமாயிருக்கும் போது இங்கே வரவே முடியாது போல!''

இதற்கு ஃப்ரெட் முழு மனத்தோடு ஒப்புதல் பதில் தந்தான்: ''தென்கிழக்குப் பருவம் தூக்கலாயிருக்கும் போது **சிப்பாய் தீவு** பக்கம் தலை வைக்கக் கூடாது! சில சமயங்கள்ல அந்தப் பேய்க் காத்தும் மழையும் ரெண்டு வாரம் மூணு வாரம் கூட நீடிச்சிருக்கும்!''

வெரா க்ளேதார்ன் எண்ணிக் கொண்டார்: 'சாப்பாடு கிடைப்பது கஷ்டமா இருக்கப் போகுது. ஒரு தீவில இருக்கிற மகா பிரச்சினையே இது தான். இது போன்ற தட்டு முட்டு வீட்டு சமாச்சாரங்கள்லாம் பிராணனை வாங்கிடும்.'

பாறைகளின் இடுக்கில் போய் தங்கியது படகு. ஃப்ரெட் குதித்திறங்கி விட... இவனும் லாம்பர்டுமாக சேர்ந்து மற்றவர்கள் தரையிறங்க உதவினர். பாறையில் முடுக்கப்பட்டிருந்த வளையத்தோடு படகின் சங்கிலியைச் சேர்த்துக் கட்டி நிறுத்தினான் ஃப்ரெட். பிறகு மலையைக் குடைந்து அதன் உச்சி நோக்கி நீண்டபடி அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகளில் வழி காட்டிக் கொண்டு முன்னேறினான்.

''ஹா... ஹா...'' என கண்ணகலச் சொன்னார் ஜெனரல் மார்கரெட். ''என்ன மனோஹரமான ஓரிடம்!''

ஆனாலும் அவர் கொஞ்சமாய் கிலேசப்பட்டார். இது போன்ற இடம் நகரத்தில் இல்லாமல் போயிற்றே! இப்படி ஒரு வசதியற்ற இடத்திலா இது இருந்துத் தொலைக்க வேண்டும்!

வந்திருந்த சிறு கூட்டம் படிகளில் ஏறி உயர்ந்து மலையுச்சியின் ஒரு பரந்து விரிந்த சமதளப் பகுதிக்கு வந்து சேர்ந்ததும்... ஆஹ்... அவர்களது உள்ளுணர்வு மளமளவென புத்துணர்வு பெற்று எழுந்தது. திறந்திருந்த நிலைக் கதவின் அருகில் காவலாளி ஒருவன் இவர்களுக்காகக் காத்து நின்றிருக்க... அவனிடமிருந்து ஏதோ ஓர் ஆகர்ஷண சக்தி, மன பயத்தை அகற்றி நம்பிக்கையை ஊட்டியது. இது மட்டுமல்ல... வீடே களை கட்டி, வசீகரமாய் இருந்தது. குறிப்பாக --- வீட்டிலிருந்து சற்று தள்ளியிருக்கும் இந்த சமதளப் பகுதியிலிருந்து பார்த்தால்...!

இவர்கள் நெருங்கி வருவதைக் கண்டதும், காவலாளி முன்னேறி வந்து, முதுகு வளைத்து மரியாதை வணக்கம் செலுத்தி நின்றான். மிக ஒல்லி... நல்ல உயரம்... முழுக்க நரைத்த கேசம்... மிகுந்த மரியாதை செலுத்தும் பாவம்... ''இந்தப் பக்கமாக எல்லோரும் உள்ளே வாங்க'' என்றழைத்தான் அவன்.

உயர்ந்தும் அகண்டும் வியாபித்திருந்த பெரிய வரவேற்பறையில், வந்திறங்கும் விருந்தினர்களுக்காக பானங்கள் தயாராயிருந்தன. பல வரிசைகளில் பாட்டில்கள். நாக்கில் நீரூற, ஆன்டனி மார்ட்ஸனின் ரத்தம் உற்சாகமாகியது. இப்போது தான் இவன் ரம் பீர் பற்றியெல்லாம் மானசீகமாக ஏங்கிக் கொண்டிருந்தான்! ஆனால் அனைத்துமே பழரச பானங்கள்! இதெல்லாம் இவனுடையவை அல்ல! இப்படி ஓரிடத்திற்கு அனுப்பி வைக்க கிழ பாட்ஜர் எத்தனை நாட்களாய் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தானோ!

அது சரி... இந்தக் காவலாளி பட்லர் பயல் தற்போது என்ன சொன்னான்?

திரு ஓவன் --- எதிர்பாராமல் காலதாமதமாக வந்து சேர்வார் --- நாளை வரை அவர் இங்கு வர முடியாத சூழ்நிலை --- ஆகவே சில கட்டளைகள் இட்டுள்ளார் --- வந்தவர்கள் என்ன கேட்டாலும் செய்துக் கொடு --- நேராக அவரவர் அறைகளுக்குள் போவதானாலும் விட்டு விடு – களைப்பாற உதவு --- இரவுச் சாப்பாடு எட்டு மணிக்கு ---

V

திருமதி ரோஜர்ஸினைப் பின்தொடர்ந்துக் கொண்டே மேல் மாடிக்குப் போய் சேர்ந்தார், வெரா. நடைபாதையின் கடைசியிலிருந்த ஒரு பெரிய கதவினைத் திறந்து உள்ளே நுழைய அவள் வழி செய்து தர, பெரிய பெரிய ஜன்னல்கள் கொண்டிருந்த இதமான ஒரு படுக்கை யறைக்குள் பிரவேசித்தார் வெரா. கடல் நோக்கி அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான ஜன்னல் திறந்திருந்தது. இன்னொரு ஜன்னல், காலைச் சூரியோதயத்தை ரசிக்க ஏதுவாக கிழக்கு பக்கம் அமைக்கப் பட்டிருந்தது – அது தற்சமயம் மூடியிருந்தது. உடனடியாய் தன் மனம் காணும் இன்ப ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார் வெரா.

திருமதி ரோஜர்ஸ் குறிப்பிட்டார்: ''அம்மா... உங்களுக்குத் தேவை யான எல்லாம் இங்கே இருக்குனு நினைக்கிறேன்...?!''

வெரா சுற்றிலும் பார்த்தார். அவரது பெட்டி கொண்டு வரப்பட்டு அதன் கட்டுகள் தளர்த்தப்பட்டிருந்தன. அறையின் ஓர் ஓரத்து அறையில் கதவு திறந்திருந்தது... அது வெளிர் நீல நிற டைல்கள் சுவரெங்கும் பதிக்கப்பட்டிருந்த ஒரு குளியலறை.

வெரா உடனே கேள்விக்குப் பதில் சொன்னார்: ''ம். அப்படித்தான் நினைக்கிறேன்.''

''உங்களுக்கு ஏதாவது வேணும்னா இந்த மணியை அடிங்கம்மா.''

திருமதி ரோஜர், மேலும் கீழும் நகன்றாடி உணர்ச்சிகளைக்

கொட்டாத வெறும் தட்டையான நேர்க்கோட்டுக் குரல் கொண்டிருந்தாள். பேசிய அவளை ஆர்வமாய் உற்று கவனித்தார் வெரா. வெளிறிப் போய்... ரத்த ஓட்டமற்று... வாடி வதங்கும் என்ன ஒரு பேய் முகம்! தலையை அழுந்த வாரி... பவ்யமாய் நின்றுக் கொண்டு... பணிப்பெண்ணுக்கே உரிய கறுப்பு உடை உடுத்தி, மிக மரியாதையாய்.... எல்லாம் சரிதான்! ஆனால் பேசும் பொழுதும் கூட நிலையாய் நில்லாது சந்தேக அலறலோடு இங்குமங்கும் அலை பாய்ந்துக் கொண்டேயிருக்கும் அந்த மருண்ட விழிகள்... ஓஃப்... ஏன்...?!

'இவளுடைய நிழலை இவளே பார்த்தா கூட பயந்து அலறிடுவா போலிருக்கே...!' என எண்ணிக் கொண்ட வெரா, உடனே, ஏதோ புரியப் பெற்றவராய், ''ஆங்!'' என சன்னமாய் சொல்லிக் கொண்டார்.

ஆங்...! பயம்! அது தான் இது! அதே தான்! பயம்! பய அலறல் - மௌனமாய்! அழிக்கவே முடியாத பயத்தை மனம் முழுவதும் சுமந்துக் கொண்டு நடக்கும் பெண்ணைப் போல... இவள்...

வெராவின் தண்டுவடத்தில் ஒரு குட்டி பயம் பீறிட்டது. எந்தக் காரணத்துக்காக இவள் இப்படிப் பயப்பட வேண்டும்? எண்ணிய படியே மிருதுவாய் வெரா குறிப்பிட்டார்: ''நான் திருமதி ஓவனுடைய புதிய காரியதரிசி. உனக்கு இந்த விஷயம் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.''

''இல்லம்மா. எனக்கு எதுவுமே தெரியாது'' என்றாள் திருமதி ரோஜர்ஸ். ''சில ஆண் மற்றும் பெண்களோட பெயர் பட்டியல்... அவங்க எந்தெந்த அறையில தங்கணும் எனும் அறிவுறுத்தல்... இவை தாம்மா தெரியும்.''

வெரா கேட்டார்: ''திருமதி ஓவன் என்னைப் பற்றி சொல்லவே இல்லே?''

இதற்கு திருமதி ரோஜர்ஸின் கண்ணிமைகள் துடிதுடித்தன. ''நான் திருமதி ஓவனைப் பார்க்கவே இல்லேம்மா – இது வரைக்கும். நாங்க இங்கே ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் வந்து சேர்ந்தோம்.''

'சரியான அசாதாரண பிசாசுகள்... இந்த ஓவன் கூட்டம்...' என்று எண்ணிக் கொண்ட வெரா, சற்று உரத்த குரலில் கேட்டார்: ''அப்போ இங்கே யாரெல்லாம் தான் இருக்கீங்க? ஏதாவது அலுவலர்கள்?''

''நானும் ரோஜர்ஸும் மட்டும்மா.''

முகத்தைச் சுளித்துக் கடுகடுப்பாய் ஆனார் வெரா. 'எட்டு பேர் இந்த வீட்டில – எங்களை வரச் சொல்லி விருந்து வைப்பவர்களையும் சேர்த்து பத்து – இந்த அத்தனை பேரையும் கவனிச்சுக்க ஒரே ஒரு ஜோடி.'

''நான் நல்லா சமைப்பேம்மா'' என தொடர்ந்தாள் திருமதி ரோஜர்ஸ். ''ரோஜர்ஸுக்கும் வீடு ஓரளவு பழகிடுச்சு. இருந்தாலும் இத்தனை பெரிய குழு வரப் போகுதுன்னு எங்களுக்குத் தெரியாதும்மா.''

''சமாளிக்க முடியுமா?''

''ஓ, நிச்சயமா. சமாளிச்சுடுவேன். ஒரு வேளை மேல மேல ஆட்கள் கூடுதலா வந்துக்கிட்டிருந்தாங்கன்னா... கூடுதலான வேலைக் காரங்களுக்கு முதலாளி ஏற்பாடு செய்யலாம்.''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

மிஸஸ் ரோஜர் திரும்பி வெளியேறலானாள். தரையின் மீது ஓசையெழுப்பாது ஊர்ந்தது அவளது பாதங்கள். நிழலைப் போல தரையில் நழுவிப் போனாள் அவள்.

ஜன்னல் வரை நடந்துப் போன வெரா, அதன் அகலமான திட்டில் சாய்ந்து அமர்ந்துக் கொண்டார். சன்னமாய் உலுக்கப்பட்டிருந்தார் அவர். இங்கு, ஒவ்வொன்றும், ஏதோ ஒரு வகையில் விந்தையாய் இருக்கின்றது. குழப்பும்... உலுக்கும்... சந்தேகிக்க வைக்கும் விந்தை. ஓவன்ஸ் இங்கு இல்லாதது, பேயாய் குலைந்துப் போய் உலவும் இந்த திருமதி, ஏன்... வந்திருக்கும் வகை வகையான விருந்தாளிகளும் தான்! ஆம்... இந்தக் கூட்டங்கூட புரியாத விந்தையே. எதனோடும் ஒத்து வராமல் ஆனால் ஒன்றாய் சேர்ந்து விட்ட கூட்டம்!

'ஓவன்ஸ் குடும்பம் எத்தகையது என்பதை நான் ஆரம்பத்திலேயே கவனித்திருக்க வேண்டும்' –எண்ணிக் கொண்டார் வெரா. 'இப்போது போய் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று குடைந்து என்ன பிரயோஜனம்?!'

இறங்கிக் கொண்டார். இருப்புக் கொள்ளாமல் அறைக்குள்ளேயே இங்குமங்குமாக கொஞ்சம் நடந்தார். பார்த்தார். நவீன அறை. நவநாகரீகங்கள் அனைத்தும் பொருத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ள உயர்ரக அறை. பிரகாசிக்கும் பளிங்குத் தரையில், அழுக்குப்படாத வெண்ணிற மெத்தைத் தரை விரிப்புகள். இள நிற வர்ணங்களால் மனம் மயக்கும் சூழல். ஆளை அப்படியே பிரதிபலித்துப் பெருமை கொள்ள

வைக்கும் பெரும் கண்ணாடி, அதன் வனப்பைத் தூக்கிக் காட்டும் ஒளி விளக்குகள்! அங்கே, குளிருக்கு சூடு கூட்ட ஒரு கனப்பு மற்றும் அதனருகே, பளிங்கும் மரமும் கலந்து ஆக்கப்பட்டு ஆபரணங்களால் ஆன கண் கவரும் ஓர் அலமாரி. கலை நுணுக்கத்தோடு உருவாக்கப் பட்டிருந்த ஒரு கரடிச் சிலை; அதனுள் அழகாய் செருகப்பட்டிருக்கும் ஒரு கடியாரம்.

இந்தக் கலை அமைப்புக்கு மேலே, நல்ல வெள்ளி நிற பட்டிகளால் முக்கியப்படுத்தப்பட்ட ஒரு சட்டம்... அதனுள் தோலினால் ஆன ஒரு பண்டைய காகிதம்... அதில் ஒரு கவிதை.

கனப்புக்கு அருகே சற்று மேலே சுவரில் இருந்த இந்தக் கவிதையின் கீழே போய் நின்றுக் கொண்ட வெரா, அதனைப் படித்தார். தனது குழந்தைப் பருவக் காலம் முதல் வெராவின் நினைவில் இருக்கும் ஒரு நர்ஸரிப் பாடல் அது.

பத்து சிப்பாய் பையன்கள், விருந்து சாப்பிட போனார்கள்;
ஒருவனின் தொண்டை அடைத்துக் கொள்ள, மிஞ்சினர் ஒன்பது.

ஒன்பது சிப்பாய் பையன்கள், விடிய விடிய பேசி முடித்தனர்;
ஒருவன் மட்டும் நீண்ட நேரம் தூங்கி விட, மிஞ்சினர் எட்டு.

தேவன் கற்கரையை எட்டு சிப்பாய் பையன்கள் கடந்துக் கொண்டிருந்தனர்;
ஒருவன் அங்கேயே இருந்து விட முடிவு செய்ய, மிஞ்சினர் எழுவர்.

ஏழு சின்ன சிப்பாய் பையன்கள் கழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்;
ஒருவன் தன்னையே பாதியாய் வெட்டிக் கொண்டு விட, மிஞ்சினர் ஆறு பேர்.

ஆறு சிப்பாய் பையன்கள் தேன் அடையோடு விளையாடிப் பார்த்தனர்;
ஒரு குண்டுத் தேனீ ஒருவனைக் கொட்டி விட, மிஞ்சினர் ஐவர்.

ஐந்து சிப்பாய் பொடியன்கள் சட்டம் படிக்கப் போனார்கள்;
ஆவணக் கிடங்குக்குள் ஒருவன் சிக்கிக் கொண்டு விட, மிஞ்சினர் நால்வர்.

நாலு சின்ன சிப்பாய் பையன்கள், கடலுக்குள் ஆட சென்றனர்;
குட்டி மீனொன்று ஒருவனை விழுங்கி விட, மிஞ்சினர் மூவர்.

மூன்று குட்டி சிப்பாய் பையன்கள் மிருகக்காட்சி சாலை போயினர்;
பெரிய கரடி ஒருவனை இழுத்துக் கொள்ள, மிஞ்சினர் இருவர்.

இரண்டு குட்டி சிப்பாய் பையன்கள் சூரிய ஒளியில் உட்கார்ந்துக் கொண்டனர்;
ஒருவன் அப்படியே உருகி விட மிஞ்சியது ஒருவர்.

ஒரே ஒரு சின்ன சிப்பாய் பையன் தனியே விடப்பட;
அவன் ஓடிப் போய் தூக்கில் தொங்கினான்.

பிறகு, அங்கு ஒருவர் கூட இல்லை.

*வெரா சிரித்தார். ம்! இப்படி இருந்தது தான் **சிப்பாய் தீவு!***

திரும்பி மறுபடியும் ஜன்னல் திட்டின் மீது போய் ஏறி அமர்ந்துக் கொண்டு கடலைப் பார்க்க ஆரம்பித்தார்.

எத்தனை பெரிசு, இந்தக் கடல்! இங்கிருந்து பார்த்தால், எங்கெங்கிலும் நிலங்கள் தென்படவில்லை – மாலைச் சூரியனின் கதிரொளியில் தகதகத்து ஆடும் எல்லைகளற்ற அலைகள் மட்டுமே!

கடல்... இப்போது இத்தனை அமைதியாயிருக்கும் கடல்... சில சமயங்களில் ஈவிரக்கமற்று... உன்னைத் தன்னுடைய ஆழம் வரை இழுத்து அமுக்கிய கடலிது... மூழ்கி, மூழ்கி... மூழ்கிப் போய் விட்ட நிலையில் கண்டெடுத்து... கடலில் மூழ்கி... கடலினால் மூழ்கி... மூழ்கி... மூழ்கி... மூழ்கி...

கூடாது. நிறுத்து. ம்ம். அதை இவர் நினைக்க மாட்டார். நினைக்கவே மாட்டார்.

அதெல்லாம் முடிந்துப் போய் விட்ட ஒரு பழங்கதை...

VI

*சூரிய வட்டத்தின் அடி நுனி சமுத்திரத்துக்குள் முங்கத் துவங்கிய கணத்தில் **சிப்பாய் தீவுக்கு** வந்து சேர்ந்தார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்.*

வந்துக் கொண்டிருக்கும் போது, இந்தப் பகுதியைச் சேர்ந்த படகுக் காரனிடம் பேச்சுக் கொடுத்திருந்தார்; **சிப்பாய் தீவினை** விலைக்கு வாங்கி வைத்திருக்கும் மக்களைப் பற்றி டாக்டருக்கு சீக்கிரத்தில் அறிந்துக் கொள்ள வேண்டும். ஆனால், ஃப்ரெட்டுக்கு அவர்களைப் பற்றியெல்லாம் துளியும் தெரியாமலிருந்தது விந்தையாய் பட்டது டாக்டருக்கு. ம்...! ஒரு வேளை சொல்லப் பிரியப்படாமல் கூட இருக்கலாம்...!

எனவே, தீவின் சீதோஷணங்கள் பற்றியும் இப்பகுதியையொட்டி நடக்கும் மீன் பிடித் தொழில்கள் பற்றியும் பேசியபடி வந்து சேர்ந்தார் இவர்.

நீளமாய் இடம்பெற்று முடிந்த மோட்டார் படகு சவாரி, டாக்டருக்கு அயர்ச்சியாய் அமைந்தது. கடல்... அது தரும் ஒப்புயர்வற்ற தூய அமைதி... இவையிரண்டும் தான் இவர் கேட்பவை. இவை நிச்சயம் என்றாகி விட்டால் ஒரு நீண்ட விடுமுறையை எடுத்துக் கொள்ளக் கூட இவர் தயங்க மாட்டார். ஆனால் அப்படி ஒரேயடியாக வந்து விடவும் இவரால் முடியாதே. பணம் ஒரு பிரச்சினையல்ல... ஆனால் மருத்துவப் பயிற்சியை அப்படியே தொடுக்கென்று கீழே போட்டு விட முடியாது. சேர்ந்தாற் போல் ஒரு வாரம் இல்லையென்றால், நீங்கள் மறக்கப்பட்டு விடுகிறீர்கள்... காலம் அப்படி! எதுவோ எப்படியோ போய்த் தொலையட்டும்! இதோ... வேண்டிய இடத்துக்கு வந்தாயிற்று... வந்த வேலையை சாணைப் பிடிக்க வேண்டியது தான்... வேறு சிந்தனை கூடாது!

ஆர்ம்ஸ்ட்ராங் எண்ணிக் கொண்டார்: 'இதோ... இப்பொழுதே... முடிவு கட்டிக் கொள்கிறேன்... நான் இங்கிருந்து திரும்பி அந்த நகர நரகத்துக்குப் போகப் போவதில்லை என்று முடிவாய் கற்பனை செய்துக் கொள்கிறேன்... ஆமாம் நான் போகப் போவதேயில்லை! லண்டனில், மருத்துவர்கள் குழுமிக் கிடக்கும் அந்த ஹார்லி தெருவுக்கும் எனக்குமான பந்தம் அறுந்தாகி விட்டது... போதுமப்பா போதும்...!'

'தீவு' என்பதே ஒரு மந்திர வார்த்தை போலிருக்கிறது – இந்த வார்த்தையில் ஓர் இன்பகரமான கற்பனை சொக்கிக் கிடக்கின்றது. உலகின் ஏனைய பகுதிகள் அனைத்தும் அவிந்துப் போய் விடுகின்றன

–தீவு என்பதே ஒரு தனி உலகமல்லவா! வேறு உலகம்... தனி உலகம்.... நீங்கள் அங்கிருந்து கிளம்பிய இடத்துக்குத் திரும்பப் போகாத உலகம்...

ஆர்ம்ஸ்ட்ராங், 'என் சாதாரண வாழ்க்கையும்... அது ஏற்படுத்தித் தந்த தொடர்புகளும், இங்கேயே, எனக்குப் பின்னாலேயே கழன்று மறைந்துத் தொலையட்டும்!' என எண்ணிக் கொண்டார். மளமள வென்று அவரது முக இறுக்கம் நழுவி புன்னகை பூத்தது. திட்டங்கள்... அற்புதத் திட்டங்களைத் திட்டமிடத் துணிந்தார். பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டிருந்த படிக்கட்டுகளில் ஏறும் போது கூட புன்னகை சிதையாது இருந்தார்.

மாளிகை போன்ற வீட்டுக்கு முன்னால் பரந்து விரிந்திருந்த சமதளத்தில் ஒரு வயதான ஜென்டில்மேன் உட்கார்ந்திருக்க, அவரைப் பார்த்த கணமே, 'பரிச்சயமாயிருக்கிறாரே!' என்ற சிந்தனை டாக்டரைத் தட்டியது. தவளைப் போன்ற இந்தத் தலையை... ஆமை போன்று நீளும் இக்கழுத்தை... குவிந்து கூன் விழுந்தாற் போன்ற இந்த உடம்பமைப்பை! ஆமாமாம்... சற்றே குவிந்து ஊடுருவித் துளைக்கும் அக்கண்களை... எங்கே... பார்த்திருக்கிறேன்? ஓ... ஓ... ஓ...! இது, அந்த வயதான வார்க்ரேவே தான்! நீதிபதிக்கு முன்னால் ஒரு முறை சாட்சியம் தந்திருக்கிறார் டாக்டர். அரைத் தூக்கத்திலிருப்பது போன்றே ஒரு பார்வை... ஆனால், அதற்கு, சட்டம் என்று வந்துவிட்டால் விழித்துக் கொண்டு உள் வரை ஈட்டியாய் பாயும் வலிமை உண்டு! நீதிமன்றத்தில், எந்தக் கொம்பனாலும் புரட்டிப் போட முடியாத சட்ட திட்ட வலு உண்டு கிழவனுக்கு! இவரைப் பற்றி ஒரு சில ஸ்திரமான குற்றச்சாட்டுக்களையும் ஆர்ம்ஸ்ட்ராங் கேள்விப்பட்டதுண்டு --- குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டால், இவர் எழுதும் தண்டனை தூக்கு தானாம்!

உலகின் உயர்ரக பகுதிகளையெல்லாம் விட்டு விட்டு, இங்கு போய் இவரா...! வேடிக்கை... வேடிக்கை!

VII

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் தனக்குள் நினைத்துக் கொண்டார்:

'ஆர்ம்ஸ்ட்ராங்? சாட்சிக் கூண்டில் நின்றுக் கொண்டிருந்தது நினைவுக்கு வருகின்றது. மிகக் கறாரான மனுஷன்... முன் ஜாக்கிரதையும் கூட. இந்த டாக்டர் கூட்டமே ஒரு முட்டாள் கூட்டம். லண்டன் டாக்டர்கள் அனைவரும் கும்பலாய் வாழும் ஹார்லி தெருவே... ஒரு குப்பை.' அதே தெருவில் மருத்துவமனை நடத்தி வரும் மரியாதைக்குரிய ஒரு டாக்டரோடு சமீபத்தில் நீதிபதி நிகழ்த்திய உரையாடல், வன்மமாய் அவருடைய நினைவுக்குள் பரவி மறைந்தது.

தற்சமயம் சப்தமாய், ''உள்ளே வரவேற்பறையில டிரிங்க்ஸ்லாம் இருக்கு'' என உறுமினார் நீதிபதி.

''என்னை விருந்துக்கு அழைச்சிருக்கும் இந்த வீட்டு முதலாளி குடும்பத்தைப் போய் பார்த்து, என் வணக்கத்தை முதல்ல நான் தெரிவிக்க வேணாமா?'' என்றார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்.

கண் மூடிக் கிடக்கும் ஓர் ஊர்வன போல பிடிவாதமாய் கண்களை மூடிக் கொண்டு சாய்ந்திருந்த வார்க்ரேவ், ''அது இப்போ உங்களால முடியாது'' என்றார்.

ஆர்ம்ஸ்ட்ராங் துணுக்குற்றார். ''ஏன் முடியாது?''

''முதலாளியும் இல்லே! முதலாளியம்மாவும் இல்லே...'' என்றார் நீதிபதி. ''விநோதமா போகுது எல்லாம். இந்த இடம் என்னனே விளங்கலே... எப்படிப்பட்டதுனே புரியலே.''

நீதிபதியையே ஒரு நிமிடம் முறைத்தார் டாக்டர். அசைவேயற்று வார்க்ரேவ் கிடந்ததால், ஒரு வேளை தூங்கிப் போய் விட்டாரோ என்று ஆர்ம்ஸ்ட்ராங் நினைத்த நொடியில், ''உங்களுக்கு கல்மிங்டன் யாரென்று தெரியுமா?'' என சட்டென்று கேட்டார் நீதிபதி.

''ப்பூ. புதுப் பெயர்!''

''விட்டுடுங்க... முக்கியத்துவம் எதுவும் கிடையாது'' என்றார் நீதிபதி. ''கொஞ்சங்கூட புரிஞ்சுக்க முடியாத பெண்ணு. அவ கையெழுத்தும் அவளைப் போலவே... புரிஞ்சு படிக்கவே முடியாது. எனக்கு ஒரு சந்தேகம் டாக்டர்... தப்பான பிரதேசத்துக்கு வழி

தெரியாம வந்துட்டேனோன்னு...!''

இடவலமாய் சில முறை தலையசைத்து விட்டு, மேற்கொண்டு படி ஏறலானார் ஆர்ம்ஸ்ட்ராங்.

ஜஸ்டிஸ், கல்மிங்டன் விஷயத்தில் மூழ்கலானார். நம்ப முடியாத வள் - எல்லா பெண்களையும் போல. நீதிபதியுடைய எண்ணம், வீட்டுக்குள்ளிருக்கும் இரண்டு பெண்களின் பக்கம் குவிந்தது. வாய் திறக்காத முதிர் கன்னி... மேலும் இன்னொரு பெண். அந்தப் பெண்ணை இவர் கருத்தில் கொள்ளவில்லை... முரட்டு, பிரயோஜன மற்றப் பெண்ணவள். ஆங்... மூன்றாவதாயும் ஒருத்தி இருக்கிறாளே... ரோஜரின் மனைவி. மனுஷியோடு சேர்க்க முடியாத பெண்... செத்துப் போகப் போகிறவள் போல தோற்றம்...!

இந்த சமயத்தில் உள்ளேயிருந்து ரோஜர்ஸ் வெளியே வர, நீதிபதி அவனைக் கேட்டார்: ''கல்மிங்டன் இங்கு வராங்களா? உனக்கு ஏதாவது தெரியுமா?''

ரோஜர்ஸ் அவரை விழியகலப் பார்த்தான். ''எனக்குத் தெரிஞ்சு... அப்படி எதுவும் இல்லே ஸார்.''

கடுகடுப்பான நீதிபதியின் புருவங்கள் உயர்ந்தன. நினைத்துக் கொண்டார்: '**சிப்பாய் தீவு**? சே... சர்க்கரையில் கண்ணாடித் தூள் போல, இங்கே நான் - பொருந்தாமல்.'

VIII

ஆன்டனி மார்ட்ஸன் குளித்துக் கொண்டிருந்தான். நீராவிக் குளியலில் திளைத்துக் கொண்டிருந்தான். நீண்ட கார் பிரயாணத்தின் காரணமாக அவனுடைய கால் முட்டிகளெல்லாம் கழன்றுப் போயி ருந்தன. ஒரு சில நினைவுகள் மட்டும் தான் அவன் மண்டைக்குள் இப்போது உலவின. மற்றபடி கவலையின்றி இருந்தான். இந்த ஆன்டனி இருக்கிறானே... இவன் எப்போதும் கிளர்ந்தெழுந்து கலாட்டா செய்துக் கொண்டேயிருக்கும்படி பிறந்துள்ளவன் - என்றும்

அதிரடி நடவடிக்கைகள் தான்.... எல்லா நேரமும் கொம்மாளம் தான்.

தனக்குள் எண்ணிக் கொண்டான்: 'ஒரு கை பார்த்துட வேண்டியது தான்.' பிறகு, ஒட்டிக் கொண்டிருந்த சில நினைவுகளையும் ஒதுக்கித் தள்ளினான்.

வெதுவெதுப்பான நீராவி – அதில் குளியல் - நொறுங்கிப் போய் விட்டது போல உள்ள கால் எலும்புகளுக்கு இதம் - வழுவழுப்பாய் ஒரு முகச் சவரம் - குட்டியாய் பீர் - மிச்சம் வைக்காமல் சாப்பிட வேண்டிய இரவுச் சாப்பாடு.

இவற்றிற்கெல்லாம் பிறகு?

IX

மிஸ்டர் ப்ளோர், கழுத்தைச் சுற்றியிருந்த டை'யை சரிசெய்ய முயன்றுக் கொண்டிருந்தார். டை கட்டும் வித்தையில் கை தேறாதவர் இவர்.

இப்போது நன்றாய் இருக்கின்றதா? ம்? இருக்கின்றது என்று அவர் எண்ணிக் கொண்டார்.

இங்கு ஒருவர் கூட இவரிடம் இணக்கமாய் இல்லை. ஒவ்வொரு வரும் மற்றவரைப் பார்ப்பது கூட கோமாளித்தனமாய் தான் இருக் கின்றது. என்னவோ ஒருவரைப் பற்றி மற்றவருக்கு ஏதோ தெரிந் திருப்பதைப் போல....

போகட்டும்! இது இவர் பிரச்னை.

தனது திட்டத்தைக் குழப்பிக் கொண்டு கெடுத்துக் கொள்ள இவர் தயாராகயில்லை.

நிமிர்ந்து, கனப்பினை ஒட்டிய சுவரில், மேலே தொங்கிக் கொண் டிருந்த நர்ஸரி பாட்டினைப் பார்த்தார்.

இது மாட்டியிருக்க வேண்டிய அற்புதமான இடம்... இது தான்!

'ம்... நான் பொடிப் பயலா இருந்த காலத்திய **சிப்பாய் தீவு**, எனக்கு நல்லா நினைவிருக்கு. வளர்ந்ததும் இப்படி இங்கேயே ஒரு வீட்டில

வந்து உட்கார்ந்துக்கிட்டு இந்த மாதிரியான வேலையையெல்லாம் செய்வேன்னு அப்போ நான் நினைச்சதே கிடையாது. அப்பப்பா... எதிர்காலத்தைப் பற்றி ஒருவன் அறிந்திராமல் இருப்பது தான் எத்தனை சுவாரஸ்யம்!' - நினைத்துக் கொண்டார் ப்ளோர்.

X

ஜெனரல் மார்கரெட், தன்னைத்தானே நொந்துக் கொண்டிருந்தார்:

'கண்றாவி. என்ன விஷமம் செய்ய என்னை இங்கே வரச் சொல்லியிருக்காங்க! நான் செஞ்ச பாவம்! கண்ணைக் கட்டிக் காட்டுல விட்டது போல... இப்படி ஓர் அனுபவத்தை நான் இங்கே எதிர்பார்க்கவேயில்லையே...!'

பண்ணிய தவறுக்குத் தன்னைத் தானே திட்டித் தீர்த்து விட்டுக் கிளம்பி விட வேண்டியது தான் என எண்ணிக் கொண்டார். ஆனால் மோட்டார் படகு கடற்கரை நோக்கிக் கிளம்பி விட்டிருந்தது!

வேறு வழியில்லை... இவர் தங்கித் தான் தீர வேண்டும்!

அந்த லாம்பர்ட் பயல்... போக்கிரி அவன். நேர்மையானவன் கிடையாது. அவன் சரி கிடையாது – இதை எந்தக் கோயிலில் வைத்தும் சத்தியம் செய்வார் இவர் - அவன் சரியே கிடையாது.

XI

மாலிகை வீட்டின் பெரிய மணி அடிக்கப்பட்டதும், தனது அறையை விட்டு வெளியே வந்த டிலிப் லாம்பர்ட், படிக்கட்டுகள் வரை வந்து நின்றான். ஒரு சிறுத்தையைப் போல நகர்ந்தான் - ஓசையின்றி, மிருதுவாய். இவ்விஷயத்தில், ஒரு சிறுத்தையின் அத்தனை

குணாதிசயமும் அவனுக்குள்ளேயே பரவிக் கிடக்கின்றது. விரும்பத்தகாத ஒன்று – கண்களுக்கு விருந்தாய் அமைந்திட்ட ஓர் இரையே.

தனக்குள் தானே சிரித்துக் கொண்டான்.

இன்னும் ஒரு வாரம் தான்? ம்?

அந்த வாரத்தைக் கொண்டாடப் போகிறான் இவன்.

XII

தனக்கென கொடுக்கப்பட்டிருந்த அறையுள், இரவுச் சாப்பாட்டுக்காக கறுப்பு உடையில் அழகு செய்துக் கொண்டிருந்த எமிலி ப்ரெண்ட், கையிலிருந்த பைபிளைப் படித்துக் கொண்டிருந்தார்.

வார்த்தைகளைக் கடக்கும் போது, அவருடைய உதடுகள் அசைந்த வண்ணமிருந்தன.

"கடவுள் மீது நம்பிக்கையற்ற அனைவரும் அவர்களாய் பறித்துக் கொண்ட அத்தகைய பாவக் குழிகளுக்குள் ஆழ விழுந்து விட்டனர். அப்படி அவர்கள் பின்னிக் கொண்ட பாவ வலைக்குள் அவர்களுடைய சொந்தக் கால்களே மாட்டிக் கொண்டு விட்டன. கடவுள் யார் என்பது அவர் நிறைவேற்றும் தீர்ப்பின் போது தெரிய வரும். துன்மார்க்க பாவிகள் அனைவரும் அவர் வைக்கும் கண்ணிப் பொறிகளுக்குள் வசமாய் சிக்கிக் கொளவார்கள்; அங்கிருந்து நேராய் நரகத்துக்கு அனுப்பப்படுவார்கள்."

உதடுகள் இறுக்கமாய் மூடிக் கொண்டன. பைபிளை மூடினார் அவர்.

எழுந்து, கவுனின் கழுத்தருகே ஓர் அழகிய வண்ணத்துப்பூச்சி சேலை ஊசியைக் குத்திக் கொண்டு, இரவுச் சாப்பாட்டுக்குப் புறப்பட்டார்.

அத்தியாயம் 3

I

இரவுச் சாப்பாடு ஏறக்குறைய முடிந்து விட்டிருந்தது.

உணவு ருசிகரமாயிருந்தது. கடைசியில் அளிக்கப்பட்ட ஒயினும் மிகச் சரியாய் தயார் செய்யப்பட்டிருந்தது. ரோஜர்ஸ் நன்றாய் கவனித்துப் பரிமாறினான்.

இவ்வுபசரிப்பால், அனைவரும் தெளிவடைந்து உற்சாகமாயிருந்தனர். ஒருவருக்கொருவர் மனம் விட்டு நெருக்கமாய் பேசிக் கொள்ளத் துவங்கியிருந்தனர்.

செழுமையும் மென்மையும் கலந்திருந்த உல்லாசக் கடற்பரப்பால் முழுசாய் ஆட்கொள்ளப்பட்டிருந்த ஜஸ்டிஸ் வார்க்ரேவ், மிகஸ்லாகித்துப் போய் பேச, அதனை, டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கும் டோனி மார்ட்ஸனும் கேட்ட வண்ணமிருந்தனர். செல்வி ப்ரெண்ட், ஜெனரல் மார்கரெட்டுடன் வம்படித்துக் கொண்டிருக்க... இருவருக்குள்ளும் புது நட்புணர்வு அப்போது பூத்துக் கொண்டிருந்தது. வெரா க்ளேதார்ன், டேவிஸிடம், தென் ஆப்பிரிக்க நாடு குறித்த சில புத்திசாலித்தனமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். டேவிஸ் இந்த சமாச்சாரம் பற்றிய விவரங்கள் அறிந்தவன். அருகிலிருந்த லாம்பர்ட், இருவருடைய உரையாடலைக் கேட்ட வண்ணமிருந்தான். ஓரிரு முறை விறுவிறுவென நிமிர்ந்து, கண்களை லேசாகக் குறுக்கி, துரிதமாய் மேலே பார்த்தான். அவ்வப்போது அவனுடைய கண்கள் சாப்பாட்டு மேஜையைச் சுற்றிலும் மேலும் அங்குள்ளவர்களைச் சுற்றிலும் விளையாடின...! அனைத்தையும் படித்து உள்வாங்கிக் கொள்ளும் தோரணையில், அவன் விழிகள் மேய்ந்தன.

ஆன்டனி மார்ட்ஸன் திடீரென்று சொன்னான்: ''ஏய்... இதெல்லாம் புதுமையா... விந்தையா இருக்கு... இல்லே?''

அங்கிருந்த வட்ட மேஜையின் மையத்தில், அழகிய ஒரு வட்ட வடிவ கண்ணாடித் தாங்கியில், சில சைனா மனிதர்களின் பீங்கான் சிற்பங்கள் தொங்கியபடி அலங்கரிக்கப்பட்டிருந்தன. ''சிப்பாய்கள்'' என்று

சொன்னான் ஆன்டனி. ''**சிப்பாய் தீவு** இல்லியா! அதுக்காக இருக்கலாம்.''

வெரா முன்வந்து பார்த்தார். ''ஓ... அழகான ஆச்சரியம். இதுல எத்தனையிருக்கு? பத்து?''

''ம் - பத்து இருக்கு இதுல.''

வெரா குரல் ஆனந்தமாய் கூடியது: ''ஆஹ்... என்ன கோமாளித்தனமான ரசனை! இவனுங்க தான் அந்த நர்ஸரி பாட்டுல வரும் பத்து சிப்பாய் பயல்கள். அப்படித்தான் நான் நினைக்கிறேன். என் அறையில, அந்தப் பிரபல நர்ஸரி பாட்டு... கனப்புக்கு மேல சட்டம் போட்டு மாட்டப்பட்டிருக்கு.''

''என் அறையிலும் தான்'' என்றார் லாம்பர்ட்.

''என்னறையிலும்.''

''என்னறையிலும்.''

எல்லோரும் கோரஸாய் சொன்னார்கள்.

''இதெல்லாம் விசித்திரமாயிருக்கு ...!''–புதிர் போடப்பட்டவனாய் கேட்டான் ஆன்டனி.

இதற்கு ஜஸ்டிஸ் வார்க்ரேவ் ''பச்சையா சொல்லப் போனா... அடி மட்ட சிறுபிள்ளைத்தனம் இது!'' என உறுமினார். கிளம்பி விட்டார்.

எமிலி ப்ரெண்ட், வெரா க்ளேதார்னைப் பார்த்தார். வெரா, ப்ரெண்ட்'டைப் பார்த்தார். இரு பெண்களும் எழுந்துக் கொண்டனர்.

கம்பிகளில்லாமல் வெறும் கண்ணாடி கதவு மட்டும் கொண்ட அகலமான 'பிரெஞ்சு ஜன்னல்கள்' சில, வரவேற்பறையில் இருந்தன. அவற்றில் ஓரிரண்டு திறந்திருந்தன. இவற்றின் வழியே நுழைந்து வெளியேறினால், வாசலின் பரந்த சமவெளிக்குப் போய் விடலாம். பாறைகளின் மீது விழுந்து அடித்து மோதி கதறும் அலைகளின் ஓசை, அறையை நிரப்பிக் கொண்டேயிருந்தது.

திறந்த ஜன்னல்கள் பக்கம் தலை திருப்பி ஓசை வந்த திசையை நோக்கியபடி, ''அதியற்புத ஓசை'' என லயித்தார் எமிலி.

வெரா வெறுப்பாய், ''இந்த சத்தத்தை நான் அறவே வெறுக்கிறேன்'' என்றார்.

எமிலியின் கண்கள் வெராவை ஆச்சரியமாய் பார்த்தன. வெரா அதனை ஒதுக்கித் தள்ளினார். ''புயல் சூறாவளி வீசும் போது, இந்தப்

பகுதி படு பயங்கரமாக இருக்கும்'' என்றார் முடிவாய். ''சந்தேகமே வேண்டாம்.''

எமிலி ப்ரெண்ட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''நிச்சயமா. கதவு ஜன்னல் எதையும் மழைக் காலத்துல திறக்கவே முடியாது. இந்தக் காரணத்துக்காகவே வேலைக்கு ஆள் கிடைக்க மாட்டாங்க.''

''இல்லேனா மட்டும் என்ன வாழப் போகுது'' என முணுமுணுத்த வெரா, ''சாதாரணமாவே கூட, வீட்டு வேலைக்கு இங்கே ஒருத்தனும் வர மாட்டான்'' என்றார்.

''இந்த ரெண்டு பணியாட்களும் கிடைக்க ஓலிவர் அதிர்ஷ்டம் செஞ்சிருக்கணும்'' என்றார் எமிலி ப்ரெண்ட்.

சின்னதாய் புன்முறுவியபடி மனதுக்குள் வெரா எண்ணிக் கொண்டார்: 'வயசாக ஆக பழகின பெயரையெல்லாம் கூட மறந்து இப்படித் தான் மூளை மழுங்கிப் போயிடுமா...?' பிறகு ஆமோதிக்கும் தொனியில் ''ஆமாமாம்'' என துவங்கி, ''திருமதி ஓவன் அதிர்ஷ்டக் காரி தான்'' என்றார், அவர் சொன்ன பெயரைத் திருத்தும் பாணியில்!

தான் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு எம்பிராய்டரி பூ வேலையைத் தொடர, அதற்கான துணி ஊசி எல்லாவற்றையும் கையில் வைத்துக் கொண்டு தயாராயிருந்த எமிலி ப்ரெண்ட், ''ஓவனா?'' என்றார் வெராவிடம். ''ஓவன்'னா சொன்னீங்க?''

''ஆமாம்.''

''ஓ!'' என கூராய் குறிப்பிட்ட எமிலி, ''என் வாழ்க்கையில 'ஓவன்' அப்படினு பெயர் கொண்ட யாரையுமே நான் சந்திச்சது கிடையாதே'' என்றார் பொதுவாய்.

வெரா கண்ணகல பார்த்தார். ''ஆனா... நிச்சயமா ---''

ஆரம்பித்த வாக்கியத்தை அவர் முடிக்கவில்லை. கதவு திறக்கப் பட்டது... மற்ற ஆடவர்கள் வந்து இவர்களிருவருடனும் இணைந்துக் கொண்டனர். அவர்களைத் தொடர்ந்து காபி கோப்பைகள் வைக்கப் பட்டிருந்த தட்டினைத் தூக்கிக் கொண்டு ரோஜர்ஸும் வந்தான்.

எமிலி ப்ரெண்டுக்கு அருகில் வந்து நீதிபதி அமர்ந்துக் கொண்டார். ஆர்ம்ஸ்ட்ராங் - வெரா வரை வந்து உட்கார்ந்தார். டோனி மார்ட்ஸன் அப்படியே உல்லாசமாய் நடந்துக் கொண்டே திறந்திருந்த பிரெஞ்சு ஜன்னல் அருகே போய் நின்றுக் கொண்டான். கைவினைக்

கலைஞனைப் பிரமித்தபடி, அங்கிருந்த ஒரு பித்தளையினாலான சிறு சிலையினை வியந்து பார்த்துக் கொண்டிருந்தார், ப்ளோர் - கோணல் மாணலான கோணங்களில் வடிவாகியிருந்த அச்சிலை ஒரு பெண்ணின் பிம்பமா என்பதில் அவருக்கு நெடிய சந்தேகம் விளைந்தது. ஜெனரல் மார்கரெட் விசாலமான ஆடம்பர அலமாரியின் ஓர் ஓரத்தில் சாய்ந்தபடி நின்றுக் கொண்டிருந்தார். தனது சீர் செய்யப்பட்டிருந்த மீசையை அவர் வருடிக் கொண்டிருந்தார். 'அற்புத உணவு... திருப்திகரமான இரவு விருந்து' – தீவின் மீதான அவருடைய நம்பிக்கை துளிர் விட்டிருந்தது. குட்டையான நாற்காலி ஒன்றில் பரப்பிக் கிடந்த புத்தகம் ஒன்றினை எடுத்து அதனைப் புரட்டிக் கொண்டிருந்தான் லாம்பர்ட்.

எல்லோரிடமும் காபி தட்டினை நீட்டி ஒரு வட்டம் வந்திருந்தான் ரோஜர்ஸ். அனைவருக்கும் காபி திருப்தியைத் தந்தது. கறுப்பு காபி... சரியான கூடு.

ஆக, இந்த முழுக் கூட்டமே, இரவில் நடந்த விருந்தில் திருப்தியாகித் திளைத்திருந்தது. கடியார முட்கள் மணி ஒன்பது இருபது என்று காட்டின. அங்கு அமைதி நிறைந்தது – தொந்தரவு இழைக்காத பூரண அமைதி.

இப்படியான நிறைவான அமைதியைத் தான் அந்தக் குரல் கிழித்து நுழைந்தது. எவ்வித முன்னறிவிப்பும் இன்றி... மனிதாபிமானம் அற்று... நெஞ்சுக் கூட்டினைத் துளைத்து எறியும் வகையில்...

''லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... அமைதி! அமைதி...''

இதனைக் கேட்ட ஒவ்வொருவரும் அதிர்ந்தனர். சுற்றுவட்டாரம் முழுவதையும் பார்த்தனர்... ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்... நாற்புற சுவர் முழுவதும் தேடினர்... ம்ம்! பேசியது யார்?

குரல் தொடர்ந்தபடியிருந்தது. நல்ல தெளிவான, உச்சஸ்தாயி குரல்.

''பின்வரும் சம்பவங்களால், நீங்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ளீர்கள்.

எட்வர்ட் ஜார்ஜ் ஆர்ம்ஸ்ட்ராங்: மார்ச் 14, 1925 அன்று லூசிஸியா மேரி க்ளாஸைக் கொன்றீர்கள்.

எமிலி கரோலின் ப்ரெண்ட்: 1931, நவம்பர் 5 அன்று நடந்தது...

டெய்லரின் மரணத்திற்கு முழு காரணமாய் அன்று நீங்கள் இருந்தீர்கள்.

வில்லியம் ஹென்றி ப்ளோர்: அக்டோபர் பத்து, 1928 அன்று ஸ்டீபன் லாண்டர் மரணமடைய நீங்களே முழு காரணகர்த்தாவாய் நின்றீர்கள்.

வெரா எலிஸெபெத் க்ளேதார்ன்: ஆகஸ்ட் 11ஆம் நாள் 1935 அன்று, ஸிரில் ஹாமில்ட்டனை உங்கள் கண்ணெதிரிலேயே மரணிக்கச் செய்தீர்கள்.

பிலிப் லாம்பர்ட்: பிப்ரவரி 1932ல், இருபத்தியோரு கிழக்கு ஆப்பிரிக்கக் காட்டுவாசிகள் கூண்டோடு இறக்க முழுமுதற் காரணமாய் ஆனீர்கள்.

ஜான் மார்கரெட்: ஜனவரி 4, 1917 நினைவிருக்கின்றதா... திட்டமிட்ட சதியின் காரணமாக உங்களுடைய மனைவியின் காதலரான ஆர்தூரை, விண்ணுலகுக்கு அனுப்பி வைத்தீர்கள்.

டோனி ஆன்டனி மார்ட்ஸன்: கடந்த நவம்பர் 14ஆம் தேதி... ஜான் மற்றும் லூஸி ஆகிய இருவருடைய மரண வழக்கில் குற்றவாளியாக பதிவு செய்யப்பட்டீர்கள்.

தாமஸ் ரோஜர்ஸ் மற்றும் ஏத்தல் ரோஜர்ஸ்: மே 6, 1929 அன்று, ஜெனிபரின் மரணத்தை நீங்களிருவருமே வகுத்தீர்கள்.

நீதிபதி வார்க்ரேவ்: 1930 ஜூன் பத்தாம் தேதியன்று எட்வர்ட் ஷெல்ட்டனைக் கொன்ற குற்றவாளியானீர்கள்.

இப்படிக் குற்றங்கள் சாட்டப்பட்டு... குற்றவாளிக் கூண்டில் நின்றுக் கொண்டிருக்கும் விருந்தாளிகளே... ம்... சொல்லுங்கள்... இக்குற்றங்களை இல்லை என மறுத்து சொல்ல உங்களால் முடியுமா?''

II

குரல் நின்று போயிருந்தது.

அனைவரும் நிலைகுத்திப் போய் கல்லாய் நிற்கும் சில கணங்கள் உருவாயின. இந்த அமைதியை... ஏதோ நொறுங்கிச் சிதறும் கர்ண கொடூரமான ஓசை, மாற்றியது. ரோஜர்ஸ், பிடித்திருந்த காபி

கட்டினைத் தவற விட்டிருந்தான்.

இதே கணத்தில், பக்கத்தில் வெளியேயிருந்த ஏதோ ஓர் அறையிலிருந்து காதுகளைக் கிழிக்கும் கிரீச்சென்ற அலறலும், அதனைத் தொடர்ந்து மூட்டையொன்று தொப்பென்று விழும் தினுசிலான ஓசையும் விளைந்தன.

முதலில் நகர்ந்தது லாம்பர்ட் தான். தடபுடவென்று அகலக் கால் பாய்ச்சலில் கதவு வரை ஓடி அதனை எத்தி திறந்தான். வெளியே, அவசரத்தில் கண்டபடி சுருட்டப்பட்டது போல வீழ்ந்துக் கிடந்தார், திருமதி ரோஜர்ஸ்.

''மார்ட்ஸன்''–கூப்பிட்டார் லாம்பர்ட்.

உதவ, ஆன்டனி குதித்தோடினான். இவர்களிருவருக்கு நடுவில், சுருண்டுக் கிடந்த பெண்மணியைத் தூக்கிக் கொண்டு வரவேற்பறை உள்ளே வந்தனர்.

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் துரிதமாய் வந்து சேர்ந்துக் கொண்டார். சோஃபா வரை திருமதி ரோஜர்ஸைத் தூக்கி வந்துக் கிடத்த இவரும் ஒத்தாசை செய்து முடித்து விட்டு, அவளருகே இப்போது குனிந்தார். ''இது ஒண்ணுமில்லே'' என்றார் உடனே. ''மயங்கியிருக்காங்க. அவ்ளோதான். சில நிமிஷங்கள்ல எழுந்துடுவாங்க.''

''கொஞ்சம் பிராண்டி கொண்டு வா'' என்றான் லாம்பர்ட் ரோஜர்ஸிடம். மயக்கத்தை உடனே தெளிவிக்க பிராண்டி ஒரு மருந்து.

வெளிறிப் போன முகத்துடன்... நடுநடுங்கும் கை விரல்களுடன்... ''இ... இ... இதோ ஸார்'' என முணுமுணுப்பாய் சொல்லி விட்டு, அறையை விட்டு வேகவேகமாய் நழுவினான் ரோஜர்ஸ்.

''பேசினது யார்?'' என அலறினார் வெரா. ''அவன் யார்? அது... அது... அந்தக் குரல்...''

ஜெனரல் மார்கரெட் படபடப்பானார்: ''இங்கே என்ன தான்யா நடக்குது? என்ன நடக்குது? இதென்ன ஜோக்கா? விளையாடறாங்களா? இ... இ... இல்லே... நிஜம் தானா?''

அவரது கைகள் நடுநடுங்கின. தோள்கள் குவிந்துப் போய் தொய்ந்தன. திடீரென பத்து வயது கூடி விட்டவரைப் போலானார்.

கையிலிருந்த கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார் ப்ளோர்.

ஜஸ்டிஸ் வார்க்ரேவும் செல்வி ப்ரெண்டும் மட்டும் தான், நடந்த எதாலும் அசைக்கப்படாதவர்களாகத் தோன்றினர். எமிலி ப்ரெண்ட் நெட்டைக் குத்தலாய் உட்கார்ந்திருந்தார் - அவருடைய முகம் நிமிர்ந்து... நேர் கொண்ட பார்வையுடன், இரண்டு கன்னங்களிலும் கடும் கோபச் சிகப்புத் தூக்கலாயிருந்தது. நீதிபதி, அவருக்கே வழக்கப்பட்டுப் போன முறையில் அமர்ந்திருந்தார் --- அவரது தலை முழுக்க கழுத்துக்குள் புதைந்துப் போய்... சாட்சி சொல்வதைக் கூர்ந்து கேட்கும் பாணியில். தனது ஒரு கையால் காதின் நுனியை இழுத்து விட்டபடியிருந்தார் ஜஸ்டிஸ். அவரது கண்கள் மட்டும் - மினு மினுப்பாய்... துடிதுடிப்பாய் உயிர்த்திருந்தன - அறையைச் சுற்றிச் சுற்றி கண் கொத்திப் பாம்பாய் பரிசோதித்தபடி - புதிர் போடப்பட்டதாய், எச்சரிக்கையாய் மேலும் சாதுர்யமாய்.

மறுபடியும் லாம்பர்ட் தான் இயங்கினான். ஆர்ம்ஸ்ட்ராங் மயங்கிக் கிடந்த பெண்ணோடு கிடக்க, மேற்கொண்டு செய்ய வேண்டியதைக் கவனிக்க லாம்பர்ட் ஒருவன் தான் அகப்பட்டான்.

''அந்தக் குரல்?'' என்ற கேள்வியோடு ஆரம்பித்த பிலிப் லாம்பர்ட், ''அந்த அறையிலிருந்து வந்த மாதிரி தான் இருந்தது'' என்றான்.

ஒருத்தர் பேச ஆரம்பித்ததும் மீண்டும் அலறினார் வெரா! ''*யார் அது? யார் அது, யார் அது? அது, நம்மில் ஒருத்தர் கிடையாது.*''

ஜட்ஜைப் போலவே, லாம்பர்டின் கண்களும், மெதுவாய் இந்த அறையை ஒரு சுற்று சுற்றி வந்தன. அப்போது, அவை, திறந்திருந்த ஜன்னலின் மீது சில நொடிகள் படிந்து நின்றன. பிறகு இருக்காது என்பது போல தலையை மறுத்து அசைத்துக் கொண்டான் அவன். இப்படியே மேலும் சில நொடிகள். திடீரென அவன் கண்கள் பிரகாச மாயின. கனப்புக்கு அருகே ஒரு கதவு அடுத்துள்ள அறைக்கு தடுப்பாய் அமைந்திருந்தது... அதனை நோக்கி விறுவிறுவென பாய்ந்தான் அவன்.

தாமதிப்புக்கு இடம் தராத அவசரத்தோடு... கதவின் கைப்பிடி யினைப் பிடித்து அழுத்தமாய் கீழே தள்ளித் திறந்த பிலிப், வீறும் காற்றாய் உள்ளே நுழைந்து, உடனே, ''ஓ ஓ ஓ! இங்கே! இங்கே!'' என்று, நிம்மதி கலந்த ஆச்சரியத்தை வெளிப்படுத்தினான்.

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் கூடியிருந்தனர். ப்ரெண்ட்

மட்டும் இருக்கையை விட்டு எழுந்திருக்காமல் தனிமையில் விறைப்பாய் உட்கார்ந்திருந்தார்.

இந்த இரண்டாவது அறையில் --- ஒரு மேஜை, இந்த அறையை வரவேற்பறையிலிருந்து பிரிக்கும் சுவர் வரை நெருக்கமாய் இழுத்துப் போடப்பட்டிருந்தது. அதன்மீது இசைத்தட்டினை இயக்கிப் பாட வைக்கும் இயந்திரம் ஒன்று இருந்தது... அதன் கூம்பு வடிவ ஒலிபெருக்கி சகிதமாக. பழைய மாடல். கூம்பு வடிவ ஒலிபெருக்கியின் அகண்ட வாய்ப்பகுதி, சுவரோடு சுவராக வைத்து அமுக்கப்பட்டிருந்தது. அதனை நின்றிருப்போர் பக்கமாய் இப்போது திருப்பிய லாம்பர்ட், அங்கு, சுவரில், சின்ன சின்னதாய் சுவரைத் துளைத்துப் போடப்பட்டிருந்த துளைகளைச் சுட்டிக் காட்டினான்.

மேஜையைக் கொஞ்சமாய் சுவர் அருகாமையிலிருந்து திருப்பிய லாம்பர்ட், இசைத் தட்டு இயந்திரத்தின் காந்த ஊசியைக் கொண்டு போய் சுழன்றுக் கொண்டிருந்த இசைத்தட்டின் மீது பதித்தான். அது மறுபடியும், **''பின்வரும் சம்பவங்களால், நீங்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ளீர்கள்''** என்று ஆரம்பித்தது!

''ஐயய்யோ! அதை நிறுத்துங்க! நிறுத்தித் தொலையுங்க! ப்ளீஸ்!'' என்று தன் வழக்கப்படி ஆனார் வெரா – அலறினார்! ''கொடுமை இது!''

லாம்பர்ட் அப்படியே செய்தான்.

''மட்டு மரியாதை ஈவிரக்கம் எதுவுமேயில்லாம விளையாடியிருக்காங்க'' என்று ஊகித்தார் டாக்டர்.

ஜஸ்டிஸ் வார்க்ரேவின் குரல், மெலிதாய், தீர்க்கமாய் கேட்டது: ''ஆக, நீங்க இதை ஒரு விளையாட்டாத் தான் பார்க்கறீங்க... அப்படித் தானே?''

டாக்டர் அவர் பக்கமாய் திரும்பி விழியகலப் பார்த்தார். கேட்டார்: ''பிறகு இது வேற என்னவா இருக்க முடியும்?''

ஜட்ஜின் கை, அவரது மேலுதட்டினை மெல்லமாய் தட்டிக் கொடுக்க ஆரம்பித்தது. ''இப்போதைக்கு இது பற்றி கருத்து சொல்ல நான் தயாராயில்லே.''

ஆன்டனி மார்ட்ஸன் விறுவிறுவென மூக்கை நுழைத்தான்: ''த பாருங்க... ஒரு முக்கிய விஷயத்தை நீங்க ரெண்டு பேருமே மறந்துட்

டூங்க. எந்த மர்ம மனிதன் உள்ளே வந்து – அந்த இயந்திரத்தை இயக்கி, - இசைத்தட்டைச் சுழல விட்டது?''

''ம்... அப்படிப் போடு முதல்ல'' என்றார் வார்க்ரேவ். ''அதைத் தான் நாம முதல்ல தேடணும்.'' திரும்பி வரவேற்பறைப் பக்கம் ஜட்ஜ் நகர, ஏனையோரும் அவரைத் தொடர்ந்து வந்து சேர்ந்தனர்.

ரோஜர்ஸ் அப்போது தான் ஒரு கோப்பை ப்ராண்டியுடன் அறைக்குள் நுழைந்துக் கொண்டிருந்தான். சன்னமாய் முணுமுணுத்த நிலையிலிருந்த திருமதி ரோஜர்ஸ் பக்கமாய் குனிந்து நின்றுக் கொண்டிருந்தார் செல்வி ப்ரெண்ட். இருவருக்கும் இடையே நுழைந்தான் ரோஜர்ஸ். ''என்கிட்டே விடுங்கம்மா. நான் பேசறேன்'' என்றான். ''ஏத்தல்... ஏத்தல்...! ஒண்ணும் ஆகலே. எல்லாம் சரியா இருக்கு. சரியா இருக்கு இல்லே...?! கேட்குதா? நான் பேசறது உனக்குக் கேட்குதா? ம்... சமாளிச்சுக்கிட்டு எழுந்திரு. ம்...!''

திருமதி ரோஜர்ஸின் மூச்சுக் காற்று வேகவேகமாய் வந்து போனது. அவள் கண்கள் - கிலி கொண்டு விரிந்து மிரளும் அக்கண்கள் - அவர் மீது குவிந்துக் கிடந்த வட்ட வட்ட முகங்களை ஒன்று மாற்றி ஒன்றாய் பார்த்தன. பேசிக் கொண்டிருந்த ரோஜர்ஸின் குரலில் அவசரம் தூக்கலாயிருந்தது: ''சமாளிச்சுக்கிட்டு எழுந்திரு ஏத்தல். என்ன ஆயிடுச்சு இப்ப?''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் அவளிடம் மிருதுவாய் சொன்னார்: ''சில நிமிடங்கள்ல நீங்க சரியா ஆயிடுவீங்க, ஏத்தல். ஒரு சின்ன தடுமாற்றம். நத்திங்.''

''நான் மயங்கிப் போயா விழுந்துட்டேன், ஸார்?''

''ஆமாம்.''

''அந்தக் குரல் தான் - ஓஹ் - பயங்கரமான அந்தக் குரல் - ஓஹ் - அதனால் தான் - ஓஹ் - நீதிபதி ஒருத்தர் படிக்கும் தீர்ப்பு போல...!''

அவளுடைய முகம் மறுபடியும் ரத்தக் களறியானது. அவளுடைய இமைகள் துடிதுடித்தன.

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் ''எங்கே அந்த ப்ராண்டி?'' என்றார் துரிதமாய்.

அதைக் கொண்டு போய் அங்கிருந்த சிறு மேஜையில் வைத்திருந்தான் ரோஜர்ஸ். ஒருவர் கொண்டு வந்து அதனை டாக்டரிடம் தர,

அதோடு மூச்சுக்குப் போராடிக் கொண்டிருந்த பெண் பக்கமாய் வளைந்தார் ஆர்ம்ஸ்ட்ராங். ''ம்... குடிங்க ஏத்தல்.''

விக்கிக் கொண்டும் இழுத்துக் கொண்டும் அதில் கொஞ்சத்தைக் குடித்தாள் திருமதி ரோஜர்ஸ். அந்த ஸ்பிரிட் அவளுடைய நிலைமைக்கு உதவியாயிருந்தது. முகத்தின் பயச் சிகப்பு மறைந்தது. சற்று நேரத்தில், ''இப்பப் பரவாயில்லை எனக்கு'' என்றாள் அவள். ''அது – அது – ஓஹ் - ஆடிப் போயிட்டேன்.''

''அப்படித் தான் இருந்தது அது'' என்றான் ரோஜர்ஸும். ''கையிலிருந்த தட்டுத் தெறிச்சு விழற அளவுக்கு - என்னையும் அது ஓர் உலுக்கு உலுக்கிடுச்சு. எந்தப் பாவியோ அது. முழுக்க முழுக்கப் பொய்கள். அத்தனையும்! எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும் --- ---''

அவன் தடை செய்யப்பட்டான். கேட்டது. கணைப்புப் போன்ற ஒரு சிறு இருமல் தான் - காய்ந்த இருமல் - ஆனால், அது, பேசிக் கொண் டிருந்த ரோஜர்ஸைக் கலங்கடித்து நிறுத்திக் கொள்ளச் செய்யுமளவுக்கு பலம் கொண்டிருந்தது. அவன், ஜட்ஜ் வார்க்ரேவைப் பார்த்து விழிக்க, அவரின் கணைப்பு இன்னுமொரு முறை வந்தது. பிறகு அவர் சொன் னார்: ''அந்த இசைத்தட்டினைச் சுழல விட்டது யார்? அது நீயா, ரோஜர்ஸ்?''

அலறி விட்டான் அவன்: ''அது என்ன என்பதே எனக்குத் தெரியாது, ஸார். சாமி சத்தியமா சொல்றேன், அந்தத் தட்டுல என்ன பாட்டு இருக்குனு கூட எனக்கு சுத்தமா தெரியாது. இப்படியெல்லாம் கல்மிஷம் அதுல இருக்குனு தெரிஞ்சிருந்தா அதை நான் சுழல விட்டிருக்கவே மாட்டேனே, ஸார்.''

ஜட்ஜ் உணர்ச்சியற்று குறிப்பிட்டார்: ''நீ சொல்றது உண்மையாவே இருக்கட்டும். இருந்தாலும் நீ விவரமா விளக்கினா நல்லது ரோஜர்ஸ்.''

கைக்குட்டையால் முகத்தை அழுந்த துடைத்தெடுத்தான் பட்லர். ''எனக்கு இடப்பட்ட கட்டளையை செய்தேன்... அவ்ளோ தான், ஸார்'' என்று விசுவாசமாய் சொன்னான்.

''யாருடைய கட்டளைகள்?''

''திரு ஓவனுடைய.''

''எங்கப்பா!'' என்று ஆரம்பித்த ஜட்ஜ், ''முதல்ல ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்திக்கிறேன்'' என்றார். ''திரு ஓவனுடைய

கட்டளைப்படிங்கறே – என்ன தான்யா அந்தக் கட்டளைகள்?''

''ஓர் இசைத்தட்டு... அதை எடுத்து, அதற்கான இயந்திரத்தில் வைக்க வேண்டும். அந்த இசைத்தட்டு, மேஜையின் அறையில இருக்கும்; நான் காபித் தட்டைத் தூக்கிக்கிட்டு வரவேற்பறைக்குள்ளே நுழைஞ்சதும், என் மனைவி அந்த இசைத்தட்டு இயந்திரத்தை இயக்கி விடணும்...!''

''அற்புதமான கதைப்பா'' – முணுமுணுப்பாய் சொன்னார் நீதிபதி.

''ஐயா, ஐயா! இது தான்யா உண்மை. கடவுள் மேல ஆணையிட்டு சொல்றேன்... இது தான் நிஜம். அதுல என்ன விஷயம் இருக்குனே எனக்கு தெரியாதுய்யா. ஒரு வார்த்தை கூட எனக்கு தெரியாது. ஆமாம். அதுல ஒரு பெயர் உண்டு. அதை வெச்சு இது ஏதோ இசை ஆல்பம்னு தான்யா நான் நெனச்சுக்கிட்டிருக்கேன்... இது வரைக்கும்.''

வார்க்ரேவ் திரும்பி லாம்பர்டைப் பார்த்தார். ''அதுல ஒரு டைட்டில் இருக்கா?''

லாம்பர்ட் ஒப்புதலாய் தலையசைத்தான். வெள்ளைப் பற்கள் தெரிய ஓர் அசட்டுச் சிரிப்பினை உதிர்த்தபடி, ''அவன் சொல்றது சரிதான் ஸார்'' என்றான். ''அன்னப் பறவை – இது தான் பெயர்.''

III

ஜெனரல் மார்கரெட் திடுமென்று வெடித்தார். ''முழுக்க முழுக்க அபத்தம். முட்டாள்தனம். புத்தி கெட்ட விபரீத விளையாட்டு'' என கத்தினார். ''கல் எறிவது மாதிரி மானாவாரியா குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியிருக்கான்... முட்டாள்... முட்டாள்... இந்த ஓவன் எவனோ... அவனை விடக் கூடாது. அவனை --- ---''

எமில் ப்ரெண்ட் இடைமறித்து, ''அது தான் ஆரம்பப் புள்ளி'' என்றார் கூர்மையாய். ''அது தான் நமக்கு இப்போ வேணும். யார் அவன்?''

ஜட்ஜ் குறுக்கிட்டு, வாழ்நாள் முழுவதும் கிரிமினல் நீதிமன்றம்

அவருக்குள் புகட்டியிருந்த ஆளுமை மிகுந்து சொன்னார்: ''இந்த சரியான கேள்விக்குள்ளே தான் நாம ஜாக்கிரதையாகவும் ஆழமாயும் போய் தேடணும். முதல்ல உன் மனைவியைக் கூட்டிட்டுப் போய் படுக்கையில போட்டுட்டு வந்துடு, ரோஜர்ஸ்.''

''சரி, ஸார்.''

''நான் உதவறேன், ரோஜர்ஸ்'' என்று ஒரு கை கொடுத்தார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்.

இருவர் மீதும் சாய்ந்துக் கொண்டு, ஒரு பக்கமாய் நொண்டி நொண்டி இழுத்தபடி, அறையை விட்டு வெளியேறினார் ஏத்தல். அவர்கள் போனதும், ''உங்களுக்கு எப்படியோ தெரியலே, ஸார்!'' என்றான் மார்ட்ஸன், ஜட்ஜை நோக்கி. ''ஆனா... எனக்கு... இப்போ... கொஞ்சமா... குடிக்கணும், ஸார்!''

''எனக்கும்'' என்றான் உடனே லாம்பர்ட்.

''ஓ... அப்ப சரி...! நம்ம சரக்கைப் போய் எடுத்துக்கிட்டு வந்துடறேன்'' – அறையை விட்டு வெளியேறி, ஓரிரு நிமிடங்களில் திரும்பி வந்தான். ''உள்ளே கொண்டு வந்து எல்லோருக்கும் தருவதற்காக, வெளியே தயாரா இருந்தது'' என்றான்.

பல விஸ்கிக் கோப்பைகள் வரிசைப்படுத்தப்பட்டிருந்த அகலத் தட்டினை, அலுங்காமல் கையிலிருந்து கீழிறக்கினான் மார்ட்ஸன். கோப்பைகளை எடுத்துப் பரிமாறுவதில் அடுத்த சில நிமிடங்கள் கழிந்தன. ஜெனரல் மார்கரெட் அதிகம் சோடா கலக்காது நேரடியாய் விஸ்கியை உள்ளே தள்ளிக் கொண்டார். ஜட்ஜும். இப்படி ஓர் ஊக்க பானம் அப்போது அனைவருக்குமே தேவைப்பட்டிருந்தது. எமிலி மட்டும் ஒரு கோப்பை தண்ணீரைக் கேட்டு வாங்கி அருந்தினார்.

''இப்போ அவங்க சாதாரணமாயிட்டாங்க. தூங்க மாத்திரை எடுத்துக்க சொல்லியிருக்கேன்'' என்றபடி, திரும்பி அறைக்குள் நுழைந்தார் டாக்டர். ''என்ன பண்றீங்க எல்லாரும்...?! ஓ! விஸ்கி... நானும் ஒண்ணு எடுத்துக்கறேன்.''

பலர் மறுபடியும் கோப்பைகளை நிறைத்துக் கொண்டனர். சில நிமிடங்களுக்குப் பிறகு ரோஜர்ஸும் இணைந்திருந்தான்.

விவகாரத்தின் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கும் பொறுப்பினைக் கையிலெடுத்துக் கொண்ட நீதிபதி வார்க்ரேவ், அந்த

அறையையே ஒரு நீதிமன்றத்து விசாரணைக் கூடமாக நடத்தினார்.

''இப்போ, ரோஜர்ஸ்!'' என்று ஆளுமையோடு ஆரம்பித்த நீதிபதி, ''இந்த விவகாரத்தின் அடி ஆழத்தை நாம பிடிச்சாகணும். யாரிந்த – ஓவன்?'' என ஆரம்பித்தார்.

பேந்தப் பேந்த விழித்த ரோஜர்ஸ், ''அவர் தான் இந்த இடத்தை சொந்தமா வாங்கியிருக்கிறவர், ஸார்'' என்றான்.

''அந்த சங்கதி எனக்கும் தெரியும். நீ என்கிட்டே என்ன சொல்லணும்னு நான் கேட்கிறேன்னா --- அந்த மனுஷனைப் பற்றி உனக்கு என்னவெல்லாம் தெரியும்?''

ரோஜர்ஸ் மறுத்துத் தலையசைத்தான். ''என்னால சொல்ல இயலாது, ஸார். அவரை நான் பார்த்தது கூட கிடையாது.''

அந்த அறையில் ஒரு சிறு சுழல் உண்டாகி அடங்கியது.

ஜெனரல் மார்கரெட், ''நீ அவரைப் பார்த்ததேயில்லே?'' என்று கேட்டார். ''என்ன பேசறே நீ?''

''நாங்க இங்கே வந்து இன்னும் ஒரு வாரம் கூட முழுசா ஆகலே, ஸார் --- அதாவது நானும் என் மனைவியும் சொல்றேன். ஒரு தனியார் வேலைவாய்ப்பு நிறுவனம் மூலமா இந்த வேலை கிடைச்சது. ரிஜினா நிறுவனம். ப்ளைமூத்தில் இருக்கு.''

அப்படியா என்று தலையசைத்த ப்ளோர், ''பழைய ஸ்தாபனம்'' என்றார் அவராக.

''அந்தக் கடுதாசி இருக்கா?'' – வார்க்ரேவ்.

''எங்களுக்கு வேலை கிடைச்ச தகவலா, ஸார்? இல்லை, ஸார். அதை நான் வெச்சுக்கலே.''

''ம். உன் சரட்டைத் தொடர்ந்து விட்டுக்கிட்டே இரு'' என்று நீதிபதி குறிப்பிட்டதற்கு, வழியின்றி நின்றான் ரோஜர்ஸ். ஜட்ஜே தொடர்ந்தார்: ''நீ சொல்றபடி பார்த்தால்... ஒரு கடுதாசி தான் இந்த வேலைக்கான தகவலை உனக்குத் தந்திருக்கு.''

''ஆமாம், ஸார். ஒரு குறிப்பிட்ட நாள்ல நாங்க இங்கே வந்து சேரணும். அது படி செஞ்சோம். எல்லாம் இங்கே சரியா தயாரா இருந்துச்சு. கிடங்குல நிறைய உணவு இருப்பிலிருந்தது. எல்லாமே நல்லபடியா அமைஞ்சிருந்தது. இங்கே அங்கே துடைச்சு சுத்தமா வெச்சுக்கிறதைத் தவிர வேற வேலை கிடையாது.''

''அடுத்து என்ன?''

''ஒண்ணும் இல்லே, ஸார். ஒரு சின்ன அளவளாவலுக்காக அறைகளைத் தயார் செய்யும்படி, மறுபடியும் கடுதாசி மூலமா எங்களுக்கு சில உத்தரவுகள் வந்தன. பிறகு நேற்று மதியத் தபால்ல திரு ஓவன் கிட்டேயிருந்து எனக்கு இன்னொரு கடிதம் வந்தது. அவரும் திருமதி ஓவனும் வர முடியாத சூழ்நிலை உருவாகிட்டதாகவும், எத்தனை சிறப்பா முடியுமோ அத்தனை சிறப்பா நாங்க நடந்துக்க ணும்னும் அதுல தகவல்கள் இருந்துச்சு. ராத்திரி பரிமாற வேண்டிய சாப்பாடு... காபி... கிராமஃபோன் இசைத்தட்டை இயக்க வேண்டிய முறை... எல்லாமும்.''

''அந்தக் கடிதம் இருக்கா?''–கறாராய் கேட்டார் நீதிபதி.

''இருக்கு, ஸார். இதோ, அது.''

அதனை சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். நீதிபதி அதை வாங்கிக் கொண்டார்.

''ஹ ஹும்'' என்றார் நீதிபதி. ''ரிட்ஸ் ஹோட்டல்னு தலைப்புல இருக்கு. தட்டச்சு செய்யப்பட்டிருக்கு.''

சட்டென்ற நகர்தலில், ப்ளோர் அவருக்கு மிக அருகாமையில் போயிருந்தார். ''ஆட்சேபணையில்லைனா... அதை நான் கொஞ்சம் பார்க்கணுமே.''

பிடுங்குவது போல அக்கடிதத்தை அவரிடமிருந்து இழுத்த ப்ளோர், அது முழுவதும் தன் கண்களை மேய விட்டார். பின் முணுமுணுப்பாய், ''காரொனேஷன் எனும் தட்டச்சு இயந்திரம் மூலமா அடிச்சிருக்காங்க- புதுசு இது – சந்தையில இது பற்றி குறைகளே கிடையாது. ராணுவ சின்னம் கொண்ட தரமான தாள் - பலரால் உபயோகப்படுத்தப்படும் வகை இது. வேற ஒண்ணும் இதிலிருந்து நமக்குக் கிடைக்கப் போவ தில்லே. விரல் ரேகைகள் கிடைக்கலாம்... ஆனா எனக்கு சந்தேகமே'' என்றார்.

ஜஸ்டிஸ் வார்க்ரேவ், ப்ளோரை, திடீர் ஜாக்கிரதையோடு கவனித்தார்.

ப்ளோரின் தோளுக்குப் பின்னால் நின்றபடி அப்படியே கடிதத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஆன்டனி மார்ட்ஸன், ''மனம் போன போக்குல உருவான கற்பனை பெயரை வெச்சிக்கிட்டிருக்கார்...

இல்லே...?!'' என்றான். ''பாருங்க அங்கே... உலிக் நார்மன் ஓவன்: ஊஃப்! வாய் முழுக்கவும் நல்ல எக்ஸர்ஸைஸ்!''

சிறு துணுக்குறலோடு ஜட்ஜ் சொன்னார்: ''உங்களுக்கு நான் நன்றி சொல்லணும், திரு மார்ட்ஸன். விசித்திரமான... ஆனா ஏதோ வகையில உதவப் போகிற ஒரு குறிப்பு நோக்கி என் கவனத்தை நீங்க கொண்டு போனதுக்கு... நன்றி.''

இப்படிச் சொல்லி விட்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்த வார்க்ரேவ், கோபம் கொண்ட கிழ ஆமை போல கழுத்தை முன்னுக்கு வெகுவாய் நீட்டி பேசினார்: ''நம் ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கி யிருக்கிற தகவல்களையெல்லாம் அருவி போல கொட்டித் தீர்க்க வேண்டிய நேரம் வந்தாச்சுனு நினைக்கிறேன். ஒவ்வொருத்தரும், தானா முன் வந்து, இந்த இடத்தின் சொந்தக்காரன் பற்றி தெரிந்து வைத்திருக் கிற அத்தனை சமாச்சாரங்களையும் சொல்லி விடுவது --- என்னைப் பொறுத்த வரைக்கும்... மிக மிக சகாயமா அமையும்.'' இந்த இடத்தில் நிறுத்திக் கொண்டு விட்டு, பின் ஒரு புதுத் துவக்கத்தோடு தொடர்ந்தார்: ''நாம எல்லோரும் விருந்தாளிகள். ஆகவே, ஒவ்வொருத்தரா, இங்கே எப்படி விருந்தாளியா வர நேர்ந்தது என்பதை மிகச் சரியா விளக்கினா... பெரும் நன்மையா அது அமையும் என்பது என் தாழ்மையான கருத்து.''

அங்கு சில கண தயக்கம் நிலவியது. பிறகு எமிலி ப்ரெண்ட் இறுதி முடிவாய் பேசினார்: ''நடந்துக்கிட்டு இருக்கிற இந்த சமாச்சாரத்துல, என்னவோ ஓர் அசாதாரண விசித்திரம் அடங்கியிருக்கு'' என்றார். ''யாருடையது அப்படினு கண்டே பிடிக்க முடியாத அளவுக்கு கையொப்பம் தாங்கிய ஒரு கடிதம், எனக்கு வந்தது. ரெண்டு மூணு வருஷங்களுக்கு முன்னாடி, கோடை விடுமுறையின் போது, எங்கேயோ ஒரு விடுதியில நான் சந்திக்க நேர்ந்த பெண்மணி கிட்டே யிருந்து அக்கடிதம் வந்திருக்குனு, நானா அர்த்தப்படுத்திக்கிட்டேன். புரியாத அந்தக் கையொப்பத்தில் அடங்கியிருந்த பெயரை ஓக்டன்... அல்லது ஓலிவர்... அப்படினு நானே எடுத்துக்கிட்டேன். ஓக்டன்... ஓலிவர்... ஆகிய இந்த ரெண்டு பெண்மணிகளுடனும் எனக்கு கொஞ்சம் பழக்கம் உண்டு... இதனால கூட அப்படி தோணியிருக்க லாம். ஆனா, சர்வ நிச்சயமா, இந்த ஓவன் எனும் பெயர் கொண்ட

வரோடு, நான் நட்பு ஏற்படுத்திக்கிட்டதும் கிடையாது... அல்லது இவரைப் பார்த்ததும் கிடையாது.''

''அந்தக் கடிதம் உங்ககிட்டே இருக்கா, ப்ரெண்ட்?'' – கேட்டார் நீதிபதி.

''இருக்கு. உங்களுக்காக அதைக் கொண்டு வரேன்.''

கிளம்பிப் போய் சில நொடிகளில் அக்கடிதத்துடன் வந்து சேர்ந்தார் அவர்.

நீதிபதி வார்க்ரேவ் அதனைப் படித்துப் பார்த்தார். பிறகு, ''க்ளேதார்ன்?'' என்ற கேள்விக்குறியோடு வெராவை அழைத்தார்.

காரியதரிசியாக இங்கு அவர் பணியமர்த்தப்பட உருவான சூழ்நிலைகளை வெரா விளக்கினார்.

பிறகு ''மார்ட்ஸன்?'' என்ற கேள்விக்குறியைப் போட்டார் ஜட்ஜ்.

''தந்தி வந்தது'' என ஆரம்பித்தான் அழகன்! ''என்னுடைய நெருங்கிய கூட்டாளி ஒருத்தன் கிட்டேயிருந்து. பாட்ஜர் பெர்க்லே அவன் பெயர்... பாட்ஜர்னு கூப்பிடுவோம். கடிதம் கையில் கிடைச்சதும் அது எனக்கு பயங்கர ஆச்சரியத்தைத் தந்தது... கிழ குதிரை நார்வே பக்கமா போய் செட்டில் ஆயிடுச்சுனு தான் நான் அது வரை நினைச்சுக்கிட்டு இருந்தேன். இங்கே வா எனும் தகவல் மாத்திரம் அதுல இருந்தது.''

அப்படியா என தலையசைத்துக் காட்டிய வார்க்ரேவ், ''டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்?'' என்று கேட்டார்.

''ஒரு மருத்துவரா தான் நான் இங்கே அழைக்கப்பட்டேன்.''

''ஓ! இந்தக் குடும்பத்தோட உங்களுக்கு முன்னமேயே பழக்கமா?''

''கிடையாது. என் மருத்துவ நண்பன் ஒருத்தனுடைய பெயர் கடிதத்துல குறிப்பிடப்பட்டிருந்தது.''

''உண்மை போல பகட்டா காட்டி நம்ப வைக்க...! சரி! அந்த நண்பன்... கொஞ்ச காலமா உங்க கூட தொடர்புல இல்லே என்பது என் ஊகம்...?!''

''ஆ... ஆ... ஆ... ஆ...மா...ம்!''

ப்ளோரையே உற்றுப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த லாம்பர்ட், ''ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம்... எனக்கு ஒண்ணு தோணிச்சு!'' என தற்சமயம் முன்னேற, நீதிபதி தனது வலக்கையைத் தூக்கிக் காட்டினார்.

''ஒரு நிமிஷம்!'' என்றார்.

லாம்பர்டோ, ''ஆனா... வந்து!'' என முன்னேறத் துடிதுடிக்க, ''ஒவ்வொரு விஷயமா எடுத்துப்போம், லாம்பர்ட்'' என அதட்டலாய் நிறுத்தினார் ஜஸ்டிஸ். ''இந்த ராத்திரி பொழுதுல நம்ம எல்லோரையும் எந்தக் காரணம் ஒண்ணா கட்டி இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கு என்பதை விசாரிச்சுக்கிட்டு இருக்கோம்... இல்லியா?!'' என்று விட்டு, ''ஜெனரல் மார்கரெட்?'' எனத் தாவினார்.

தன் மீசையை இழுத்து விட்டபடி மார்கரெட் பேசினார்: ''இந்த ஓவன் பயலிடமிருந்து தான் எனக்கும் கடிதம் வந்தது. என் பழைய நெருங்கிய நண்பர்கள் எல்லாம் இங்கே ஒண்ணா வந்து கூடப் போவதா அதில் சொல்லியிருந்தார். மன்னிக்கணும்... அந்தக் கடிதம் இப்போ கை வசம் இல்லே.''

''இப்போ, திரு லாம்பர்ட்...?'' என்றார் நீதிபதி.

இப்பொழுது லாம்பர்டின் மூளை சுறுசுறுப்பான வேலையில் இருந்தது. இப்படி எல்லோரும் கூடியிருக்கும் பொது இடத்தில் வாய் திறப்பதா, வேண்டாமா?! முடிவெடுத்துக் கொண்டான்.

''அவர் கதையே தான்'' என்றான் பொதுவாய். ''அழைப்பு - நண்பர்கள் வருகிறார்கள் - பழைய நண்பர்கள் - பழங்கதை பேசி கொண்டாடலாம் - இப்படி! அது எனக்குப் பிடிச்சிருந்தது. கிளம்பி னேன். ஆங்... அந்தக் கடிதத்தை நான் கிழிச்சிட்டேன், ஸார்.''

மேதகு நீதிபதி தனது முழு கவனத்தையும் திரு ப்ளோர் பக்கமாய் இப்போது திருப்பினார். அவருடைய வலக்கை ஆட்காட்டி விரல் மேலுதட்டினைத் தட்டியபடியிருக்க, குரலோ, அபாய அமைதியில் இருந்தது.

''நாம எல்லோரும், ஒரு வகையில நம்மை பயமுறுத்திப் பார்க்கும் அனுபவம் ஒன்றை இப்போ தான் எதிர் கொண்டோம். உருவம் அற்ற ஒரு குரல்... அது, நம்ம பெயரையெல்லாம் மிகச் சரியா குறிப்பிட்டு, ஒவ்வொருத்தர் மேலும் திட்டவட்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி நம்மளோட பேசியது. சரிதானே? அந்தக் குற்றச்சாட்டுக்களைப் பற்றி இப்போ பார்ப்போம். இதுல... ஒரு சின்ன விஷயத்தின் மேல தான் என் கவனம் இருக்கு. சொல்லப்பட்ட பெயர்கள்ல ஒரு பெயர் --- வில்லியம் ஹென்றி ப்ளோர். ஆனா, நமக்குத் தெரிஞ்ச அளவுல,

நமக்குள்ளே ப்ளோர் எனும் பெயரில் ஒருத்தர் கூட கிடையாது. மேலும் டேவிஸுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை. இது பற்றி என்ன சொல்ல விரும்பறீங்க, திரு டேவிஸ்?''

ப்ளோர் சிடுசிடுப்பாய் வாய் திறந்தார்: ''எலி, பொறிக்குள்ளே மாட்டிக்கிச்சு... என் பெயர் டேவிஸ் இல்லே என்பதை வெளியிட்டு விடுவது தான் இனி எனக்கு நல்லது.''

''அப்போ நீங்க தான் வில்லியம் ஹென்றி ப்ளே[illegible]?''

''சரி.''

''இன்னும் இவரைப் பற்றி நிறைய சேர்க்க வேண்டியிருக்கு'' என்றான் லாம்பர்ட். ''தப்பான பொய்ப் பெயரில் மட்டும் நீங்க எங்க கூட இல்லே, திரு ப்ளோர். இன்னிக்கு சாயந்திரம் தான் நான் கவனிச்சேன்... நீங்க ஒரு மகா மெகா புளுகன். பொய் உங்க ரத்தம் முழுக்க ஓடுது. நீங்க நாடல் எனும் தென் ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்து வருவதாகத் தானே சொன்னீங்க. அது பொய். எனக்கு தென் ஆப்பிரிக்காவும் தெரியும்... அங்கே நாடல் பகுதியும் தெரியும்...! எங்கே யார் மேல வேணும்னாலும் சத்தியம் பண்ணுவேன்... நீங்க, உங்க வாழ்நாள்ல, இந்தப் பகுதிகள்ல கால் பதிச்சது கிடையாது... கிடையாது.''

எல்லா கண்களும் ஒரு சேர ப்ளோரின் மேல் குவிந்தன. சந்தேகமும் கோபமும் கனன்ற பார்வைகள். ஆன்டனி மார்ட்ஸன் ஓரடி எடுத்து வைத்து ப்ளோரின் அருகில் வந்தான். மடக்கியிருந்த அவன் முஷ்டிகள் துடித்தன. கேட்டான்: ''சொல்லு பதரே... இதுக்கெல்லாம் என்ன விளக்கம்?''

''ஓ!'' என சில அடிகள் பின்னுக்குத் தள்ளிக் கொண்ட ப்ளோர் ''நீங்க எல்லாருமே என்னைத் தவறுதலா புரிஞ்சுக்கிட்டீங்க'' என்றார். ''நான் யார் என்கிற நம்பகத்தன்மைக்கு சாட்சிகள் இருக்கு... இதோ... அதை நீங்களே பார்க்கலாம்!'' என்றார். தொடர்ந்தார்: ''நான் ஒரு முன்னாள் துப்பறியும் அதிகாரி. தற்சமயம் ப்ளைமூத்தில் ஒரு துப்பறியும் அலுவலகம் நடத்திக்கிட்டு இருக்கேன். இந்த வேலையை முடிக்கும்படி வேண்டுதல் வந்தது... நானே இறங்கினேன்.''

ஜட்ஜ் ''யாரால்?'' என கேட்டார்.

''இந்த ஓவனால்! செலவுகளுக்கு ஏகப்பட்ட பணம் அனுப்பி

அவருக்கு வேண்டியதை செய்யச் சொல்லி என்னைப் பணித்தார். இந்த வீட்டுக்கு வரும் குழுவினரில் ஒருவரா நானும் இணைஞ்சுக்கணும் - ஒரு விருந்தாளியா. உங்க அத்தனை பேரோட பெயர்களும் எனக்கு தந்தாங்க. நான் உங்க அனைவரையும் கண்காணிச்சுக்கிட்டே இருக்கணும்.''

''அதுக்கு ஏதாவது காரணம் தந்தாங்களா?''

கசப்பாய் ப்ளோர் சொன்னார்: ''திருமதி ஓவனின் நகைகள். திருமதி ஓவன் --- தூ... என் கால் மண்! இந்தப் பெயர்ல ஒரு நபர் இருக்கிற தாகவே இப்ப என்னால நம்ப முடியலே.''

மறுபடியும் நீதிபதியின் ஆள் காட்டி விரல் அவருடைய மேலுதட்டினைத் தட்ட ஆரம்பித்தது --- இம்முறை பாராட்டுதலாய்!

''இப்போ நீங்க சொன்ன முடிவு - நிரூபணமாயிடுச்சுனு நினைக் கிறேன்'' என்றார் நீதிபதி. ''உலிக் நார்மன் ஓவன். எமிலி ப்ரெண்டுக்கு வந்த கடிதத்திலிருந்த கையொப்பம் வெறும் கிறுக்கலாகவே இருந்தாலும் கூட, யுனா நான்ஸி என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க... பிரபலமான கிருத்துவப் பெயரா தான் இருக்கு. யுனா நான்ஸி... ஆங்கிலத்துல Una Nancy... சரியா. இப்போ கவனியுங்க... அது யுனா நான்ஸியோ... இல்லே உலிக் நார்மனோ... அதாவது ஆங்கிலத்துல Ulick Norman... எதுவாயிருந்தாலும், ஒவ்வொண்ணுலயும், ஓவன்! அதாவது Owen கடைசியில வருது. ஆக, இந்தப் பெயரோ அந்தப் பெயரோ... அது எந்தப் பெயரா இருந்தாலும், நாம, யு என் ஓவன் அப்படினு... அதாவது U N Owen அப்படினு... சொல்லிடலாம்.

இனிமே இன்னும் கொஞ்சம் ஆழமா கவனியுங்க. கொஞ்சம் விளையாட்டா இந்தப் பெயரை வளைச்சு இழுத்துத் திருகிப் பாருங்க...! யு என் ஓவன்... இதை முழுக்க சேர்த்துப் படியுங்க. இந்த UN Owen, அன்-ஓவன்... அதாவது UNOwen அப்படினு ஆகுதா...?! அன்-ஓவன் - இதை இன்னும் சுருக்குங்க... அன்னோன்! UNKNOWN! என்ன அர்த்தம்? 'தெரியாது!' ஒண்ணும் தெரியாது! அதாவது – யாருன்னு தெரியாது!''

அனைவரின் பிதுங்கித் துருத்திக் கொண்டிருந்த விழிகளும் அடங்கவேயில்லை.

நீதிபதி தொடர்ந்து முடித்தார்: ''இந்தப் பெயர்ல ஒரு நபர் இருக்

கிறதாகவே இப்ப என்னால நம்ப முடியலேனு நீங்க சொன்னது... திருப்ளோர்... சர்வ நிஜம்.''

வெரா மறுபடியும் அலறினார்! ''ஆனா... நீதிபதி ஸார்... இது... இது... அப்பட்டமான ஒரு கோமாளித்தனம்! பைத்தியக்காரத்தனம்... பைத்தியக்காரத்தனம்...!''

ஆம் என்பது போல மெலிதான புன்னகையோடு தலையை அமைதியாக ஆட்டிக் கொண்டார் ஜட்ஜ். ''ரொம்பச் சரி'' என்றார். ''ஆமாம். ஒரு பைத்தியக்காரக் குழப்பவாதியாலத் தான் நாம எல்லோரும் வரவழைக்கப்பட்டிருக்கோம் என்பதில், எனக்குள் இரண்டாவது கருத்து கிடையாது. அவன் - கிரகணம் போல மறைந்திருக்கும் - பயங்கரமான ஒரு மனிதக் கொலை வெறியனாகவும் இருக்கணும்.''

அத்தியாயம் 4

I

அங்கு கணநேர அமைதி நிலைத்தது. பயமும் திகைப்பும் கிலியும் சூழ்ந்த அமைதி. பிறகு, ஜட்ஜின் மெல்லிய குரலோசை தான், விடுபட்ட நூலின் நுனியைப் பிடித்திழுத்து மேற்கொண்டு செலுத்தியது.

''இப்பொழுது, நாம், நம்முடைய அடுத்த கட்ட விசாரணையைக் கவனிக்கலாம். முதல்ல என் பக்கத்திலிருந்தே நான் ஆரம்பிக்கிறேன். நான் யார்? எதனால ஆளரவமற்ற இந்தத் தனித் தீவை நம்பி வந்தேன்?

''உயர்நீதிமன்றம்... உச்சநீதிமன்றம்... என எல்லாமும், கேட்டாலே கிடுகிடுக்கும் பெயர் - **ஜஸ்டிஸ் வார்க்ரேவ்.** அது - நான்! என்னோட பழைய தோழியொருத்தி... கான்ஸ்டன்ஸ் கல்மிங்டன் அவ பேர்... அவ முன்மொழிந்த விஷயம் இது – அதாவது நான் இங்கே வந்திருக்கிற விஷயம். அவளைக் கொஞ்ச வருஷமாவே நான் பார்க்கலே. கிழக்கிந்திய நாடுகள் எதுக்கோ அவ குடிபெயர்ந்துட்டா. இதே போன்ற, நிச்சயமற்ற, சம்பந்தா சம்பந்தமில்லாத கடிதங்களைத் தான் அவ எப்போதுமே எழுதுவா --- மிகச் சரியா... இப்ப எனக்கு வந்திருக்கும் இதே போலத் தான்... ஒரு மண்ணும் புரியாம அவ எழுதுவா. இந்த இடத்துக்கு தவறாம வாங்க... நாம சந்திப்போம்... பெயர் தெளிவாயில்லாத யாரையோ குறிப்பிட்டு இன்ன ஆள் தான் நமக்கு விருந்து தரப் போறாங்க --- இந்த மாதிரி! அதே அணுகு முறையை இதிலும் நீங்க பார்க்கலாம்! கல்மிங்டன் இப்படிப்பட்ட பெண் தான் என்பதை நிரூபிக்கவே இவ்ளோ சொன்னேன்... இவையெல்லாவற்றிலுமிருந்து, ஒரு ருசிகரமான உண்மை புலப்படுது. ஆசை காட்டி நம்மை இங்கே இழுத்து வந்திருக்கும் 'அவன்' யாரோ... அந்த 'அவனுக்கு', நம்மைப் பற்றிய சமீபத்திய நடவடிக்கைகள் அனைத்தும் தெரிஞ்சிருக்கு... அல்லது தெரிந்துக் கொள்ள படாத பாடு பட்டு ஜெயிச்சிருக்கான். 'அவன்', அது யாராகவாவது இருந்துட்டுப் போகட்டும், கான்ஸ்டன்ஸ் கல்மிங்டனுடனான என்னுடைய நட்பு பற்றி தெரிஞ்சு வெச்சிருக்கான்; அவளுடைய விவரங்களற்று கடிதம்

எழுதும் முறை வரை அவனுக்குத் தகவல் கிடைச்சிருக்கு. அவனுக்கு டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்குடைய மருத்துவ வட்டம் பற்றியும் அந்த மருத்துவர்கள் சமீபமா எங்கெங்கெல்லாம் போய் வருகிறார்கள் என்பவையும் தெரிஞ்சிருக்கு. திரு ஆன்டனி மார்ட்ஸன்னுடைய நண்பனின் பட்டப் பெயர் என்ன... எனும் சுலபமா கிடைக்காத தகவல் அவனிடம் இருக்கு; அந்த நண்பன் தந்தி அனுப்புவான்... அதை இன்ன மாதிரி தான் அனுப்புவான் போன்ற சமத்தியான உண்மைகளும் கூட அவனுக்கு கிடைக்கப் பெற்றிருக்கு. ரெண்டு வருஷங்களுக்கு முன்னாடி... ஒரு கோடை விடுமுறையின் போது, செல்வி ப்ரெண்ட் போயிருந்த இடம்... அங்கே அவங்க சந்திச்சு அறிமுகமான சிநேகிதர்கள்... இவையும் அவனுக்குத் தெரியும்! ஜெனரல் மார்கரெட்டின் பழைய சிப்பாய் நண்பர்கள் எல்லோரையும் அவனுக்குத் தெரியும்!''

இப்போது கொஞ்சம் தாமதித்து விட்டு நீதிபதி சொன்னார்: ''தெரியும்! தெரியும்!'' தொடர்ந்தார்: ''நல்லா கவனியுங்க... அக்கு வேறு ஆணி வேறாய்... அவனுக்குத் தெரியும்! அப்படி நம்மைப் பற்றி அவன் தெரிந்து வைத்திருக்கும் விஷயங்களை அடிப்படையா வெச்சு, அவன் சில ஸ்திரமான குற்றச்சாட்டுக்களை வடிவமைச்சிருக்கான்.''

உடனே ஒரு பெரிய இரைச்சல் அங்கு உண்டாயிற்று. ''மூட்டை மூட்டையாய் எழுதப்பட்டுள்ள பொய்கள்! அவதூறுகள்! கற்பனைக் குற்றச்சாட்டுக்கள்!'' – கதறினார் ஜெனரல் மார்கரெட்.

''அத்தனையும் ஆதாரமற்றவை!'' – கதறினார் வெரா. ''கோழைத்தனம்... கோழைத்தனம்!''

''பொய்கள்... பேடித்தனமாய் மறைந்திருந்து வீசப்படும் பொய்கள்... நாம் இப்படி எதுவுமே செஞ்சதில்லே...! நம்மில் ஒருத்தர் கூட...!'' – உறுமினான் ரோஜர்ஸ்.

''அந்த முட்டாப்பய எதைத் துரத்திக்கிட்டு நம்மை இப்படி விரட்றானோ! இதனால என்ன லாபம் கிடைச்சிடும் அவனுக்கு!'' – குரைப்பது போல வெட்டு வெட்டென்று சொன்னான் ஆன்டனி.

உயர உயர்ந்த நீதிபதியின் வலக்கை உருவான அமளியைத் தணிக்க சைகை தந்தது.

மிக லாகவமாக தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் பேசினார் அவர்:

''நான் இன்னும் கொஞ்சம் பேச விரும்பறேன். முகந்தெரியாத

நம்முடைய 'அந்த' நண்பன், எட்வர்ட் ஷெல்ட்டன் என்பவனை நான் கொன்றுள்ளதா என்னைக் குற்றஞ்சாட்டினான். எனக்கு ஷெல்ட்டனை விமரிசையா ஞாபகமிருக்கு. 1930 ஜூன்ல எனக்கு முன்னாடி தான் அவன் பரிசோதனைக்கு வந்தான். ஒரு வயசான பெண்மணியைக் கொன்று விட்டதாக அவன் மேல குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ரொம்ப புத்திசாலித்தனமா அவன் காப்பாற்றப்பட்டான்! குற்றவாளிக் கூண்டுல நின்னுக்கிட்டு, கூடியிருந்த வக்கீல்கள் அனைவர் முன்னிலையிலும் மிக நல்லவன் என்கிற முத்திரையைப் பதிக்க அவன் தவறவேயில்லே. இருந்தபோதிலும், சாட்சிகளை ஒவ்வொண்ணா வரவழைச்சு விசாரணை முன்னேற முன்னேற... அவன் சாயம் வெளுக்க ஆரம்பிச்சுது. அவன் குற்றமுள்ளவன் என்பது வெளிப்பட்டது. முதல்ல நடந்த பரிசோதனை... பிறகு நீடித்த விசாரணை... எல்லாவற்றையும் கூட்டி வெச்சு நான் இறுதி அறிக்கையைப் படிச்சதும், பெஞ்ச், அவன் தான் குற்றவாளி என்ற முடிவை அறிவிச்சது. அவனுக்கு மரண தண்டனை என்று ஜூரி உறுப்பினர்கள் தீர்மானித்த முடிவினை நான் சம்மதித்து உறுதியாக்கினேன். 'தவறான கோணத்தில் பார்க்கப்பட்டு எழுதிய தீர்ப்பு' எனும் காரணத்தை முன் நிறுத்தி அவன் தரப்பில மேல்முறையீடு செய்யப்பட்டது. 'அப்படி தப்பாய் வழக்கு பார்க்கப் படவில்லை' என அறிவிக்கப்பட்டு அவனுடைய மேல் முறையீட்டு மனு தள்ளுபடியாக... அவனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை சரியாக நிறைவேற்றப்பட்டது. உங்க அனைவரின் முன்னாலும் இப்போ சொல்றேன்... இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் என் மனச்சாட்சி அப்பழுக்கில்லாம பரிபூரணமா நடந்துக்கிச்சு. என் கடமையைத் தான் நான் செஞ்சேன்... வேற எதுவும் இதுல கிடையாது. குற்றவாளினு சரியா முத்திரை குத்தப் பெற்ற ஒருவனுக்குத் தான் நான் மரண தண்டனை எழுதி தீர்ப்பளித்தேன்.''

ஆர்ம்ஸ்ட்ராங்குக்கு இப்போது நினைவுக்கு வந்தது. ஷெல்ட்டன் வழக்கு! அவன் மீதான தீர்ப்பு ஒரு பெரும் ஆச்சரியமாய் அறியப் பட்டது. வழக்கு நடந்துக் கொண்டிருந்த போது ஷெல்ட்டனின் வக்கீலான மேத்யூஸை ஒரு நாள் இரவு விருந்து ஒன்றில் சந்தித் திருக்கிறார் ஆர்ம்ஸ்ட்ராங். 'தீர்ப்பு பற்றி துளி சந்தேகம் கிடையாது. குற்றமற்றவர் என்று விடுதலையாகப் போவது நிச்சயம்' என்பதில்

அவர் உறுதியாய் இருந்தார். இந்த சந்திப்புக்குப் பிறகு கொஞ்ச காலத்திலேயே இன்னும் சில விமர்சனங்கள் டாக்டருக்குத் தெரிய வந்தன. 'ஜட்ஜ், அவனுக்கு சர்வ விரோதமாக இருக்கிறார்... ஜூரி உறுப்பினர்கள் அனைவரையும் தன் கட்டுக்குள் கொண்டு வந்து திருப்பி விட்டு, ஷெல்ட்டன் ஒரு குற்றவாளியே என சொல்லச் செய்து விட்டார்... சட்ட ரீதியாக ஓட்டையில்லாதவாறும் சமாளித்து விட்டார்... கிழ வார்க்ரேவுக்கா சட்டத்தின் ஓட்டைகளை இட்டு நிரப்பத் தெரியாது... ஷெல்ட்டனின் மீது தனிப்பட்ட விரோதம் ஏதோ இருப்பது போலல்லவா ஜஸ்டிஸ் நடந்துக் கொண்டுள்ளார்!' இப்படி!

இந்த அனைத்து ஞாபகங்களும் டாக்டரின் நினைவுக்குள் எட்டிப் பார்த்து அலையடித்தன. தான் இப்போது கேட்கப் போகும் கேள்வி யுடைய உள்ளர்த்தத்தின் வீச்சினை எண்ணிப் பார்க்காமலேயே, ஒரு வேகத்தில் ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்: ''ஷெல்ட்டனை உங்களுக்குக் கொஞ்சமும் தெரியாதா? அதாவது... வழக்கில் சந்திப்பதற்கு முன்னால்...?''

உள்ளடங்கிப் போயிருந்த ஜஸ்டிஸின் முதலைக் கண்கள், கேள்வி வந்த திசை நோக்கிக் கொஞ்சமாய் திரும்பி, டாக்டரை ஊடுருவின. ''வழக்குக்கு முன்னால, ஷெல்ட்டனைப் பற்றி எனக்கு இம்மியும் தெரியாது.''

ஆர்ம்ஸ்ட்ராங் தனக்குள் சொல்லிக் கொண்டார்:

'பயல் புளுகறான் - எனக்குத் தெரியும்... கிழவன் பொய் சொல்றான்.'

II

வெராக்ளேதார்ன், நடுநடுங்கும் குரலில் பேச ஆரம்பித்தார்: ''என் நிலைமையைச் சொல்றேன். அந்தச் சிறுவன் - ஸிரில் ஹாமில்ட் டனைப் பற்றி. ஆரம்பப் பள்ளிக்கூடத்துல அந்தக் குழந்தையின் காவல் நான் தான். கடலுக்குள்ளே நல்லா ஆழமா நீந்திப் போகணும் என்பது

அவனுடைய விடாப்பிடியான ஆசை. சொல்லிக்கிட்டே இருப்பான். ஒரு நாள் நான் ஏதோ கை வேலையா இருந்த போது கிளம்பியிருக்கான். தெரிஞ்சவுடனே நானும் அவனுக்குப் பினனாலேயே நீந்திக்கிட்டு போனேன்... சரியான நேரத்துல அவனைப் போய் என்னால பிடிச்சுட முடியலே... அது ஒரு கர்ண கொடூரம்... ஆனா, அது என் தப்பே கிடையாது. விசாரணை ஆரம்பமான போதே நான் குற்றவாளி இல்லைனு தீர்க்கமா அறிவிச்சு என்னை விடுவிச்சுட்டாரு, விசாரணை நீதிபதி. அவனோட அம்மா --- ஓஹ்... எத்தனை கருணை! அவங்களும் என் மேல துளியும் தப்பு இல்லேனு சொல்லிய பிறகு... இது... இது... இந்த வக்கிரமான விளையாட்டு எதுக்கு? இது சரியில்லே... இது ரொம்ப ஓவர்!''

அவர் குரல் கம்மியது... உடைந்தது... பிழியப் பிழிய அழ ஆரம்பித்தார்.

ஜெனரல் மார்கரெட் வெராவின் தோளினை ஆறுதலாய் தட்டினார். ''விடு விடு. நாம கேட்ட எதுவும் உண்மையில்லே. 'அவன்' ஒரு பைத்தியக்காரன். மேட்-மேன்! ஆரம்பத்திலிருந்தே, கொம்போட தப்பான... கூரான பக்கத்தைப் பிடிச்சுக்கிட்டு விளையாடறான். பார்ப்போம்.''

சொல்லி விட்டு விறைப்பாய் திரும்பினார். தோள்களை நிமிர்த்திக் கொண்டார்: ''இந்தக் கூத்துக்கு விளக்கம் தேடி தோண்டித் துருவாம அப்படியே விட்டுடறது தான் உத்தமம். இருந்தாலும், என்னைப் பற்றியும் சொல்லிடறேன். உண்மையே கிடையாது... என்னைப் பற்றி அவன் சொன்ன எந்த விஷயத்திலும், உண்மை கிடையாது. ஆர்தூர் ரிச்மண்ட். ஆர்தூர், எனக்கு கீழிருந்த அதிகாரிகளில் ஒருவர். எதிரிகளை வேவு பார்க்கும் வேலையில் அவரை நியமிச்சு அனுப்பியிருந்தேன். கொலை செய்யப்பட்டு விட்டார். உலகப் போரின் சராசரி விளைவு இது. இதை ஆட்சேபித்துக் குரல் கொடுத்தேன். என் பட்டாள வாழ்க்கையில் ஏற்பட்ட தீவிர களங்கம் இது. என்ன செய்ய?''

மார்கரெட் உட்கார்ந்துக் கொண்டார். அதிர்ந்துக் கொண்டிருந்த அவருடைய விரல்கள் மீசையை இழுத்து விடத் துவங்கின. இப்படிப் பேச அவர் எடுத்துக் கொண்ட சிறு முயற்சி அவரை சற்றே உலுக்கிப் பார்த்துள்ளது.

லாம்பர்ட் பேசினான். புதிர்ப் போடப்பட்டவனாய், ''அந்தப் பழங்குடி மக்கள் --- '' என்று துவங்க, ''அவர்களுக்கு என்ன?'' என உடனே மார்ட்ஸன் இடை புக, பிலிப் லாம்பர்ட் ''இசைத்தட்டு சொன்ன கதை உண்மை தான்!'' என்றான் கொஞ்சம் முகஞ்சுளித்து. ''அவங்களை அப்படியே விட்டுட்டேன். என்னைக் காப்பாத்திக்க நான் செஞ்சது... அவ்ளோ தான். புதர் நிறைந்த ஆழமான பகுதி... நானும் சிலரும் கையில கிடைச்ச சாப்பாட்டை அள்ளிக்கிட்டு ஓடிட்டோம்.''

ஜெனரல் மார்கரெட் கண்டிப்பான கடுமையோடு, ''உங்களை நம்பிக் கூடயிருந்தவங்களை நீங்க ஒதுக்கித் தள்ளிட்டீங்க --- பட்டினியாலேயே சாகடிச்சுட்டீங்க?'' என்று கேட்டார்.

லாம்பர்ட், ''வேணும்னே செய்யலைப்பா'' என்றான் விட்டேற்றியாய். ''தன்னைத் தானே காப்பாத்திக்கறது தானே இக்கட்டான நிலையில ஒரு மனுஷன் செய்யும் முதல் வேலை! இந்தப் பழங்குடி காட்டுவாசிங்க சாவைக் கண்டெல்லாம் பயப்படாதுங்க. நகரத்துல வாழும் நம்மள மாதிரியான ஐரோப்பிய அமெரிக்க இந்தியர்களைப் போல சாவுன்னாலே தொடை நடுங்கும் ஜந்துக்கள் கிடையாது, காட்டுவாசிகள்!''

வெரா, உள்ளங்கைகளுக்குள் புதைத்திருந்த தனது தலையை நிமிர்த்தினார். பிலிப்பை முறைத்தபடி கேட்டார்: ''அவங்களை – செத்துப் போகும்படி அப்படியே விட்டுட்டீங்க?''

''செத்தா சாகட்டும்னு விட்டுட்டேன்'' – சொன்னான் லாம்பர்ட்.

வியப்பிலிருந்த அவனது கண்கள், அலறிக் கொண்டிருந்த வெராவின் கண்களை எதிர் கொண்டன.

''ஜான் மற்றும் லூஸியைப் பற்றி நினைச்சுக்கிட்டிருக்கேன்'' என்றான் ஆன்டனி மார்ட்ஸன், விடை தெரியாத கேள்வி ஒன்றினை நினைத்துக் கொண்டிருந்த தொனியில். ''துரதிர்ஷ்டம். ஏத்திட்டேன்.''

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் அமிலத் தன்மையோடு கேட்டார்: ''அவங்களுக்கா அல்லது உங்களுக்கா?''

''எனக்குனு நினைச்சு தான் சொன்னேன். ஆனா, ஸார், நீங்க சொல்றது தான் சரி... ஆமாம் ஸார், அவங்களுடைய கெட்ட நேரம் தான். அது ஓர் அப்பழுக்கற்ற விபத்து. தெருவோரமாயிருந்த ஒரு குடிலிலிருந்தோ... அல்லது அந்தப் பக்கத்தில் எங்கிருந்தோ ஓடி

வந்தாங்க. இதுக்காக என்னுடைய கார் ஓட்டும் உரிமம் ஒரு வருடத்துக்கு ரத்தானது தான் மிச்சம். முட்டாள் தீர்ப்பு.''

''கண்மூடித் தனமா ஓட்டுறதை மாதிரி ஒரு குற்றம் வேறு கிடையாது – கொலைக் குற்றத்துக்கு சமம் அது. உங்களை மாதிரியான இளைஞர்கள், சமுதாயத்துக்கே ஒரு பெரும் கேடு... ஆபத்து'' என்றார் டாக்டர்.

ஆன்டனி தோள்களைக் குலுக்கிக் காட்டினான். ''உங்க ரோடுகள்ல தான் வேகமாகவே போக முடியாதே. ஆங்கிலேயன் சாலைகள்... பைசா பெறாது! அட்டகாசமா வேகத்தைக் கூட்டி ஓட்டவே முடியாது.''

ஒரு கோப்பைக்காக சுற்றும் முற்றும் பார்த்தான்... ஓர மேஜையிலிருந்து ஒன்றை எடுத்துக் கொண்டு பக்கவாட்டிலிருந்த மேஜை நோக்கி நகர்ந்தான்... தானாக கொஞ்சம் விஸ்கியையும் அதன் தலை மேல் சோடாவையும் அதற்குள் ஊற்றிக் கொண்டான்... திரும்பி நின்றுக் கொண்டிருந்த அவன், தனது தோள்கள் வழியே சொன்னான்: ''எது எப்படியோ... அதில் என் தவறு ஒன்றும் கிடையாது. ஜஸ்ட்... ஆக்ஸிடெண்ட்... விபத்து.''

III

பணியாள் ரோஜர்ஸ், உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான். ஓர் உள்ளங்கைக்குள் மற்றதை மாற்றி மாற்றிப் போட்டுப் பிசைந்துக் கொண்டிருந்தான். தணிந்த மரியாதை மிகுந்தக் குரலில், ''நான் ஒரு வார்த்தை பேச அனுமதியுண்டா, ஸார்'' என கேட்டான்.

''ம்'' என்று அனுமதித்தான் லாம்பர்ட்.

தொண்டையைச் சரி செய்துக் கொண்டான் ரோஜர்ஸ். மறுபடியும் நாக்கினைக் காய்ந்து விட்டிருந்த உதடுகளுக்கு மேலே ஓட்டினான்.

''அதில், என்னப் பத்தியும் என் மனைவியைப் பத்தியும் கூட குறிப்பிட்டாங்க, ஸார். ஜெனிபரின் மரணம் குறித்தும். இதுல மருந்துக்குக் கூட உண்மை கிடையாது, ஸார். நானும் என் மனைவியும்,

ஜெனிபர் கடைசி மூச்சினை விடற வரைக்கும் அவங்க கூடவே தான் இருந்தோம். அவங்க எப்பவுமே மோசமான உடல்நிலையில தான் இருந்தாங்க, ஸார்... நாங்க அவங்ககிட்டே வேலைக்கு வந்தது முதல் அப்படித்தான்! அன்னிக்கு ராத்திரி பெரும் புயல் அடிச்சுது ஸார்... அப்போ அவங்க நிலைமை இன்னும் படுமோசமா ஆனது. தொலைபேசி வேலை செய்யலே. எங்களால அவங்களுக்கு சிகிச்சை தர டாக்டரைக் கூட்டிட்டு வர முடியலே. அவரைத் தேடிக்கிட்டு நான் நடந்தே போனேன், ஸார். ஆனா அவர் வரும்போது, காலம் கடந்திருந்தது, ஸார். அவங்களுக்காக உடனடியா என்னவெல்லாம் பண்ண முடியுமோ அத்தனையையும் பண்ணினோம். அவங்க மேலே அப்படி ஒரு பக்தியோட இருந்தோம். யாரை வேணும்னாலும் நீங்கக் கேட்டுப் பார்க்கலாம்... இதைத் தான் சொல்வாங்க. எங்களுக்கு எதிரா ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை கூட உங்களுக்குக் கிடைக்காது, ஸார்.''

உதறிக் கொண்டிருந்த பணியாளின் முகத்தையே சிந்தனையோடு கவனித்துக் கொண்டிருந்தான் லாம்பர்ட். காய்ந்துக் கொண்டே இருக்கும் அந்த உதடுகள்... அவன் கண்களில் பதிந்துக் கிடந்த கிலி... விழுந்து உடைந்த காபி தட்டின் ஓசை இப்போது பிலிப்பின் நினைவுக்கு வந்தது. இதை நினைத்தான் - ஆனால் சொல்லவில்லை. ''அப்படியா?''

ப்ளோர், தனக்கே உரிய அலுவலகத்தனமான விட்டேற்றிக் குரலில் பேசினார்: ''அவங்க மண்டையைப் போட்டதுல உங்களுக்குக் கணிசமா எதுவோ கிடைச்சது போல? ம்?''

ரோஜர்ஸ் இழுத்துப் பிடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். இறுக்கமாய் சொன்னான்: ''நாங்க அவங்களுக்கு ஆற்றிய மனப்பூர்வமான பணிகளை அங்கீகரிக்கும் வகையில, அவங்கப் பரம்பரைச் சொத்துல கொஞ்சத்தை எங்களுக்கு விட்டு வெச்சாங்க. இது எதுக்கு இப்போ?''

லாம்பர்ட் அதற்குள் இடைமறித்து, ''உங்களைப் பற்றி சொல்லவேயில்லையே, ப்ளோர்'' என்றான்!

''என்னப் பற்றி என்ன வேணும்?''

''ஆங்...! உங்களுடைய பெயரும் அந்தப் பட்டியல்ல படிக்கப்

பட்டது, ஸார்!''

ப்ளோரின் முகம் சிவந்தது. ''அந்த லாண்டர் எனும் பெயரைச் சொல்றீங்களா? அது ஒரு வங்கிக் கொள்ளை சம்பந்தப்பட்டது. லண்டன் வணிக வங்கி!''

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் சுழன்று திரும்பினார். ''அது என் நினைவிலிருக்கு. என் கைக்கு அந்த வழக்கு வரலே, ஆனாலும் அது நல்லா ஞாபகமிருக்கு. நீங்க தந்த சாட்சியத்தால, லாண்டர் குற்றவாளினு தீர்ப்பாகி கைது செய்யப்பட்டு தண்டனை அடைஞ்சார். நீங்க தானே அந்த வழக்கைக் கையாண்ட போலீஸ் அதிகாரி?''

''நான் தான்.''

''காலம் பூரா அடிமையா உழைக்கணும் எனும் அறிவிப்போட, அவனுக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது. பிறகு ஒரு வருஷத்துலேயே அவன் இறந்துட்டான்.''

''அவன் அயோக்கியன். அவனே தான் பேங்க் காவக்காரனையும் அடிச்சுப் போட்டவன். வழக்கு, எந்தத் தடங்கலும் இல்லாம அவனுக்கு எதிரா நின்னுது.''

''சாதுர்யமா அந்த வழக்கை நடத்தி வெற்றி பெற்றதற்காக, உங்களுக்குப் பாராட்டு கிடைச்சதே!'' – வார்க்ரேவ் மெதுவாய் குறிப்பிட்டார்.

''பதவி உயர்வு'' – கொஞ்சம் சிடுசிடுப்பாய் இப்படிச் சொன்ன ப்ளோர், ''நான் கடமையைத் தான் செஞ்சேன்'' என்றார்.

லாம்பர்ட் சிரித்தான் - கலகலவென வட்டமடித்து வளர்ந்த சிரிப்பு. ''என்னே... கடமையை நிறைவேற்றும்... சட்டத்துக்கு அடி பணியும்... கூட்டம்...! டாக்டர், நீங்க? தொழில் சார்ந்து வந்திருப்பதா சொன்னீங்க...! இருக்கட்டும்...! தொழில் ரீதியா கடமையில ஈடுபடும் போது நீங்க ஒரு 'தவறும்' செஞ்சிடலையா...?! இருக்கா? தப்பாய் போன ஓர் ஆபரேஷன்? ஹாஹா...?!''

பிலிப்பை வேண்டாவெறுப்பாய் ஓரப்பார்வைப் பார்த்த எமிலி ப்ரெண்ட் அப்படியே கொஞ்சம் தள்ளி அவனிடமிருந்து விலகி உட்கார்ந்துக் கொண்டார்.

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் மிகச் சிறப்பான டாக்டர். சிறந்த நகைச்சுவை ஒன்றைக் கேட்டது போல

தலையசைத்துப் புன்னகைத்துக் கொண்டார்.

''பேசின விஷயம் என்ன என்பதைப் புரிஞ்சுக்க என்னால முடியலே'' என்றார் அவர். ''அது சுழலும் போது சொன்ன பெயர்... என்னை சம்பந்தப்படுத்திக் கிடையாது. என்ன பெயர் அது – க்ளீஸ்? க்ளோஸ்? க்ளாஸ்? ஊஹூம்ப்...! அப்படி ஒரு பெயர்ல நோயாளி வந்ததாகவோ... இல்லே, அந்தப் பெயர் கொண்ட ஒரு மரணத்தோட தொடர்புடையதாகவோ... என்னால நினைவு படுத்தவே முடியலே. இது... எனக்கு ஒரு முழு மர்மம். ரொம்ப நாளைக்கு முன்னாடி நடந்ததா வேற வந்தது. என்னோட ஏதாவது ஓர் ஆபரேஷன் நோயாளியா இருக்கலாமோ..?! அபாயக் கட்டத்துல விழுந்து துடிதுடிக்கும் போது தான் ஆஸ்பத்திரி வாசலையே மிதிக்கிறாங்க --- இந்த நோயாளிகளைச் சொல்றேன். தொண்ணூறு சதம் இப்படித்தான் இருக்கு. பிறகு காப்பாற்றவே முடியாம நோயாளி இறந்துட்டா... அறுவை சிகிச்சை செஞ்ச டாக்டர் தான் கொன்னுட்டதா முடிவு கட்டிடறாங்க.''

பெருமூச்செறிந்தார், மறுப்பாய் தலையசைத்தவாறே!

ஆனால் உள்ளுக்குள் நினைத்துக் கொண்டிருந்தார்:

'குடிச்சிருந்தேன் - ஆமாம், அப்படித்தான். குடிச்சிருந்தேன் - அப்படியே நான் ஆபரேஷன் செஞ்சேன்! நரம்பதிர! கைகள் நடுங்க! நான் தான்ப்பா அவளைக் கொன்னேன்! பாவப்பட்டவ – வயசானவ – கிழவி – குடி மயக்கத்துல தள்ளாடாம இருந்திருந்தா, எனக்கு அந்த ஆபரேஷன் ஒரு சின்ன கொசுக்கடி. என் தொழிலில் 'தொழில் தர்மம்' என்று ஒன்று இருக்கு... அது தான் என் அதிர்ஷ்டம். என் கூட ஆபரேஷன்ல உதவிக் கொண்டிருந்த தாதிக்கு விஷயம் தெரியும் - ஆனா அவ தான் வாயே திறக்கலையே! இருந்தாலும்... கடவுளே... அது என்னை உலுக்கிப் போட்டதென்னவோ உண்மை தான். விழுந்துட்டேன். ஆனா அது பற்றி வேற யாருக்குத் தெரிஞ்சிருக்கும் - அதுவும் இத்தனை வருஷங்களுக்கு அப்புறமா?'

IV

அறை முழுவதும் அமைதி சூழ்ந்திருந்தது. ரகசியமாகவோ அல்லது நேரடியாகவோ... அனைவரும் எமிலி ப்ரெண்ட்டையே கவனித்தனர். அவரிடமிருந்து விளக்கம் எதிர்பார்க்கப்படுவதை அவர் உணர சில நிமிடங்கள் பிடித்தன. குறுகிய அவரது நெற்றியில், புருவங்கள் உயர்ந்து நின்றன. ''நான் ஏதாவது சொல்வேன்னு காத்திருக்கீங்களா? சொல்றதுக்கு என்கிட்டே எதுவும் கிடையாது'' என்றார்.

''ஒண்ணுமில்லையா, ப்ரெண்ட்?'' என்று கேட்டார் ஜஸ்டிஸ்.

''ஒண்ணும் கிடையாது'' - அவரது உதடுகள் பூட்டப்பட்டவை போல் இறுகிக் கொண்டன.

வலப்பக்க முகத்தை ஆட்காட்டி விரலால் தட்டிய வண்ணமிருந்த ஜட்ஜ், ''உங்க மீதான குற்றச்சாட்டை மறுப்பதை... தள்ளி வைக்கிறீங்களா?''

ப்ரெண்ட் வெளிப்படையாய் சொன்னார்: ''குற்றச்சாட்டினை மறுப்பது போன்ற நீதிமன்ற வார்த்தைகளுக்கு எல்லாம் என்னைப் பொறுத்த வரைக்கும் இடமில்லே. எப்போதுமே --- என் மனச்சாட்சி எதைச் செய்னு சொல்லுதோ அதன்படி நடந்தே வாழ்ந்தவள் நான். என்னை நானே நொந்துக் கொண்டு வருந்தும் எதுவும் என் வாழ்க்கையில கிடையாது.''

திருப்தியற்ற நிலைமை அங்கு உருவானது. ஆனால், சுற்றிவர இருப்பவர்கள் நினைப்பவற்றால் அடித்துச் செல்லப்படுபவர் அல்ல, எமிலி ப்ரெண்ட். வளைந்துக் கொடுக்காமல் உட்கார்ந்திருந்தார் அவர்.

ஒரிரு முறை தனது தொண்டையைச் செருமிக் கொண்டார் நீதிபதி. பலனில்லை. பிறகு பேசினார்: ''இந்த நிலையில நமது விசாரணை வந்து நிக்குது. இப்போ... ஹேய்... ரோஜர்ஸ்...! நாங்க எல்லோரும், நீ, உன் மனைவி... இந்த நபர்களைத் தவிர இந்தத் தீவில் வேற யாரெல்லாம் வசிக்கிறாங்க?''

''வேற யாரும் கிடையாது, ஸார். வேற யாருமே கிடையாது.''

''நல்லா தெரிஞ்சு தான் சொல்றியா?''

''நல்லா தெரியும், ஸார்.''

''உனக்கும் எங்க யாருக்கும் தெரியாத அந்த முதலாளி... நம்மை எல்லாம் என்ன காரணத்துக்காக இங்கே ஒண்ணா அழைச்சு நிக்க வெச்சிருக்கான்னே எனக்கு இன்னும் பிடிபடலே. இத்தனை பேசியாச்சு. பிரயோஜனமில்லே. ஆக, என் அபிப்ராயப்படி... நம்மை அழைச்ச அந்த 'எவனோ'... 'அவன்'... நிச்சயம் புத்தி சுவாதீனமில் லாதவன் தான்.

அதனால --- அவன் மிக ஆபத்தானவனா கூட இருக்கலாம். என்னைக் கேட்டா, எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரத்துல, நாம எல்லாரும் இந்த இடத்தை விட்டுக் கிளம்பி றது தான் உசிதம். இன்னிக்கு ராத்திரியே நாம எல்லாரும் காலி செஞ்சுடணும்னு கூட சொல்வேன். இதுல அத்தனை அவசரம் இருக்கு.''

''மன்னிக்கணும், ஸார்'' என்றான் ரோஜர்ஸ். ''தீவுல தற்சமயம் ஒரு படகும் கிடையாது, ஸார்.''

''ஒண்ணு கூடவா கிடையாது?''

''இல்லை, ஸார்.''

''அப்போ எப்படி கடற்கரை பகுதியோட தொடர்பு வெச்சுக் கிறீங்க?''

''ஃப்ரெட் மூலமா, ஸார். அவன் ஒவ்வொரு நாள் காலையும் வருவான். ரொட்டி, பால், தபால் எல்லாம் கொண்டு வருவான். மறுநாளைக்கு என்ன வேணும்னு பட்டியல் வாங்கிக்கிட்டு கிளம்புவான்.''

''அப்படினா... நாளைக்குக் காலைல ஃப்ரெட் படகுல வந்ததும் எல்லாரும் அவன் கூடவே கிளம்பிடலாம்.''

கோரஸாக அனைவரும் ஒப்புக் கொள்ள, ஒரே ஒரு குரல் மட்டும், மாறுபட்டக் கருத்தோடு உயர்ந்தது. பெரும்பான்மையோடு ஒத்து வராது விலகி நின்றது, காளை ஆன்டனி மார்ட்ஸன்.

''விளையாடிப் பார்க்காம இப்படியா...? ம்...?'' என்றான் அவன். ''எலி பிடிக்கும் பூனையா, நம்மை மர்மத்துல தள்ளியுள்ள இந்த சமாச்சாரத்தைக் கவ்விப் பிடிச்சு எறியாம கிளம்புவதாவது? இது முழுக்க ஒரு சூப்பர்ப் மர்மக் கதை போல இருக்கு. சந்தேகமில்லாம...!

யெஸ் இருக்கையின் நுனி வரை இழுக்குது.''

ஜட்ஜ் அமிலமாய் கதறினார்: ''நீ சொல்ற மாதிரியான மர்மக் கதை விளையாட்டுக்கெல்லாம் என் வாழ்க்கையில நான் எப்போதுமே துணிஞ்சதில்லே.''

விடாப்பிடியாய் ஆன்டனி சொன்னான்: ''நீதிமன்ற வாழ்க்கை ஒரு நாற்காலியில முடிஞ்சுடும். ஒரு துடிப்போ... வீரியமோ... அதுக்குக் கிடையாது. எனக்கு த்ரில் வேணும். அது இப்போ வசமா அகப்பட்டிருக்கு.''

சொல்லி விட்டு, கையிலிருந்த விஸ்கி கோப்பையை உதட்டுக்குக் கொண்டு போனான். முழுக்க இருந்தது. அத்தனையையும் ஒரே மடக்கில் குடிக்கலானான்.

ரொம்ப வேகமாக. ஆமாம் - மிக விரைவாக. தொண்டை அடைக்க இறுமினான் ஆன்டனி – மூச்சுக் காற்றுக்காக படு மோசமாக திணறினான். முகம் உருமாறி திருகி... உச்ச சிவப்பாகியது. காற்றைத் தேடித் தேடித் தவித்தான்; பின் சட்டென ஓய்ந்தான். கையிலிருந்த கண்ணாடிக் கோப்பை கட்டுப்பாடு தவறி வழுக்கி விழும் அளவுக்கு, நாற்காலியிலிருந்து நழுவி கீழே சாய்ந்தான்.

அத்தியாயம் 5

I

நடந்தது, திடீரென்று... யாரும் துளி கூட எதிர்பார்த்திராத ஒன்றாய் இருந்ததால், இது ஒவ்வொருவரையும் மூர்ச்சைக்குள்ளாக்கியது. ஒரு மூட்டையாய் தரையில் விழுந்துக் கிடந்த உருவத்தைப் பார்த்தபடி அனைவரும் செய்வதறியாது மதியிழந்து நின்றனர்.

இதில் துள்ளியெழுந்தது டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் தான். ஆன்டனி வரை விரைந்து சென்று அவனுக்குப் பக்கத்தில் முட்டியிட்டு அமர்ந் தார். நிமிர்ந்து எழுந்த போது, அவருடைய கண்கள் பீதியில் அறையப் பட்டிருந்தன.

பேயறைந்த குரலில், சத்தற்று சொன்னார்: ''என் தெய்வமே! இவர்... இறந்துட்டார்.''

இது ஒருவர் காதிலும் விழவில்லை. ஒருவரால் ஏற்றுக் கொள்ளவே முடியாத ஒன்று சொல்லப்பட்டாலும் அது அறிவுக்குள் நுழையாதல்லவா!

இறந்துட்டார்? இறந்துட்டார்? ஆரோக்கியத்தின் உச்சத்திலும் இளமை சிருங்காரத்தின் உச்சாணிக் கொம்பிலும் இருந்த அந்த மன்மத ராசா... ஒரு கணத்தில் ஒடிக்கப்பட்டு விட்டார்... இல்லையா? இளமை வீரியத்திலிருக்கும் நோயற்ற எந்த இளைஞனும், இப்படி ஒரு சோடா விக்கலுக்காக இறப்பது கிடையாது.

'ம்ம்... கிடையாது...!' - அவர்களால் சொல்வதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

இறந்துக் கிடந்த வாலிப எல்லையின் முகத்தருகே தனது தலையை நீட்டி நெருங்கி, டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் ஆழ்ந்து ஊடுருவிப் பார்க்க லானார். நீலம் பாய்ந்து இழுத்து சுழித்திருந்த ஆன்டனியின் உதடுகளை அருகாமையில் ஆராய்ந்து மோப்பம் பிடித்தார். பின், ஆன்டனி மார்ட்ஸன் எந்தக் கோப்பையிலிருந்து விஸ்கி அருந்தினானோ அதனைக் கையிலெடுத்தார்.

''இறந்துட்டானா? என்ன சொல்றீங்க டாக்டர்... அவன் ஒரு விக்கல் விக்கினதால இறந்துட்டான்னா சொல்றீங்க?'' – ஜெனரல் மார்கரெட்

டிடமிருந்து முதல் அசைவு வந்தது.

''அதை விக்கல்னு சொல்ல விரும்பினா நீங்க அப்படியே சொல்லிக்கலாம்'' என்று கோப்பையைப் பார்த்தபடியே பதில் தந்தார் மருத்துவர். ''ஆன்டனி இறந்திருப்பது – ஆஸ்ஃபிக்ஸியேஷனால். நேரடி மரணம். ரத்தத்தில் மளமளவென பிராண வாயு சிதைந்து வெறும் கரியமில வாயு மட்டுமே நிறைந்து, மூச்சைத் திணறடித்து மரணம் சம்பவிக்கும் நிலை.''

இப்போது கோப்பையை முகர்ந்தார் ஆர்ம்ஸ்ட்ராங். அதனடியில் கிடந்த படிமங்களின் மீது, தனது விரல் நுழைத்துத் தொட்டார். பிறகு மிக மிக எச்சரிக்கையாக அவ்விரலின் நுனியினைத் தனது நுனி நாக்கால் துளியூண்டு தொட்டுப் பார்த்தார்.

அவரது முக பாவம் இன்னும் கடுமையாக மாறியது.

ஜெனரல் மார்கரெட் ''விக்கலினால் வலிப்பு ஏற்பட்டு ஒருவன் இறந்து விடலாம் என்று இது வரை கேள்விப்பட்டதே கிடையாது'' என்றார் விடாமல்.

எமிலி ப்ரெண்ட், தத்துவக் குரலெடுத்து தெளிவாய் சொன்னார்: ''வாழ்ந்துக் கொண்டிருக்கும் உயிர்ப்பின் துள்ளலோடே... இறந்தும் போகிறோம், கணத்தில்.''

ஆர்ம்ஸ்ட்ராங் நிமிர்ந்து நின்றார். பேசுவோரின் கருத்துகளுக்கு மரியாதை தராதவராய் ''ஒரு மனிதன் வெறும் விக்கலினால் ஏற்படும் வலிப்பால் இறப்பது கிடையாது... இப்போ தானே சொன்னேன்!'' என்று திடுதிப்பென்று குறிப்பிட்டார். ''மார்ட்ஸனின் மரணம் - நாம வழக்கமா குறிப்பிடும்படியான ஓர் இயற்கை மரணம் கிடையாது.''

''அப்படினா...?'' என குசுகுசுவென வெரா கேட்டார்: ''அதுல – விஸ்கியிலே – ஏதாவது – இருந்ததா?''

ஆர்ம்ஸ்ட்ராங் ஒப்புக் கொண்டு தலையசைத்தார். ''ஆமாம். அது என்னனு சட்டுனு சொல்ல முடியலே. இங்கு நடந்துள்ள எல்லாமே... அது ஏதோ ஒரு சயனைடா இருக்கலாம்னு சுட்டிக் காட்டுது. ப்ரூஸ்ஸிக் எனும் அமில வாசனைத் தனிப்பட்டு தெரியலே... ஆகவே பொட்டாஷியம் சயனைடா இருக்கலாம். இது - தாமதமே இல்லாம உட்கொண்ட கணத்துல கதையை முடிக்கும்.''

ஜட்ஜ் கூர்மையாய் கேட்டார்: ''அது அவனுடைய கோப்பையில

இருந்ததா?''

''ஆமாம்.''

டாக்டர், நீண்ட அடிகள் எடுத்து வைத்து, கோப்பைகள் வைக்கப் பட்டிருந்த மேஜைக்கு, ஓட்டமும் நடையுமாய் விரைந்தார். விஸ்கியை மூடியிருந்த அடைப்பானைத் திறந்து அதனை முகர்ந்து பார்த்தார். கொஞ்சம் சுவைக்கவும் செய்தார். பிறகு இவ்வாறே சோடாவையும் பரிசோதித்தார். தானாக தலையை மறுத்து அசைத்துக் கொண்டார். ''இது ரெண்டும் சரியா தான் இருக்கு.''

லாம்பர்ட் கேட்டான்: ''அப்போ என்ன சொல்றீங்க? அந்த விஷத்தை அவராவே அவருடைய கோப்பையில போட்டுக்கிட்டு இருக்கணும்னா? ஆங்?''

விளக்க முடியாத அதிருப்தி நிறைந்து, ஆம் என தலையசைத்தார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். சொன்னார்: ''அப்படித் தான் இருக்கு.''

''தற்கொலையா? ஆஹ்ஹா?'' என்ற ப்ளோர், ''அப்படி நினைக்கிறது பைத்தியக்காரத் தனமா இல்லே இருக்கு!'' என்று விட்டு, ''இருந்தாலும்!'' என சிந்தனையாய் பார்த்தார்.

வெரா அதே முணுமுணுத்த குரலில் பேசினார்: ''ஆன்டனி தன்னைத் தானே அழிச்சுப்பார்னு யாராலும் நினைச்சுப் பார்க்கக் கூட முடியாது. அவர் - ஓஹ் - அவருக்குள்ளே அத்தனை கொண்டாட்டமா இருந்தார், தெரியுமா! இன்னிக்கு சாயங்காலம் அந்த மலையைக் குடைஞ்சுக்கிட்டு அவர் கார் ஓட்டிக்கிட்டு வேகமா வந்த போது, அந்த இளமைத் துடிப்பு...! ஆஹ்... அப்போ அவர் எப்படியிருந்தார்னா... அதாவது... ஓஹ்... என்னால விளக்க முடியலே.''

ஆனால், அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது மற்றவர்களுக்கு புரிந்தது. துடிப்பு - உயிர்ப்பு - துள்ளல் - அது தான்... ஒரு 'வாழ்க்கை'! இளமை மற்றும் ஆண்மையின் விறைப்பு நிறைந்த உல்லாச உச்சம். குறைவற்ற பதினாறு வயது சொர்க்கம். கரையான் அரிக்க இயலாத தேக்காய் அப்போது தெரிந்தான் அவன். அவன் மறையக் கூடியவனே அல்ல என்றே அனைவரும் அப்போது ஒரு சேர எண்ணியிருந்தனர். ஆனால் இப்பொழுது, குவித்து... ஒரு மூட்டையாய் தரையில் முடிந்து... வீழ்ந்துக் கிடக்கிறான்.

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்: ''இதுல – தற்கொலை தவிர வேற

ஏதாவது சாத்தியக் கூறு தென்படுதா?''

ஒவ்வொருவரும் சன்னமாய் மறுத்துத் தலையசைத்தனர். இதற்கு வேறு ஒரு விளக்கம் தர வாய்ப்பு கிடையாது. வேறெந்த சாட்சியமும் பக்கத்தில் இல்லை. அவனாகவே விஸ்கி மேஜைக்குப் போய் அவன் தானாகவே மது பானத்தை ஊற்றிக் குடித்ததை இங்கிருக்கும் ஒவ்வொருவரும் பார்த்திருக்கின்றனர். இதிலிருந்து --- கோப்பைக்குள் சயனைட் போன்ற எந்த சனியன் இருந்தாலும், அதனை, அவனேதான் கலந்திருக்க வேண்டும் என்பது ஒன்றே சாத்திய முடிவாகின்றது.

இப்படியே இருந்தாலும் - என்ன காரணத்துக்காக ஆன்டனி மார்ட்ஸன் தற்கொலை செய்துக் கொள்ள முன் வந்திருக்க வேண்டும்?

ப்ளோர் சிறு சிந்தனையோடு சொன்னார்: ''இதோ பாருங்க டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்... இந்த முடிவு எனக்கு சரியாப் படலே. இதே கோணத்துல மட்டுமே நாம பார்க்கக் கூடாது. ஆன்டனி மார்ட்ஸன் ஒரு தற்கொலை கிராக்கினு என்னால முத்திரை குத்த முடியாது... ஆமாம்!''

ஆர்ம்ஸ்ட்ராங் இதற்கு பதில் தந்தார்:

''நான் ஒத்துக்கறேன்.''

II

விவாதத்தை அனைவரும் அப்படியே விட்டனர். வேறு என்ன இருக்கிறது, இன்னும் இதைப் பற்றி விவாதிக்க?

ஜடமாய் போய் விட்ட ஆன்டனி மார்ட்ஸனின் உடலினை ஆர்ம்ஸ்ட்ராங்கும் லாம்பர்டுமாய் சேர்ந்து தூக்கி அவருடைய படுக்கை அறைக்கு எடுத்துச் சென்று போட்டார்கள். அருகிலிருந்த போர்வை ஒன்றினால் முகம் உட்பட மூடினார்கள்.

திரும்பி இருவரும் கீழ்த்தளம் வந்தடைந்த போது, சிறு சிறு குழுக்களாக எல்லோரும் நின்றுக் கொண்டிருந்தனர். அவர்களனைவரிடமும் சிறு நடுக்கம் இருந்தது - இரவு அதிகம் குளிராய் இல்லாத போதிலும்.

''எல்லாரும் படுக்கப் போகலாம்'' என்றார் எமிலி ப்ரெண்ட்.

''அகாலமாயிடுச்சு.''

நள்ளிரவைக் கடந்திருந்தது; எமிலியின் ஆலோசனை புத்திசாலித் தனமானது தான் - இருந்தாலும் ஒவ்வொருவரும் தயங்கினர். ஒருவரை விட்டு மற்றவர் விலகாமல் இருந்தால் தான், வியாபித்துள்ள பயம் குறையும் என்பது போல ஒருவரையொருவர் சார்ந்து நின்றுக் கொண்டிருந்தனர்.

''சரி தான்'' என ஆமோதித்த ஜஸ்டிஸ், ''நாம கொஞ்ச நேரம் தூங்கி ஆகணும்'' என்றார்.

''நான் இன்னும் சமையலறையை ஒழிக்கலேயே'' என்று ரோஜர்ஸ் உடனே சொன்னதற்கு, ''ப்ச்... காலையிலே பண்ணிக்கய்யா'' என்று லாம்பர்ட் வெடுக்கென்று பதில் தந்தான்.

ஆர்ம்ஸ்ட்ராங், ''உன் மனைவி சரியா இருக்காளா?'' என அவனைக் கேட்டார்.

''போய் பார்த்துட்டு வரேன், ஸார்'' என்றான் ரோஜர்ஸ்.

சில நிமிடங்களில் திரும்பிய அவன், ''தூங்கும் தேவதை போல இருக்கா, ஸார்'' என்றான்.

''நல்லது'' என்றார் டாக்டர். ''அவளைத் தொந்தரவு செய்யாதே.''

''மாட்டேன், ஸார். சமையலறையில கன்னா பின்னானு கிடப்ப வற்றை மட்டும் ஒரு ஓரமா எடுத்து வெச்சுட்டு... கதவு ஜன்னலை யெல்லாம் சரியா தாழ்ப்பா போட்டாச்சானு பார்த்துட்டு வந்துடறேன், ஸார்.''

சொல்லி விட்டு வரவேற்பறையைக் கடந்து சமையலறைக்குள் நுழைந்தான் அவன்.

மற்றவர்கள் மாடி நோக்கிக் கிளம்பினர் - அது, துளியும் விருப்பமற்று மெதுவாய் ஊர்ந்த ஓர் ஊர்வலம்.

இது மட்டும் ஒரு பழைய வீடாயிருந்திருந்தால் --- கிரீச் கிரீச் என சப்தமிட்டு ஆடும் கதவுகள், ஜன்னல்கள், கரும் நிழல்கள், இடை யிடையே கதவுப் பலகைப் போட்டு பிரிக்கப்பட்ட மர்ம அறைகள் --- இவையெல்லாம் சேர்ந்து ஒரு வித அமானுஷ்ய பயம் தானாகவே உருவாகி அதிகரித்திருக்கும். ஆனால், இந்த வீடோ... நவநாகரீக ஆடம்பரத்தின் பிழிந்தெடுத்த சாறு! இருட்டு மூலைகளுக்கு இங்கு இடம் கிடையாது... மறைவாய் உருவாக்கப்பட்டிருந்த தடுப்பு

அறைகள் இல்லை... வீடு முழுவதும் மின் விளக்குகளின் ஒளியால் தகதகத்தது... எல்லாமும் புதியவை... மெருகு குறையாதவை... பளபளப்பானவை...! இந்த வீட்டுக்குள் எவ்வித ஒளிவு மறைவும் கிடையாது. ரகசியமாய் ஏதுமில்லை. கிலி இறுக்கம் துளியும் இல்லை.

ஏனோ தெரியவில்லை... இதுவே, எல்லாவற்றையும் விட உச்சகட்ட பயமுறுத்தும் அம்சமானது.

முதல் தள வராண்டாவில் அனைவரும் இரவு வணக்கம் தெரிவித்துக் கொண்டனர்; அவரவர் அறை நோக்கி ஒவ்வொருவரும் நகர்ந்தனர்; ஒவ்வொருவரும், இயந்திரத்தனமாக, அவர்களை அறியாமலேயே, இப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே, அறைக் கதவினைப் பூட்டிக் கொண்டனர்...

III

இள நிற வர்ணத்தால் சுவரெங்கும் சாயம் பூசப்பட்டு மிருதுவான உணர்வினைத் தூண்டிய தனது படுக்கை அறையில், ஜஸ்டிஸ் வார்க்ரேவ், உடுத்தியிருந்த உடுப்புகளைக் களைந்து விட்டு, படுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

அவர், எட்வர்ட் ஷெல்ட்டனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார்.

ஜஸ்டிஸுக்கு ஷெல்ட்டனை நன்றாகவே நினைவிருந்தது. அவனுடைய குதித்தெழும் வெண்ணிறக் கேசம், அவனுடைய பிரத்யேக நீல விழிகள், 'ஒளிவு மறைவற்ற திறந்த புத்தகம் நான்!' என்பது போல் எதிரிலிருப்பவரைக் கண்ணோடு கண் பொருத்தி மிருது வாய் பார்த்து அப்படியே ஊடுருவி விடும் அவனுடைய தனிப்பட்ட குணாதிசயம்! இது தான்... இந்தக் குணமே தான்... இவன் ஒன்றும் தெரியாத அப்பாவி எனும் பதிப்பினை ஜூரி எனப்படும் விசாரணைக் கமிட்டியிடம் உண்டு பண்ணித் தந்தது.

அரசு வக்கீல் லெவலின், வழக்கினை அவலட்சணமாய் கையாண்டு விட்டார். உணர்ச்சி வேகத்தில் அவசரப்பட்டு விட்டார்... தீவிரமாய் காட்டிக் கொண்டு நிறைய நிறைய நிரூபிக்க அலை பாய்ந்தார்.

ஆனால், மாறாக, அந்த மேத்யூஸ்... அவர் ஸ்மார்ட்! அவர் முன் வைத்த ஒவ்வொரு சாட்சிகளும் அவையாகப் பேசின... மேத்யூ பேச வேண்டியிருக்கவில்லை... அத்தனை வலு! அவருடைய குறுக்கு விசாரணை ஒவ்வொன்றும் சொல்லிச் சொல்லி அடித்தன. விசாரணைக் கூண்டிலிருந்த கட்சிக்காரரைப் பொத்திப் பாதுகாக்க அவர் கையாண்ட லாவகம், முதிர்ச்சியின் எல்லை!

குறுக்கு விசாரணை எனும் மிகக் கடினமான பலப்பரீட்சையை லகுவாகத் தேறினான் ஷெல்ட்டன். எந்தவொரு கட்டத்திலும் அவன் பதறவில்லை... பதற்றமடையவில்லை... அலட்சியமாய் காட்டிக் கொண்டு ஆடவில்லை! அவன் மீது பச்சாதாபம் உருவாகி நிலைத்தது.

ஜட்ஜ் அணிந்திருந்த கைக்கடியாரத்தைக் கழற்றி படுக்கைக்கு அருகில் பத்திரமாய் வைத்துக் கொண்டார்.

வழக்கு நெடுகிலும் நீதிபதியாய் உட்கார்ந்துக் கொண்டிருந்த இருந்த தனது அனுபவம், வார்க்ரேவுக்கு இன்னும் மறக்கவில்லை... நினைவிலிருக்கின்றது! வழக்கு நகர்வதை உன்னிப்பாய் கவனித்தது, குறிப்புகளை விடாமல் பதிந்தது, வக்கீல்களின் விசாரணைத் திறமைகளை மெச்சியது, குற்றவாளிக்கு எதிராக சொல்லப்பட்ட துரும்பு போன்ற சின்னஞ்சிறு சாட்சியத்தைக் கூட சிதற விடாமல் பத்திரப் படுத்திக் கொண்டது...!

இவ்வழக்கினை நிஜமாய் கொண்டாடியிருக்கிறார், இவர்! மேத்யூஸ் இறுதியாய் பேசிய முடிவுரை – முதல் தர உரை! அவருக்குப் பின்னால் வந்த லெவலினால், நீதிமன்ற அறையில் மேத்யூஸ் உருவாக்கி சுழல விட்டிருந்த ஓர் அற்புத அனுபவத்தை மீறிப் பேச முடியவில்லை.

இரு தரப்பு வக்கீல்களுடைய வாதங்களின் முடிவுரைகளும் முடிந்த பிறகு, ஜஸ்டிஸ் வார்க்ரேவ் எனும் சிம்மத்தின் தீர்ப்பு கூறும் முறை வந்தது...

தான் அணிந்திருந்த பொய்ப் பற்களை ஜாக்கிரதையாகக் கழற்றி, அவற்றை, ஒரு குடுவை நீருக்குள் போட்டார். தொய்ந்து சுருங்கிய உதடுகள் உள்ளடங்கின. இப்பொழுது அது ஒரு குரூர வாய்... குரூரம் மற்றும் இரை தேடி அலையும் பசித்த வாய்!

கண்களை மெல்ல மூடிக் கொண்டே சன்னமாய் சிரித்தார் ஜட்ஜ்.

ஷெல்ட்டன் எனும் வாத்து மடையனைச் சமைத்து விட்டார்;

ஒழிந்துப் போகட்டும்!

சிறு அவதி கொண்ட வயோதிக உறுமலை வெளியிட்டு விட்டு, படுக்கையில் சாய்ந்தார் ஜஸ்டிஸ். அருகிலிருந்த மின் விளக்கினை அணைத்தார்.

IV

கீழே, சமையலறையில், ரோஜர்ஸ், விடை தெரியாத புதிர் ஒன்றினை எதிர்கொண்டவனைப் போல் அப்படியே நின்றுக் கொண்டிருந்தான்.

அவன், அங்கிருந்த வட்ட மேஜையின் மையத்தில், அழகிய ஒரு வட்ட வடிவ கண்ணாடித் தாங்கியில் இருந்த, சில சைனா மனிதர்களின் தொங்கும் பீங்கான் சிற்பங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவன் வாய்க்குள்ளேயே சொல்லிக் கொண்டான்:

'இது ஆச்சரியம்! சாமி சத்தியமா எங்கே வெச்சும் சொல்லுவேன்... இதுல மொத்தம் பத்து ஆசாமிங்க இருந்தாங்க.'

V

ஜெனரல் மார்கரெட், இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாய் சுண்டி விட்டவரைப் போல அல்லாடிக் கொண்டிருந்தார்.

தூக்கம் அவருக்கு வரவில்லை.

இருட்டிலும், ஆர்தூர் ரிச்மண்ட்'டின் முகத்தினை அவர் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆர்தூரை நேசித்தார் மார்கரெட் - எத்தனை ஆழமாய் முடியுமோ

அத்தனை ஆழமாய் நேசித்திருக்கிறார்.

லிஸி, முன்னுக்குப் பின்னாகவே பேசும் முரணான குணம் படைத்தவள்... எப்போதும். டா என்றால் டு என்பாள். டு என்றால் டா. மார்கரெட் பிரமித்துப் பேசும் நபர்களில் ஏறத்தாழ அனைவரையும் புறந்தள்ளி விட்டு, அவர்களுக்கு வெறும் வெத்து வேட்டு என்று பட்டம் தந்து விடுபவள் லிஸி. மானாவாரியாக – லிஸிக்கு எல்லோருமே வெத்து வேட்டு!

ஆனால், லிஸி, ஆர்தூரை ஒரு சுவாரஸ்யமற்றவனாய் அளவிட வில்லை. ஆரம்பத்திலிருந்தே இருவரும் நன்றாக ஒத்துப் போனார்கள். பாட்டு... கதை... படங்கள்... என பலவற்றை பற்றியும் இருவரும் பேசித் தீர்த்தார்கள். லிஸி, அவனைக் கிண்டல் செய்திருக்கிறாள்... அவனை மையப்படுத்தி கேலியும் பண்ணியிருக்கிறாள்... அவன் கோபங்கொள்ளுமளவுக்கு காலை வாரி விட்ட தருணங்களும் அநேகம். இந்த மார்கரெட்... இப்படி ஒரு தாயின் பரிவினை லிஸி அவன் மேல் செலுத்துவதை நினைத்த மாத்திரத்திலேயே சிலிர்த்துப் போயிருக்கிறார்.

ம்... தாயின் பரிவு! மண்... மண்...! அவன் இருபத்தியெட்டு என்றும் அவள் இருபத்தியொன்பது என்றும் நினைத்துப் பார்க்காதது எத்தனை அபத்தம்... முட்டாள் தனம்!

மார்கரெட், லிஸியை, நெஞ்சு ரொம்பி வழிய வழியக் காதலித்தார். இப்போது கூட அவளுடைய முகத்தினைப் பிசிறின்றி இவரால் காண முடிகின்றது. அவளது ஆர்ட்டீன் போன்ற இதய வடிவ முகம்... ஆழ்ந்த சாம்பல் நிற தேனிலாடும் திராட்சை விழிகள்... அடர்த்தியும் சுருளும் சேர்ந்து நடனமாடும் கேசக் காடு. மார்கரெட் லிஸியை நெஞ்சு பொங்கி வழியத் தான் காதலித்தார்... அப்படித் தான் அவளும் என்பதில் முற்றிலும் நிச்சயமாயிருந்தார்.

நாடு விட்டு நாடு போன இடத்தில் கூட... அங்கு, பிரான்ஸில்... நரகமாய் பிழிந்தெடுத்த வேலையின் நடுவிலும், மெனக்கெட்டு உட்கார்ந்துக் கொண்டு இதய வடிவ முகத்தையே நினைத்துக் கொண் டிருந்திருக்கிறார் ஜெனரல்... நெஞ்சுக்குப் பக்கத்திலேயே இருக்கும் லிஸியின் புகைப்படத்தை எடுத்து எடுத்து... ரசித்து ரசித்து...!

பிறகு தான் ஒரு முறை – கண்டுபிடித்தார்.

கதைகளில் நடப்பது போலவே... அச்சு அசலாக... ஒரு நாள் எல்லாம் தளந்தொட்டன. தப்பான கவருக்குள் மாற்றி வைக்கப்பட்ட கடிதம். லிஸி இருவருக்கும் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். ஒரு முறை --- ஆர்தூருக்கு எழுதியிருந்த கடிதத்தை ஜெனரலுக்கான முகவரி எழுதிய உறைக்குள் வைத்து விட்டாள். இப்போது கூட... இத்தனை வருடங்கள் கடந்த பின்பும் கூட, அது தந்த அதிர்வினை மார்கரெட்டால் உணர முடிகின்றது... அது, வலி.

கடவுளே... அது, ஜெனரலை வதைத்தது... சிதைத்தது!

இந்த சங்கதி இடைவெளியில்லாது அப்படியே கொஞ்ச நாட்கள் நடந்துக் கொண்டிருந்திருக்கின்றது... கடிதம் இதைத் தெளிவாக்கியது. வார இறுதி நாட்களில். அப்படியானால், சென்ற முறை வார இறுதி இரு தினங்கள் ரிச்மண்ட் விடுப்பு எடுத்தது கூட ...

லிஸி – லிஸியும் ஆர்தூரும்!

துரோகி... கடைந்தெடுத்த அயோக்கியன். திருட்டு சிரிப்பு... அடி பணிந்து சொல்லும் 'யெஸ், ஸார்'... தூ. நாய். வேஷதாரி. அடுத்தவன் மனைவியைத் திருடி சேரும் தெரு நாய்.

மெதுவாகத் தான் அந்த எண்ணம் ஒன்றுதிரண்டு வேரூன்றி கிளை பரப்பியது – ஈவிரக்கமின்றி கொன்றுப் போட வேண்டும் எனும் அந்தத் தீவிர மூர்க்கம்.

வெளியே ஒன்றையுமே காட்டிக் கொள்ளாமல் வழக்கம் போல் இயங்குவதாய் சமாளித்தார் ஜெனரல். ஆர்தூரைப் பொறுத்தமட்டில், அவனுடனான இவருடைய நடவடிக்கைகள் பழையபடி அப்படியே நீடிப்பதாய் உணர்த்த முயற்சி செயதார்.

இதில் ஜெயித்தாரா? இவர் அப்படித் தான் நினைத்தார். ஓரளவு இது சரி தான் - ஆர்தூர் ரிச்மண்ட் சந்தேகிக்கவில்லை தான். இருந்தாலும் மனம் குமுறிக் கொண்டே இருந்ததால் ஒத்துப் போகாத தருணங்கள் விளைவதைத் தவிர்க்க முடியவில்லை. குமுறல்... நரம்புகள் பின்ன... பின்னித் துடிக்க...! அதனை வெளியே தெரியாமல் தவிர்க்க நினைத்து ஆர்தூரிடம் மட்டும் தப்பிக்க... ஆனால் மற்றவர் கண்களில் அகப்பட்டு விட!

ஓரிரு முறை என்னாயிற்று ஜெனரலுக்கு என்று ஆர்வமாய் பார்த்தான் ஆர்மிட்டேஜ். சின்ன பயல்... ஆனால் நல்ல சிந்தனா சக்தி,

அந்தப் பயலுக்கு... கவனித்து விட்டான்.

கற்பனை நிஜமாகும் சரியான அந்த நேரம் வந்த போது – ஆர்மிட்டேஜ் கணித்தே விட்டான்.

ஆர்தூர் ரிச்மண்டை மரண வாய்க்கு அனுப்பி வைத்தார் ஜெனரல். ஏதாவது மாய மந்திரம் நடந்திருந்தால் மட்டும் தான் துளி காயமின்றி ஆர்தூரை மீட்டு வந்திருக்க முடியும். அப்படி ஒரு மந்திரம் இடம்பெற வில்லை. ஆம்... ரிச்மண்டைத் திட்டமிட்டு மூட்டை கட்டி மூச்சில்லாத வனாக்கினார் மார்கரெட். அதற்காக இவர் துளியும் வருந்தவில்லை. மிகச் சுலபமாக காரியம் கை கூடியது – போர் எனும் போர்வைக்குள்! பிழைகள் பல முறை நடந்து விடுகின்றன... சிப்பாய்கள், தேவையற்று மரண வாய்க்குள் ஊட்டப்பட்டு விடுகின்றனர். போரின் முக்கிய விளைவு இது. விஷயம் தெரிய வந்ததும் குழப்பம் உருவாகும்... அதிர்ச்சி ஏற்படும்... இறுதியாய், வீர மரணம் அது இது என்று! பிறகு, நாடே, ''இடிந்துப் போய் விட்டார் ஜெனரல், தெரியுமோ! தனது திறமை யற்ற நிர்வாகத்தால் மிகப் பெரிய தவறு நேர்ந்து விட்டதாய் துடிதுடித்துப் போய் விட்டார்! தன் சேனையிலிருந்த சிறப்பான சிப்பாய் ஒருவனைத் தியாகம் செய்து விட்டதாய் உடைந்து விட்டார்'' என்று பேசி அல்லாடும். வேறென்ன சொல்லி விட முடியும்? திட்டமிட்ட கொலை என்றா? ஆஹா...!

ஆனால் இந்த ஆர்மிட்டேஜ் பயல் வித்தியாசமானவன். இவன், தனக்கு ராணுவ அதிகாரங்கள் தரும் சேனைத் தலைவனையே பொடி வைத்துப் பார்க்க ஆரம்பித்தான். பயலுக்கு... ஒரு வேளை... திரும்பி வரும் சாத்தியமற்ற அந்தக் குறிப்பிட்ட போர்ப் பகுதிக்கு திட்டமிட்டே ஆர்தூர் அனுப்பப்பட்டு, கொல்லப்பட்ட திட்டம்... தெரிந்திருக்குமோ?

ஜெனரல் மார்கரெட், இக்கேள்விக்கு அதிக முக்கியத்துவம் தர வில்லை. தன்னுடைய காதலனுக்காக இடையறாது அழுது தீர்த்தாள் லிஸி... ஆனால் அந்த அழுகை இவர்கள் இங்கிலாந்துக்கு இடம் பெயர்ந்து வந்ததும் நின்றும் மறைந்தும் மறந்தும் போனது. லிஸியின் அந்தரங்கத்தைத் தான் படித்து விட்டதை ஒரு முறை கூட ஜெனரல் சொல்லிக் கொள்ளவில்லை. பிறகு குழப்பமின்றி ஒருவருக்கொருவர் பயணித்தனர். ஆனால் லிஸி மட்டும் பழையபடி ஆகவில்லை... மனம் முழுவதும் ஒப்பி ஈடுபாடாய் குடும்பம் நடத்தாமல்... ஏதோ

இருந்தோம் என்று பெயருக்கு...! இதுவும் அதிகம் நீடிக்கவில்லை. நான்கைந்து வருடங்கள் கழித்து லிஸிக்கு இரட்டை நிமோனியா நோய் ஏற்பட, அவள் இறந்துப் போனாள்.

இதெல்லாம் நடந்து மாமாங்கம் ஆகின்றது... பதினைந்து? பதினாறு வருடங்கள்?

பிறகு ராணுவ வேலையை விட்டு டேவன் கடற்கரையையொட்டி வாழக் கிளம்பி வந்து விட்டார் ஜெனரல். தனிமையான சூழலில் வாங்க வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தது போன்று சிறு இடம் ஒன்றைக் கடற்கரையையொட்டி வாங்கிக் குடியேறினார். அமரிக்கையான அக்கம்பக்கத்தார். இயற்கை கொஞ்சும் உலகின் அற்புத பகுதிகளின் ஒரு வில்லல். பறவை சுடுதல்... படகுச் சவாரி... இப்படிப் போனது பொழுது. ஞாயிற்றுக் கிழமை முழுவதையும் சர்ச்சில் கழித்தார்.

ஒவ்வொருவரும் நட்புறவாடினர். அதாவது, ஆரம்பத்தில். பிறகு, துரித காலத்திலேயே, மக்கள் கூட்டம் தன்னைப் பற்றி தனக்குப் பின்னால் எதையெதையோ பேசிக் கொள்கின்றதோ என்ற ஒரு வித இருப்புக் கொள்ளாத் தன்மை ஜெனரலுக்கு உருவானது. அதே அக்கம்பக்கத்தினர் இவரை... ஏனோ வித்தியாசப் பார்வை பார்க்க ஆரம்பித்தனர். ஏதோ கேள்விப்படக் கூடாத ஒன்றை அவர்கள் கேள்விப்பட்டு விட்டதைப் போல – அடியில் தங்கி விட்ட ஒரு புரளியைக் கிளறி எடுத்து விட்டதைப் போல.

குழம்பினார். அந்தப் பயல் வந்திருப்பானோ? இங்கிருப்போருடன் பேசியிருப்பானோ?

இதற்கு பிறகு மக்களை முழுக்க தவிர்த்தார் ஜெனரல். தனக்குள் தானே சுருங்கிக் கொண்டார். தன்னைப் பற்றியே மற்றவர்கள் ரகசியம் பேசுவதாய் எண்ணியபடி அவர்களுடனேயே பழகுவது அசௌகரியமே.

போகட்டும்... இவையனைத்துமே பழங்கதை... புராணம் போல வயதானவை... இப்போது பேச காரணமற்றவை. லிஸி தூரம் போய் போய், கரைந்தே விட்டாள்... ஆர்தூரும். நடந்த எந்த ஒரு சம்பவமும் இனி வந்து எவ்வித உதவியும் தரப் போவதில்லை.

இப்படிப்பட்ட வாழ்க்கை திருப்பம் ஜெனரலுக்கு கடைந்தெடுத்த தனிமையாய் ஆகிப் போனது. இவருடைய நெருங்கிய பட்டாளத்து

நண்பர்களைக் கூட புறக்கணித்து விலக்கி வைத்தார்.

இந்தப் பயல் மூலமாக பட்டாளத்துக்கு விஷயம் கசிந்து சந்தேகம் துளிர்த்திருந்தால்...?!

விஷயத்தை இப்படிப் பொத்தி வைத்து மறைந்து வாழும் போது --- இன்று --- இப்பொழுது --- இன்று மாலை --- மறைந்திருக்கும் ஒரு குரல், அப்பழங்கதையைப் பறை சாற்றியுள்ளது.

ஜெனரல், அவரது வாழ்க்கையின் கறுப்புப் பக்கங்களை முன் ஜாக்கிரதையோடு தான் கையாண்டாரா? எங்கும் யாரிடமும் இதனைக் கசிய விடாது இறுக மூடிய உதடுகளோடு தான் இருந்துள்ளாரா? தேவையான உணர்ச்சிப் பெருக்கினை – ஆள் மாறாட்டம்... வெறுப்பு... இழப்பு... இத்யாதி, இத்யாதி - கொட்டினாரா? அதில் குற்றவுணர்வு, உள்ளுணர்வு, எதையும் காட்டிக் கொள்ளாமலே வாழ்ந்திருக்கிறாரா? சொல்வது கடினம்.

நிச்சயமாய் இசைத்தட்டு அறிவித்தக் குற்றச்சாட்டினை ஒருவரும் வினையாய் எடுத்துக் கொள்ளப் போவதில்லை தான். மற்றவர்களைப் பற்றியும் வண்டி வண்டியாக கொலைக் குற்றச்சாட்டுக்கள் வந்ததே... நம்புவதற்கு வாய்ப்பே தராமல்! வந்திருக்கும் ஒவ்வொருவருமா கொலை செய்திருப்பார்கள்...?! அந்த கவர்ச்சிப் புயல்... சிறுபிள்ளை ஒன்றினைக் கொன்று விட்டதாய் அல்லவா குற்றஞ்சாட்டப்பட்டது...! முட்டாள் பேச்சு! ஏதோ ஒரு பைத்தியக்காரன்... வாயில் வந்த கொலைக் குற்றங்களையெல்லாம் எதிர்படும் அனைவர் மீதும் வீசிக் கொண்டு அலைகிறான்!

எமிலி ப்ரெண்ட் - சொல்லப் போனால் தற்போது ராணுவத் திலிருந்து விலகி வாழும் தரைப்படைத் தளபதியான டாம் ப்ரெண்டின் உறவு. அவளும் கொலை செய்து இருக்கிறாள்! 'தனக்கு கெடுதல் நினைத்தவருக்குக் கூட நன்மை நினைக்கும் பொண்ணு அது!' என்று கண்ணை மூடிக் கொண்டு சொல்லி விடலாம், எமிலியை! பாதிரியார் போல!

இங்கு நடப்பது முழுக்கவும் விசித்திரமானது – கோமாளித்தனம், ஆமாம், பைத்தியக்காரத்தனம்... இதுக்குக் குறைவா எடை போடவே முடியாது.

எல்லோரும் இங்கு வந்து விழுந்தது முதல் - அது எப்போது?

அடப்பாவமே... இன்று மதியம் தான் வந்திருக்கிறோம்... அதற்குள் மாசம் கடந்து விட்டது போன்ற அயர்ச்சி – குழப்பம் தான்.

'எப்போ இங்கிருந்து கிளம்பப் போறோம்?' – எண்ணிக் கொண்டார் அவர்.

வேறென்று – நாளையே! மோட்டார் படகு கரையிலிருந்து இங்கு வந்து சேர்ந்த மறு கணம்!

இந்த நொடி வரை இங்கிருந்து, இத்தீவிலிருந்து நகரவே கூடாது என்று தான் எண்ணிக் கொண்டிருந்தார். மறுபடியும் கரையேறி --- சிறிய தனது வீட்டுக்குப் போய் முடங்கி --- பக்கத்து வீட்டுக்காரன், அந்தப் பயல் என எல்லா சங்கடங்களையும் நினைந்து, வருந்தி. ம்ம். இங்கிருந்து போகவே கூடாது என்று தானிருந்தார். ஆனால் இப்பொழுது? மாற்று எண்ணம். சிரிப்பான வாழ்க்கை!

அலைகள் பாறைகளில் மோதி உடைந்து வெடித்து எழுப்பும் ஓசை திறந்திருந்த ஜன்னலின் வழியே உள்ளே வர... ஜெனரலால் கேட்க முடிந்தது. இன்று மாலையில் இருந்ததை விட சற்று அதிக ஓசையாய்... வீரிய மோதலாய்... காற்று அதிகரித்துக் கொண்டிருந்தது...

நினைத்துக் கொண்டார்: 'அமைதியான ஓசை... அமைதியான இடம்... ஒரு தீவின் சுகந்த உச்சமே... அங்கு போனால் தான் கிடைக்கும். அது கிடைத்துள்ளது. இனி வேறு ஓர் உன்னத உச்சம் கிடையாது. எல்லாம் கடந்த தளத்திற்கு வந்தாகி விட்டது. ஆ...! ஓசை...! அலையோசை...!'

சட்டென்று அவருக்கு விளங்கியது... அவர் இங்கிருந்து கிளம்பி மறுபடியும் நரக நகரத்துக்குப் போகப் போவதில்லை, என்ன ஆனாலும்...

VI

வேராக்ளேதார்ன் படுக்கையில் கிடந்தார். கண்களிரண்டும் அகலத் திறந்தபடி... விட்டத்தையே வெறித்தபடி!

படுக்கையின் மேலிருந்த விளக்கு போடப்பட்டிருந்தது. இருட்டைக் கண்டால் வெராவுக்கு பயமாயிருந்தது.

'ஹூகோ... ஹூகோ...' – இதையே நினைத்துக் கொண்டிருந்தார். 'நீ எனக்கு ரொம்ப பக்கத்துல வந்துட்டதா... இந்த ராத்திரி இருட்டுல நான் ஏன் நினைக்கணும்? இங்கே எங்கேயோ... ரொம்ப பக்கத்துல... கையருகிலேயே இருக்கிற மாதிரி!'

'உண்மையா எங்கேயிருக்கான் அவன்? எனக்குத் தெரியாது. எப்பவும் அது எனக்கு தெரியவும் வேணாம். அவன் போயிட்டான்... என் வாழ்க்கையை விட்டு, திரும்பி வராம போயிட்டான்!'

எப்படியெல்லாமோ முயன்று ஹூகோவை நினைக்கக் கூடாது என்று முயற்சித்தது – வீணானது. அவன், இவருக்கு மிக அருகிலேயே இருக்கிறான். வெரா அவனை நினைத்தே தீர வேண்டும்... ஞாபகப் படுத்திப் பார்க்க வேண்டும்... அந்த இடம்... கார்ன்வால்... கார்ன்வால்...

பாசி ஏறிய கரும்பாறைகள்... சலித்தெடுத்தாற் போன்ற வழுவழு கடல் மண்... குண்டான திருமதி ஹாமில்ட்டனின் சுத்த மனசு... பிறகு ஸிரில்! சுற்றிக் கொண்டேயிருக்க வேண்டும் பொடியனுக்கு... கூடவே வெரா வேறு வேண்டும்...

''அதோ... கடலுக்குள் இருக்கும் அந்தப் பாறை வரை நான் நீந்திப் போகணும், வெரா. ஏன் தடுக்கறே...? ம்ம்ம்? நான் ஏன் அவ்ளோ தூரம் போகக் கூடாது?''

மேலே நிமிர்ந்தால் - ஹூகோவின் கண்கள். குறி வைத்து இவரையே பார்த்து விழுங்கிக் கொண்டிருக்கும் அந்த ஆண் வேட்கைக் கண்கள்...

அன்று மாலை ஸிரில் படுக்கப் போனதும்...

''வா வெரா. ஒரு சிறு நடை. கடற்கரையை ஒட்டி. வீசும் காற்றோடு காற்றாய். நீயும் நானும் மட்டும்.''

''வரேன்.''

கௌரவமான சிறு நடை கடற்கரையை ஒட்டி நீண்டது. நிலா ஒளி. மிருதுவான அட்லாண்டிக் சமுத்திரக் காற்று.

சற்று தள்ளி தனிமை ஆன போது தான், ஹூகோவின் கைகள் அவளை இழுத்து இறுக்கின.

''ஐ லவ் யூ. ஐ லவ் யூ. உனக்குத் தெரியுமா வெரா? ஐ லவ் யூ!''

ஆமாம். வெராவுக்குத் தெரியும். அல்லது தனக்குத் தெரியும் என நினைத்தாரா? எப்படியோ... தெரியும்.

''நயா பைசா என்கிட்டே கிடையாது... நான் வாழ போதுமான பணம் கூட என்கிட்டே இல்லே. அதனால என்னைக் கலியாணம் பண்ணிக்கோனு உன்னைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனா, வெரா உனக்குத் தெரியுமா... ஒரு முறை... எதிர்காலம் பற்றி அகல கால் திட்ட மிட சந்தர்ப்பம் வந்தது. கை நிறைய பணம் கொட்டும் சந்தர்ப்பம் அது. மூணு மாசம் மட்டும் தான் அது நீடிச்சது வெரா... அப்போ ஸிரில் பிறக்கலே... இவன் பிறந்த மூணாவது மாசம் மெளரீஸ் தவறிட்டா. இவன் மட்டும் பொண்ணா பிறந்திருந்தா ...''

குழந்தை மட்டும் ஒரு பெண்ணாயிருந்திருந்தால், அவளைக் காப்பாற்றிப் பேணி வளர்க்க என்று ஹூகோவின் கைகளுக்கு அனைத்தும் வந்திருக்கும். தனது துரதிர்ஷ்டம் என்றான்... மிக உணர்ந்து.

''அந்த மூணு மாசத்துல அதை வெச்சு நான் ஊரையே வாங்கிடலே. ஆனா, அது ஒரு, அதிர்ஷ்ட வரவு. ஓ... வந்தது அதிர்ஷ்டம்... போனது துரதிர்ஷ்டம்...! போகட்டும். எனக்கு ஸிரில் மேலே பைத்தியம் தெரியுமா...''

நிச்சயமாக. பிள்ளையின் மீது வெறியாய் தானிருந்தான். அவனுடன் விளையாட எப்போதும் தயார். அவனுக்குப் பூச்சாண்டி காட்டி பிரமிப் பூட்ட முகஞ்சுளித்ததே கிடையாது. பணம் போய் விட்டதே என்ற விரோதமோ, குரோதமோ ஹூகோவின் அணுகுமுறையில் என்றுமே இருக்காது.

ஸிரில் ஒரு நோஞ்சான் குழந்தை. வலு கம்மி. சக்தியே கிடையாது. மெலிந்த இளைத்த பலஹீனமான தேகம். வளர்ந்து பெரியவனாவானா என்ற சந்தேகத்தைக் குடும்பத்தாருக்கும் மருத்துவர்களுக்கும் ஒரு சேர கொடுத்துக் கொண்டேயிருக்கும் குழந்தை ரகம் ...

''ஏய் வெரா... என்னை ஏன் அந்தக் கடல் பாறை வரை போகக் கூடாதுனு சொல்றே. நான் அங்கே போய் அது மேல ஏறி நிக்கணும்.''

கையில் ஏறி அரிக்கும் கம்பளிப் போன்று திரும்பத் திரும்ப அரிக்கும் பிடுங்கல்.

''அது ஆழப் பகுதி ஸிரில். ரொம்ப தூரம் வேற.''

''ஆனா, வெரா ...''

வெரா எழுந்தார். எழுந்து வரவேற்பறை மேஜை வரை போனார். மூன்று தலைவலி மாத்திரைகளை விழுங்கினார்.

கொஞ்சம் தூக்க மாத்திரையும் எடுத்துக் கொண்டால் தேவலாம் என்று தோன்றியது வெராவுக்கு. தூக்கம் வரவில்லை. 'நான் ஒரேயடியா போக முடிவு பண்ணிட்டா, வெரோனல் போல தூக்க மாத்திரையைத் தான் அள்ளிப் போட்டுப்பேன்... நோ சயனைட்!' – நினைத்துக் கொண்டார்.

ஆன்டனி மார்ட்ஸனின் திருகி உருக்குலைந்த ரத்த முகத்தினை எண்ணும் போதெல்லாம் வெலவெலத்துப் போனார் வெரா.

திரும்பும் வழியில் அலங்கார அலமாரிக்கு மேலேயிருந்த சட்டம் போடப்பட்ட கவிதை கண்களில் பட்டது.

பத்து சிப்பாய் பையன்கள், விருந்து சாப்பிட போனார்கள்;
ஒருவனின் தொண்டை அடைத்துக் கொள்ள, மிஞ்சினர் ஒன்பது.

'இது கொடூரம் - இன்னிக்கு சாயங்காலம் எங்களுக்கு நடந்தா மாதிரியே' – தனக்குள் சொல்லிக் கொண்டார் வெரா.

எதற்காக ஆன்டனி மார்ட்ஸன் சாகத் துணிந்தான்?

இவருக்கு சாக எண்ணமில்லை.

அப்படி சாக நினைப்பது போல எண்ணிப் பார்ப்பது கூட இவரால் இயலாது.

மரணம் - மற்றவர்களுக்கு மட்டும் ...

அத்தியாயம் 6

I

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் ஆழ்ந்த கனவு கண்டு கொண்டிருந்தார்...

அறுவை சிகிச்சை அறை கடும் வெப்பமாயிருந்தது.

இத்தனை வெப்பத்திலா அறையை வைப்பது? வியர்வை உருண்டு உருண்டு அவர் முகத்தில் வழிந்த வண்ணமிருந்தது. அவரது கைகள் பிசுபிசுத்துப் போயின. அறுப்பதற்கான சிறு ஆபரேஷன் கத்தியைப் பிடிப்பது இனி சிரமம் ...

ஆஹ்... எத்தனை நளினமான கூர்மை இது...

இது போன்ற கத்திகளை வைத்துக் கொண்டு கொலை ஒன்று செய்வது வெகு சுலபம். ஆஹ்... சொல்லப் போனால் ஒரு கொலையைத் தான் அவர் செய்யப் போகிறார்...

கிடந்த பெண்ணின் உடம்பு வேறு மாதிரி தோன்றியது. அது பெரிய சதை மலையாக... நகர்த்தக் கூட முடியாத உடம்பாக இருந்தது. இது அற்பமாய் இளைத்துள்ள ஓர் உடம்பு. முகம் வேறு மறைத்து மூடப் பட்டுள்ளது.

இப்போது இவர் கொல்ல வேண்டியது யாரை?

இவரால் நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை. ஆனால் இவருக்குத் தெரிந்தே ஆக வேண்டும். விடையை அறிய, இவர் செவிலியைக் கேட்க வேண்டுமா என்ன?

செவிலி இடைவிடாது இவரைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். ம்ம்... அவளைக் கேட்க முடியாது. அவளுக்கு சந்தேகம் வந்து விட்டது... இவரால் கணிக்க முடிகின்றது.

ஆனால் இங்கு அறுவை சிகிச்சை மேடையில் கிடப்பது யார்?

மடையர்கள்... இப்படியா முகத்தைப் போட்டு மூடி வைப்பது?

முகத்தைப் பார்த்தால் தான் மேற்கொண்டு வேலையே ...

ஆங்! அப்படி செய் பெண்ணே... அது தான் அழகு. புதுசு போல. பயிற்சி செவிலியாய் இருக்கும். யாராயிருந்தால் என்ன... முகத் துணியை விலக்கியதற்கு நன்றி.

கிடப்பது, எமிலி ப்ரெண்ட். இந்த எமிலி ப்ரெண்டைத் தானே இவர் கொன்றாக வேண்டும். எத்தனை கொடூரங்களை உள்ளடக்கியிருக் கின்றன... இவளின் கண்கள்! அவள் உதடுகள் அசைகின்றனவே... என்ன சொல்கிறாள் அவள்...? வாழ்ந்துக் கொண்டிருக்கும் உயிர்ப்பின் துள்ளலோடே... இறந்தும் போகிறோம், கணத்தில்.

அவள் இப்போது சிரிக்கிறாள். ம்ம்... நர்ஸ் வேண்டாம்... மறுபடியும் துணியை மூடாதே. நான் அவளைப் பார்த்தாக வேண்டும். 'சிகிச்சை' தந்தாக வேண்டும். மயக்க மருந்தினைச் செலுத்த வேண்டும் - உடனே. மயக்க மருந்து இத்தர் எங்கே? ச்சே... வரும்போது கையோடு அதை நான் எடுத்து வந்திருக்கணும். இத்தரை எங்கே வைத்துள்ளாய், நர்ஸ்... ம்... அது போதும்... அது போதும்...

இப்போது சீக்கிரமாய் மூடிய அந்தக் கைக்குட்டையை அகற்று, நர்ஸ்.

ஓஹ்...! இவனை எனக்கு நன்றாய் தெரியுமே...! இது, ஆன்டனி மார்ட்ஸன். இவன் முகம் ஏன் இப்படி ரத்தக் களறியாகி... திருகி... அஷ்ட கோணலாகி விட்டது? ஆனால் அவன் சாகவில்லை – சிரிக் கிறானே. இவனும்! நான் சொல்கிறேன், உங்களனைவருக்கும் - இத்தனைக்கும் மேல் இவன் சிரித்துக் கொண்டிருக்கிறான் - ஓ... அறுவை சிகிச்சை மேடையே அசைந்து ஆடுமளவுக்கு!

நிறுத்தப்பா... நிறுத்து... போதும்... ஓஹ்... ஏனிப்படி ஆடுகிறாய்? ஓ... நர்ஸ்... மேஜையைப் பிடி... ஆ... கவிழ்ந்து விடும் போலுள்ளதே! ஆ... இதென்ன கட்டிடமே ஆடுவது போலுள்ளது...? ஆ!

தூக்கி வாரிப் போட்டு விழித்துக் கொண்டார் டாக்டர். விடிந் திருந்தது. சூரிய ஒளி அறைக்குள் கொட்டிக் கொண்டிருந்தது.

மேலும் - யாரோ ஒருவன் அவரது முகம் வரை வந்து வளைந்து நின்றுக் கொண்டிருந்தான் - இவரை உலுக்கிக் கொண்டுமிருந்தான். அது – ரோஜர்ஸ். ரோஜர்ஸ், வெளிறி அலறிப் போயிருந்த முகத்தோடு அழைத்தான்: ''டாக்டர் - டாக்டர் - டாக்டர்.''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் முழுவதுமாக விழித்துக் கொண்டார். எழுந்து மெத்தையில் அமர்ந்தார். ''என்ன விஷயம்?'' என்று கேட்டார் கூர்மையாய்.

''என் பொண்டாட்டி விஷயமா, டாக்டர். அவளை விழிக்க வைக்க

என்னால முடியலே. கடவுளே! அவளைக் கண் விழிக்க வைக்க முடியலே, டாக்டர். அ...அ...அவ நிலைமை... அவ நிலைமை எனக்கு சரியா படலே.''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் துரிதமானார்... சாமர்த்தியமாய் இயங்கினார். கலைந்திருந்த இரவு உடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு ரோஜர்ஸைப் பின் தொடர்ந்து விரைந்தார்.

ஒரு பக்கமாய் ஒருக்களித்து அமைதியின் விளக்கமாய் படுக்கையில் கிடந்த திருமதி ரோஜர்ஸை நெருங்கி குனிந்தார் ஆர்ம்ஸ்ட்ராங். குளிர்ந்துப் போய் விட்டிருந்த கையைப் பிடித்துத் தூக்கினார்... மூடியிருந்த கண்ணிமைகளையும் விரித்துப் பரிசோதித்தார். உடையை சரி செய்தபடி டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் படுக்கையினின்றும் விலகி நிமிர சில நிமிடங்கள் ஆகின.

ரோஜர்ஸ் ஒலியற்று கேட்டான்: ''அவளுக்கு... அவளுக்கு ஒண்ணு மில்லையே...? அ...வ...ளு...க்...கு... ஏதாவது...?''

கேட்டு விட்டு உலர்ந்த உதடுகளை ஒரு முறை நாக்கால் தடவி ஈரப்படுத்தினான்.

ஆம் என தலையசைத்து உணர்த்தினார் ஆர்ம்ஸ்ட்ராங். ''ஆமா... அவ போயிட்டா.''

சொன்ன டாக்டரின் கண்கள், எதிரேயிருந்த கணவனின் மீது சிந்தனையோடு பதிந்தன. இருவருமாய் சேர்ந்து அருகிலிருந்த ஒரு மேஜை வரை சென்றனர்... பின், அங்கிருந்த கை கழுவும் தொட்டி வரை... பிறகு திரும்பி, நீண்டு தூங்கிப் போய் விட்ட பெண்ணிடம்.

''என்...ன இது... என்...ன இது?'' என்றான் ரோஜர்ஸ்.

இதற்கு பதிலளிக்க ஓரிரு நிமிடங்கள் ஆக்கினார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். பிறகு ''சாதாரணமா இவளோட ஆரோக்கியம் எப்படி இருக்கும்?'' என கேட்டார்.

''மூட்டு வலி கொஞ்சம் இருக்கும்.''

''சமீபத்துல யாராவது டாக்டர் இவளுக்கு சிகிச்சை தந்தாங்களா?''

''டாக்டர்?'' – விழித்தான் ரோஜர்ஸ். ''சில வருஷமாகவே ஒரு டாக்டர் கிட்டேயும் போனது கிடையாது – ரெண்டு பேருமே.''

''இவங்களுக்கு இதய சம்பந்தமா ஏதாவது நோய் இருக்கலாம்னு நம்பும்படியா, எதுவுமே உங்களுக்குத் தென்பட்டதில்லையா?

அறிகுறி?''

''இல்லே, டாக்டர். அப்படி எதுவும் எனக்குத் தெரியலே.''

ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்: ''நல்லா தூங்குவாங்களா?''

தற்போது ரோஜர்ஸின் கண்கள் டாக்டரின் கண்களை நேராய் பார்ப்பதைத் தவிர்த்தன. அவனுடைய கைகளிரண்டும் ஒன்று சேர்ந்துக் கொண்டு திருகிக் கொண்டன... இருப்புக் கொள்ளாமல் முறுக்கிக் கொண்டன. ''அவ தேவையான அளவையும் விட அதிகமா –தூங்கியது கிடையாது'' என வாய்க்குள்ளேயே முணுமுணுத்தான்.

டாக்டர் இதற்கு குறி வைத்துக் கேட்டார்: ''அவங்களைத் தூங்க செய்வதற்காக, ஏதாவது எடுத்துப்பாங்களா?''

ரோஜர்ஸ், ஆர்ம்ஸ்ட்ராங்கைப் பார்த்தான், ஆச்சரியமாய். ''ஏதாவது? அவளைத் தூங்க வைக்கவா? எனக்குத் தெரிஞ்சு அப்படி எதுவும் கிடையாது. அப்படி அவ எதையும் எடுத்துக்கலே – எனக்கு நிச்சயமா தெரியும்.''

ஆர்ம்ஸ்ட்ராங் அங்கிருந்த கை கழுவும் தொட்டியை ஒட்டியிருந்த சிறு அலமாரி வரை சென்றார். ஷாம்பூ, நுரை நீர் டப்பா, சோப்புகள், தேங்காய் எண்ணெய், மவுத்-வாஷ், பற்பசை...

அருகிலிருந்த அலங்கார மேஜையின் தட்டுக்களைத் திறந்து உதவினான் ரோஜர்ஸ். அங்கிருந்து நகர்ந்து, பல தட்டுக்கள் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்த பெரிய அலமாரியை நெருங்கினார். அதிலும் கூட தூக்க மாத்திரையோ அப்படி ஏதாவதுமோ இருந்ததற்கான அடையாளங்கள் கிடைக்கவில்லை.

ரோஜர்ஸ், ''நேத்து ராத்திரி அவ எதையுமே எடுத்துக்கலே, ஸார்'' என்றான். ''நீங்க அவளுக்குக் கொடுத்ததைத் தவிர...''

II

அரைச் சிற்றுண்டி தயார் என்பதற்கான அறிவிப்பு வரும் போது, சிலர் அங்குமிங்குமாக சிதறி நின்றுக் கொண்டிருந்தனர்.

ஜெனரலும் ஜஸ்டிஸும் மொட்டை மாடியில் நிதானமாக நடந்தபடி, நாட்டின் அரசியல் நடப்புகள் பற்றி, கொள்கைப் பிடிப்புகள் ஏதுமற்று, வாய்க்கு வந்தபடி விமர்சித்துக் கொண்டிருந்தனர்.

வெராவும் லாம்பர்டும், வீட்டுக்குப் பின்னாலேயே இருந்த மலையின் உச்சி வரை நடந்தே போயிருந்தனர். அங்கு, கடற்கரை பகுதியை நோக்கி கூர்ந்து பார்த்தபடி வில்லியம் ஹென்றி ப்ளோர் நின்றுக் கொண்டிருப்பதை இருவரும் கண்டனர்.

''அந்த மோட்டார் படகு வர்ற மாதிரியான அறிகுறியே காணலே'' என்றார் ப்ளோர்.

வெரா சின்ன சிரிப்பினை உதிர்த்து விட்டு சொன்னார்: ''டேவன், ஒரு தூங்கும் கிராமம். எல்லாமும் அங்கு பொழுது விடிந்து தான் ஆரம்பிக்கும்.''

பிலிப் லாம்பர்ட், எதிர்ப்பக்கமாய் கவனித்துக் கொண்டிருந்தான் - கடலின் தொலைதூரம் நோக்கி.

திடுமென்று அவன் கேட்டான்: ''இன்னிக்கு வானிலை பற்றி என்ன நினைக்கிறீங்க?''

நிமிர்ந்து வானம் முழுக்க நோட்டம் விட்ட ப்ளோர், ''எனக்கு சரியா தான் தோணுது'' என்று குறிப்பிட்டார்.

உதடுகள் குவித்து விஸில் ஒன்றினை வெளியிட்ட லாம்பர்ட், ''இன்னிக்கு முடியறதுக்குள்ளே... அடிச்சு நொறுக்கப் போகுது, பாருங்க'' என்றான்.

''அருள் வாக்கா...? ஆங்...?!''

உயர்ந்து ஒலித்த அழைப்பு மணியோசை வீட்டின் திசையிலிருந்து மீண்டும் ஒலித்தது.

''ப்ரேக்-ஃபாஸ்ட்டுக்கா? கொஞ்சம் சாப்பிடலாம்னு நினைக்கிறேன்'' என்றான் பிலிப்.

அவர்களிருவரும் சேர்ந்து மலைச்சரிவில் இறங்கும் போது, பிலிப்பை நோக்கி ப்ளோர், ஆழ்ந்த சிந்தனையான குரலில் சொன்னார்: ''லாம்பர்ட்... அது என்னை வதைக்குதுப்பா. அந்தக் கட்டிளங்காளை... எதுக்காக தன்னைத் தானே மரிச்சுக்கணும்? ராத்திரி முழுக்க இதைப் பத்தி நினைச்சு நினைச்சே வெந்து போயிட்டேன்.''

வெரா கொஞ்சம் முன்னாலேயே இறங்கியிருக்க, லாம்பர்ட் சற்று

பின்தங்கியிருந்தான். கேட்டார்: ''இதுக்கு மாற்று யோசனை ஏதாவது வெச்சிருக்கீங்களா? வேற தியரி?''

''அதைச் சொல்ல எனக்கு நிரூபணம் வேணும். உதாரணமா – இலக்கு? அவன் உச்சத்துல இருந்தாம்ப்பா. பணத்தோட உச்சத்துல. இளமையோட உச்சத்துல. அதை உல்லாசமா கொண்டாடிக் களிக்கிற உச்சத்துல.''

திரும்பி வந்துக் கொண்டிருந்த இருவரையும் சந்திக்கும் நோக்கத் தோடு வீட்டின் வெளியே அப்போது வந்து நின்ற எமிலி ப்ரெண்ட், உயரக் குரலெடுத்து, குறிப்பாய் தெரிந்தாக வேண்டும் எனும் தொனி யில் கேட்டார்: ''படகு வருதா?''

''இது வரைக்கும் வரலே'' என்றார் வெரா.

அவர்கள், காலைச் சிற்றுண்டி சாப்பிடப் போனார்கள். அதிகமாய் அடுக்கப்பட்டிருந்த முட்டைகளும் வாத்து வறுவல்களும் மேலும் காபியும் டீயும் இருந்தன.

வந்த மூவரும் உள்ளே நுழைய கதவினைத் திறந்து வழி செய்த ரோஜர்ஸ், பிறகு வெளிப்புறமிருந்தபடியே கதவினை மூடி அடைத் தான்.

எமிலி தான் முதலில் சொன்னார்: ''அந்த ஆளு காலைலியே தளர்வா இருக்கான்.''

அறையின் ஜன்னலோரமாய் நின்றுக் கொண்டிருந்த டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''இன்னிக்குக் காலை உணவில ஏதாவது குளறுபடி இருந்தா பெரிசுபடுத்திடாதீங்க. எத்தனை நல்லா முடியுமோ அத்தனை தரத்தோட... ரோஜர்ஸ் மட்டும் தனியொரு ஆளா நின்னு சமைக்க வேண்டியதாயிடுச்சு. திருமதி ரோஜர்ஸால... இன்னிக்குக்... காலையிலே... எழுந்திருக்க... முடியலே...''

எமிலி ''என்னாயிடுச்சு அந்தப் பொம்பளைக்கு?'' என்றார் கறாராய்.

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் அமைதியாகவே பதில் தந்தார்: ''முதல்ல சாப்பிட ஆரம்பிப்போம். முட்டை குளிர்ந்துட்டா நல்லாயிருக்காது. பிறகு உங்க எல்லோரோடும் விவாதிக்க என்கிட்டே நிறைய விஷயம் இருக்கு.''

டாக்டரின் குறிப்பினை ஏற்றுக் கொண்டார்கள். தட்டுகள் நிரப்பப் பட்டன. காபி டீ என தேவையானது ஊற்றப்பட்டது. காலைச் சிற்றுண்டி களைகட்டத் துவங்கியது.

இந்தத் தீவில் அப்படி என்ன தான் நடக்கின்றது எனும் கேள்வி மட்டும், பொதுவாய் அனைவராலும் ஒதுக்கி வைக்கப்பட்டது. வேறு என்னவெல்லாமோ நடப்புகளைப் பற்றி பிடிப்பின்றி பேசிக் கொண்டார்கள். சர்வதேச செய்திகள்... விளையாட்டு செய்திகள்... இப்படி.

பிறகு, தட்டுகள் எடுக்கப்பட்டு சாப்பாட்டு மேஜை சுத்தமானதும், தனது இருக்கையை மட்டும் சற்று பின்னுக்குத் தள்ளிப் போட்டு அமர்ந்துக் கொண்ட டாக்டர், முக்கியமான விஷயம் பேசப் போவதை உணர்த்தும் படி தொண்டையைச் செருமி உணர்த்தி, பேசலானார்: ''நீங்கள்லாம் சாப்பிட்டு முடிக்கிற வரை, சோகமான அந்த செய்தியை சொல்லாம காத்திருப்பது தான் சரினு பட்டுது எனக்கு. திருமதி ரோஜர்ஸ், தூக்கத்திலேயே இறந்துட்டாங்க.''

விக்கித்துப் போன விழிப்புகளும், அதிர்வினால் விளைந்த 'ஹக்...' என்ற ஓரிரு விக்கல்களும் அங்கு விளைந்து அடங்கின.

வெரா குமுறினார்: ''என்ன கொடூரமிது. நாம வந்து ஒரு நாள் கூட முழுசா ஆகலே... ரெண்டு மரணங்கள்.''

கண்களைக் குறுக்கிக் கொண்ட ஜஸ்டிஸ் வார்க்ரேவ், அவருக்கே உரிய மெலிதான ஆனால் ஸ்பஷ்டமான குரலில் ''ஹ ூம்... குறித்துக் கொள்ள வேண்டிய குறிப்பு, வெரா!'' என்றார். கேட்டார்: ''மரணத்தின் காரணம் என்ன?''

ஆர்ம்ஸ்ட்ராங் தோள்களைக் குலுக்கி மறுத்தார். ''வெறுமனே சொல்வது ரொம்பக் கடினம்.''

''பிரேதப் பரிசோதனை தேவையா?''

''என்னால நிச்சயமா மரணச் சான்றிதழ் தர முடியாது. அந்தப் பெண்ணோட ஆரோக்கியம் மற்றும் உடல் நிலை எப்படியிருந்தது என்பது குறித்து எந்தத் தகவலும் எனக்குத் தெரியாது.''

''நரம்புத் தளர்ச்சி இருந்த பொம்பிளை மாதிரி தான் அவங்க தெரிஞ்சாங்க'' என்றார் வெரா. ''நேத்து ராத்திரி பயங்கர அதிர்ச்சி வேற ஏற்பட்டது அவங்களுக்கு. ஒரு வேளை இதயம் நின்னுப்

போயிருக்குமோ?''

இதற்கு, ''சந்தேகம் வேண்டாம்... அவங்க இதயம் நின்னுப் போயாச்சு...'' என்று வறட்சியாய் குறிப்பிட்ட டாக்டர், ''ஆனா எது அதன் இயக்கத்தை நிறுத்தியது என்பது தான் கேள்வி'' என்றார்.

ஒரே ஒரு வார்த்தை எமிலி ப்ரெண்ட்டிடமிருந்து வெளி வந்து விழுந்தது. அது – திட்டவட்ட அறிவிப்பு போலவும், தீர்மானமாகவும் வந்தது. ''மனச்சாட்சி!''

ஆர்ம்ஸ்ட்ராங், குரல் வந்த திக்கில் திரும்பினார். ''நீங்க எந்த அர்த்தத்துல இதை சொல்றீங்க, ப்ரெண்ட்?''

''நாம எல்லோருமே கேட்டோம். அவ குற்றஞ்சுமத்தப்பட்டா - அவ புருஷன் ரோஜர்ஸோட சேர்த்து. ரெண்டு பேரும் வேலை செஞ்ச பழைய வீட்டின் முதலாளியான ஒரு கிழவியைக் கொன்னதா...''

''இதுல நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''அந்தக் குற்றச்சாட்டு உண்மைனு நினைக்கிறேன்'' என்றார் எமிலி. ''அவ எப்படி துடிதுடிச்சுப் போனானு நீங்க எல்லாருமே நேத்து ராத்திரி பார்த்தீங்க. உள்ளூர முழுக்க உடைஞ்சுப் போய் மயங்கி விழுந்தா. அவளுக்குள்ளேயே புதைந்துள்ள ஒரு கொடிய விஷயத்தைப் பொது இடத்துல படம் போட்டுக் காட்டினது, அவளால தாங்க முடியாத ஓர் அதீதம். விழுந்துட்டா. வெறும் பயத்தாலேயே செத்துப் போயிருக்கா அவ.''

சந்தேகம் மிகுந்து, மறுப்பாய் தலையசைத்தார் டாக்டர்.

''இதுவும் ஒரு சாத்தியம் எனும் அளவுக்குத் தான் உங்களுடைய கருத்தை எடுத்துக்க முடியும்'' என்றார். ''அவங்க உடல் நிலை என்ன மாதிரியான நிலைமையில இருந்து வந்தது எனும் தகவல் தெரியாம நீங்க சொல்வதை அப்படியே ஏத்துக்க முடியாது. ஒரு வேளை அவங்களுக்கு இதயம் பலஹீனமாகவே இருந்திருந்தாலும் கூட ... ...''

எமிலி ப்ரெண்ட் அமைதியாய் குறுக்கிட்டு சொன்னார்: ''கடவுள் தந்த தீர்ப்பு - என்று சொல்லுங்க, டாக்டர்.''

இதைக் கேட்ட ஒவ்வொருவரும் எமிலியை அதிர்ச்சியாய் பார்த்தனர்.

''அதெல்லாம் சராசரி நம்பிக்கைக்கு ரொம்பத் தள்ளியுள்ள விஷயங்கள், மிஸ் எமிலி'' என்றார் ப்ளோர்.

பளபளக்கும் விழி விரித்து அனைவரையும் பார்த்தார் எமிலி. நேர் பார்வை பார்க்கும் விதமாய் முகவாயை நிமிர்த்திக் கொண்டார். ''வயதான ஒரு வெகுளிக் கிழவிக்கு இழைக்கப்பட்ட கொடூரத்துக்காக 'மனச்சாட்சி' எனும் தீர்ப்பு மூலம் இறைவன் கொடுக்கு— தண்டனையை, நீங்கள்லாம் அசாத்தியம்னு நினைக்கிறீங்க! நான் அப்படி நினைக்கலே!''

ஜட்ஜ் தனது முகவாயில் தாளமிட்டுக் கொண்டிருந்தார். ''செல்வி எமிலி'' என அழைத்து, வஞ்சப் புகழ்ச்சியாய் சொன்னார்: ''என் அனுபவத்தை வெச்சு சொல்றேன்... கொலைக் குற்றம் போன்ற வற்றில், குற்றத்துக்கான தண்டனையோ அல்லது மரண தண்டனையோ அளிக்கும் அதிகாரத்தை... ஆண்டவன்... மனச்சாட்சி கிட்டே விடலே. என்னைப் போன்ற மக்களிடம் விட்டிருக்கார். நீதிபதிகளிடம். குற்றவாளியானு கண்டுபிடிக்கிற வழி... அபாயம் நிறைந்தது; கடினமானது. மனச்சாட்சி பொட்டுனு போடற மாதிரி சுலபமானது கிடையாது...! புரியுதா...! தண்டனைகளுக்கு – வேற குறுக்கு வழி கிடையாது, மிஸ்.''

இதற்கு ''ப்ச்...'' என்று விட்டு தோள்களைக் குலுக்கிக் கொண்டார் எமிலி.

ப்ளோர், கூர்மையாய் கேட்டார்: ''படுக்கைக்குப் போன பிறகு... நேத்து ராத்திரி...! அந்தம்மா என்ன சாப்பிட்டாங்க? குடிச்சாங்க?''

''ஒண்ணுமில்லே'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங்.

''ஒண்ணுமேவா எடுத்துக்கலே? ஒரு கோப்பை டீ? வெறும் தண்ணீ? நிச்சயமா ஒரு கப் டீ குடிச்சிருக்கணும்! பந்தயம் கட்டறேன்.''

''எதையுமே அவ சாப்பிடலேனு ரோஜர்ஸ் நிச்சயப்படுத்தி சொல் றான்.''

''ஆஹ்'' என்றார் ப்ளோர். ''அவன் அப்படித்தான் சொல்வான்.''

இப்படிச் சொன்ன ப்ளோரின் தொனி முக்கியப்படுத்தப்பட்டு இருந்தது. ஆகையால் அவரைக் கூர்மையாய் பார்த்தார் டாக்டர்.

பிலிப் லாம்பர்ட், ''இது தான் உங்களோட அபிப்ராயமா?'' என கேட்டான்.

ஆக்கிரமித்து எதிர்க்கும் தன்மையில் ப்ளோர் பேசினார்: ''ஏன், இருக்கக் கூடாதா? அவங்களைப் பற்றி சொல்லப்பட்ட குற்றச்சாட்டை

நாம எல்லோருமே நேத்து கேட்டோம். அது ஒரு நிழல் மனிதனோட வெறும் கற்பனையா கூட இருக்கலாம்... ஜஸ்ட், அர்த்தமற்ற ஒரு கிரகண வசனம்...! மாறாக, சொல்லப்பட்டது கற்பனையா இல்லாம உண்மையானதாகவும் இருக்கலாம், இல்லையா! இப்போதைக்கு அதை உண்மைனே எடுத்துக்குங்க. ரோஜர்ஸும் அவனுடைய பொண்டாட்டியும்... அந்த வயதான கிழவியை வழிச்செறிஞ்சுட்டாங்க. அப்படினா என்ன புரியுது...? விஷயம் ஒருத்தருக்கும் தெரியாதுனு, அவங்க ரெண்டு பேரும், பாதுகாப்பாகவும் சந்தோஷமாகவும் இருந்தாங்கனு --- --- ---''

வெரா இடைபுகுந்து, ''திருமதி ரோஜர்ஸ், ஒரே ஒரு நாளாவது பாதுகாப்பா உணர்ந்திருப்பாங்களா என்பது... சந்தேகம்தான்'' என்றார்.

இந்த இடையூற்றால் சற்றே கடுப்பானார் ப்ளோர். ''எல்லா பெண்களையும் போல'' என்று ஓரக்கண்ணால் பார்த்தபடி கிண்டலாய் குறிப்பிட்டார். தொடர்ந்தார்: ''புருஷன்-மனைவி நெருக்கத்துல ஆபத்து கிடையாதுனே அவங்க வாழ்ந்து வந்தாங்க. அப்போ தான், நேற்றிரவு, கிரகணமாய் மறைந்திருக்கும் 'அந்த' மனிதனின் குரல் மட்டும் உண்மையை விண்டு வைக்குது. இதனால என்ன நடக்குது? அந்தப் பொண்ணு நொறுங்கிப் போறா. உடனே. துண்டு துண்டா. அந்த சமயத்துல அவளுடைய கணவன் ரோஜர்ஸ் என்ன மாதிரி துடிதுடித்து பதறிப் போனான். அது மிகை. எத்தனை பணிவான அன்புக் கணவனும் செய்யத் துணியாத பதைபதைப்பு. நிச்சயமா. அவன் - மதில் மேல் பூனை. அவ என்னத்தையாவது சொல்லி வெச்சு தன் உயிருக்கு உலை வந்துடுமோ எனும் பயப் பதைபதைப்பு அது.

இதிலிருந்து தப்பிக்க கையில செமத்தியான ஒரு வழி இருக்கு! அது தான் - வேலை! அவங்க ஒரு கொலையைப் பண்ணிட்டு அது வெளியில தெரிஞ்சுடாம தப்பிச்சிருக்காங்க. அந்த முழு சமாச்சாரமும் மறுபடியும் குழி நோண்டி வெளியே எடுக்கப்பட்டா... என்ன நடக்கும்? ஒரே ஒரு கேள்வியில அந்தப் பொம்பளை அத்தனையையும் காட்டிக் கொடுத்துடும்... விசாரணையை எதிர்த்து நின்னு நடந்த அத்தனையையும் கடைசி வரை மறைச்சே வைக்கும் தைரிய நரம்பு... அவளுக்கு சத்தியமா கிடையாது. அவ கணவனுக்கு... அவ ஒரு வாழும் அபாயம் - அது தான் அவ! இவன் - அழுத்தக்காரன். இவன், கழுத்தை

நெரிக்கும் விசாரணைக் கேள்விகளை நீதிபதி முன் வெச்சா கூட, சாய மாட்டான்... அசர மாட்டான். ஆனா... அவளை இவன் நம்ப முடியாது. அவ கட்டுப்பாட்டை இழந்து விடும் கணத்துல... இவன் கழுத்துக்கு கயிறு வந்தாச்சுனு அர்த்தம். ஆக, எதையோ ஒரு கப் டீக்குள்ளே போட்டுக் கலக்கிக் கொடுத்து அவளோட வாயை நிரந்தரமா மூடிடற மாதிரி பார்த்துக்கறான்.''

ஆர்ம்ஸ்ட்ராங் அமைதியாய் சொன்னார்: ''அவங்க படுக்கைக்குப் பக்கத்துல எந்தவொரு கோப்பையும் இல்லே. சொல்லப் போனா அங்கே வேற எதுவுமே இல்லே. நான் பார்த்தேன்.''

ப்ளோர் ஆவேசமாய் மூச்செறிந்தார்: ''அங்கே இருக்காது தான் - எப்படியிருக்கும்? அவ அந்தக் கப்ல இருந்ததைக் குடிச்சு முடிச்சதும்... முதல் வேலையா... அதை அங்கிருந்து கண்ல படாம கொண்டு போய் முழுக்க கழுவி மறைச்சு வெச்சிருப்பாங்க.''

அறையில் ஒரு சிறு தயக்கம் உருவானது. பிறகு ஜெனரல் மார்கரெட் சந்தேகம் தொனித்த குரலில் சொன்னார்: ''நீங்க சொல்றபடியே இருக்க லாம். பார்ப்போம். ஆனா ஒரு மனுஷன் இப்படி செய்வானா – தன் சொந்த மனைவிக்கே. நினைச்சுப் பார்க்கவே எனக்குக் கஷ்டமா இருக்கு.''

சின்னதாய் வெடிச் சிரிப்பு வெளியிட்ட ப்ளோர், ''ஒரு மனுஷ னுடைய கழுத்து மேல சுருக்குக் கயிறு விழுந்துட்ட பிறகு, பாச பந்தங் களை நினைச்சுக்கிட்டு அவன் காலங்கடத்த மாட்டான், ஜெனரல்'' என்றார்.

அங்கு, வேறு பேச்சு எழவில்லை. அடுத்து ஒருவர் பேசுவதற்கு முன், கதவு திறந்து ரோஜர்ஸ் உள்ளே வந்தான். ஒவ்வொருவராய் பார்த்தபடி, ''வேற ஏதாவது உங்களுக்கு வேணுமா?'' என்று கேட்டான்.

தன்னிருக்கையில் சிறிய அரை வட்டமடித்து அவன் பக்கம் திரும்பிய ஜட்ஜ் வார்க்ரேவ், ''வழக்கமா எத்தனை மணிக்கு அந்த இயந்திரப் படகு இங்கு வரும்?'' என்று கேட்டார்.

''ஏழிலிருந்து எட்டுக்குள்ளே, ஸார். சில சமயங்கள்ல எட்டைத் தாண்டி, கொஞ்சம் தாமசமா வரும். இந்த ஃப்ரெட்டுக்கு இன்னிக்குக் காலையில என்னாச்சுனு தெரியலே. அவனுக்கு உடம்பு முடியாம போனா கூட அவன் தம்பியை அனுப்பி வைப்பானே.''

''இப்ப மணி என்ன?'' என்று கேட்டான் பிலிப் லாம்பர்ட்.

''பத்து, ஸார்.''

லாம்பர்டின் புருவங்கள் அதிகம் உயர்ந்தன. தனக்குத் தானே தலையசைத்துக் கொண்டான் அவன்.

வார்த்தைகள் இல்லை. அறை அமைதியானது. ரோஜர்ஸ் அப்படியே சில நிமிடங்கள் காத்துக் கொண்டேயிருந்தான்.

ஜெனரல் மார்கரெட், திடுமென, துக்கம் வெடிக்க சொன்னார்: ''உங்க மனைவி பற்றிக் கேள்விப்பட்டேன், ரோஜர்ஸ். வருந்தறேன். இப்போ தான் டாக்டர் எங்களுக்கு சொன்னார்.''

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்ட ரோஜர்ஸ், ''போயிட்டா, ஸார்'' என்றான். பிறகு ''விசாரிச்சதுக்கு நன்றி, ஸார்'' என்றான்.

காலியாகிப் போயிருந்த தட்டுகள், கோப்பைகள் மற்றும் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவன் வெளியேறினான்.

மறுபடியும் அங்கு அமைதி நிலை கொண்டது.

III

வீட்டின் வெளியே வியாபித்திருந்த சமவெளிப் பகுதியில் நின்றுக் கொண்டிருந்த பிலிப் ''இந்த மோட்டார் படகு எங்கே --- '' என்றான், காற்றில்.

ப்ளோர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டார். பேசினார்: ''நீங்க எதைப்பத்தி நினைச்சுக்கிட்டு இருக்கீங்கனு எனக்குப் புரியுது, பிலிப். இதே போல, என்னை நானேயும் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பார்த்தேன். எல்லாம் ஒழுங்கா இருந்திருந்தா... இயந்திரப் படகு இங்கே ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடியே வந்திருக்கணும். ஆனா வரலே. ஏன்?''

''விடை கண்டுபிடிச்சாச்சா?'' – கேட்டான் லாம்பர்ட்.

''இது எதிர்பாராம நடக்கலே... ஆமா நடந்துக்கிட்டு இருக்கிற களேபரத்தின் ஒரு முக்கியப் பகுதி இது. இது போல நிறைய 'எதிர்

பாராதவை' போட்டு ஒண்ணா கட்டப்பட்ட சமாச்சாரம் இது.''

''அது வராதுனு நினைக்கிறீங்களா?'' – பிலிப் கேட்டான்.

கேட்ட பிலிப்பின் பின்னாலிருந்து பொறுமையற்ற ஒரு குரல் பேசியது: ''அந்த மோட்டார் படகு – வராது.''

ப்ளோர், அவரது விரிந்த தோளினை சற்று திருப்பி, குரல் தந்தவர் யார் என பார்த்தார். ''நீங்களும் அப்படித்தான் நினைக்கிறீங்களா, ஜெனரல்?''

ஜெனரல் மார்கரெட் அழுத்தமாய் சொன்னார்: ''அது வராதுப்பா. மோட்டார் படகு வந்து நம்மை அள்ளிக்கிட்டு போயிடக் கூடாதானு ஏங்கிக்கிட்டு நாம இங்கே இருக்கோம். அது தான் அவங்களுக்குத் தேவை. நாம இந்தத் தீவை விட்டு கரைக்குப் போகப் போவது கிடையாது... நம்மள்ல யாரும் என்னிக்கும் வெளியேறவும் மாட்டோம்... இது தான் முடிவு, தெரிஞ்சுக்கோங்க... எல்லாவற்றின் முடிவு...''

சற்றே தயங்கிய அவர், பிறகு ஒலி கம்மிய, விவரிக்க இயலாத குரலில் சொன்னார்: ''அது தான் அமைதி... நிஜ அமைதி... முடிவினை அடைவது... பிறகு வேறெங்கும் போக வேண்டியே இருக்காது... அப்படிப்பட்ட முடிவு... ஆமாம், அங்கிருக்கிறது அமைதி... நிஜ அமைதி...''

சட்டென்று முடித்து திரும்பி நடந்துப் போய்விட்டார் அவர்... சமவெளியைக் கடந்து – சரிவில் கீழிறங்கி ஓடி - கடல் நோக்கி – குறுக்கும் நெடுக்குமாய் விரைந்து – தீவின் எல்லையை நெருங்கி – அங்கு கடலுக்குள் ஓடியும் திரும்பியும் அல்லாடிக் கொண்டிருந்த சிறு பாறைக் கூட்டத்தை அடைந்து...

நிலையற்று நடந்து போனார் அவர் - அரைத் தூக்கத்திலிருக்கும் ஒருவனைப் போல.

''அதோ பாருங்க... பைத்தியம் போல போய்க்கிட்டு இருக்காரு. போறப் போக்கைப் பார்த்தா, இங்கே எல்லாருமே இதே போல கிழிச்சுக்கிட்டு அலையப் போறோமோனு தோணுது'' என்றார் ப்ளோர்.

''நீங்க இப்படி ஆக மாட்டீங்கனு நினைக்கிறேன், ப்ளோர்...'' என்றான் பிலிப்.

ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர் சிரித்தார். ''என்னை அப்படி ஒரு பைத்தியக்காரனைப் போல ஆக்க நிறைய நிறைய மெனக்கெட

வேண்டியிருக்கும்!'' என்றார். பிறகு வறட்சியாய், ''ஏன்... நீங்களும் அவர் போல திக்குத் தெரியாம அத்தனை சுலபமா மாறிட மாட்டீங்க என்பது என் கருத்து, பிலிப்'' என சேர்த்துக் கொண்டார்.

''நீங்க இப்படி என்னைக் கணிச்சிருப்பதுல, சொன்னதுல, நான் மிக மிக அமைதியா உணர்றேன்'' என்றான் பிலிப். ''நன்றி.''

IV

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், வாசலை வியாபித்திருந்த தோட்டப் பகுதிக்கு வந்தார். அங்கு கொஞ்ச நேரம் தயங்கி நின்றார். சற்று தள்ளி இவருக்கு இடப்பக்கத்தில் லாம்பர்ட்டும் ப்ளோரும் இருந்தனர். வலப்பக்கத்தில், அவருடைய தலை குனிந்த நிலையில், இங்குமங்கும் பொடி நடை நடந்த வண்ணம் வார்க்ரேவ் இருந்தார்.

சில நொடிகள் தீர்மானமற்று அப்படியே நின்றுக் கொண்டிருந்து விட்டு... நீதிபதியின் பக்கம் நகர்ந்தார் டாக்டர்.

அதே தருணத்தில் ரோஜர்ஸும் வீட்டுக்குள்ளிருந்து விரைவாய் வெளியே வந்தான்.

''உங்க கூட தனியா பேச முடியுமா, ஸார்?'' என்று கேட்டான் பட படப்பாய்.

குரல் வந்த திசையில் திரும்பினார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். அவர் பார்த்த காட்சியால், திகைப்பு உண்டாயிற்று அவருக்கு. ரோஜர்ஸின் முகம்... தீவிர எண்ணம் ஏதோ ஒன்றை விரட்டித் துரத்திக் கொண்டிருந்தது. வெளுத்து வெளிறிப் போயிருந்தன முக சதைகள். கைகள்... வெளிப்படையாய் தெரியும் கட்டுக்கடங்கா அதிர்வில் இருந்தன.

சில நிமிடங்களுக்கு முன்பு எத்தனை அடக்கமாகவும் அமைதியாகவும் அவர் வெளியே வந்திருந்தாரோ... அதற்கு அப்படியே நேர் மாறாய் ஆனார் டாக்டர்... அதிர்ந்து பின் வாங்கினார்.

''ப்ளீஸ், ஸார். உங்க கூட நான் பேசணும், ஸார். உள்ளே.''

டாக்டர் திரும்பி, உறைந்துப் போயிருந்த பட்லரோடு சேர்ந்து,

மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்தார். அப்போது, ''என்னாச்சுய்யா? முதல்ல நீ ஒழுங்காகு. கை, நழுவி கீழே விழுந்துடும் போல ஏன்யா இப்படி நடுங்கறே?'' என்றார்.

''இங்கே, ஸார்... உள்ளே, இங்கே... இங்கே, ஸார்.''

சாப்பாட்டு அறையின் கதவினைத் தள்ளித் திறந்தான் அவன். டாக்டர் உள்ளே போனார். அவருக்குப் பின்னாலேயே உள்ளே நுழைந்த ரோஜர்ஸ், தனக்குப் பின்னால் கதவினை மூடினான்.

''வந்தாச்சு'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''சொல்லு. என்ன விஷயம்?''

ரோஜர்ஸின் தொண்டை இழுத்துக் கொண்டு போராடியது. எச்சிலை விழுங்கி விழுங்கி அல்லாடினானே ஒழிய வார்த்தை வரக் காணோம். பிறகு வார்த்தைகளைத் துப்பினான். ''இங்கு நிச்சயமா சில அபாயங்க நடக்குது, ஸார்... ஆனா புரியலேயே, ஸார், புரியலையே.''

ஆர்ம்ஸ்ட்ராங் இப்போது கூர்மையாய் பேசினார்: ''சில அபாயங்கள்? என்ன பேசறே நீ? ஒழுங்கா பேசறதுனா பேசு. இல்லேனா!''

பரபரத்தான் ரோஜர்ஸ். ''கேட்டா என்னை நீங்க பைத்தியம்னு கூட நினைக்கலாம், ஸார். அதெல்லாம் ஒண்ணும் கிடையாதுனு தான் சொல்வீங்க. அப்படினாலும் எனக்கு நீங்க அதை விளக்கியே ஆகணும், ஸார். எனக்கு விளக்கணும்-விளங்கற மாதிரி! ஏன்னா... அது... எனக்கு... எந்த வகையிலும் அர்த்தமாகலே, ஸார்.''

''சரிய்யா... விஷயத்தை சொல். புதிராவே பேசாதே.''

ரோஜர்ஸ் மறுபடியும் ஒரு மடக்கு எச்சிலை விழுங்கினான். பேசினான்: ''அது, அந்தச் சின்ன பொம்மைங்க சம்பந்தமா, ஸார். அதோ... மேஜைக்கு நடுவுல இருக்கு பாருங்க. பத்து இருந்தது ஸார், அதுல. சாமி சத்தியமா ஸார்... பத்து... பத்து, ஸார்.''

''ஆமாம், பத்து தான்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''நேத்து ராத்திரி எண்ணினோமே.''

ரோஜர்ஸ் இன்னும் நெருங்கி நின்றுக் கொண்டான்.

''அதான், ஸார், அதே தான். பத்து இருந்ததா. சரி. நேத்து ராத்திரி நான் சமையல் பாத்திரத்தையெல்லாம் சுத்தம் பண்ணும் போது பத்தில்லே ஸார்... ஒன்பது தான் இருந்தது. ஒன்பது இருந்ததா... அதை கவனிச்சேன். குழப்பமாச்சு. சரி... போகட்டும்னு விட்டுட்டேன்.

பிறகு, இன்னிக்கு ஸார், காலைல. எல்லார்க்கும் டிபன் கொண்டு வந்து வைக்கும் போது நான் கவனிக்கலே, ஸார். ஏற்கெனவே நான் ஒடைஞ்சு போயிருந்தேன்... ஒண்ணும் புரியாம கிடந்தேன்.

ஆனா... இப்ப ஸார்... எல்லாத்தையும் எடுத்து வெச்சு சுத்தம் பண்ண நான் வந்த போது...! இப்ப கவனிச்சேன், ஸார்... நம்பலேனா நீங்களே பாருங்க, ஸார்... ம்... பாருங்க...

இதுல வெறும் எட்டு தான் ஸார் இருக்கு. வெறும் எட்டு! இது எனக்கு அர்த்தமாகலே, ஸார். உங்களுக்கு? வெறும் எட்டு - வெறும் எட்டு...''

அத்தியாயம் 7

I

காலை சிற்றுண்டிக்குப் பிறகு, வெரா க்ளேதார்னைச் சந்தித்த எமிலி ப்ரெண்ட், இருவருமாக மறுபடியும் கிளம்பி மலையுச்சி வரை போய் ஏதாவது மோட்டார் படகு வருகின்றதா என பார்க்க வேண்டும் என்று ஆலோசித்தார். வெரா பூரணமாய் சம்மதித்தார்.

காற்று புதுப் பொலிவு அடைந்திருந்தது. சின்னச் சின்ன வெள்ளை நுரைக் கூட்டங்கள் அலைகளின் உச்சியெங்கும் தோன்றி மறைந்தன. எங்கும் மீன் பிடி படகுகள் இல்லை – இயந்திரப் படகு குறித்த அறிகுறி ஏதும் தென்படவில்லை.

'ஸ்டிக்கில்-ஷெவன்' கிராமம் இங்கிருந்து துளியும் தெரியவில்லை. அதன் பின்னணியில், வான் முட்டும் அளவு செழித்திருந்த சிகப்புப் பாறை மலையும் அதன் முகடும் மட்டுமே தெரிந்தன. இவை, கடற்கரையையே விழுங்கி விட்டது போல அங்கிருந்த அனைத்தையும் மறைத்துக் கொண்டு விளங்கின.

''நேத்து நம்ம எல்லோரையும் இங்கே கொண்டு வந்து இறக்கி விட்டுட்டுப் போனவனைப் பார்த்தப்போ, மிகவும் நம்பிக்கை யானவனா தான் தோணிச்சு'' என்று சொன்னார் எமிலி. ''இன்னிக்குக் காலையிலே இத்தனை நேரம் கடந்தும் அவன் வராம இருப்பது – விளக்க முடியாததா இருக்கு.''

வெரா பதில் பேசவில்லை. உள்ளூர வளர்ந்துக் கொண்டே போன திகிலை அடித்து நிறுத்த முயன்றுக் கொண்டிருந்தார் அவர். ''அடங்குடீ. அடங்கு'' என தனக்குத் தானே கோபமாய் சொல்லிக் கொண்டார் வெரா. ''நீ இப்படிப்பட்டவ இல்லே. எதையும் எப்பவும் தாங்கக் கூடியவ நீ. தாங்கியிருக்கே.''

ஓரிரு நிமிடங்கள் கடந்த பிறகு குரல் உயர்த்தி சொன்னார்: ''அவன் எப்படியாவது வந்துடணும்னு நான் நினைக்கிறேன். நான்... நான்... இங்கிருந்து நான் போயாகணும்.''

''இதே தான் இங்கிருக்கும் எல்லாருடைய நினைப்பும்

பொண்ணே'' என்றார் எமிலி, வறட்சியாய்.

''எல்லாமே அசாதாரணமாயிருக்கு. நடக்கும் எதிலும்... எதிலுமே சொல்றேன்... துளியாவது அர்த்தம் இருக்கிற மாதிரி தோணலே.''

குறிப்பிட்ட வெராவுக்கு அருகில் சுறுசுறுப்பாய் நின்றுக் கொண்டிருந்த முதிர் கன்னி சொன்னார்: ''இந்தத் தந்திரத்துல சுலபமா என்னையே வளைச்சுப் போட்டுட்டாங்களேனு எண்ணும் போது... என் மேலயே எனக்கே அத்தனை வெறுப்பு வருது, வெரா. உண்மையா சொல்றேன்... அந்தக் கடிதம்... சம்பந்தமேயில்லாத ஓர் அபத்தம். அதைக் கூர்ந்து படிச்சா இப்ப புரியுது. ஆனா அப்போ எனக்கு அதுல துளி சந்தேகம் வரலே தெரியுமா – இத்துனூண்டு கூட வரலே.''

''வந்திருக்காது தான் - புரியுது'' என முணுமுணுத்தார் வெரா.

''நடப்பதெல்லாம் நல்லதேனு எல்லாத்தையும் நம்பிடறோம்'' – எமிலி சொன்னார்.

குளிரால் நடுநடுங்குவது போல் மூச்சுக் காற்றை ஆழ்ந்து நடுக்கமாய் உள்ளுக்கிழுத்துக் கொண்ட வெரா கேட்டார்: ''காலைல சாப்பிடும் போது சொன்னீங்களே... உணர்ந்து தான் சொன்னீங்களா?''

''கொஞ்சம் புரியற மாதிரி தெளிவா கேளுங்களேன். எதைக் குறிப்பிட்டுக் கேக்கறீங்க?''

வெரா கம்மிய குரலில் சொன்னார்: ''ரோஜர்ஸும் அவன் மனைவியுமா சேர்ந்து அந்தக் கிழவியை சாய்ச்சுட்டாங்கன்னா நினைக்கிறீங்க?''

எமிலி ப்ரெண்ட், சிந்தனையோடு கடலை நோட்டமிட்டார். பிறகு, ''என்னைப் பொறுத்த வரைக்கும் - அதுல நான் ஸ்திரமாயிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்றார்.

''எனக்கு என்ன நினைக்கிறதுனே தெரியலே.''

''எல்லாமும் என் ஊகத்துக்கு ஆதாரமா தான் நிக்குது. அந்தப் பொம்பளை அடிச்சு பிடிச்சுக்கிட்டு மயங்கின விதம், அந்த ஆள் காபி கோப்பைகளிருந்த தட்டை தடார்னு கீழே போட்டு பதறினது... எல்லாம் மறக்கலியே! அப்புறம் அது குறித்து அவன் பேசிய பாவம் - அதுல உண்மைத்தனம் இருக்கிறதா படலே. ஓஓ... அவங்க தான் பண்ணியிருப்பாங்க.''

இவ்வாறு எமிலி பேசியதும் வெரா தொடர்ந்தார்:

''ரோஜர்ஸோட பொண்டாட்டி மலங்க மலங்க விழிச்சுக்கிட்டே இருந்த போக்கு – தன் நிழலைத் தானே பார்த்தாலே அலறுவா போல! இப்படி ஒரு பொண்ணு சதா சர்வகாலமும் பதறிக்கிட்டே இருப்பதை நான் பார்த்ததே கிடையாதுப்பா. அந்த விஷயத்தால... வாழ்க்கை முழுவதுக்கும் அவங்க கிலியிலேயே இருந்துட்டாங்கன்னு படுது.''

செல்வி எமிலி ப்ரெண்ட் முணுமுணுத்தார்: ''நான் நர்ஸரியில இருந்த போது படிச்ச ஒரு பதம்... வாக்கியம்... நினைவுக்கு வருது. 'ஞாபகமிருக்கட்டும்... நீ செய்த குற்றமே உன்னைத் தீர்த்துக்கட்டி விடும்... இது தான் சத்தியம்.' ஆமாம்... இது எவ்வளவு உண்மை. 'ஞாபகமிருக்கட்டும்... நீ செய்த குற்றமே உன்னைத் தீர்த்துக்கட்டி விடும்... இது தான் சத்தியம்.' ''

அவசர அவசரமாக ஓடத் துடிக்கும் பரபரப்பில், ''ஆனா --- மிஸ் ப்ரெண்ட்--- ப்ரெண்ட் --- அப்படினா --- இது தான் சாஸ்வதம்னா ---'' என பதறினார் வெரா.

''ம்... சொல்லுங்க வெரா?''

''மற்றவங்களுக்கு? இந்த சத்திய வாக்கு... மற்றவங்களுக்கு?''

''நீங்க சொல்றதை என்னால முழுக்க புரிஞ்சுக்க முடியலே, செல்வி க்ளேதார்ன்.''

''சொல்லப்பட்ட மற்ற குற்றச்சாட்டுகள்? அவையெல்லாம் - அவையெல்லாம் உண்மையில்லையா? ரோஜர்ஸ் குடும்பத்துக்கு மட்டும் தான் இது பொருந்துமா? மற்றவங்களுக்கு --- '' நிறுத்தி விட்டார் வெரா. விளங்காமலிருந்த அவரது சிந்தனையை ஒழுங்குபடுத்திக் கொள்ள அவரால் முடியவில்லை.

குழப்பமாய் முடிச்சிட்டிருந்த ப்ரெண்ட்'டின் புருவங்கள், சரியாயின. ''ஆஹ்... இப்போ புரியுது எனக்கு'' என்றார். ''லாம்பர்ட் இருக்கார். இருபதுக்கும் மேற்பட்ட மனுஷங்க இறக்கக் காரணமா யிருந்தேன்னு அவரே ஒத்துக்கறார்.''

வெரா சொன்னார்: ''அவங்க பழங்குடியினர். கறுப்பர்கள். அதனாலேயே சாகட்டும்னு --- இவர் --- ''

இதற்கு எமிலி, ''கறுப்போ வெள்ளையோ... அவங்களும் நம் சகோதரர்கள் தான்'' என்றார் கூர்மையாய்.

வெரா நினைத்துக் கொண்டார்: 'நம்முடைய கறுப்பு சகோதரர்கள் -

நம்முடைய கறுப்பு சகோதரர்கள். ஓஹ்... நான் இதற்கு சிரித்து விடக் கூடும்... கிறுக்குப் பிடித்தவள் போல... ஓஹ்... என்னால் கட்டுப்படுத்த முடியலியே... ஆஹாஹாஹாஹா!'

தான் ஆரம்பித்ததை சிந்தனையோடு தொடர்ந்த வண்ணமிருந்தார் எமிலி: ''சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் சில இதுக்குனே உட்கார்ந்து யோசிச்சு சொன்னது போலவும்... கேலிக் கூத்தாகவும் தான் இருந்தன. ஜட்ஜை எடுத்துக்குவோமே... பொது மக்களின் நலன் கருதி அவர் செய்த தூய்மையான கடமையையே விமர்சிச்ச வார்த்தைகள். ஸ்காட்லாண்ட் போலீஸிலிருந்து ஓய்வு பெற்ற அந்த இன்ஸ்பெக்டர். ஏன், உதாரணத்துக்கு என் கதையையே எடுப்போமே. அபத்தங்கள்.''

கொஞ்சமாய் தாமதித்து விட்டு தொடரலானார்: ''அப்போதிருந்த நிலைமையைக் கருதி தான், நேத்து ராத்திரி நான் எதுவுமே பேசாம இருந்தேன். ஆம்பிளைங்களுக்கு முன்னால விவாதிக்க ஏற்ற சமாச்சாரம் கிடையாது அது.''

சிறு ஈடுபாடு தந்துக் கேட்டுக் கொண்டிருந்த வெரா, ''கிடையாது?'' என கேட்க... அமைதியாய் தொடர்ந்தார் எமிலி: ''அந்த டெயிலர் என் கூட தான் வேலையில இருந்தா. டெயிலர் --- பெட்ரிஸ் டெயிலர் அவ முழு பேர். அவ சரியான பொண்ணு கிடையாது – ஆனா இதை நான் கண்டுபிடிக்க ரொம்ப நாளானது. நான் ஏமாந்து போய் அவளோட நெருக்கமா இருந்தேன். அவ கிட்டே நல்ல குணாதிசயங்கள் இருந்துச்சு... படு சுத்தம்... நான் சொல்லும் எதையும் ஏத்துப்பா. இவற்றால எனக்கு ரொம்ப பொருத்தமான தோழினு அவளை நம்பினேன். ஆனா... ச்சே... அத்தனையும் அப்பழுக்கற்ற வேஷம். கபட நாடகம். அவ ஒரு மறை கழன்ற பொண்ணு... எவ்வித தர்மங்களும் இல்லாதவ! கண்றாவி! அவ ஏதோ ஒரு 'தீவிர சங்கடத்துல' இருக்கா எனும் சேதி... மேலோட்டமா எனக்குத் தெரியவே கொஞ்ச நாட்களானது.''

சொல்லிவிட்டு சற்று நிறுத்திக் கொண்டார் எமிலி. அவருடைய மூக்கு, அருவெறுப்பாய் முறுக்கிக் கொண்டபின் தொடர்ந்தார்: ''அது எனக்குப் பேரதிர்ச்சியாய் அமைஞ்சுது. அவளைப் பெத்தவங்க, மரியாதை மிகுந்த கிராமத்தவங்க. சிறந்த கட்டுப்பாடும் நாகரீகமும் நிறைஞ்ச அவங்க, அவளையும் பயங்கரக் கட்டுப்பாட்டோட தான்

வளர்த்திருக்காங்க. ஆனா, இவ தான் சரியில்லே. 'பண்ணினதுக்கு அனுபவிக்கட்டும்...' அப்படினு அவங்க கடைசியில சொன்னதுல எனக்கு அத்தனை திருப்தி, தெரியுமா...!''

செல்வி எமிலி ப்ரெண்ட்டையே உற்றுப் பார்த்துக் கொண்டு வெரா கேட்டார்: ''என்ன தான் நடந்தது?''

''ஒரு நிமிஷம் கூட என் கூரைக்குக் கீழே தங்க அவளை நான் அனுமதிக்கலே. எதுக்கு? நான் செஞ்சது பச்சாதாபமற்ற ஓர் அதர்மம்னு ஒருத்தர் கூட சொல்ல முடியாது...!''

''என்ன நடந்தது – அவளுக்கு?'' என்று கிசுகிசுப்பாய் விடாது கேட்டார் வெரா.

''அனைவராலும் ஒதுக்கப்பட்ட அந்த ஜந்து... மனச்சாட்சிக்கு எதிரா செஞ்ச ஒரு குற்றம் போதாதுனு... இன்னும் கொடுமையான ஒரு பாவத்தை செஞ்சது. அவ உயிரை அவளே எடுத்துக்கிட்டா.''

வெரா குரல் வெளி வரவேயில்லை. கிலி அடித்த தினுசில் ''அவளை அவளே கொன்னுக்கிட்டாளா?'' என்று கேட்டார். ''தற்கொலை?''

''ஆமா. அவளாவே ஓடிப் போய் வேகமா ஓடும் ஆழமான நதிக்குள்ளே குதிச்சுட்டா.''

வெரா நடுநடுங்கினார். இப்போதும், அமைதியாயும் மிருதுவாயும் இருந்த எமிலியின் போக்கைக் கவனித்தபடி கேட்டார்: ''அவ அப்படி பண்ணிக்கிட்டானு தெரிஞ்ச உடனே, நீங்க எப்படி உணர்ந்தீங்க? நீங்க வருந்தலே? உங்களை நீங்களே நொந்துக்கலே?''

எமிலி, தன்னை இன்னும் முன்னிறுத்தி, ''நான்?'' என்று கேட்டார். ''என்னை நானே நொந்துக்கிற அளவுக்கு இதுல எனக்கு ஒண்ணுமே கிடையாது.''

''ஆனா – உங்களுடைய கடுமை – அது, அவளைத் தூண்டி யிருந்தா...?''

எமிலியின் குரல் கூர்மையாய் வந்தது: ''அவளே செஞ்சது – அவளோட முடிவு அது – அவளுடைய சொந்த பாவம் - அவ தான் கழுவணும் - இல்லே கழுவ வைக்கும் - அதுதான் அவளை விரட்டி யிருக்கு. அவளும் மற்ற நாகரீக பெண்களைப் போல ஒழுக்கமா வாழ்ந்திருந்தா இந்த எதுவுமே நடந்திருக்காது.''

வெராவைத் திரும்பிப் பார்த்தார் எமிலி. அவ்விழிகளில் - சுய

பச்சாதாபமோ, இருப்புக் கொள்ளாமையோ, வருத்தமோ, எதுவும் துளியும் இருக்கவில்லை. அவை - ஸ்திரமாயும், மற்ற அனைவரையும் விட தானே ஒழுக்கசீலர் எனும் அறிவிப்போடும் இருந்தன. அவருக்கு தெரிந்திருந்த நேர்மை, நல்லொழுக்கம் போன்ற எண்ணங்களால் வளையமிடப்பட்டு, **சிப்பாய் தீவு** மலையின் உச்சியில், தலை நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் ஒரே மனிதராய் ஆனார் எமிலி ப்ரெண்ட்.

இருப்பினும்... இப்படி சராசரிக்கு ஒவ்வாது அந்த முதிர் கன்னி நிகழ்ந்தவற்றைக் குரூரமாய் விளக்கிய போதும்... வெராவின் கண்களுக்கு, ஒரு கேலிப் பொருளாய் அவர் துளியும் தோன்றவில்லை.

திடீரென்று – அவர் கோரமாயிருக்கிறார் – என்று மட்டும் நினைத்துக் கொண்டார்.

II

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் சாப்பாட்டுப் பகுதியை விட்டு வெளியேறி மறுபடியும் வீட்டின் வாசல் பகுதிக்கு வந்தார்.

இப்போது ஜட்ஜ் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்... கடல் நோக்கி சாந்தமாய் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

லாம்பர்டும் ப்ளோரும் இடப்பக்கப் பிரதேசத்தில், புகைத்துக் கொண்டிருந்தனர்... ஆனால் பேசிக் கொள்ளவில்லை.

முன்பு போலவே, மறுபடியும் தயங்கினார் டாக்டர். துணிந்து இறங்கி விடலாமா என்ற எண்ணத்தோடு டாக்டரின் கண்கள் ஜட்ஜ் பக்கம் பதிந்தன. ஜட்ஜுடைய தர்க்க ரீதியான புத்திக் கூர்மை கொண்ட வாக்குவாதங்களைப் பற்றி அறிந்தவர் தான் ஆர்ம்ஸ்ட்ராங். இருந்தாலும், குழம்பினார். ஜட்ஜ் வார்க்ரேவுக்கு மூளையிருக்கலாம்... ஆனால் நம் வயசில்லை... அவர் வயதானவர். இக்கட்டான இந்நிலையில், அவசரமாய் தேவைப்படுவது, மளமளவென இயங்கவல்ல ஒருவனுடைய ஆலோசனையே என முடிவெடுத்துக் கொண்டார் ஆர்ம்ஸ்ட்ராங்.

உடனே குழப்பம் நீங்கியது. முடிவெடுத்துக் கொண்டார்.

''லாம்பர்ட்... உங்களோட சில நிமிஷங்கள் நான் பேச முடியுமா?'' – கேட்டார் டாக்டர்.

பிலிப் விழித்தான். ''நிச்சயமா.''

இரண்டு ஆடவர்களும் வீட்டுப் பகுதியை விட்டுக் கிளம்பினர். சரிவிலிறங்கி கடல் நீர் கால்களை அளையும் வரை போனார்கள். பேசுவது வேறு ஒரு காதுக்கும் கேட்காத தொலைவை அடைந்ததும், ஆர்ம்ஸ்ட்ராங் துவங்கினார்: ''எனக்கு உங்க ஆலோசனை வேணும்.''

லாம்பர்டின் புருவங்கள் உயர்ந்தன. ''ஹேய் ஹேய்... எனக்கு மருத்துவம் பற்றி ஒண்ணும் தெரியாது'' என்றான்.

''நான் கேட்க வந்தது ஒரு பொதுவான சமாச்சாரம் பற்றி.''

''அப்படியா? அப்ப சரி.''

ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்: ''வெளிப்படையா சொல்லுங்க... இப்போ இங்கே இருக்கிற நிலைமை பற்றி என்ன நினைக்கிறீங்க?''

லாம்பர்ட் சில நிமிடங்கள் தனக்குள் போனான். பிறகு, ''அது தான் தானாவே தெரியுதே...! தெரியலே...?'' என்றான் சட்டென்று.

''அந்தப் பொம்பளைப் பற்றிய விஷயத்துல... உங்களுடைய ஊகங்கள் என்னென்ன? ப்ளோர் சொன்னதை நீங்க ஒத்துக்கறீங்களா?''

சிகரெட்டை இழுத்து புகையைக் காற்றுக்குள் துப்பினான் பிலிப். அப்படியே சொன்னான்: ''அது நிச்சயம் சாத்தியம் தான் - சாத்தியமா எனும் அடிப்படையில் மட்டும் பேசினா.''

''அப்படிச் சொல்லுங்க.''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் குரலில், பளு ஒன்று குறைந்து போன தொனி வெளிப்பட்டது.

பிலிப் லாம்பர்டும் அப்படி ஒன்றும் முட்டாள் கிடையாது. தொடர்ந்தான்: ''அதாவது – திரு மற்றும் திருமதி ரோஜர்ஸ் ரெண்டு பேரும்... கொலையை முடிச்சுட்டு அதுலேருந்து காதும் காதும் வெச்சா மாதிரி வெற்றிகரமா வெளியேறிட்டாங்க என்ற நம்பிக்கையின் அடிப்படையில சொன்னேன். அவங்களால தப்பிக்க முடியாம போற அளவுக்கு எனக்கு ஒரு தடையும் தென்படலே. அவங்க எப்படி முடிச்சிருப்பாங்கனு நீங்க நினைக்கிறீங்க, டாக்டர்? கிழவிக்கு விஷம் வெச்சு...?''

''அதை விட சுலபமா இருந்திருக்கணும்'' என்று மெதுவாய் பேச ஆரம்பித்தார் ஆர்ம்ஸ்ட்ராங். ''அந்த ஜெனிபர் மூதாட்டி எதனால நோய்வாய்ப்பட்டிருந்தாங்கன்னு, இன்னிக்குக் காலையில ரோஜர்ஸை நான் கேட்டுப் பார்த்தேன். அவன் சொன்ன பதில் எல்லாத்தையும் விளக்கிச்சு. மெடிக்கல் பதங்களைப் போட்டு போரடிக்க விரும்பலே... ஆனா, சில வகையான இதய நோய்களுக்கு, அமில் நைட்ரைட் கொடுப்போம். மாரடைப்பு ஏற்பட்டா... உடனடியா அமில் நைட்ரைட் அடங்கிய பாட்டில் திறக்கப்பட்டு... மூச்சுக் காற்றை ஆழமா சுவாசிப்பதன் மூலமா அது உள்ளுக்கிழுக்கப்படும். ஒரு வேளை அமில் நைட்ரைட் தருவது மறுக்கப்பட்டா – பிலிப்... அதன் விளைவு மிக சுலபமா ஒரு மரணத்துல முடியும்.''

''இத்தனை சுலபமா?'' என்று சொன்ன பிலிப் லாம்பர்ட் சிந்தனையாய் குறிப்பிட்டான்: ''முடிச்சுடு'னு... தூண்டியிருக்கும் போல!''

ஏற்றுக் கொண்டார் டாக்டர். ''மெனக்கெட்டு செய்ய வேண்டியது இதுல ஒண்ணுமே இல்லே. விஷத்தை வாங்கி – மூளையைத் திருகி ஜாக்கிரதையா திட்டமிட்டு – அதைக் கொடுத்து — இப்படி எதுவுமே கிடையாது. ஜஸ்ட், மருந்தை நிறுத்திடணும்... கொடுக்காம. டாக்டரைத் தேடித் தேடி ஓடியிருக்கான், ரோஜர்ஸ். வேற ஒரு மனுஷனுக்கும் இந்த விஷயம் கசியாது என்பதுல ரெண்டு பேருமே நிச்சயமா இருந்திருக்காங்க.''

''வேற யாருக்காவதும் தெரிஞ்சா கூட என்ன... இவங்களுக்கு எதிரா எதையும் என்னிக்கும் நிரூபிக்க முடியாது'' என்று கூடுதலாய் சொன்னான் பிலிப். சொல்லிவிட்டு, சற்றே கோபங்கொண்டவனாய் குறிப்பிட்டான்: ''ஓஹ்... இது, விஷயத்தை அடி ஆழம் வரை விளக்குது.''

ஆர்ம்ஸ்ட்ராங், புதிர்ப் போடப்பட்டவராய், ''மன்னிக்கணும், புரியலே'' என்றார்.

''அதாவது – சிப்பாய் தீவுனா என்ன என்பதையே இது விளக்குதுன்னேன். நாமெல்லாம் கூட்டமா இங்கே இழுத்து வந்துப் போடப்பட்டிருப்பதன் அர்த்தம் அடி ஆழம் வரை விளங்குதுன்னேன். இங்கே குற்றங்கள்... கொலைக் குற்றங்கள் வரை கூட பண்ணலாம்...

அது கரையேறி நீதிமன்றம் வரை போகாது!''

சொல்லி முடித்த பிலிப்புக்கும் கேட்ட டாக்டருக்கும் ஒரு சேர நெஞ்சடைத்தன. பிலிப் தொடர்ந்தான்: ''இப்படி ஓர் உதாரணம் தான் ரோஜர்ஸுடையது. இன்னும் வேணுமா? கிழ வார்க்ரேவ்! சட்டத்துக்குள்ளே வாகா உட்கார்ந்துக்கிட்டு கொலை செஞ்சவர், அவர். இதையும் நீதிக் கூண்டுல ஏற்ற முடியாதே!''

ஆர்ம்ஸ்ட்ராங் குறியாய் கேட்டார்: ''நீங்க அந்தக் கதையை நம்பறீங்களா?''

''ஓ...! ஆமாம், ஆமாம். அதை நான் நம்பறேன். வார்க்ரேவ், ஷெல்ட்டனைக் கொன்றார்... அவன் நெஞ்சு பார்த்துக் குறி தவறாம ஈட்டி எறிந்து கொல்வது போலவே ஷெல்ட்டனைக் கொன்றுள்ளார், நீதிபதி. ஆனா, அதை, சட்டம் எனும் பாதுகாப்பு வட்டத்துக்குள்ளே நின்னுக்கிட்டு... நீதிபதியின் கவுனுக்குள்ளே வசதியா பதுங்கிக்கிட்டு செஞ்சு முடிச்சுள்ள மகா புத்திசாலி, இவர்! அதனால, சாதாரண நடைமுறை வழிகள்ல, இக்கொலையைக் குற்றவாளி கூண்டுக்குள்ளே ஏற்ற முடியாது, இல்லையா...?!''

மின்னல் போல ஒரு திடீர் வெளிச்சம் ஆர்ம்ஸ்ட்ராங்கின் சிந்தனையை வெட்டி நின்றது.

'ஆஸ்பிட்டலில் கொலை. அறுவை சிகிச்சை மேடையில் கிடத்திக் கொலை. பாதுகாப்பானது – பாதுகாப்பானது... நீதிமன்றக் குற்றவாளிக் கூண்டு வரை ஏறாத அளவுக்கு...!'

பிலிப் லாம்பர்ட், ''இப்படிப்பட்ட நோக்கம் கொண்டவன் தான், இந்த ஓவன் - அதுக்கான களம் தான், இந்த **சிப்பாய் தீவு**...!'' என்றான்.

ஆர்ம்ஸ்ட்ராங் காற்றினை ஆழ இழுத்து மூச்சு விட்டார். ''இப்போ, விஷயத்தின் ஆணி வேர் கொஞ்சமா விளங்குது'' என்றார். ''ஆனாலும் - நம்மை எல்லாரையும் இங்கே கொண்டு வந்து ஒண்ணா சேர்த்திருப்பதற்கான உண்மையான காரணம்?''

''நீங்க என்னவா இருக்கும்னு நினைக்கறீங்க?'' என மறு கேள்வி கேட்டான் பிலிப்.

அவசரமாய் ஆரம்பித்தார் ஆர்ம்ஸ்ட்ராங்: ''ஏத்தல் மரண விஷயத்துக்கு ஒரு நிமிஷம் போவோம். அதுக்கு என்னென்ன சாத்திய காரணங்கள் இருக்கு? ரெண்டு. முதலாவது: மறைச்சு வைக்கப்பட்ட

அத்தனையையும் அவ காட்டிக் கொடுத்துடுவா எனும் பயத்தால, ரோஜர்ஸ் தான் கொன்னிருக்கான். ரெண்டாவது: அகப்பட்டு விட்டோம் எனும் பயத்தால... தன்னம்பிக்கை இழந்து அவளாவே ஒரு முடிவைத் தேடிக்கிட்டா.''

இதற்கு பிலிப், ''தற்கொலையா...? ம்?'' என கேட்டான்.

''ஏன்? பின்னே நீங்க என்ன சொல்ல விரும்பறீங்க?''

பிலிப் பேசினான்: ''அப்படி இருந்திருக்கலாம் - ஆமாம் - தற்கொலையா இருந்திருக்கலாம் - ஆனா, அதே போலவே ஆன்டனி மார்ட்ஸனும் இறக்காம இருந்திருந்தா...! பனிரெண்டு மணி நேரத்துக்குள்ளே இரண்டு தற்கொலைகள் என்பது, விழுங்கி ஜீரணிக்க முடியாத ஓவர் டோஸ்! அந்த ஆன்டனி மார்ட்ஸன்... எந்த விபரீத சிந்தனைகளும் அற்று இளமையை மட்டுமே நினைத்தபடி துள்ளித் திரிந்த அந்த இளங்காளை... வேணும்னே போய் தன்னைத் தானே கொன்னுக்கிட்டான்னு நீங்க சொன்னா... ம்... அந்த ஊகம் தான் இவ்வருடத்திய முதல் தர நகைச்சுவையா இருக்க முடியும்! எப்படியிருந்தாலும், அவன் கைக்கு எங்கேயிருந்து அது வந்தது? எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், சட்டைப் பைக்குள்ளே பத்திரமா வெச்சுக்கிட்டு ஊரூரா சுற்றி வரும் சமாச்சாரம் கிடையாது, இந்த பொட்டாஷியம் சயனைட்!''

''புத்தியுள்ள யாரும் சயனைடைப் பாக்கெட்டுக்குள்ளே வெச்சுக் கிட்டு சுத்த மாட்டாங்க தான்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''தொந்தரவு பண்ற தேனடை... எலிப் பொறி... இது போல எதையாவது முச்சூடக் கலைக்க நினைக்கிறவங்க தான்... வயல்ல வேலை செய்றவங்கனு வெச்சுப்போமே... பாக்கெட்டுலயே வெச்சுக்கிட்டு அலைவாங்க.''

''தன்னோட வயல் மீதோ... மாளிகை மீதோ... தோட்டம் துரவு மீதோ... தீரா ஆர்வம் கொண்ட ஒருத்தர்! இல்லே? ஆஹ்...!? இதிலேயும் ஆன்டனி மார்ட்ஸன் வரலே. இந்த சயனைட் விஷயத்தை இன்னும் அதிகமா விவாதிக்க வேணுமோனு எனக்குத் தோணுது டாக்டர். இங்கே வரும் போதே தன்னைத் தானே கொன்றுக் கொள்ள ஆன்டனி முடிவு கட்டியிருக்கணும்; அதனால அதுக்கான முழு ஏற்பாட்டோட இங்கே வந்திருக்கணும்... அப்படியில்லைனா.....''

ஆர்ம்ஸ்ட்ராங் தன்னைத் தயார் செய்துக் கொண்டு, ''இல்லேனா?''

என்றார்.

பிலிப் லாம்பர்ட் அசட்டுச் சிரிப்புக் காட்டி, ''போட்டுப் பார்க்கிறீங்களா?'' என கேட்டான். ''உங்க உதட்டு நுனியிலேயே விடை தொங்கிக்கிட்டு இருக்கும் போது... என் வாய்லேந்து ஏன் பிடுங்கப் பார்க்கிறீங்க? வேறென்ன இருக்க முடியும்... ஆன்டனி மார்ட்ஸன், கொல்லப்பட்டான்.''

III

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் நீண்ட மூச்சு ஒன்றினை அடி நாபியிலிருந்து விடுவித்துக் கொண்டார். ''அந்த ஏத்தல்?'' எனக் கேட்டார்.

லாம்பர்ட் மெதுவாய் பேசலானான்: ''திருமதி ரோஜர்ஸ் இறக்கலேனா, ஆன்டனி தற்கொலை செஞ்சுக்கிட்டார்னு நம்பியிருப்பேன் (அப்படி நம்பறது கஷ்டாயிருந்தாலும்). ஆன்டனி மரணம் இடம்பெறாம போயிருந்தா, ஏத்தலின் மரணத்தைத் தற்கொலைனு (வெகு சுலபமா) ஏத்துக்கிட்டிருப்பேன். ரோஜர்ஸ் தான் அவனுடைய மனைவியைத் தன் வழியிலிருந்து வெட்டி எறிஞ்சிருப்பான்னு நிச்சயம் முடிவு கட்டியிருப்பேன் - எதிர்பாராம ஆன்டனி மார்ட்ஸன் மட்டும் மரணமடையாம இருந்திருந்தா. ஆனா, இந்நிலைமையில, மிஸ்டர் ஆர்ம்ஸ்ட்ராங்... அவசியமா நமக்கு இப்போ தேவையானது என்ன தெரியுமா?! ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றா இரண்டு மரணங்கள் ஏன்... எப்படி நடந்தன என்பதை விளக்க மிகச் சரியான காரணங்கள்... தியரி. இது அவசியமா எனக்கு வேணும்.''

''இதுக்கு என்னால கொஞ்சம் உதவி பண்ண முடியும்னு நம்பறேன்'' – சொன்னார் டாக்டர். தொலைந்து போன இரண்டு பீங்கான் சிப்பாய் பொம்மைகள் குறித்து ரோஜர்ஸ், ஆர்ம்ஸ்ட்ராங்கிடம் சொல்லியிருந்த உண்மையை விளக்கினார் அவர்.

''ஆமாமாம்... அந்தச் சின்ன சிப்பாய் பொம்மைகள்...'' என்ற

லாம்பர்ட், ''நேத்து ராத்திரி நாம சாப்பிடும் போது அதுல பத்து இருந்ததே. நிச்சயமா. இப்போ அதுல எட்டு மட்டும் இருக்குனா சொல்றீங்க?''

ராகமாய் பாடினார் ஆர்ம்ஸ்ட்ராங்:

பத்து சிப்பாய் பையன்கள், விருந்து சாப்பிட போனார்கள்;
ஒருவனின் தொண்டை அடைத்துக் கொள்ள, மிஞ்சினர் ஒன்பது.

ஒன்பது சிப்பாய் பையன்கள், விடிய விடிய பேசி முடித்தனர்;
ஒருவன் மட்டும் நீ...ண்ட நேரம் தூங்கி விட, மிஞ்சினர் எட்டு.

இரண்டு ஆண்களும் சட்டென ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கிண்டலாய் சிரித்துக் கொண்ட பிலிப், கையில் முடிந்திருந்த சிகரெட் துண்டினை வீசியெறிந்தான்.

''இங்கே நடந்த இரு சம்பவங்களோட இந்தக் கவிதை என்னமா ஒத்துப் போகுது...! மூச்சுக் காத்துக்கு தத்தளிச்சு ஆன்டனி மரித்ததும்... ஏத்தல் விடிய விடிய விழித்திருந்து மறு நாள் எழுந்திருக்காம தூங்கிப் போனதும்...!''

''இதனால என்ன புரியுது?'' – கேட்டார் ஆர்ம்ஸ்ட்ராங்.

''இதனால... அடுத்து ஒரு சிப்பாய் காணாமப் போவானோ...?! ஆஹா...! ஓவன்! மிஸ்டர் எக்ஸ்! U N OWEN! UNOWEN... UNKNOWN... முகந்தெரியா கிரகண மனிதன்!''

''ஆஹ்...'' – ஆர்ம்ஸ்ட்ராங் விடுதலையானதைப் போல பெருமூச்செறிந்தார். ''நீங்க ஒத்துக்கறீங்க. ஆனா நிதர்சனத்தையும் கொஞ்சம் கவனிக்கணும். நாம எட்டு பேர்... ரோஜர்ஸ் மற்றும் அவன் மனைவி... இந்த எண்ணிக்கையை தவிர, இந்த தீவுல வேற ஒரு ஜீவன் கிடையாதுனு கழுத்தைப் பிடிச்சுக்கிட்டு சத்தியம் பண்ணியிருக்கான் ரோஜர்ஸ்.''

''ரோஜர்ஸின் கணிப்பு தப்பா இருக்கணும்! இல்லே... அவன் பொய் சொல்லணும்!''

ஆர்ம்ஸ்ட்ராங் மறுப்பாய் தலையசைத்தார். ''அவன் பொய் சொல்ற மாதிரி எனக்குத் தோணலே. அவன் பயந்திருக்கான்... பயப்படறான். தன்னைத் தானே மறந்துப் போற அளவுக்கு பயப்படறான் அவன்.''

ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டிய பிலிப், ''இன்னும் அந்த மோட்டார் படகு வந்தபாடில்லை. இது – அந்த கிரகண மனிதனின் ஏற்பாட்டினை நம் முன்னாடி மறுபடியும் கொண்டு வந்து நிறுத்துது. அந்த UNKNOWN, தன் திட்டம் முழுக்க அரங்கேற்றி முடிக்கிற வரைக்கும், **சிப்பாய் தீவு**, தனிமைப்படுத்தப்பட வேண்டும்.''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் முகம் வெளிறியது. '' 'அவன்' – பித்துப் பிடிச்சு உலவிக் கொண்டிருக்கும் ஒரு பயங்கரமானவன் - அப்படினா நம்பறீங்க?!''

இதற்கு பேசிய பிலிப் லாம்பர்டின் குரலில் ஒரு புது தைரிய வட்டம் வந்தமர்ந்திருந்தது. ''ஒரு விஷயத்தை இன்னும் இந்த கிரகண மனித னான ஓவன் தெரிஞ்சுக்கலே.''

''என்னது அது?''

''இந்தத் தீவு ரொம்பப் பெரிசு கிடையாது. ஒரு பெரிய சைஸ் பாறை... அவ்வளவு தான். ஒரு சின்ன முயற்சி எடுத்துக்கிட்டு... தீவைக் கொஞ்சம் அலசுவோம். அப்போ... ரொம்பச் சுலபமா... 'அவனை' சுரண்டி எடுத்துடலாம்.''

''இத்தனை கேடித் தனங்களைத் திட்டமிட்டு செயல்படுத்த ஆரம்பிச்சுள்ள அவன்... ஆபத்தானவனா இருக்கலாம், பிலிப்'' – எச்சரிக்கை செய்தார் டாக்டர்.

கலகலவென சிரித்தான் பிலிப். ''ஆபத்தானவன்? அந்த நரிப்பயலைப் பார்த்து யார் பயப்படப் போறாங்க? அவன் என் கையில கிடைக்கட்டும்... நான் எத்தனை கொடூரமானவன்னு காட்டறேன்.''

சிறு தாமதம் நிலவியது. பிறகு பிலிப் சொன்னான்: ''கிளம்புவோம். நமக்கு உதவும்படி முதல்ல ப்ளோரைக் கட்டியிழுப்போம். சில இக்கட்டுகள்ல அவர் செமத்தியான உதவியா இருப்பார் - இன்ஸ்பெக்டர் இல்லே...?! மற்றவங்க... ஓய்வு பெற்ற ஜெனரல்... கிழ வார்க்ரேவ்... இதெல்லாம் நகர முடியாத கற்கள். விட்டுடுவோம். நாம மூணு பேரும் இந்த ஜோலியை முடிப்போம்.''

அத்தியாயம் 8

I

ப்ளோரைப் பிடித்து இவர்களின் திட்டத்துக்குள் திணிப்பது சுலபமாயிருந்தது. இவர்களுடைய யோசனைக்கு உடனடி ஒப்புதல் தந்தார் அவர்.

''நீங்க சொன்ன அந்த பீங்கான் பொம்மை சம்பவம்... எல்லாத் தையும் விபரீதமா மாத்தி யோசிக்க வைக்குது, ஸார். கோமாளித்தன மாவும் இருக்கு! வேற ஒரு மாற்று மனிதனைக் கருவியா வெச்சுக்கிட்டு, அவன் போர்வையில மறைஞ்சபடி இந்த UNKNOWN தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுவதா தோணுது... நீங்க அப்படி நினைக்கலியா...?''

''விளக்கமா பேசுங்க, ஸார்.''

''ஓகே. விளக்கறேன். மார்ட்ஸனின் ரத்தக் கொதிப்பு கிடுகிடுவென ஏறுது... அவர் திருகப்படறார்! தானாகவே விஷம் சாப்பிட்டு இறக்கிறார். இந்த ரோஜர்ஸ்! அவனும் முறுக்கேறி தன் சொந்த மனைவியையே போட்டுத் தள்ளிடறான். எல்லாமே அந்த UNO திட்டப்படி!''

ஆர்ம்ஸ்ட்ராங் மறுத்தார். சயனைட் இருப்பினைச் சுட்டிக் காட்டினார். வலியுறுத்தினார்.

இதனை ப்ளோர் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ''ஆமாம். அதை நான் மறந்துட்டேன். சயனைடைப் போய் யாரும் பாக்கெட்டுல எடுத்து வெச்சுக்கிட்டு கிளம்பப் போறதில்லே. ஆனா, அது எப்படி அவருடைய ஒயின் கப்ல வந்தது, ஸார்?''

பிலிப் பேசினான்: ''இதையே தான் நானும் யோசிச்சு யோசிச்சு பார்த்தேன். அன்னிக்கு ராத்திரி பல முறை குடிச்சார் மார்ட்ஸன். அவர் கடைசியில குடிச்ச நேரத்துக்கும் அதுக்கு முன்னாடி குடிச்ச நேரத்துக் கும் இடையில... குறிப்பிடும்படியான இடைவெளி இருந்தது. இந்த நேரத்துல அவர் குடிச்ச கப், அங்கிருந்த ஏதோவொரு மேஜையில இருந்தது. அது எது? என்னைப் பொறுத்தவரைக்கும்... நான் தவறுதலா

கூட இருக்கலாம்... அது, ஜன்னலுக்கு அருகேயிருந்த சின்ன மேஜையில் இருந்தது. ஜன்னல் திறந்திருந்தது. யாராவது, ஒரு பிடி சயனைடை அள்ளி ஒளிஞ்சிருந்து அந்த கப்ல போட்டிருந்தா...?!''

நம்ப முடியாதவராய் ப்ளோர் சொன்னார்: ''நம்ம எல்லார் கண்லேயும் மண்ணைத் தூவிட்டா, ஸார்?''

லாம்பர்ட், ''நம் கவனமெல்லாம வேற எங்கேயோ சுத்திக்கிட்டு இருந்தது'' என்றான் வறட்சியாய்.

''அது உண்மை தான்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங், மெதுவாய். ''நாம எல்லோரும் மூர்ச்சையாகிக் கிடந்தோம். கால் போன போக்கில நடந்துக்கிட்டு... சம்பந்தமில்லாம என்னத்தையெல்லாமோ நினைச்சுக் கிட்டு... வாய்க்கு வந்தபடி உரையாடிக்கிட்டு...! விவாதங்கள்... அவதூறுகள்... கோபங்கள்... இதனால நினைக்கிறேன்... பிலிப் சொல்வது கூட சாத்தியம் தான்.''

''நிஜம் என்னன்னா... அது நடந்திருக்கு. கலந்திருக்காங்க. ஆனா – எப்படி?'' என்று ப்ளோர் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். ''சரி... திட்டமிட்ட காரியத்தை ஆரம்பிப்போம். கிளம்புங்க. ஆங்... யார் கிட்டேயாவது துப்பாக்கி இருக்கா? ஒரு பாதுகாப்புக்குத் தான்...! ப்ச்... வாய்ப்பில்லே. ஜாலியா இருக்கக் கிளம்பி வரும் போது --- --- ---''

''என்கிட்டே ஒண்ணு இருக்கு'' என்று தனது பேண்ட் பையைத் தட்டியபடி இடைமறித்தான் லாம்பர்ட்.

ப்ளோரின் கண்கள் மிக அகலமாக விரிந்தன. சராசரியற்ற குரலில் ''அதை எப்பவுமே எடுத்துக்கிட்டு தான் கிளம்புவீங்களா, ஸார்?'' என்றார் அவர்.

''வழக்கமா... அப்படித்தான்! சில இறுக்கமான இடங்கள்ல இருந்தவன் நான், தெரியுமா?''

''ஓஹ்!'' என்று விட்டு தொடர்ந்தார் ப்ளோர்: ''இங்கே இருப்பதை விட இறுக்கமான... ஆபத்தான வேறோர் இடத்துல நீங்க இருந்திருக்க முடியாதுனு நினைக்கிறேன்! ஆங்... இந்தத் தீவுக்குள்ளேயே தான் 'அந்த' மர்ம மனுஷன் பதுங்கியிருக்கான்னா... அவனுக்கு ஆயுதம் தந்து உதவற வாட்டசாட்டமான ஆளும் நிச்சயமா இங்கேயே தான் எங்கேயாவது இருந்தாகணும். என்ன சொல்றீங்க...?! கத்தி கபடா

பிச்சுவா... இப்படி...!''

ஆர்ம்ஸ்ட்ராங் சின்னதாய் இருமினார்.

''உங்க கணிப்பு தப்பு, ப்ளோர். மூளைப் பிசகி இது போல விசித்திர கொலைத் திட்டங்கள் போடும் ஆட்கள்... வழக்கமா... அமைதியாவும் அடக்கமாவும் தான் இருப்பாங்க...! வசீகரர்கள்!''

இதற்கு ப்ளோர், ''இந்த மர்ம மனிதன் அப்படி சுந்தரனா இருப்பான்னு எனக்குத் தோணலே, டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்'' என்றார்.

II

தீவினைச் சுற்றி வர மூவரும் கிளம்பினர்.

இந்தச் சிற்றுலா, எதிர்பாராத அளவுக்கு சின்னதாகவும் சுலபமான தாகவும் அமைந்தது. கரையை நோக்கியிருந்த தென் மேற்கு பகுதி களின் மலை முகடுகள் எவ்வித தடையுமின்றி அப்படியே திபுதிபு வென்று கீழிருந்த கடலுக்குள் குவிந்து இறங்கின.

இது தவிர்த்த ஏனைய தீவுப் பகுதிகளில் மரங்களோ புதர்களோ தாவரங்களால் மூடிக் கிடந்த பிரதேசங்களோ இல்லை. அனைத்தும் திறந்த வெளி தான். மூவரும் வரிசைக்கிரமமாக ஜாக்கிரதையாக செயல்படத் துவங்கினர். மலையுச்சி, நீர்வீழ்ச்சியின் உச்சி என அனைத்து உச்சிப் பகுதிகளிலும் தொடங்கி... கொஞ்சமாய் புதர் போல தென்பட்டாலும் அதனையெல்லாம் அடித்து, விலக்கி, உலுக்கித் தேடி... இப்படியே அடிவாரம் வரை அலசி... சீராய் இல்லாது அகன்று திடீரென்று துவாரம் ஒன்றை ஏற்படுத்தியிருந்த பாறைப் பகுதியை யெல்லாம், அது ஏதாவது ஒரு குகைக்கான நுழைவாயிருக்குமோ என்ற சந்தேகத்தில் துளாவி... முயன்றனர். அங்கு குகைகளெல்லாம் இல்லவே இல்லை.

ஓடிய அருவி ஒன்றைப் பின்தொடர்ந்து, அது உருவாக்கி ஓடிக் கொண்டிருந்த சிறு ஆற்றின் கரைகளிலெல்லாம் பதுங்கு இடங்கள் ஏதாவது இருக்கின்றனவா எனத் துப்பறிந்தபடி அடிவாரம் வந்து சேர்ந்த

போது... அங்கு, ஜெனரல் மார்கரெட், கடலையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். அலையின் பரந்த இறகுகள் எழுந்து எழுந்து பாறைகளில் விழுந்து உடைந்த வண்ணமிருந்த அந்த இடம், அத்தனை அமைதியான ஓரிடமாயிருந்தது. முதிய ஜெனரல், நெட்டைக் குத்தலாக சம்மணமிட்டு... அடி வானத்தையே விரிந்த விழி களால் உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

தீவில் எதிரியைத் தேடிக் கொண்டு வந்துள்ள இந்த மூவரின் அருகாமையை அறிந்தவராகவே அவர் தோன்றவில்லை. தன்னிலை மறந்துக் கிடந்த ஜெனரலின் நிலை, மூன்று பேருக்குள்ளும் ஒரு வித அசௌகரியத்தை உண்டாக்கியது.

'இது சாதாரண மனித நிலையா தோணலையே...' என நினைத்துக் கொண்டார் ப்ளோர். 'தியானத்தின் உச்சத்தில், தன் நிலை மறந்து, ஆழ்மன எல்லைகளுக்குள் போய்விட்ட ஓர் அசாதாரணக் காட்சியா யில்லே, இருக்கு...!'

இப்படி நினைத்து விட்டு தொண்டையைச் சரி செய்தபடி உரையாடல் ஒன்றினை ஆரம்பிக்கும் பாணியில் சொன்னார்: ''அற்புத மான அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கீங்க, ஸார்.''

சட்டென்று கோபமான ஜெனரலின் முகம், சுளித்துக் கொண்டது. ''இன்னும் கொஞ்ச நேரம் தான் கையில இருக்கு - ரொம்பக் கம்மியான நேரம். என்னை ஒருத்தரும் தொந்தரவு செய்ய வேண்டாம். எச்சரிக் கிறேன்.''

இதற்கு ப்ளோர், அன்பாய் பதில் தந்தார்: ''நாங்க உங்களைத் தொந்தரவு பண்ண மாட்டோம். நிச்சயமா. இந்தத் தீவினை சுற்றிப் பார்க்க புறப்பட்டோம். நம்மைத் தவிர வேற யாராவதும் இங்கே பதுங்கியிருப்பாங்களோனு, ஒரு சந்தேகம்...!''

ஜெனரலின் கோபம், அவருடைய முகத்தில் கடுங்கோபமாய் மாறிக் கொண்டிருந்தது. ''புரியலே. உங்களுக்குப் புரியலே. உங்களுக்குக் கொஞ்சங்கூடப் புரியலே. தூர... போங்க. போயிடுங்க. ம்.''

ப்ளோர் பின்வாங்கிக் கொண்டார். சற்றுத் தள்ளியிருந்த இருவ ரோடும் சேர்ந்துக் கொண்ட போது, ''அவன் பைத்தியக்காரன். அவன் கூட பேசறதுல துளி லாபம் கிடையாது'' என்று குறிப்பிட்டார்.

லாம்பர்ட் ஆர்வம் மேலோங்க, ''என்ன சொன்னது கிழம்?'' என

கேட்டான்.

ப்ளோர் தோள்களைக் குலுக்கிப் புரியவில்லை என உணர்த்தினார். சொன்னார்:

''என்னவோ கொஞ்சங்கூட நேரம் கிடையாதுன்னார்... எதுக்கு? அவரை யாரும் தொந்தரவு பண்ணவே கூடாதுன்னார்... ஏன்?''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கின் முகம் சின்னதானது. முணுமுணுத்தார்:

''இது எனக்கு ஆச்சரியமா இருக்கு...''

III

தீவில் நடத்திய தேடுதல் வேட்டை ஒரு வழியாக முடிவுக்கு வந்து விட்டது என்றே சொல்லலாம். மக்கள் வாழும் கடற்கரை பகுதியைப் பார்த்தபடி, தீவிலிருந்த மலை உச்சியில் மூவரும் நின்றுக் கொண்டிருந்தனர். எந்தத் திசையிலும் படகுகள் காணோம். காற்று மட்டும் புத்துணர்ச்சியாயிருந்தது.

லாம்பர்ட் சொன்னார்: ''மீன்பிடிப் படகுகளைக் கடல்ல காணோம். புயல் எச்சரிக்கையாயிருக்கும். இங்கேயிருந்து கரையில இருக்கும் கிராமத்தைப் பார்க்கலாம்னா... அதுவும் முடியலே... ச்சே...! கையைக் காலைக் காட்டி ஏதாவது செஞ்சு யாரையாவது கூப்பிட முடியுதா...?! ம்ம்... முடியலே. ப்ச்!''

ப்ளோர், ''இந்த உச்சியில பெரிசா நெருப்பு மூட்டி பார்ப்போமா...?'' என்று ஆலோசித்தார்.

லாம்பர்ட் கடுகடுப்பாய், ''அதனால எந்தப் பிரயோஜனமும் வந்துடப் போறதில்லே... முதல்லேயே இவை எல்லாத்தையும் கவனிச்சிட்டிருப்பாங்க'' என்றான்.

''என்ன சொல்றீங்க, பிலிப்?''

''இந்தத் தீவில் கொண்டு வரப்பட்டு நாம தனிமைப்படுத்தப் படணும்... அதானே இலக்கு. இதுக்கு வேண்டிய எல்லா தற்காப்பு நடவடிக்கைகளையும் முன்னாடியே கவனிச்சிருப்பாங்கனு சொல்ல

வரேன்... ஓகே? தீவுல பிணைக் கைதிங்க இருக்காங்க... மிக ஆபத்தானவங்க... அவங்க தப்பிக்க ஏதாவது சைகை தரலாம்... நம்பிடாதீங்க... இப்படி! இல்லே, அங்கே ஒரு மந்திரவாதிக் கூட்டம் நாடு கடத்தப்பட்டிருக்கு... மிகக் கொடூரமானவனுங்க... என்ன சைகை காட்டிக் கூப்பிட்டாலும் உதவ மட்டும் போயிடாதீங்க... அது உங்க உயிருக்கு மட்டுமில்லே உங்க கூட்டத்துக்கே உலை வெச்சுடும்... இப்படி!''

''இதையெல்லாம் அந்தக் கிராமத்தானுங்க உடனே உண்மைனு நம்பிடுவாங்கன்னா சொல்றீங்க?''–சந்தேகமாய் கேட்டார் ப்ளோர்.

''உண்மையை விட – ஒரு நம்பிக்கையை உருவாக்குவது சுலபம்! இப்படிக் கதை கட்டாம, 'தம்பிகளா... நான் பத்து பேரைக் கொண்டு போய் தீவுல போட்டுக் கொல்லப் போறேன்... அது வரைக்கும், அவங்க என்ன உதவி கேட்டாலும் வரிஞ்சுக் கட்டிக்கிட்டு உதவப் போய் என் திட்டத்தை சிதைச்சுடாதீங்க'னா சொல்ல முடியும்...?! என்ன ப்ளோர் நீங்க...?!''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் பேசினார்: ''இப்படி இருக்குமோனு தோணும் போதெல்லாம் கூட, இருக்காதுனு எனக்கு நானே சமாதானம் சொல்லிக்கிட்டு நம்பாம இருந்த நிமிடங்கள் பல உண்டு. இருந்தாலும் --- --- ---''

பிலிப் லாம்பர்ட், தன்னுடைய மேலுதடு பின்னுக்கு நகர்ந்து அப்போது ஒரு நரி போல பற்கள் பளீரென தெரியும்படி கிண்டலாய் சிரித்துக் கொண்டு சொன்னான்: ''இருந்தாலும் --- --- ---? ஆங்...! அது தான் உண்மை டாக்டர்! நீங்களே ஒத்துக்கிட்டீங்க, பாருங்க!''

இவர்கள் நின்றிருந்த கரையோரமாய் கடலடிப் பகுதியை நோட்டமிட்டபடியிருந்த ப்ளோர், குறிப்பிட்டார்: ''இங்கேயிருக்கும் பாறையைப் பிடிச்சுக்கிட்டு யாரும் கீழேயிறங்கிப் பதுங்கியிருக்க மாட்டாங்க, இல்லே?''

ஆர்ம்ஸ்ட்ராங் மறுத்துத் தலையசைத்தார்: ''சந்தேகம் தான். இதுக்குள்ளே எங்கே பதுங்குவான் அவன்?''

''செங்குத்தாய் நீளும் இந்த மலை முகப்பில் துளை இருக்கலாம்... அதன் வழியா மலைக்குள்ளேயே கீழே இறங்கி... கடலுக்கடியில் தங்கி...?! தெரியலே! ஒரு படகு இருந்தா, அப்படியே கரையோரமா

ஓட்டி, தீவின் கரை முழுக்க ஒரு சுற்று வந்து தேடலாம்.''

''கடவுளே'' என புன்னகைத்த லாம்பர்ட், ''படகு கையில இருந்தா, நாம என்னிக்கோ கரை போய் சேர்ந்திருப்போம்'' என்றான்.

''ஓஓஓ...! ஆமாம், ஸார்!''

லாம்பர்ட் சட்டென சொன்னான்: ''இந்த மலையுச்சியில பதுங்கு இடம் இல்லை என்பதை முதல்ல முழுசா ஊர்ஜிதப்படுத்திப்போம். எல்லா இடத்தையும் பார்த்தாச்சு... ஓரிடம் தவிர! இங்கே, யார் கண்ணுக்கும் தெரியாம ஒளியறதாயிருந்தா... அதுக்கு ஒரே ஓர் இடம் தான் வசதியா அமையுது; அதை நாம இன்னும் பார்க்கலே...! அது – இந்த உச்சி மடிந்து அப்படியே உள் பக்கமா கீழிறங்குது பாருங்க... அந்த உள் அடிப்பகுதி! ஒரு பலமான கயிறை நீங்க கொண்டு வந்தீங்கன்னா... நான் இறங்கி இதை ஊர்ஜிதப்படுத்தறேன்.''

''நீங்க குறிப்பிடறது அறிவுபூர்வமா இல்லாவிட்டாலும்... இதை ருசுப்படுத்திக் கொள்வது நல்லது தான். கயிறு போல ஏதாவது உதவ கிடைக்குதானு நான் பார்த்துட்டு வரேன்'' – சொல்லிவிட்டு விறுவிறுப்பாய் வீடு நோக்கிப் புறப்பட்டார் ப்ளோர்.

வானத்தை முறைத்துப் பார்த்தான் லாம்பர்ட். தங்களுக்குள் கூட்டம் கூட்டமாய் கூடி சேர்ந்து கருமையாய் படரலாயின மேகங்கள். காற்றின் வீச்சு, கூட ஆரம்பித்தது.

ஆர்ம்ஸ்ட்ராங்கின் மீது ஓரப்பார்வை பார்த்த அவன் ''நீங்க ரொம்ப அமைதியாயிட்டீங்க, டாக்டர்'' என்றான். ''என்ன யோசிச்சுக்கிட்டு இருக்கீங்க?''

ஆர்ம்ஸ்ட்ராங் மெதுவாய் சொன்னார்: ''இந்த ஜெனரல் மார்கரெட் எத்தனை பெரிய பைத்தியக்காரன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்...''

IV

கயலைப் பொழுது முழுக்கவும் இருப்புக் கொள்ளாமல் அலைந்த வண்ணமிருந்தார், வெரா. நடுக்கம் ஓங்கிய வெறுப்பு

மேலிட்டிருந்ததால், எமிலி ப்ரெண்ட்டைத் தவிர்த்தார் இவர்.

ஒரு நாற்காலியை தானாக இழுத்து அறையின் குளிர்ந்த காற்று குறைந்த மூலைப் பகுதியில் போட்டுக் கொண்ட செல்வி ப்ரெண்ட், அங்கு அமர்ந்தபடி, கம்பளி சட்டை ஒன்றைப் பின்னிக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு முறை எமிலியின் நினைவு வெராவுக்கு வந்த போதும் --- அழகாயும் வசீகரமாயும் இத்தனை நேரமிருந்த அந்த முகம்... கடும் பயங்கரமாயும், வெளிறிப் போயும், ஒரு கடல் பேய் போல தோன்றியது...

சாந்தமும் நேர்மையும் எப்போதும் நினைவில் கொண்ட எமிலி ப்ரெண்டோ, எதைப் பற்றியும் கருதாமல், கம்பளிச் சட்டையைப் புனைவதிலேயே கவனமாயிருந்தார்.

வெளியே... பரந்த மைதானம் போன்ற வீட்டின் முன் பிரகாரத்தில்... குழிவாய் அமைந்திருந்த ஒரு பிரம்பு நாற்காலியில் ஒரு மூட்டை போல் தன்னைத் திணித்துக் கொண்டு அமர்ந்திருந்தார் ஜஸ்டிஸ் வார்க்ரேவ். அவரது தலை, கழுத்துக்குள் நன்றாகவே புதைந்துக் கிடந்தது.

இப்போதெல்லாம், இந்த ஜட்ஜைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும், சாட்சிக் கூண்டில் நின்றுக் கொண்டிருக்கும் இன்னொரு மனிதனின் முகமும் வெராவின் நினைவுக்குள் எட்டிப் பார்க்கத் தவறுவதேயில்லை. இளைய... பளபளத்துத் துள்ளும் வழுவழு கேசம் கொண்ட... நீல நிற விழிகள் இங்குமங்கும் ஆடும்... எட்வர்ட் ஷெல்ட்டன். ஆனால்... அவன் முகமெங்கும் பீதி, கிலி. இக்கற்பனைக்கு நடுவில், தன் கையால் நீதிபதிக்கான கறுப்பு கவுனையும் தொப்பியையும் வார்க்ரேவ் அணிந்துக் கொள்வது வெராவுக்கு தெரியும்... பிறகு, இறுதியும் முடிவுமாக அவர் வாசிக்கும் மரண தண்டனைக்கான தீர்ப்பு...

மெதுவாய் நடந்து தீவின் கடற்கரை பகுதிக்குக் கிளம்பலானார் வெரா. நடந்துக் கொண்டே... தீவின் கடைகோடி பகுதிக்கு... ஒரு முதியவர் நெட்டைக் குத்தலாய் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டு அடிவானத்தையே பார்த்துக் கொண்டிருந்த இறுதிப் பகுதிக்குப் போய் சேர்ந்தார்.

வெரா நெருங்கி சமீபத்தில் வந்துவிட்டதை அறிந்ததும் சற்று

கலக்கப்பட்டவரானார் ஜெனரல் மார்கரெட். அவர் தலை திரும்பியது. கேள்விகள் பலவும், எதையோ உணர்ந்துவிட்ட கவலையும் பயமுமான கலவையும் - அவரது பார்வையில் இருந்தன. இது, வெராவைத் துணுக்குறச் செய்தது. தீர்க்கமாய் வெராவைத் தொடர்ந்து சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டேயிருந்தார் ஜெனரல்.

'என்ன பைத்தியக்காரத்தனம்' – நினைத்துக் கொண்டார் வெரா. 'என்னவோ... எதையோ... இவர் தெரிஞ்சுக்கிட்டது போல... உணர்ந்து விட்டது போல...'

''ஆஹ்! நீயா...! நீ வந்துட்டியா...!''

அவரருகிலேயே உட்கார்ந்துக் கொண்டார் வெரா. ''கடலைப் பார்த்தபடியே அப்படியே இங்கே உட்கார்ந்து விடுவது... உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

ஒப்புதலாய்... மிருதுவாய் தலையசைத்தார் மார்கரெட். ''ஆமாம்'' என்றார். ''இங்கே ரம்மியமா இருக்கு. காத்திருப்பதற்கு... இது நல்ல இடம் என்பது என் அபிப்ராயம்.''

''காத்திருக்க?'' – கூர்மையாய் கேட்டார் வெரா. ''எதுக்காக நீங்க காத்திருக்கீங்க?''

அவர் சாந்தமாய் சொன்னார்: ''முடிவு. முடிவுக்காக. உனக்கும் அது தெரியும்னு நினைக்கிறேன்... தெரியும் தானே? நாம எல்லோருமே முடிவுக்காகத் தான் காத்திருக்கோம். காத்துக்கிட்டே இருக்கோம்.''

குழப்பமாய் வெரா கேட்டார்: ''என்ன சொல்றீங்க நீங்க?''

கடுமையாயும் ஆழ்ந்தும் ஜெனரல் மார்கரெட் சொன்னார்: ''நம்மில் ஒருவர் கூட இந்தத் தீவை விட்டு வெளியே போகப் போவது கிடையாது. இது தான் திட்டம். இது உனக்கே கூட தெரியும்... துல்லியமா. ஆனா... உனக்கு எது புரியாதுன்னா... இதிலிருந்து எப்படிக் காப்பாற்றிக் கொள்வது... அது தான்!''

ஆச்சரியப்பட்டு கேட்டார் வெரா: ''தப்பிப்பு?''

''ஆங்...! தப்பிப்பு... தப்பிப்பே தான்!'' என்றார் ஜெனரல் கண்ணாகல. ''நீ ரொம்பப் பொடிசும்மா. சின்னவ. அந்த சுதந்திர நிலைமைக்கு நீ இன்னும் எகிறலே. ஆனா – அது வரும்! வரும்! ஆசீர்வதிக்கப்பட்ட தப்பிப்பு அது – நீ எல்லாத்தையும் பண்ணி முடிச்சாச்சு எனும் போது எழும் தப்பிப்பு - இனி நீண்ட தூரம் சுமந்து

செல்ல தோள்கள்ல எந்த பாரமுமில்லை எனும் போது உள்ளே உருவாகும் விடுதலை – ஆங் - தப்பிப்பு... தப்பிப்பு...! நீயும் அதை உணருவே... ஒரு நாள்... ஏதாவது ஒரு நாள்...''

வெராவின் குரல் கம்மிப் போனது. ''உங்களை என்னால புரிஞ்சுக்க முடியலே.''

வெரா கைகளின் விரல்கள் ஒன்றுக்கொன்று கண்டபடி பின்னி முடிச்சிட ஆரம்பித்தன. அமைதியாய் எதிரேயிருக்கும் கிழ தளபதியைக் கண்டு, அவருக்குள் இப்போது திடீர் பயம் உருவானது.

''ஏய்... நான் லிஸியை விரும்பினேன்...'' – முணுமுணுத்தார் மார்கரெட். ''ரொம்ப. ரொம்ப.''

''லிஸி உங்க மனைவியா?''

''ஆமாம், என் மனைவி... நான் அவளைப் பேயா காதலிச்சேன்... அவ எனக்கு மனைவியா இருந்ததுல அத்தனை பெருமையடைஞ் சிருக்கேன். கொள்ளை அழகு அவ – எப்பவுமே உல்லாசமானவ.''

சில நிமிடங்கள் அடங்கிப் போனார் அவர். பிறகு, ''ஆமாம்... நான் லிஸியைக் காதலிச்சேன். அதனால் தான் அதை செஞ்சேன்.''

''அப்படினா... என்ன சொல்றீங்க --- '' – தயக்கமாய் கேட்டார் வெரா.

ஒப்புதலாய் தலையசைத்தார் ஜெனரல். ''இப்போ போய் - நாம் எல்லாருமே மரணிக்கப் போற இந்த சமயத்துல போய் - அதை மறுத்து ஆகப் போவது ஒண்ணும் கிடையாது. நான் தான் ரிச்மண்டை அவனுடைய மரணப் படுக்கைக்கு அனுப்பினேன். ஒரு வகையில... அது ஒரு கொலை தான். கொலை – அதை யார் செஞ்சது! எப்பவும் சட்டதிட்டங்களைக் கண்ணுங்கருத்துமாய் கடைபிடிக்கும் நான் செஞ்சது... ஆனா அந்த சமயத்துல சட்டதிட்டம்... தர்மம் அதர்மம்... எதுவுமே என் கண்ணுக்குப் படலே. அதுக்கு நான் துளியும் வருந்தவும் இல்லே. 'கொன்னுப் போடு அவனை... அது தான் நீதி' – இது தான்... இந்த ஒண்ணு தான் என் கண்ணுல பட்டுது. ஆனா... ஆனா... அதுக்குப் பிறகு --- ''

இறுகியிருந்த குரலில், ''அப்புறம்...?'' என எதிர்பார்ப்பாய் கேட்டார் வெரா.

விளக்க முடியாதவராய் தலையை மறுத்துத் தலையசைத்துக்

கொண்டார் அவர். விடை தெரியாத கேள்வியை எதிர் கொண்ட வராய்... சிறிது குழப்பப்பட்டவராய்...

''தெரியலே. எனக்கு – தெரியலே. எல்லாமே மாறிப் போச்சு, தெரியுமா? லிஸி ஊகிச்சிருப்பாளா... தெரியலே... இருக்காதுனு தான் நினைக்கிறேன். பிறகு அவளுக்கு என்ன ஆச்சுனு எனக்குத் தெரியாது. நான் அவளை நெருங்க முடியாத நெடுந்தூரத்துக்குப் போயிட்டா அவ. ஆமாம். பிறகு செத்துட்டா... அப்புறம் நான் மட்டும் தனியா... தன்னந்தனியா...''

''தனியா...? தனியா...?'' – கேட்ட வெராவின் குரல் பாறைகளில் மோதி அவளிடமே திரும்பியது.

ஜெனரல் மார்கரெட் சொன்னார்: ''நீ சந்தோஷப்படுவே... நீயும் சந்தோஷப்படுவே... முடிவு நெருங்கும் போது.''

வெரா எழுந்துக் கொண்டார். ''நீங்க போசறது எதுவுமே எனக்கு விளங்கலே'' என்றார் கூர்மையாய்.

''எனக்குத் தெரியும், குழந்தே... எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியும்மா... இது தான் முடிவு'' என்றார் ஜெனரல்.

''ஒண்ணும் தெரியாது. உங்களுக்கே என்ன பேசறீங்கன்னு எதுவும் புரியாம... என்னவோ பெனாத்திக்கிட்டு...'' – கிளம்பினார் வெரா.

ஜெனரல் மீண்டும் கடல் தூரத்தைப் பார்க்கலானார். அவருக்குப் பின்னால் எழுந்து வெரா நின்றுக் கொண்டிருப்பதை உணராதவராய் தோன்றினார் அவர்.

அவர் மிருதுவாகவும் சன்னமாகவும் சொன்னார்: ''லிஸி...?''

V

வீட்டிலிருந்து, கையில் ஒரு கயிறினைச் சுற்றியபடி ப்ளோர் திரும்பி வந்தபோது, விட்டுப் போன இடத்திலேயே நின்றபடி பாதாளப் பகுதிகளை முறைத்துக் கொண்டிருந்த டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கைக் கவனித்தார்.

''லாம்பர்ட் எங்கே?'' என்று கேட்டார், வந்த வேகத்தில் மூச்சிறைத்தபடி.

''அவனுக்குள்ளே தோன்றியிருக்கும் ஏதாவது காரணத்தைப் பரீட்சித்துப் பார்க்கப் போயிருப்பான். வந்துடுவான்'' என ஈடுபாடின்றி ஆர்ம்ஸ்ட்ராங் பதில் தந்து விட்டு சொன்னார்: ''ஏய், ப்ளோர்... கவனி... எனக்குக் கவலையாயிருக்கு.''

''உங்களுக்கு மட்டுமா? நம் எல்லோருக்கும் தான், மேன். எல்லோரும் கவலையாயிருக்கோம், தெரியுமா?!''

''அதில்லைப்பா...'' என்று விட்டு பொறுமையிழந்து கையசைத்தார் டாக்டர். ''அதை சொல்லலை நான். ஜெனரல் மார்கரெட் --- ''

''அவருக்கு என்ன இப்போ?''

கடுமையாய் சொன்னார் டாக்டர்: ''ஒரு கிறுக்கன் தான் நம்மை இப்படி அலைக்கழிக்கிறான் எனும் கோணத்துல நாம தேடிக்கிட்டிருக்கோம். இல்லையா? இந்த ஆள் எப்படி?''

நம்ப முடியாத சந்தேகம் தொனிக்க, ''இந்தக் கிழம் தான்... அந்தக் கிரகண மனிதன்னு... சொல்றீங்களா?'' என கேட்டார் ப்ளோர், விட்டு விட்டு.

சந்தேகமாய் குறிப்பிட்டார் ஆர்ம்ஸ்ட்ராங்: ''என்னால அப்படிச் சொல்ல முடியாது. நான் மனோதத்துவம் படிக்கலே. அவர் கூட நெருக்கமா பேசிப் பார்க்கும் சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைக்கலே – மன நிலை பாதிக்கப்பட்டவரா எனும் கோணத்துல அவரைப் பரீட்சிக்க ஒரு மருத்துவரா எனக்கு வாய்ப்பும் கிடைக்கலே.''

ப்ளோர், ''அவர் அப்படி தான்னு நான் சொல்ல வரலே --- '' என சிறு சந்தேகம் தோய பேச ஆரம்பிக்க, டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், வேகமாய் இடை புகுந்து ஒருவர் பேச ஆரம்பிப்பதைத் தடுக்கும் தொனியில், ''எல்லா சந்தேகங்களையும் மூட்டை கட்டுவோம்'' என குறுக்கிட்டார்: ''இந்தத் தீவுக்குள்ளேயே தான் 'அந்த' ஒருத்தன் பதுங்கியிருக்கணும்... இருக்கான். ஆஹ்...! லாம்பர்ட் இதோ வரான் பாருங்க.''

கயிறு அவிழ்க்கப்பட்டது. டாக்டர் மற்றும் எக்ஸ்-இன்ஸ்பெக்டர் கைகளில் சில சுற்றுகள் சுற்றப்பட்டன.

''என்னால முடிஞ்ச வரைக்கும் நான் சமாளிச்சுப்பேன். கவலை வேண்டாம். இந்தக் கயிறுல திடீர்னு இறுக்கம் உண்டாகுதானு மட்டும் கவனிச்சுக்கிட்டே இருங்க.''

ஓரிரு நிமிடங்கள், மற்ற இருவரும் சேர்ந்து நின்றுக் கொண்டு... லாம்பர்ட் மலை முகட்டிலிருந்து கீழே தொங்கியபடி இறங்குவதைக் கவனித்துக் கொண்டிருந்த போது, ப்ளோர் பேசினார்: ''ஓஹ்... பூனை மாதிரி நழுவறான் இல்லே...?''

சொன்ன அவரது குரலில் அந்நியத் தன்மை இருந்தது.

''மலையேறுவதுல நல்ல பயிற்சி எடுத்திருக்கணும்னு நினைக்கிறேன்''–டாக்டர்.

''இருக்கலாம்.''

கொஞ்சம் அமைதி நிலவ... ஓய்வு பெற்ற துப்பறியும் இன்ஸ்பெக்டர் சொன்னார்: ''விசித்திரமான மலை வளைவு... அதுக்குள்ளே ஒரு பொந்து...! இது–அவனுக்குத் தெரிஞ்சிருக்கு. நான் என்ன சொல்றேன்னு உங்களுக்குப் புரியுதா?''

''என்ன?''

''அவன் ஒரு விவரமானவன்.''

''எந்த வகையில?''–சந்தேகமாய் கேட்டார் டாக்டர்.

''எனக்கு சரியா சொல்லத் தெரியலே. ஆனா... அவனை ஓர் அங்குலம் கூட நான் நம்பத் தயாராயில்லே.''

''அவன் - மலையேறுவது... கடல்ல நீந்துவது... இப்படியெல்லாம் சாகச வாழ்க்கை வாழ்ந்தவனா தான் எனக்குத் தோணுது.''

''அப்படினா, அவனுடைய சில சாகசங்கள் வெளிச்சத்துக்கு வராம இருட்டுக்குள்ளேயே அடைத்து வைக்கப்பட வேண்டியவைனு அடிச்சு சொல்வேன்.''

சற்று நிறுத்திவிட்டுத் தொடர்ந்தார் அவர்: ''பதில் சொல்லுங்க. இங்கே வரும் போது ஒரு துப்பாக்கி எடுத்துக்கிட்டு வரணும்னு உங்களுக்குத் தோணிச்சா, டாக்டர்?''

ஆர்ம்ஸ்ட்ராங் விழித்தார். ''நானா? ஓஹ்... இல்லே? எதுக்குக் கொண்டு வரணும்?''

''அப்ப எதுக்கு அவன் மட்டும் கொண்டு வந்திருக்கணும்?''

''அ... அ... அது...'' என சந்தேகமாய் குறிப்பிட்டார் டாக்டர்: ''அது,

அவன் வழக்கமா இருக்கலாம்.''

ப்ளோர் மூக்கை உறிஞ்சினார்.

ஒரு திடீர் இழுப்பு கயிறில் உருவானது. சில நிமிடங்கள் இருவரது கைகளும் இழுக்கப்பட்டு இறுகின. பிறகு தளர்ந்தன. இப்போது ப்ளோர் தொடர்ந்தார்:

''ஆங்... என்ன சொன்னீங்க... வழக்கம்! வழக்கம்! ஆஹ்...! இந்த லாம்பர்ட், ஆபத்தான இடங்களுக்கு துப்பாக்கியை எடுத்துக்கிட்டு போறான்... சரி... கூடவே ஒரு பை... அதுல தேவையான பொருட்கள்... மருந்து மாத்திரைகள்... ஒழியட்டும்! அந்தப் பழக்கம், நான் சொன்ன அத்தனையையும் இங்கேயும் கொண்டு வரச் செய்யாது – இல்லையா?! கதைப் புத்தகங்கள்ல தான் கக்கூஸுக்குப் போனாலும் துப்பாக்கியைக் கையோட கொண்டு போவாங்க – ஒரு வழக்கமா...!''

குழப்பம் நிறைந்து மறுத்துத் தலையசைத்தார் டாக்டர்.

மலை முகட்டு நுனியில் வந்து குனிந்து கீழே பார்த்து பிலிப்பின் இயக்கத்தில் உள்ள முன்னேற்றத்தினைக் கண்காணித்தனர். அவனது தேடுதல் பூரணமாய் முடிந்து விட்டதையும்... அதனால் பலனொன்றும் விளைந்து விடவில்லை என்பதையும்... இங்கிருந்தே இருவரும் புரிந்துக் கொண்டனர். சிறிது நேரம் தான்... மலை முகட்டினைப் பிடித்து மேலே சமவெளிக்கு ஏறி வந்தான் பிலிப். நெற்றியில் வழிந்துக் கொண்டிருந்த வியர்வை ஆற்றினை வழித்து சுண்டி விட்டான் அவன்.

''தேடுதல் - படு தோல்வி'' என்றான் அவன். ''அந்த வீடு மட்டும் தான். வேற ஒண்ணும் கிடையாது'' என்றான். ''ஆக – அந்த வீட்டை, முழுக்கத் துளாவுவோம்.''

VI

வீட்டினை முழுக்கப் புரட்டிப் போட்டுத் தேட அதிக நேரமோ சிரமமோ பிடிக்கவில்லை. வீட்டின் காம்பவுண்டுக்குள் இருந்த சில சின்னச் சின்னக் குடில்களை ஆராய்ந்து முடித்த மூவரும், அவர்களது

கவனம் முழுவதையும் மாளிகை போன்றிருந்த வீட்டுக்குள் செலுத்தினர். வீட்டுக்குள்... இது வரை கண்களில் படாமல் மறைந் திருந்ததாய் பதுங்கு இடங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எல்லாமே வெளிப்படையாய்... மறைவிடங்கள் ஏதுமின்றி... பொதுவாய் தான் இருந்தன. ஒரு நவநாகரீக கட்டிடத்தின் அச்சு அசலாய் திகழ்ந்தது வீடு. தரைத் தளம் முழுவதையும் முதலில் போய் பார்த்தனர். பிறகு, முதல் மாடியில் படுக்கையறைகள் நிறைந்திருந்த பகுதிக்கு முன்னேறிக் கொண்டிருந்த போது, தட்டில் ஏதோ பதார்த்தங்களை வைத்துத் தூக்கிக் கொண்டு ரோஜர்ஸ் வீட்டின் முன் பகுதிக்கு சென்றுக் கொண்டிருப்பது தெரிந்தது.

''செமத்தியான வேலையாள்யா இவன்'' என்று விளையாட்டாய் குறிப்பிட்டான் பிலிப். ''என்ன மரியாதையா தூக்கிக்கிட்டுப் போறான் பாருங்க.''

''அவன் ஒரு முதல் தர பணியாள்'' என்று பாராட்டும்படி சொன்னார் ஆர்ம்ஸ்ட்ராங். ''இதை நான் எங்கே வேணும்னாலும் மேடை கட்டி சொல்வேன்.''

''இவன் மனைவியும் அருமையான சமையற்காரி'' என்றார் ப்ளோர். ''நேற்று இரவு - நாம சாப்பிட்ட அந்த விருந்து - ''

மாடி முதல் தளத்தில் எதிர்ப்பட்ட முதல் படுக்கையறைக்குள் புகுந்தார்கள். ஐந்து நிமிடம் கழித்து வெளியே நடைபாதையில் வந்து நின்றுக் கொண்டு ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். மர்ம மனிதன் யாரும் உள்ளே இல்லை... மர்மமாய் பதுங்கியிருக்கும் இடங்களும் ஏதுமில்லை.

''அங்கே கொஞ்சம் படிக்கட்டு தென்படுதே... மேல போகுது...'' என்று காட்டினார் ப்ளோர்.

''இது மேல இருக்கிற வேலைக்காரன் அறை வரைக்கும் நீளுது'' என்றார் டாக்டர்.

''தண்ணீ தொட்டி இருக்கணும்... தேவையில்லாததைப் போட்டு வைக்க உதவும் சின்ன அறையும் அங்கே இருக்கணும்'' என்ற ப்ளோர் அதிக எதிர்பார்ப்போடு சொன்னார்: ''நாம தேடிக்கிட்டிருக்கிற விஷயத்துல, இது ஒண்ணு தான் நமக்கு இருக்கிற ஒரே 'வாய்ப்பு' - ஒன்றே ஒன்று!''

இப்படிப் பேசிக் கொண்டு மூன்று பேரும் அங்கே நின்றுக் கொண்டிருந்த அதே தருணத்தில் தான்... இவர்கள் குறிப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த மேற்புறத்திலிருந்து ஓசை வந்தது. ஒரு மாதிரி... திருட்டுத்தனமான காலடி சப்தம்.

மூன்று பேருமே அதைக் கேட்டனர். ப்ளோரின் கையைத் தன்னிச்சையாக இறுக்கிப் பிடித்து நெருங்கிக் கொண்டார் ஆர்ம்ஸ்ட்ராங். எச்சரிக்கை செய்வது போல் விரலை உயர்த்திக் காட்டினான் லாம்பர்ட்.

''அமைதியா – கவனியுங்க.''

சப்தம் மறுபடியும் வந்தது. யாரோ கள்ளத்தனமாய், ஓசையெழுப்பாது, மிருதுவாய் நடப்பது போல.

ஆர்ம்ஸ்ட்ராங் மிக முணுமுணுப்பாய் சொன்னார்: ''மேல படுக்கையறையிலேயே தான் அவன் இருக்கான். திருமதி ரோஜர்ஸின் உடலை எங்கே போட்டு வெச்சிருக்கோமோ, அங்கேயே.''

ப்ளோர் பதிலுக்கு முணுமுணுத்தார்: ''ஆமாமாம். அவன் தேர்ந்தெடுத்திருக்கவல்ல செமத்தியான ஒளியும் இடம் இது. யாரும் அங்கே போகும் சாத்தியம் கிடையாதே. ம்... எவ்ளோ ஓசை காட்டாம நகர முடியுமோ, அப்படி!''

ரகசியமாய் படியேறினர்.

அந்த அறையின் வாசல் பகுதியை அடைந்ததும் தயங்கி நின்றனர். கவனித்தனர். ஆமாம், யாரோ அறைக்குள் இருக்கிறார்கள். மிக மிக சன்னமான ஒலியுடன் உள்ளேயிருந்து ஓசை வந்துக் கொண்டேயிருக்கின்றது.

''இப்போ ஆரம்பிப்போம்'' என்ற ப்ளோர், கதவை முட்டித் தள்ளி திறந்து உள்ளே விரைந்தார்... பின்னாலேயே மற்ற இருவரும் ஓடி வந்தனர்.

பிறகு – மூவரும் மூச்சடைத்து வீழ்ந்து விட்டதைப் போல அப்படியே நின்றனர்.

ரோஜர்ஸ் உள்ளேயிருந்தான் - கை முழுவதும் துணிமணிகளை அள்ளிச் சுருட்டிக் கொண்டு.

வேண்டியிருக்கும்!'' என்றார். பிறகு வறட்சியாய், ''ஏன்... நீங்களும் அவர் போல திக்குத் தெரியாம அத்தனை சுலபமா மாறிட மாட்டீங்க என்பது என் கருத்து, பிலிப்'' என சேர்த்துக் கொண்டார்.

''நீங்க இப்படி என்னைக் கணிச்சிருப்பதுல, சொன்னதுல, நான் மிக மிக அமைதியா உணர்றேன்'' என்றான் பிலிப். ''நன்றி.''

IV

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், வாசலை வியாபித்திருந்த தோட்டப் பகுதிக்கு வந்தார். அங்கு கொஞ்ச நேரம் தயங்கி நின்றார். சற்று தள்ளி இவருக்கு இடப்பக்கத்தில் லாம்பர்ட்டும் ப்ளோரும் இருந்தனர். வலப்பக்கத்தில், அவருடைய தலை குனிந்த நிலையில், இங்குமங்கும் பொடி நடை நடந்த வண்ணம் வார்க்ரேவ் இருந்தார்.

சில நொடிகள் தீர்மானமற்று அப்படியே நின்றுக் கொண்டிருந்து விட்டு... நீதிபதியின் பக்கம் நகர்ந்தார் டாக்டர்.

அதே தருணத்தில் ரோஜர்ஸும் வீட்டுக்குள்ளிருந்து விரைவாய் வெளியே வந்தான்.

''உங்க கூட தனியா பேச முடியுமா, ஸார்?'' என்று கேட்டான் பட படப்பாய்.

குரல் வந்த திசையில் திரும்பினார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். அவர் பார்த்த காட்சியால், திகைப்பு உண்டாயிற்று அவருக்கு. ரோஜர்ஸின் முகம்... தீவிர எண்ணம் ஏதோ ஒன்றை விரட்டித் துரத்திக் கொண்டிருந்தது. வெளுத்து வெளிறிப் போயிருந்தன முக சதைகள். கைகள்... வெளிப்படையாய் தெரியும் கட்டுக்கடங்கா அதிர்வில் இருந்தன.

சில நிமிடங்களுக்கு முன்பு எத்தனை அடக்கமாகவும் அமைதியாகவும் அவர் வெளியே வந்திருந்தாரோ... அதற்கு அப்படியே நேர் மாறாய் ஆனார் டாக்டர்... அதிர்ந்து பின் வாங்கினார்.

''ப்ளீஸ், ஸார். உங்க கூட நான் பேசணும், ஸார். உள்ளே.''

டாக்டர் திரும்பி, உறைந்துப் போயிருந்த பட்லரோடு சேர்ந்து,

மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்தார். அப்போது, ''என்னாச்சுய்யா? முதல்ல நீ ஒழுங்காகு. கை, நழுவி கீழே விழுந்துடும் போல ஏன்யா இப்படி நடுங்கறே?'' என்றார்.

''இங்கே, ஸார்... உள்ளே, இங்கே... இங்கே, ஸார்.''

சாப்பாட்டு அறையின் கதவினைத் தள்ளித் திறந்தான் அவன். டாக்டர் உள்ளே போனார். அவருக்குப் பின்னாலேயே உள்ளே நுழைந்த ரோஜர்ஸ், தனக்குப் பின்னால் கதவினை மூடினான்.

''வந்தாச்சு'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''சொல்லு. என்ன விஷயம்?''

ரோஜர்ஸின் தொண்டை இழுத்துக் கொண்டு போராடியது. எச்சிலை விழுங்கி விழுங்கி அல்லாடினானே ஒழிய வார்த்தை வரக் காணோம். பிறகு வார்த்தைகளைத் துப்பினான். ''இங்கு நிச்சயமா சில அபாயங்க நடக்குது, ஸார்... ஆனா புரியலேயே, ஸார், புரியலையே.''

ஆர்ம்ஸ்ட்ராங் இப்போது கூர்மையாய் பேசினார்: ''சில அபாயங்கள்? என்ன பேசறே நீ? ஒழுங்கா பேசறதுனா பேசு. இல்லேனா!''

பரபரத்தான் ரோஜர்ஸ். ''கேட்டா என்னை நீங்க பைத்தியம்னு கூட நினைக்கலாம், ஸார். அதெல்லாம் ஒண்ணும் கிடையாதுனு தான் சொல்வீங்க. அப்படினாலும் எனக்கு நீங்க அதை விளக்கியே ஆகணும், ஸார். எனக்கு விளக்கணும்-விளங்கற மாதிரி! ஏன்னா... அது... எனக்கு... எந்த வகையிலும் அர்த்தமாகலே, ஸார்.''

''சரிய்யா... விஷயத்தை சொல். புதிராவே பேசாதே.''

ரோஜர்ஸ் மறுபடியும் ஒரு மடக்கு எச்சிலை விழுங்கினான். பேசினான்: ''அது, அந்தச் சின்ன பொம்மைங்க சம்பந்தமா, ஸார். அதோ... மேஜைக்கு நடுவுல இருக்கு பாருங்க. பத்து இருந்தது ஸார், அதுல. சாமி சத்தியமா ஸார்... பத்து... பத்து, ஸார்.''

''ஆமாம், பத்து தான்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''நேத்து ராத்திரி எண்ணினோமே.''

ரோஜர்ஸ் இன்னும் நெருங்கி நின்றுக் கொண்டான்.

''அதான், ஸார், அதே தான். பத்து இருந்ததா. சரி. நேத்து ராத்திரி நான் சமையல் பாத்திரத்தையெல்லாம் சுத்தம் பண்ணும் போது பத்தில்லே ஸார்... ஒன்பது தான் இருந்தது. ஒன்பது இருந்ததா... அதை கவனிச்சேன். குழப்பமாச்சு. சரி... போகட்டும்னு விட்டுட்டேன்.

பிறகு, இன்னிக்கு ஸார், காலைல. எல்லார்க்கும் டிபன் கொண்டு வந்து வைக்கும் போது நான் கவனிக்கலே, ஸார். ஏற்கெனவே நான் ஒடைஞ்சு போயிருந்தேன்... ஒண்ணும் புரியாம கிடந்தேன்.

ஆனா... இப்ப ஸார்... எல்லாத்தையும் எடுத்து வெச்சு சுத்தம் பண்ண நான் வந்த போது...! இப்ப கவனிச்சேன், ஸார்... நம்பலேனா நீங்களே பாருங்க, ஸார்... ம்... பாருங்க...

இதுல வெறும் எட்டு தான் ஸார் இருக்கு. வெறும் எட்டு! இது எனக்கு அர்த்தமாகலே, ஸார். உங்களுக்கு? வெறும் எட்டு - வெறும் எட்டு...''

அத்தியாயம் 7

I

காலை சிற்றுண்டிக்குப் பிறகு, வெரா க்ளேதார்னைச் சந்தித்த எமிலி ப்ரெண்ட், இருவருமாக மறுபடியும் கிளம்பி மலையுச்சி வரை போய் ஏதாவது மோட்டார் படகு வருகின்றதா என பார்க்க வேண்டும் என்று ஆலோசித்தார். வெரா பூரணமாய் சம்மதித்தார்.

காற்று புதுப் பொலிவு அடைந்திருந்தது. சின்னச் சின்ன வெள்ளை நுரைக் கூட்டங்கள் அலைகளின் உச்சியெங்கும் தோன்றி மறைந்தன. எங்கும் மீன் பிடி படகுகள் இல்லை – இயந்திரப் படகு குறித்த அறிகுறி ஏதும் தென்படவில்லை.

'ஸ்டிக்கில்-ஷெவன்' கிராமம் இங்கிருந்து துளியும் தெரியவில்லை. அதன் பின்னணியில், வான் முட்டும் அளவு செழித்திருந்த சிகப்புப் பாறை மலையும் அதன் முகடும் மட்டுமே தெரிந்தன. இவை, கடற்கரையையே விழுங்கி விட்டது போல அங்கிருந்த அனைத்தையும் மறைத்துக் கொண்டு விளங்கின.

''நேத்து நம்ம எல்லோரையும் இங்கே கொண்டு வந்து இறக்கி விட்டுட்டுப் போனவனைப் பார்த்தப்போ, மிகவும் நம்பிக்கை யானவனா தான் தோணிச்சு'' என்று சொன்னார் எமிலி. ''இன்னிக்குக் காலையிலே இத்தனை நேரம் கடந்தும் அவன் வராம இருப்பது – விளக்க முடியாததா இருக்கு.''

வெரா பதில் பேசவில்லை. உள்ளூர வளர்ந்துக் கொண்டே போன திகிலை அடித்து நிறுத்த முயன்றுக் கொண்டிருந்தார் அவர். ''அடங்குடீ. அடங்கு'' என தனக்குத் தானே கோபமாய் சொல்லிக் கொண்டார் வெரா. ''நீ இப்படிப்பட்டவ இல்லே. எதையும் எப்பவும் தாங்கக் கூடியவ நீ. தாங்கியிருக்கே.''

ஓரிரு நிமிடங்கள் கடந்த பிறகு குரல் உயர்த்தி சொன்னார்: ''அவன் எப்படியாவது வந்துடணும்னு நான் நினைக்கிறேன். நான்... நான்... இங்கிருந்து நான் போயாகணும்.''

''இதே தான் இங்கிருக்கும் எல்லாருடைய நினைப்பும்

பொண்ணே'' என்றார் எமிலி, வறட்சியாய்.

''எல்லாமே அசாதாரணமாயிருக்கு. நடக்கும் எதிலும்... எதிலுமே சொல்றேன்... துளியாவது அர்த்தம் இருக்கிற மாதிரி தோணலே.''

குறிப்பிட்ட வெராவுக்கு அருகில் சுறுசுறுப்பாய் நின்றுக் கொண்டிருந்த முதிர் கன்னி சொன்னார்: ''இந்தத் தந்திரத்துல சுலபமா என்னையே வளைச்சுப் போட்டுட்டாங்களேனு எண்ணும் போது... என் மேலயே எனக்கே அத்தனை வெறுப்பு வருது, வெரா. உண்மையா சொல்றேன்... அந்தக் கடிதம்... சம்பந்தமேயில்லாத ஓர் அபத்தம். அதைக் கூர்ந்து படிச்சா இப்ப புரியுது. ஆனா அப்போ எனக்கு அதுல துளி சந்தேகம் வரலே தெரியுமா – இத்துனூண்டு கூட வரலே.''

''வந்திருக்காது தான் - புரியுது'' என முணுமுணுத்தார் வெரா.

''நடப்பதெல்லாம் நல்லதேனு எல்லாத்தையும் நம்பிடறோம்'' – எமிலி சொன்னார்.

குளிரால் நடுநடுங்குவது போல் மூச்சுக் காற்றை ஆழ்ந்து நடுக்கமாய் உள்ளுக்கிழுத்துக் கொண்ட வெரா கேட்டார்: ''காலைல சாப்பிடும் போது சொன்னீங்களே... உணர்ந்து தான் சொன்னீங்களா?''

''கொஞ்சம் புரியற மாதிரி தெளிவா கேளுங்களேன். எதைக் குறிப்பிட்டுக் கேக்கறீங்க?''

வெரா கம்மிய குரலில் சொன்னார்: ''ரோஜர்ஸும் அவன் மனைவியுமா சேர்ந்து அந்தக் கிழவியை சாய்ச்சுட்டாங்கன்னா நினைக்கிறீங்க?''

எமிலி ப்ரெண்ட், சிந்தனையோடு கடலை நோட்டமிட்டார். பிறகு, ''என்னைப் பொறுத்த வரைக்கும் - அதுல நான் ஸ்திரமாயிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்றார்.

''எனக்கு என்ன நினைக்கிறதுனே தெரியலே.''

''எல்லாமும் என் ஊகத்துக்கு ஆதாரமா தான் நிக்குது. அந்தப் பொம்பளை அடிச்சு பிடிச்சுக்கிட்டு மயங்கின விதம், அந்த ஆள் காபி கோப்பைகளிருந்த தட்டை தடார்னு கீழே போட்டு பதறினது... எல்லாம் மறக்கலியே! அப்புறம் அது குறித்து அவன் பேசிய பாவம் - அதுல உண்மைத்தனம் இருக்கிறதா படலே. ஓஓ... அவங்க தான் பண்ணியிருப்பாங்க.''

இவ்வாறு எமிலி பேசியதும் வெரா தொடர்ந்தார்:

''ரோஜர்ஸோட பொண்டாட்டி மலங்க மலங்க விழிச்சுக்கிட்டே இருந்த போக்கு – தன் நிழலைத் தானே பார்த்தாலே அலறுவா போல! இப்படி ஒரு பொண்ணு சதா சர்வகாலமும் பதறிக்கிட்டே இருப்பதை நான் பார்த்ததே கிடையாதுப்பா. அந்த விஷயத்தால... வாழ்க்கை முழுவதுக்கும் அவங்க கிலியிலேயே இருந்துட்டாங்கன்னு படுது.''

செல்வி எமிலி ப்ரெண்ட் முணுமுணுத்தார்: ''நான் நர்ஸரியில இருந்த போது படிச்ச ஒரு பதம்... வாக்கியம்... நினைவுக்கு வருது. 'ஞாபகமிருக்கட்டும்... நீ செய்த குற்றமே உன்னைத் தீர்த்துக்கட்டி விடும்... இது தான் சத்தியம்.' ஆமாம்... இது எவ்வளவு உண்மை. 'ஞாபகமிருக்கட்டும்... நீ செய்த குற்றமே உன்னைத் தீர்த்துக்கட்டி விடும்... இது தான் சத்தியம்.' ''

அவசர அவசரமாக ஓடத் துடிக்கும் பரபரப்பில், ''ஆனா --- மிஸ் ப்ரெண்ட் --- ப்ரெண்ட் --- அப்படினா --- இது தான் சாஸ்வதம்னா ---'' என பதறினார் வெரா.

''ம்... சொல்லுங்க வெரா?''

''மற்றவங்களுக்கு? இந்த சத்திய வாக்கு... மற்றவங்களுக்கு?''

''நீங்க சொல்றதை என்னால முழுக்க புரிஞ்சுக்க முடியலே, செல்வி க்ளேதார்ன்.''

''சொல்லப்பட்ட மற்ற குற்றச்சாட்டுகள்? அவையெல்லாம் - அவையெல்லாம் உண்மையில்லையா? ரோஜர்ஸ் குடும்பத்துக்கு மட்டும் தான் இது பொருந்துமா? மற்றவங்களுக்கு --- '' நிறுத்தி விட்டார் வெரா. விளங்காமலிருந்த அவரது சிந்தனையை ஒழுங்குபடுத்திக் கொள்ள அவரால் முடியவில்லை.

குழப்பமாய் முடிச்சிட்டிருந்த ப்ரெண்ட்'டின் புருவங்கள், சரியாயின. ''ஆஹ்... இப்போ புரியுது எனக்கு'' என்றார். ''லாம்பர்ட் இருக்கார். இருபதுக்கும் மேற்பட்ட மனுஷங்க இறக்கக் காரணமா யிருந்தேன்னு அவரே ஒத்துக்கறார்.''

வெரா சொன்னார்: ''அவங்க பழங்குடியினர். கறுப்பர்கள். அதனாலேயே சாகட்டும்னு --- இவர் --- ''

இதற்கு எமிலி, ''கறுப்போ வெள்ளையோ... அவங்களும் நம் சகோதரர்கள் தான்'' என்றார் கூர்மையாய்.

வெரா நினைத்துக் கொண்டார்: 'நம்முடைய கறுப்பு சகோதரர்கள் -

நம்முடைய கறுப்பு சகோதரர்கள். ஓஹ்... நான் இதற்கு சிரித்து விடக் கூடும்... கிறுக்குப் பிடித்தவள் போல... ஓஹ்... என்னால் கட்டுப்படுத்த முடியலியே... ஆஹாஹாஹாஹா!'

தான் ஆரம்பித்ததை சிந்தனையோடு தொடர்ந்த வண்ணமிருந்தார் எமிலி: ''சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் சில இதுக்குனே உட்கார்ந்து யோசிச்சு சொன்னது போலவும்... கேலிக் கூத்தாகவும் தான் இருந்தன. ஜட்ஜை எடுத்துக்குவோமே... பொது மக்களின் நலன் கருதி அவர் செய்த தூய்மையான கடமையையே விமர்சிச்ச வார்த்தைகள். ஸ்காட்லாண்ட் போலீஸிலிருந்து ஓய்வு பெற்ற அந்த இன்ஸ்பெக்டர். ஏன், உதாரணத்துக்கு என் கதையையே எடுப்போமே. அபத்தங்கள்.''

கொஞ்சமாய் தாமதித்து விட்டு தொடரலானார்: ''அப்போதிருந்த நிலைமையைக் கருதி தான், நேத்து ராத்திரி நான் எதுவுமே பேசாம இருந்தேன். ஆம்பிளைங்களுக்கு முன்னால விவாதிக்க ஏற்ற சமாச்சாரம் கிடையாது அது.''

சிறு ஈடுபாடு தந்துக் கேட்டுக் கொண்டிருந்த வெரா, ''கிடையாது?'' என கேட்க... அமைதியாய் தொடர்ந்தார் எமிலி: ''அந்த டெயிலர் என் கூட தான் வேலையில இருந்தா. டெயிலர் --- பெட்ரிஸ் டெயிலர் அவ முழு பேர். அவ சரியான பொண்ணு கிடையாது – ஆனா இதை நான் கண்டுபிடிக்க ரொம்ப நாளானது. நான் ஏமாந்து போய் அவளோட நெருக்கமா இருந்தேன். அவ கிட்டே நல்ல குணாதிசயங்கள் இருந்துச்சு... படு சுத்தம்... நான் சொல்லும் எதையும் ஏத்துப்பா. இவற்றால எனக்கு ரொம்ப பொருத்தமான தோழினு அவளை நம்பினேன். ஆனா... ச்சே... அத்தனையும் அப்பழுக்கற்ற வேஷம். கபட நாடகம். அவ ஒரு மறை கழன்ற பொண்ணு... எவ்வித தர்மங்களும் இல்லாதவ! கண்றாவி! அவ ஏதோ ஒரு 'தீவிர சங்கடத்துல' இருக்கா எனும் சேதி... மேலோட்டமா எனக்குத் தெரியவே கொஞ்ச நாட்களானது.''

சொல்லிவிட்டு சற்று நிறுத்திக் கொண்டார் எமிலி. அவருடைய மூக்கு, அருவெறுப்பாய் முறுக்கிக் கொண்டபின் தொடர்ந்தார்: ''அது எனக்குப் பேரதிர்ச்சியாய் அமைஞ்சுது. அவளைப் பெத்தவங்க, மரியாதை மிகுந்த கிராமத்தவங்க. சிறந்த கட்டுப்பாடும் நாகரீகமும் நிறைஞ்ச அவங்க, அவளையும் பயங்கரக் கட்டுப்பாட்டோட தான்

வளர்த்திருக்காங்க. ஆனா, இவ தான் சரியில்லே. 'பண்ணினதுக்கு அனுபவிக்கட்டும்...' அப்படினு அவங்க கடைசியில சொன்னதுல எனக்கு அத்தனை திருப்தி, தெரியுமா...!''

செல்வி எமிலி ப்ரெண்ட்டையே உற்றுப் பார்த்துக் கொண்டு வெரா கேட்டார்: ''என்ன தான் நடந்தது?''

''ஒரு நிமிஷம் கூட என் கூரைக்குக் கீழே தங்க அவளை நான் அனுமதிக்கலே. எதுக்கு? நான் செஞ்சது பச்சாதாபமற்ற ஓர் அதர்மம்னு ஒருத்தர் கூட சொல்ல முடியாது...!''

''என்ன நடந்தது – அவளுக்கு?'' என்று கிசுகிசுப்பாய் விடாது கேட்டார் வெரா.

''அனைவராலும் ஒதுக்கப்பட்ட அந்த ஜந்து... மனச்சாட்சிக்கு எதிரா செஞ்ச ஒரு குற்றம் போதாதுனு... இன்னும் கொடுமையான ஒரு பாவத்தை செஞ்சது. அவ உயிரை அவளே எடுத்துக்கிட்டா.''

வெரா குரல் வெளி வரவேயில்லை. கிலி அடித்த தினுசில் ''அவளை அவளே கொன்னுக்கிட்டாளா?'' என்று கேட்டார். ''தற்கொலை?''

''ஆமா. அவளாவே ஓடிப் போய் வேகமா ஓடும் ஆழமான நதிக்குள்ளே குதிச்சுட்டா.''

வெரா நடுநடுங்கினார். இப்போதும், அமைதியாயும் மிருதுவாயும் இருந்த எமிலியின் போக்கைக் கவனித்தபடி கேட்டார்: ''அவ அப்படி பண்ணிக்கிட்டானு தெரிஞ்ச உடனே, நீங்க எப்படி உணர்ந்தீங்க? நீங்க வருந்தலே? உங்களை நீங்களே நொந்துக்கலே?''

எமிலி, தன்னை இன்னும் முன்னிறுத்தி, ''நான்?'' என்று கேட்டார். ''என்னை நானே நொந்துக்கிற அளவுக்கு இதுல எனக்கு ஒண்ணுமே கிடையாது.''

''ஆனா – உங்களுடைய கடுமை – அது, அவளைத் தூண்டி யிருந்தா...?''

எமிலியின் குரல் கூர்மையாய் வந்தது: ''அவளே செஞ்சது – அவளோட முடிவு அது – அவளுடைய சொந்த பாவம் - அவ தான் கழுவணும் - இல்லே கழுவ வைக்கும் - அதுதான் அவளை விரட்டி யிருக்கு. அவளும் மற்ற நாகரீக பெண்களைப் போல ஒழுக்கமா வாழ்ந்திருந்தா இந்த எதுவுமே நடந்திருக்காது.''

வெராவைத் திரும்பிப் பார்த்தார் எமிலி. அவ்விழிகளில் - சுய

பச்சாதாபமோ, இருப்புக் கொள்ளாமையோ, வருத்தமோ, எதுவும் துளியும் இருக்கவில்லை. அவை - ஸ்திரமாயும், மற்ற அனைவரையும் விட தானே ஒழுக்கசீலர் எனும் அறிவிப்போடும் இருந்தன. அவருக்கு தெரிந்திருந்த நேர்மை, நல்லொழுக்கம் போன்ற எண்ணங்களால் வளையமிடப்பட்டு, **சிப்பாய் தீவு** மலையின் உச்சியில், தலை நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் ஒரே மனிதராய் ஆனார் எமிலி ப்ரெண்ட்.

இருப்பினும்... இப்படி சராசரிக்கு ஒவ்வாது அந்த முதிர் கன்னி நிகழ்ந்தவற்றைக் குரூரமாய் விளக்கிய போதும்... வெராவின் கண்களுக்கு, ஒரு கேலிப் பொருளாய் அவர் துளியும் தோன்றவில்லை.

திடீரென்று – அவர் கோரமாயிருக்கிறார் – என்று மட்டும் நினைத்துக் கொண்டார்.

II

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் சாப்பாட்டுப் பகுதியை விட்டு வெளியேறி மறுபடியும் வீட்டின் வாசல் பகுதிக்கு வந்தார்.

இப்போது ஜட்ஜ் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்... கடல் நோக்கி சாந்தமாய் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

லாம்பர்டும் ப்ளோரும் இடப்பக்கப் பிரதேசத்தில், புகைத்துக் கொண்டிருந்தனர்... ஆனால் பேசிக் கொள்ளவில்லை.

முன்பு போலவே, மறுபடியும் தயங்கினார் டாக்டர். துணிந்து இறங்கி விடலாமா என்ற எண்ணத்தோடு டாக்டரின் கண்கள் ஜட்ஜ் பக்கம் பதிந்தன. ஜட்ஜுடைய தர்க்க ரீதியான புத்திக் கூர்மை கொண்ட வாக்குவாதங்களைப் பற்றி அறிந்தவர் தான் ஆர்ம்ஸ்ட்ராங். இருந்தாலும், குழம்பினார். ஜட்ஜ் வார்க்ரேவுக்கு மூளையிருக்கலாம்... ஆனால் நம் வயசில்லை... அவர் வயதானவர். இக்கட்டான இந்நிலையில், அவசரமாய் தேவைப்படுவது, மளமளவென இயங்கவல்ல ஒருவனுடைய ஆலோசனையே என முடிவெடுத்துக் கொண்டார் ஆர்ம்ஸ்ட்ராங்.

உடனே குழப்பம் நீங்கியது. முடிவெடுத்துக் கொண்டார்.

''லாம்பர்ட்... உங்களோட சில நிமிஷங்கள் நான் பேச முடியுமா?'' – கேட்டார் டாக்டர்.

பிலிப் விழித்தான். ''நிச்சயமா.''

இரண்டு ஆடவர்களும் வீட்டுப் பகுதியை விட்டுக் கிளம்பினர். சரிவிலிறங்கி கடல் நீர் கால்களை அளையும் வரை போனார்கள். பேசுவது வேறு ஒரு காதுக்கும் கேட்காத தொலைவை அடைந்ததும், ஆர்ம்ஸ்ட்ராங் துவங்கினார்: ''எனக்கு உங்க ஆலோசனை வேணும்.''

லாம்பர்டின் புருவங்கள் உயர்ந்தன. ''ஹேய் ஹேய்... எனக்கு மருத்துவம் பற்றி ஒண்ணும் தெரியாது'' என்றான்.

''நான் கேட்க வந்தது ஒரு பொதுவான சமாச்சாரம் பற்றி.''

''அப்படியா? அப்ப சரி.''

ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்: ''வெளிப்படையா சொல்லுங்க... இப்போ இங்கே இருக்கிற நிலைமை பற்றி என்ன நினைக்கிறீங்க?''

லாம்பர்ட் சில நிமிடங்கள் தனக்குள் போனான். பிறகு, ''அது தான் தானாவே தெரியுதே...! தெரியலே...?'' என்றான் சட்டென்று.

''அந்தப் பொம்பளைப் பற்றிய விஷயத்துல... உங்களுடைய ஊகங்கள் என்னென்ன? ப்ளோர் சொன்னதை நீங்க ஒத்துக்கறீங்களா?''

சிகரெட்டை இழுத்து புகையைக் காற்றுக்குள் துப்பினான் பிலிப். அப்படியே சொன்னான்: ''அது நிச்சயம் சாத்தியம் தான் - சாத்தியமா எனும் அடிப்படையில் மட்டும் பேசினா.''

''அப்படிச் சொல்லுங்க.''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் குரலில், பளு ஒன்று குறைந்து போன தொனி வெளிப்பட்டது.

பிலிப் லாம்பர்டும் அப்படி ஒன்றும் முட்டாள் கிடையாது. தொடர்ந்தான்: ''அதாவது – திரு மற்றும் திருமதி ரோஜர்ஸ் ரெண்டு பேரும்... கொலையை முடிச்சுட்டு அதுலேருந்து காதும் காதும் வெச்சா மாதிரி வெற்றிகரமா வெளியேறிட்டாங்க என்ற நம்பிக்கையின் அடிப்படையில சொன்னேன். அவங்களால தப்பிக்க முடியாம போற அளவுக்கு எனக்கு ஒரு தடையும் தென்படலே. அவங்க எப்படி முடிச்சிருப்பாங்கனு நீங்க நினைக்கிறீங்க, டாக்டர்? கிழவிக்கு விஷம் வெச்சு...?''

''அதை விட சுலபமா இருந்திருக்கணும்'' என்று மெதுவாய் பேச ஆரம்பித்தார் ஆர்ம்ஸ்ட்ராங். ''அந்த ஜெனிபர் மூதாட்டி எதனால நோய்வாய்ப்பட்டிருந்தாங்கன்னு, இன்னிக்குக் காலையில ரோஜர்ஸை நான் கேட்டுப் பார்த்தேன். அவன் சொன்ன பதில் எல்லாத்தையும் விளக்கிச்சு. மெடிக்கல் பதங்களைப் போட்டு போரடிக்க விரும்பலே... ஆனா, சில வகையான இதய நோய்களுக்கு, அமில் நைட்ரைட் கொடுப்போம். மாரடைப்பு ஏற்பட்டா... உடனடியா அமில் நைட்ரைட் அடங்கிய பாட்டில் திறக்கப்பட்டு... மூச்சுக் காற்றை ஆழமா சுவாசிப்பதன் மூலமா அது உள்ளுக்கிழுக்கப்படும். ஒரு வேளை அமில் நைட்ரைட் தருவது மறுக்கப்பட்டா – பிலிப்... அதன் விளைவு மிக சுலபமா ஒரு மரணத்துல முடியும்.''

''இத்தனை சுலபமா?'' என்று சொன்ன பிலிப் லாம்பர்ட் சிந்தனையாய் குறிப்பிட்டான்: ''முடிச்சுடு'னு... தூண்டியிருக்கும் போல!''

ஏற்றுக் கொண்டார் டாக்டர். ''மெனக்கெட்டு செய்ய வேண்டியது இதுல ஒண்ணுமே இல்லே. விஷத்தை வாங்கி – மூளையைத் திருகி ஜாக்கிரதையா திட்டமிட்டு – அதைக் கொடுத்து — இப்படி எதுவுமே கிடையாது. ஜஸ்ட், மருந்தை நிறுத்திடணும்... கொடுக்காம. டாக்டரைத் தேடித் தேடி ஓடியிருக்கான், ரோஜர்ஸ். வேற ஒரு மனுஷனுக்கும் இந்த விஷயம் கசியாது என்பதுல ரெண்டு பேருமே நிச்சயமா இருந்திருக்காங்க.''

''வேற யாருக்காவதும் தெரிஞ்சா கூட என்ன... இவங்களுக்கு எதிரா எதையும் என்னிக்கும் நிரூபிக்க முடியாது'' என்று கூடுதலாய் சொன்னான் பிலிப். சொல்லிவிட்டு, சற்றே கோபங்கொண்டவனாய் குறிப்பிட்டான்: ''ஓஹ்... இது, விஷயத்தை அடி ஆழம் வரை விளக்குது.''

ஆர்ம்ஸ்ட்ராங், புதிர்ப் போடப்பட்டவராய், ''மன்னிக்கணும், புரியலே'' என்றார்.

''அதாவது – சிப்பாய் தீவுனா என்ன என்பதையே இது விளக்குதுன்னேன். நாமெல்லாம் கூட்டமா இங்கே இழுத்து வந்துப் போடப்பட்டிருப்பதன் அர்த்தம் அடி ஆழம் வரை விளங்குதுன்னேன். இங்கே குற்றங்கள்... கொலைக் குற்றங்கள் வரை கூட பண்ணலாம்...

அது கரையேறி நீதிமன்றம் வரை போகாது!''

சொல்லி முடித்த பிலிப்புக்கும் கேட்ட டாக்டருக்கும் ஒரு சேர நெஞ்சடைத்தன. பிலிப் தொடர்ந்தான்: ''இப்படி ஓர் உதாரணம் தான் ரோஜர்ஸுடையது. இன்னும் வேணுமா? கிழ வார்க்ரேவ்! சட்டத்துக்குள்ளே வாகா உட்கார்ந்துக்கிட்டு கொலை செஞ்சவர், அவர். இதையும் நீதிக் கூண்டுல ஏற்ற முடியாதே!''

ஆர்ம்ஸ்ட்ராங் குறியாய் கேட்டார்: ''நீங்க அந்தக் கதையை நம்பறீங்களா?''

''ஓ...! ஆமாம், ஆமாம். அதை நான் நம்பறேன். வார்க்ரேவ், ஷெல்ட்டனைக் கொன்றார்... அவன் நெஞ்சு பார்த்துக் குறி தவறாம ஈட்டி எறிந்து கொல்வது போலவே ஷெல்ட்டனைக் கொன்றுள்ளார், நீதிபதி. ஆனா, அதை, சட்டம் எனும் பாதுகாப்பு வட்டத்துக்குள்ளே நின்னுக்கிட்டு... நீதிபதியின் கவுனுக்குள்ளே வசதியா பதுங்கிக்கிட்டு செஞ்சு முடிச்சுள்ள மகா புத்திசாலி, இவர்! அதனால, சாதாரண நடைமுறை வழிகள்ல, இக்கொலையைக் குற்றவாளி கூண்டுக்குள்ளே ஏற்ற முடியாது, இல்லையா...?!''

மின்னல் போல ஒரு திடீர் வெளிச்சம் ஆர்ம்ஸ்ட்ராங்கின் சிந்தனையை வெட்டி நின்றது.

'ஆஸ்பிட்டலில் கொலை. அறுவை சிகிச்சை மேடையில் கிடத்திக் கொலை. பாதுகாப்பானது – பாதுகாப்பானது... நீதிமன்றக் குற்றவாளிக் கூண்டு வரை ஏறாத அளவுக்கு...!'

பிலிப் லாம்பர்ட், ''இப்படிப்பட்ட நோக்கம் கொண்டவன் தான், இந்த ஓவன் - அதுக்கான களம் தான், இந்த **சிப்பாய் தீவு**...!'' என்றான்.

ஆர்ம்ஸ்ட்ராங் காற்றினை ஆழ இழுத்து மூச்சு விட்டார். ''இப்போ, விஷயத்தின் ஆணி வேர் கொஞ்சமா விளங்குது'' என்றார். ''ஆனாலும் - நம்மை எல்லாரையும் இங்கே கொண்டு வந்து ஒண்ணா சேர்த்திருப்பதற்கான உண்மையான காரணம்?''

''நீங்க என்னவா இருக்கும்னு நினைக்கறீங்க?'' என மறு கேள்வி கேட்டான் பிலிப்.

அவசரமாய் ஆரம்பித்தார் ஆர்ம்ஸ்ட்ராங்: ''ஏத்தல் மரண விஷயத்துக்கு ஒரு நிமிஷம் போவோம். அதுக்கு என்னென்ன சாத்திய காரணங்கள் இருக்கு? ரெண்டு. முதலாவது: மறைச்சு வைக்கப்பட்ட

அத்தனையையும் அவ காட்டிக் கொடுத்துடுவா எனும் பயத்தால, ரோஜர்ஸ் தான் கொன்னிருக்கான். ரெண்டாவது: அகப்பட்டு விட்டோம் எனும் பயத்தால... தன்னம்பிக்கை இழந்து அவளாவே ஒரு முடிவைத் தேடிக்கிட்டா.''

இதற்கு பிலிப், ''தற்கொலையா...? ம்?'' என கேட்டான்.

''ஏன்? பின்னே நீங்க என்ன சொல்ல விரும்பறீங்க?''

பிலிப் பேசினான்: ''அப்படி இருந்திருக்கலாம் - ஆமாம் - தற்கொலையா இருந்திருக்கலாம் - ஆனா, அதே போலவே ஆன்டனி மார்ட்ஸனும் இறக்காம இருந்திருந்தா...! பனிரெண்டு மணி நேரத்துக்குள்ளே இரண்டு தற்கொலைகள் என்பது, விழுங்கி ஜீரணிக்க முடியாத ஓவர் டோஸ்! அந்த ஆன்டனி மார்ட்ஸன்... எந்த விபரீத சிந்தனைகளும் அற்று இளமையை மட்டுமே நினைத்தபடி துள்ளித் திரிந்த அந்த இளங்காளை... வேணும்னே போய் தன்னைத் தானே கொன்னுக்கிட்டான்னு நீங்க சொன்னா... ம்... அந்த ஊகம் தான் இவ்வருடத்திய முதல் தர நகைச்சுவையா இருக்க முடியும்! எப்படியிருந்தாலும், அவன் கைக்கு எங்கேயிருந்து அது வந்தது? எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், சட்டைப் பைக்குள்ளே பத்திரமா வெச்சுக்கிட்டு ஊரூரா சுற்றி வரும் சமாச்சாரம் கிடையாது, இந்த பொட்டாஷியம் சயனைட்!''

''புத்தியுள்ள யாரும் சயனைடைப் பாக்கெட்டுக்குள்ளே வெச்சுக் கிட்டு சுத்த மாட்டாங்க தான்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''தொந்தரவு பண்ற தேனடை... எலிப் பொறி... இது போல எதையாவது முச்சூடக் கலைக்க நினைக்கிறவங்க தான்... வயல்ல வேலை செய்றவங்கனு வெச்சுப்போமே... பாக்கெட்டுலயே வெச்சுக்கிட்டு அலைவாங்க.''

''தன்னோட வயல் மீதோ... மாளிகை மீதோ... தோட்டம் துரவு மீதோ... தீரா ஆர்வம் கொண்ட ஒருத்தர்! இல்லே? ஆஹ்...!? இதிலேயும் ஆன்டனி மார்ட்ஸன் வரலே. இந்த சயனைட் விஷயத்தை இன்னும் அதிகமா விவாதிக்க வேணுமோனு எனக்குத் தோணுது டாக்டர். இங்கே வரும் போதே தன்னைத் தானே கொன்றுக் கொள்ள ஆன்டனி முடிவு கட்டியிருக்கணும்; அதனால அதுக்கான முழு ஏற்பாட்டோட இங்கே வந்திருக்கணும்... அப்படியில்லைனா... ... ...''

ஆர்ம்ஸ்ட்ராங் தன்னைத் தயார் செய்துக் கொண்டு, ''இல்லேனா?''

என்றார்.

பிலிப் லாம்பர்ட் அசட்டுச் சிரிப்புக் காட்டி, ''போட்டுப் பார்க்கிறீங்களா?'' என கேட்டான். ''உங்க உதட்டு நுனியிலேயே விடை தொங்கிக்கிட்டு இருக்கும் போது... என் வாய்லேந்து ஏன் பிடுங்கப் பார்க்கிறீங்க? வேறென்ன இருக்க முடியும்... ஆன்டனி மார்ட்ஸன், கொல்லப்பட்டான்.''

III

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் நீண்ட மூச்சு ஒன்றினை அடி நாபியிலிருந்து விடுவித்துக் கொண்டார். ''அந்த ஏத்தல்?'' எனக் கேட்டார்.

லாம்பர்ட் மெதுவாய் பேசலானான்: ''திருமதி ரோஜர்ஸ் இறக்கலேனா, ஆன்டனி தற்கொலை செஞ்சுக்கிட்டார்னு நம்பியிருப்பேன் (அப்படி நம்பறது கஷ்டாயிருந்தாலும்). ஆன்டனி மரணம் இடம்பெறாம போயிருந்தா, ஏத்தலின் மரணத்தைத் தற்கொலைனு (வெகு சுலபமா) ஏத்துக்கிட்டிருப்பேன். ரோஜர்ஸ் தான் அவனுடைய மனைவியைத் தன் வழியிலிருந்து வெட்டி எறிஞ்சிருப்பான்னு நிச்சயம் முடிவு கட்டியிருப்பேன் - எதிர்பாராம ஆன்டனி மார்ட்ஸன் மட்டும் மரணமடையாம இருந்திருந்தா. ஆனா, இந்நிலைமையில, மிஸ்டர் ஆர்ம்ஸ்ட்ராங்... அவசியமா நமக்கு இப்போ தேவையானது என்ன தெரியுமா?! ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றா இரண்டு மரணங்கள் ஏன்... எப்படி நடந்தன என்பதை விளக்க மிகச் சரியான காரணங்கள்... தியரி. இது அவசியமா எனக்கு வேணும்.''

''இதுக்கு என்னால கொஞ்சம் உதவி பண்ண முடியும்னு நம்பறேன்'' – சொன்னார் டாக்டர். தொலைந்து போன இரண்டு பீங்கான் சிப்பாய் பொம்மைகள் குறித்து ரோஜர்ஸ், ஆர்ம்ஸ்ட்ராங்கிடம் சொல்லியிருந்த உண்மையை விளக்கினார் அவர்.

''ஆமாமாம்... அந்தச் சின்ன சிப்பாய் பொம்மைகள்...'' என்ற

லாம்பர்ட், ''நேத்து ராத்திரி நாம சாப்பிடும் போது அதுல பத்து இருந்ததே. நிச்சயமா. இப்போ அதுல எட்டு மட்டும் இருக்குனா சொல்றீங்க?''

ராகமாய் பாடினார் ஆர்ம்ஸ்ட்ராங்:

பத்து சிப்பாய் பையன்கள், விருந்து சாப்பிட போனார்கள்;
ஒருவனின் தொண்டை அடைத்துக் கொள்ள, மிஞ்சினர் ஒன்பது.

ஒன்பது சிப்பாய் பையன்கள், விடிய விடிய பேசி முடித்தனர்;
ஒருவன் மட்டும் நீ...ண்ட நேரம் தூங்கி விட, மிஞ்சினர் எட்டு.

இரண்டு ஆண்களும் சட்டென ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கிண்டலாய் சிரித்துக் கொண்ட பிலிப், கையில் முடிந்திருந்த சிகரெட் துண்டினை வீசியெறிந்தான்.

''இங்கே நடந்த இரு சம்பவங்களோட இந்தக் கவிதை என்னமா ஒத்துப் போகுது...! மூச்சுக் காத்துக்கு தத்தளிச்சு ஆன்டனி மரித்ததும்... ஏத்தல் விடிய விடிய விழித்திருந்து மறு நாள் எழுந்திருக்காம தூங்கிப் போனதும்...!''

''இதனால என்ன புரியுது?'' – கேட்டார் ஆர்ம்ஸ்ட்ராங்.

''இதனால... அடுத்து ஒரு சிப்பாய் காணாமப் போவானோ...?! ஆஹா...! ஓவன்! மிஸ்டர் எக்ஸ்! U N OWEN! UNOWEN... UNKNOWN... முகந்தெரியா கிரகண மனிதன்!''

''ஆஹ்...'' – ஆர்ம்ஸ்ட்ராங் விடுதலையானதைப் போல பெருமூச்செறிந்தார். ''நீங்க ஒத்துக்கறீங்க. ஆனா நிதர்சனத்தையும் கொஞ்சம் கவனிக்கணும். நாம எட்டு பேர்... ரோஜர்ஸ் மற்றும் அவன் மனைவி... இந்த எண்ணிக்கையை தவிர, இந்த தீவுல வேற ஒரு ஜீவன் கிடையாதுனு கழுத்தைப் பிடிச்சுக்கிட்டு சத்தியம் பண்ணியிருக்கான் ரோஜர்ஸ்.''

''ரோஜர்ஸின் கணிப்பு தப்பா இருக்கணும்! இல்லே... அவன் பொய் சொல்லணும்!''

ஆர்ம்ஸ்ட்ராங் மறுப்பாய் தலையசைத்தார். ''அவன் பொய் சொல்ற மாதிரி எனக்குத் தோணலே. அவன் பயந்திருக்கான்... பயப்படறான். தன்னைத் தானே மறந்துப் போற அளவுக்கு பயப்படறான் அவன்.''

ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டிய பிலிப், ''இன்னும் அந்த மோட்டார் படகு வந்தபாடில்லை. இது – அந்த கிரகண மனிதனின் ஏற்பாட்டினை நம் முன்னாடி மறுபடியும் கொண்டு வந்து நிறுத்துது. அந்த UNKNOWN, தன் திட்டம் முழுக்க அரங்கேற்றி முடிக்கிற வரைக்கும், **சிப்பாய் தீவு**, தனிமைப்படுத்தப்பட வேண்டும்.''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் முகம் வெளிறியது. '' 'அவன்' – பித்துப் பிடிச்சு உலவிக் கொண்டிருக்கும் ஒரு பயங்கரமானவன் - அப்படினா நம்பறீங்க?!''

இதற்கு பேசிய பிலிப் லாம்பர்டின் குரலில் ஒரு புது தைரிய வட்டம் வந்தமர்ந்திருந்தது. ''ஒரு விஷயத்தை இன்னும் இந்த கிரகண மனித னான ஓவன் தெரிஞ்சுக்கலே.''

''என்னது அது?''

''இந்தத் தீவு ரொம்பப் பெரிசு கிடையாது. ஒரு பெரிய சைஸ் பாறை... அவ்வளவு தான். ஒரு சின்ன முயற்சி எடுத்துக்கிட்டு... தீவைக் கொஞ்சம் அலசுவோம். அப்போ... ரொம்பச் சுலபமா... 'அவனை' சுரண்டி எடுத்துடலாம்.''

''இத்தனை கேடித் தனங்களைத் திட்டமிட்டு செயல்படுத்த ஆரம்பிச்சுள்ள அவன்... ஆபத்தானவனா இருக்கலாம், பிலிப்'' – எச்சரிக்கை செய்தார் டாக்டர்.

கலகலவென சிரித்தான் பிலிப். ''ஆபத்தானவன்? அந்த நரிப்பயலைப் பார்த்து யார் பயப்படப் போறாங்க? அவன் என் கையில கிடைக்கட்டும்... நான் எத்தனை கொடூரமானவன்னு காட்டறேன்.''

சிறு தாமதம் நிலவியது. பிறகு பிலிப் சொன்னான்: ''கிளம்புவோம். நமக்கு உதவும்படி முதல்ல ப்ளோரைக் கட்டியிழுப்போம். சில இக்கட்டுகள்ல அவர் செமத்தியான உதவியா இருப்பார் - இன்ஸ்பெக்டர் இல்லே...?! மற்றவங்க... ஓய்வு பெற்ற ஜெனரல்... கிழ வார்க்ரேவ்... இதெல்லாம் நகர முடியாத கற்கள். விட்டுடுவோம். நாம மூணு பேரும் இந்த ஜோலியை முடிப்போம்.''

சாட்சியங்களின் அடிப்படையில, சந்தேகப் பட்டியலிலிருந்து சர்வ நிச்சயமா விலக்கி வைக்கத் தகுதியா – இந்தக் கூட்டத்துல யாராவது இருக்காங்களா?''

உடனடியாய் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் பதிலளித்தார்: ''நான் - நான் ஒரு நாடறிஞ்ச மருத்துவன். என்னைப் போய் சந்தேகப்படுவது என்பது--- --- --- ''

இப்போதும், ஜட்ஜின் அதிகார விரல் தூக்கல், பேச ஆரம்பித்தவர் பேச வந்ததைப் பேசி முடிப்பதற்குள் வாயடைக்க வைத்தது.

''நான் கூடத் தான் நாடறிஞ்ச நல்லவன். ஜட்ஜ்...! ஆஹாஹா! ஆனா, மிஸ்டர் ஆர்ம்ஸ்ட்ராங், இதைப் பேசி பலனேதுமில்லே. எத்தனையோ தடவை பல டாக்டர்கள் கிறுக்குத் தலைக்கேறி செய்யக் கூடாததை செஞ்சிருக்காங்க! பெரிய லிஸ்ட் தர முடியும் என்னால! ஜட்ஜ்கள் கூட விதிவிலக்கு இல்லே!'' என்று விட்டு ப்ளோர் பக்கமாய் பார்வையைப் போட்ட வார்க்ரேவ், ''போலீஸ்காரனுங்களும் தான்!'' என்றார்.

''எப்படியோ... பெண்களை சந்தேகப் பட்டியலிலிருந்து வெளியேற்றிடுவீங்கன்னு நினைக்கிறேன்'' என்றான் பிலிப்.

வார்க்ரேவின் புருவங்களிரண்டும் உயர்ந்தன. ''பெண்கள் என்றாலே கொலைக் குற்றம் செய்ய மாட்டாங்க என்றும்... அவங்களுக்கு மன நோய் பீடிக்கவே பீடிக்காது என்றும்... துணியைக் கிழிச்சுக்கிட்டு அவங்க அலைய மாட்டாங்க என்றும்... மிஸ்டர் பிலிப், நீங்க தப்பான கருத்துல இருக்கீங்கனு நான் எடுத்துக்கலாமா...?'' – ஜட்ஜின் குரலில் தொனித்த ஏகமான கிண்டலின் அமிலத் தன்மை, இங்கொரு எதிர்தரப்பு வக்கீல் இருந்திருந்தால் அவருக்கு விளங்கியிருக்கும்...!

எரிச்சலாய் லாம்பர்ட் சொன்னான்: ''அ... அப்... அப்படிச் சொல்ல வரலே. பல சமயங்கள்ல ஆண்கள் தானே... இதைப் போன்ற விபரீதமான...''

மேலே பேச முடியாமல் நிறுத்திக் கொண்டான் அவன்.

அதே அதிகாரக் குரலில் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் பக்கம் திரும்பினார் ஜட்ஜ். கேட்டார்:

''பரிதாபமான ஜெனரல் மார்கரெட்டைக் கொன்றது போன்ற ஒரு மின்னல் வேகத் தாக்குதலை நடத்தத் தேவையான அசுர பலம்... ஒரு பெண்ணுக்கும் சாத்தியம் தானே, டாக்டர்?''

ஆர்ம்ஸ்ட்ராங் அமைதியாய் பதிலளித்தார்: ''கனமான ரப்பர் குழாய் போன்ற சரியான ஆயுதம் கையில இருந்தா – நிச்சயம் ஒரு பெண்ணாலும் இயலும்.''

''மெனக்கெட்டு வேகம் தந்து அடிக்க வேண்டிய தேவையிருக்காதா?''

''நிச்சயமா அப்படியேதும் தேவையில்லை.''

நீதிபதி வார்க்ரேவ், அவரது ஆமை போன்ற கழுத்தினை உள்ளுக்கிழுத்துக் கொண்டார். ''மீதியிரண்டு மரணங்களும் மருந்து தந்ததன் விளைவா நடந்திருக்கு. இதை எவ்வித த்ராணியற்ற நபர் கூட கச்சிதமா செஞ்சு முடிக்கலாம் என்பதுல, இங்கே யாருக்கும் மாற்று அபிப்பிராயம் இருக்க முடியாது.''

''உங்களுக்கு என்ன பைத்தியம் பிடிச்சிருச்சா?'' – கத்தி விட்டார் வெரா.

ஜட்ஜின் விழிகள் மெல்ல நகர்ந்தன... அவை வெராவின் மீது அமர்ந்து நிலைக்கும் வரை. மனிதாபிமானத்தைத் தராசுத் தட்டில் தூக்கி வைத்து எடை போடும் ஒரு மனிதனின் ஆசாபாசமற்ற முறைப்பு அது.

'என்னை ஒரு... ஒரு... ஒரு தூசு போல பார்க்கிறான் கிழவன்' – எண்ணிக் கொண்டாள் வெரா. அவரே ஆச்சரியித்துப் போகும்படி எதிர்பாராது இன்னுமொரு நினைப்பும் வெராவுக்குள் விளைந்தது: 'கிழ நீதிபதிக்கு என்னை ஏனோ அதிகம் பிடிக்கலே.'

அளக்கப்பட்ட குரலில் ஜட்ஜ் பேசினார்: ''உங்க உணர்வுகளை முயற்சி பண்ணி அடக்கி வையுங்க, மிஸ் வெரா. உங்க மேல நான் ஒண்ணும் குற்றஞ்சுமத்தலியே.''

ப்ரெண்ட் பக்கமாய் திரும்பி, அவருக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்ட ஜட்ஜ், ''நாம எல்லோருமே சந்தேகப் பட்டியல்ல இருக்கிறோம் என்று நான் திரும்பத் திரும்ப அடித்து சொல்லுவதை... நீங்க மறுக்கலியே... ப்ரெண்ட்?'' என கேட்டார்.

எமிலி ப்ரெண்ட் கம்பளி நெய்துக் கொண்டிருந்தார். நிமிர்ந்து கூட அவர் பார்க்கவில்லை. தாட்சண்யமற்ற குரலில் பதில் மட்டும் தந்தார்: ''சக மனிதன் ஒருவனின் உயிரை நான் எடுத்திருக்கலாம் அப்படினு என் மேல குற்றம் சுமத்தினா --- அது எத்தனை பெரிய முட்டாள் தனம் என்பது, என் நடத்தை பற்றி நல்லா புரிஞ்ச என் நண்பர்கள்

வட்டத்துக்குத் தெரியும். ஆனா... நாம எல்லோருமே முன்ன பின்ன அறிமுகமாகாதவர்கள்; நேற்றிலிருந்து தான் பழக்கமே. ஒருத்தரைப் பற்றி மற்றவருக்கு ஒண்ணுமே தெரியாத இப்படிப்பட்ட சந்தர்ப்பத்துல, முழுமையான நிரூபணம் கிடைக்காத வரை, ஒருவரை மற்றவர் சந்தேகிப்பதை விட வேறு சிறந்த வழி கிடையாது தான். ஆமாம்... நான் சொன்னது போலவே... கிறுக்கு பிடிச்ச ஒருத்தன் நம்ம நடுவுல இருக்கான்.''

''அப்போ... நாம எல்லோருமே உடன்படறோம்'' என முடித்தார் ஜட்ஜ். ''ஒருத்தரோட நடத்தை அல்லது அந்தஸ்தை மட்டுமே வைத்து... யாரையும் நாம் விலக்கி வைக்க முடியாது.''

''ரோஜர்ஸ்?'' – கேட்டான் லாம்பர்ட்.

கண் கொட்டாது அவனைப் பார்த்த ஜட்ஜ், ''அவனுக்கென்ன இப்போ?'' என்றார்.

''என்னைப் பொறுத்த வரைக்கும்... இந்தப் பட்டியலிலிருந்து, ரோஜர்ஸ், முழுமையா வெளியே நிற்பதா தோணுது.''

''அப்படியா? எப்படி?'' – கேட்டார் ஜட்ஜ்.

''அவன் ஓர் அசமஞ்சம் - புத்தி கிடையாது – இது முதலாவது. ரெண்டாவது, கொல்லப்பட்டிருப்பது, அவனுடைய மனைவியே.''

ஜட்ஜின் கனமான புருவங்கள் மற்றுமொரு முறை உயர்ந்தன. ''தன் சொந்த மனைவியையே கொன்று விட்டதாக குற்றம் சாட்டப்பட்டு... நண்பா... பல பேர் கொண்டு வந்து என் நீதிமன்றத்துல நிறுத்தப் பட்டிருக்காங்க, தெரியுமா! இதுல அநேகமா எல்லாருமே நிஜக் குற்றவாளிகளா நிரூபணமாயிருக்கு.''

''ஓ... இருக்கலாம்... ஏத்துக்கறேன். மனைவியைக் கொல்வது நிச்சயம் சாத்தியமே – இயற்கையா பல இடங்கள்ல நடக்குதுனே கூட சொல்லலாம். செய்தித் தாள்களே இதுக்கு சாட்சி. ஆனா – இது அப்படிப்பட்டது கிடையாது. பயந்து நடுங்கியே தன்னைக் காட்டிக் கொடுத்துடுவா எனும் சந்தேகத்தால ரோஜர்ஸ் அவன் மனைவியைப் போட்டுத் தள்ளியிருக்க வாய்ப்பு இருக்கு; இல்லே, அவ மேல வெறுப்பு வந்து... அதனால இளசா வேற ஒருத்தி கூட தொடர்பு உண்டாகி... இந்த காரணத்துக்காகக் கூட போட்டிருக்கலாம்! ஆனா... ஒப்பேறாத ஏதோ ஒரு காரணத்துக்காக ஒவ்வொருத்தரா கொன்று

போட திட்டமிட்டிருக்கும் அந்த முகந்தெரியாத ஓவனா --- இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து செஞ்சதா சொல்லப்பட்ட கொலையையே முதல் காரணமா முன் நிறுத்தி, அதுக்காக ஏத்தலைக் கொன்னுப் போட்ட மிஸ்டர் ஓவனா --- எனக்கு ரோஜர்ஸ் தென்படலே!''

இதற்கு ''காது வழியா நாம கேட்ட செய்தியை நீங்க ஒரு முக்கிய சாட்சியா எடுத்துகிட்டிருக்கீங்க, பிலிப்'' என பதில் தர முன்வந்தார் ஜட்ஜ். ''ரோஜர்ஸும் அவன் மனைவியும் வேலை செஞ்ச வீட்டோட முதலாளியம்மாவை இவங்க ரெண்டு பேரும் உண்மையில கொன்னு தான் போட்டாங்களா என்பது நாமறியாதது. ரோஜர்ஸும் நம்மைப் போன்ற ஒரு நிலைமையில தான் இருக்கார் என்று ஒரு கானல் காட்சியை உருவாக்குவதற்காக சொல்லப்பட்ட பொய் பிரச்சாரமா கூட அது இருக்கலாம். ஏத்தல்... 'உண்மை தெரிஞ்சிடுச்சே...' என்ற காரணத்துக்காக மயங்காம - 'நம்ம கணவன் ஒரு வேளை அப்படி செஞ்சிருப்பானோ...' எனும் சந்தேகத்தினால நேற்று மயங்கி விழுந்திருக்கலாம்...! சொல்றதுக்கில்லே...!''

''எப்படியோ போங்க'' என்றான் பிலிப். ''U N OWEN எனும் அந்த UNKNOWN... நம்மில் ஒருவன் தான். இதுல விதிவிலக்கு கிடையாது. அந்தப் பதவிக்கு எல்லோரும் தகுதி பெற்றிருக்கோம்!''

''அதாவது...'' என்று பிலிப் சொன்னதையே இன்னும் சுத்தமாக முன் வைக்க விழைந்தார் ஜஸ்டிஸ். ''ஒருவரின் நடத்தை... அந்தஸ்து... செய்திருக்க வாய்ப்பு எவ்வளவு இருந்தது... இவற்றின் அடிப்படையிலே பார்த்தா... யெஸ்... நீங்க சொல்வது போல சந்தேகப் பட்டியலில் இடம்பெற எல்லோரும் தகுதி பெற்றிருக்கோம்! ஆனா, இப்போ, கையிலுள்ள நிரூபணங்களின் அடிப்படையில், யாரையாவது வெளியேற்ற முடியுமா என்று நாம் பார்க்க வேண்டும். விளக்கமா சொல்லணும்னா... ஆன்டனி மார்ட்ஸனுக்கு சயனைட் கலந்து தரும் வாய்ப்பே இல்லாத ஒருத்தரோ அல்லது ஒருத்தருக்கு மேலோ... நம்மில் இருக்காங்களா? இதே போல ஏத்தலுக்கு அதிகபட்ச தூக்க மருந்தினைக் கலக்கித் தரும் வாய்ப்பே இல்லாத யாராவது இருக்காங்களா? ஜெனரல் மார்கரெட்டின் உயிரை ஒரே அடியில் குடித்த அந்த அசுரக் கொலையை செய்யும் சந்தர்ப்பமே அமையாத ஒருத்தர் இங்கே உண்டா?''

கேள்விகளை அனைவருக்கும் விட்டு விட்டு சற்று காத்திருந்த

ஜஸ்டிஸ், தொடர்ந்தார்: ''இப்போ ஏத்தல் விஷயத்தை எடுத்துப் போம். அங்கே நின்றுக் கொண்டிருந்த ரெண்டு பேர் - அவ கணவன் மற்றும் டாக்டர். கண் சிமிட்டும் நேரத்தை விட சீக்கிரமா காரியத்தை முடிக்க... இவங்க ரெண்டு பேருக்கும் வழி இருந்திருக்கு.''

ஆர்ம்ஸ்ட்ராங் எழுந்து ஓடி வந்து முட்டி விடுபவரைப் போல ஆனார். ''நான் இதை ஆட்சேபிக்கிறேன். இது இங்கு தேவையற்ற பேச்சு. நான் அந்த அம்மாவுக்குக் கொடுத்த மருந்தின் அளவு மிகச் சரியானது அப்படினு நான் சத்தியம் --- --- ---''

''டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்.''

அந்த சிறு அதிகாரக் குரல் வற்புறுத்தியது. வாக்கியத்தின் நடுவிலேயே ஒரு சிறு குலுக்கலோடு நிறுத்திக் கொண்டு விட்டார் டாக்டர்! அந்த அதிகார – பச்சாதாபம் அகற்றிய குரல் தொடர்ந்தது:

''உங்களுடைய வெறுப்பும் கோபமும் இயற்கையே. இருந்தாலும் கண்ணுக்கு முன்னாடி தென்படுகிற சில உண்மைகளை நாம சந்திச்சு தான் ஆகணும் என்பதும் உங்களுக்குத் தெரியணும், டாக்டர். நீங்களோ அல்லது ரோஜர்ஸோ... ஏத்தல் உயிரினைக் குடித்த அந்த அளவுக்கதிக மான தூக்க மருந்தினை எவ்வித கஷ்டமும் இல்லாம வெகு சுலபமா செலுத்தியிருக்கலாம். அவ்ளோ தான். இதுக்கு – இங்கேயிருக்கும் மற்றவர்களுக்கு எந்த அளவுக்கு சந்தர்ப்பமும் வாய்ப்பும் இருந்தன என்று பார்ப்போம். எனக்கு – இன்ஸ்பெக்டர் ப்ளோருக்கு – எமிலிக்கு – வெராவுக்கு – பிலிப்புக்கு...?? அவங்களுக்கு விஷம் கொடுத்த அந்தக் கட்டத்திலிருந்து, எங்கள்ல யாராவது முழுவதுமா வெளியேற றோமா?''

கேட்டு விட்டு காத்திருந்த ஜட்ஜே, ''எனக்கு அப்படித் தோணலே'' என முடித்தார்.

கோபமாய் வெரா சொன்னார்: ''நான் அந்தப் பொம்பளை பக்கமே போகலே. இங்கே இருக்கிற எல்லாருக்கும் அது தெரியும்.''

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் ஒரு நிமிடம் போல அமைதியாய் இருந்து விட்டு தொடர்ந்தார்:

''என் நினைவைப் பொறுத்தவரை, நடந்தது இது தான் --- நான் தப்பா சொன்னா, ப்ளீஸ், நிறுத்தி சரி செய்ங்க. ஏத்தல், ஆன்டனி மார்ட்ஸன்னாலும் பிலிப் லாம்பர்டாலும் கைத்தாங்கலா தூக்கி

செல்லப்பட்டு சோபாவில் கிடத்தப்பட்டார்... டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் அவங்களை நெருங்கிப் போனார். ரோஜர்ஸை பிராண்டி கொண்டு வரச் சொல்லி அனுப்பினார் டாக்டர். அப்போதான்... அந்த சமயத்துல நாம கேட்ட குரல் எங்கிருந்து வந்தது என்ற கேள்வி எழுந்தது. நாம எல்லாரும் உடனடியா கிளம்பி அடுத்த அறைக்குள்ளே போனோம் - ப்ரெண்ட் தவிர! அவங்க மட்டும்... நினைவற்றுக் கிடந்த திருமதி ரோஜர்ஸோட அந்த அறையிலேயே தங்கிட்டாங்க.''

துளித் துளியாய் சிகப்புக் கோப நிறம் எமிலியின் கன்னங்களில் கூடியது. ''இது அக்கிரமம்!'' என்றார் அவர்.

இரக்கம் காட்டாத நீதிமன்றக் குரல் விடாது தொடர்ந்தது: ''நாங்க மறுபடியும் அறைக்குள் திரும்பிய போது மிஸ் ப்ரெண்ட்... நீங்க, சோபாவில் கிடந்த ஏத்தலை மிக நெருக்கமா நெருங்கி குனிந்து நின்றுக்கிட்டிருந்தீங்க.''

எமிலி கேட்டார்: ''பொதுவான மனிதாபிமானம் - ஒரு கொலைக் குற்றமாகுமா?''

வார்க்ரேவ் அலுங்காமல் தொடர்ந்தார்: ''நடந்த உண்மைகளை மட்டும்தான் நான் விரித்துப் போடறதனே தவிர குற்றஞ்சுமத்தலே. பிறகு ரோஜர்ஸ், பிராண்டி பாட்டிலோடு உள்ளே நுழைந்தார்... அதை உள்ளே கொண்டு வருவதற்கு முன்னால நிச்சயமா அதுல அவர் கை வரிசையை காட்டியிருக்கலாம்... சரியா! அந்த பிராண்டி ஏத்தலுக்குக் கொடுக்கப் பட்டது... உடனடியாவே அவளை ரோஜர்ஸும் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கும் கொண்டு போய் படுக்கையில விடறாங்க... அங்கே தான் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் அவளுக்குத் தூக்க மருந்து தரார்.''

ப்ளோர் சொன்னார்: ''இது தான் நடந்தது. துளி பிசகில்லாம. இது - ஜட்ஜை, என்னை, லாம்பர்டை, மற்றும் வெராவை – வெளியேற்றுது.'' சொன்ன அவரின் குரல் உயர்ந்தும் வெற்றிகரமாகவும் மிளிர்ந்தது.

அவரை நோக்கி சிங்கத்தின் பார்வையைப் போட்ட ஜட்ஜ், முணுமுணுப்பாய் சொன்னார்: ''ஆஹ்...! அப்படியா...?! நிச்சயம் நடந்திருக்க வாய்ப்பு உண்டு என்று சாத்தியப்படுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம கையில எடுத்துக்கணும்.''

ப்ளோர் விழித்தார். ''புரியலே'' என்றார்.

ஜட்ஜ் தொடர்ந்தார்: ''மேலே, அவங்க படுக்கையறையில, திருமதி

ரோஜர்ஸ் படுத்திருக்காங்க. டாக்டர் அவங்களுக்குத் தந்த மயக்க மருந்து அதனுடைய வேலையைக் காட்ட ஆரம்பிக்குது. புரியாத ஒரு வகை மயக்கத் தூக்கம். கலக்கம். அந்த சமயத்துல அவங்க கதவைத் தட்டி யாரோ ஒருத்தர் உள்ளே நுழையறதா வெச்சுப்போம். நுழைஞ்சவங்க, ஏதோ ஒரு மாத்திரையையோ அல்லது சின்ன மருந்து பாட்டிலையோ நீட்டி, 'இதை உடனடியா டாக்டர் உங்களை எடுத்துக்க சொன்னாரு' என்று சொல்லியிருந்தா... அதை மறுப்பு காட்டாம மரியாதையா அவங்க எடுத்துக்கிட்டு இருப்பாங்களா, இல்லையா...?!''

அறை முழுக்க அமைதியானது. ப்ளோர் அவருடைய பாதத்தை ஓரடி முன் வைத்து பாயவே முற்பட்டு விட்டார். பின் பிலிப் தான் பேசினான்: ''இந்தக் கதையை நான் கொஞ்சங்கூட நம்பத் தயாராயில்லே. மேலும், இதெல்லாம் நடந்ததுக்கு அப்புறமா பல மணி நேரம், இந்த அறையை விட்டு நாம யாருமே நகரலே. மார்ட்ஸனின் மரணம்... இத்யாதி... இத்யாதி...''

''யாராவது – அவருடைய அல்லது அவளுடைய படுக்கை அறையை விட்டு – பிறகு கிளம்பிப் போயிருக்கலாம் இல்லையா?''

''எங்கே?''

''ஏத்தல் அறைக்கு.''

''ஊஹூம்ப்'' – பிலிப் மறுத்தான். ''அப்போ ரோஜர்ஸ் அங்கேயே தானே இருந்திருக்கணும்.''

சுழன்று வந்த டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் ''தேவையில்லே'' என்றார். ''சமையலறை சாமான்களை சுத்தம் செய்ய ரோஜர்ஸ் கீழே போயிருந்த நேரம் உண்டு. அந்த சமயத்துல, யாரோட கண்லேயும் படாம, ஏத்தல் அறைக்குள்ளே போயிட்டு மூச்சு விடாம திரும்ப போதுமான அவகாசம் இருந்தது.''

இதற்கு எமிலி, ''நீங்க செலுத்தியிருந்த மருந்தின் வீரியத்தால அந்தப் பொண்ணு தன்னிலை இழந்து தூங்கிக்கிட்டு இல்லே இருந்திருக்கணும்?'' என கேட்டார்.

''இருந்திருக்கணும்...?! ஆமாம்...! ஆனா கட்டாயமா தன்னிலை இழந்து இருந்திருக்கணும்னு சட்டமில்லே, எமிலி! ஒரு நோயாளிக்கு முன்னாடியே ஒரு முறை அந்த மருந்தினைத் தந்து... அது எந்த அளவுக்கு அவங்களுக்குள்ளே வேலை செய்யுதுனு தெரியாவிட்டால்...

அந்த மருந்து உண்டுபண்ணும் விளைவை, நிச்சயப்படுத்தி டாக்டர்ங்களால சொல்ல முடியாது. சில சமயங்கள்ல ஒரு மயக்க மருந்து வேலை பண்ண நெடு நேரம் ஆகலாம்... முழுசா வேலை பண்ணாமலே கூட போயிடலாம்! இதெல்லாம், ஒரு நோயாளியுடைய உடல் வாகைப் பொறுத்திருக்கு!''

''நீங்க இப்படித் தான் சொல்வீங்க, டாக்டர்! நீங்க படிச்சதைத் தானே சொல்ல முடியும்... என்ன!'' - கிண்டலாய் விமர்சித்தான் பிலிப்.

ஆர்ம்ஸ்ட்ராங்கின் முகம் மீண்டும் ஒரு முறை கோபத்தால் இருண்டது. ஆனால், மறுபடியும், நீதிமன்றத்தில் அதட்டி நிறுத்திப் பழகிய குரலின் வீச்சு, டாக்டர் உதட்டிலிருந்து நழுவியிருக்க வேண்டிய பதில் வார்த்தைகளை அப்படியே நிறுத்தி விட்டன.

''வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசி சண்டை வளர்த்து ஒரு பிரயோஜனமும் விளைஞ்சிடப் போறதில்லே. உண்மைகள்... உண்மைகள்... இவற்றோட தான்... இவற்றோட மட்டும் தான் நாம் முன்னேறணும். நான் சொன்ன மாதிரியான ஒன்று நடந்திருக்கலாம் என்பது... சந்தேகத்துக்கு இடமின்றி நம் முன் விரியுது. அது எத்தனை தூரம் நடந்திருக்கும் என்பதில் எனக்குமே சந்தேகமிருக்கு; ஆனா... அது எந்த ஆள் என்பதைப் பொறுத்தது அது! மிஸ் ப்ரெண்ட்டோ அல்லது மிஸ் வெராவோ போய் நின்றிருந்தா... ஏத்தல் கிடந்த மோசமான நிலையில, அவளுக்குள்ளே எவ்விதமான ஐயத்தையும் உண்டுபண்ணியிருக்காது. ரெண்டு பேருமே பெண்கள் தானே...! மாறாக... நானோ, அல்லது ப்ளோரோ அல்லது பிலிப்'போ போய் திடுதிப்புனு நின்னிருந்தா... அவ ஒரு வேளை கலங்கியிருக்கலாம்... ஆனா, இதுலேயும், சந்தேகத்துக்கு இடம் கிடையாது. நாங்க, அவளுக்கு நல்லா அறிமுகம் ஆனவங்கத் தானே...!''

இப்போது ப்ளோர் கேட்டார்: ''இந்த மீட்டிங்... நம்மை எங்கே கொண்டு போய் நிறுத்தியிருக்கு?''

VII

குளியும் மனிதாபிமானமற்ற... பாச-பந்தமற்ற பார்வையை வீசிக் கொண்டு, தனது கீழுதட்டில் விரலால் தாளமிட்டுக் கொண்டிருந்த வார்க்ரேவ் சொன்னார்: ''இரண்டாவது மரணத்தைக் குறித்து நாம இப்போ விலாவாரியா பேசினோம்... சந்தேகப் பட்டியலிலிருந்து நம்மில் எவரையும் விலக்கி வைக்க முடியாது என்ற நிஜத்தையும் ஊர்ஜிதப்படுத்தினோம்.''

நிறுத்தினார். பின் தொடர்ந்தார்:

''இப்போ ஜெனரல் மார்கரெட்டுடைய மரணத்தைக் கையில எடுத்துப்போம். இன்னிக்குக் காலையில நடந்துள்ளது இது. 'கொலை நடந்த சம்பவ இடத்துக்கு நான் போகவேயில்லே...' அப்படினு - ஸ்திரமா – நம்மில் யாராலாவது சொல்ல முடியுமா? இதை முதல்ல பார்ப்பம். என்னையே முதல் உதாரணமா எடுத்துக்கலாம். இன்னிக்குக் காலைப் பொழுது முழுவதையும், வாசல்ல இருக்கிற வராண்டாப் பகுதியில் ஒரு நாற்காலியில தெய்வமேனு உட்கார்ந்துக்கிட்டு நாம் எல்லோரும் அகப்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையைப் பற்றி மட்டும் தியானம் செய்வது மாதிரி யோசிச்சுக்கிட்டு இருந்தேன்.

சாப்பாடு தயார் என அறிவிக்கும் மணி கேட்கும் வரை நான் அதே நாற்காலியில தான் உட்கார்ந்துக்கிட்டு இருந்தேன். ஆனா, நான் வாசலில் இருந்த காலைப் பொழுதுல, நான் என்ன பண்றேன்னு ஒருத்தர் கூட கவனிக்காத ஏராளமான சின்னச் சின்ன பொழுதுகள் இருக்கத் தான் செய்திருக்கும்; அந்த நேரங்கள்ல மூச்சு காட்டாம தீவின் கடற்கரை வரை நடந்து போய் ஜெனரலைத் தீர்த்துக் கட்டிட்டு சுவடு தெரியாம திரும்பி நாற்காலிக்கு வந்து பாதி கண்களை மூடிக்கிட்டு நான் உட்கார்ந்திருக்கலாம்! இது சாத்தியமே! அப்படி நான் செய்யலே! இதுக்கு ஒரே சாட்சி – நானே சொல்லும் இந்தப் பிரகடனம் தான். இருக்கிற சூழ்நிலையில நமக்கு நாமே சொல்லிக் கொள்வது மட்டும் பத்தாது! நிரூபணம் - ப்ரூஃப் வேணும்.''

ப்ளோர் உடனே சொன்னார்: ''காலைல முழுக்க நான் பிலிப் மற்றும் டாக்டர் கூட இருந்தேன். இதுக்கு அவங்களே சாட்சி.''

''ஹேய்! கயிறு கொண்டு வர நீங்க வீடு வரைக்கும் வந்திருந்தீங்க, ப்ளோர்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங்.

''இருக்கலாம்'' எனதன் குணப்படி மளமளவென சூடான ப்ளோர், ''வந்தேன். நேரா வீட்டுக்கு வந்தேன். பிறகு அப்படியே நேரா உங்க கிட்டே திரும்பினேன். இவ்வளவு தான் செஞ்சேன் என்பது உங்களுக்கு தெரியும் டாக்டர்'' என்றார் கேள்விக்குறியாய்.

''நீங்க திரும்ப நேரமாச்சு...'' என்றார் டாக்டர்.

அவ்வளவு தான்! ப்ளோரின் முகம் சட்டென சிவந்தது. ''என்ன நாராச அர்த்தத்துல இப்படி சொல்றீங்க, ஆர்ம்ஸ்ட்ராங்?'' என்றார்.

அமைதி கலந்த கிண்டல் தொனிக்க, ''நீங்க திரும்ப நேரமாச்சுனு தானே சொன்னேன்'' என்று திருப்பிச் சொன்னார் டாக்டர்.

''அது எங்கேயிருக்குனு தேடணும்! இல்லையா? இந்தா எடுத்துக் கிட்டு போனு யாரும் தயாரா கயிறை வெச்சுக்கிட்டு நிக்கலியே, நான் ஒரு நிமிஷத்துல திரும்ப...!''

ஜட்ஜ் கேட்டார்: ''மிஸ்டர் ப்ளோர் அங்கேயிருந்து கிளம்பிய பிறகு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாவே தான் இருந்தீங்களா...? இல்லே...?''

''பின்னே?'' என்று சூடானார் ஆர்ம்ஸ்ட்ராங். ''லாம்பர்ட் சில நிமிஷங்கள் மலை முகட்டிலிருந்து கீழே போயிருந்தார். நான் எங்கேயிருந்தேனோ அங்கேயே இருந்தேன்.''

லாம்பர்ட் சிறு புன்னகையோடு பேசினார்: ''அங்கே பதுங்கு இடம் ஏதாவது இருக்கா, மற்றும், கடற்கரைக்குத் திரும்ப ஏதாவது வழி தென்படுதா, இதையெல்லாம் பார்க்க கொஞ்ச நிமிஷங்கள் இறங்கியிருந்தேன். ஒரு சில நிமிஷம் தான்.''

''அதுக்குள்ளே உங்களால அந்த முகட்டுக்கு அடியில என்ன இருக்குனு பார்த்துட முடிஞ்சுதா?''–கேட்டார் ஜட்ஜ்.

''ம்.''

''அவர் சொல்றது சரி தான்'' என்றார் டாக்டர். ''அவர் காணாம போயிருந்த காலகட்டம் - இந்தக் கொலையை செஞ்சு முடிக்க போதுமானது கிடையாது, நான் கியாரண்டி.''

ஜட்ஜ் கேட்டார்: ''ரெண்டு பேர்ல யாராவது வாட்சைப் பார்த்தீங் களா?''

''அதாவது --- இல்லே.''

பிலிப், தான் கைக் கடியாரம் கட்டிச் செல்லவில்லை என்று பதில் சொன்னான்.

''இருவருக்கும் பொதுவாய் ''ஒரு நிமிஷம் ரெண்டு நிமிஷம்னு சொல்றது, நிச்சயமற்ற விளக்கங்கள்'' என்றார் ஜட்ஜ். சொல்லி விட்டு, நிமிர்ந்த நெஞ்சும் மடியில் கம்பளி நூல் கண்டுமாய் உட்கார்ந்திருந்த உருவத்தின் பக்கமாய் திரும்பினார் அவர். ''மிஸ் ப்ரெண்ட்?''

எமிலி அப்படியே நூல் கோர்த்தபடி பேசினார். ''என்னைக் கேட்கறீங்களா? தீவின் உச்சி வரை வெரா க்ளேதார்னையும் கூடக் கூட்டிக்கிட்டு ஒரு சிறு நடை போய் வந்தேன். பிறகு, வாசல்ல, சூரிய ஒளி படற மாதிரி உட்கார்ந்திருந்தேன்.''

''அங்கே உங்களைப் பார்த்த மாதிரி எனக்கு நினைவில்லையே.''

''நான் கிழக்குப் பக்கத்துல காத்து வீசாத ஒரு மூலையா பார்த்து உட்கார்ந்திருந்தேன்.''

''அங்கேயே லஞ்ச் வரை உட்கார்ந்திருந்தீங்களா, என்ன?''

''ஆமாம்.''

''மிஸ் வெரா க்ளேதார்ன்?''

தயாராயிருந்த வெரா விளக்கமாய் பேசினார்: ''காலைல நான் செல்வி எமிலி கூட இருந்தேன்; அப்புறம் தனியா கிளம்பி அப்படியே அலைஞ்சேன். பிறகு மலையடிவாரப் பகுதிகளுக்குப் போனேன்... அப்போ ஜெனரல் மார்கரெட் கூட பேசினேன்.''

ஜஸ்டிஸ் இடைமறித்து, ''அப்போ மணி எத்தனை?'' என கேட்டார்.

முதல் தடவையாக வெரா குழப்பமடைந்தார். ''தெரியலே'' என்றார். ''லஞ்ச் ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரம் முன்னாடி இருக்கலாம் - இல்லே இன்னும் முன்னாடியே இருக்குமோ...?''

ப்ளோர், ''நாங்க அவரைப் பார்த்துப் பேசறதுக்கு முன்னாடி நடந்ததா... இல்லே பிறகா?'' என்றார்.

''தெரியலே'' என்ற வெரா, ''அவர் ரொம்ப விசித்திரமா நடந்துக்கிட்டார்'' என்றார். வெரா நடுநடுங்கினார்.

''என்ன வகையில அவர் விசித்திரமா தோன்றினார்?'' - ஜட்ஜுக்கு இது தெரிந்தே ஆக வேண்டும்.

வெரா, ஒலி கம்மிய குரலில் சொன்னார்: ''நாம எல்லோரும் இறக்கப் போவதா சொன்னார் - முடிவுக்காக அவர் காத்திருப்பதா சொன்னார்,

அவர் - அவர் - என்னை ரொம்பவுமே பயமுறுத்தினார்.''

ஜட்ஜ் தலையசைத்தபடி கவனித்தார். ''அப்புறம் நீங்க என்ன பண்ணினீங்க?''

''வீட்டுக்கே திரும்பிட்டேன். பிறகு, லஞ்சுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மறுபடியும் கிளம்பி, வீட்டுக்குப் பின்புறம் போய் அப்படியே கொஞ்ச தூரம் திரிஞ்சுட்டு வந்தேன். இன்னிக்கு முழுக்கத் துளி கூட அமைதியில்லாம அலைஞ்சுக்கிட்டே இருக்கேன்.''

கன்னத்தை விரல்களால் தட்டிக் கொண்டிருந்த வார்க்ரேவ், ''ரோஜர்ஸ் தான் பாக்கி'' என்றார். ''நமக்கு உதவும்படி அவருடைய சாட்சியம் எந்த அளவுக்கு இருக்கும் என்பது... சந்தேகம் தான்'' என்றார்.

கூடியிருந்த இச்சபைக்கு முன்னால் வரும்படி அழைத்து வரப்பட்ட ரோஜர்ஸிடம் சொல்வதற்கு மிகக் குறைவான விஷயங்களே இருந்தன. வீட்டு வேலைகளிலும் மதிய உணவு தயாரிப்பிலுமே அவனுடைய காலைப் பொழுது முழுதும் போயுள்ளது. சாப்பாட்டுக்கு முன்னால், சிறு சிற்றுண்டி எடுத்துக் கொண்டு, வாசல் பகுதியில் இருந்தவர்களை நாடிப் போயிருக்கிறான். பிறகு தனது அறையிலிருந்த பொருட்களை மற்றோர் அறைக்கு எடுத்து வைப்பதில் கொஞ்ச நேரத்தைச் செல விட்டிருக்கிறான். காலைப் பொழுது முழுவதிலும்... ஜன்னல் வழியே விசித்திரமாய் எதையும் அவன் பார்த்திருக்கவில்லை... ஜெனரல் மார்கரெட்டின் கொலையோடு இணைத்துப் பார்க்கும் அளவுக்கு குறிப்பாய் எதுவும் அவனுக்குத் தென்பட்டிருக்கவில்லை. லஞ்ச்'சுக்கு சாப்பாட்டு மேஜையை சுத்தம் செய்து தயார் செய்துக் கொண்டிருந்த போது அந்த மேஜையில் மொத்தம் எட்டு சைனா பொம்மைகள் இருந்தன என்று சத்தியம் செய்தான் அவன்.

ரோஜர்ஸின் சாட்சியத்தின் முடிவில் அறையெங்கும் சில நேர தாமதம் நிலவியது. பின் வார்க்ரேவ் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''ம்கும்'' என சன்னமாய் இடித்துக் காட்டிய பிலிப், ''நாம இத்தனை நேரம் கேட்டதையே... 'இவை தான் நாம பேசினது...' அப்படினு இப்பக் கொட்டப் போறாரு, நீதிபதி ஐயா. வீட்டைக் கோர்ட்'டாவே மாத்திட்டாருய்யா'' என வெராவிடம் முணுமுணுத்தான் அவன்.

''நமக்குத் தெரிஞ்ச அத்தனை தகவல்களையும் அடிப்படையா வெச்சு, இந்த மூணு கொலைகள் நடந்துள்ள சூழ்நிலைகளை விலாவாரியா இவ்வளவு நேரமா விசாரிச்சோம். ஒரு சிலரைக் குற்றவாளிகள் என்று குற்றம் சுமத்த முடியாத அளவுக்கு சாத்தியக் கூறுகளும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சற்றுக் கம்மியா இருந்தாலும், ஒருத்தரைக் கூட, 'முழுக்க சுத்தமானவங்க...' அப்படினு விலக்கி வைக்க முடியாத நிலை தான் நீடிக்குது. ஆக, எனக்குள்ளே உள்ள ஸ்திரமான நம்பிக்கையை மறுபடியும் உங்க முன்னால வைக்கிறேன் --- இந்த அறையில கூடியிருக்கிற ஏழு பேர்ல ஒருத்தர் --- மிக ஆபத்தான, மேலும் மன நோய் போன்ற பைத்தியம் பீடித்துள்ள ஒரு கொடூர கொலைகாரன்! அவர் யார் என்பது குறித்த கடுகளவு நிரூபணம் கூட நமக்கு இது வரைக்கும் கிடைக்கலே. இந்த நிலைமையில நாம செய்யக் கூடியது ஒண்ணே ஒண்ணு தான்... அந்தப் பக்கத்துக் கடற்கரை மக்கள் கூட தொடர்பை ஏற்படுத்தி, தக்க உதவியைப் பெற, நாம என்ன மாதிரியெல்லாம் உடனடி நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பது தான் அது. வானிலை மோசமா இருக்கு. அதனால உதவி கிடைக்க தாமதமாகலாம்... அப்படினா, நம்முடைய பாதுகாப்புக்கு என்னென்ன முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்...?!

''நான் சொன்ன இத்தனையையும் கவனமா ஆராய்ந்து உங்களுக்குத் தோணும் எந்தவொரு ஆலோசனையையும் தந்து உதவுமாறு... இந்த சந்தர்ப்பத்துல உங்களை நான் கேட்டுக்கறேன். அதே சமயத்துல... நீங்களே உங்களை மிகத் தீவிரமா பாதுகாத்துக் கொள்ளும்படியும் உங்க ஒவ்வொருவரையும் கேட்டுக்கறேன். இது வரைக்கும் கொலைகாரன் உல்லாசமா உலா வந்தான்... ஏன்னா, அவன் மேல சந்தேகக் கண்களே பதியலே. ஆனா இனி நிலைமையே வேற. இப்பொழுது முதல், நம்மில் ஒவ்வொருவரையும் நாமே சந்தேகித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது முக்கிய வேலையாகுது. விட்டேற்றியா இருந்திடாதீங்க... ஆபத்து முன்னாடியே இருக்கு... முன் ஜாக்கிரதையா இருங்க... அவ்ளோ தான்.''

பிலிப், தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்:

''கோர்ட் கலையலாம்...''

அத்தியாயம் 10

I

''நீங்க நம்பறீங்களா?'' – கேட்டார் வெரா.

வரவேற்பறையின் அகலமான ஜன்னல் திட்டில் இவ்வரும் பிலிப்பும் உட்கார்ந்துக் கொண்டிருந்தனர். வெளியே மழை கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது... கொத்துக் கொத்தாய் வந்த சூறைக் காற்று பேயாய் அலறி ஜன்னல்களின் மீது முட்டிக் கொண்டிருந்தது.

பதில் சொல்லுமுன், பிலிப் லாம்பர்ட், தனது தலையைக் கோழி போல் மெல்ல இப்பக்கமாய் திருப்பிப் பார்த்தான். பிறகு பேசினான்: ''நம்மள்ல ஒருத்தன் தான் அதுனு வார்க்ரேவ் சொன்னது சரினு நினைக்கிறேனா? இது தானே விஷயம்...!''

''ஆமாம்.''

''நான் என்ன நினைக்கிறேன்...'' என தனக்குத் தானே சொல்லிக் கொண்ட பிலிப் மெதுவாய் பதில் தந்தான்: ''சொல்றது கஷ்டம். தர்க்க ரீதியா பார்க்கப் போனா, அவர் சொல்றது சரி தான், அப்படியே இருந்தாலும் கூட --- --- ---''

வெரா, அவன் நிரப்பு முன், வார்த்தைகளைப் பின்வருமாறு நிரப்பினார்: ''அப்படியே இருந்தாலும் கூட --- இது கோமாளித்தனமா இருக்கு...!''

''இது மட்டும் தானா!'' என முக சேஷ்டை செய்த பிலிப், ''இங்கே எல்லாமும் தான் கோமாளித்தனமா இருக்கு'' என்றான்! ''ஆனா வெரா – மார்கரெட்டுடைய மரணத்துக்குப் பிறகு ஒரு விஷயத்துல மட்டும் துளியும் சந்தேகம் கிடையாது. விபத்து – தற்கொலை... இந்த இரண்டுக்கும் இனி இடம் கிடையாது. இது – கொலை தான். நிச்சயமா. மூன்று கொலைகள் - இது வரை.''

வெராவுக்குள் நடுக்கம் உண்டானது. ''படுபயங்கர கனவு போல இருக்கு. இது போன்ற கொலைகளெல்லாம் சாத்தியமேயில்லைனு தான் நான் நினைச்சுக்கிட்டே இருக்கேன்.''

''எனக்குப் புரியுது'' என்றான் பிலிப், வெராவைப் புரிந்துக் கொண்ட தொனியில். ''பார்த்துக்கிட்டே இருங்களேன்... இப்ப அறைக்

கதவு தட்டப்படும்... கொறிக்க ஏதாவது உணவும் கூடவே சுடச்சுட டீயும் வரும்.''

வெரா புத்துணர்ச்சியாய் ''ஆஹா... அது நடக்கணும்னு நான் ரொம்ப எதிர்பார்க்கறேன்!'' என்றார்.

பிலிப் லாம்பர்ட் ஆழ்ந்த வெறுமையில் சொன்னான்: ''ஆனா அது தான் நடக்காது. நாம எல்லோரும் கனவுல மிதந்துக்கிட்டு இருக்கோம். நம்மை நாமே சத்தியமா பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துல இருக்கோம்.''

வெரா குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்: ''அது – அவங்கள்ல ஒருத்தர் தான் அப்படினா – அது யாரா இருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க?''

''என்ன... நம்ம ரெண்டு பேரையும் சந்தேகப் பட்டியலிலிருந்து நீங்க விலக்கிட்டா போல தெரியுது! அதுவும் சரினே படுது. நான் அந்தக் கொலைகாரன் கிடையாது என்பது எனக்கு சர்வ நிச்சயமா தெரியும்... உங்க மனநிலைல ஏதோ பாதிப்பு இருக்கிற மாதிரி வெளிப்படையா எனக்கு ஒண்ணுமே தெரியலே, வெரா. நான் சந்தித்த பற்பல புத்தி சுவாதீனம் மிக்க... சராசரி பெண்களைப் போலத் தான் நீங்க எனக்குத் தெரியறீங்க. உங்களுடைய புத்திக் கூர்மைக்கு இணையா வேற ஒண்ணு கிடையாதுனு என்னால பந்தயம் வைக்க முடியும்!''

முறுக்காய் சிரித்துக் கொண்ட வெரா, ''நன்றி'' என்றார்.

''ஹேய்... ஹேய்... அவ்ளோ தானா வெரா? நான் வான் உயர உங்களைத் தூக்கி வெச்சதுக்கு கை மாறா நீங்க எனக்குத் திருப்பி ஒண்ணும் பண்ண மாட்டீங்களா?''

வெரா தயங்கினார். பின் பேசினார்: ''மனித வாழ்க்கை... மனித உயிர்... இதையெல்லாம் ஒரு புனிதமான அம்சமா நீங்க பார்ப்பவர் கிடையாதுனு... நீங்களே சொல்லியிருக்கீங்க. இருந்தாலும்... இவ்வளவு கொடூரமா உங்களை நீங்களே அறிமுகம் செஞ்சுக்கிட்டிருந்த போதிலும்... உங்களை – உங்களை... அந்த கிராமஃபோன் தட்டில் ஒலித்த குரலா நினைச்சுப் பார்க்க என்னால முடியலே.''

''சரியான கணிப்பு வெரா. நான் ஒண்ணோ ரெண்டோ கொலை

பண்ணினேன்னா... அவற்றிலிருந்து எனக்கு என்ன வரவு இருக்கும் என்கிற ஒரே இலக்கை மனசுல வெச்சுக்கிட்டு தான் செய்வேன். இப்படி ஒட்டுமொத்தமா எல்லாரையும் வரவழைத்து கூண்டோடு சொர்க்க லோகம் அனுப்பறது – என் வழி கிடையாது. இது – ஓர் ஆபத்தான மூளை நிறைவேற்றிக்கிட்டிருக்கும் ஒரு வெறி. நல்லது வெரா... நம்ம ரெண்டு பேரையும் தள்ளி வெச்சுட்டு மீதம் இருக்கிற ஐந்து பேர் மேல கவனத்தை செலுத்துவோம். அவங்கள்ல யார் U N OWEN? சொல்றேன்... ஆனா, வெறும் ஊகம் தான். வேற ஒண்ணும் கிடையாது. ம்... நான் தயக்கமில்லாம வார்க்ரேவைத் தான் சொல்வேன்.''

''ஓஹ்'' – வெரா ஆச்சரியமடைந்து விட்டது தெரிந்தது. ஒரு சில நிமிடங்கள் யோசித்து விட்டு பிறகு ''ஏன்?'' என்றார்.

''விளக்கறது கஷ்டம். இப்படி வேணும்னா சொல்லலாம்... அவர் ஒரு வயசானவர் - தவிர, சட்டதிட்டங்களைக் கையில வெச்சுக்கிட்டு நீதிமன்றங்களை பல வருடக்கணக்காய் வழி நடத்தியிருக்கார்... எனும் வகையில. என்ன சொல்ல வரேன் தெரியுதா...?! மாதக்கணக்காய்... வருடக்கணக்காய்... ஒருவரின் வாழ்வை நிர்ணயிப்பது மற்றும் சாவை நிர்ணயிப்பது... இந்த ரெண்டையும் செய்த ஒரு 'தெய்வமா' அவர் இயங்கியிருக்கார்...! அனைத்துக்கும் மேலான சக்தியா! மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியா! அந்த மமதை – அவர் மூளைக்குள் வைரம் பாய்ந்து இறங்கியிருக்கலாம் - இறங்கியிருக்கும். தானே உலகின் கர்த்தா... சர்வ வல்லமை வாய்ந்தவன் என்று தன்னைத் தானே ஆக்கிக் கொள்கிறார் வார்க்ரேவ் - பிறப்பும் இறப்பும் தன் செயல் எனும் விபரீதம் அவருக்குள்ளே புகுந்துடுது – இந்த குரூர மனம் அவர் மூளையைப் பிசக வெச்சிருக்கலாம் - அதனால, மேலும் ஒரு படி ஏறி உச்சிக்குப் போய்... ஓர் அசாதாரண ஜட்ஜாக எழுந்திருக்கலாம்.''

வெரா மெதுவாய் சொன்னார்: ''ஆமாம். இது சாத்தியம்னே எனக்குப்படுது...''

''நீங்க சட்டுனு யாரைச் சொல்வீங்க?''

துளி கூட தயக்கமற்று வெரா, ''டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்'' என்றார்.

இதற்கு அழகாய் விசிலடித்த லாம்பர்ட், ''அந்த டாக்டரா? ஆஹ்ஹா...! என் பட்டியல்ல அவரை நான் கடைசியா தான் நிறுத்தி யிருக்கேன்'' என்றான்.

வெரா மறுத்துத் தலையசைத்தார். ''கிடையவே கிடையாது! இரண்டு மரணங்கள் விஷம் வெச்சதால நிகழ்ந்திருக்கு. இது ஒரு டாக்டரை நோக்கித் தான் நீளுது. திருமதி ரோஜர்ஸைப் பொறுத்த வரைக்கும் நம்ம கையில இருக்கிற வெளிச்சமான ஒரே துப்பு - கடைசியில அவங்களுக்கு டாக்டர் கொடுத்த தூக்க மருந்து... இந்த நிஜத்தை நீங்க உதறிட முடியாது பிலிப்.''

''ஆமாம்'' என இப்போது ஒப்புக் கொண்டான் பிலிப். ''நீங்க சொல்றதும் நிஜம் தான்.''

அழுத்தந்திருத்தமாய் முன்வைத்தார் வெரா: ''மூளைப் பிசகி ஒரு டாக்டர் முன்னுக்குப் பின் முரணா நடந்துக் கொலைகள் செஞ்சா... அதை மற்றவர்கள் அறிந்துக் கொள்ள ரொம்பக் காலம் ஆகும், இல்லையா! ஆபரேஷன் தியேட்டர் மரணம், ஒரு கொலையா இருந்தா கூட, நமக்கென்ன தெரிஞ்சுடவாப் போகுது, ம்? மேலும் - டாக்டர்கள் ஓய்வில்லாம உழைக்கிறவங்க... இது மன அழுத்தத்தை நிரந்தரமா தரும் வாய்ப்பு உண்டு.''

பிலிப் தொடர்ந்தான்: ''இருக்கலாம். ஆனா அவர் மார்கரெட்டைக் கொன்னிருப்பாரானு எனக்கு சந்தேகமா தான் இருக்கு. அவரை விட்டுட்டு மலை முகட்டுல நான் தொங்கிட்டு வந்த மிக மிக கம்மியான நேரம் அவருக்கு அப்படி ஓர் அவகாசத்தை உண்டு பண்ணித் தந்திருக்காது. காற்று மாதிரி பறந்துப் போயிட்டு வந்திருந்தா தான் அது சாத்தியம். அப்படியே அவர் பறந்துட்டு வந்திருந்தாலும்... செஞ்சக் கொலையின் சுவடே தெரியாமல், பழையபடி சாதாரணமா இருக்கும் அளவுக்கு அவர் ஒரு கிரிமினலா தெரியலே!''

''அப்போ அவர் பண்ணியிருக்க மாட்டார். பிறகு அவருக்கு ஒரு வாய்ப்பு இருந்தது.''

''எப்போ?''

''ஜெனரலைப் போய் லஞ்சுக்கு அழைத்து வர அவர் கடற்கரை வரை போயிருந்த போது.''

பிலிப் மறுபடியும் சன்னமாய் விசிலடித்தான். ''அப்போ அவர்தான் அங்கே கொன்னிருப்பார்னு நினைக்கிறீங்களா?'' என கேட்டான். ''ஊஹூம்ப்.''

பொறுமையற்றவரானார் வெரா. ''துணிஞ்சு அவர் செயல்படுவதைத் தடுக்க அவருக்கு வேற என்ன அபாய நிலை இருக்கு? இங்கே மருத்துவம் தெரிஞ்ச ஒரே ஆசாமி அவர் தான். ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே ஜெனரல் உயிர் பிரிஞ்சுடுச்சுனு அவர் சொல்லலாம்... எதுக்க இங்கே யாரு?''

வெராவை மிகுந்த சிந்தனையோடு பார்த்தான் பிலிப். ''உங்களுடைய புத்திசாலித்தனமான கருத்து இது. எனக்கு இப்போ ஆச்சரியமா ஒண்ணு தோணுது ---''

II

''யாரது, ப்ளோர்? இது மட்டும் தான் நான் தெரிஞ்சுக்கணும். யாரது?''

ரோஜர்ஸின் முகம் கடும் சிந்தனையொன்றின் மீது இயங்கிக் கொண்டேயிருக்க... இப்படி கேட்டான் அவன். கையிலிருந்த தோல் பையை விடுவதும் இழுப்பதுமாய் அவருடைய கைகள் செய்துக் கொண்டிருந்தன.

முன்னாள் இன்ஸ்பெக்டர் ப்ளோர், ''அடப்போய்யா! இதைத் தானே எல்லாருமே தெரிஞ்சுக்கத் துடிக்கிறோம்'' என்றார்.

''நம்மல்ல ஒருத்தர்னாரு ஜட்ஜ். எந்த ஒருத்தர்? அது தான் எனக்குத் தெரிஞ்சாகணும். மனித வடிவில் இருக்கிற அந்த அரக்கன் தான் யாரு?''

''நம்ம அனைவருமே தெரிஞ்சுக்க விரும்புவது அது தானே ரோஜர்ஸ்.''

''ஆனா உங்களுக்கு ஓர் ஊகம் இருக்கு, திரு ப்ளோர்'' என்றான் ரோஜர்ஸ் சூட்டிகையாய். ''உங்களுக்குள்ளே ஓர் அனுமானம் இருக்கு.

இல்லே?''

''எனக்கு இந்த விஷயத்துல ஓர் எண்ணம் இருக்கலாம்...'' என்று ஆரம்பித்தார் ப்ளோர் மெதுவாய்:

''ஆனா – அது எந்த அளவுக்கு உண்மை என்பதைத் தெரிஞ்சுக்க வெகு காலமாகும், ரோஜர்ஸ். அந்த ஊகத்துல நான் தப்பா கூட இருக்கலாம். ஒண்ணே ஒண்ணு சொல்ல முடியும் --- நான் மட்டும் என் ஊகத்துல சரினா, அவன் இதையே வழக்கமாய் கொண்ட ஓர் அசகாயன் - கை வந்த கலை இது அவனுக்கு... ஆமாம் --- ''

நெற்றி முழுவதும் முளைத்திருந்த வியர்வையைப் புறங்கையால் வழித்தெடுத்துக் கொண்டான் ரோஜர்ஸ். ரகசியமாயும் கரகரப்பாயும் ''இது ஒரு கெட்ட கனா போல இருக்கு. வேற என்னத்தை சொல்ல!'' என்றான் அவன்.

அவனை ஆர்வமாய் இப்போது திரும்பிப் பார்த்த ப்ளோர், ''உனக்குள்ளே ஏதாவது ஊகம் இருக்கா, ரோஜர்ஸ்?'' என கேட்டார்.

அந்த பட்லர் மறுத்துத் தலையசைத்தான்.

அதே கரகரப்பான தாழ்ந்த குரலில் சொன்னான்:

''எனக்குத் தெரியலே, ஸார். சுத்தமா எனக்கு ஒண்ணுமே தெரியலே! புரியலே, ஸார். இப்படி ஒரு எழவும் தெரியாம இருக்கிறது தான்... வேற எதையும் விட கடுமையா என்னை பயமுறுத்திக் கொல்லுது! என்னனே தெரியாம... புரியாம...''

III

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் கடுமையாய் சொன்னார்: ''நாம இங்கேயிருந்து வெளியேறி ஆகணும். வெளியேறணும். ஓடிடணும். எப்படிப்பட்ட இக்கட்டு நேர்ந்தாலும். உடனடியா.''

ஜட்ஜ் வார்க்ரேவ், சிந்தனையோடே, ஜன்னலிலிருந்து வெளியே பார்த்த வண்ணமிருந்தார். அவர் மூக்குக் கண்ணாடியைத் தொங்க விட்டுக் கொள்ளயிருந்த கயிற்றோடு விரல்களை விளையாட விட்டுக்

கொண்டிருந்தார். அப்படியே பேசினார்:

''நான் ஒண்ணும் பெரிய வானிலை ஆய்வாளன் கிடையாது. ஆனாலும் சொல்றேன் - நம்மைத் தேடி ஒரு படகு கிராமத்துக் கரையிலிருந்து இங்கே வரைக்கும் வருவதென்பது... முடியாத விஷயம். அப்படியே நம்ம அவசரம் தெரிஞ்சு அவங்க கிளம்பி வந்தாலும், தீவினை அடைய இருபத்தி நாலு மணி நேரத்துக்கும் மேல ஆயிடும்.''

தனது உள்ளங்கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்ட டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், உறுமினார். ''அதுக்குள்ளே நாம எல்லாரும் அவங்க அவங்க படுக்கையில கொலை பண்ணப்பட்டிருப்போம்... ம்?''

''அது நடக்கக் கூடாது என்பதே என் விருப்பம்'' என்றார் ஜட்ஜ். ''அப்படி ஒண்ணு நடக்கிறதைத் தடுக்கத் தேவையான அங்குல அங்குல நடவடிக்கைகளை எடுக்க நான் துடிக்கிறேன்.'' இவ்வாறு சொன்ன ஜட்ஜ் நினைத்துக் கொண்டார்: 'அவங்க அவங்க படுக்கையில கொல்லப்பட்டிருப்போம்...! எல்லா டாக்டர்களும் ஒரே மாதிரி தான் - ஆபரேஷன் மேஜை தான் ஞாபகம்!'

''ஏற்கெனவே மூணு பேரை பலி கொடுத்தாச்சு, நினைவிருக்கட்டும்'' என்றார் டாக்டர்.

''மறுக்கலே. ஆனா அவங்கள்லாம் ஒரு தாக்குதல் வரப் போகுது என்று தங்களைத் தயார்படுத்திக்கலே என்பதும் நினைவிருக்கட்டும். நமக்கு அந்த முன்னறிவிப்பு இருக்கு.''

''அத வெச்சுக்கிட்டு என்ன பண்ணிட முடியும்?'' என கசப்பாய் சொன்னார் டாக்டர். ''இப்பவோ... இல்லே கொஞ்சம் தாமதமாகியோ...''

''ப்ச்...'' என்ற ஜட்ஜ், குறுக்கிட்டு, ''நம்மால பல விஷயங்களைப் பண்ண முடியும்னு தோணுது'' என்றார்.

''அது யார் என்னும் அடையாளம் கூட நம்மகிட்டே இல்லே. இந்த அழகுல --- ''

தனது கன்னத்தில் சிறு தாளமிட்டுக் கொண்டே ஜட்ஜ் சொன்னார்: ''ஓஓஓ... டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்... நான் அப்படிச் சொல்ல மாட்டேன்...''

ஆர்ம்ஸ்ட்ராங் கண்கள் நிலை குத்திப் போயின. ''உங்களுக்குத்

தெரியும்னா சொல்றீங்க?''

எச்சரிக்கையாய் ஜஸ்டிஸ் வார்க்ரேவ் பேசினார்:

''கோர்ட்டுக்கு முன்னாடி சமர்ப்பிக்க வேண்டிய சாட்சிகளைக் கையில வெச்சுக்கிட்டு தான் சொல்லணும்னா... ம்ம்... என்கிட்டே எந்த துப்பும் கிடையாது என்பதை ஒத்துக்கறேன். ஆனா... இங்கே நடந்த அத்தனை சமாச்சாரங்களையும் போட்டுப் பிசகித் திருகி அலசும் போது, ஒரு குறிப்பிட்ட நபர், போதுமான அளவுக்கு படு சுத்தமா குறிக்கப்படுகிறார்னு எனக்கு தோணுது...! ஆமாம், எனக்குத் தோணுது...!''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் நிலை குத்திய விழிகள் இன்னும் சாதாரணமாக வில்லை. மெல்லமாய், ''எனக்குப் புரியலே'' என்றார் அவர்.

IV

வேல்வி எமிலி ப்ரெண்ட், மாடியில், அவருடைய படுக்கை யறையில் இருந்தார்.

அவருடைய பைபிளைக் கையில் எடுத்துக் கொண்டு ஜன்னல் திட்டில் அமரப் போனார்.

புத்தகத்தைத் திறந்தார். பின்பு, ஓரிரு நிமிட தயக்கத்திற்குப் பிறகு, அதனை ஓர் ஓரமாய் வைத்து விட்டு, உடையலங்கார மேஜைக்குப் போனார். அதன் ஒரு தட்டினை இழுத்துத் திறந்து உள்ளிருந்து ஒரு சிறு கறுப்புக் கையேட்டினை வெளியே எடுத்தார்.

அதனைத் திறந்துக் கொண்டு எழுத ஆரம்பித்தார்.

'படு பயங்கரமான சமாச்சாரம் நடந்தது. ஜெனரல் மார்கரெட் இறந்து விட்டார் (இவருடைய ஒன்று விட்ட சகோதரன் தான் எலிஸியை மணந்தது.) அவர் கொலை தான் செய்யப்பட்டுள்ளார் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. லஞ்ச் சாப்பிட்டு முடித்ததும், ஜட்ஜ், எங்களனைவருக்கும் ஒரு சுவையான விரிவுரை அளித்தார். எங்களில்

ஒருவர் தான் அந்தக் கொலையாளி என்பதைப் பொறுத்தமட்டில் அவருக்கு எவ்வித குழப்பமோ சந்தேகமோ கிடையாது. இதிலிருந்து, எந்தப் பேயோ பிசாசோ, எங்களில் ஒருவரைப் பீடித்துத் தொலைத்திருக்கிறது என்பது புரிகின்றது – மன பிராந்தி எனும் பேய். பைத்தியம்... பைத்தியம்...! இப்படித்தான் என நான் முன்கூட்டியே சந்தேகப் பட்டேன்... அது சரியாய் போயிற்று. எனில், எங்களில் அது யார்? எல்லோரும் இதே கேள்வியைத் தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்... எனக்கு மட்டும் தான் தெரியும் ...'

எவ்வித அசைவுமின்றி சற்று நேரம் உட்கார்ந்தேயிருந்தார் அவர். குழப்பமுற்று... திரை மூடியது போல ஆயின அவருடைய கண்கள். அவருடைய கையிலிருந்த பேனா, குடிகாரன் ஒருவன் எழுதுவது போல கிறுக்கலாய் தாளில் ஓடியது. நடுநடுங்கிக் கொண்டிருந்த கிறுக்கலான கையெழுத்தில் அவர் எழுதினார்:

கொலைகாரனின் பெயர்: பெட்ரிஸ் டெயிலர்.

அவருடைய கண்கள் மூடி விட்டன.

திடீரென்று, ஓர் உலுக்கலோடு, எழுந்தார் அவர். குனிந்து கையிலிருந்த நோட்டு புத்தகத்தைப் பார்த்தார். கோபம் தலைக்கேறிய வெடிப்போடு, வரிசையாயில்லாது வளைந்து நெளிந்து குழப்பமாய் போயிருந்த அந்தக் கடைசி வரியை, மேலும் கீழுமாய் கோடிட்டு, அழுத்தி அழுத்தி அடித்தார் அவர்.

சன்னமான ஒலியற்ற குரலில் சொன்னார்:

''நானா அதை எழுதினேன்? நானா? எனக்கென்ன பைத்தியமா...?''

V

பயல் கூடியது. வீட்டைச் சுற்றிலும் காற்று மோதி மோதி பேயாய் அலறியது.

அனைவரும் வரவேற்பறையில் இருந்தனர். துளியும் ஊக்கமற்று, கட்டப்பட்ட வெறும் மூட்டைகளாய் ஒவ்வொருவரும் கிடந்தனர். அவ்வப்போது ரகசியமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ரோஜர்ஸ் தேநீர் தட்டினைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்ததும் குதித்தெழுந்தனர்.

''காத்து பேயா அலறுது. திரைச்சீலைகளை இழுத்து மூடிடட்டுமா? கொஞ்சம் உற்சாகமா... அமைதியா தோணும்.''

எல்லோரும் ஒப்புதல் அளிக்க, கனமான திரைச்சீலைகள் இழுத்து மூடப்பட்டன... விளக்குள் எரிய விடப்பட்டன. அவன் சொன்னபடி அறை துறுதுறுப்பானது. கவிழ்ந்திருந்த கண் காணாத நிழல், சற்று விலகியது. நிச்சயமாய் நாளை புயல் குறைந்து விடும்... யாராவது வருவார்கள்... படகு ஒன்று வரும்...

''என் கப்ல டீயை விடறீங்களா, மிஸ் எமிலி?'' என்றது – வெரா.

முதிர் கன்னி, ''நீங்களே விட்டுக்கங்க'' என்றார். ''அந்த கூஜா பெருசு. கனம். என்னோட ரெண்டு சாம்பல் நிற கம்பளி நூல் கண்டு களை வேற காணும். எல்லாம் குழப்புதுப்பா.''

வெரா, எழுந்து டீ-மேஜை வரை போனார். அழகான பீங்கான் கோப்பைகள். கூடவே – சுடச்சுட, டீ! மெல்ல சகஜ நிலை திரும்பியது.

டீயால்தான் இங்கிலாந்தே சுழலுது என்றான் பிலிப். ப்ளோரும் பதில் தந்தார். டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் கலகலக்கும் ஒரு ஹாஸ்ய கதை சொன்னார். வழக்கமாய் டீயை ஒதுக்கும் ஜட்ஜ் வார்க்ரேவ், இப்போது ரசித்துக் குடித்தார்.

இறுக்கம் இளகிப் போயிருந்த இந்த சூழ்நிலைக்குள் நுழைந்தான் ரோஜர்ஸ். அவன் விசனப்பட்டுக் கிடந்தான். விட்டு விட்டு, நரம்பதிர பேசினான் அவன்: ''இடையூறுக்கு மன்னிக்கணும், ஸார். பாத்ரூம் திரைச்சீலைக்கு என்ன ஆச்சுனு இங்கேயிருக்கிற யாருக்காவது தெரியுமா?''

சட்டென அதிர்ந்து நிமிர்ந்தது லாம்பர்டின் தலை. ''பாத்ரூம் ஸ்க்ரீனா? அது எங்கே போகும் ரோஜர்ஸ்? என்ன உளர்றீங்க?''

''அது போயிடுச்சு, ஸார்... சுத்தம்... காணாமப் போயிடுச்சு. ஒவ்வொரு திரைச்சீலையா இழுத்து விட்டு மூடிக்கிட்டிருந்தேன். கழிவறை-குளியலறை... இந்த ரெண்டுக்கும் நடுவுல மறைப்புக்காக இருக்கிற கனமான ஸ்கிரீனைக் காணலே, ஸார்.''

ஏதோ பெரும் சொத்து போய் விட்ட அவதி – அவனுக்குள்ளிருந்த பயத்தால் அவனிடம் இப்போது உருவாகியிருந்தது.

ஜட்ஜ் கேட்டார்: ''அது காலைல இருந்ததா?''

''ஓ, இருந்தது, ஸார்.''

ப்ளோர் கேட்டார்: ''அது என்ன மாதிரியான ஸ்கிரீன்?''

''நல்ல சிவப்பான வழுவழு ப்ளாஸ்டிக் போன்ற துணி, ஸார். சிகப்பா இருக்கிற பாத்ரூம் டைல்ஸுக்கு ஏத்த மாதிரி...''

''அது இப்ப காணும்...?'' – லாம்பர்ட் கேட்டான்.

''காணும், ஸார்.''

ஒருத்தருக்கொருத்தர் பார்த்து விழித்துக் கொண்டனர்.

ப்ளோர் கோபமாய் பேசினார்: ''இருக்கட்டும்... வெறும் ஒரு ஸ்கிரீன்... போகட்டுமே... அதனாலென்ன... அதுக்கா கூப்பாடு...? இது பைத்தியக்காரத்தனம்...! இது மட்டுமா... எல்லாமே...! ஒழியட்டும், விடுங்க. ஒரு ப்ளாஸ்டிக் ஸ்கிரீனைக் கையில வெச்சுக்கிட்டு ஒருத்தனையும் கொன்னுட முடியாது. ஊஹூம்ப். எதுக்கெடுத்தாலும் பயப்பட ஆரம்பிச்சாச்சு. அதை மறங்க.''

ரோஜர்ஸ் சொன்னான்: ''சரி, ஸார். தேங்க்யூ, ஸார்.''

வெளியேறி தனக்குப் பின்னால் கதவினை சாத்தி விட்டுப் போனான் அவன்.

அறைக்கு உள்ளே... கவிழும் பனி மூட்டமாய்... நழுவியிருந்த பயம் மீண்டும் சூழ ஆரம்பித்தது.

மறுபடியும்... ரகசியக் கள்ளத்தனமாய், அவர்கள், ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

VI

இரவுச் சாப்பாடு தயாராகி வந்தது. சாப்பிடப்பட்டது. சுத்தம் செய்யப்பட்டது. எளிமையான உணவு... ஏறத்தாழ அனைத்துமே பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளால் செய்யப்பட்டிருந்தது.

உணவுக்குப் பிறகு வரவேற்பறையில் வியாபித்திருந்த சூழ்நிலை, தாள முடியாத அளவுக்கு இறுக்கமானதாயிருந்தது.

ஒன்பது மணிக்கு, எமிலி ப்ரெண்ட், தான் அமர்ந்திருந்த இருக்கையினின்றும் எழுந்தார். ''நான் படுக்கப் போறேன்'' என்றார்.

''நானும்'' என்றார் வெரா.

இரு பெண்களும் எழுந்திருந்து படியேறிச் செல்ல, லாம்பர்டும் ப்ளோரும் உடன் சென்றார்கள். அவரவர்களுடைய அறைகளுக்குள் நுழைந்து கதவுகளைச் சாத்திக் கொண்டதை, இவ்விரு ஆண்களும் வெளியே மாடி வராண்டாவில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''மறக்காம கதவைச் சாத்திக்கங்கன்னு சொல்ல வேண்டிய அவசியமே இல்லை!'' என்றார் ப்ளோர், அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி.

''எப்படியோ... இன்னிக்கு ராத்திரி பொழுதுக்கு அவங்க சரியா இருக்காங்க'' என்றான் லாம்பர்ட்.

அவன் திரும்பிக் கீழே போனான்... முன்னாள் இன்ஸ்பெக்டரும் தொடர்ந்தார்.

VII

நான்கு ஆடவர்களும் பிறகு ஒரு மணி நேரம் கழித்துப் படுக்கைக்குப் போனார்கள். அனைவரும் ஒன்றாக மாடிக்குப் போனார்கள். சமையல் மேஜையில் காலை சிற்றுண்டிக்காக தயாராய் சிலவற்றை எடுத்து வைத்துக் கொண்டிருந்த ரோஜர்ஸ், அனைவரும் மேலேறுவதைப் பார்த்தான். மாடி வராண்டாவில் எல்லோரும் கூடி நின்றதையும் பார்த்தான்.

பிறகு ஜட்ஜின் குரல் ஒலித்தது. ''ஜென்டில்மென்... கதவை மறக்காம பூட்டிடுங்கனு நான் ஞாபகப்படுத்த வேண்டிய தேவையில்லே...!''

இதற்கு ப்ளோர், மேலும் ஆழமாய் விளக்கம் தந்தார்: ''இன்னும் கூடுதலா என்னல்லாம் பாதுகாப்பிருக்கு... கதவை ஒட்டி கனமான நாற்காலியை இழுத்துப் போட்டுடலாமா...? ஆமாம்... இதையும் பண்ணிடணும்...! வெளிப்பக்கத்திலிருந்து பூட்டைத் திறக்கிற

வழியெல்லாமிருக்கு, இல்லையா...?!''

''உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ தெரியலே மிஸ்டர் ப்ளோர்...'' என்று முணுமுணுத்த பிலிப், ''உங்க தொல்லைப் பெருந் தொல்லையா இருக்கு!'' என்றான்!

ஜட்ஜ் ஆழ்ந்து சொன்னார்:

''குட் நைட், நண்பர்களே. எந்த ஆபத்தும் நேராம காலைல எல்லோரும் பத்திரமா சந்திப்போம்.''

சமையலறையை விட்டு வெளியே வந்த ரோஜர்ஸ், மொத்த படிக்கட்டுகளில் பாதி வரை நழுவி ஏறினான். நான்கு உருவங்களும் நான்கு அறைகளுக்குள் நுழைவதை அங்கிருந்தபடியே பார்த்தான் அவன்; நான்கு பூட்டுகள் சொடுக்கப்படும் ஓசையைக் கேட்டான்; சாவிகள் அழுத்தமாய் உருவப்படும் ஓசையைக் கேட்டான்; கதவுகளின் மேல் தாழ்ப்பாள்கள் ஓங்கி ஏற்றப்படும் ஒலியையும் கேட்டான்.

ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டான் அவன்.

''அவ்ளோதான்''–வாய்க்குள்ளேயே இதை சொல்லிக் கொண்டான்.

சமையலறைக்குள் மீண்டும் நுழைந்தான். சரி... காலை சிற்றுண்டிக்குத் தேவையான எல்லாமும் தயாராயிருக்கின்றன. அவனுடைய கண்கள் மேஜையின் நடுவில் வட்ட வடிவ தாங்கியில் தொங்கிக் கொண்டிருந்த பீங்கானாலான சைனா சிப்பாய் பொம்மைகளின் மீது நிலைத்து நின்றன.

உடனே ஒரு பல்லிளிப்பு அவன் முகத்தில் உருவானது. சொல்லிக் கொண்டான்: ''என்ன ஆனாலும் சரி... இன்னிக்கு ராத்திரி இதுல எந்தக் கொம்பனும் வந்து விளையாடாம நான் பார்த்துக்கிறேன்.''

இங்கிருந்து, துணி துவைக்கவும் இன்னபிற சாமான்களைப் போட்டு வைக்கவும் என பின்னாலிருந்த பகுதிக்கு வழி செய்துத் தரும் கதவினை... மூடினான். தாளிட்டான். பிறகு இங்கிருந்து வெளியேறி வந்தவன், இவ்வறையின் கதவினையும் மூடி, தாளிட்டு, பூட்டி, சாவியை சட்டைப் பைக்குள் நழுவ விட்டான்.

பிறகு விளக்குகள் அனைத்தையும் அணைத்து விட்டு, விறுவிறு வென படிகளேறி வேகமாய் தனது புதிய அறைக்குள் போனான்.

அங்கு மறைந்து பதுங்க என்று ஒரே ஓரிடம் தானிருந்தது... அது

அங்கிருந்த பெரிய அலமாரி... அதனுள் உடனே போய் பார்த்தான் அவன். பின், தனது அறையை கவனமாய் சாத்தி பூட்டி விட்டு, படுக்கையைத் தயார் செய்தான்.

அப்போது தனக்குத் தானே அவன் முணுமுணுப்பாய் சொல்லிக் கொண்டான்:

''ஒவ்வொரு சைனா பொம்மையா காணாம செஞ்சு... மூச்... அந்த வித்தையெல்லாம் இன்னிக்கு ராத்திரி நடக்காது...! நான் எல்லா ஏற்பாடுகளையும் அதுக்குப் பண்ணிட்டேன்.''

அத்தியாயம் 11

I

கலை விடிந்ததும் ஒரு முறை கண் விழித்து விடும் வழக்கம் பிலிப்புக்கு இருந்தது. இன்றைய காலைப் பொழுதிலும் அதனை செய்தான் அவன். கை ஊன்றி பாதி எழுந்த நிலையில் ஆன அவன், காது கொடுத்து கவனித்தான். ஓரளவுக்கு காற்று தணிந்திருந்தாலும் இன்னும் அதன் ஆரவாரம் குறையாமிலிருந்தது. மழை பொழியும் ஓசையை பிலிப் கேட்கவில்லை...

எட்டு மணிக்கு காற்று மறுபடியும் பலங்கொண்டு வீசித் தள்ளியது... ஆனால் அதை பிலிப் கேட்கவில்லை. அவன் மறுபடியும் ஆழ்ந்து தூங்கியிருந்தான்.

ஒன்பதரைக்கு தனது கட்டிலின் விளிம்பில் எழுந்து உட்கார்ந்திருந்த பிலிப், கைக்கடியாரத்தைப் பார்த்தான். அதைக் காதில் பதித்தான். பிறகு அவனது உதடு பற்களுக்குப் பின்னால் வளைக்கப்பட்டு செல்ல... நரி முகம் போன்ற அமைப்பில், ஆர்வ சிரிப்பு உருவானது.

மெதுவாய் அவன் சொன்னான்: ''இதுக்கு ஏதாவது பண்ண வேண்டிய நேரம் வந்துடுச்சுனு நினைக்கிறேன்.''

ஒன்பது முப்பத்தைந்து மணிக்கு, பிலிப், சாத்தியிருந்த ப்ளோர் அறையின் கதவினை, ஆட்காட்டி விரல் மடக்கித் தட்டிக் கொண்டிருந்தான்.

உள்ளிருந்தவர், ஜாக்கிரதையாய் கதவினைத் திறந்து எட்டிப் பார்த்தார். அவரது தலை கலைந்திருக்க... இன்னும் கண்களில் தூக்கக் கலக்கம் விலகாது, இமைகள் பாதி மூடியே கிடந்தன.

''இருபத்தி நாலு மணி நேரமும் தூங்குவியாப்பா?'' என விநயமாய் கேட்ட பிலிப், ''எதையும் சுலபமா எடுத்துக்கிற மனசு உங்களுக்கு இருக்குனு புரியுது... ம்...?'' என்றான்.

ப்ளோர் சுருக்கமாய் பேசினார்: ''என்ன விஷயம்?''

''யாராவது வந்து உங்களைக் கூப்பிட்டாங்களா–டூ'யாவது கொண்டு வந்து நீட்டினாங்களா? ஒண்ணும் தெரியாத தூக்கம்... இப்ப மணி

என்ன தெரியுமா?'' – பேசினான் பிலிப்.

திரும்பி, கட்டிலினருகே இருந்த சிறு மேஜைக் கடியாரத்தைப் பார்த்தார் ப்ளோர். ''ஒன்பது முப்பத்தைந்து. ஆஹ்...! நான் இப்படி தூங்கியிருக்கேன்னா... என்னாலயே நம்ப முடியலே. ரோஜர்ஸ் எங்கே? ஏன் எழுப்பலே?''

''விடையற்ற இதே கேள்வியைத் தான் எங்கும் எதிரொலிச்சுக்கிட்டு இருக்கு'' என்றான் பிலிப்.

''என்ன சொல்றே?'' என்றார் இன்ஸ்பெக்டர், கூர்மையாகி.

''ரோஜர் காணலைனு சொல்றேன். அவன் ரூம்ல இல்லே... வேற எங்கேயும் காணோம். கெட்டிலுக்குள்ளே எதுவும் விட்டு கூட வெக்கலே... அடுப்பு கூட இன்னும் பத்த வைக்கலே.''

மளமளவென்று பிலிப் பேசியதைக் கேட்டு விட்ட மூச்சைப் பிடிக்கப் பதறினார் ப்ளோர்.

''பிசாசு எங்கே போய் தொலைஞ்சிருக்கும்? தீவுக்குள்ளே எங்கேயாவது போயிருப்பானா? இருங்க... சட்டை போட்டுக்கிட்டு வரேன். மத்தவங்களுக்கு இதுல ஏதாவது தெரியுமானு பார்ப்பம்.''

பிலிப் ஏற்றுக் கொண்டு தலையசைத்தான். அப்படியே வரிசையாய் இருந்த அறைகளின் வாசலில் நடந்தான் அவன். எழுந்து, நல்ல உடை உடுத்தி இருந்தார் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். ப்ளோரைப் போல எழுப்ப வேண்டிய நிலையில் இருந்தார் ஜட்ஜ் வார்க்ரேவ். வெரா துவைத்த உடையுடுத்தி தயாராகவேயிருந்தார். எமிலியின் அறை காலியா யிருந்தது.

இந்த சின்ன கூட்டம் வீட்டுக்குள் நகர ஆரம்பித்தது. பிலிப் லாம்பர்ட் ஏற்கெனவே ஊர்ஜிதப்படுத்தியிருந்தது போல, ரோஜர்ஸின் அறையில் ஒருவரும் இல்லை. அங்கு தான் படுத்திருந்திருக்கிறான் என்பது தெரிந்தது... சவரக் கத்தி, சோப்பு, பிரஷ் அனைத்தும் ஈரமாகியிருந்தன.

''அவன் காலைல எழுந்துட்டான் என்பது விளங்குது. அப்புறம் தான்--- '' என்றான் பிலிப்.

நிச்சயப்படுத்தப்பட்ட குரலில் வெரா மெல்ல சொன்னார்: ''அவர் எங்கேயோ ஒளிஞ்சுக்கிட்டு – நாம வருவோம்னு காத்திருக்கிறதா உங்களுக்குப் படலியா?''

''அம்மா தாயே'' என்ற பிலிப், ''நான் யாரைப் பற்றி என்ன வேணும்னாலும் நினைக்கத் தயார்'' என்றான். வெரா முகம் சுண்டியது. ''இப்போதைக்கு ஒண்ணா போவோம்... அவர் எங்கே என்பது தெரியும் வரை.''

''தீவுக்குள்ளே ஏதாவது சமாச்சாரமா அவன் போயிருப்பான்'' என்றார் டாக்டர்.

முகச் சவரமெல்லாம் செய்துக் கொள்ளாமல் அப்போது தான் அவர்களுடன் வந்து இணைந்துக் கொண்ட ப்ளோர் சொன்னார்: ''இந்த ப்ரெண்ட் எங்கே போய் தொலைஞ்சாங்க? இது ஒரு மர்மமா?'' என்றார்.

'உங்கத் தொல்லைப் பெருந்தொல்லையா இருக்கு!' என்பது போல அவரைப் பார்த்தான் லாம்பர்ட்!

ஆனால், படியிறங்கி அவர்களனைவரும் வரவேற்பறையை வந்தடைந்த போது, வாசல் வழியாக எமிலி ப்ரெண்ட் வந்துக் கொண்டிருந்தார். மழையில் நனையாமலிருக்க அணிந்துக் கொள்ளும் ப்ளாஸ்டிக்கினாலான அழகிய மேலங்கி போட்டிருந்தார்.

''கடல் சீற்றத்துல பொங்கிக்கிட்டு இருக்கு. இன்னிக்கும் ஒரு படகும் வராது போல'' என்றார்.

''தனியாவா போய் தீவுக்குள்ளே சுத்திட்டு வரீங்க, ப்ரெண்ட்? இதை விட பெரிய முட்டாள்தனம் வேற இருக்க முடியாதுனு உங்களுக்குத் தோணலே?''

''மிஸ்டர் ப்ளோர்... தேவையான அனைத்து பாதுகாப்புகளையும் நான் செஞ்சுக்கிட்டேன், சரியா? சுற்றி வர கண் கொத்தி பாம்பா பார்த்துக்கிட்டே இருந்தேன்.''

உறுமிய ப்ளோர், ''ரோஜர்ஸை எங்கேயாவது பார்த்தீங்களா?'' என கேட்டார்.

எமிலியின் புருவங்கள் உயர்ந்தன. ''ரோஜர்ஸ்? ம்ம். இல்லே. அவனை இன்னிக்குக் காலைல நான் பார்க்கவே இல்லையே. ஏன்?''

முகச் சவரம் செய்து, குளித்து, பல் ஸெட்டை சரியாய் பொருத்தி முடித்திருந்த ஜட்ஜ் வார்க்ரேவ், படியிறங்கி வந்துக் கொண்டிருந்தார். திறந்திருந்த சமையலறைக் கதவு வழியே உள்ளே போனார் அவர். ''ஹா... காலை உணவுக்கு எல்லாம் தயார் செஞ்சுட்டான் போல''

என்றார்.

''இதை ராத்திரியே அவன் எடுத்து வெச்சிருப்பான்னு நினைக்கிறேன்'' என்றான் பிலிப்.

அனைவரும் இப்போது உள்ளே நுழைந்திருந்தனர். வரிசையாய் வைக்கப்பட்டிருந்த தட்டுகள்... தயாராயிருந்த பதார்த்த டப்பாக்கள்... வரிசையாய் அடுக்கப்பட்டிருந்த கோப்பைகள்... அருகே சமையல் செய்ய போர்த்திக் கொள்ளும் மேலங்கி கூட தயாராகவே எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

அப்போது... அதை வெரா தான் முதலில் பார்த்தார். அப்படியே ஜட்ஜின் கையை இறுக்கமாய் பற்றிக் கொண்டாள் அவள்... விளையாட்டு டீச்சரின் முறம் போன்ற கை இறுக்கிய இறுக்கம், வயதான ஜட்ஜுக்கு பய அதிர்ச்சியை உணர்த்தியது.

''அந்த சிப்பாய்ங்க! ஆ...! பாருங்க...! சிப்பாய் பொம்மைங்க...! ஆ...!''

விசால வட்ட சமையல் மேஜையின் நடுவே, ஆறு சிப்பாய் பொம்மைகள் மட்டுமே தொங்கிக் கொண்டிருந்தன.

II

துரிதமாக அவனைக் கண்டுபிடித்து விட்டனர்.

பின்னாலிருந்த துணி துவைக்கும் பகுதியில் கிடந்தான் அவன். அடுப்பு மூட்டுவதற்காக அங்கு சுள்ளிகளை உடைத்து சேகரித்துக் கொண்டிருந்திருக்கிறான் அவன். இதற்காக அவன் உபயோகப்படுத்தியிருந்த சின்ன கோடாரி அவன் கையில் அப்போதும் இருந்தது. பெரிய கோடாரி ஒன்று... நல்ல பலமானது... கதவில் சார்த்தி வைத்தபடி கிடந்தது. அதன் இரும்புப் பகுதி காய்ந்த ப்ரௌன் நிறத் திட்டுக்களோடு தென்பட்டது. ரோஜர்ஸின் பின்னந்தலையில் ஆழப் பதிந்திருந்த காயத்துக்கு அர்த்தம் கற்பித்தது அது...

III

''படு சுத்தமா தெரியுதே'' என்றார் டாக்டர். ''ரோஜர்ஸ் கீழே குனிந்து வேலை செஞ்சுக்கிட்டு இருந்த போது, அந்தக் கோடாரிய ஒரே ஒரு முறை வேகமா பின்பக்கத்திலிருந்து வீசி அடிச்சு இந்தக் கொலையை ப..ஞ்சிருக்கான் கொலைகாரன்...''

அங்கிருந்த பெரிய கோடாரியின் கைப்பிடியோடும், மேலும், அங்கிருந்த ஒரு மாவு சலிக்கும் சல்லடையோடும் ஒன்றியிருந்தார் ப்ளோர்.

ஜட்ஜ் கேட்டார்: ''ரொம்ப அதிகமான வலு தேவைப்பட்டிருக்குமா, டாக்டர்?''

ஆர்ம்ஸ்ட்ராங் அர்த்தம் பொதிந்து சொன்னார்: ''ஒரு பெண்ணால செஞ்சிருக்க முடியுமானு தெரிஞ்சுக்க விரும்பறீங்க?'' சொல்லி விட்டு விறுவிறுவென சுற்றிலும் நோட்டம் விட்டார் டாக்டர். வெராவும் எமிலியும் அடுக்களைக்குப் போயிருந்தனர். ''வெரா சுலபமா செஞ்சிருக்கலாம் - அத்தனை பலம் அவங்களுக்கு உண்டு – அவங்க ஒரு விளையாட்டு டீச்சர். எமிலி உடைஞ்சுப் போயிடற மாதிரி இருக்காங்க – ஆனா இப்படிப் போன்றவங்கள்ல பெரும்பாலானோர் எஃகுக் கம்பி போல உறுதியா இருப்பாங்க. மனத்தளவுல உரம் ஏறி எதற்கும் அஞ்சாம இருக்கிறவங்களுக்கு உள்ளுக்குள்ளே புயல் போல பலமிருக்கும் என்பதையும் நாம மறந்துடக் கூடாது.''

இதற்கெல்லாம் ஜட்ஜ் சிந்தனையோடு தலையசைத்துக் கொண்டே யிருந்தார்.

ஒரு பெருமூச்சோடு எழுந்தார் ப்ளோர். ''கை ரேகைகள் இல்லே. பிறகு கைப்பிடி வழிச்சு துடைக்கப்பட்டிருக்கு.''

இடியோசையோடு ஒரு சிரிப்பொலி எழுந்தது – எல்லோரும் கும்பலாய் திரும்பி அதீத ஓசை வந்த திசையைப் பார்த்தனர். வெரா க்ளேதார்ன் சற்று தள்ளி தனியே நின்றுக் கொண்டிருந்தார். கிறீச்சிடும்

தகரக் குரலில் அலறியது அவர் தான். உடைந்து கிளம்பிய அசுர சிரிப்பின் பிடியில் இருந்தார் அவர்.

''இந்தத் தீவுல தேனீ வளர்க்கிறாங்களா? சொல்லுங்க... எனக்கு இதுக்கு பதில் சொல்லுங்க. அப்ப தேன் வேணும்னா நாம எங்கே போவது? ஹா! ஹா! ஹா!'' – இடித்துக் கிளம்பியது பேரிடிச் சிரிப்பு.

ஒன்றுமே விளங்காமல் அனைவரும் அவளையே வெறித்தனர். துளியும் குழப்பமின்றி பிசகாது நடந்து வந்த அந்த அழகு தேவதைக்கு ஏதோ இவர்கள் அனைவரது கண்களுக்கு முன்னாலும் பைத்தியம் பிடித்து விட்டது போல ஆனது காட்சி. அதே அசாதாரண காட்டுக் கத்தலில் தொடர்ந்து பேசினார் வெரா:

''ஏய்... அப்படி முழிக்காதீங்க! எனக்கு கிறுக்கு பிடிச்சிட்டா மாதிரி பார்க்காதீங்க! புத்தி சுவாதீனம் முழுக்க இருக்கு... புத்தியோட தான் கேக்கறேன். தேனீ... தேன் கூடு... தேனீக்கள்... ஓஹ்... புரியலே! இன்னுமா! அந்த முட்டாள் கவிதையை நீங்கள்லாம் படிக்கலே...? உங்க அத்தனை பேரோட படுக்கையறையிலும் தான் அது உச்சியில தொங்குதே... நினைவில்லே! அது பற்றின நினைவிருந்திருந்தா தேடித் தேடி அலையாம நேரா நாமெல்லாம் இங்கேல்லே வந்திருப்போம்?! **ஏழு சின்ன சிப்பாய் பையன்கள் கழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்.** நல்லது... இதுக்கு அடுத்த வரி? நினைவில்லே...?! முழிக்காதீங்கய்யா...! எனக்கு அது முழுக்கத் தலைகீழ் பாடம்...! **ஆறு சிப்பாய் பையன்கள் தேன் அடையோடு விளையாடிப் பார்த்தனர்;** இது தான் அந்த அடுத்த வரி! இதனால தான்யா திருப்பித் திருப்பிக் கேக்கறேன் - இந்தத் தீவுல தேன் கூடிருக்கா – தேனீ வளர்க்கிறாங்களா – முட்டாள் தனமா தெரியலாம்...! ஆனா முட்டாள் தனமா...? கிடையாதுய்யா கிடையாது...!''

வெறியாய் மீண்டும் சிரிக்க ஆரம்பித்தார் அவர். டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் சுழன்றடித்துக் கொண்டு முன்னேறினார். கையைத் தூக்கினார்! கழுத்தை நெறித்து எறிந்து விடுபவர் போல அழுத்தமாயும் வேகமாயும் வெராவின் மென்னியை ஒரு திருகு திருகினார்.

அவர் காற்றுக்குத் திண்டாடினார்... கண்கள் வெருண்டன... விக்கினார்... விழுங்கினார்... வியர்த்தார்...

சில நிமிடங்கள் செய்வதறியாது நின்ற அவர், பிறகு, ''தேங்க் யூ''

என்றார். ''ஒண்ணுமில்லே.''

அந்த வலுவான விளையாட்டு டீச்சரின் குரல், மீண்டது... கட்டுப்படுத்தப்பட்டதாயிற்று! அமைதியாயிற்று.

திரும்பி, வழியைக் கடந்து, எமிலியை அழைத்தபடி சமைய லறைக்குள் நுழைந்தார்: ''நானும் மிஸ் எமிலியும் எல்லாருக்கும் சிற்றுண்டி தயார் பண்றோம். யாராவது – எனக்குக் கொஞ்சம் சுள்ளி கொண்டு வர முடியுமா?''

டாக்டரின் அழுத்தமான ஆண்மை விரல்களின் பதிவு, வெராவின் கழுத்தில் அப்படியே இருந்தன.

எமிலியுடன் சேர்ந்துக் கொண்டு அவர் உள்ளே போனதும், ப்ளோர் சொன்னார்: ''நிலைமையை சரியா கையாண்டீங்க, டாக்டர்.''

ஆர்ம்ஸ்ட்ராங், சிறு மன்னிப்புக் கோரும் வகையில் சொன்னார்:

''பண்ணியாகணும். இருக்கிற எலலாத்துக்கும் மேலே, பைத்தியக் காரக் கத்தலையெல்லாம் சமாளிச்சுக்கிட்டு இருக்க முடியாது.''

பிலிப் லாம்பர்ட், ''அவங்க ஹிஸ்டீரியா பிடிச்ச மாதிரி கத்தற வகை கிடையாதே'' என்றான்.

ஆர்ம்ஸ்ட்ராங் ஏற்றுக் கொண்டார். ''அப்படியெல்லாம் அவங் களுக்கு ஒண்ணும் கிடையாது. நல்ல ஆரோக்கியமான சமயோஜிதப் பொண்ணு. ஆனாலும் என்ன பண்றது? திடீர் ஷாக். இது யாருக்கு வேணும்னாலும் ஆகலாம்.''

தான் கொல்லப் படுவதற்கு முன், சில சுள்ளிக் கட்டைகளை ரோஜர்ஸ் உடைத்திருந்தான். அவற்றை ஒன்றாக்கி எடுத்துக் கொண்டு சமையலறைக்கு வந்தனர். எமிலியும் வெராவும் மும்முரமாயிருந்தனர். எமிலி அடுப்பு மூட்டுவதில் இறங்கியிருக்க... வெரா மாமிசங்களைச் சின்னச் சின்னத் துண்டுகளாக்கிக் கொண்டிருந்தார்.

''ஓ... ரொம்ப தாங்க்ஸ்'' என்றார் எமிலி, வந்திறங்கிய சுள்ளிகளைப் பார்த்தபடி. ''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில முடிச்சுடறோம்... தண்ணீ சுட்டா வேலை முடிஞ்சுடும்.''

IV

முன்னாள் இன்ஸ்பெக்டர், தணிந்த, கரகரப்பான குரலில், பிலிப்பிடம் கேட்டார்: ''என்ன நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு தெரியுதா?''

பிலிப், கிண்டலாய் பதில் தந்தான்: ''இதையே நான் கேட்டா நீங்க என்ன பதில் சொல்லியிருப்பீங்க...?! ஊகிச்சு ஊகிச்சு மூளையைப் பிசைஞ்சுக்கிட்டு தம்புடி பிரயோஜனம் கிடையாது. கரெக்ட்?''

முன்னாள் இன்ஸ்பெக்டர் கண்ணும் கருத்துமானவர்... கடமை மிக்கவர். சிறு பதில்கள் எல்லாம் அவருக்கு முழு விளக்கங்களாய் ஆகி விடாது. அவர் வேகமாய் தொடர்ந்தபடியிருந்தார்:

''அமெரிக்காவில் நடந்த ஒரு வழக்கு. வயசான ஒரு ஜென்டில் மேன்... அவருடைய மனைவி – ரெண்டு பேருமே கோடாரியால் சீவப்பட்டு கொலை செய்யப்பட்டனர். வீட்டில அப்போ யாரும் இல்லே... அவங்க பொண்ணு மற்றும் வேலைக்காரி தவிர. அந்த வேலைக்காரி செஞ்சிருக்க மாட்டானு சந்தேகத்துக்கிடமில்லாம நிரூபணம் ஆனது. அந்த மக... மரியாதைக்குரிய பெண். நடுத்தர வயசு. திருமணம் ஆகலே. இப்படியும் ஒரு பெண்ணானு நம்ப முடியாத அளவுக்கு பதவிசா ஆச்சரியமானவளா அவ இருந்தா... எந்த அளவுக்கு ஆச்சரியம் தந்தானா --- இவ குற்றமற்றவ அப்படினு கோர்ட்டே விலக்கி விடும் அளவுக்கு...! அத்தனை பாந்தம்...! ஆனா கொலை களுக்கு வேறெந்த விளக்கமும் கிடைக்கவேயில்லே.''

சொல்லி விட்டு சற்று நிறுத்திக் கொண்டார் ப்ளோர். ''அங்கிருந்த கோடாரியை முதல்ல பார்த்த போதும்... பிறகு அடுக்களைக்குள்ளே சாந்தமாவும் அமைதியாவும் இருந்த வெராவைப் பார்த்த போதும், எனக்கு இந்தக் கொலைகள் வழக்கு சட்டுனு நினைவுக்கு வந்தது. ஒரு மயிரிழை சலனம் இல்லியே அவங்க கிட்டே. அந்தப் பொண்ணு திடுதிப்புனு தன்னிலை இழந்து பைத்தியமா ஆனது – கிறுக்கு மாதிரி கத்தினது – ஆனா, அது தானே நடக்கணும்! – அது மாதிரி ஒண்ணைத்

தானே நாம எதிர்பார்ப்போம்! – ஆங்... இப்படி உங்களுக்குத் தோணலையா?''

சுருக்கமாய் ''இருக்கலாம்'' என்றான் பிலிப்.

ப்ளோர் விடவில்லை. ''அந்த இன்னொண்ணு. சம்பிரதாய சுத்தமும் டம்பமும் நிறைந்த அந்த எமிலி. சமையக்காரத் துணியை சுத்திக் கிட்டு... ஏத்தலுதா இருக்கணும். துளி நடுக்கம் இருந்ததா?! 'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில முடிச்சுடறோம்... தண்ணீ சுட்டா வேலை முடிஞ்சுடும்...'ங்குது! என்னைக் கேட்டா... முழுசா மூளையே இல்லாத கருங்கல் இது தான்னு சொல்வேன். கல்யாணமாகாத பல பெண்கள் இப்படித் தான் ஆகிடுதுங்க... கல்லா! மன வியாதி பிடிச்சு கொலை பண்ற அளவுக்குப் போயிடுதுங்கன்னு சொல்ல வரலே... ஆனா மூளையில அத்தனை மமதை ஏறி புரியாத புதிரா ஆயிடுதுங்க. சம்பிரதாயம்... கோயில்... அது இதுனு... பக்தி பைத்தியங்கள்! இவ தான், உலகைத் திருத்தக் கடவுள் அனுப்பி வெச்சுள்ள தூதுவன்னு ஒரு பிரமை! அவங்க அறையில உட்கார்ந்துக் கிட்டு எப்பப்பாரும் பைபிள் படிச்சுக்கிட்டே இருக்கா... தெரியுமா?''

பெருமூச்சு விட்டான் பிலிப். ''இதெல்லாம் அவ மூளைப் பிசகிப் போனவனு நிரூபிக்கப் போதுமான ஸ்திரமான சாட்சியங்கள் கிடையாது, ப்ளோர்.''

சிரமப்பட்டு, விடமாட்டேன் என்பது போல வற்புறுத்தி, தொடர்ந் தார் ப்ளோர்:

''சரி... இது வேண்டாம்... விட்டுடுங்க. ஆனா எமிலி வெளியே போய்ட்டுல்ல வந்தாங்க. ரெயின்-கோர்ட் போட்டுக்கிட்டு. கடல்ல நிலைமை எப்படி இருக்குனு பார்க்கப் போயிட்டு வந்ததா சொன்னாங்க.''

லாம்பர்ட் சற்று பொறுமையிழந்தான். மறுத்துத் தலையசைத்தான். ''விறகு உடைச்சுக்கிட்டு இருக்கும் போது ரோஜர்ஸ் கொல்லப் பட்டிருக்கான். அது தான் அவன் எழுந்ததும் செய்ற முதல் வேலை! ஆக, விடியற்காலைலயே அது நடந்திருக்கணும். இதுக்கப்புறம் வெளியே போய் மணிக்கணக்கா சுத்திட்டு வர்ற தேவை எதுவும் எமிலிக்கு இருக்கிறதா எனக்குத் தெரியலே. என்னைக் கேட்டா... ரோஜர்ஸைக் கொன்னவன், அதுக்குப் பிறகு மெத்தையில போய்

சுருண்டு படுத்து நிம்மதியா தூங்கிற வேலையைத் தான் செஞ்சிருப் பான்...! நம்ம கொலைகாரன் - அத்தனை கூல்.''

ப்ளோர் தொடர்ந்தார்: ''முக்கியமானதை விட்டுட்டுப் பேசறீங்க, பிலிப். அந்த எமிலிப் பொண்ணு குற்றமற்றவளா இருந்தா... அகாலத்துல தன்னந்தனியா வெளியே போய் சுத்திட்டு வர, மரண பயம் பயந்திருக்கணும். பயப்படலியே. தான் பயப்படறதுக்கு ஒண்ணுமே இல்லைனு ஒரு நிலைமை இருந்தா மட்டும்தான் அவங்க இன்னிக்குக் காலையில பண்ணினதைப் பண்ணியிருக்க முடியும். அதாவது – அவங்களே ஒரு கொடூரக் கொலைக் குற்றவாளினு இருந்தா தான்.''

''இது நல்ல பாயிண்ட். ஆமாம். இது எனக்குத் தோணவே இல்லையே.''

இப்படிச் சொன்ன பிலிப், ''நல்ல வேளை... நீங்க என்னை சந்தேகப் படலியே... சந்தோஷம்'' என்றான்.

சிறு லஜ்ஜைப் படர, ''முதல்ல நினைச்சேன்'' என ஆரம்பித்தார் ப்ளோர்: ''உங்க துப்பாக்கி – நம்ப இடம் தராத உங்க கதை! ஆனா, அதெல்லாம், உங்களை மாதிரி பல ஆபத்தான இடங்களுக்குப் போகும் பழக்கம் உள்ள ஒருத்தர் செய்யக் கூடியவை தான்னு இப்ப புரியுது.''

சற்று தாமதித்து விட்டு சொன்னார்: ''என்னைப் பற்றியும் நல்லபிப்ராயம் இருக்குனே நினைக்கிறேன்.''

பிலிப் சிந்தித்தபடி இதற்கு பதில் தந்தார்: ''என் கணிப்பு தப்பா கூட இருக்கலாம்; ஆனா, இப்படியெல்லாம் செய்ய உங்களுக்கு கிரிமினல் மூளையிருக்கானு... எனக்கு சந்தேகம் தான்! இதையும் மீறி நீங்க தான் அந்த முகந்தெரியா கொலைகாரன்னா... ஓஹ்... உங்களைப் போன்ற ஓர் அப்பழுக்கற்ற நடிகனைப் பார்க்கவே முடியாது. அதற்கு என் சிரந்தாழ்த்திய வந்தனங்கள்.''

இப்படிச் சொல்லி முடித்து விட்டு ஒரு புதிய உரையாடலை மெதுவாய் துவக்கினான் பிலிப்: ''நமக்குள்ளேயே இருக்கும், ப்ளோர். கவலை வேண்டாம். சொல்லுங்க. நீங்களும் அந்தப் பொய் சாட்சியின் ஒரு பங்கு தான்னு சொல்றேன் நான்.''

அவஸ்தையானார் ப்ளோர். ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு நகர்ந்தார். இறுதியாய் பேசினார்:

''இனி மறைச்சு ஒண்ணும் ஆகப் போவதில்லைனு தோணுது. சொல்றேன். மொத்தமே இது தான். லாண்டர் - பரிதாபமானவன். அவன் ஒரு வெகுளி. ஒண்ணுந்தெரியாதவன். அந்தக் கூட்டம் என்னை முற்றுகையிட்டது... எங்களுக்கு நடுவுல அவனை இழுத்துப் போட்டோம். ஆனா, இதைப் போய் --- --- ---''

''--- --- --- குற்றம்னு சொல்ல முடியாது – சாட்சிகள் எதுவும் இல்லாத வரை'' என விறைப்பாய் முடித்துத் தந்தான் பிலிப்! ''உங்களுக்கும் எனக்கும் மட்டும் தான் ப்ளோர். சொல்லுங்க... இதனால மூட்டை மூட்டையாகட்டியிருப்பீங்கனு நினைக்கிறேன்.''

''ம்ம். இதனால நான் எத்தனை பண்ணியிருக்க முடியுமோ – அத்தனை பண்ணலே. பணம் தின்னிக் கழுகுங்க. எப்படியோ எனக்கு சிறப்பான பதவி உயர்வு வந்தது.''

''இன்னும் ஒண்ணும் கிடைச்சதே. ஜெயில்லேயே உயிரை விடற அளவுக்கு, லாண்டருக்கு ஆயுள் தண்டனை.''

''அவன் அப்படி சாவான்னு எனக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லையே...? என்ன...?!''–அடித்துக் கேட்டார் ப்ளோர்.

''அது உங்க துரதிர்ஷ்டம்.''

''என்னுதா? அவனுதுனு சொல்லுங்க.''

''உங்களுதும்னு சொல்லலாம். ஏன்னா – அந்த நிகழ்வால – உங்களுடைய உயிரும் ரொம்ப அநாச்சாரமா கூடிய சீக்கிரத்துல போகப் போகுது இல்லே...?!''

''என் உயிர்?''–ப்ளோர், பிலிப்பை வெறித்தார். ''ரோஜர்ஸ் போன மாதிரியோ... அல்லது மற்றவங்க கொல்லப்பட்டது மாதிரியோ நானும் வீழ்த்தப் படுவேன்னா நீங்க நினைக்கிறீங்க? ஆஹ் ஆஹ்! என்னை – முடியாது – அசைக்க முடியாது! என்னைச் சுற்றி என்ன நடக்குதுனு அப்படி கண்ணுங்கருத்துமா நான் கண்காணிச்சுக்கிட்டு தானிருக்கேன்.''

''ஓஹ்... இருக்கலாம்'' என்ற பிலிப், ''நான் ஒண்ணும் சவால் விடலே'' என்றான். ''சவால் விட்டு தான் என்ன ஆகப் போகுது...?! இதோ... இப்பவோ அப்பவோ... நீங்க மண்டையைப் போட்டுட்ட பிறகு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொண்டு வந்தா தந்துடப் போறீங்க?!''

''ஏய், பிலிப். வாயை மூடுங்க. உளறல் வேண்டாம்.''

இளித்தான் பிலிப். ''அருமை ப்ளோர்... என் அபிப்பிராயப்படி... உங்களுக்கு இனி தப்பிக்க வாய்ப்பு இருக்கிறதா தோணலே.''

''என்ன?''

''அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று சரியா ஊகிக்க சத்தற்ற நீங்க, வசதியா உட்கார்ந்துக்கிட்டு தயாரா இருக்கிற அடுத்த இலக்குனு தான் எனக்குத் தோணுது. சாதாரண மனிதனைப் போல இல்லாம... அசாதாரண கிரிமினலாவே இயங்கிக்கிட்டு இருக்கிற திருவாளர் U N Owen... எப்போ உங்களை முடிக்கணும்னு குறி வைக்கிறாரோ... அப்போ அவருடைய விழுகம், உங்களைச் சுற்றி வட்ட வட்டமா வளையங்களை இறக்கி... இறுக்கி... நெரித்து...''

ப்ளோரின் முகம் சிவப்பேறி வெளிறியது. ''எனக்கு மட்டும்தானா?'' என்று அதிகாரமாய் கேட்டார் அவர். ''உங்க நிலைமை?'' என்றார் இயலாக் கோபமாய்.

பிலிப் லாம்பர்டின் முகம் இறுகி அபாயமானது.

''எனக்கு இந்த வழியில வகை வகையா ஊகங்கள் இருக்கு. இதை விட கடுமையான மோசமான சந்தர்ப்பங்கள்ல நான் மாட்டியிருக்கேன்... தப்பிச்சிருக்கேன்... எல்லாம் என் சொந்த கற்பனை ஊகங்கள் தந்த உதவி! என்னைப் பற்றி சொல்ல எதுவும் இல்லே... இதிலிருந்து நான் தப்பிச்சுடலாம்னு தான் தோணுது.''

V

பூட்டைகள் வேகவைக்கும் பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தன. ரொட்டிகளை வறுத்துக் கொண்டிருந்த வெரா, தனக்குள் எண்ணிக் கொண்டிருந்தார்:

'அந்த அளவுக்குக் கத்தி என்னை நானே ஏன் ஒரு பைத்தியக்காரி போல காட்டிக்கிட்டேன்? அது தவறு. அமைதியா இரு பெண்ணே அமைதியா இரு.'

எந்த சந்தர்ப்பத்திலும் அசையா மனம் கொண்டவள் என்ற தற்பெருமை இவருக்கு நிறையவே உண்டு.

'வெரா மகா தைரியசாலி... தைரியமாய் இயங்கினார் தெரியுமா... வெகுண்டெழுந்தார்! உடனே யோசிக்காது நீருக்குள் குதித்து ஸிரிலைத் தொடர்ந்து நீந்தத் தொடங்கி விட்டார்...'

அதைப் போய் இப்போது ஏன் நினைக்க வேண்டும்? அது முடிந்த ஒன்று... முடிந்து விட்டது. அந்தப் பாறையை வெரா நெருங்கி அடைவதற்கு வெகு முன்னமேயே ஸிரில் காணாமல் போய்விட்டான். அலையின் வலுவான இழுப்பு இவரைக் கட்டியிழுப்பதை உணர முடிந்தது... ஆனால் எதிர்க்க முடியவில்லை. மறுபடியும் கரைக்கே கொண்டு வந்து தள்ளியது அது. வேறு வழியின்றி அலை போன போக்குக்கே தன்னைக் கொடுத்தார். அமைதியாய். மிதந்தபடி.

அனைவரும் அவளுடைய தைரியத்தையும் கடமையுணர்ச்சியையும் பாராட்டித் தள்ளினர்.

ஆனால் ஹூகோ பண்ணவில்லை. ஹூகோ வெறுமனே – அவளையே பார்த்தபடியிருந்தான்.

கடவுளே... என்ன வலி... இப்போது கூட... ஹூகோவை நினைக்கும் போது...

அவன் எங்கேயிருந்தான்? என்ன பண்ணிக் கொண்டிருந்தான்? கல்யாணமானவனா? அல்லது காதலில் இருக்கிறானா?

''தீஞ்சுப் போகுது வெரா'' – எமிலி கத்தினார்.

''ஓ, ஆமாம். மன்னிச்சுடுங்க எமிலி. சே, என்ன முட்டாள்தனம்.''

வெந்திருந்த கடைசி முட்டையை கொதி நீர் பாத்திரத்திலிருந்து வெளியே எடுத்தார் எமிலி.

வறுக்கும் வலைத் தட்டில் மற்றுமொரு புது ரொட்டியினைத் தூக்கி வைத்த வெரா சிறு ஆர்வம் பொங்க கேட்டார்: ''உங்க அமைதியும் சாந்தமும் ஆச்சரியப்பட வைக்குது, மிஸ் எமிலி.''

இறுக்கமான உதடுகளுக்கு இடையே சொன்னார்: ''எந்தக் காலகட்டத்திலும் தன்னிலை இழந்துடாம சமமான ஒரு மன நிலையில வாழும்படியே வளர்க்கப்பட்டவ, நான்.''

வெரா இயந்திரத்தனமாய் நினைத்தார்: 'வளர்ந்த ஒருத்தி, குழந்தை போல... எல்லாமும் சமம்...! இது ரொம்ப ஆழமா சிந்திக்க வேண்டிய

ஒரு விஷயம்...'

பிறகு கேட்டார்: ''உங்களுக்குப் பயமே ஏற்படலியா?''

கேட்டு விட்டு, சற்று நிறுத்தி, பிறகு கூடுதலாய், ''அல்லது, இறப்பதைப் பற்றிய பயமே உங்களுக்கு இல்லியா?'' என்றார்.

இறத்தல்! உடையா இறுக்கமாய் கெட்டிப்பட்டுப் போயிருக்கும் எமிலி ப்ரெண்ட்டின் மூளை உருண்டைக்குள் ஒரு திருகாணி விறுவிறுவென சுழன்று நுழைந்து விட்டதைப் போல ஆனது! மற்றவர்கள் இறப்பார்கள் - ஆமாம் - ஆனால், இவர் மாட்டார், எமிலி ப்ரெண்ட் அல்லவா! இந்தச் சின்ன பெண்ணுக்கு இதெல்லாம் விளங்குவதில்லை! எமிலி பயப்படவில்லை... இது இயற்கை – அனைத்து முதிர் கன்னிகளுக்கும் - கன்னியாஸ்திரீகளுக்கும்! இவரைச் சார்ந்த அனைவரும் - ஊழியர்கள். இறப்பை இவர்கள் துளி விலக்கலின்றி ஏற்பவர்கள். எமிலி ப்ரெண்ட் எதிர்கொண்டு வாழ்ந்ததைப் போலவே, இக்கூட்டத்தினர் அனைவருமே, எது வந்த போதிலும் அசையாது வாழ்க்கையை எதிர்கொள்வர். வெட்கப்பட்டு வேதனைப்படும்படி இவர் எதுவும் செய்தவரல்லர்... ஆகவே, இதனால், இவர் சாகப் போகிறவர் அல்லர்...

பகல் வெளிச்சம் விரவியது. இதில் திகில் கிடையாது. 'நம்மில் ஒருவரும் இத்தீவை விட்டு வெளியேறப் போவது கிடையாது.' இதை யார் சொன்னது? ம்... அது, ஜெனரல் மார்கரெட்... அவருடைய உறவு தான் எலிஸியை மணந்தது. இது பற்றி அவர் துளி சட்டை செய்யவில்லை. சொல்லப் போனால், இதனை, ஆர்வமாய் வரவேற்பவர் போலத் தான் அவர் தோன்றினார். சூழ்ச்சிக்காரன்! இதனை நினைப்பதே அன்றோ பாவம்! சில பேர் மரணத்தைக் கால் தூசாய் கருதி அதனை துளி பயமின்றி கைகளில் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள்... பெட்ரிஸ் டெயிலர்... நேற்றிரவு கனவில் இவருக்கு பெட்ரிஸ் டெயிலர் வந்தாள். ஜன்னலுக்கு வெளியே நின்று முனகிக் கொண்டு, ஜன்னல் கம்பிகளில் முகம் பதித்தபடி உள்ளே விடுமாறு கேட்பதைப் போல ஒரு கனவு. ஆனால் எமிலி ப்ரெண்ட்டுக்கு அவளை உள்ளே விட சம்மதமில்லை. ஏனென்றால், அப்படி எமிலி செய்து விட்டால், கர்ண கொடூரமாய் ஏதாவது நடந்தே விடும்...

ஒரு சின்ன திடுக்கிடலுக்குப் பிறகு சுய நிலைக்கு வந்தார் எமிலி.

வெரா, இவரை வெகு அந்நியமாய் பார்த்துக் கொண்டிருந்தார். ''எல்லாம் தயார் தானே'' என்றார் எமிலி சுறுசுறுப்பாய். ''ம்... எடுங்க... உள்ளே போவோம்.''

VI

சிற்றுண்டி நடந்ததே தமாஷாய் இருந்தது. ஒவ்வொருத்தரும் மிக அமைதியாயிருந்தனர்.

''கொஞ்சம் காபி தரட்டுமா, மிஸ் ப்ரெண்ட்?''

''வெரா... இன்னும் ஒரு ரொட்டி?''

''கொஞ்சம் கறி வேணுமா, பிலிப்?''

வெளிப்பூச்சுக்கு சரியாயும் சாதாரணமாயும் காட்டிக் கொண்ட ஆறு பேர். உள்ளுக்குள்? கூண்டுக்குள் மாட்டிக் கொண்ட அணில் வட்டமடித்து ஒரே இடத்தை சுற்றிக் கொண்டிருப்பது போல் ஒன்றைச் சுற்றியே சுழலும் எண்ணங்கள் ...

'அடுத்து என்ன நடக்கும்? என்ன நடக்கும்? யார்? எப்படி?'

'இப்படிச் செய்தால் முடியுமா? செய்து பார்த்தால் தான் தெரியும். இதுக்கு நேரம் இருக்கணும்... ஓ, கடவுளே... தீர்த்துக்கட்ட நேரம் வேணும்...'

'சம்பிரதாயம் சம்பிரதாயம் என்றே வாழ்ந்து விட்டதால் வந்துள்ள மன நோய்... ஆங், அது தான் காரணம்... ஊழியம் ஊழியம் என்று மண்டைக் கிறுக்கேறி விட்ட முற்றிய நிலை... அவளைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது... நம்பவே முடிய வில்லை... நாம் நினைப்பது தான் தப்பு போல தோன்றுகிறது... ஆனால், அது, அப்படியல்ல...'

'கோமாளித் தனம்... ஆனால், இங்கு எல்லாமுமே கோமாளித் தனமாயல்லவா இருக்கின்றன... நானே கொஞ்சங்கொஞ்சமாய் கோமாளியாய் ஆகிக் கொண்டிருக்கிறேன்...! நூல் கண்டுகள்... திரைச் சீலைகள்... திடும் திடுமென காணாமல் போவது... இது ஆபத்து...

இதில் அர்த்தமில்லை... என்ன நடக்கிறது என்றே எனக்கு ஒரு துளி துப்பு கிடைக்கவில்லையே...'

'வடிகட்டின முட்டாள்... நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நம்பினான்... இனி ரொம்ப சுலபம்... இருந்தாலும் நான் ஜாக்கிரதையாய் இயங்க வேண்டும்... படு ஜாக்கிரதையாய்.'

'அந்த ஆறு சைனா சிப்பாய் பொம்மைகள்... இருப்பவை வெறும் ஆறு... இன்றிரவு அவற்றில் எத்தனை பாக்கியிருக்குமோ?'

''யாருக்கு இந்தக் கடைசி முட்டை வேணும்?''

''அங்கே...''

''தேங்க்ஸ். உங்களுக்குக் கொஞ்சம் ரொட்டி வெட்டட்டுமா?''

ஆறு பேர், சிற்றுண்டியின் போது வெகு சாதாரணமாய் நடந்துக் கொண்டிருக்கின்றனர்...

அத்தியாயம் 12

I

உணவு முடிந்தது.

திரு வார்க்ரேவ் அவரது தொண்டையைச் செருமிக் காட்டினார். சன்னமான ஆனால் அதிகாரக் குரலில் அவர் கேட்டார்: ''இப்போதைய நிலைமையை நாம அனைவரும் மறுபடி ஒரு முறை சேர்ந்து கூடி பேசினா நல்லதுனு நினைக்கிறேன். இன்னும் அரை மணி நேரத்துல பேசலாமா? வரவேற்பறையில?''

இம்மி மறுப்பின்றி அனைவரும் ஒரு சேர ஒப்புதல் தந்தனர்.

வெரா, தட்டுகளை அடுக்கும் வேலையில் இறங்கினார். ''நான் எல்லாத்தையும் கழுவிடறேன்'' என்றார்.

''நாங்க எல்லாத்தையும் குழாயடி வரை எடுத்துக்கிட்டு வரோம்'' என்றான் பிலிப்.

''தேங்க்ஸ்ப்பா.''

தன் இருக்கையினின்றும் எழுந்த எமிலி ப்ரெண்ட் அப்படியே சட்டென்று உட்கார்ந்து விட்டார். ''ஆ...'' என்றார்.

''என்ன ஆச்சு, ப்ரெண்ட்?'' என்றது, நீதிபதி.

''மன்னிச்சுடுங்க வெரா. உங்களுக்கு உதவத் தான் எழுந்தேன். ஆனா எப்படினு தெரியலே... திடீர்னு கொஞ்சமா தலைய சுத்துது'' என்றார் எமிலி ப்ரெண்ட்.

''தலை சுத்துதா?'' – டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் எமிலி வரை வந்தார். ''இருக்கலாம். தாமத அதிர்ச்சி. இதுக்கு ஏதாவது மருந்தை நான் --- --- ---''

''வேண்டாம்.''

வெடித்த வெடி போல அவரது வாயிலிருந்த இந்த 'வேண்டாம்' வெளிப்பட்டது. ஒவ்வொருவரையும் இது பின்னுக்குத் தள்ளியது. எமிலி முகத்தில் பயமும் சந்தேகமும் ஒரு சேர இருந்ததைக் காண முடிந்தது... இதனால் டாக்டரின் முகத்தில் சிகப்புக் கூடியது.

''உங்க இஷ்டம் எமிலி'' என்றார் அவர்.

''நான் எதையும் எடுத்துக்க விரும்பலே. எதையும். நான் கொஞ்சம்

இப்படியா அமைதியா உட்கார்ந்திருக்கேன்... தலை சுத்தல் போற வரைக்கும்... ப்ளீஸ்.''

சாப்பாட்டு மேஜையை சுத்தம் செய்து முடித்திருந்தனர். ''நான் வீட்டு வேலைகள்ல அதிகம் ஈடுபாடு கொண்டவன், வெரா. நான் உங்களுக்கு உதவறேன்'' என்றார் ப்ளோர். இதற்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

எமிலி ப்ரெண்ட் மட்டும் தனியாய் அறையில் விடப்பட்டிருந்தார். அவ்வப்போது குழாயடியிலிருந்து கலப்படக் குரல்கள் வருவது இவருக்குக் கேட்டது. தலை சுற்றல் விலகிக் கொண்டிருந்தது. இப்போது அவருக்கு அசூயையாயும் மயக்கமாயும் தோன்றியது. உடனடியாய் தூங்கி விடும் நிலைக்கு ஆனார் அவர்.

அவரது காதுகளில் 'உஸ்ஸ்ஸ்...'ஸென்ற புது ஓசை கேட்டது. காதடைப்பா? அல்லது இந்த அறையிலேயே இப்போது புதிதாக இந்த சத்தம் உண்டாகி இருக்கின்றதா? அது எப்படி?

அவர் நினைத்துக் கொண்டார்: 'காதருகில் ஈ வட்டமடிப்பது போல. தேனீ போல ஏதோ ஒன்று. தேனடைத் தேனீ போல.'

தற்போது தேனீயையே அவர் பார்த்தார். அது, ஜன்னல் கம்பிகளுக்கு இடையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இன்று காலையில் தான் வெரா க்ளேதார்ன் தேனீ பற்றி பேசி யிருந்தார்.

தேனீ... தேனடை.... தேன்.

இவருக்கு தேன் பிடிக்கும். தேனடையில் தேனீ. அதனை நீண்டக் குச்சி கொண்டு இறுக்கி... அழுத்திப் பிழிந்து... சிறு பைக்குள் பிடித்து...

சொட்டுச் சொட்டாய்... சொட்டுச் சொட்டாய்...

யாரோ இந்த அறைக்குள் இருக்கிறார்கள்... யாரோ... முழுக்க முழுக்க நனைந்து... உடலும் உடையும் நீர் கொண்டு... சொட்டுச் சொட்டாய்... சொட்டுச் சொட்டாய்... பெட்ரிஸ் டெயிலர் ஆற்றிலிருந்து அப்படியே எழுந்து வந்ததைப் போல...

எமிலி செய்ய வேண்டியதெல்லாம் வெறுமனே தலையைத் திருப்ப வேண்டும்... அவ்வளவே... யார் அது என்று பார்த்து விடலாம்...

ஆனால் அவரால் தலையைத் திருப்ப முடியாமல் ஆயிற்று...

வாய் திறந்து யாரையாவது அழைத்து விட்டால் கூட போதும்...

ஆனால் அவரால் குரல் எழுப்பிக் கத்த முடியாமல் ஆயிற்று...

யாரும் இங்கு இல்லை... இவர் மட்டும் தான் தனியாய்... தன்னந்தனியாய்...

இவருக்குக் காலடிகள் படு துல்லியமாய் கேட்டன – மிருதுவாய் இழுத்து நழுவும் காலடிகள்... பின் பக்கமாய் இவரை நெருங்கி நெருங்கி வரும் அடிச்சுவடுகள். மூழ்கி எழுந்து நடக்கும் ஒரு பெண்ணின் பிறழும் நடை...

அதிக ஈரமான சதுப்புப் பகுதியின் வாசம், அவருடைய மூக்குக்குள் இப்போது நுழையத் தொடங்கியது...

ஜன்னல் கம்பிகளுக்கு இடையில் புகுந்த தேனீயின், உஸ்ஸ்ஸ்... உஸ்ஸ்ஸ்... உஸ்ஸ்ஸ்...

பிறகு அவர் குத்தலை உணர்ந்தார்.

அந்தத் தேனீ, அவருடைய கழுத்தின் ஒரு பக்கத்தில் கொட்டி விட்டது போல...

II

வரவேற்பறையில் எமிலிக்காகக் காத்துக் கொண்டிருந்தனர் அனைவரும்.

''நான் போய் அவங்களைக் கைத்தாங்கலா கூட்டிட்டு வரட்டுமா?'' என்றார் க்ளேதார்ன்.

''ஒரு நிமிஷம்'' என்றார் ப்ளோர்.

வெரா உட்கார, அனைவரும் ப்ளோரையே விசாரணைப் பார்வை பார்த்தனர்.

''எல்லாரும் கவனமா கேளுங்க. என் கருத்து இது. இந்தக் கொலைகளின் காரணகர்த்தா யார் என்பதற்கு நீண்ட தூரம் நம் பார்வையை நாம் ஓட்டித் தேட வேண்டிய அவசியமில்லே. ஜஸ்ட்... சமையலறை பக்கம் நம்முடைய பார்வையை செலுத்தினாலே போதும்... அத்தனை பக்கத்துல விடையிருக்கு. சத்தியம் பண்றேன்... முகவரி இல்லாம நாம

தேடி அலைஞ்சுக்கிட்டு இருக்கிறது – அவங்களைத் தான்!''

''இதையெல்லாம் செய்ய இலக்கு?'' – ஆர்ம்ஸ்ட்ராங் கேட்டார்.

''ரிலீஜியஸ் மேனியா – மதப் பைத்தியம். நீங்க என்ன நினைக்கிறீங்க, டாக்டர்?''

''இது நிச்சயம் சாத்தியமே. எதிரா சொல்ல என்கிட்டே எதுவும் கிடையாது. ஆனா... நினைவிருக்கட்டும்; நம்ம கிட்டே எவ்வித நிரூபணங்களும் இல்லே, இப்படி சொல்ல.''

''நாங்க உணவு ரெடி பண்ணிக்கிட்டு இருந்த போது அவங்க ரொம்ப வித்தியாசமா இருந்தாங்க... ஆமாம். அவங்க கண்கள் --- '' – சொன்ன வெரா நடுங்கினார்.

''இதையெல்லாம் வெச்சு அவங்களை ஒட்டு மொத்தமா எடை போட முடியாது. நாம எல்லோருமே இப்போ அவங்கள மாதிரி தான் முழிச்சுக்கிட்டு அலையறோம்'' என்றான் லாம்பர்ட்.

''இதுல இன்னொரு விஷயமும் இருக்கு'' என்றார் ப்ளோர். ''அந்த கிராமஃபோன் இசைத்தட்டு விஷயத்துக்கு இன்னமும் விளக்கம் சொல்லாத ஒரே ஓர் ஆள் அவங்க தான். ஏன்? ஏன்னா, விளக்கறதுக்கு அவங்க கிட்டே ஒண்ணும் கிடையாது.''

தனது நாற்காலியை கொஞ்சம் நெருக்கமாய் இழுத்துக் கொண்ட வெரா, ''இது முழு உண்மை கிடையாது. அவங்க பிறகொரு முறை என்கிட்டே சொன்னாங்க'' என்றாள்.

வார்க்ரேவ் கேட்டார்: ''அவங்க உங்க கிட்டே என்ன சொன்னாங்க, வெரா?''

பெட்ரிஸ் டெயிலரின் கதையை மறுபடியும் சொன்னார் வெரா.

கேட்ட ஜட்ஜ் வார்க்ரேவ் விவரித்தார்: ''சுத்தமான... நம்பகமான... கதை. இதை அப்படியே தடை சொல்லாம ஒப்புக்க எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. இந்த விஷயத்துல அவங்க எடுத்த முடிவுக்காக... குற்றவுணர்வால அவங்க அவதிப்பட்ட மாதிரியோ... அல்லது சாதிச்சுட்டோம் என்கிற இரக்கமற்ற சந்தோஷத்தால இருந்த மாதிரியோ தோணிச்சா?''

''இப்படி எந்த மாதிரியும் அவங்க இல்லே'' என்றார் வெரா. ''அவங்க கொஞ்சங்கூட அசைக்கப்படலே.''

''கருங்கல் போன்ற இதயம் - இறைவனால் அனுப்பப்பட்ட இந்த

கன்னிகளுக்கு!'' என்றார் ப்ளோர்.

''மணி இப்போ பதினொண்ணு ஆகப் போகுது'' என்றார் ஜட்ஜ். ''இங்கே வரச் சொல்லி எமிலிக்கு ஆளனுப்ப வேண்டியது தான்.''

''இவ்ளோ நேரம் நான் சொன்னதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் போறதில்லையா?'' என கேட்டார் ப்ளோர்.

ஜட்ஜ் திரும்பி அவரைப் பார்த்தார்: ''என்ன நடவடிக்கை எடுக்கலாம்னு என் கண்களுக்கு எதுவும் தெரியலே. நம் சந்தேகங்கள் எல்லாம்... இந்த நொடி வரை... சந்தேகங்களே. டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கை, வெகு நெருக்கமான முறையில எமிலியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க கேட்டுக்கறேன். ஒரு டாக்டரா அவர் என்ன சொல்றார்னு பார்ப்பம். இப்போதைக்கு கிளம்பி சமையலறைக்குப் போவோம்!''

அனைவரும் எந்த நாற்காலியில் எமிலியை விட்டு விட்டு வெளியேறியிருந்தார்களோ அதில் எமிலி இருப்பதை எல்லோரும் பார்த்தனர். பின்பக்கமாய் நுழையும் போது வித்தியாசமாய் எதுவும் அவர்களுக்குத் தென்படவில்லை... இத்தனை பேர் அறைக்குள் நுழைவது குறித்து அவரிடம் எவ்வித துணுக்குறலும் உருவாகவில்லை என்பதைத் தவிர!

நெருங்கிய பிறகு அவர்கள் எமிலியின் முகத்தைப் பார்த்தனர் - ரத்த வெள்ளத்தில் முக்கியெடுக்கப்பட்டிருந்தது அது. நீல இதழ்கள். வெறித்து அடங்கிய கண்கள்.

ப்ளோர் சொன்னார்:

''ஓ, கடவுளே. இவங்க இறந்தாச்சு.''

III

அந்த சிறிய சாந்தமான ஜட்ஜின் குரல் சொல்லியது: ''நம்மில் மேலும் ஒருவர் தண்டிக்கப்பட்டு விட்டார் - நாம் தாமதித்து

விட்டோம்!''

ஆர்ம்ஸ்ட்ராங் மரித்துக் கிடந்த பெண்மணிக்கு நெருக்கமாய் குனிந்திருந்தார். உதடுகளை நுகர்ந்தார்... மறுத்துத் தலையசைத்துக் கொண்டார்... திறந்திருந்த கண்களை ஊடுருவினார்...

லாம்பர்ட் பொறுமையிழந்து பேசினான்: ''அவங்க எப்படிச் செத்திருக்காங்க, டாக்டர்? இங்கே அவங்களை விட்டுட்டு நாம வெளியே போகும் போது நல்லாத் தானே இருந்தாங்க!''

ஆர்ம்ஸ்ட்ராங்கின் பார்வை, ஆணியறைந்தாற்போல், எமிலி கழுத்தின் வலப்புறத்தில் இருந்த ஒரு தடயத்தின் மீது அப்படியே கிடந்தது. அவர் சொன்னார்:

''அது... ஒரு பெரிய ஊசி ஒன்று குத்தப்பட்டதன் தடம்'' என்றார்.

ஜன்னல் பக்கத்திலிருந்து உஸ்ஸ்ஸ் உஸ்ஸ்ஸ்-என்று ஓசை வந்தது.

வெரா உடனடியாய் அலறினார்: ''பாருங்க – தேனீ – ஒரு தேனீ – தேனடை தேனீ. காலைல நான் சொன்னது இப்ப நினைவுக்கு வருதா?''

ஆர்ம்ஸ்ட்ராங் தீர்மானமான குரலில் சொன்னார்: ''அந்தத் தேனீ கிடையாது, இவங்களைக் கொட்டியிருப்பது. ஒரு மனிதக் கை மருத்துவ ஊசியை வெச்சு அழுத்தி ஏற்படுத்தியுள்ளதால் உருவான தடம் இது.''

''என்ன விஷம் ஏற்றப்பட்டிருக்கு?'' – கேட்டது, ஜட்ஜ்.

ஆர்ம்ஸ்ட்ராங் பதிலளித்தார்: ''ஓர் ஊகத்துல சொல்றதுனா... சயனைட். பொட்டாஷியம் சயனைடுக்கு சாத்தியக் கூறு இருக்கு – ஆன்டனி மார்ட்ஸன் போலவே. மூச்சுக் காற்றுக்கு பரிதவிச்சு உடனேயே இவங்க இறந்திருக்கணும்.''

''ஆனா அந்தத் தேனீ? அது எதிர்பாராம நடந்ததா இருக்காதில்லே?'' என்று அலறிக் கத்தினார் வெரா.

லாம்பர்ட் பலமாய் சொன்னான்: ''ஓ, நோ, அது எதிர்பாராம நிகழ்ந்த ஒன்று கிடையாது! அது, நம் கொலைகாரனுடைய கலைநய ஆக்கம்! அவன் ஒரு பிசாசு – விளையாட்டுத் தனம்னு நினைச்சுக்கிட்டு தமாஷ் பண்ற பிசாசு. அவன் ஒட்டியிருக்கிற நர்ஸரி பாட்டோட எவ்வளவு ஒத்துப் போக முடியுமோ அவ்வளவு ஒத்துப் போகும்படி செய்யறான்!''

முதல் முறையாக பிலிப்பின் குரல் ஸ்திரத்தன்மை அற்று ஆனது. ஏறக்குறைய கிறீச்சிட்டது. ஆபத்தான... அபாயமான பகுதிகளில் நீண்ட நெடுநாட்கள் இருந்து பழகி பக்குவப்பட்டுள்ள அவனுடைய நரம்புகளே கூட... அதிர்ந்து நடுங்கி இறுதியில் தோற்றுப் போய் விட்டதைப் போல தோன்றியது.

முரட்டுத்தனமாய் தொடர்ந்தான்: ''இது பைத்தியக்காரத்தனம்! – சந்தேகமின்றி மூளை சிதைந்த பைத்திய நடவடிக்கை! – நாம எல்லோருமே பைத்தியங்க!''

''இத்தனைக்கும் நடுவிலும், சிந்திக்கக் கூடிய பிரக்ஞை, இன்னும் நமக்கு அற்றுப் போகாம இருக்குனு நினைக்கிறேன்'' என்றார் ஜட்ஜ் சாந்தமாய். ''சிந்திப்போம். சொல்லுங்க... உங்களில் யாராவது இந்த வீட்டுக்கு வரும் போது கூடவே மருத்துவ ஊசியையும் கையோட கொண்டு வந்தீங்களா?''

டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங், சட்டென நன்றாய் நிமிர்ந்து, நிச்சயமற்ற குரலில் சொன்னார்: ''ஆமாம், நான் கொண்டு வந்தேன்.''

நான்கு ஜோடி கண்கள், சட்சட்டென டாக்டர் பக்கம் திரும்பி, தங்கள் பார்வைகளைப் புதுப்பித்துக் கொண்டு, துளைத்தன. அந்நியமாகி சந்தேகித்த அத்தனை கண்களிலிருந்தும் தப்பிக்க சரியான கவசம் அவரிடம் இல்லை! பேசினார்:

''எப்பவும் ஓரிரு ஊசியோடத் தான் கிளம்புவேன். இது அநேக டாக்டர்களின் வழக்கம்.''

ஜட்ஜ் வார்க்ரேவ் சாந்தமாய் பேசினார்: ''ஆமாம், ஆமாம். அந்த சிரிஞ்ச் இப்போ எங்கேயிருக்குனு சொல்ல முடியுமா, டாக்டர்?''

''என் பெட்டியில. என் அறையில.''

''அதை நாம பரிசோதிச்சுடலாமே...!''

ஐவரும் கிளம்பி மாடிக்குப் போனார்கள். அது ஓர் அமைதி ஊர்வலம்.

டாக்டரின் பெட்டிக்குள்ளிருந்த அனைத்தும் கவிழ்த்து தரையில் கொட்டப்பட்டன.

ஊசி அங்கு இல்லை.

IV

ஆர்ம்ஸ்ட்ராங் மூர்க்கமானார்: ''யாரோ இதிலிருந்து எடுத்திருக்கணும்!''

அறையில் அமைதி நிலை கொண்டது.

ஜன்னலில் முதுகு சாய்த்தபடி நின்றுக்கொண்டிருந்தார், ஆர்ம்ஸ்ட்ராங். நான்கு ஜோடிக் கண்கள் அவர் மீது பதிந்துக் கிடந்தன - சந்தேகப்பட்டு... குற்றஞ்சுமத்தி...! வார்க்ரேவ் - வெரா – என்று திருப்பித் திருப்பிப் பார்த்தார் டாக்டர் - உதவிக்குக் கை தர ஆளின்றி... சுரத்தின்றி.

''யெஸ்... நான் சொல்றேன்... அதை யாரோ தான் எடுத்துக்கிட்டு போயிருக்கணும்... எடுத்திருக்காங்க'' என புலம்பினார் ஆம்ஸ்ட்ராங்.

ப்ளோர், லாம்பர்டைப் பார்க்க... அவனும் அப்படியே செய்தான்.

ஜட்ஜ் தான் பேச ஆரம்பித்தார்: ''இந்த அறையில் நாம ஐந்து பேர் இருக்கோம். இதில் ஒருவர் - கொலைகாரன். தப்பிப்பற்ற கொடூரமான அபாய நிலைமையில இருக்கோம். எதையாவது செஞ்சாகணும், இங்கிருக்கும் ஒன்றும் அறியாத நம்மைப் பாதுகாக்க! ஒரு கேள்வி டாக்டர்... உங்க கிட்டே வேற என்ன மருந்தெல்லாம் கைவசமிருக்கு?''

ஆர்ம்ஸ்ட்ராங் மறுபதில் தந்தார்: ''ஒரு சின்ன மருந்து பெட்டி கொண்டு வந்திருக்கேன். அதை நீங்க திறந்து பார்த்துக்கலாம். சில தூக்க மாத்திரைங்க கிடைக்கும் - ட்ரையோனல், சல்ஃபோனல்... இந்த மாதிரி – கூடவே ஒரு பாக்கெட் ப்ரோமைட், சோடா- பை-கார்பனேட், ஆஸ்பிரின் இதெல்லாம் இருக்கு. வேறெதுவும் கிடையாது. என்கிட்டே எந்த வகை சயனைடும் இல்லை.''

''என்கிட்டேயும் சில தூக்க மாத்திரைங்க இருக்கு'' என்றார் ஜட்ஜ். ''சல்ஃபோனல் வகைனு நினைக்கிறேன். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்... இந்த மருந்துகளைத் தேவையான அளவை விட அதிகமா கொடுத்தா உயிருக்கே ஆபத்து விளைந்து விடும். பிலிப், உங்க கிட்டே ஒரு துப்பாக்கியிருக்கு.''

''வெச்சிருந்தா என்ன?''

ஜட்ஜ் இதற்கு பதில் தராது ''இவ்ளோ தான்'' என தொடர்ந்தார்: ''டாக்டருடைய மருந்து, எனது தூக்க மருந்து, துப்பாக்கி, மேலும் இதைப் போன்ற மருந்து ஆயுதம் எல்லாவற்றையும், இப்போ ஒரு சேர சேகரிக்கணும். பாதுகாப்பான ஓரிடத்தில அத்தனையையும் கொண்டு போய் வெச்சிடணும். இதை செஞ்சு முடிச்ச உடனேயே... நாம, நம்மளை ஒரு பரிசோதனைக்கு உட்படுத்திக்கணும். சுய உடல் பரிசோதனை. மற்றும் நம் உடைமைகளின் பரிசோதனை.''

பிலிப் கத்தினான்: ''என் துப்பாக்கியைத் தூக்கி உங்க கையில கொடுத்துட்டா, என்னை மாதிரியான ஒரு முழு தேங்கா மடையன் இருக்கவே முடியாது.''

வார்க்ரேவ் கறாராய் பேசினார்: ''லாம்பர்ட்... நீங்க, கட்டுமஸ்தான உடம்பை உரம் போட்டு வளர்த்து வெச்சிருக்கிற இளைய பலசாலி... ஆனா, முன்னாள் இன்ஸ்பெக்டர் ப்ளோரும் உங்களுக்குக் கொஞ்சமும் குறைஞ்சவரில்லே. வயசாயிருந்தாலும், அவர் இன்னொரு பயில்வான். உங்க ரெண்டு பேரையும் மோத விட்டா என்ன மாதிரி முடிவு வரும்னு எனக்குத் தெரியலே! ஆனா ஒரு விஷயம் சொல்லிக்க விரும்பறேன். எங்களால் முடிஞ்ச வரைக்கும் இறுதி வரை ப்ளோருக்கு உதவ இருப்பவர்கள்... நான், டாக்டர் மற்றும் செல்வி வெரா. நாம இருக்கும் இந்த சூழ்நிலையில எங்களுடைய இந்த முடிவை எதிர்த்து நிற்கத் தான் போறேன்னு நீங்க ஒரு முடிவையெடுத்தா, அதனால் விளையப்போகும் பாதக விளைவுகள் எப்படி எப்படியெல்லாம் இருக்கும்னு உங்களுக்கே தெரியும்னு நான் நினைக்கிறேன்.''

லாம்பர்ட் தலையை சட்டென தொங்கப் போட்டுக் கொண்டான். அவன் பற்கள் வெளித் தெரிய, அவனிடம் நரி உறுமல் விளைந்தது.

''வேறென்ன பண்றது?'' என்றான் வெறுப்பாய். ''யார்கிட்டே என்னென்ன இருக்குனு தான் நீங்க தெரிஞ்சுக்கிட்டீங்களே...! இனி எங்கே மறைக்க?''

ஒப்புக் கொண்டு தலையசைத்தார் ஜஸ்டிஸ்!

''ம்... புத்திசாலி. எங்கே உங்களுடைய ரிவால்வர்?''

''என் படுக்கையோட இருக்கிற சின்ன மேஜைக்குள்ளே இருக்கு.''

''நல்லது.''

''போய்க் கொண்டு வரேன்.''

''நாங்களும் உங்க கூட வர வேண்டிய தேவையிருக்குனு நினைக்கிறேன்.''

மேலும் நரித்தனமாய் கூடியிருந்த சிரிப்பு உதட்டில் சுழிய, பிலிப் சொன்னான்: ''சந்தேகப் பேய்... ம்... நீங்க...?''

வெளி வராண்டாவில் நடந்து லாம்பர்டின் அறைக்கு அனைவரும் போனார்கள்.

கட்டிலின் தலைமாட்டில் இணைக்கப்பட்டு அமைந்திருந்த அந்த சிறு மேஜையை, அகல அகலமாய் தப்படி வைத்து வேகமாக அடைந்த பிலிப், அதன் மேல் தட்டினைப் பிடித்திழுத்துத் திறந்தான்.

பிறகு விக்கித்து அப்படியே சுழன்று திரும்பினான் அவன்.

கட்டில்-மேஜையின் இழுக்கப்பட்ட தட்டு – காலியாயிருந்தது.

V

''இப்ப சந்தோஷம் தானே?'' என்றான் அவன்.

தோலுரிக்கப்படும் கோழி போல தோல் வரை உடைகள் உருவப்பட்டு... அவனும் அவனது அறையும், ஏனைய மூன்று ஆடவரால் அதிக கவனமாய் அலசப்பட்டன. வெரா, வெளியே வராண்டாவில் இருந்தார்.

இத்தேடுதல், ஏனைய ஆண்களிடமும் முறையாய் நிறைவேற்றப் பட்டது. வரிசைக்கிரமாக... ஆர்ம்ஸ்ட்ராங், வார்க்ரேவ் மற்றும் ப்ளோர் ஆகிய மூவரும் பரிசோதனைக்குத் தங்களை ஒப்படைத்தனர்.

ப்ளோரின் அறையிலிருந்து வெளியே வந்த நால்வரும், வாரண்டாவிலிருந்த வெராவை நெருங்கினர். அப்போது பேசியது ஜட்ஜ்.

''இதில் எந்தவித விதிவிலக்கும் செய்வதற்கில்லைனு உங்களுக்கே தெரியணும் வெரா. அந்த ரிவால்வர் கண்டுபிடிக்கப்படணும். உங்கிட்டே குளியலறை உடை ஒண்ணு இருக்கணும்னு நம்பறேன்.''

வெரா ஒப்புக் கொண்டார்.

''அப்படினா... உங்க அறைக்குப் போய், அதைப் போட்டுக்கிட்டு, இங்கே எங்களிடம் வரும்படி கேட்டுக்கறேன்.''

வெரா அவரது அறைக்குள் போனார். கதவை மூடிக் கொண்டார். ஒரு நிமிடத்தில் திரும்பி வந்த அவர் உடலோடு ஒட்டிக் கொண்டு உறவாடும் பட்டினாலான குளியல் உடை உடுத்தியிருந்தார்.

வார்க்ரேவ் சரியென ஏற்றுக் கொண்டு தலையசைத்தார். ''தேங்க்யூ, மிஸ் வெரா. இப்போ நீங்க கொஞ்ச நேரம் இங்கேயே இருந்தா... உங்க அறையை முழுக்கத் தேடிட்டு வரோம்.''

அவர்கள் திரும்பி வரும் வரை பொறுமையுடன் அந்த நீச்சலுடையை மாட்டிக் கொண்டு காத்திருந்தார் வெரா. பிறகு அவர் உள்ளே போனார்... பழைய உடைக்கு மாறினார்... ஏனையவர்கள் காத்திருக்கும் வராண்டாவுக்கு வந்து சேர்ந்தார்.

''இப்ப நமக்கு ஒரு விஷயம் தெளிவாயிடுச்சு'' என்றார் ஜட்ஜ். ''நம் ஐந்து பேரின் கட்டுப்பாட்டில்... வேறெந்த ஆயுதமோ அல்லது மருந்து வகைகளோ கிடையாது. நிம்மதி தரும் ஒரு விஷயம். இனி, மருந்துகள் எல்லாத்தையும் ஒரு பாதுகாப்பான இடத்துல கொண்டு போய் வைப்போம். துணி துவைக்கும் சமையலறையை ஒட்டிய பகுதியில ஒரு சின்ன அலமாரி இருக்குனு நினைக்கிறேன்... இல்லே?''

''அதெல்லாம் இருக்கட்டும்'' என்று சட்டென பாய்ந்த ப்ளோர், ''அந்த சாவியை வெச்சுக்கப் போவது யார்?'' என்றார். ''நீங்க? இல்லே...?!''

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் ஒன்றும் சொல்லவில்லை.

அவர் துணி துவைக்கும் பகுதி நோக்கிப் படியிறங்கினார்... மற்றவர்கள் பின்தொடர்ந்தார்கள். தட்டுகளையும் கரண்டிகளையும் வைப்பதற்கு ஏதுவாக ஒரு பெரிய அளவு பெட்டி போன்ற அலமாரி இருந்தது. ஜட்ஜின் கட்டளைப்படி, வகைவகையாயிருந்த மருந்துகள் அத்தனையும் இதற்குள் வைக்கப்பட்டு பூட்டப்பட்டன. அருகிலேயே பெரிய பீரோ ஒன்றிருந்தது - பல பீங்கான் கண்ணாடி வகையறாக்களைப் பத்திரமாய் வைக்க. ஜட்ஜின் கட்டளைப்படியே... அதற்குள், இந்த சின்ன அலமாரி தூக்கி வைக்கப்பட்டு மற்றொரு பூட்டால் பீரோ பூட்டப்பட்டது. பிறகு, சிறு அலமாரியின் சாவியை பிலிப் லாம்பர்டிடமும் பெரிய பீரோவின் சாவியை ப்ளோரிடமும் அளித்தார்

ஜட்ஜ். பிறகு சொன்னார்:

''நீங்க ரெண்டு பேரும் தான் பலசாலி ஆட்கள். ஒருத்தர் கிட்டே யிருந்து இன்னொருத்தர் சாவியை அபகரிப்பதென்பது... உங்க ரெண்டு பேருக்குள்ளேயும் நடக்காது. அப்படி செய்ய, எங்க மூணு பேராலயும் சர்வ நிச்சயமா முடியாது. பீரோவை உடைப்பதோ... அல்லது அந்த சின்ன அலமாரியை உடைப்பதோ --- 'என்ன நடக்குது உள்ளேனு...' சந்தேகத்தைக் கிளப்பாம துளி சத்தமும் கேட்காம செய்யக் கூடிய வேலை கிடையாது.''

சற்று நிறுத்தி விட்டுத் தொடர்ந்தார்: ''இத்தனை செஞ்சும் நம் மனசைப் பிசைஞ்சுக்கிட்டு இருக்கிற இன்னொரு பிரச்சினை, நம் முன்னாடியிருக்கு. லாம்பர்டுடைய ரிவால்வருக்கு என்ன தான் ஆயிற்று?''

''அதனுடைய சொந்நதக்காரர் ஒருத்தருக்கு தான் அதைப் பத்தின ஆரூடம் தெரியும் என்பது என் கருத்து!'' என்றார் ப்ளோர்.

''ஒரு பல்லு தங்காது வாயில'' என்று பாய்ந்தான் பிலிப், வெளிறிப் போன முகத்தோடு. ''அது என்கிட்டேயிருந்து திருடப்பட்டிருக்குனு சொல்றேன்... காதுல விழலே?!''

வார்க்ரேவ் கேட்டார்: ''அதை நீங்க கடைசியா எப்போ பார்த்தீங்க?''

''நேற்றிரவு. நான் தூங்கப் போகும்போது அது அந்த தட்டுக்குள்ளே தான் இருந்தது – ஏதாவது எதிர்பாராம நடந்ததுனா உபயோகிக்கத் தயாரா.''

ஜட்ஜ் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''அப்படினா... அது – இன்னிக்குக் காலையில ரோஜர்ஸைத் தேடிக் கிட்டு அலைஞ்ச குழப்பத்தின் நடுவிலோ... அல்லது அவனுடைய பிரேதம் கண்டுபிடிக்கப்பட்ட நேரத்திலோ தான் - எடுக்கப்பட்டிருக் கணும்.''

''வீட்டைச் சுத்தி தான் அது எங்கேயாவது மறைச்சு வைக்கப் பட்டிருக்கணும். நாம தேடியாகணும்'' என்றார் வெரா.

ஜட்ஜின் வலது ஆட்காட்டி விரல், அவரது கன்னத்தைத் தட்டியபடி யிருந்தது. ''அந்தத் தேடுதல் வாயிலா ஏதாவது நமக்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே. அதை ஒளிச்சு வைக்க நம்முடைய கொலைகார னுக்கு அதிகப்படியான அவகாசம் கையில இருந்திருக்கு. அந்த

ரிவால்வரை அத்தனை சுலபமா கண்டுபிடிக்க முடியாதும்மா.''

ப்ளோர் சிறு உத்வேகத்துடன், ''எனக்கு அந்த ரிவால்வர் எங்கே இருக்கும்னு வேணும்னா தெரியாம இருக்கலாம். ஆனா --- '' என்று விட்டு, ''அந்த இன்னொன்று எங்கே இருக்குனு இப்போ எனக்கு தெரியும்... பந்தயம் கட்டறேன்'' என்றார். ''ஸ்ரிஞ்ச். ஊசி. ம்... பின்னாடியே வாங்க.''

வாசற்கதவைத் திறந்துக் கொண்டு வீட்டைச் சுற்றி வேகமாய் நடந்தார் அவர். சமையலறை ஜன்னலிலிருந்து சிறு தொலைவில் அந்த ஸிரிஞ்ச் அவருக்குக் கிடைத்தது. அதற்குப் பக்கத்திலேயே நொறுக்கப் பட்டிருந்த ஒரு சைனா பீங்கான் சிப்பாய் பொம்மையும் - ஐந்தாவது உடைந்த சிப்பாய்.

''இங்கே தவிர வேறெங்கே இருந்து விட முடியும்?'' என்று திருப்திகரமான தொனியில் சொன்னார் முன்னாள் இன்ஸ்பெக்டர். ''அவங்களைக் கொன்னதும், ஜன்னலைத் திறந்திருக்கான்... ஊசியைத் தூக்கி வீசியிருக்கான்... பிறகு சாப்பாட்டு மேஜையிலிருந்து ஒரு பீங்கான் சிப்பாயை உருவி, அதை உடைச்சு ஊசிக்குப் பின்னாலேயே எறிஞ்சிருக்கான்.''

ஊசியில் எவ்வித ரேகையும் இல்லை... தடமும் இல்லை. இது ஜாக்கிரதையாக துடைக்கப்பட்டிருந்தது.

''இனி அந்த ரிவால்வரைத் தேடுவோம்'' என்றார் வெரா, தீர்மானமாய்.

''முக்கியமா'' என அங்கீகரித்தார் ஜட்ஜ். ''ஆனா, அதைப் பண்ணும் போது, பிரிஞ்சுடாம நாம ஒண்ணாவே இருக்கணும்... எப்பவுமே. கவனமிருக்கட்டும்... நாம தனியானா, கொலைகாரனுக்கு அவனுடைய வாய்ப்பு அட்டகாசமா கிடைச்சுடுது.''

மொட்டை மாடி சிறு அறை முதல், வாசல் கதவு வரை, வீட்டை அலசிப் போட்டுத் தேடினர். நல்ல முடிவு விளையவில்லை. இன்னும் அந்தத் துப்பாக்கி – காணவில்லை.

அத்தியாயம் 13

I

'எங்களில் ஒருவன்... எங்களில் ஒருவன்... எங்களில் ஒருவன்...'

இரண்டே வார்த்தைகள்... முடிவற்று நீண்டன... நிலைகுலைந்துக் கிடந்த மூளைகளுக்குள், டண்டண்ணென்று மோதி அடித்தன.

ஐந்து நபர்கள்... ஐந்து கிலி பிடித்த நபர்கள்... ஒருவரை ஒருவர் நோட்டம் விட்டுக் கொண்டேயிருக்கும் ஐந்து நபர்கள்... இனியும் பய நரம்பதிர்வினை மறைப்பதற்கில்லை என பித்துப் பிடித்தாற் போலிருக்கும் ஐவர்.

பேசுவது போல செய்துக் கொண்டிருந்த பாசாங்குகள் கூட இப்போது காணோம். உள்ளுக்குள்ளே உருவாகிக் கொண்டேயிருக்கும் தற்காப்பு உணர்வு பீறிட இணைக்கப்பட்டிருக்கும் ஐந்து விரோதிகள்.

இந்த அனைவரும், திடீரென, 'இவர்கள் மனிதர்கள் தானா? அல்லது...?' என சந்தேகப்படும்படி ஆகியிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அனைவரும் சிந்திக்கத் திராணியற்ற ஆதிவாசிகளாயும் மிருகங்களாயும் மாற ஆரம்பித்து விட்டது போலிருந்தது. வயது முதிர்ந்த ஒரு பெரும் ஆமை போல, அசைவற்று... கூன் விழுந்து... கண்கள் மட்டும் திறந்து சூட்சுமமாயும் எச்சரிக்கையாயும் நிலை குத்தியபடி... நாற்காலிக்குள் வளைந்து தன்னைத் திணித்துக் கொண்டு கிடந்தார் ஜட்ஜ் வார்க்ரேவ். முரட்டுத் தனமாயும் அவலட்சண பாவத்துடனும் தோன்றினார் ப்ளோர். நடந்தபடியிருந்தார் - ஓசையெழாது நடக்கும் மெத்து மெத்தென்ற பூனை நடை அது. அவரது கண்கள் கனன்றுக் கொண்டிருந்தன. முரட்டுத்தனமும் முட்டாள் தனமும் ஒன்று கலந்த தொனியிருந்தது அவரிடம். துரத்திச் செல்லும் ஒரு மிருகம் இறுதிக்கட்டமாய் தன்னுடைய இரை மீது கால் பதித்து வீழ்த்தி முடிக்கும் நிலையிலிருந்தார் அவர். பிலிப் லாம்பர்டின் புலன்களனைத்தும், துவண்டு போவதற்கு பதிலாக விழித்துக் கொண்டது போலிருந்தது... அவனது காலடிப் பதிவுகளும் மிருது வாகவே இருந்தன... ஆனால் விரைவாக. அடிக்கடி சிரித்துக் கொண்டான் --- அவனது மேலுதடு சுழித்து பின்பக்கம் விலக,

வெண்ணிற பற்களும் ஈறும் நரித்தனமாய் வெளியே தெரியும்படி.

வெரா க்ளேதார்ன் மிகவும் அமைதியாய் கிடந்தார். அனைத்து நேரமும் நாற்காலிக்குள் ஒரு மூட்டையாய் தன்னைத் திணித்துக் கொண்டு கிடந்தார் அவர். அவரிடமிருந்து ரொம்பத் தள்ளியிருக்கும் வெற்றிட வெளிக்குள் எங்கோ அவரது பார்வை நிலைகுத்திக் கிடந்தது. செய்வதறியாது திகைத்துக் கிடந்தது அப்பார்வை. வேகமாய் பறந்து வந்த பறவையொன்று கண்ணாடி ஜன்னலின் மீது தன் தலையை முட்டிக் கொண்டு கீழே விழுந்து... வேடன் ஒருவனின் கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட பிரமை, வெராவிடம் பூரணமாய் இருந்தது. அங்கு... அது இறக்கையடித்துத் துடிக்கிறது... நகர முடியாமல்... திகைத்து... கிலியறைந்து... நகர முடியாமல் போய்விட்டாலும் எப்படியும் தப்பித்து விடலாம் என்ற திகில் கலந்த நம்பிக்கையோடு...

தன் நரம்புகள் அனைத்தும் ஒன்றுகூடித் துடிக்கும் ஒரு பரிதாப கரமான நிலையிலிருந்தார், ஆர்ம்ஸ்ட்ராங். அவர் உள்ளங்கைகள் பின்னிப் பிணைந்த வண்ணமிருந்தன... அவை நடுங்கின. சிகரெட் மாற்றி சிகரெட் அவர் பற்ற வைத்த வண்ணமிருந்தாலும் அவற்றின் நுனிகளை உடனே அவித்துப் போட்ட வண்ணமேயிருந்தார். வேறொன் றும் செய்ய முடியாது கைகட்டப்பட்ட இந்நிலை, மற்றவர்களைக் காட்டிலும் இவரை அதிகமாய் அறைந்தது. புயலாய் படபடக்கும் வார்த்தைகளை அவ்வப்போது வெளியிட்டபடியிருந்தார் டாக்டர்.

''நாம – நாம... ஒண்ணும் பண்ணாம நாம வெறுமனே இங்கே உட்கார்ந்திருக்கக் கூடாது! ஏதாவது இருக்கணும்... நிச்சயமா... நாம உடனடியா மேற்கொள்ளும்படி தப்பிக்க ஏதாவது ஒருவழி இருக்கணும்... இல்லையா? என்னது அது? பெரிய நெருப்பை மலையுச்சியில கொளுத்தினா --- ''

''இந்தக் காத்து-மழையில?''–ப்ளோர் வெறுப்பாய் கேட்டார்.

மழை மறுபடியும் அள்ளி அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தது. கனமாய் காற்றும் வீசித் தள்ளியது. மனசைக் கிலேசமாக்கும் மழையின் சொட சொட ஓசை இவர்களை 'பைத்தியம்' எனும் நிலையின் வாசலுக்கே இழுத்துப் போனது.

சொல்லித் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லாமலேயே அனைவரும் ஒரு திட்டத்துக்கு ஒப்புக் கொண்டனர். இந்த விசாலமான

வரவேற்பறையில் தான் ஐந்து பேரும் உட்கார்ந்திருக்க வேண்டும். ஒரே ஒருத்தர் தான் அறையை விட்டு எங்காவது போய் வரலாம். அந்த ஐந்தாவது நபர் திரும்பும் வரை, என்ன ஆனாலும் சரி, மீதி நால்வரும் காத்திருக்கத் தான் வேண்டும்.

''எல்லாம் கூடிய சீக்கிரமே சரியாயிடும்'' என்றான் பிலிப். ''வானிலை மேம்படும். அப்போ நாம ஏதாவது செய்யலாம் - சமிக்ஞை செய்யறது... நெருப்பு மூட்டறது... மரத்தால ஏதாவது மிதவை பண்ணித் தப்பிக்கிறது... இப்படி ஏதாவது!''

ஆர்ம்ஸ்ட்ராங் சட்டென வெடிச் சிரிப்பு சிரித்து விட்டு சொன்னார்: ''கூடிய சீக்கிரம்? கூடிய சீக்கிரம் கூட நமக்கு தரப்படலே, அது தெரியுமா உங்களுக்கு! காத்திருக்க அவகாசமில்லே... அதுக்குள்ளே நாம அனைவரும் செத்துத் தொலைஞ்சுடுவோம்...''

அன்பு கலந்த தீர்மானத்தோடும், சிறு கிலேசத்தோடும், தனது சன்னமான அதிகாரக் குரல் கொண்டு, ''நாம எச்சரிக்கையாயிருந்தா... நாம எச்சரிக்கையாயிருந்தா, அது நடக்காது'' என்றார், ஜட்ஜ்.

மதிய சாப்பாடு குறைவின்றி சாப்பிடப்பட்டது. ஆனால் பெரிய சீராட்டு பாராட்டெல்லாம் காணப்படவில்லை. ஐந்து பேரும் சேர்ந்து சமையலறைக்குப் போனார்கள். டின்களுக்குள் அடைக்கப்பட்டிருந்த பல பதார்த்தங்கள் அங்கு அவர்களுக்கு இருந்தது. ஒரு டப்பா மாமிசமும் இரண்டு டப்பாக்கள் பழங்களையும் திறந்தெடுத்துக் கொண்டனர். சாப்பாட்டு மேஜையைச் சுற்றிலும் நின்றுக் கொண்டே சாப்பிட்டு முடித்தனர். பிறகு நெருக்கமாய் நடந்தபடி மறுபடியும் வரவேற்பறைக்கே வந்து சேர்ந்தனர். அங்கு வந்து உட்கார. உட்கார்ந்து ஒருவரை ஒருவர் பயக் கிளர்ச்சியில் பார்த்துக் கொண்டேயிருக்க.

இப்போது... அவர்கள் ஒவ்வொருவர் மூளைக்குள்ளும் வட்ட மடித்துக் கொண்டிருந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும்... அசாதாரண மானவை... நடுநடுங்க வைப்பவை... ஷீணித்துப் போனவை...

'அது ஆர்ம்ஸ்ட்ராங்கே தான்... அவ்வப்போது அவர் என்னைத் திருட்டுப் பார்வை பார்ப்பதை நான் கவனித்து விட்டேன்... அவர் கண்கள் வெறி கொண்டிருக்கின்றன... பைத்தியம் போல ... அவர் ஒரு டாக்டராக இல்லாமல் கூட இருக்கலாம்... ஆமாம், அது அப்படித்தான்! ... ஏதோ ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்து வந்திருக்கும் ஒரு மன

நோயாளி... டாக்டர் போல தன்னைக் காட்டிக் கொண்டு... பைத்தியம்... இது தான் உண்மை... எல்லோரிடமும் சொல்லி விடட்டுமா?... ஓ'வென கத்திச் சொல்லி விடட்டுமா?... என்ன பிரயோஜனம்... தான் தான் உலகின் மகா புத்திசாலி என்றல்லவா அவர் நிரூபித்து விடுவார்!... என்ன மணி இப்போது?... வெறும் மூணே கால் தானா?... ஓ, கடவுளே... இப்படியே போனால் நான் பைத்தியமாகி விடுவேன்... ஆமாம், அது ஆர்ம்ஸ்ட்ராங்கே தான்... அதோ... என்னையே பார்த்துக் கொண்டிருக்கிற முழியைப் பார்...'

'என்னை யாராலும் பிடிக்க முடியாது... என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிகள் எனக்குத் தெரியும்... எத்தனை ஆபத்தான பகுதிகளில் இதற்கு முன் நான் இருந்திருக்கிறேன்... அந்த ரிவால்வர் சனியன் எங்கே?... யார் அதை எடுத்தது?... யார் இப்போது வைத்திருப்பது?... யாரிடமும் அது இல்லை... எல்லோருக்கும் இது தெரியும்... நாங்கள் அனைவருமே பரிசோதிக்கப்பட்டு விட்டோம்... யாரும் வைத்திருக்கவும் முடியாது... ஆனால் யாருக்கோ தெரியும், அது எங்கிருக்கிறதென்று...'

'எல்லாருமே இங்கே பைத்தியமாகிக் கொண்டிருக்கிறார்கள்... இவர்கள் எல்லோருமே பைத்தியமாக ஆகத்தான் போகிறார்கள்... இறப்பு குறித்து பயம்... எங்கள் எல்லோருக்கும் சாவு குறித்த பயம்... நான் இறப்பை எண்ணிப் பயப்படுகிறேன்... ஆமாம்... ஆனால் இக்கவலை வரும் இறப்பை ஒன்றும் அப்படியே கை நீட்டி அமர்த்தி நிறுத்தி விடப்போவதில்லையே... அதோ, அந்த யுவதி... நான் அவளையே கண் கொத்தி பாம்பாய் கண்காணிக்கப் போகிறேன்... ஆமாம், விடாமல், கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு, நான் அவளையே பின்தொடரப் போகிறேன்...'

'மூணு நாற்பது... வெறும் மூணு நாற்பது!... கடியாரம் நின்று தொலைத்து விட்டதோ?!... எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை, ம்ம், எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை... இப்படி ஒரு சமாச்சாரம் உலகில் எங்குமே நடக்க இயலாது... ஆனால் நடக்கிறது... இங்கிருக்கும் நாங்கள் ஏன் விழித்தெழக் கூடாது... விழித்தெழா விட்டால், தீர்ப்பெழுதும் நாள் வந்து விடும்... ஓ, அதற்கு வழி விட்டு விடக் கூடாது... இதிலிருந்து தப்பிக்கும் வழி மட்டும் எனக்குக் கிடைத்து விட்டால்... ஓ, என்

தலை... என் தலைக்குள் என்னவோ நடக்கின்றதே... இது வெடிக்கப் போகின்றது... துகள் துகளாகப் போகின்றது... இப்படி ஒரு சமாச்சாரம் உலகில் எங்குமே நடக்க இயலாது... மணி என்ன?... ஓ, கடவுளே... மூணே முக்கால் தானா?!...'

'நான் நிமிர்ந்து நின்றாக வேண்டும்... ஆமாம், நேர் கொண்ட பார்வையாக... அப்படி காட்டிக் கொண்டால் தான் அது எனக்கு நல்லது... எல்லாம் படுகச்சிதமாகி விட்டன... எல்லாம் தயாராகி விட்டன... ஆனால் ஒருவரும் சந்தேகித்து விடக் கூடாது... அதற்கு, நான் நிமிர்ந்து நின்றாக வேண்டும்... அந்த சூழ்ச்சி பலித்து விடலாம்... பலிக்கும்... யாரைப் பலிகடாவாக்குவது?... இது தான் கேள்வி... யாரை?... எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்... ஆமாம்... அது தான் சரி... அது – அவன் தான்...'

மணி ஐந்தடித்த போது அனைவரும் துள்ளியெழுந்தனர்.

வெரா கேட்டார்: ''யாருக்காவது டீ வேணுமா?''

கண நேர அமைதி உண்டாயிற்று. ''எனக்கு ஒரு கோப்பை இருந்தால் தேவலை'' என்றார் ப்ளோர்.

வெரா எழுந்துக் கொண்டார். ''நான் போய் கலந்து எடுத்துக்கிட்டு வரேன். நீங்கள்லாம் இங்கேயே காத்திருங்க.''

ஜஸ்டிஸ் வார்க்ரேவ் வலிக்காமல் சொன்னார்: ''அம்மா வெரா... நாங்களும் உன் கூடவே வந்து நீ கலக்கிறதைப் பார்க்கணும்மா.''

வெராவின் விழிகள் அகல, விழித்தார். பிறகு சட்டென ஒரு வித வெறிச் சிரிப்பினை வெளியிட்டார்.

''தாராளமா! நீங்க வரலாம்!''

ஐந்து பேர் சமையலறைக்குப் போனார்கள். டீ தயார் செய்யப் பட்டது... வெராவாலும் ப்ளோராலும் குடிக்கப்பட்டது. மற்ற மூவரும் விஸ்கி குடித்தனர். திறக்காத பாட்டிலைப் புதிதாய் உடைத்து உபயோகித்தனர்! ''எல்லாத்திலேயும் நாம ரெட்டிப்பு ஜாக்கிரதையா இருக்கணும்'' என்றார் ஜட்ஜ்.

திரும்பி வரவேற்பறைக்கு வந்தனர். அறை இருட்டியிருந்தது. லாம்பர்ட் விளக்கு ஸ்விட்சைப் போட்டான். அது பிரகாசிக்கவில்லை. ''ஓஹ்!'' என வியப்பாய் சொன்னான் அவன். ''ரோஜர்ஸ் இல்லே... அதனால் எஞ்சினைப் போடலே போலிருக்கு. எப்படி இயக்கறதுனும்

தெரியலியே!''

அவனிடம் திடீர் தயக்கம் உருவானது. பிறகு சொன்னான்: ''வெளியே போய் எப்படியாவது அதை ஓட விட முடியுமானு பார்க்கலாமே...'' என்றான்.

வார்க்ரேவ் பேசினார்: ''அதெல்லாம் இப்ப வேண்டாம். மேலே யிருந்து டின் எடுக்கும் போது பார்த்தேன். ரெண்டு மூணு மெழுகுவர்த்தி பொட்டலங்கள் அங்கே இருக்கு. கவனிச்சேன். அதுங்களை உபயோகிச்சா போதும்.''

லாம்பர்ட் வெளியேறினான். ஒருவரையொருவர் கவனித்தபடி மீதி நால்வரும் இருந்தனர்.

ஒரு மெழுகுவர்த்தி பெட்டியுடனும் சில சிறு சிறு தட்டுக்களுடனும் திரும்பி வந்தான் பிலிப். ஐந்து மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு சுற்றி வர வைக்கப்பட்டன.

அப்போது மணி ஐந்தே முக்கால்.

II

இனியும் அங்கே உட்காரவே முடியாது என்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார் வெரா. மணி ஆறு இருபது. வெராவுக்கு இப்போது அவருடைய அறைக்குப் போயே ஆக வேண்டும்... தெறிக்கும் நெற்றியிலும் பொட்டிலும் குளிர் நீரை அள்ளி அள்ளி விட்டுக் கொள்ள வேண்டும்.

அவர் எழுந்துக் கொண்டு சில அடிகள் வைத்தார். பிறகு நினைவு வந்தவராய் திரும்பி, ஒரு மெழுகுவர்த்தியைப் பாக்கெட்டிலிருந்து உருவி எடுத்தார். கொளுத்தினார். சிறு தட்டின் மீது கொஞ்சமாய் உருக்கினார். அது ஸ்திரமாய் நின்றதும், தூக்கிக் கொண்டு கிளம்பினார். வரவேற்பறையை விட்டு வெளியேறி, நான்கு ஆடவர்களையும் உள்ளே வைத்து அவ்வறைக் கதவைக் காலால் எத்தி மூடி, வெளியேறினார். படிகளேறி, மாடி வராண்டாவில் சென்று, தன் அறைக்குள்

பிரவேசித்தார் வெரா.

தன் அறைக் கதவைத் திறந்த கணமே... சட்டென நிதானித்தார் அவர். திடுமென, அப்படியே, ஒரு மரமென நின்றுப் போனார்...

அவருடைய நாசித் துளைகள் திண்டாடின... மோப்பம்... மோப்பம்...

கடல்... கடல் வாசம்... ஸிரில் நீந்திய கடல்...

அதே தான்... அதே தான் இது. இதில் வெராவை ஏமாற்ற முடியாது. தீவிலிருக்கும் போது கடல் வாசத்தைத் தவிர வேறொன்றை நுகர முடியாது தான்... ஆனால் இது வித்தியாசமானது. அந்த நாளன்று, இதே வாசம் தான் பீச்சிலிருந்தது. அலைகள் எழும்பிப் பாறைகளில் அடிக்கும் போதெல்லாம் வந்து விழும் கடற்பாசிகள்... சூரிய வெளிச்சத்தால் பாசியால் பிசுபிசுத்துக் கிடந்த பாறைகள் வெளியிட்ட வாசம்... அது தான் இது... அதே தான்...

''அதோ... கடலுக்குள் இருக்கும் அந்தப் பாறை வரை நான் நீந்திப் போகணும், வெரா. ஏன் தடுக்கறே...? ம்ம்ம்? நான் ஏன் அவ்ளோ தூரம் போகக் கூடாது?''

''ஏய் வெரா! என்னை ஏன் அந்தக் கடல் பாறை வரை போகக் கூடாதுனு சொல்றே. நான் அங்கே போய் அது மேல ஏறி நிக்கணும்.''

பிடிவாதமும் அடங்காப்பிடாரி தனமும் ஒன்றுசேர்ந்த குட்டிப் பிசாசு! இது ஒரு பெண்ணாயிருந்திருந்தால், கொழுத்த பணக்காரனா யிருப்பான், ஹூகோ... அவன் மிக விரும்பிய பெண்ணையே மணந்திருக்கக் கூடும்...

ஹூகோ...

ஹூகோ...

நிச்சயமாய்... நிச்சயமாய்... இவருக்குப் பின்னால் இப்போது நிற்பது ஹூகோ தானா? இவள் வருவாள் என காத்துக்கொண்டு... அறைக்குள்...

ஓரடி மட்டும் எடுத்து முன்வைத்தார் வெரா. ஜன்னல் வழியே குப்பென்று கனமாய் வந்த ஒரு காற்று மூட்டை மெழுகுவர்த்தியின் சுடரை விழுங்கியது. மினுமினுத்து... ஆடி... துடிதுடித்து... அடங்கிப் போனது அது.

முழு இருட்டில் வெரா புதிதாய் பயந்துப் போனார்.

'முட்டாளாகாதே' – வெரா க்ளேதார்ன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். 'பயப்பட ஒன்றும் கிடையாது. மற்றவர்கள் தான் கீழே இருக்கிறார்களே... நாலு பேர்... அத்தனையும் ஆண்கள்... இந்த அறைக்குள் ஒரு பிராணி கிடையாது... இருக்கவும் முடியாது... ரொம்ப கற்பனை செய்கிறாய், பெண்ணே.''

ஆனால் அந்த வாசம் - ஸிரில் நீச்சலடித்துப் போன அதே கடற்கரை வாசம்... இதோ வீசுகிறதே அதே வாசம்... இது கற்பனை கிடையாதே... இது உண்மையே.

பிறகு அறைக்குள் யாரோ ஒருவன் இருந்தான்... வெரா ஏதோ ஒன்றின் ஓசை கேட்டாள்... படு நிச்சயமாய் ஏதோ ஒன்றின் ஓசையைக் கேட்டார்...

பிறகு அப்படியே அந்த ஓசையைக் கேட்டபடியே அவர் நின்றுக் கொண்டிருந்த போது --- சில்லென்றிருந்த பிசுபிசுப்பான ஓர் ஈரக் கை அவரது தொண்டையைத் தொட்டது --- ஓர் ஈரக் கரம் --- அதே கடற்கரை வாசம் சுமந்தக் கரம்...

III

வெரா அலறினார். அலறினார்... தொடர்ந்து அலறினார். அடி வயிற்றைப் பிடுங்கி எடுத்த கிலிக் கதறலின் ஓலமது... காப்பாற்ற யாருமே கிடையாதா என்பதை அலறலில் தெரிவிக்கும் காட்டுக் கூப்பாடு.

இதற்குப் பதிலாக --- கீழிருந்து எந்தவொரு சப்தத்தையும் வெரா கேட்கவில்லை. ஒரு நாற்காலி எத்தி விடப்பட்டது போல கவிழும் ஓசையையோ... ஒரு கதவு திறக்கப்படும் ஓசையையோ... காலடிகள் தப்தப்பென்று படியேறி விரைந்து நெருங்கும் சப்தத்தையோ...

பிறகு, போன உயிரைத் திருப்பித் தருவது போல், வெரா அறையின் வாசலில் சில வெளிச்சப் பொட்டுகள் விளைந்தன – மெழுகுவர்த்தி ஒளிகள் - அறைக்குள் விழுந்தடித்துக் கொண்டு நுழையும் ஆடவர்கள்...

''என்ன நடக்குது?'', ''என்ன நடந்தது?'', ''என்ன ஆச்சு?'', ''அடக் கடவுளே... என்னது இது?''

வெரா நடுநடுங்கினார்... ஓரடி எடுத்து வைக்க முயன்றார்... அது முடியாது ஒடிந்தார்.

யாரோ ஒருவர் குனிந்து அவருக்கு முன்னால் நிற்பது அரை குறையாய் அவருக்குத் தெரிந்ததே ஒழிய அது யாரென்றெல்லாம் விளங்கவில்லை.

பிறகு, திடீரென்ற ஆச்சரியத்துடன் விளைந்த 'ஓ கடவுளே... அதோ பாருங்க...' என்ற குரலோசை, அவரை மறுபடியும் முழு நினைவுக்குக் கொண்டு வந்தது. கண்களைத் திறந்து நிமிர்ந்து பார்த்தார் அவர். கையில் மெழுகுவர்த்தி சுமந்த இந்த அத்தனை ஆண்களும் எதைப் பார்த்து ஆச்சரியமாய் கடவுளை அழைத்தார்களோ, அதையே பார்த்தார் வெரா.

உத்திரத்திலிருந்து, ஒரு நீளமான கடற்பாசி மாலை, கீழ் வரை தொங்கிக் கொண்டிருந்தது. இதுதான், இருட்டில், வெராவின் கழுத்தைத் தடவிச் சென்றுள்ளது... இதைத் தான் ஈரப் பிசுபிசுப்பு கொண்ட ஒரு கையாய் இவர் எடுத்துக் கொண்டது... என்றோ கடலுள் மூழ்கிப் போன ஒரு கை மீண்டும் உயிர்த்தெழுந்து வந்து இவரது குரல் வளையைப் பிசைந்து விட்டதாய் இவராகவே கருதிக் கொண்டது...

கலகலவென அவருடைய வெறிச் சிரிப்பினை உதிர்த்தார் வெரா. 'வெறும் கடல் பாசிகள்... கடல் பாசி மாலை... இவை தான் வாசம் வீசியுள்ளன...'

பிறகு விட்டுப் போயிருந்த மயக்கம் அவர் மீது திரும்பி இறங்கியது. மளமளவென தலையைத் தொங்கச் செய்து ஆளைத் தள்ளும் மயக்கம். அங்கிருந்த யாரோ ஒருவர் தான் தொய்ந்த தலையைத் தூக்கிப் பிடித்தது... யாரது...? இவருக்கு விளங்கவில்லை... மயக்கம்.

காலகாலமாய் கடந்து பண்டைக்காலத்துக்கே சென்று விட்டது போல ஆனது வெராவுக்கு. எதையோ குடிக்கச் சொல்லி அவரது வாய்க்கு நீட்டினார்கள்... மூடிக் கிடந்த இதழ்களில் வைத்து அழுத்தினார்கள்... பிராண்டியின் வாசனை அடித்தது.

வாய்க்குள் விழுந்த பிராண்டியின் மடக்கினை அவர் விழுங்கியிருக்க வேண்டும்... ஆனால் அதற்குள் திடுமென அவருடைய மூளைக்குள்

ஓர் எச்சரிக்கை மணி, அந்த மயக்கத்திலும், கிணுகிணுவென அடித்தது.

எழுந்து உட்கார்ந்து விட்டார். கோப்பையை மறுத்துத் தள்ளினார். ''இது எங்கேயிருந்து வந்தது?'' என்றார் கறாராய்.

ப்ளோரின் குரல் பதில் தந்தது. பதில் தருமுன் சில கணங்கள் விழித்தார். பிறகு, ''கீழேயிருந்து கொண்டு வந்தேன்'' என்றார்.

''அப்போ இதை நான் குடிக்க மாட்டேன்...'' – அலறினார் வெரா.

அங்கு சில நிமிட மௌனம் நிலவியது. பிறகு பாராட்டும் தொனியில் லாம்பர்ட் சிரித்தான். ''சரியா செஞ்சீங்க, வெரா. உங்க மூளை வேலை பண்ண ஆரம்பிச்சுடுச்சு. நான் போய் திறக்காத ஒரு புது பாட்டிலை எடுத்துக்கிட்டு வரேன்.''

துரிதமாய் வெளியேறினான் அவன். ''எனக்கு இப்ப பரவாயில்லே'' என நிச்சயமற்று சொன்னார் வெரா. ''கொஞ்சம் தண்ணீ.''

எழுந்திருக்க சற்று தள்ளாடிய வெராவைத் தாங்கினார் டாக்டர். அவரைப் பிடித்துக் கொண்டும் கைகளால் கவ்விக் கொண்டும் நீர்க் குழாய் வரை போனார் வெரா. குழாயைத் திறந்து குளிர் நீரை ஓட விட்டு விட்டு கோப்பையை அதனடியில் பிடித்தார்.

சற்று தள்ளி நின்றுக் கொண்டிருந்த ப்ளோர், ''அந்த பாட்டில்ல வேற ஒண்ணும் கிடையாது'' என்றார் சற்று கோபமாய்.

இதற்கு ஆர்ம்ஸ்ட்ராங் ''உங்களுக்கு எப்படி அது தெரியும்?'' என கேட்டார்.

கோபம் முழுசாய் தலைக்கேற, ''நான் அதுல வேற ஒண்ணையும் கலந்துடலே'' என்றார் ப்ளோர். ''அப்படி ஏதாவது நடந்திருக்குமானு தானே கேட்கிறீங்க?''

''நீங்க பண்ணினீங்கன்னு நான் சொல்லலே'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''நீங்க பண்ணியிருக்கலாம்... இல்லைனா வேற யாராவது கூட பண்ணியிருக்கலாம்...''

லாம்பர்ட் போன அதே துரித வேகத்தில் திரும்பினான். கையில் ஒரு புது பிராண்டி பாட்டிலும் அதனை உடைக்கத் தேவையான சாவியும் வைத்திருந்தான் அவன்.

வெராவின் மூக்குக்கு அருகேயே வைத்து அதனைத் திறந்த பிலிப், ''எந்த இருட்டடிப்பும் இதுல கிடையாது'' என்றான். ''இந்த வீட்டுல நிறைய பிராண்டி பாட்டிலுங்க இருக்கு. நிறைய பேர் மயங்கி மயங்கி

விழ நேரும்னு தெரிஞ்சே பண்ணியிருக்கான், அந்த ஓவன்...!''

பொங்கி வழிந்த புது பிராண்டியின் தாக்கத்தில் குலுங்கினார் வெரா. ஆர்ம்ஸ்ட்ராங் கோப்பையைப் பிடிக்க அதில் ஊற்றினான் பிலிப். ''ஷாக் தான் வெரா. இதைக் கொஞ்சம் குடிங்க. ஆறுதலாயிருக்கும்.''

அதில் கொஞ்சத்தை மட்டும் குடித்தார் வெரா. அது நன்மை செய்தது. வெரா முகத்தில் தெளிவு பிறந்தது.

சிறு புன்னகையோடு, ''இதோ... இங்கே... கொலைகாரன் திட்ட மிட்டபடி செயல்படாமல் போய்விட்டது, ஒரு கொலை!'' என்றான் பிலிப்.

காதோடு காதாய் சொன்னார் வெரா: ''அது தான் திட்டம்னா சொல்ல வரீங்க?''

லாம்பர்ட் ஏற்றுக் கொண்டு தலையசைத்தான்.

''பயத்திலேயே உறைஞ்சுப் போய் நீங்க உயிரை விட்டுடணும் என்பது எதிர்பார்ப்பு. சில பேர் இந்த ஷாக் தாளாம பட்டுனு போயிடலாம்... இல்லையாடாக்டர்?''

ஆர்ம்ஸ்ட்ராங் இக்கருத்துக்குள் தன்னைப் புகுத்திக் கொள்ள வில்லை. சந்தேகமாய் தான் பதில் தந்தார்: ''ஹ்ம்... அப்படியும் சொல்லிட முடியாது. இளையவள் - ஆரோக்கியமானவள் - இருதய சம்பந்தமா எந்த நோயும் இல்லே. வாய்ப்பில்லே. ஆனால், மாறாக ---''

சொன்ன டாக்டர், ப்ளோர் கொண்டு வந்திருந்த பிராண்டி பாட்டிலைக் கையிலெடுத்துக் கொண்டார். அதில் ஒரு விரலை நுழைத்து, அடியிலிருந்ததைத் தொட்டு, நுனி விரலை மட்டும் ருசித்தார். அவரது முக பாவம் மாற்றம் கொள்ளவில்லை. சொன்னார்: ''ஹ்ம்... நல்லதா தானிருக்கு!''

இப்போது ப்ளோர் கோபமாய் முன்னுக்கு வந்தார். ''உங்களைத் தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு. அந்த பாட்டிலை உடைச்சு அதுல நான் ஏதாவது கலந்திருப்பேனோங்கிற மாதிரி பண்ணினீங்க... ... ...''

பிராண்டியால் மயக்கம் தெளிந்து சுவாதீனமாகியிருந்த வெரா, வீணாய் சண்டை மூளுவதைத் தவிர்க்க பேச்சைத் திசை திருப்பினார்: ''ஜட்ஜ் எங்கே?''

மூன்று ஆண்களும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

''விந்தையா இருக்கு... எங்க கூடவே வந்தும், காணுமா...?''

ப்ளோர் ''நானும் அப்படித் தானே நினைச்சுக்கிட்டு இருக்கேன்'' என்றார். ''என்னாச்சு டாக்டர்... படியேறும் போது நீங்க எனக்குப் பின்னாடியில்லே வந்தீங்க?''

''என்னைத் தொடர்ந்து வரார்னுல்லே நினைச்சேன்'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங். ''நம்ம வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாம கொஞ்சம் மெதுவா வந்திருக்கலாம்... வயசனாவரில்லே...''

மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபடி நின்றனர்.

லாம்பர்ட், ''என்னய்யா எல்லாமே விசித்திரமா இருக்கு'' என்றான் கதறலாய்.

ப்ளோரும் ''முதல்ல அவர் எங்கேனு பார்த்தாகணும்'' என்றார் அவசரமாய்.

அவர் கதவு நோக்கி விரைந்தார். அவர் பின்னால் ஏனையவர்களும். வெரா கடைசியாக.

படியிறங்கி அவர்கள் போய்க் கொண்டிருந்த போது, ''வரவேற்பறையிலேயே அவர் தங்கிட்டாரோ என்னவோ'' என்றார் ப்ளோர் பொதுவாய்.

வரவேற்பறையை அடைந்தனர். ஆர்ம்ஸ்ட்ராங் உரக்கக் கத்தினார். ''வார்க்ரேவ்... வார்க்ரேவ்... எங்கே இருக்கீங்க நீங்க?''

அங்கு பதிலில்லை. படீர் படீரென்று அடித்துக் கொண்டிருந்த மழையோசையைத் தவிர, வீடு முழுவதையும் மயான அமைதி நிரப்பியிருந்தது.

வரவேற்பறையின் மையத்துக்கு வந்ததும், உணர்வற்றுப் போன கல்லாய் ஆகினார் ஆர்ம்ஸ்ட்ராங். அப்படியே நின்று விட்டார். மற்றவர்கள் அவருக்குப் பின்னால் குழுமி அவருக்குப் பின்னால் நின்றபடியே பார்த்தனர்.

யாரோ கர்ண கொடூரமாய் அலறினார்.

வரவேற்பறையின் எதிர் மூலையில், பின் பக்கம் நல்ல உயரமாய் இருக்கும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் வார்க்ரேவ். அவருக்கு இரு புறங்களிலும் தத்தம் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு எரிந்துக் கொண்டிருந்தன. ஆனால் அனைவரையும் மூர்ச்சையாக வைத்து அதிர வைத்தது எது தெரியுமா... அங்கு, ஜட்ஜ், நல்ல சிகப்பு நிற போர்வை ஒன்று போர்த்தப்பட்டு, தலையில் தீர்ப்பு சொல்லும் போது நீதிபதிகள்

சம்பிரதாய ரீதியாய் அணிந்துக் கொள்ளும் கறுப்பு நிற குல்லா அணிந்து அமர்ந்திருந்தது தான்...!

அனைவரையும் அப்படியே இருக்கும்படி சைகை காட்டி விட்டு டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் மட்டும் முன்னேறினார். அமைதியாய் கண்ணகல உட்கார்ந்திருந்த உருவத்தை, குடி போதையில் இருக்கும் ஒருவனைப் போல தள்ளாடி நடந்து, அவர் மட்டும் நெருங்கி நின்றார்.

நின்றுப் போய் விட்டிருந்த முகத்தைத் துளைத்துப் பார்ப்பது போல் மிக அருகில் குனிந்தார் ஆர்ம்ஸ்ட்ராங்... பிறகு, திடீர்துரித இயக்கமாய், தலையிலிருந்த குல்லாவைத் தள்ளி விட்டார். அது --- நல்ல பெரிய வழுக்கை மண்டையைக் காட்டி, ஒரு வட்ட வடிவ துளை போன்ற ஒன்றை அதில் சுட்டியபடி --- தரையில் விழுந்து உருண்டது. நடு மண்டைத் துளையிலிருந்து என்னவோ வழிந்துக் கெட்டித்திருந்தது.

கையைப் பிடித்துத் தூக்கி, நாடித் துடிப்பைத் தேட முயன்றவர், முகம் தாண்டி கீழ் நோக்கி பிசுபிசுப்பாய் சொட்டத் துவங்கிய சிவப்பு திரவத்தைக் கவனித்து விட்டு, உணர்வற்ற... உயிர்ப்பற்ற... அடங்கிப் போன குரலில் சொன்னார்: ''சுடப்பட்டு விட்டார்...''

ப்ளோர், உடனே, ''கடவுளே – அந்த *ரிவால்வர்!*'' என்றார்.

அதே உயிர்ப்பற்ற குரலிலேயே டாக்டர் சொன்னார்: ''தலை மையத்துல வெச்சு சுண்டியிருக்காங்க. உடனடி மரணம்.''

வெரா அந்த குல்லா பக்கமாய் நகர்ந்தார். கிலியில் புலுபுலுத்துப் போன குரலில் அவர் சொன்னார்: ''மிஸ் ப்ரெண்ட் காணாம போனதா சொன்ன, கம்பளி நூற்கண்டு...!''

ப்ளோர், ''அது, பாத்ரூமில காணாமல் போனதா ரோஜர்ஸ் சொன்ன திரைச்சீலை...!'' என்றார்.

''ஓ... அப்போ இதுக்காகத் தான் இந்த ரெண்டையும் களவாடியிருக்காங்க'' என்றார் வெரா.

சட்டென கலகலத்தான் பிலிப் - இயற்கைக்கு முரணான, இப்போது தேவையேயற்ற கணீர் சிரிப்பு. சொன்னான்: '' ***'ஐந்து சிப்பாய் பொடியன்கள் சட்டம் படிக்கப் போனார்கள்; ஆவணக் கிடங்குக்குள் ஒருவன் சிக்கிக் கொண்டு விட, மிஞ்சினர் நால்வர்.'*** இப்படி முடிகிறது, ஜஸ்டிஸ், ஜட்ஜ், மேதகு வார்க்ரேவின் விதி! இனி யாருக்கும் இவரால மரண தண்டனை விதிக்க முடியாது! சம்பிரதாய கறுப்புக் குல்லா

அணிதல் எல்லாம் இனி ஜட்ஜுக்குக் கிடையாது! இது தான் அவர் கடைசியாய் ஒரு நீதிமன்றத்தில் உட்காருவது! 'இது தான் வழக்கின் சாராம்சம்...' என்று திறமையாய் இட்டுக்கட்டிப் படித்து, குற்றமற்ற அப்பாவிகளை தூக்குக்குள் அனுப்பும் வேலையெல்லாம் இனி முடியாது! ஆஹ்ஹா... இப்போ மட்டும் அந்த எட்வர்ட் ஷெல்ட்டன் இங்கே இருந்தா! எப்படிச் சிரிப்பான்! ஓ காட்... எப்படிச் சிரிப்பான்...! ஹாஹ்ஹாஹா... ஹாஹ்ஹாஹா...!''

பிலிப்பின் இந்த வெடிச்சிரிப்பு, அனைவருக்கும் ஓர் அதிர்ச்சியாய்... ஓர் அடியாய் அமைந்தது.

''இன்னிக்குக் காலையில தான் நீங்க, இவர் தான் அதுனு சொன்னீங்க!'' என அலறலாய் குறிப்பிட்டார் வெரா.

பிலிப்பின் முக பாவம் மாறியது – சுவாதீனம் கொண்டது.

தாழ்ந்த குரலில் அவன் சொன்னான்: ''நான் சொன்னேன்... நினைவிருக்கு. ம்... அந்த என் முடிவு - தப்பு. இதோ... இங்கே நம்மில் இன்னொருவர், குற்றமற்றவர் என்று நிரூபணமாயிடுச்சு – ஆனால் காலந்தாழ்த்தி!''

அத்தியாயம் 14

I

ஜஸ்டிஸ் வார்க்ரேவை அவருடைய படுக்கையறை வரை தூக்கிப் போய் அங்கிருந்த கட்டிலில் படுக்கப் போட்டார்கள்.

பிறகு அனைவரும் மறுபடியும் கீழிறங்கி வந்து வரவேற்பறையின் மையத்தில் நின்றுக் கொண்டு ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டனர்.

ப்ளோர், கனமான மனத்துடன் கேட்டார்: ''இப்ப நாம என்ன செய்வது?''

''ஏதாவது சாப்பிடலாம்'' என்றான் பிலிப் ஊக்கமாய். ''எப்படியும் சாப்பிட்டாகணும், இல்லியா?''

அனைவரும் அடுக்களைக்குள் மீண்டும் போனார்கள். மறுபடியும் டின் சாப்பாடு. திறந்தனர். இறைச்சி. இயந்திரத்தனமாய், துளி ருசி பார்க்காது சாப்பிட்டார்கள். முடித்தார்கள். அங்கிருந்த சாப்பாட்டு மேஜையை சுற்றிலும் உட்கார்ந்துக் கொண்டு ஒருத்தரையொருத்தர் வெறித்தபடியிருந்தனர்.

ப்ளோர் கனமான மனத்துடனேயே இன்னுமிருந்தார். ''நாம் நாலு பேர் மட்டும்... வெறும் நாலு பேர் மட்டும்... அடுத்து என்ன?''

ஆர்ம்ஸ்ட்ராங் விழித்தார். அப்படியே இயந்திரத்தனமாய் சொன்னார்: ''நாம ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் --- '' பிறகு தொடராமல் நிறுத்தி விட்டார்.

ப்ளோர் ஒப்புதலாய் தலையசைத்தார். ''இதைத் தான் அவர் சொன்னார்... இப்போ அவரே இல்லை.''

''அது எப்படித் தான் நடந்திருக்கும்...? எனக்கு ஆச்சரியமா இருக்கு'' என்றார் ஆர்ம்ஸ்ட்ராங்.

லாம்பர்ட் அடித்துப் பேசினான்: ''ரெண்டு பக்கத்தையும் சாமர்த்தியமா ஏமாற்றும் திட்டம்! அந்த மாலை, வெராவின் அறையில் நடப்பட்டு தொங்கவிடப்பட்டிருக்கு... அது, எதுக்காக அப்படி செய்யப்பட்டதோ, அந்தத் திட்டம், கொஞ்சங்கூட பிசிறில்லாம

நிறைவேறியிருக்கு! எல்லோரும் அடிச்சுப் பிடிச்சுக்கிட்டு அங்கே ஓடறோம் - இந்தம்மாவைத் தான் யாரோ கொலை பண்றாங்கனு பயந்துக்கிட்டு! அதுல விளையற குழப்பத்துல... யாரோ... கிழ ஜட்ஜுக்கு இருந்த பாதுகாப்பு வளையத்தையே அழகா தகர்த்துட றாங்க. அவர் தனியா ஆகி விட --- ''

''ஏன் ஒருத்தர் கூட குண்டின் வெடிச்சத்தத்தைக் கேட்கலே?'' என கேட்டார் ப்ளோர்.

லாம்பர்ட் மறுத்துத் தலையசைத்தான். ''கேட்டிருக்காது'' என்றான். ''இந்த வெரா ஓஓனு கத்திக்கிட்டிருந்தா. பேயாய் கத்திக்கிட்டு இருந்தது காத்து. மேலிருந்து வந்த ஓசையைக் கேட்டுட்டு இங்கேயும் அங்கேயுமா நாம பாஞ்சுப் பாஞ்சு ஓடிக்கிட்டிருந்தோம். ம்ம். அது கேட்டிருக்காது'' என்ற பிலிப் சற்று நிறுத்தி விட்டு சொன்னான்: ''ஆனா அதே மாதிரியான திட்டம் மறுபடியும் எடுபடாது. அடுத்து வேலையை முடிக்க அவன் வேற ஏதாவது வழியைத் தான் முயற்சி பண்ணணும்.''

இதற்கு ''அவன் பண்ணுவான்'' என்றார் ப்ளோர். அவரது குரலில் விருப்பமற்ற தொனி கிடந்தது.

ஆர்ம்ஸ்ட்ராங் சொன்னார்: ''நாம நாலு பேர்... இதுல யார் அவன்னு நமக்குத் தெரியலே...''

ப்ளோர், ''எனக்குத் தெரியும்'' என்றார்.

வெரா, ''எனக்குத் துளி கூட சந்தேகங் கிடையாது...'' என்றார்.

ஆர்ம்ஸ்ட்ராங் மெதுவாய், ''எனக்கு அது யார்னு நிச்சயமா தெரிஞ்சிடுச்சுனு நினைக்கிறேன்...'' என்றார்.

பிலிப், ''அவனைப் பத்தின முழு துப்பும் என் கையில விழுந்துடுச்சுனு நினைக்கிறேன்'' என்றான்.

சொல்லி விட்டு மறுபடியும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விழித்துக் கொண்டு நால்வரும் நின்றனர்!

வெரா, சில அடிகள் எடுத்து முன் வைத்து நகரலானார். ''எனக்கு இது சித்திரவதையா இருக்கு. எனக்குத் தூங்கப் போயாகணும்... ஒடிஞ்சிப் போயிருக்கேன் நான்...''

லாம்பர்ட் ''எனக்கும் அப்படித் தான் தோணுது'' என்றான். ''ஒருத்தரையொருத்தர் பார்த்தபடி உட்கார்ந்தே இருப்பதுல ஒரு பிரயோஜனம் கிடையாது.''

''எனக்கு ஆட்சேபணையில்லை'' என்றது, ப்ளோர்.

டாக்டர் முணுமுணுத்தார்: ''போய் படுத்தாலும் நம்மள்ல யாராவதும் தூங்குவோமா என்பது சந்தேகமே...! ஆனாலும் கூட --- இப்போதைக்கு செய்யக் கூடிய ஒரே நல்ல காரியம் - இது தான்...!''

அவர்கள் படுக்கையறை திசை நோக்கிக் கிளம்பினர். ப்ளோர், ''அந்தத் துப்பாக்கி இப்போ எங்கே இருக்கும்?'' என்றார்.

II

படியேறிப் போனார்கள்.

அடுத்து நடந்த நிகழ்வுகள், ஒரு ஹாஸ்யக் காட்சி போல அமைந்தன. அவரவர்கள், தங்களுடைய படுக்கையறைக் கதவிலிருந்த தாழ்ப்பாளில் கை பதித்து அப்படியே நின்றனர். பிறகு, 'ஆக்ஷன்...' என்று சொல்லிவிட்டதைப் போல, ஒவ்வொருவரும் அறைக்குள் நுழைந்துக் கொண்டனர். கதவை இழுத்து மூடினர். தாழ்ப்பாள் போடுவது... பூட்டிக் கொள்வது... நாற்காலியை இழுப்பது ஆகிய ஒலிகள் எழும்பி அடங்கின.

பயந்து சாகும் நான்கு பேர், மறு நாள் காலை விடியும் வரை, சிறை வைக்கப்பட்டனர்.

III

அறைத்திய கதவின் கைப்பிடிக்குக் கீழே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதைக் கதவை ஒட்டி சரி செய்து முடித்தவுடன் ஒரு நிம்மதிப் பெருமூச்சினை வெளியிட்டான் பிலிப் லாம்பர்ட்.

உல்லாசமாய் நடந்தபடி அலங்காரக் கண்ணாடி பொருத்தப்

பட்டிருந்த ஒப்பனை மேஜையருகே போய் நின்றான்.

துடிதுடித்துக் கொண்டிருந்த மெழுகுவர்த்தியின் ஒளிச் சிதறலில் தெரிந்த தனது முகத்தை ஆர்வமாய் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

அவனுக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்: ''விட்டு ஒழி. நடந்த அத்தனையும் உன்னை உலுக்கித் தான் எடுத்து விட்டன... போகட்டும் விடு.''

மேலுதடு உள் மடங்கி அங்கு பற்கள் பளீரென வெளிப்படும் அவனுடைய நரித் தனமான சிரிப்பு திடுமென உண்டானது.

விரைவாகவே துணிகளைக் களைந்தெறிந்தான். பிறகு படுக்கைக்குப் போனான். கைக்கடியாரத்தை எடுத்து மேஜைக்குப் பக்கத்தில் தலைமாட்டில் வைத்தான்.

நிறைவாக, படுக்கையோடு ஒட்டியிருந்த சிறு மேஜையின் அந்த மேல் தட்டினைப் பிடித்திழுத்துத் திறந்தான்.

அதனுள்ளிருந்த துப்பாக்கியை வெறித்தபடி அப்படியே ஆவென ஆனான் அவன்...

IV

வெராக்ளேதார்ன் படுக்கையில் படுத்து விட்டார்.

அவருக்குப் பக்கத்திலிருந்த மெழுகுவர்த்தி இன்னமும் எரிந்துக் கொண்டிருந்தது. ஆயினும், அதை ஊதி அணைத்து விடும் தைரியம் அவருக்குள் இன்று இல்லை.

இருளின் கருமையைக் கண்டு அவருக்கு பயம்...

அவருக்குள்ளேயே மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டார்: 'இன்று காலை வரை நன்றாக இருந்தவள் தானே நீ. நேற்றிரவு உனக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை. இன்றிரவும் அப்படி ஒன்றும் நேரப் போவது கிடையாது. எதுவும் நடக்கவும் முடியாது. கதவைத் தாழிட்டு விட்டு, பூட்டிக் கொண்டு நீ உள்ளே இருக்கிறாய். யாரும் உன்னை நெருங்கி

வந்து விட முடியாது...'

பிறகு சட்டென அவர் நினைத்துக் கொண்டார்: 'அதானே! பயமே தேவையில்லை. நான் இங்கேயே தங்கி விடலாம்! சாப்பாடு என்ன பெரிய விஷயமா – உயிருக்கு முன்னால்! இங்கேயே நான் தங்கி விடலாம் - பாதுகாப்பாய் - உதவி என்று ஒரு கரம் நீளும் வரை! ஒரு நாள் போகட்டும்... இரண்டு நாட்களே கூட போகட்டுமே...'

இங்கேயே தங்கி விடு. ஆமாம். ஆனால் வெராவால் இங்கேயே இருந்து விடத்தான் முடியுமா? ஒவ்வொரு மணி நேரமாய் கடந்துப் போகப் போக --- பேச்சு வார்த்தைக்குக் கூட ஒரு நாதி இல்லாமல்... செய்யவும் ஒன்றும் இல்லாமல்... வெறுமனே சிந்தித்தபடி...

கடற்கரையை மறுபடியும் நினைக்க ஆரம்பித்து விட்டார் வெரா. ஹூகோ பற்றி. ஸிரிலுக்கு இவர் என்ன சொன்னாரோ அது பற்றி.

கொஞ்சங்கூட அடங்காதப் பொடிப்பயல்... என்ன வேண்டும் என்றானோ அதைச் செய்து முடித்தே ஆக வேண்டும்...

''அதோ... கடலுக்குள் இருக்கும் அந்தப் பாறை வரை நான் நீந்திப் போகணும், வெரா. ஏன் தடுக்கறே...? ம்ம்ம்? நான் ஏன் அவ்ளோ தூரம் போகக் கூடாது?''

இதற்கு அப்போது பதில் சொன்னது வெரா தானா?

''முடியும் ஸிரில்! உன்னால முடியும்! அது எனக்கும் தெரியும். நீ பண்ணுவே!''

''அப்போ நான் போகட்டுமா, வெரா?''

''இதோ பார் ஸிரில்... உன்னைப் பற்றியே உங்கம்மாவுக்கு எப்பவும் கவலை. அதனால ஒரு ஐடியா சொல்றேன், கேளு. நாளைக்கு நீ அந்தக் கடல் பாறை வரைக்கும் நீந்திப் போகலாம். தடை கிடையாது. நான், கடற்கரையில... அப்படியே எதையாவது உங்கம்மா கிட்டே பேசி அவங்க கவனத்தை திசை திருப்பிடறேன். அப்புறமா, நீ எங்கேனு உங்கம்மா திடுமுனு தேடிப் பார்க்கும் போது, அங்கே, அந்தப் பாறையில நீ நின்னுக்கிட்டு... கையை ஆட்டி ஆட்டி ஜாடை காட்டுவியாம். இது அவங்களை அப்படியே ஆச்சரியப்படுத் திடுமாம்!''

இப்படி அப்போது சொன்னது வெரா தானா?

வெராவே தான்!

திட்டம்! கடும் திட்டம்!

''ஏய், க்ளேதார்ன்! உண்மையா தான் சொல்றீங்களா...? அப்ப நான் நீந்திப் போறதுல உங்களுக்கு சம்மதம் தானா...! தெரியாம போச்சே...! அம்மா அப்போ எப்படி ஆச்சரியமாவாங்க...! ஆஹ்ஹா...!''

நாளை என்றார் வெரா. ஏனென்றால் ஹூகோ நாளை வெளியூர் போகிறான். அவன் திரும்பி வரும் போது – எல்லாமும் முடிந்திருக்கும்.

சரி... ஒரு வேளை அப்படித் திட்டமிட்டபடி நடக்காமல் போய் விட்டால்...? தலைகீழாய் முடிந்து விட்டால்...? ஸிரில் சரியான நேரத்தில் காப்பாற்றப்படுகிறான் என வைத்துக் கொள்வோம். பிறகு... பிறகு... அவன், 'வெரா தான் என்னால நீந்த முடியும்னு சொல்லி தண்ணீக்குள்ளே தள்ளினா' என்பான். இருக்கட்டுமே! அதனால் என்ன...? ஒரு ஜோலியைப் பண்ணி முடிக்கக் கொஞ்சம் ஆபத்தினை எதிர் கொள்ளத் தான் வேண்டும். சுணங்கினால்...?! அப்படியே ஸிரில் சொல்லி விபரீதமாய் எல்லோரும் பார்த்தால்... புது கவசம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ள வேண்டியது தான். 'சின்ன வயசிலேயே இப்படி நயவஞ்சகமா பொய் சொல்ல எங்கே கத்துக்கிட்டே, ஸிரில்? இந்தப் பழக்கம் ரொம்பத் தப்பு. ஸாரி சொல்லு'னு சொன்னால் ஆயிற்று! 'குழந்தே... பயத்துல உளறுது. நான் அப்படி எதுவும் சொல்லலே' என்பேன். எல்லோரும் நம்புவார்கள். ஸிரில் பற்றி எல்லோருக்கும் தெரியும். கதைகள் புனைவதில் வெகு நேர்த்தி அவன். அத்தனையும் கற்பனைக் குதிரை பறக்கும் பொய்க் கதைகளாயிருக்கும். ஸிரிலுக்கு மட்டும் உண்மை தெரிந்திருக்கும்... அதனால் பாதகமொன்றுமில்லை. எனினும் தப்பாய் எதுவும் ஆகிவிடப் போவதில்லை. அவனைக் காப்பாற்ற முயற்சிப்பது போல... அவனைப் பின்தொடரும் பாவனையில் நீந்திக் கொண்டு நடிப்பார். ஆனால் நிச்சயமாய் பின் தங்கி விடுவார். காலந்தாழ்த்தி தான் அவனை அடைவார். சந்தேகப்பட ஒரு நாதி கிடையாது...

இதை - ஹூகோ சந்தேகித்தானா? நீ இனி எனக்கு வேண்டாம் என்று வெகு தூரம் சென்று விட்டவன் போல அவன் பார்த்த அந்தப் பார்வைக்கு அர்த்தம் - இது தானா? ஹூகோவுக்குத் தெரிந்து விட்டதா என்ன?

குழந்தையின் மரண விசாரணை முடிந்த கையோடு என்னை விட்டு

விட்டு அவன் அத்தனை அவசரமாய் கண் மறைவாய் ஆனதன் விளக்கம் - இது தானா?

பிறகு அவனுக்கு வெரா எழுதிய ஒரு கடிதத்துக்கு அவன் பதில் போடவேயில்லை...

படுக்கையில் திருப்தியின்றி புரண்டார் வெரா. ம்ம்... கூடாது... கூடாது... ஹூகோவைப் பற்றி வெரா நினைக்கக் கூடாது. ஹூகோ... ஹூகோ... அவன் நினைவு வதைக்கின்றது! அந்த அத்தியாயம் முடிந்து விட்டது... முடிந்து சுபமாகி விட்டது... ஹூகோ – மறக்கப்பட வேண்டியவன்.

இன்று மாலை, இந்த அறையில் தன்னுடனேயே ஹூகோவும் இருப்பதாக திடுமென ஓர் எண்ணம் எதற்காக வெராவுள் விளைந்து உள்ளது?

நிமிர்ந்து உத்திரத்தை உற்றுப் பார்த்தாள்... அதன் நடுவிலிருந்த கறுப்பு நிறக் கொக்கியை ஊடுருவிப் பார்த்தார்.

அந்தக் கொக்கியை இதற்கு முன் அவர் கவனித்திருக்கவில்லை.

அதிலிருந்து தான் கடற்பாசி மாலை தொங்கிக் கொண்டிருந்தது.

அதன் சிலுசிலுவென்ற கழுத்து ஸ்பரிஸத்தை இப்போது நினைத்தாலும் வெடவெடவென நடுங்கியது வெராவுக்கு.

உத்திரத்து நடுவில் அமைந்துள்ள அந்தக் கொக்கியை வெராவுக்கு இப்போது பிடிக்கவில்லை. அது கண்களை இழுத்தது, என்னவோ போல வசீகரித்தது... ஒரு கறுப்பு கொக்கி...

V

எக்ஸ்-இன்ஸ்பெக்டர் ப்ளோர், படுக்கையின் நுனியில் உட்கார்ந்திருந்தார்.

அவரது இறுகிய கருங்கல் முகத்தில் பதிந்திருந்த செக்கச்சிவந்த சிறு யானைக் கண்கள் எச்சரிக்கையாய் மின்னிக் கொண்டிருந்தன. தாவிக் குதறத் தயாராயிருக்கும் பெரும் காட்டுப் பன்றி போலிருந்தார் அவர்.

அவருக்குத் தூங்க விருப்பம் உண்டாகவில்லை.

அபாயம் வெகு அருகில் வந்து கொண்டிருக்கின்றது... பத்துக்கு ஆறு!

அவருக்கு இருந்த அந்த புத்தி நுட்பம்... விவேகம்--- அவரிடம் செறிந்துக் கிடந்த முன்னெச்சரிக்கை... தந்திரம் --- என்ன பிரயோஜனம்! மற்றவர்கள் சென்ற வழியிலேயே போய்ச் சேர்ந்து விட்டார், ஜட்ஜ்!

மூர்க்கத்தனம் தெறிக்கும் திருப்தி கொண்டார் ப்ளோர்.

அந்தக் கிழ பன்றி என்ன சொன்னது? 'நாம ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்...'

தான் தான் எப்போதும் சரி என்றே கருதும் தற்குறி. நீதிமன்ற நடுவில் பின்பக்கம் உயரமாய் அமைந்திருக்கும் நீதிபதி நாற்காலியில் ஏறி உட்கார்ந்து விட்டால், அந்த சாமி என்றே நினைப்பாகிப் போகின்றது... அவனுக்குக் கிடைத்து ரொம்பச் சரி தான்... இனி அந்தக் கிழத்துக்கு எந்த விதமான ஜாக்கிரதைக்கும் அவசியமிருக்காது...

இப்போது மொத்த நபர்களில் நாலு பேர் மட்டும் இருக்கிறார்கள். அந்தப் பெண், லாம்பர்ட், ஆர்ம்ஸ்ட்ராங் மேலும் இந்த ப்ளோர்.

வெகு சீக்கிரத்திலேயே இவர்களில் ஒருவர் போய் விடுவார்கள்... ஆனால் அது வில்லியம் ஹென்றி ப்ளோராய் இருக்காது... தன்னை ஓர் அணு அண்டாமல் பார்த்துக் கொள்வார் இவர்.

(ஆனால் அந்த ரிவால்வர்... அதற்கு என்னாயிற்று? அது தான் குழப்புகின்றது – ரிவால்வர்!)

துப்பாக்கி பற்றிய சிந்தனைக்குள் விழுந்து விட்டால், மெத்தையில் நெட்டைக் குத்தலாய் எழுந்து உட்கார்ந்துக் கொண்டு விடுகிறார் ப்ளோர். அவர் புருவங்கள் விபரீதமாய் முடிச்சிடுகின்றன... கண்கள் சுருங்கி, அப்படியே துடிதுடிக்கின்றன...

நிலவியிருந்த அமைதியில் கீழ்த்தளத்தில் அடிக்கும் கடியார மணியின் ஓசையை இவரால் கேட்க முடிந்தது.

நள்ளிரவு.

அப்படியே கொஞ்சம் தன்னை ஆசுவாசமாய் தளர்த்திக் கொண்டார்... இவரது படுக்கையில் போய் படுத்துக் கொள்வது வரை முயன்றும் பார்த்தார்... ஆனால் உடைகளைக் களையவில்லை.

அப்படியே சிந்தித்தபடியே விழுந்துக் கிடந்தார். இவர் போலீஸ் அதிகாரியாய் இருக்கும் போது எத்தனை மெனக்கெட்டு வரிசைப்படுத்திப் பார்ப்பாரோ, அதே போல, நடந்து முடிந்துள்ள அத்தனையையும், ஒழுங்காக, ஒரு முறையோடு, மிகச் சிரமப்பட்டு அடுக்கிப் பார்த்தார். இந்தத் தீர்க்கமான ஒழுங்குமுறை தான் ப்ளோரை இவருடைய தொழிலில் இந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது.

மெழுகுவர்த்தி அணைந்து விடும் நிலைக்கு வந்திருந்தது... துடித்தது. கையெட்டும் தூரத்தில் வத்திப்பெட்டி இருக்கின்றதா என்பதை ஒரு முறை சரிபார்த்துக் கொண்டு அதனை ஊதி அணைத்தார்.

இருட்டு, விளக்கவொண்ணா அமைதியற்ற நிலைமையை அள்ளித் தருவதாய் இவர் உணர்ந்தார். ஆயிரமாயிர பயங்கள் ஒன்றாய் தலைக்குள் விழித்தெழுந்து நீதி கேட்டு மண்டையைக் குடைவதாய் தோன்றியது ப்ளோருக்கு. ஒளியற்ற கும்மிருட்டில் முகங்கள் காற்றில் மிதந்தன. கரும் சாம்பல் நிற கம்பளி நூலினால் கட்டுண்ட ஜட்ஜின் முகம்... பயந்து அலறியபடி நின்றுப் போயிருந்த திருமதி ரோஜர்ஸின் கிலியெழுப்பும் முகம்... திருகிய நிலையில் சிவந்து அலறிப் போன ஆன்டனியின் முகம்...

இவற்றிற்கு நடுவில், இன்னொரு முகம்... கண்ணாடி அணிந்து, வெளிறிப் போய், சிறு செந்நிற மீசையோடு...

என்றோ ப்ளோர் பார்த்த ஒரு முகம்... ஆனால், அது எப்போது? இந்தத் தீவில் பார்க்கவில்லை. இங்கெல்லாம் வருவதற்கு ரொம்பவும் முன்னால் பார்த்தது...

அது யாருடைய முகம் என்று பெயரிட்டு அழைக்க முடியாதது கோமாளித்தனமாயுள்ளது... இப்படியா மறந்து போகும்... புத்திசாலித்தனம் கம்மியாய் தெரியும் ஒரு முகமிது... களி மண் போல உணர்வற்ற அசமஞ்ச முகம்...

ஓஹ்! ஓஹ்!

சட்டென்ற ஓர் அதிர்வோடு இவருடைய நினைவுக்குள் வந்தது.

லாண்டர்!

லாண்டர் என்ன மாதிரியாக தோற்றமளிப்பான் என்பதைக் கூடவா இத்தனை தூரத்துக்கு மறந்துப் போய் விடுவது? நேற்று கூட

அவனுடைய முகத்தை ஞாபகப்படுத்திப் பார்க்க எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தார் இவர்... ம்ம்... முடியவில்லை.

இங்கு இப்போது முழுமையாக... அவனுடைய ஒவ்வொரு அடையாளமும் துல்லியமாக... பிரத்யேகமாக... ஏதோ ஓரிரு நாட்களுக்கு முன் தான் பார்த்தது போல!

லாண்டருக்கு ஒரு மனைவியிருந்தாள் - ஒல்லியான ஒடிசல் தேகம் கொண்டவள். கவலை தோய்ந்து சோகம் பொங்கும் முகத்தோடு. ஒரு பெண்ணும் உண்டு... பதினான்கு வயதை ஒட்டி. முதல் முறையாக, அவர்களுக்கெல்லாம் என்ன ஆகியிருக்கும் என்று நினைத்தார் ப்ளோர்.

(துப்பாக்கி. அந்தத் துப்பாக்கிக்கு என்ன ஆகியிருக்கும்? அது தான், இதை விட மிக முக்கியம்.)

அதைப் பற்றி அதிகம் நினைக்க நினைக்க... விடை தெரியா புதிர் போடப்பட்டவராய் முடங்கிப் போனார் இவர். துப்பாக்கி ஏற்படுத்தும் குழப்பத்தை இவரால் புரிந்துக் கொள்ளவே இயலவில்லை.

இந்த வீட்டிலிருக்கும் எவரோ தான் அந்தத் துப்பாக்கியைக் கையகப்படுத்தியிருப்பது...

கீழே கடியார மணி ஒன்று அடித்தது.

ப்ளோரின் சிந்தனைப் பயணம் துண்டிக்கப்பட்டது. சட்டென எச்சரிக்கையாகி படுக்கையில் எழுந்து துரிதமாய் அமர்ந்துக் கொண்டார் இவர். ஓர் ஓசை கேட்டது இவருக்கு... ரொம்பவும் சன்னமான ஓசை... படுக்கையறைக் கதவருகே எங்கோ வெளியே...

இருட்டிக் கிடக்கும் வீட்டுக்குள் யாரோ அலைந்துக் கொண்டிருக்கிறார்கள்...

இவரது நெற்றியில் வியர்வைத் துளிகள் மடை திறந்தன. ரகசியமாவும் ஓசையெழுப்பாமலும் மாடி வராண்டாவில் நடந்துக் கொண்டிருக்கும் மனிதன் யாரது?

அவருடைய ஆஜானுபாகுவான உடல் எடையையும் மீறி படுக்கையிலிருந்து துளி ஓசை தராது உதிர்ந்துக் கொண்ட ப்ளோர், இரண்டு தப்படிகளில் கதவின் நுனியை அடைந்து... கவனிக்கலானார்.

ஆனால் அந்த ஓசை இப்போது மறுபடியும் வரவில்லை. இருந்தபோதிலும் அப்போது கேட்ட ஓசையின் மீது இன்ஸ்பெக்டருக்கு

துளியும் சந்தேகம் எழவில்லை... கேட்டது கேட்டது தான்! இதோ... இக்கதவினை ஒட்டித் தான் அந்தக் காலடியை இவர் கேட்டார். பிடரிகளில் இப்போது மயிர்க்கால்கள் துடித்தெழுந்தன ப்ளோருக்கு. ஆமாம்... ஆபத்து நெருங்கி விட்டது புரிகின்றது...

யாரோ நட்டநடு ராத்திரியில் ஓசையெழுப்பாமல் நரித்தனமாய் நகர்ந்துக் கொண்டிருக்கிறார்கள்...

கூர்ந்து கவனித்தார் - ஆனால் அந்த ஓசை மறுபடி வரவேயில்லை.

பிறகு ஒரு சிறு நப்பாசை அவருக்குள் முளைத்தது. உடனடியாக வெளியேறிப் போய் என்ன நடக்கிறது எனதுப்பறிய துடித்தார் ப்ளோர். கும்மிருட்டில்... பதுங்கிப் பதுங்கிக் கள்ளத்தனமாய் தேடியலைவது – யார்? – என்பது இவருக்கு உடனே தெரிந்தாக வேண்டும்.

ஆனாலும் கதவைத் திறப்பதென்பது, இவர் செய்யக்கூடிய ஒரு மாபெரும் முட்டாள் தனமாய் தானிருக்கும். இப்படி இவர் செய்வார் என்பதைத் தான் வெளியிலிருப்பவனும் எதிர்பார்த்து காத்திருக்கலாம். ஏற்படுத்திய சப்தத்தை ப்ளோர் கேட்டு விட்டு 'என்ன தான் நடக்கிறது...' என்றறிய வெளியே வரலாம் என்று, நழுவும் ஒவ்வொரு நொடியையும் எண்ணிக் கொண்டு அவன் வெளியே காத்திருக்கலாம்.

ப்ளோர் நிமிர்ந்து விறைப்பாய் நின்றார் - கவனித்தபடி. இப்போது எல்லா இடத்திலும் அவரால் ஓசைகளைக் கேட்க முடிந்தது --- வெடிப்பது போல... நகர்த்துவது போல... அமானுஷ்ய முனகல்கள்... கீறல்கள்... ஓஹ்...! ஆனால் இவருடைய உண்மையான உள்ளுணர் வுக்கு இதெல்லாம் என்னவென்று தெரியும் - அத்தனையும் பயக் கற்பனைகள்! முழு அமைதி உண்டுபண்ணித் தரும் விந்தை விந்தை யான ஓசைகள்!

பிறகு திடீரென அவர் ஒன்றினைக் கேட்டார் - அது கற்பனைக்கு அப்பாற்பட்டது... உண்மை. காலடி ஓசைகள்... மிக மிக மெதுவாக, எச்சரிக்கையாக, ஓசையெழுப்பிவிடக் கூடாது என்ற தற்காப்போடு நகரும் காலடி ஓசைகள்...! ப்ளோர் கேட்டுக் கொண்டிருப்பது போல காதுகளைத் தீட்டிக் கொண்டு கவனமாய் கேட்கும் ஒருவரின் செவிகளுக்கு எவ்வித சஞ்சலமும் இன்றி விழும் அளவுக்கு.

மாடி வராண்டாவிலிருந்து மிக மிக மெதுவாக ஓடி வந்துக் கொண்டிருந்தது. (இங்கிருந்து பிலிப் மற்றும் ஆர்ம்ஸ்ட்ராங்

இருவருடைய அறைகளும் மிகத் தள்ளியிருக்கின்றன.) இக்கதவுப் பகுதியை, அக்காலடி ஓசைகள், தயக்கமாய் நின்று தாமதிக்காமலும் அல்லது யோசித்து நிதானிக்காமலும் அப்படியே கடந்துப் போயின.

காலடி ஓசை இப்படி நழுவி முடிந்ததும், ப்ளோர் தீர்மானித்து விட்டார்.

யாரது என பார்க்க முடிவு செய்தார்! அந்தக் காலடிகள், நிச்சயமாய் இவரது வாசல் பக்கத்தைக் கடந்து படியிறக்கம் வரை சென்றுள்ளன. அந்த மனிதன் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறான்?

உடலை பயில்வானாய் வளர்த்து வைத்திருக்கும் ஒரு மனிதனாலா இப்படி துரிதமாய் இயங்க முடிந்தது என வியக்கும் அளவுக்கு மின்னலென இயங்கினார் ப்ளோர். மளமளவென படுக்கைக்குத் திரும்பினார்... வத்திப்பெட்டியை பாக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டார்... இவருடைய படுக்கைக்கு அருகேயிருந்த ஒரு மேஜை மின் விளக்கினை உருவிப் பிடுங்கினார்... அதன் வயரினை அதனைச் சுற்றிக் கட்டினார்... கனமான அடி பொருந்திய மேஜை விளக்கு அது – உபயோகமான ஓர் ஆயுதம்.

கதவு வரை பாம்பாய் நழுவி, அங்கு கதவின் கைப்பிடிக்குக் கீழே போடப்பட்டிருந்த நாற்காலியை விலக்கி, மிகுந்த தற்காப்போடு பூட்டையும் பிறகு தாழ்ப்பாளையும் திறந்தார். வராந்தாவுக்குள் வந்தார். கீழிருந்த அறையில் சன்னமான ஓசைகள் இப்போது உருவாகிக் கொண்டிருந்தன. காலணி அணிந்திருந்ததால் ஓசையெழுப்பா வண்ணம் படியின் உச்சி வரை விரைந்தார் ப்ளோர்.

அப்போது, எப்படி படு துல்லியமாக அத்தனை ஓசைகளையும் அவரால் கேட்க முடிந்தது என்பதை ப்ளோரால் பிரித்தறிய முடிந்தது. காற்று முழுக்கவும் அடங்கிப் போயிருந்தது... வானமும் மந்தாரம் நீங்கி நிர்மலமாகியிருக்க வேண்டும். படிகளை ஒட்டியிருந்த கண்ணாடி ஜன்னல்களின் வழியாக நிலவொளி மெல்லிசாய் உள்ளே வழிந்துக் கொண்டிருந்தது... அது, கீழேயிருந்த அறையை ஒளியூட்டியது.

ப்ளோருக்கு --- ஒரு கணநேரக் காட்சி... வாசல் கதவு வழியாக வெளியேறிப் போய்க் கொண்டிருந்த ஓர் உருவத்தின் கணநேரக் காட்சி --- மின்னலாய் தெரிந்து மறைந்தது.

அதனைத் தொடர்ந்து மளமளவென ஓட வேண்டிய அவசர

இயக்கத்திலும்... தயங்கினார்.

இது, மறுபடியும் இவரைப் பொறிக்குள் அடைக்கும் திட்டமாக இருக்கலாம், இல்லையா! இது பொறி தான்... இவரை அப்படியே மயக்கி வீட்டை விட்டு வெளியே இழுத்துப் போய்.....

இப்படிச் செய்வதில் அந்த எதிராளி கவனிக்காமல் விட்டு விட்டதென்னவென்றால் --- துளி சேதாரமின்றி தன்னை அப்படியே முன்னாள் இன்ஸ்பெக்டரின் கைகளில் தந்து விட்டது தான்!

விருந்தாளிகள் வந்து தங்கி இருக்கும் அந்த மூன்று மாடி அறைகளில், ஒன்று இப்போது காலியாக இருக்க வேண்டும். இப்போது செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று என்னவெனில்... அது எது என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதேயாகும்!

படிகளில் துரிதமாக திரும்பி மேலேறினார் ப்ளோர்.

முதலில் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் அறை வாசலில் நின்றார் அவர். விரல் மடக்கிக் கதவினைத் தட்டினார். எவ்வித பதிலும் உள்ளிருந்து வரவில்லை.

ஓரிரு நிமிடங்கள் காத்திருந்தார். பிறகு பிலிப் லாம்பர்ட் அறை வரை போனார்.

அங்கு பதில் உடனடியாக கிடைத்தது: ''யாரது?''

''நான்... ப்ளோர். ஆர்ம்ஸ்ட்ராங் அவர் ரூமில இருக்கிற மாதிரி எனக்குத் தோணலே. ஒரே ஒரு நிமிஷம் காத்திருங்க.''

வராண்டாவின் கோடியிலிருந்த அறை பக்கமாய் போனார் இன்ஸ்பெக்டர். இங்கும் கதவினைத் தட்டினார். ''மிஸ் க்ளேதார்ன்... மிஸ் க்ளேதார்ன்...''

நடுநடுங்கிய வெரா க்ளேதார்னின் குரல் பதிலளித்தது: ''யாரது? என்ன சமாச்சாரம்?''

''விடுங்க, மிஸ் க்ளேதார்ன். ஒரு நிமிஷம் அவகாசம் தாங்க... திரும்பி வரேன்.''

ஓட்டமாய் விரைந்து லாம்பர்டின் அறைக்கு திரும்பினார் ப்ளோர். அறை வாசலுக்கு இவர் வந்து சேருவதற்குள் கதவு திறக்கப்பட்டிருந்தது. லாம்பர்ட் வாசலில் நின்றுக் கொண்டிருந்தான். தன்னுடைய இடக்கையில் ஒரு மெழுகுவர்த்தியைச் சுமந்துக் கொண்டிருந்தான் அவன். மேல் பைஜாமா, அவனது கால் சட்டைக்கு மேலே சரியாய்

இழுத்து விடப்பட்டிருக்க... அதன் பைக்குள் வலக்கையைச் செருகியிருந்தான் அவன். கறாராய் கேட்டான்: ''என்ன குழப்படி பண்ணிக்கிட்டிருக்கீங்க?''

சடசடவென விளக்கினார் ப்ளோர். பிலிப்பின் கண்கள் ஒளிர்ந்தன.

''ஆர்ம்ஸ்ட்ராங்கா...? ஸோ... அவர் தான் குயில் கூட்டுக்குள்ளே இருக்கும் காகம்...!''

அவருடன் சேர்ந்துக் கொண்டு ஆர்ம்ஸ்ட்ராங்க் அறையின் நுழை வாயில் வரை போனான். ''என்னவோ சொல்லுங்க ப்ளோர்... ஆனா எதையுமே நான் இப்ப நம்பறதா இல்லே...!''

கதவில் தொடர்ச்சியாய் குட்டினான். ''ஆர்ம்ஸ்ட்ராங் - ஆர்ம்ஸ்ட்ராங்.''

இதற்கு எந்தப் பதிலும் இல்லை.

முட்டியிட்டு அமர்ந்துக் கொண்ட பிலிப், சாவி துவாரம் வழியாக கூர்ந்து கவனித்தான். அத்துளைக்குள் சாமர்த்தியமாக தனது சுண்டு விரலை நுழைத்துப் பரிசோதித்தான் அவன். ''உள்பக்கத்தில், கதவில் சாவி இல்லை'' என்றான்.

''அப்படினா... கதவை வெளிப்புறத்திலிருந்து பூட்டி விட்டு சாவியோட கிளம்பியிருக்கார்னு அர்த்தமாகுது'' என்றார் ப்ளோர்.

பிலிப் ஒப்புக் கொண்டான். ''முன்னெச்சரிக்கை நடவடிக்கை! ம்...!'' என்ற அவன், ''அவரைப் பிடிப்போம் ப்ளோர்... இந்த தடவை, அவரைக் கையும் களவுமா பிடிச்சுடுவோம்...! அரை நொடி...'' என்றான்.

வெரா அறை நோக்கி ஓட்டமாய் ஓடினான். ''வெரா.''

''ஆங்... நான் தான்.''

''நாங்க ஆர்ம்ஸ்ட்ராங்கைப் பிடிக்கக் கிளம்பறோம். அவர் ரூமில அவர் இல்லே. எக்காரணத்தைக் கொண்டும் உங்க அறையின் கதவை மட்டும் திறந்துட வேண்டாம். புரிஞ்சுதா?''

''ஓ. புரியுது.''

''ஒரு வேளை ஆர்ம்ஸட்ராங்கே வந்து நான் கொல்லப்பட்டதா சொன்னா கூட... இல்லே ப்ளோர் செத்துட்டதா சொன்னா கூட... துளி கூட மசியாதீங்க. என்ன? நானும் ப்ளோரும் ஒண்ணா வந்து பேசினா மட்டுமே நீங்க கதவைத் திறக்கிறீங்க. ஏறிச்சா?''

வெரா பதிலளித்தார்: ''ஏறிச்சு. நான் அந்த அளவுக்கு முட்டாள் கிடையாது.''

''அப்ப சரி'' என்றான் பிலிப்.

விருட்டென்று திரும்பி ப்ளோருடன் இணைந்துக் கொண்டான் பிலிப். ''இப்போ–அவரைக் குறி வெச்சு தொடர்கிறோம். வேட்டை–துவங்கலாம்!'' என்றான்.

''நாம் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், சரியா! அவர் கிட்டே துப்பாக்கி இருக்கு, ஞாபகமிருக்கட்டும்.''

படிகளில் வழுக்கி ஓடியபடி இறங்கிக் கொண்டிருந்த பிலிப் நாக்கால் ஒலி செய்தான். ''உங்க கணிப்பு தப்பு'' என்றபடி முன்னறையை விட்டு வீட்டுக்கு வெளியே வந்திருந்த பிலிப், ''கதவை வெறுமனே மூடிய படி அப்படியே விட்டுடுங்க... திரும்ப, அது வசதியா இருக்கும்'' என்றான்.

தொடர்ந்து பேசலானான்: ''ரிவால்வர் என்கிட்டே இருக்கு!'' இப்படிச் சொல்லும்போதே தனது பைஜாமாவிலிருந்து அதனை பாதி தூக்கி வெளியே காட்டினான். ''இன்னிக்கு ராத்திரி இது மறுபடியும் என் கட்டில் டிராயர்ல திருப்பிக் கொண்டு வந்து வைக்கப் பட்டிருந்தது.''

எடுத்த அடுத்தக் காலடியைக் கீழே வைக்க மறந்து உயிரற்று நின்றார் ப்ளோர். அவரது முகத்தில் நம்பிக்கை மாறியது. பிலிப் லாம்பர்ட் இதனைக் கவனித்து விட்டான்.

''வடிகட்டின முட்டாளா இருக்காதீங்க, ப்ளோர்!'' என்றான். ''நான் ஒண்ணும் உங்களைச் சுட்டுத் தள்ளப் போறதில்லே. நம்பலைனா திரும்பிப் போய் அந்த சிறை அறைக்குள்ளே உங்களைப் போட்டுத் திணிச்சுக்குங்க. நான் ஆர்ம்ஸ்ட்ராங்கைத் தொடர்ந்துப் போறேன். ஹும்ப்... நீங்க எப்படித் தான் இன்ஸ்பெக்டரா இருந்தீங்களோ!'''

நிலவொளிக்குள் இறங்கினான் பிலிப். ப்ளோர்... கண நேர தயக்கத்திற்குப் பிறகு... தொடர்ந்தார். அப்போது நினைத்துக் கொண்டார்: 'கேட்டான் பார் ஒரு கேள்வி! இதெல்லாம் எனக்கு... ... ...'

ஆமாம்... இதெல்லாம் இவருக்கு ஒரு தூசு தான். துப்பாக்கியும் கையுமாய் உலவும் எத்தனையோ கொலைக் குற்றவாளிகளைத்

தன்னந்தனியாய் சந்தித்தவர் தானே இவர். எதில் இவரிடம் குறையிருக்கிறதோ இல்லையோ... உற்சாகத்தில் மட்டும் ப்ளோரிடம் என்றுமே குறைவு இருந்ததில்லை. இவரிடம் ஓர் ஆபத்தைக் காட்டி விரல் நீட்டுங்கள்! தனியாய் பாய்ந்து ஓடி அதனைச் சுக்கு நூறாக்கி விட்டுத் தான் திரும்புவார். கண்ணுக்கு எதிரே நிற்கும் எந்த யுத்த ஆபத்தும் இவரைக் கலங்கடித்ததில்லை... கண்களுக்கு அகப்படாத விளக்கவொண்ணா விசித்திரங்களும், அமானுஷ்யம் எனும் பூச்சு கொண்ட விந்தைகளும் மட்டும் தான் இந்த முன்னாள் இன்ஸ்பெக்டரை ஏமாற்ற முடியும்.

VI

என்ன நடக்கப் போகிறதோ என்ற கேள்விக்கான விடை அறிய காத்திருந்த வெரா, எழுந்து, உடையைத் திருத்திக் கொண்டார்.

சில முறை திரும்பித் திரும்பிக் கதவினைப் பார்த்தார். அது நல்ல கனமான இரும்பு போன்ற மரக் கதவு. அது தாழிடப்பட்டு பூட்டியுமிருந்தது... கூடுதலாக அதன் கைப்பிடிக்குக் கீழே நல்ல கனமான நாற்காலியொன்றும் இழுத்துப் போடப்பட்டிருந்தது.

வேகமாய் தள்ளியோ நெம்பியோ இதனை உடைத்துத் திறக்க முடியாது. நிச்சயமாய் டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கால் இயலாது. உடலால் அத்தனை தெம்பு கொண்டவரல்ல அவர்.

அப்படி ஒரு வேளை ஆர்ம்ஸ்ட்ராங் குறி வைத்திருக்கும் அடுத்த ஆள் வெரா தான் எனும் பட்சத்தில், நயவஞ்சகமான முறையில் வந்து தான் கொல்ல முனைவாரே ஒழிய, உடல் வலிமையால் அல்ல. இப்படி நினைத்தவுடனேயே, சூழ்ச்சி நிறைந்த வழிகள் என்னனென்ன இருக்கின்றன என யோசிக்கலானார் வெரா.

பிலிப் ஆலோசித்தது போலவே, இரு ஆடவரில் ஒருவர் இறந்துப் போய் விட்டதாய் கதவருகில் வந்து ஒப்பாரி வைக்கலாம்... அல்லது, உயிர் போகுமளவுக்குத் தனக்குக் காயம் ஏற்பட்டு துடிதுடிப்பதாய்

மாடியேறி வந்து புலம்பலாம்... கதவருகே மூச்சு வாங்க தவிப்பது போல பாசாங்கு செய்து கதறலாம்... இவை தவிர இன்னும் சில சாத்தியக் கூறுகளும் வெராவுக்குத் தோன்றின.

வீடே பற்றி எரிகிறது என கத்தி அவசரப்படுத்தலாம். ஏன், உண்மையாகவே வீட்டின் கூரைக்குத் தீ வைத்து விட்டு, தப்பிக்குமாறு சொல்லலாம்... ஆமாம், இப்படி செய்யக்கூடியவர் தான் அவர். துணையாக இருந்த இரு ஆடவர்களையும் எப்படியோ வெளியேற்றி யாகி விட்டது... திட்டத்தின் அடுத்த கட்டமாக ஏற்கெனவே பெட்ரோல் கொட்டி தயாராய் வைத்திருக்கும் வீட்டின் கூரைக்கு தீ வைக்க எத்தனை நேரமாகப் போகின்றது?! அப்படியேதாவது நடந்து விட்டால், முட்டாள் போல் இங்கேயேவா உட்கார்ந்திருப்பது?

எழுந்துக் கொண்ட வெரா, அறையைக் குறுக்காக கடந்து ஜன்னலோரம் போனார். பரவாயில்லை. ஒரு குதி குதித்து வெளியே விழுந்து விட்டால் போதும்... தப்பித்து விடலாம். கொஞ்சம் பள்ளம் தான்... ஆனால் நல்ல புல் தரை இருக்கிறதே!

திரும்ப வந்து உட்கார்ந்துக் கொண்டவர், அவருடைய கையேட்டினை எடுத்து, சரளமாய் ஓடிய கையெழுத்தில் எழுத ஆரம்பித்தார். நேரத்தை ஓட்டியாக வேண்டுமே.

அப்போது, திடீரென இறுகி, கூர்மையாய் கவனிக்கலானார். ஏதோ ஓர் ஓசையைக் கேட்டார் வெரா. ஏதோ ஒரு கண்ணாடியைப் போட்டு உடைப்பது போல இருந்ததாய் நினைத்துக் கொண்டார் அவர். அது, கீழே ஏதோ ஒரு பகுதியிலிருந்து தான் வந்தது.

இன்னும் கூர்மையாகி கவனித்துப் பார்த்தார். ஆனால் மறுபடியும் அது போல ஓர் ஓசையைக் கேட்க முடியவில்லை.

ஆனாலும் வெராவுக்குக் கேட்டது --- அல்லது கேட்டது போல இருந்தது...?! மிக மிக சன்னமாய் நகரும் காலடிகள், படிகளை அழுத்தி இறங்கும் காலடிச் சத்தங்கள், அப்போதெல்லாம் துணி உரசும் ஓசை --- ஆனால் உண்மையாய் அப்படி ஏதும் ஓசை எழவில்லை என்று வெராவுக்கும் தெரியும். ஆனால் கேட்கிறது. ப்ளோருக்கு நேர்ந்தது போலவே! முழு அமைதிக்குள் எழும் விதவிதமான ஓசைகள் இவை! கற்பனை திறன் அதிகம் படைத்து... அப்படிப்பட்ட கற்பனைகளுக்குள் தங்களையே இழந்து விடும் மனோபாவம் கொண்டோருக்கு

இப்படி அமானுஷ்யங்கள் நிகழ்வது சாத்தியம்!

கொஞ்ச நேரத்திலேயே, முன்பு போல் மெல்லிசாய் ஒரு முறை கேட்டு கற்பனையைத் தட்டியெழுப்பி மூளையைத் திருடிய ஓசை போலல்லாது, துல்லியமான ஓசை ஒன்று தொடர்ந்து கேட்க ஆரம்பித்தது. யாரோ கீழ் தளத்தில் நடப்பது போல் - பேசிக் கொள்வது போல். பிறகு, சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு... யாரோ படியேறி மேலே வரும் காலடி சப்தங்களும், திறந்து மூடப்படும் அறைக்கதவுகளின் ஒலிகளும், மேல்பக்கத்து மொட்டை மாடி அறை நோக்கி நடக்கும் ஓசைகளும், அங்கிருந்து கிளம்பிய சலசலப்புகளும் வந்தன.

இறுதியாக அக்காலடிகள் வராந்தா பக்கமாய் நடந்து நெருங்கின. லாம்பர்டின் குரல் வந்தது:

''வெரா. நீங்க நல்லாயிருக்கீங்க இல்லே?''

''ஆமாம். என்ன நடந்தது?''

ப்ளோரின் குரல் பதிலளித்தது: ''நாங்க உள்ளே வர அனுமதி தருவீங்களா?''

வெரா கதவு வரை வந்தார். நாற்காலியை நகர்த்திப் பூட்டினைத் திறந்து தாழ்ப்பாளை நகர்த்தினார். கதவு திறக்கப்பட்டது. இரு ஆண்களுக்கும் மூச்சு இறைத்துக் கொண்டிருந்தது. அவர்களது பாதங்களும், முழுக்கால் சட்டையின் கால் முட்டிக்குக் கீழான பகுதிகளும் தண்ணீரால் நனைந்துப் போயிருந்தன.

வெரா மறுபடியும் கேட்டார்: ''என்ன நடந்தது?''

லாம்பர்ட் சொன்னான்: ''ஆர்ம்ஸ்ட்ராங் - மறைஞ்சுட்டார்...''

VII

தறினார் வெரா: ''என்ன?''

லாம்பர்ட் சொன்னான்: ''கழுவப்பட்டு விட்டார். சுத்தமா. தீவை விட்டே.''

ப்ளோர் வலு சேர்த்தார்: ''கழுவப்பட்டு விட்டார் - ஆமாம், அது

தான் சரியான வார்த்தை! ஏதோ மாய்மாலம் பண்ணி கண் கட்டி விட்ட மாதிரி!''

பொறுமையிழந்த வெரா சொன்னார்: ''முட்டாள் பேச்சு! அவர் எங்கேயோ ஒளிஞ்சுக்கிட்டு இருக்கார்.''

ப்ளோர் மறுத்தார்: ''கிடையாது. அவர் எங்கும் ஒளியலே! இந்தத் தீவுல ஒளியறதுக்கு ஓரிடமும் கிடையாது. திறந்த உள்ளங்கை போன்றது இது. பட்டப்பகல் மாதிரி வெளியில நிலா வெளிச்சம்! ஆனா அவரை எங்கேயும் காணலே!''

''அவர் திரும்பி வீட்டுக்கே வந்துட்டாரோ என்னவோ'' என்றார் வெரா.

''நாங்களும் அப்படி நினைச்சோம்'' என்றார் ப்ளோர். ''அதனால வீட்டையும் தலைகீழாக்கித் தேடிட்டோம். நாங்க அல்லாடின சப்தம் உங்களுக்கும் கேட்டிருக்கணுமே. அவர் இங்கே இல்லே, புரிஞ்சுக்கோங்க. அவர் போயிட்டாரு... மறைஞ்சுட்டார்... முழுக்கக் கழுவப்பட்டு விட்டார்... கண்கட்டு வித்தைல வர மாதிரி, கண்ணுக் கெதிராவே விறுவிறுனு கரைஞ்சுட்டார்...''

தாள முடியாதவராய் வெரா சொன்னார்: ''இதை நான் நம்ப மாட்டேன்.''

லாம்பர்ட் சொன்னான்: ''இது தான் உண்மை – டியர்.''

சற்று தாமதித்து விட்டு சொன்னான்:

''இதுல இன்னும் ஒரு சின்ன உண்மையும் இருக்கு. சமையக்கட்டுல இருக்கிற ஒரு கண்ணாடி ஜன்னல் அடிச்சு நொறுக்கப்பட்டிருக்கு – மேலும், சாப்பாட்டு மேஜையில் மூணே மூணு சிப்பாய் பொம்மைகள் தான் பாக்கியிருக்கு.''

அத்தியாயம் 15

I

மூன்று பேரும் சமையல்கட்டில் அமர்ந்து காலை சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

வெளியே, சூரியன் தகதகத்துக் கொண்டிருந்தது. அருமையான நாளாயிற்று அது. புயல் - ஒரு கடந்த காலத்து நிகழ்வாகிப் போனது!

வானிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக, தீவுக் கைதிகளின் மனநிலையிலும் நல்ல முன்னேற்றம் உண்டாகியிருந்தது.

பாழும் பயப்பள்ளத்தாக்கிலிருந்து தப்பித்து வெளியேறும் உணர்வினை மூவருமே அனுபவித்தனர். ஆபத்து என்று ஒன்றிருந்தது, ஆமாம். வெளியே உஸ்உஸ்ஸென்று புயல் பேய்க்காற்று வீசிய நேற்று முழுவதும்... கனமான கம்பளி போல இவர்களைப் போர்த்தி முடக்கிப் போட்டிருந்த பய மனோநிலை! இன்று அது அடியோடு காணாமல் போயிருந்தது.

லாம்பர்ட் பேசினான்: ''இங்கிருந்து நிலப்பகுதிக்கு சமிக்ஞைகள் தரும் முயற்சியை இன்னிக்கு நாம் செய்து பார்க்கலாம். ஒரு கண்ணாடியைப் பிரதிபலித்து முயற்சிக்கலாம். அங்கு மலை முகட்டில் உலாவிக் கொண்டிருக்கும் ஏதாவது வீணாய் போனப் பயல், இதைப் பார்த்து உதவி கேட்கிறோம் அப்படினு புரிஞ்சுக்கலாம். அப்படியும் எந்த உதவியும் வரலேனா... தீவின் உச்சியில போய் தீ மூட்டிக் காட்டலாம். அதுக்கு சுள்ளி நிறையா தேவைப்படும். தேடணும். ஆனா, அதை கூட, நாம ஏதோ தீ மூட்டிக் கொண்டாடறோம்னு அவங்க நினைக்கும் வாய்ப்புகள் இருக்கு!''

வெரா சொன்னார்: ''ஒருத்தருக்குக் கூடவா நாம ஆபத்துல இருக்கோம்னு புரியாமப் போயிடும். நிச்சயமா நம்மைக் காப்பாற்றிக் கூட்டிப் போக வருவாங்க. இன்னிக்கு சாயங்காலத்துக்குள்ளே வந்துடுவாங்க.''

லாம்பர்ட் சொன்னான்: ''வானிலை முன்னேறியிருக்கலாம்... ஆனா கடல் இன்னும் அமைதியாகலே. அலை இன்னும்

அடங்கினபாடில்லே... பேயா அடிக்குது! நாளை வரைக்கும் நம்ம தீவுக்கு ஒரு படகு வர முடியுமா என்பது... சந்தேகம் தான்!''

''இதுக்குள்ளே மேலும் ஓர் இரவா...?!'' – அலறினார் வெரா.

வேறு வழி என்பது போல தோள்களைக் குலுக்கினான் பிலிப். ''அதையும் சந்தித்து விடுவோம்! இருபத்திநாலு மணி நேரத்துல எல்லாம் சரியாயிடும். அது வரை நாம இருந்தா...!''

தொண்டையைச் செருமிக் கொண்ட ப்ளோர், ''நாம இப்ப ஓர் உருப்படியான முடிவுக்கு வருவோம்'' என்றார். ''ஆர்ம்ஸ்ட்ராங்குக்கு நேர்ந்தது – என்ன?''

''இதுக்கு நமக்கு ஒரு சாட்சியம் இருக்கு'' என்றான் பிலிப். ''சாப்பாட்டு மேஜையில் மூணே மூணு சிப்பாய் பொம்மைங்க தானிருக்கு. இது – ஆர்ம்ஸ்ட்ராங் அவர் விதி வழி போயாச்சு என்பதைத் தான் குறிக்குது.''

''அப்படினா நீங்க இன்னும் அவரது பிரேதத்தை ஏன் கண்டுபிடிக்கலே?'' என்றார் வெரா.

''அதானே'' என்றார் ப்ளோர்.

மறுப்பாய் தலையசைத்தான் பிலிப் லாம்பர்ட். ''புரியாத புதிர் அது – விளக்கமே கிடைக்கலே.''

''ஒரு வேளை, அது, கடலுக்குள்ளே வீசப்பட்டிருக்கலாம்'' என சந்தேகமாய் சொன்னார் ப்ளோர்.

கறாராய் பேச ஆரம்பித்தான் பிலிப்: ''யாராலே? என்னாலே? உங்களாலே? அவர் வீட்டு வாசலைத் தாண்டி வெளியே போவதைப் பார்த்ததே நீங்க தான். திரும்பி வந்து நான் என் அறையில இருப்பதை ஊர்ஜிதப்படுத்துக்கிட்டீங்க. ரெண்டு பேரும் வெளியே போறோம்... ஒண்ணாவே தேடறோம். இது தான் நிலைமை. அவரைக் கொன்னு தீவுல தூக்கிப் போட எனக்கு தனிமை நேரம் எப்படிய்யா கிடைச்சிருக்கும்?''

இதற்கு ''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்ற ப்ளோர் ''ஆனா எனக்கு ஒண்ணே ஒண்ணு மட்டும் தெரியும்'' என்றார்.

லாம்பர்ட் கோபம் இன்னும் கூட ''என்னது அது?'' என்றான்.

''அந்தத் துப்பாக்கி'' என்றார் ப்ளோர். ''அது உங்க துப்பாக்கி. அது உங்க கஸ்டடியில தான் இப்ப இருக்கு. இத்தனை நாள் வரைக்கும் அது

உங்க கட்டுப்பாட்டில இல்லேனு நிரூபிக்க --- ஒண்ணும் கிடையாதே.''

''ஏய் பைத்தியக்கார ப்ளோர். நம்ம உடம்புத் தோல் வரை நாம செக் பண்ணப்பட்டாச்சு. புத்தியில்லே...?!''

''ஆமாம். ஆனா அது நடக்கிறதுக்கு ரொம்ப முன்னாடியே நீங்க அதைப் பதுக்கியிருக்கலாம், இல்லையா? பிறகு பூனை மாதிரி அதை திரும்பக் கொண்டு போய், போட்டுத் தள்ளியிருக்கலாம்.''

''சுத்த கழுதையய்யா நீ. அது எப்படியோ திருப்பிக் கொண்டு வந்து என் கட்டில்ல போடப்பட்டிருக்குனு நான் சத்தியம் செஞ்சு தொண்டைக் கிழிய கத்தறேனே... உறைக்கலே! அதை நான் என் கட்டில் டிராயர்ல பார்த்த போது அடைஞ்ச மாதிரியான ஓர் ஆச்சரியம்... என் வாழ்க்கையில் வேற ஒண்ணு கிடையாது.''

ப்ளோர் சொன்னார்: ''எங்களை இப்படி ஒரு கதையை நம்ப சொல்றீங்க! அது ஆர்ம்ஸ்ட்ராங்கோ... இல்லே வேறு யாரோ... எதுக்காக திருப்பிக் கொண்டு வந்து பவ்யமா அதை திருப்பி வைக்கணும்?''

நம்பிக்கையிழந்து தோள்களைக் குலுக்கினான் பிலிப். ''இதுக்குப் பதில் சொல்ல எனக்குத் துளி துருப்பும் இல்லே. கோமாளித்தனமா படுது. வேறென்ன சொல்ல. இப்படி செஞ்சதுல கொஞ்சமும் அர்த்தம் தெரியலே.''

''ஆமா... இதுல அர்த்தமே இல்லை தான்'' என பிலிப்பின் கருத்தை ஏற்றுக் கொள்வது போல சொன்ன ப்ளோர், ''நம்பும்படியான சிறந்த ஒரு கதையை நீங்க யோசிச்சிருக்கலாம்'' என்றார்.

''தூ...! இன்னும் நம்பலே நீங்க, இல்லே?''

''நீங்க சொல்றது... ஒரு கதையைத் தவிர, உண்மையா எனக்குப் படலே.''

''உங்களுக்குப் படாது.''

இந்தப் பதிலில் எரிச்சலான ப்ளோர், ''லுக், பிலிப்'' என்றார் கூர்மையாய். ''நீங்க சொல்றது மாதிரியே ஓர் உண்மையான நபரா நீங்க இருந்தா--- --- ---''

இடைபுகுந்து பிலிப் சொன்னான்: ''எப்பவாவது நான் உண்மை யான சத்திய மனிதன்னு என்னைப் பிரகடனம் பண்ணியிருக்கேனா?

சொல்லப் போனா... நான் அப்படிப்பட்டவன் கிடையாதுனு தான் ஒத்துக்கிட்டிருக்கேன். ஓகே...?!''

நிறுத்தாமல் தொடர்ந்தார் ப்ளோர்: ''சரி... இந்த விஷயத்துல நீங்க உண்மையைத் தான் பேசறீங்கன்னா... மேற்கொண்டு செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு தான் இருக்கு. அந்தத் துப்பாக்கி உங்க கிட்டே இருக்கிற வரைக்கும் நானும் வெராவும் உங்க கருணையில இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகுது. ஒரே ஒரு நியாயமான வழி... அந்தத் துப்பாக்கியைக் கொண்டு போய் ஏனைய மருந்து களோடு சேர்த்து வெச்சு... பூட்டுவது தான்! பழைய ஏற்பாட்டின் படியே, ஒரு சாவி உங்ககிட்டேயும் இன்னொன்னு என் கிட்டேயும் தொடரும்.''

பிலிப் லாம்பர்ட் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். உருளை உருளையாய் புகையைக் கக்கும் போது பேசினான்: ''கழுதைதான்யா நீ.''

''அப்ப இதுக்கு நீங்க ஒத்துக்க மாட்டீங்க?''

''மாட்டேன். என்னால முடியாது. இந்தத் துப்பாக்கி என்னுது. என்னைக் காப்பாத்திக்க இது தேவையாயிருக்கு. இதை நான் தான் வெச்சுக்கப் போறேன்.''

''இது தான் உங்க தீர்மானம்னா, நாம ஒரு முடிவுக்கு வர வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.''

''நான் தான் அந்த U N Owen எனும் முடிவு... இல்லே? உங்களால என்ன மாதிரி முடிவுக்கெல்லாம் வர முடியுமோ வந்துக்குங்க. ஆனா உங்களுக்கு ஒரு கேள்வி... நான் தான் 'அவன்' என்கிற பட்சத்துல, நேத்து ராத்திரியே உங்களை நான் ஏன் போட்டுத் தள்ளியிருக்கக் கூடாது? ஒரு தடவை இல்லே... இருபது தடவை உங்க மர மண்டையை உடைச்சிருக்கலாமே...?!''

ப்ளோர் மறுப்பாய் தலையசைத்தார். ''எனக்குத் தெரியலே'' என்றார். ''அதுக்கு ஏதாவது உங்களுக்கு ஒரு காரணம் இருந்திருக்கும்.''

இது வரை இருவரது உரையாடலிலும் பங்கெடுத்துக் கொள்ளாம லிருந்த வெரா, இப்போது துணுக்குற்றவராய் சொன்னார்: ''நல்ல சரியான முட்டாள்களுக்கான முழு உதாரணமா ரெண்டு பேரும் நடந்துக்கிட்டு இருக்கீங்க.''

லாம்பர்ட் வெராவைக் கண்ணகலப் பார்த்தான்: ''ஏய் ஏய்... யாரை முட்டாள்ங்கிறே?''

''பின்னே? நீங்க அந்த நர்ஸரி பாட்டை மறந்துட்டீங்க. அதுலயே குறிப்பு இருப்பது உங்களுக்குத் தெரியலே?''

அர்த்த புஷ்டியோடு அந்த வரிகளை மீண்டும் பாடினார்:

நாலு சின்ன சிப்பாய் பையன்கள், கடலுக்குள் ஆட சென்றனர்;
குட்டி மீனொன்று ஒருவனை விழுங்கி விட, மிஞ்சினர் மூவர்.

தொடர்ந்தார்: ''**குட்டி மீனொன்று ஒருவனை விழுங்கி விட...** இது தான் அந்தக் குறிப்பு. ஆக, குட்டி மீன் ஒருவனை விழுங்கியாக வேண்டும். அந்த மீன் – ஆர்ம்ஸ்ட்ராங். ஆர்ம்ஸ்ட்ராங் இன்னும் சாகலே. ஓடும் போது ஒரு சிப்பாய் பொம்மையைக் கையோட தூக்கிக்கிட்டுப் போயிருப்பது – அவர் தான். அவர் காலினு உங்களை நம்ப வைக்க. ஆர்ம்ஸ்ட்ராங் இன்னும் இந்தத் தீவுல தான் இருக்கார். அவர்... காணாம போயிருக்கும் குட்டி மீன் - விழுங்கக் காத்திருக்கும் குட்டி மீன்.''

லாம்பர்ட் மறுபடியும் உட்கார்ந்துக் கொண்டான். ''ஆளாளுக்கு பயமுறுத்துறீங்கப்பா'' என்றான். ''ஆனாலும்... நீங்க சொல்றது... நிஜமா கூட இருக்கலாம்...''

ப்ளோர், ''ஆமாம்'' என ஆமோதித்து விட்டு, ''அப்படினா அவர் எங்கே இருக்கார்?'' என கேட்டார். ''இந்த இடம் முழுக்கத் தேடியாச்சு. உள்ளே. வெளியே.''

வெரா குறை கூறும் தொனியில் சொன்னார்: ''நாம எல்லாரும் ஒண்ணு சேர்ந்து துப்பாக்கியைத் தேடினோம். உள்ளே. வெளியே. எல்லா இடமும். உண்டா இல்லையா? ஆனா, அது எல்லா நேரமும், எங்கேயோ இருந்திருக்கு.''

லாம்பர்ட் முணுமுணுத்தான்: ''ஒரு மனுஷனுக்கும் துப்பாக்கிக்கும் உருவ வேறுபாடு ரொம்ப அதிகம், டியர்.''

''அதான் சொல்லிட்டேனே... நீங்க என்ன வேணும்னாலும் சொல்லிக்கோங்க – எனக்குக் கவலையேயில்லே – நான் சொல்றது சரி தான் - நம்பிக்கையிருக்கு'' என்ற வெரா கதறினார்: ''அவர் ஒரு

பைத்தியம்னு உங்களுக்குத் தெரியலே! ஆமாம், பைத்தியம்! அவர் மட்டுமா! எல்லாமே! ஜட்ஜ் உடையில ஜஸ்டிஸை அலங்கரிச்சு உட்கார வெச்சது... சுள்ளி உடைச்சுக்கிட்டு இருந்த ரோஜர்ஸைக் கொன்னது... எழுந்திருக்கவே முடியாத படி ஓவரா மருந்து தந்து அவரோட மனைவியைப் பரலோகம் அனுப்பினது... மிஸ் ப்ரெண்ட் செத்த போது ஒரு தேனீயைத் தயார் செஞ்சு அலைய விட்டது! மன நோய் முற்றிய பைத்தியக்கார குழந்தை ஒண்ணு விளையாடும் விபரீத விளையாட்டு போல இருக்கு – எல்லாமே! கூடுதலா, நடக்கும் எல்லாம் அந்தக் கவிதையோட ஒட்டியாக வேண்டும் - கவனமிருக்கட்டும்!''

இப்போது, ''ஆமாம் வெரா'' என்ற ப்ளோர், ''நீங்க சொல்றது தான் சரி... புரியுது'' என்றார். சில கணங்கள் சிந்தித்தார். ''ஆனா கவிதையின் அடுத்த வரியை கவனியுங்க... இங்கே எந்த மிருகக்காட்சி சாலையும் கிடையாதே. இந்த வரிகளை அவர் எப்படி நிரூபிப்பார்?''

வெராவின் அலறல் 'அட இயலாதவர்களே...' எனும் கேலி தொனியில் உயர்ந்து ஒலித்தது: ''புரியலே? இந்த நிரூபிக்கிறதுல எந்தக் கஷ்டமும் இல்லைனு ரெண்டு பேருக்குமா புரியலே? நாம தான் மிருகக்காட்சி சாலை மிருகங்கள்...! நேற்று ராத்திரி நினைவிருக்கா... நம்மில் ஒருத்தர் கூட மனுஷனா இல்லே... மிருகம்... மிருகமா தான் இருந்தோம்...! நாம தான் மிருகக்காட்சி சாலை மிருகங்கள்...!''

II

மலையுச்சிகளின் மேலே இருந்தபடியே காலைப் பொழுதினைக் கழித்து முடித்தனர். அப்போது, அடிக்கடி, கையிலிருந்த சற்றே பெரிய கண்ணாடி மூலம் கடற்கரை மக்கட்பகுதிக்கு பிரதிபலிப்பினைக் காட்டி உதவி பெற முயன்றனர்.

இவர்களை யாராவது கவனித்தது போன்ற ஒரு குறிப்பே கிடைக்க வில்லை. பதிலுக்கு ஒரு சிறு சமிக்ஞையும் அப்பக்கத்திலிருந்து வரவில்லை. பகற்பொழுது இனிமையாக இருந்தது – கடலலைகளின்

சற்றே கூடுதலான எழுச்சியோடு. படகுகளின் வரவு, எங்கும் தென்படவில்லை.

தோல்வியில் போய் முடிந்த மற்றொரு தேடுதல் வேட்டையை மூவரும் மேற்கொண்டனர். காணாமல் போய் விட்ட மருத்துவர் பற்றிய விவரம் – கிஞ்சித்தும் காணோம்.

இவர்கள் நின்றுக் கொண்ட இடத்திலிருந்த படியே வீட்டினைப் பார்த்தார் வெரா.

மூச்சுக் காற்றில் ஒரு சிறு துடிப்பு இருக்க, சொன்னார்: ''இந்தத் திறந்த வெளியில இருக்கும் போது... உள்ளுக்குள்ளே ரொம்பப் பாதுகாப்பா இருக்கு. மறுபடியும் நாம அந்த வீட்டுக்குள்ளே மட்டும் போக வேண்டாம்... ப்ளீஸ்.''

லாம்பர்ட் சொன்னான்: ''இதுவும் நல்ல ஐடியாவா தானிருக்கு. நாம முன் கூட்டியே பார்த்து ஜாக்கிரதையாகி உஷாராவதற்குள்ளே... நம்மை யாரும் இங்கே திடுதிப்புனு நெருங்கிட முடியாது. அந்த வகையில பாதுகாப்பு தான்.''

''நாம இங்கேயே தங்கிடலாம்'' என்றார் வெரா.

''ராத்திரி பொழுதைக் கழிச்சாகணுமே'' என்றார் ப்ளோர். ''அப்போ நாம வீட்டுக்குத் திரும்பிப் போய் தானே ஆகணும்.''

வெரா நடுநடுங்கினார். ''என்னால இனி தாங்காது. இன்னொரு ராத்திரியை என்னால அங்கே கழிக்க முடியாது!''

''ரூமுக்குள்ளே பூட்டெல்லாம் போட்டுக்கிட்டு – நீங்க செம பாதுகாப்பா தான் இருப்பீங்க, வெரா'' என்றான் பிலிப்.

இப்போது வெரா ''ஆமாம்... இருந்தாலும்...'' என முணுமுணுத் தார்.

கைகளை நீட்டி வளைத்து நெட்டி முறித்த வெரா, ''இப்போ எவ்ளோ நல்ல இருக்கு இங்கே! மறுபடியும் சூரிய ஸ்பரிஸம்!'' என்றார். கூடவே பின்வருமாறும் நினைத்துக் கொண்டார்:

'என்ன வினோதம்... இந்த இக்கட்டிலும்... எனக்குள் சந்தோஷம். கழுத்துவரை நெருக்கும் உயிராபத்தில் நான் இருப்பது தெரிந் திருந்தும்... சந்தோஷம். ஏனென்றால்... இப்போது பயமில்லை... சூரிய வெளிச்சத்தில் பயமிருப்பதில்லை... இப்போது எதுவும் பாதிப்பது கிடையாது... எனக்குள் விறுவிறுவென சக்தி கூடுகிறது...

நான் சாகக் கூடியவள் அல்ல...'

கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ப்ளோர், ''மணி இப்ப ரெண்டு'' என்றார். ''லஞ்ச்?''

''நான் திரும்பி அந்த வீட்டுக்கு வரவே மாட்டேன்'' என்றார் வெரா வீண் பிடிவாதமாய். ''நான் இங்கேயே தான் இருக்கப் போறேன் - திறந்த வெளியிலே.''

''ஓ, கிளம்புங்க மிஸ் க்ளேதார்ன். சாப்பிடலேனா வலு குறைஞ் சுடும். பட்டினி கூடாது'' என்றார் முன்னாள் இன்ஸ்பெக்டர்.

''அந்த டின்னுக்குள்ளே அடைச்சுக் கிடக்கும் மாமிசத்தைப் பார்த்தாலே குமட்டுது எனக்கு! எனக்கு ஒண்ணும் வேண்டாம். பசியில்லே. டயட்'ல இருக்கிறவங்க ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு வாழலே? அது போல நினைச்சுக்கிறேன்!''

''எனக்கு உணவு நேரத்துக்கு வந்தாகணும்'' என்றார் ப்ளோர். ''உங்க வசதியெப்படி, லாம்பர்ட்?''

''எனக்கும் அந்த டின் சாப்பாடு புளிச்சுப் போயிடுச்சு. பசியிருக்கு. ஆனா டின்னுகளை நினைச்சா... போயிடுது! நான் இங்கேயே வெரா கூட இருந்துடறேன்.''

ப்ளோரிடம் தயக்கம் விளைந்தது. வெரா, ''எனக்கு ஒண்ணும் ஆகாது'' என்றார். ''நீங்க அப்படித் திரும்பினதும் இவர் என்னை இங்கே சுட்டுடுவார்னு எனக்குத் தோணலே! அதனால் தானே – தயக்கம்...?!''

''நீங்களே சொன்னா எனக்கு சரி தான்'' என்றார் ப்ளோர். ''ஆனா, நாம பிரியவே கூடாதுனு ஒத்துக்கிட்டு இருக்கோம்...!''

பிலிப் பேசினான்: ''அந்த சிங்கத்துக் குகைக்குள்ளே போகணும்னு விரும்பறது நீங்க தான். வேணும்னா நான் உங்க கூட வரேன்.''

''வேணாம். நீங்க தேவையில்லே'' என்றார் ப்ளோர். ''நீங்க இங்கேயே இருக்கலாம்.''

பிலிப் சிரித்து விட்டான். ''ஆக, உங்களுக்கு இன்னும் என் மேல சந்தேகமிருக்கு, ம்? ஏய்... நான் நினைச்சா உங்க ரெண்டு பேரையுமே இங்கே... இதே கணத்துல சுட்டு வீழ்த்திடலாம். இது உங்க மண்டைக்கு உறைக்கலியா?''

''அது உறைக்குது. ஆனா... அப்படிச் செய்யறது, திட்டமிட்டபடி

அமையாது. ஒரு தடவை, ஒருத்தர் தான்... அதுவும், ஒரு குறிப்பிட்ட வகையில தான் செய்யப்படணும் - அந்தப் பாட்டு படி...!''

''அட...'' என்ற பிலிப், ''கொலைகளின் மூலம் பற்றி உங்களுக்கு நிறைய தெரிஞ்சிருக்கும் போல!'' என்று குறிப்பிட்டான் கிண்டலாய்.

''ஆமாமாம்'' என்று சிந்தனையாய் சொன்ன ப்ளோர், ''அதனால தான் சொல்றேன் - அந்த வீட்டுக்குத் தனியா போவது... கொஞ்சம் ஆபத்து தான்'' என்றார்.

பிலிப் சொன்னான்: ''அப்படினா – என்னுடைய துப்பாக்கியை வேணும்னா தரட்டுமா? ஆ, ஆ, ஆ, ஆசையைப் பார்...! வேணுமா?! முடியாது! இவ்வளவு சுலபமா ரிவால்வரை என்கிட்டேயிருந்து பிரிச்சுட முடியாது, இன்ஸ்பெக்டர்!''

ப்ளோர் தனது தோளினைக் குலுக்கி விடை பெற்றுக் கொண்டு வளைந்து சுழிந்து சென்று மறைந்த பாதையில் கிளம்பிப் போனார்.

லாம்பர்ட் அமைதியாய் குறிப்பிட்டான்: ''இது மிருகக்காட்சி சாலைகளில் விலங்குகளுக்கு உணவு போடும் நேரம். சரியான நேரத்துல சாப்பிடறதுல மிருகங்கள் கறாரானவை!''

பய ஆர்வமாய் வெரா கேட்டார்: ''அவர் பண்றது என்ன... அத்தனை ஆபத்தானதா?''

''நீங்க அர்த்தப்படுத்தற வகையில – கிடையாது. எனக்கு அப்படித் தோணலே. ஆர்ம்ஸ்ட்ராங் கையில எவ்வித ஆயுதமும் கிடையாது... அவரைப் போல மூணு மடங்கு உடல் வலிமை கொண்டவர் ப்ளோர். தற்காப்புல, முன்னாள் இன்ஸ்பெக்டர் ஒரு புலி. தவிர ஆர்ம்ஸ்ட்ராங் வீட்டுக்குள்ளே இருப்பார் என்பது – சாத்தியமே அற்ற ஒன்று! அவர் அங்கே இல்லே – அது எனக்குத் தெரியும்.''

''அப்போ – நடந்த இந்த அத்தனைக்கும் - நம்ம கையில இருக்கிற வேற முடிவு?''

பிலிப் நிதானமாய் சொன்னான்: ''ப்ளோர்.''

''ஓ...ஓ... அவர் தான்னு... நீங்க... நிஜமா நம்பறீங்களா...?''

''த பாருங்க வெரா. ப்ளோர் விட்ட சரட்டுக் கதையை நீங்களும் கேட்டீங்க. அது உண்மைனு நீங்க ஒப்புக் கொள்கிற பட்சத்துல, எனக்கும் ஆர்ம்ஸ்ட்ராங் காணாம போனதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லேனு ஆகுது. வாசல் வழியா யாரோ போனதைப் பார்த்ததா அவர்

விட்ட கதை – என்னை விடுவிக்குது. ஆனா, அது, அவரை விடுவிக்கலே. ஏதோ காலடி ஓசைகளைக் கேட்டதாகவும் - ஒரு மனுஷன் கதவு வழியா வெளியேறினதாகவும் - இவையத்தனையையும் இவர் பார்த்ததாகவும் - இதெல்லாத்துக்கும் இருக்கிற ஒரே சாட்சி – ப்ளோரின் வார்த்தைகளே தான்! இது அத்தனையும் ஒரு முழு பெரிய சைஸ் பொய்யாகூட இருக்கலாமே! நடந்த இந்த அத்தனைக்கும் ஒரு சில மணி நேரங்கள் முன்னாடியே இவர் டாக்டருடைய உயிரைப் பறிச்சிருந்தா...?''

''எப்படி?'' – நடுக்கமாய் கேட்டார் வெரா.

லாம்ப்ர்ட் தன்னுடைய தோள்களைக் குலுக்கிக் காட்டினான்: ''அது நமக்குத் தெரியாது. என்னைக் கேட்டீங்கன்னா, செல்வி வெரா... நாம பயப்பட ஒரே ஓர் ஆபத்து தான் இருக்கு – அந்த ஆபத்து, ப்ளோர். இந்த ஆளைப் பற்றி நமக்கு என்ன தெரியும், ம்? ஒண்ணும் தெரியாது என்பதை விட வேறு இல்லே! முன்னாள் இன்ஸ்பெக்டர் அது இதுனு பீற்றிக் கொள்வதெல்லாம் கூட சரடா இருக்கலாம். இவர் வேற யாரோ ஒருவரா ஏன் இருக்கக் கூடாது – பணப்பேய் பிடித்த ஒரு கோடீஸ்வரன் - எல்லாத்தையும் வளைத்துப் போடத் துடிக்கும் ஒரு பிஸ்னெஸ் மேக்னெட் - பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்து வந்து விட்ட ஒரு கிறுக்கு...! வெரா – ஒன்று மட்டும் நிச்சயம். நடந்துள்ள ஒவ்வொரு கொலையையும் - இவரே செய்திருக்கலாம்...!''

வெரா அப்படியே வெளிறிப் போனார். மூச்சுத் திணறிய குரலில் கேட்டார்: ''ஒரு வேளை நம்மையும் அவர் குறி வெச்சிருந்தா...?''

தனது பைஜாமா பைக்குள்ளிருந்த துப்பாக்கியைத் தட்டிக் கொண்டே பிலிப் சொன்னான்: ''அப்படி ஒண்ணும் அவர் பண்ணிடாம இருக்கத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன்.''

உடனேயே ஆர்வமாய் கேட்டான்: ''என் மேல அத்தனை நம்பிக்கையா உங்களுக்கு, வெரா? நான் உங்களைச் சுட்டுத் தள்ளிட மாட்டேன்னு அத்தனை நம்பிக்கையா...?!''

''யாராவது ஒருத்தரை நம்பித் தானே ஆக வேண்டியிருக்கு...'' என்றார் வெரா! ''ஒண்ணு சொல்லட்டுமா... ப்ளோர் பற்றிய உங்களது கணிப்பு - தப்பு. நான் இன்னமும் 'அது' ஆர்ம்ஸ்ட்ராங்க் தான்'னே

நம்பறேன்.''

இப்படிச் சொல்லி விட்டு பிலிப் பக்கமாய் திடுமென முழுக்கத் திரும்பிக் கொண்ட வெரா கேட்டார்: ''இது வரைக்கும்... ஒவ்வொரு நிமிடமும்... யாரோ ஒருத்தர் இருக்கிறதா நீங்க உணரவே இல்லையா? யாரோ நம்மை கவனித்தபடி... காத்துக் கொண்டு...?''

பிலிப் மெதுவாய், ''அது வெறும் நரம்பதிர்வு'' என்றான்.

வெரா விறுவிறுவென கேட்டார்: ''அப்போ அதை நீங்களும் உணர்ந்திருக்கீங்க?''

கேட்டதுமே நடுங்கினார். பிலிப் பக்கமாய் இன்னும் நெருங்கிக் கொண்டார். பேசினார்: ''அப்போ... உங்களுக்கு இப்படித் தோணலியா... சொல்லுங்க --- '' நிறுத்தினார். வசனம் உடைந்தது. பின், தொடர்ந்தார்: ''நான் ஒரு முறை படிச்சிருக்கேன். ரெண்டு ஜட்ஜ் வந்தாங்களாம். சின்ன அமெரிக்க நகரத்துக்கு. அவங்க தீர்ப்பு சொல்லியிருக்காங்க. அது - ஓர் இறை தீர்ப்பு. ஏன்னா – அவங்க நமது இந்த உலகத்திலிருந்து வந்தவங்களே கிடையாதாம்...''

லாம்பர்ட் புருவங்களை உயர்த்தினான். ''விண்ணுலக தேவதைகளா... ஆங்...?! ம்ம்... எனக்கு இந்த அமானுஷ்ய நிகழ்வுகளின் மீது நம்பிக்கை கிடையாது. இங்கே நடப்பது – போதுமான அளவு - மனிதக் கைங்கரியமே.''

வெரா விடவில்லை. ''சில சமயம் எனக்குத் தோணுது. சரியா... தப்பா... விளங்கலே... ஆனா---''

லாம்பர்ட், வெராவைக் கண்ணுக்குக் கண் பார்த்தான். சொன்னான்: ''அது தான் - மனச்சாட்சி.'' பிறகு கேட்டான்: ''ஆக – நீங்க தான் அந்தக் குழந்தையை முக்கிக் கொன்னிருக்கீங்க?''

உக்கிரமும் வேகமும் உந்தித் தள்ள ''நான் பண்ணலே! நான் பண்ணலே! இப்படிச் சொல்ல உங்களுக்கு எத்தனை திமிர் இருக்கும்...?!'' என கதறினாள்.

அவன் சாவகாசமாய் சிரித்தான். ''ஓ, ஆமாம், நீங்க செஞ்சீங்க, வெரா. செஞ்சிருக்கீங்க. ஏன்னு எனக்குக் காரணமெல்லாம் தெரியாது. கற்பனையும் பண்ண முடியலே. ஆனா செஞ்சிருக்கீங்க. இந்த வட்டத்துக்குள்ளே ஓர் ஆடவன் இருக்கணும். இருந்தாகணும். அவன் தான் காரணமா?''

திடுமென உருவான ஒரு பலஹீனம்... களைப்பு... அற்றுப் போன தன்மை... இற்று விட்ட உணர்வு... வெராவின் எலும்புகளை ஆட்கொண்டது. ஊக்கமில்லா குரலில் முனகினார்: ''ஆமாம் --- இதுல ஓர் ஆடவன் உண்டு --- ''

''தேங்க்ஸ்'' என்றான் பிலிப். ''அது தான் நான் தெரிஞ்சுக்க விரும்பியது...''

தொய்ந்து போயிருந்த வெரா விறுவிறுவென ஆனார். நிமிர்ந்து நெட்டைக் குத்தலாய் உட்கார்ந்தார். பேசிக் கொண்டிருந்த விஷயத்தைக் காற்றில் விட்டு விட்டுக் கேட்டார்: ''அது என்ன? ஓஹ்...! பூகம்பம் வந்திருக்குமா?''

''இல்லையில்லை. ஒண்ணும் ஆடலியே. ஆனா அது போலத் தான் ஏதோ. ஓஹ்! என்ன ஒரு சத்தம்! பூமியே பிளக்கிற மாதிரி. அப்புறம்... அப்புறம்... ஒரு உச்சஸ்தாயி கதறல் உங்களுக்குக் கேட்கலே? ஓஹ்... எனக்குக் கேட்டதே''–பிலிப்பிடமும் பதற்றம் இருந்தது.

இருவரும் ஒரு சேர வீட்டின் பக்கம் பார்த்தனர்.

லாம்பர்ட் சொன்னான்: ''அங்கிருந்து தான் வந்தது. நாம போய் என்னனு பார்ப்பது தான் நல்லது.''

''முடியாது முடியாது. நான் வரலே.''

''உங்க இஷ்டம். நான் போறேன்.''

வெராவேறு வழியின்றி, ''சரி சரி'' என்றார். ''நானும் உங்க கூட வரேன்.''

வளைந்து சுழிந்து வீடு நோக்கி ஏறிய மேட்டுப் பாதையில் இருவரும் விரைவாய் நடந்தனர். வீட்டின் முன் தளப்பகுதி, சூரிய வெளிச்சத்தில்... சாந்தமாகவும் எவ்வித தீதும் அற்று இருந்தது. அங்கு சற்றுத் தயங்கி நின்றனர்... பிறகு வாசற்பக்கமாய் நுழைவதற்குப் பதிலாக, வெகு ஜாக்கிரதையாய் வீட்டை ஒரு சுற்று சுற்றி வர ஆரம்பித்தனர்.

அப்போது ப்ளோரைக் கண்டுபிடித்தனர். கிழக்குப் பக்கத்து சமவெளிப் பகுதியில், ஒரு பாறையின் மீது, பெரிய வெண் பளிங்குக் கல் ஒன்றினால் தாக்கப்பட்டு தலை சுக்கு நூறாய் உடைந்து கூழாய் போன கதியில், இறக்கை விரித்து வீழ்ந்துக் கிடந்த ஒரு கழுகு போல கிடந்தார் அவர்.

நிமிர்ந்து மேலே பார்த்த பிலிப், ''அது யாருடைய ஜன்னல்?'' என கேட்டான்.

வெரா, நடுநடுங்கும் வார்த்தையெழா மெல்லிய குரலில் சொன்னார்: ''என்னுடையது. இது... என் அறையின் அலமாரியருகே மேலேயிருந்த கடியாரம்... இப்போ எனக்கு ஞாபகம் வருது. இது – ஒரு கரடியின் முகம் போல வடிவமைக்கப்பட்டிருக்கும்...''

இதை மறுபடியும் கிலி பிடித்து ஆட்டும் குரலில் அவர் சொன்னார்: ''அது, ஒரு கரடி முகம் போல வடிவமைக்கப்பட்டிருக்கும்.''

III

பிலிப், வெராவின் தோள்களைப் பற்றினான்.

அவன் சொன்னவை அவசரத்தோடும் அதிகாரத்தோடும் இருந்தன: ''இது எல்லாத்தையும் விளக்குது. ஆர்ம்ஸ்ட்ராங் வீட்டுக்குள்ளே தான் எங்கேயோ பதுங்கியிருக்கார். நான் போய் அவரைத் தரதரனு இழுத்துக்கிட்டு வரேன் பாருங்க.''

ஆனால் அவன் கைகளை உடும்பாய் பற்றி விட்டார் வெரா. அலறினார்: ''முட்டாள் போல நடந்துக்காதீங்க. இனிமே அவரோட வெறிக்கு இருப்பது – நாம தான். அடுத்து நாம தான். அவரைத் தேடி நாம வரணும் என்பது தான் அவரோட திட்டமே. நம்மை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கார், அவர்.''

பிலிப் நின்று விட்டான். ''நீங்க சொல்றதுலயும் விஷயமிருக்கு'' என்றான் சிந்தனையாய்.

''நான் சொன்னது தான் சரினு இப்பவாவது ஒத்துக்கிட்டீங்களே...!'' என்றார் வெரா.

அவன் ஒப்புதலாய் தலையசைத்தான்.

''ஆமாம் - நீங்க ஜெயிச்சிட்டீங்க. அது – ஆர்ம்ஸ்ட்ராங்கே தான். ஆனா அந்த நாய் உள்ளே எங்கே, எப்படிப் பதுங்கியிருந்தது? தலையை சீப்பு வெச்சு வாரியெடுப்பது போல அல்லவா நாங்க அவனைத் தேடினோம்?''

அவசரமாய் வெரா சொன்னார்: ''நேத்து ராத்திரி உங்க ரெண்டு பேராலயும் அவர் எங்கேயிருந்தார்னு கண்டுபிடிக்க முடியலேனா...

நிச்சயமா இப்பவும் முடியாது. அது தான் உண்மை – அப்படிப் பதுங்குமிடம் ஒண்ணு உள்ளே இருக்கு.''

விடாமல் பிலிப் பேசினான்: ''ஆமாம். சரி தான். ஆனாலும் --- ''

''முன்கூட்டியே ஒரு ரகசிய இடத்தை அவர் தயார் பண்ணி வெச்சிருக்கணும். இது தான் சாத்தியம். போர்க் காலங்கள்ல, எதிரி கிட்டே மாட்டிக்காம பூமிக்குள்ளேயே தப்பி ஓட, ராஜாக்கள் அரண்மனைக்குள்ளேயே நோண்டி வெச்சிருக்கிற அகழி மாதிரி...''

''அதைப் போன்ற ஒரு பாழடைஞ்ச அந்தக் காலத்து கட்டிடம் கிடையாது, இது.''

''இருந்தாலும் என்ன? அவரே அப்படி ஒண்ணு பண்ணியிருக்கக் கூடாதா?''

மறுத்துத் தலையசைத்தான் பிலிப். ''வந்த அன்றே... அங்குலம் அங்குலமா நாங்க வீடு முழுக்கப் பார்த்துட்டோம். எங்க கண்கள்ல படாத ஓரிடம், உள்ளே கிடையாது.''

''இருந்தாகணும்...!''

''அப்படியா? அப்ப அது எதுனு நான் பார்த்தாகணும்...!''

வெரா அலறினார்: ''ஆமாம். உங்களுக்குப் பார்த்தாகணும்! உங்களுடைய இந்தப் பிடிவாத குணமும் அவருக்குத் தெரியும்! அவர் உள்ளே இருக்கார் - உங்களுக்காகக் காத்துக்கிட்டு...!''

லாம்பர்ட், அவனது பைஜாமாவிலிருந்து துப்பாக்கியைப் பாதி வெளியே எடுத்துக் காட்டி, ''என்கிட்டே இது இருக்கு, தெரியுமா...?!'' என்றான்.

''இப்படித் தான் ப்ளோர் போகும் போதும் சொன்னீங்க. அவர் பலசாலி–ஆர்ம்ஸ்ட்ராங்கால ஒரு மண்ணும் பண்ண முடியாது–அப்படி இப்படினு! உண்மை தான். அவரும் கவனமா தான் போனார். உடல் பலமிருந்து என்ன பலன்? ரெண்டு பேரும் ஒண்ணை மறந்துட்டீங்க. ஆர்ம்ஸ்ட்ராங் - ஒரு பைத்தியம்! ஒரு பைத்தியக்காரனுக்கு எல்லாமே வசதி தான்... வாகு தான்! அவனால எல்லாத்தையும் வெல்ல முடியும்! அவன் - புத்தி சுவாதீனம் உள்ள ஒருத்தனைப் போன்ற இரு மடங்கு தந்திரம் நிறைந்தவன். போதுமா?''

லாம்பர்ட் துப்பாக்கியைத் திருப்பி பைஜாமாவுக்குள்ளேயே திணித்து விட்டான். ''சரி. திரும்புங்க'' என்றான்.

IV

லாம்பர்ட் இறுதியாய் கேட்டான்: ''இரவு வரப் போகுது. நாம என்னப் பண்ணப் போறோம்?''

வெரா பதிலேதும் சொல்லவில்லை.

பிலிப் குற்றம் கூறுவது போல தொடர்ந்தான்: ''இதைப் பற்றி நீங்க நினைக்கவே இல்லே.''

நம்பிக்கையிழந்து வெரா பேசினார்: ''யார் தான் என்ன செய்ய முடியும்? ஓ, கடவுளே... நான் அப்படிப் பயந்து செத்துக்கிட்டிருக்கேன், தெரியுமா?''

பிலிப் சிந்தனையோடு பேசினான்: ''வானிலை பிரமாதமா ஆயிடுச்சு. நிலா வரும். மலையுச்சியில எங்காவது ஓரிடம் பார்ப்பம். அங்கே உட்கார்ந்துக்கிட்டு – காலைப் பொழுதுக்காகக் காத்திருப் போம். நாம தூங்கிட மட்டும் கூடாது... முழுக்க முழுக்க வெகு ஜாக்கிரதையா கண்காணிச்சுக்கிட்டே இருக்கணும். யாராவது நம்மை நெருங்கி வர்ரது தெரிஞ்சா... உடனடியா நான் சுட்டுடணும்...!''

நிறுத்தினான். வெராவைப் பார்த்தான். ''இந்த சல்லிசான உடையில... உங்களுக்குச் சில்லுனு குளிரும்.''

''சில்லுனு? ம்... நான் செத்திருந்தா இப்போ இன்னும் ஐஸ் கட்டியா இல்லே குளிர்ந்திருப்பேன்...!''

மிக அமைதியாகிப் போனான் பிலிப். ''ஆமாம். நிஜந்தான்.''

வெரா இருப்புக் கொள்ளாமல் இப்படியும் அப்படியும் நடக்கலானார். ''இங்கேயே உட்கார்ந்திருந்தா எனக்கு எதாவது ஆயிடும் பிலிப். அந்தப் பக்கமா நடந்துட்டு வருவோமே... வாங்க, பிலிப்.''

''சரி.''

மலை உச்சியிலிருந்து கடற்கரை நோக்கிக் குவிந்த பாறைகளில் இறங்கி மெல்லமாய் நடக்க ஆரம்பித்தனர் இருவரும். சூரியன்

மேற்குக்குள் விழுந்துக் கொண்டிருந்தது. அதன் ஒளி ஆரஞ்சு மற்றும் தங்க நிறங்களின் கலவையாய் தகதகத்தது. இவர்கள் இருவரையும் கவ்வி இரண்டு தங்கக் கட்டிகளாய் ஜொலிக்கச் செய்தது அது.

''சே... குளிக்கக் கூட முடியலே, பாருங்க'' என்றார் வெரா.

இறங்கும் போது, முழுக்க முழுக்க கடலின் தூரத்தையே பார்த்துக் கொண்டிருந்த பிலிப், ''ஏய்... ஏய்... அங்கே பாருங்க... அங்கே, அங்கே... என்னது அது?'' என்றான் அவசர அவசரமாய். ''அங்கேப்பா! அதோ, அந்தப் பெரிய பாறைக்குப் பக்கத்துல...! இன்னும் தள்ளி... வலப்பக்கமா...! ஆங்... அது தான்!''

வெரா முறைத்துப் பார்த்தார். ''யாரோட துணி மூட்டை போல தெரியுது.''

''குளியலுக்கு வந்தவங்களுடையதா இருக்குமோ?''–சந்தேகமாய் கேட்டான் பிலிப். அதனை நெருங்கி நடந்தான். ''ஒரு மூட்டை துணி இருக்கும் போல, வெரா. அதென்ன ஷூ? ஏய், கால்ப்பா! வா, வா!''

பாறைகளில் வேகமாய் ஓடினார்கள். ஒரு கட்டத்தில் சட்டென நின்று விட்டார் வெரா. ''இது துணி மூட்டை கிடையாது, பிலிப்... இது - மனிதன்...''

அந்த மனிதன், இரு பாறைகளுக்கு நடுவில் திணிக்கப்பட்டது போல செருகிக் கிடந்தான். காலையில், அலைகளால் அடிக்கப்பட்டு இழுத்து வரப்பட்டிருக்க வேண்டும்...

லாம்பர்டும் வெராவும் அவ்வுடலின் மிக அருகாமைக்குப் போயிருந்தனர். இருவரும் குனிந்து பார்த்தனர்.

முகத்தின் நிறம் மாறி விறைத்துப் போயிருந்த சிவந்த முகம் - மூழ்கிப் போனதால் உப்பத் துவங்கியிருந்த கொடூர அவலட்சணம்...

லாம்பர்ட் தான் முதலில் சொன்னான்:

''கடவுளே... இது ஆர்ம்ஸ்ட்ராங்...''

அத்தியாயம் 16

I

பல கோடி ஆண்டுகள் உருண்டோடின... யுகங்கள் கடந்து நேரங்கள் எங்கோ பின்னோக்கிப் போயின... அங்கு, காலம் நகராது நின்றுப் போனது... வார்த்தைகள் சுழலுக்குள் சுழன்று இறங்கி, பின் மறைந்தன... எல்லாமும் அங்கு அப்படியே நின்றுப் போயின ... ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்துப் பின்னுக்குப் போன அங்கு ...

சேச்சே... கடந்திருப்பவை ஒன்றோ இரண்டோ நிமிடங்கள் தான்...

மரித்து விழுந்துக் கிடக்கும் சடலத்தைக் குனிந்து பார்த்தபடி இரண்டு நபர்கள் நின்றுக் கொண்டிருப்பது ஓரிரு நிமிடங்களாய் தான்...

மெதுவாய், மிக மிக மெதுவாய், பிலிப் லாம்பர்டும், வெரா க்ளேதார்னும், தங்களது தலைகளைத் தூக்கினர்... இரு ஜோடிக் கண்களும் ஆபத்தாய் ஊடுருவிக் கொண்டன...

II

லாம்பர்ட் சிரித்தான்.

''ஆக இது தான் திட்டம், இல்லையா, வெரா?''

''தீவுல வேற ஒரு நாதி கிடையாது... ஒருத்தர் கூட கிடையாது... நம்மிருவரைத் தவிர...''

சொன்ன வெராவின் குரல் ரகசியமாய் ஒலித்தது – நிச்சயமாய் அதில் சத்து இல்லை.

''மிகச் சரியாக'' என்றான் லாம்பர்ட். ''ஆக, இப்போ நாம இருக்கிற நிலைமை நமக்குத் தெளிவா தெரிஞ்சு போச்சு... இல்லே?''

வெரா கேட்டார்: ''அது எப்படி வெற்றிகரமா முடிஞ்சது? அந்த சலவைக் கல் கரடியைச் சொல்றேன், பிலிப்...''

தோள்களைக் குலுக்கி மறுத்தான் அவன். ''செமத்தியான தந்திரம் அது, டியர்... சூப்பர், ஆங்...?''

இருவரது கண்களும் மீண்டும் மோதி நிலைத்தன.

வெரா நினைத்துக் கொண்டார்: 'இதுக்கு முன்னாடி இவன் முகத்தை ஏன் நான் முழுவதுமா சரியா பார்க்காம போனேன்? நரி – ஆமாம்... அது தான் அது... நரி --- நரி முகம் --- அந்த பயங்கர பற்கள்... சிரிக்கும் போது மேலுதடு மட்டும் பின்வாங்கி துருத்தும் நரிப் பற்கள்...'

லாம்பர்ட் பேசினான்... அவனது குரலில் உறுமலும், சொக்குப் பொடியும், ஆபத்தும், பயமுறுத்தலும் கலவையாயிருந்தன: ''இது தான் முடிவு. புரியுதா? நிதர்சனத்தை எதிர்கொள்ளும் அருகாமைக்கு நாம வந்தாச்சு. இது தான் முடிவு...''

வெரா அமைதியாய் குறிப்பிட்டார்: ''எனக்குப் புரியுது...''

கடலையே வெறித்துப் பார்த்தபடி சொன்னார் அவர். இதே போல கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார், ஜெனரல் மார்கரெட் - அது என்று? – நேற்றா? – இல்லை, முந்தா நேற்றா? அவரும் இதையேத் தான் சொன்னார்... 'இது தான் முடிவு...'

அவர் முடிவினை ஏற்றுக் கொண்டவராய் இதைச் சொன்னார். ஏறத்தாழ வரவேற்கும் தொனியில்.

ஆனால் வெராவுக்கு, இந்த சொல்லே... இந்த நினைப்பே... அடக்க முடியாத எதிர்ப்பினை உள்ளுக்குள் மூட்டி விட்டது.

கூடாது, இது ஒரு முடிவாய் அமைந்து விடக் கூடாது.

கீழே இறந்துக் கிடந்த மனிதனைப் பார்த்தார். சொன்னார்: ''பாவப் பட்ட டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்...''

பிலிப்பிடம் சீற்றம் உருவாயிற்று. ''என்னது இது? இதுக்குப் பேர் தான் பெண்மையா? இரக்கமா?''

''ஏன், இருக்கக் கூடாதா?'' என கேட்டார் வெரா. ''உங்களுக்கு இரக்கமே வராதா?''

''எனக்கு உங்க மேல துளி இரக்கம் கிடையாது'' என மறுத்தான் பிலிப். ''அப்படி எதையும் என்னிடம் எதிர்பார்க்காதீங்க.''

கீழே இறந்துக் கிடந்த மனிதனை மீண்டும் பார்த்தார் வெரா. பேசினார்: ''நாம இவரைத் தூக்கியாகணும். வீட்டுல கொண்டு போய்

போடணும்.''

''குற்றவாளிகள்னு அறிவிச்ச மற்றவர்களோடு சேர்த்துப் போடணுமா...? ம்...? நல்ல சுத்தமான பிசகாத திட்டம்... ஆங்...? எதுவும் தேவையில்லே...! இவர் இப்போ எங்கே கிடக்காரோ... அங்கேயே கிடக்கட்டும்.''

வெரா பதில் தந்தார்: ''கடல் தண்ணீ பட்டு பட்டு அரிக்காத தூரத்துக்காவது இவரை இழுத்துப் போடுவோம்.''

லாம்பர்ட் சிரித்தான். நரிச் சிரிப்பு. ''உங்க இஷ்டம்.''

குனிந்தான். கிடந்த உடலோடு இழுபறியாய் போராடினான். வெரா, பிலிப்பை நோக்கி முன்னேறினாள்... அவனுக்கு உதவினாள். அவள் சக்தியால் முடிந்த அளவுக்கு சடலத்தை இழுத்துப் போராடி கரையேற்றினாள்.

எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு, கடல் நீர் தீண்ட முடியாத தூரத்துக்கு டாக்டர் உடலை இருவரும் இழுத்துப் போட்டனர்.

நிமிர்ந்து சரி செய்துக் கொண்டே, ''இப்ப நிம்மதியா?'' என்றான் பிலிப்.

வெரா, ''ரொம்ப'' என்றார்.

அவர் சொன்ன தொனி, பிலிப்பை எச்சரிப்பதாய் அமைந்திருந்தது. விக்கித்தான் அவன். தனது பைஜாமா சட்டைப் பையை நோக்கி இப்போது தன்னுடைய கையை அவன் கொண்டு போனாலும், அங்கு அது இருக்காது என்பதை நன்கு அறிந்தே இருந்தான் அவன்.

ஓரிரு அடிகள் பின்னுக்குத் தள்ளிப் போன வெரா, தற்போது பிலிப்பை நேருக்கு நேராய் பார்த்தபடி நின்றுக் கொண்டிருந்தாள் - கையில் குறி வைத்துத் தாங்கியிருந்த துப்பாக்கியோடு.

''ஓ! இது தான் உங்களோட பெண்மை ததும்பிய கருணைக்குக் காரணமா! தூ! பிக்-பாக்கெட் திருடு நடத்தத் திட்டமிட்டிருக்கீங்க, ம்...?''

ஒப்புதலாய் தலையசைத்தார் வெரா.

துப்பாக்கியை, நடுங்காது, குறி பிறழாது பிடித்துக் கொண்டிருந்தார் அவர்.

அப்போது, மரணம், பிலிப் லாம்பர்டின் மிக அருகாமைக்கு வந்திருந்தது. அவன் அறிந்து, இத்தனை நெருக்கத்தில், மரணம்,

அவனைக் குறி வைத்தது கிடையாது.

இருந்த போதிலும் அவன் ஆடிப் போகவில்லை.

அதிகாரம் கரை புரள சொன்னான்: ''அந்தத் துப்பாக்கியை என்கிட்டே கொடுத்துடுங்க.''

வெரா சிரித்தார். பேசவில்லை.

லாம்பர்டின் குரல் எகிறியது: ''ம். குடுத்துடுங்க.''

இணையாக, அவனுடைய துரித மூளை திட்டம் தீட்டிய வண்ண மிருந்தது. எப்படி? – எந்த வழியில்? – பேசியா? – என்னுடைய நம்பிக்கை வட்டத்துக்குள் அவளை இழுத்து வந்தா? – அல்லது துரிதமாய் பாய்ந்து பறந்து இடித்துத் தள்ளியா...?

தன் வாழ்நாள் முழுவதும் மிக ஆபத்தான கட்டங்களை மட்டுமே எதிர் கொண்டு வாழ்ந்து வந்தவன், பிலிப். இப்போதும் அப்படியே.

விவாதம் பண்ணும் தொனியில் மெதுவாய் பேச்சினை வளர்க்க லானான் அவன்: ''இப்போ கவனியுங்க, வெரா டியர் - வெறுமனே கவனியுங்க – அது மட்டும் போதும் - ஆமாம்...''

பேசியபடி அவளை நெருங்கி நடந்துக் கொண்டிருந்த அவன்... ஒரு நிலையில்... ஸ்பிரிங்கிலிருந்து விடுபட்டவன் போல அப்படியே துள்ளி விட்டான். சிறுத்தை போன்ற வேகத்தோடு... கணத்தில்... நொடியின் பின்ன நேரத்தைக் கூட வீணாக்காது...

இயந்திரத்தனமாய் துப்பாக்கியின் ட்ரிக்கரை அழுத்தினார் வெரா...

எகிறிய லாம்பர்டின் உடல் அந்தரத்தில் அப்படியே செயலிழந்துப் போய்... பின் ஒரு பெரும் கல்லாய் விழுந்து கீழே கிடந்த பாறையின் மீது மோதியது.

வெரா எச்சரிக்கையாய் முன்னுக்கு வந்து பார்த்தார், கையில் பிடித்திருந்த துப்பாக்கியின் குறியைத் தவற விடாது.

ஆனால் அங்கு எவ்வித எச்சரிக்கைக்கும் தேவையற்றுப் போனது.

பிலிப் லாம்பர்ட் இறந்து விட்டான் - நெஞ்சின் நடு மையத்தில் சுடப்பட்டு...

III

விடுதலை உணர்வு வெராவை ஆட்கொண்டது – ஈடு இணைற்ற, அதீதமான விடுதலை உணர்வு - தலை பாரம் முழுக்க இறங்கிப் போய் விட்ட இறகுலேசு...

கடைசியில், அத்தனையும் முடிந்து விட்டன.

இனி பயம் கிடையாது... திகில் கிடையாது... நரம்பதிர அலறும் கிலி கிடையாது...

தீவில் இவர் மட்டுமே. தனியாக.

தனியாக – ஒன்பது சடலங்களோடு.

அதனால் என்ன? பாதகமில்லை. இவர் சடலமில்லை... சடலமாக வில்லை... ஜெயித்து விட்டார்...

அங்கு அப்படியே உட்கார்ந்தார். எதாலும் ஈடு செய்ய முடியாத சந்தோஷம். எதனாலும் இட்டுக் கட்ட முடியாத சாந்தம்...

இனி பயம் என்பதே கிடையாது...

IV

ஒரு வழியாய் வெரா எழுந்துக் கிளம்பிய போது சூரியன் மறைய ஆரம்பித்திருந்தான். சற்று முன் நடந்து முடிந்திருந்த விளைவுகள், அவரை முழுக்க நகர விடாமல் செய்திருந்தன. ஒப்புயர்வற்ற பாதுகாப்பு உணர்வினைத் தவிர்த்து இப்போது வெராவிடம் வேறொன்றும் கிடையாது. பாதுகாப்பு. முழு பாதுகாப்பு.

உடனே, தான் பசியாக இருப்பதையும் தூங்க விழைவதையும் உணர்ந்தார் வெரா. அதிலும் குறிப்பாக தூக்கம். அப்படியே தன்னைக் கொண்டு போய் தனது மெத்தையில் தூக்கியெறிந்து தூங்க வேண்டும்... தூங்க வேண்டும்... தூங்க வேண்டும்...

நாளை கரையிலிருந்து யாராவது வரலாம்... வந்து காப்பாற்றலாம்.

ஆனால் அப்படியெல்லாம் உடனே காப்பாற்றப்பட வேண்டும் என இப்போது அதிகம் எதிர்பார்க்கவில்லை இவர். இங்கேயே தங்கியிருப்பதில் ஆட்சேபணை கிடையாது வெராவுக்கு. அதுவும் இப்போது... இந்நிலையிலும்... ஒரு துணையுமற்று தனியாயிருக்கும் போதும்...

ஓ! வரம்... வரமாய் கிடைத்து விட்ட சாந்தி...! பூரண சாந்தி!

எழுந்து நின்று வீட்டைப் பார்த்தார்.

அது பற்றி பயந்து சாக இனி ஒன்றும் கிடையாது! அங்கு எந்தப் பயங்கரமும் இவருக்காகக் காத்திருக்கவில்லை! அது... ஜஸ்ட்... நவநாகரீகமாய் கட்டப்பட்டிருக்கும் ஒரு புது வீடு... அவ்வளவே! ஓஹ்... ஆனால்... இன்று விடிகாலையில்... இதே வீட்டை... உடலின் ஒவ்வொரு செல்லும் அதிர்ந்து நொறுங்க கிலியோடு தான் பார்த்தார் இவர்... ... ...

கிலி... பயம்... என்ன ஒரு விளக்க முடியாத உணர்வு... இந்தப் பயம் ...

போகட்டும். அது இப்போது முடிந்து விட்டது. எதிர்த்து நின்று சமாளித்து அதைத் தோற்கடித்து இவர் வென்று விட்டார். படு பயங்கரமான ஒரு சுழலை விட்டு தப்பித்து முழக்கமாய் கரையேறி விட்டார். இவருடைய கைதேர்ந்த சாதுர்யத்தாலும்... துரித இயக்கங் களாலும்... வைத்த பொறிக்குள் இவருடைய கொலையாளியையே சிக்க வைத்துக் கொன்று விட்டார்!

வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார் வெரா.

சூரியன் முழுக்க மறைந்து விட்டிருந்தது. மேற்கு பக்கத்து வானம், ஆரஞ்சு நிறத்தாலும் தங்க நிறத்தாலும் கோடு கோடாய் வரையப் பட்டிருந்தது. அது மிக அழகாய் தோன்றியது... மேலும் சாந்தமாயும்...

'நடந்த அத்தனையும் ஒரு கனவு...' – முடிவாய் நினைத்துக் கொண்டார் வெரா. 'இனி எல்லாம் வசந்தமே...'

ஓ... எத்தனை களைப்பாய் வருகின்றது – சொல்லொணா களைப்பு - பொறுக்கயியலா அசதி. இவரது முட்டி இணைப்புகள் ஒவ்வொன்றும் துடித்தன. வலி. கண்ணிமைகள் மூடத் துடிதுடித்து, எதிர்த்து தடுக்கயியலா வண்ணம் இறங்கி மூடின. இனி பயம் கிடையாது. துளியும். ஆகையால் தூக்கம். தூக்கம்.

'தீவில் இனி தானே தனி... ஐயமேயின்றி பாதுகாப்பாய் தூங்கலாம்...' என்று வெகுண்ட எண்ணமே... தூக்கத்தை இவருக்கு மேலும் நிரந்தரமாக்கியது.

ஒரு சின்ன சிப்பாய் பையன் மட்டும்... தன்னந்தனியாய்.

தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் அவர்.

நிலை வாசல் வழியாக உள்ளே நுழைந்தார் அவர். வீடும் கூட ஓர் அந்நியத்தனமான அமைதியில் முங்கிக் கிடந்தது.

'ஒவ்வோர் அறையிலும் ஒரு பிரேதம் அடைக்கப்பட்டிருக்கும் வீட்டில் சாதாரணமாய் யாராவது தூங்கத் தளைப்படுவார்களா?! ம்ம்...!' – எண்ணிக் கொண்டார் வெரா.

முதலில் அடுக்களைக்குப் போய் சாப்பிட ஏதாவது எடுத்துக் கொள்ளலாமா?

சற்று தயங்கினார்... ஆனால் பிறகு எதிர் முடிவினை எடுத்தார். உடல் அற்றுப் போகுமளவுக்கு களைத்திருந்தார் வெரா.

அடுக்களைக் கதவின் அருகே போய் நின்றார். சாப்பாட்டு மேஜையின் நடுவே இன்னமும் மூன்று சைனா சிப்பாய் பீங்கான் பொம்மைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

சிரித்தார் வெரா.

''காலந்தாழ்ந்து பின்தங்கி விட்டீர்கள்... கண்ணுகளா...!'' என்றார்.

அவற்றிலிருந்து இரண்டு பொம்மைகளை மட்டும் உருவி எடுத்து ஜன்னலின் வழியே வெளியே சுண்டி வீசினார். வெளியில் கிடந்த கல் ஒன்றில் மோதி அவை உடைவதைக் கேட்டார்.

மீதமிருந்த ஒரே ஒரு சிப்பாய் பொம்மையை எடுத்துக் கையில் பத்திரப்படுத்திக் கொண்டார். ''நீ என்னோடு வரலாமடா. நாம ஜெயித்து விட்டோம் டியர். வெற்றிக் கொடி கட்டி விட்டோம்.''

குறைந்துக் கொண்டிருந்த சூரிய ஒளியினால், வரவேற்பறை, இருளத் தொடங்கியிருந்தது.

வெரா, கையில் அந்த சின்ன சிப்பாய் பொம்மையை இறுகப் பற்றிக் கொண்டு, படிகளேறத் துவங்கினார். மெதுவாக. அவரது கால்கள் அப்படித் துவண்டுத் தொங்கின.

ஒரே ஒரு சின்ன சிப்பாய் பையன் தனியே விடப்பட...

பிறகு கவிதை எப்படி முடிந்தது? அவருக்கே உரிய கற்பனை உலகம் இப்போது விழித்தெழுந்தது. அது, கவிதையின் கடைசி வரியைப் பின்வருமாறு தந்தது:

அவன் கலியாணம் பண்ணிக் கொண்டான்.
பிறகு... அங்கு ஒருவர் கூட இல்லை.

கலியாணம்! ஆமாம், அது உடனே நடந்தாக வேண்டும்! சட்டென்று ஹூகோ வீட்டுக்குள் வந்து இவளுக்காகக் காத்திருப்பதைப் போன்ற எண்ணம் மறுபடியும் வெராவுக்குள் எழுந்தது.

கோமாளித்தனமான எண்ணம்! ஆனால், இவருக்கு – நிஜம் போல! படு ஸ்திரமாய் எண்ணிக் கொண்டார் வெரா: ஹூகோ... ஆமாம் - வந்திருக்கிறார்... எனக்காக! மாடியில்! என்னறையில்!

தலையை ஒரு சிலுப்பு சிலுப்பிக் கொண்டு சுயமான வெரா, 'முட்டாள் போல நடந்துக் கொள்ளாதே' என நினைத்துக் கொண்டார். 'களைத்து நொறுங்கிக் குன்றிப் போயுள்ளாய்... இது தான் உண்மை... கற்பனைக்குள் புகுந்துக் குழம்ப இதுவா நேரம்... போய்ப் படு... தூங்கு... தூங்கு... தூங்கு...'

இழுத்து சுழித்து தொய்ந்து மிக மெதுவாய் படியேறினார்...

படிகளத்தனையும் ஏறி முடித்ததும், அவரது கையிலிருந்து ஏதோ ஒன்று நழுவி, அப்படியே தரையில் இருந்த கார்பெட்டில் துளி ஓசை யெழுப்பாது விழுந்தது. துப்பாக்கியைத் தவற விட்டாச்சு என்பதை அவர் கவனிக்கவில்லை. கையிலிருந்த பீங்கான் சிப்பாய் பொம்மையைக் கவ்விக் கொண்டிருப்பதில் மட்டுமே, களைத்துப் போயிருந்த அவரது சிந்தனையால் கவனம் வைக்க முடிந்தது!

அப்பப்பா... எத்தனை அமைதியாயிருக்கின்றது வீடு. இருந்தாலும் வீடு – வேறு யாரும் அற்றுக் காலியாயிருப்பது போல தோன்றவில்லை, வெராவுக்கு...

'ஹூகோ இருக்கிறான்... மேலே... எனக்காக... காத்துக் கொண்டு...' – வெராவின் சுயத்தை மறக்கடிக்கும் அவரது கற்பனை உள்ளம் முன்னேறியது.

ஒரே ஒரு சின்ன சிப்பாய் பையன் தனியே விடப்பட...

அந்தக் கடைசி வரி என்ன...? என்ன அது...? கலியாணம் பற்றிய ஏதோ ஒன்று, இல்லை...? இல்லையா...? அப்படியென்றால், அது வேறு ஏதாவது...? வேறு ஏதாவது என்றால்...?

இப்போது அவருடைய படுக்கையறைக் கதவின் வாசலை அடைந் திருந்தார் வெரா.

ஹ ூகோ, வெராவுக்காக உள்ளேயே காத்துக் கிடக்கிறான். இது நிச்சயமாய் வெராவுக்குத் தெரியும்... தெரியும்...

கதவினைத் திறந்தார் இவர்...

அப்படியே மூச்சுக் காற்றை உள்ளுக்கிழுத்து... வெளியிட முடியாது திண்டாடிப் போனார், வெரா க்ளேதார்ன்...

என்னது அது? மேலே உள்ள கொக்கியிலிருந்த தொங்கிக் கொண்டு? ஓ... ஒரு கயிறு... அதன் கீழ் நுனியில் ஏற்கெனவே போடப்பட்டுள்ள ஒரு பெரிய சுருக்கோடு... அட ... அதன் கீழே ஒரு நாற்காலி... ஏறி வசதியாய் நின்றுக் கொள்ள... பிறகு கஷ்டமின்றி தள்ளி விட வாகாக...

இது தானே ஹ ூகோ எதிர்பார்த்தது... அன்று தொங்க விட்ட கடல்பாசி மாலை போல, இன்று இப்படிக் கயிறைத் தொங்க விட்டுள்ளது அவனே தான்...

நான் கழுத்தில் சுற்றி கட்டிக் கொள்ள வேண்டுமாம்... இதை... கல்யாணம்!

ஆங்... அது தான்... அதே தான்... நினைவு வந்து விட்டது இப்போது... அந்தக் கவிதையின் கடைசி வரி...

அவன் ஓடிப் போய் தூக்கில் தொங்கினான்.
பிறகு... அங்கு ஒருவர் கூட இல்லை.

கற்பனையால் வியாபிக்கப்பட்டிருந்த அவரது கையிலிருந்து, சின்ன பீங்கான் சிப்பாய் பொம்மை நழுவி கீழே விழுந்தது. தடுப்பின்றி உருண்டு அது சுவரில் மோதியது. உடைந்துப் போனது.

தன்னிலை இழந்து இயக்கப்படும் ஒரு நபராய் முன்னுக்கு நகரலானார் வெரா. ஆமாம்... இது தான் என் இறுதி... இது தான் நான்

அடைக்கலமடைய வேண்டிய கடைசி... இங்கு தானே ஸிரில்லின் சில்லென்ற கைகள் அன்று என்னைத் தழுவின... ஆமாம், ஆமாம்... அப்படியானால் இது தான் என் கடற்கரை... இங்கு தான் ஹூகோ இருக்கிறார்... கயிறைச் சுற்றிக் கொள்ளச் சொல்லியபடி, இங்கே இருக்கிறார்... இது கயிறு... கலியாணக் கயிறு...

''நீ அந்தப் பாறை வரைக்கும் போகலாம் ஸிரில்... போ...''

இவ்வளவு தான்... முடிந்தது கொலை...!

கொலை – அத்தனை சுலபமான ஒன்று...!

எல்லாம் எதற்காக...? உனக்காகத் தானே, ஹூகோ...! உன் மாலையையா நான் தட்டுவேன்...?!

வெரா நாற்காலியில் ஏறினார்; உலகில் வேறு எதுவுமே இல்லாமல் போய் விட்டதைப் போல... அந்த சுருக்கையே ஆர்வமாய் பார்த்தார்; சுருக்கினைத் தனது கழுத்தைச் சுற்றி வசதியாக இருக்குமாறு சரி செய்துக் கொண்டார்...

நாற்காலியை எத்தித் தள்ளி விட்டார்...

ஒரு முடிவுரை

உலகின் முதல் தர காவல்துறையான இங்கிலாந்தின் ஸ்காட்லாண்ட் போலீஸ் இலாக்காவின் துணை கமிஷனர் எரிச்சல் மண்ட சொன்னார்: ''சுத்த கோமாளித்தனமா இருக்குய்யா!''

முதன்மை இன்ஸ்பெக்டர் மரியாதையான விறைப்போடு சொன்னார்: ''எனக்கும் புரியுது, ஸார்.''

துணை கமிஷனர் தொடர்ந்தார்: ''பத்துப் பேர் ஒரு தீவுல செத்திருக்கானுங்க... ஆனா அங்கே ஒரே ஒரு ஜீவன் கூட கிடையாது. இதுல அர்த்தமே இல்லே!''

''இருந்தாலும், இது நடந்திருக்கு, ஸார்.''

''குப்பையில தூக்கிப் போடுங்க இன்ஸ்பெக்டர். யாராவது அவங்க அத்தனை பேரையும் கொன்னிருக்கணும்!''

''அது... அது... அதே தான் நம்ம பிரச்னை, ஸார்.''

''டாக்டர் தந்த அறிக்கையில உபயோகமா எதுவும் ஆம்பிடலையா?''

''இல்லே, ஸார். வார்க்ரேவும் லாம்பர்டும் சுடப்பட்டிருக்காங்க... முதல் ஆசாமி தலைல, ரெண்டாவது ஆசாமி நெஞ்சுல. மிஸ் ப்ரெண்ட்டும் மார்ட்ஸனும் சயனைட் விஷம் ஏற்றப்பட்டதால செத்திருக்காங்க. க்ளோரல் எனும் தூக்க மாத்திரை அதிகமா தரப்பட்டதால திருமதி ரோஜர்ஸ் உயிர் போயிருக்கு. ப்ளோரின் தலை, அடையாளம் தெரியாம உருக் குலைஞ்சு போயிருக்கு. ஆர்ம்ஸ்ட்ராங் மூழ்கிப் போனதால மரணமடைஞ்சிருக்கார். மார்கரெட்டின் மூளை முழுக்க, பின்பக்கத்திலிருந்து யாரோ ஓங்கி அறைஞ்சதால சுக்கு நூறா நொறுங்கிப் போயிருக்கு. இந்த வெரா பொண்ணு – தொங்கியிருக்கு.''

துணை கமிஷனர் அதிர்ச்சியால் பின் வாங்கினார். உறைந்துப் போய் சொன்னார்: ''முழுக்க முழுக்க அதர்மமா நடந்திருக்கும் வன்முறை – எல்லாமே.''

சற்று நேரம் சிந்தனையில் இருந்தார். பிறகு மறுபடியும் எரிச்சலானார். '''ஸ்டிக்கில்-ஹேவன்' பகுதி மக்கள்கிட்டேயிருந்து ஒரு துளி துப்பு கூடவா உங்களால திரட்ட முடியலே? அப்படி சொல்லாதீங்க. அவங்களுக்கு நிச்சயமா ஏதாவது தெரிஞ்சே இருக்கணும்.''

இன்ஸ்பெக்டர் தனது தோள்களை இயலாமையால் குலுக்கிக் காட்டினார். ''கடல் மாதா மேல அபரிமித நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருக்கிற மிக சாதாரணப் பிரஜைகள் - அவர்கள். அந்தத் தீவை ஓவன் அப்படினு ஒருத்தன் விலைக்கு வாங்கியிருக்கிற சேதி அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கிற எல்லாம் – இது மட்டும் தான்!''

''தினசரி வாழ்க்கையை நடத்தத் தேவையான தட்டு முட்டு சாமான்களை யாரு அந்தத் தீவுக்கு சப்ளை பண்றது? மற்ற தேவையான வசதிகளையெல்லாம் யார் செஞ்சு தர்றது?''

''மோரீஸ் அப்படினு ஒருத்தன். ஐஸக் மோரீஸ்.''

''நடந்ததைப் பற்றியெல்லாம் இவன் என்ன தான் சொல்றான்?''

''அவனால இனி எதுவும் சொல்ல முடியாது, ஸார். அவன் செத்துட்டான்.''

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. அப்படியே பின்வாங்கி மருண்டார் **ஏ ஸி.** கேட்டார்: ''இந்த மோரீஸ் பற்றி நமக்கு ஏதாவது தெரியுமா?''

''நிச்சயமா, ஸார். நம்ம கிட்டே அவனைப் பற்றி நிறையவே தகவல்கள் இருக்கு. அவன் அப்படி ஒண்ணும் சுவையான ஆள் கிடையாது. பங்குச் சந்தை மோசடிகள்ல முக்கிய ஆளா பேசப்பட்டவன் - இந்த மோரீஸ். மூணு வருஷங்களுக்கு முன்னால நடந்த பெனட்டோ பங்குச் சந்தை ஊழல்ல இவன் ரொம்பப் பிரபலமானான். இவன் தான் அந்த மோசடியின் நாடினு நமக்கு நல்லாவே தெரிஞ்சிருந்தது... ஆனா நிரூபிக்க முடியலே. போதைப் பொருள் கடத்தல்லேயும் முக்கிய கூட்டாளி இவன். இங்கேயும் நமக்கு ஸ்திரமா ஊர்ஜிதப்படுத்த சாட்சி இல்லாம போச்சு. இந்த மோரீஸ்... நல்ல முன் ஜாக்கிரதைப் பேர்வழி.''

''இந்தத் தீவை வாங்கின சமாச்சாரத்துக்குப் பின்னணியில இருந்தது இவன் தானா?''

''ஆமாம், ஸார். இவன் தான் இந்தத் தீவை விலைக்கு வாங்கும் பிஸினஸை செஞ்சிருக்கான். இருந்தாலும், சட்ட ரீதியான பேப்பர்ங்க எதுவும் இவன் பேர்ல இல்லாம ஏதோ ஒரு மூணாவது நபருக்கு வாங்கித் தருவது போல முடிச்சிருக்கான்.''

''அப்படினா, பணப்பிரச்னை இதுக்கு மூலாதாரமா இருந்திருக்கு மானு நாம தேடியாக வேண்டியிருக்கும்...?''

இன்ஸ்பெக்டர் லேசாய் சிரித்தார். ''மோரீஸ் பற்றி முழுமையா தெரிஞ்சிருந்தா – இந்த சந்தேகமே உங்களுக்கு வராது, ஸார். முழுப் பணத்தையும் கறக்காம விட மாட்டான் ஸார், இந்த மோரீஸ். எப்படியாப்பட்ட மோசமான வழியிலேயாவது – கறந்துடுவான். அப்படிக் கறந்த பிறகு, அத்தனை பணத்தையும் இவன் தலையில ஒளிச்சு வெச்சிருக்கானா, இல்லே... கால்ல ஒளிச்சு வெச்சிருக்கானா அப்படினு, உலகின் முதல்தர குமாஸ்தா கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அதை மறைச்சு வெச்சுத் தலை முழுகிடுவான். பென்னட்டோ பங்குச் சந்தை விவகாரத்துல மோரீஸின் இந்தத் திறமையை கண் கூடா நாங்க பார்த்தாச்சு. ஆமாம்... அவனுடைய பண வழிகளை மிகச் சரியா மூடிடுவான், இந்த மோரீஸ்!''

துணை கமிஷனர் பெருமூச்சு விட்டார். இன்ஸ்பெக்டர் மேற் கொண்டு போனார்:

''மோரீஸ் தான் 'ஸ்டிக்கில்-ஹேவன்'ல எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சிருக்கான். 'திரு ஓவன்' எனும் முதலாளியோட காரியதரிசி என்பது போல இயங்கியிருக்கான். இதே மோரீஸ் தான், 'அந்தத் தீவுல சில முக்கியமான பரிசோதனைகள் நடக்கப் போகுது... வசதி களிலிருந்து முழுக்க ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு தீவுல, எவ்வித உதவியும் இல்லாம ஒரு வாரம் வாழ முடியுமா எனும் சவால் சார்ந்த பரிசோதனை இது... ஆகவே அங்கிருந்து உதவி கேட்டு ஏதாவது வேண்டுகோள் வந்தா கூட அதுக்குக் கொஞ்சங்கூட செவி மடுக்கக் கூடாது' என்று அங்கே கடற்கரையில இருப்பவர்களுக்குக் கட்டளை யிட்டிருக்கான்.''

கொஞ்சமாய் முகம் சுருங்கினார் துணை கமிஷனர். ''இருந்தாலும்... அங்கே இருந்த ஒருத்தருக்குக் கூட இதைக் கேட்டதுல துளியும் சந்தேகம் வரலேனு நீங்க சொல்றீங்க...?!''

தோள்களைக் குலுக்கிக் காட்டினார் இன்ஸ்பெக்டர். ''**சிப்பாய் தீவு,** இதுக்கு முன்னாடி ராபின்ஸன் எனும் ஓர் அமெரிக்கர் வசம் இருந்தது எனும் உண்மையை நாம மறந்துடக் கூடாது, ஸார். அவர், ரொம்ப ரொம்ப அசாதாரண பார்ட்டி எல்லாம் அந்தத் தீவுல கொடுத்திருக்கார். இதையெல்லாம் அங்கேயிருக்கிற மீனவக் கூட்டம் அடிக்கடி பார்த்திருக்கும் என்பதுல நமக்கு சந்தேகம் வேண்டாம். இது

அவங்களுக்குப் பழகியிருக்கும்... காலப் போக்குல சிப்பாய் தீவுனால அங்கே ஏதாவது கோமாளித் தனமாத் தான் நடந்துக்கிட்டு இருக்கும் என்று ஓர் எண்ணம் நிலைச்சிருக்கும். இது தானே இயல்பு, ஸார்... என்ன நினைக்கிறீங்க...?!''

தானும் அப்படித்தான் கருதுவதாய் பனிமூட்டமாய் ஒப்புக் கொண்டார், **ஏ. ஸி.**

இன்ஸ்பெக்டர் பேசலானார்:

''ஃப்ரெட் நாடல் - இவன் தான் வந்த அத்தனை பேரையும் தீவுக்குக் கூட்டிட்டுப் போனவன் - இவன் ஒரு ஒளியேற்றும் விஷயத்தை சொன்னான். 'இப்படி, எதிலும் சேர்க்க முடியாத அளவுக்கு, ஒரு வித்தியாசமான கூட்டமா?' என்று அதிசயப்பட்டு வியந்ததாக சொன்னான் அவன். 'ராபின்ஸன் பார்ட்டிக்குக் கூட்டிட்டு வரும் கூட்டம் மாதிரி இது கொஞ்சமும் இல்லே'னு நினைச்சானாம் அவன். இப்படி சாதாரணமாகவும்... அமைதியாகவும்... ராபின்ஸனுடைய கூட்டாளிங்க மாதிரி காட்டுக் கத்தல் கத்திக் கூத்தாடாம இவங்க எல்லாரும் இருந்ததாலேயே, என்ன சமிக்ஞைகள் வந்தாலும் உதவப் போகக் கூடாது அப்படினு மோரீஸ் இட்டிருந்த கட்டளையையும் மீறி... அங்கிருந்து கண்ணாடி பிரதிபலிப்புக் காட்டி உதவி நாடும் அறிகுறிகள் வந்ததும்... நாடல் படகை எடுத்துக்கிட்டு மளமளனு உதவப் போயிருக்கான்.''

''இவனும் இன்னும் சில மீனவர்களும் போனது எப்போது?''

''அங்கிருந்து சமிக்ஞைகள் வந்ததை சில ஸ்கவுட் மாணவர்கள் 11ஆம் தேதி காலைல பார்த்திருக்காங்க. அன்னிக்கே உடனடியா கிளம்பி அங்கே போகக் கூடிய சூழ்நிலை இல்லே. படகைக் கடல்ல செலுத்தும் சாத்தியம் உருவான மறு நொடியே... அதாவது 12ஆம் தேதி மத்தியானம்... புறப்பட்டுப் போயிருக்காங்க. அங்கே இவனுங்க போய் சேருவதற்கு முன்னாடியே தீவிலிருந்து புறப்பட்டு யாரும் வெளியேறியிருக்கும் வாய்ப்பே கிடையாது என்று தீர்மானமா சொல்றாங்க இவங்க. புயலுக்கு அப்புறமா கூட கடல் பொங்கிக் கொந்தளிச்சுக்கிட்டே இருந்ததாம்.''

''யாராவது நீந்திக் கரையேறியிருக்க முடியாதா?''

''கரை சேர ஒரு மைல் தூரமிருக்கு. கட்டுக்கடங்கா புயல். கொட்டித் தீர்த்த மழை. இயந்திரப் படகு கூட எதிர்த்து முன்னேற முடியாத

அளவுக்கு ராட்சத அலைகள். இங்கே ஸ்கவுட் பசங்க நிறைய பேர், மலையுச்சிகளில் நின்னுக்கிட்டு, கடலையும் தீவையும் கண்காணிச்சுக் கிட்டிருந்தாங்க. ம்ம். முடியாது, ஸார்.''

துணை கமிஷனர் பெருமூச்செறிந்தார். பின் கேட்டார்: ''நீங்க அந்த வீட்டுல கண்டெடுத்த கிராமஃபோன் ரெக்கார்ட் சமாச்சாரம் என்னது? அதுல நமக்கு உளவு தந்து உதவும் எந்த விஷயத்தையும் உங்களால கிரகிக்க முடியலியா?''

இன்ஸ்பெக்டர் தன்னுடைய மேலதிகாரியின் கேள்விக்கு சிரத்தையாய் பதிலளித்தார்:

''அதையும் நான் விடலே. சினிமாவுக்காகவும் நாடகங்களுக்காகவும் இசைத்தட்டுகள் செய்யும் ஒரு நிறுவனத்தால அது தயாரிக்கப்பட்டிருக்கு. அது, UN ஓவன், மோரீஸ் எனும் முகவரிக்கு அனுப்பப்பட்டிருக்கு. இதுவரை வெளியாகாத ஒரு புது நாடகத்தின் ஒரு காட்சிக்குத் தேவைப்படும் ரெக்கார்ட்... என்று விளக்கப்பட்டு அந்த இசைத்தட்டு தயார் செய்யப்பட்டிருக்கு. நிறுவனத்துக்குத் தரப்பட்டிருந்த வாசகங்கள், திருப்பி மேற்சொன்ன முகவரிக்கே அனுப்பப்பட்டிருக்கு.''

''ஹ்ஃம்ப்...'' என்று கண்களை அகல ஒரு முறை விரித்துக் கொண்ட துணை கமிஷனர், ''அதுல அப்படி என்னதான்யா இருந்தது?'' என்றார்.

ஆழ்ந்து, ''அந்த விஷயத்துக்குத் தான் ஸார் நான் இப்ப வரேன்'' என்றார் இன்ஸ்பெக்டர். தொண்டையைச் செருமிக் கொண்டார். பேசலானார்:

''அந்த அத்தனை குற்றச்சாட்டுகளையும் - என்னால எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் துப்பறிஞ்சு பார்த்துட்டேன்.

''ரோஜர்ஸ் குடும்பத்துல ஆரம்பிப்போம். அவங்க தான் தீவுல முதல்ல வந்து இறங்கியிருப்பது. ஜெனிபர் என்பவருக்கு உதவிகள் செஞ்சுக்கிட்டு இவங்க ரெண்டு பேரும் இருந்திருக்காங்க. அந்த அம்மா திடுதிப்புனு செத்துடுது. அவங்களை வந்து பார்த்த டாக்டர் கிட்டேயிருந்து இந்த மரணம் குறித்து ஸ்திரமா எந்தத் தகவலையும் என்னால வாங்க முடியலே. அந்தம்மாவுக்கு இவங்க ரெண்டு பேரும் விஷம் கிஷம் ஏதும் வைக்கலேனு அடிச்சு சொல்லும் அந்த டாக்டர்... இதுல ஏதோ ஒரு விபரீத விளையாட்டு இருந்திருக்குனு சொன்னார்.

ரோஜர்ஸ் தம்பதிங்க பக்கத்துல ஏதோ ஒரு சில்மிஷம் நடந்திருப்பதால தான் ஜெனிபர் உயிர் பிரிஞ்சிருக்கு என்பது அவரோட ஊகம் - தக்க சமயத்துல கொடுத்திருக்க வேண்டிய ஒரு மருந்தைத் தராம அப்படியே நிறுத்தி விடுவது போல ஏதோ ஒன்று! இது போல ஏதாவது நடந்திருந்தா மட்டும் தான், அதை சட்ட ரீதியா நிரூபிக்க முடியாதுனும் சொன்னார் அவர்.

அடுத்து அங்கே வருவது ஜஸ்டிஸ் வார்க்ரேவ். இவர் தான் ஷெல்ட்டனுக்கு எதிரா தீர்ப்பெழுதி அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்பி வெச்சது.

இங்கே ஒண்ணு கவனிக்கணும். ஷெல்ட்டன் - ஒரு குற்றவாளி. மிகத் தெளிவாக – அவன் ஒரு குற்றவாளி. ஆனா, அவனைத் தூக்குல ஏற்றித் தொங்க விட்ட பிறகு சாட்சிகள் எல்லாம் மாறின – இப்படி மாறி விட்ட பிறகு தான் சந்தேகத்துக்கிடமின்றி ஷெல்ட்டன் குற்றவாளி இல்லையோனு ஒரு பெரும் புயல் கிளம்பியது. அப்போ, பத்துக்கு ஒன்பது பேர் சொன்ன விமர்சனம்: ஷெல்ட்டன் குற்றமற்றவன்... இறுதியாக ஜட்ஜ் வழக்கினை விளக்கிக் கூறிய அந்த உரையும், அதன் மீது அவர் எழுதிய இறுதித் தீர்ப்பும் - அவனைப் பழி வாங்கும் ஒரு படலம்...!

இந்த வெரா பொண்ணு. ஒரு குடும்பத்தைக் கவனிச்சுக்கிற காரிய தரிசி மாதிரியான ஒரு வேலையில கொஞ்ச நாள் இருந்திருக்கா. அங்கே தான் கடல்ல மூழ்கி விட்டதால் ஏற்பட்ட ஒரு துர்மரண சம்பவம் நடந்திருக்கு. இதுல, வெராவின் கைகள் நேரடியா இயங்கா விட்டாலும்... மூழ்கிய குழந்தை மேல அதீத பாசம் இருப்பது போல இவளும் கடல்ல குதிச்சு அதைக் காப்பாற்ற முயற்சிகள் செய்திருந்தாலும்... கடைசி நிமிஷத்துல முயற்சி கை தவறி விட்டது போல முடிஞ்சிருந்தாலும்... ஸார், இந்தப் பொண்ணோட கட்டுப்பாட்டுல குழந்தை இருந்த போது தான் இம்மரணம் நிகழ்ந்திருக்கு.''

ஒரு சிறு பெருமூச்சோடு, ''ம்... தொடருங்கள்'' என்றார் துணை கமிஷனர்.

முதன்மை இன்ஸ்பெக்டர் மூச்சுக் காற்றை ஆழ்ந்து உள்ளுக் கிழுத்துக் கொண்டு தயாரானார்:

''இப்ப – டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங். மிகப் பிரபலம். மருத்துவ

மனைகள் மண்டிக் கிடக்கும் ஹேர்லி தெருவில் வெற்றிகரமாய் இயங்கும் ஒரு மருத்துவமனையின் ராஜா. தனது மருத்துவத் தொழிலில் மிக நேர்மையும்... அபரிமித திறமையும் கொண்டவர். தப்பா செஞ்சுட்ட ஓர் ஆபரேஷனால நேர்ந்த அசம்பாவிதமோ... தவறான மருந்தைத் தந்ததால் ஏற்பட்ட ஒரு மரணமோ... இப்படி சட்டவிரோதமா எதையுமே இவருடைய தொழில்ல என்னால கண்டுபிடிக்க முடியலே. மேரிக்ளாஸ் எனும் ஒரு பெண் இருந்ததும்... அவளுக்கு, டாக்டர், சில வருடங்களுக்கு முன்னால... 1925ல... அறுவை சிகிச்சை செய்து மருத்துவம் தந்தார் என்பதும்... உண்மை தான். குடல் சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு நோய்... அறுவை சிகிச்சை மேடையிலேயே க்ளாஸ் இறந்திருக்காங்க. ஒரு வேளை இந்த ஆபரேஷன்ல டாக்டர் அதிக அனுபவம் இல்லாம இருந்திருக்கலாம்... முன்னனுபவம் பத்தாம! திறமை கம்மியான ஒரு காரணம் ஒரு கொலைக் குற்றம் கிடையாதே. அதுவும் டாக்டர் தொழில்ல. இந்த மரணத்துல – சர்வ நிச்சயமா எந்த ஆபத்தான இலக்கும் கிடையாது.

அடுத்து வருவது மிஸ் எமிலி ப்ரெண்ட். முதிர் கன்னி. கன்னியாஸ்திரீ. இவங்களுக்குக் கீழே டெயிலர் எனும் பெண் பணியில இருந்திருக்கா. அவ கர்ப்பமாயிருக்கா. இதை இந்த ப்ரெண்ட் அதீத கடுமையா கண்டிச்சிருக்காங்க. மனசொடிஞ்ச அவ ஓடிப் போய் ஆத்துலயோ குளத்துலயோ குதிச்சு தற்கொலை செஞ்சுக்கிட்டா. இப்படி அந்தப் பொண்ணு ஒரு முடிவு எடுக்குமளவுக்கு எமிலி கொடூரமா நடந்துக்கிட்டிருப்பது சரி கிடையாது தான் - ஆனாலும் இங்கேயும் கவனியுங்க, ஸார்... இதுவும் ஒரு கொலைக் குற்றம் கிடையாது.''

''ஆங்... ஆங்...'' என்று முன்னுக்கு வந்த துணை கமிஷனர், ''இது தான்... இது ஒண்ணு தான் முக்கிய துப்பாய் இருக்கு. U N ஓவன்... சட்டத்தின் கைகளால தொடவே முடியாத வழக்குகளா எடுத்துக் கையாண்டிருக்கான்'' என்றார்.

தான் கொடுத்துக் கொண்டிருந்த பட்டியலில் வெட்டு விழுந்து விடாது, கனக்கச்சிதமாய் தொடர்ந்துக் கொண்டிருந்தார் முதன்மை இன்ஸ்பெக்டர்:

''இளங்காளையான மார்ட்ஸன் - துளியும் கவலையோ கவனமோ

இல்லாம அசட்டுத் துணிச்சலா தான் கார் ஓட்டுவார். ரெண்டு தடவை அவரோட கார் லைஸன்ஸ் கறாரா நிறுத்தப்பட்டிருக்கு. அவரைக் கார் ஓட்டுவதிலிருந்தே நிறுத்தியிருக்கணும் என்பது என்னோட கருத்து – அத்தனை ராட்சஸ வேகம் - எப்பவும். அவரைப் பற்றியிருக்கிற குறை இது ஒண்ணு தான். அந்த ஜான் மற்றும் லூஸி என்பவை, இரண்டு குழந்தைகளின் பெயர்கள்... இதுங்களைத் தான் மார்ட்ஸன் காம்ப்ரிட்ஜ் அருகில் மோதி கொன்னிருக்கார். டோனியுடைய சில நண்பர்கள் சாதகமான சாட்சியங்கள் தந்து விட... அபராதப் பணம் கட்டிட்டு ஜம்முனு வெளியே வந்திருக்கார்.

ஜெனரல் மார்கரெட் பற்றி குறிப்பிடும்படியா என்னால எதையும் பார்க்க முடியலே. சிறப்பான பணி புரிஞ்சிருக்கார் - நல்ல பேர் - இப்படி எல்லாமே அவரைப் பற்றி சிறப்பா தானிருக்கு. ஆர்தூர் ரிச்மண்ட்'னு சொல்லப்பட்ட அந்தப் பேர்... ஒரு சிப்பாயுடையது. இவருக்குக் கீழே தான் ரிச்மண்ட் வேலை செஞ்சிருக்கான். போர்ல செத்திருக்கான். அவனுக்கும் ஜெனரலுக்கும் இடையில துளி கருத்து வேறுபாடும் இருந்தது கிடையாதாம். சொல்லப்போனா, அவங்க ரெண்டு பேரும் மிக நெருக்கமான நண்பர்களாம். 'இந்த சேனாதிபதிகள், தேவையில்லாம சிறந்த சிப்பாய்களைத் தாரை வார்த்துத் தந்திடறாங்க...' என்பது போன்ற விமர்சனங்கள் அப்போ விளைஞ்சிருக்கு. மற்றபடி விசேஷமா எதுவும் தென்படலே.''

''ம்ம்'' என்று கேட்டுக் கொண்டார் துணை கமிஷனர்.

''இப்ப – பிலிப் லாம்பர்ட் பற்றி. நாடு நாடா போய், பாதாள குற்றங்கள் பலவற்றில் ஈடுபட்டிருக்கான் இவன். சட்டத்தின் கிடுக்கிப் பிடியில் சிக்கி... நீதிமன்றம் போய்... தீவிர தண்டனை பெறும் அளவுக்கு சென்று... ஓரிரு முறை மரணத்தையே தொட்டு திரும்பியிருக்கான் பிலிப். மிகத் துணிச்சலான பேர்வழி என்றும் அதிக ஜாக்கிரதையான ஆசாமி என்றும் ரௌடிக் கூட்டத்தில் பெயர் வாங்கியவன். கொத்துக் கொத்தாக் கொலைகளைப் பண்ணிட்டுக் காதும் காதும் வெச்சது போல – தண்ணீக்குள்ளே தண்ணீ மாதிரி நழுவிடற – மகா திறமைசாலி.''

''அடுத்து – ப்ளோர்'' – சொன்ன முதன்மை இன்ஸ்பெக்டரிடம் இப்போது சிறிது தயக்கம் உருவானது. ''இவர் - நம்ம ஜாதி.''

துணை கமிஷனர் சுண்டப்பட்டார். ''ஓ, ப்ளோர்'' என்று விசை கொடுத்து சொன்ன அவர், ''சுத்தமற்ற பய!'' என்றார்.

''அப்படியா நீங்க நினைக்கிறீங்க, ஸார்?''

துணை கமிஷனர் பேசினார்:

''அவரைப் பற்றி என்னோட மதிப்பீடு இது தான். ஆனா ஒவ்வொரு முறையும் சுவடு தெரியாம தப்பிச்சுடறதுல மகா கேடி. லாண்டர் வழக்கை எடுத்துக்குங்க... இந்தாளு பொய் சாட்சியம் தந்தான் என்பது தான் என்னோட அபிப்ராயம். இந்த வழக்கு முடிஞ்ச விதத்துல அப்போ எனக்குக் கொஞ்சமும் திருப்தி கிடையாது. ஆனா எதை வெச்சு நான் நிரூபிக்க? உதவற மாதிரி எதுவும் எனக்கு கிடைக்கலே. கூட சில அதிகாரிகளை சேர்த்துக்கிட்டு தேடினேன்... யாராலேயும் எதுவும் முடியலே. ஆனா, சரியான அணுகுமுறை மட்டும் கிடைச் சுட்டா, லாண்டர் வழக்கு சம்பந்தமா விடுபட்டு மறைஞ்சிருக்கிற இணைப்பை, அட்டகாசமா கண்டுபிடிச்சுடலாம் என்பது தான் என் கருத்து. கிடையாது... இந்த மனுஷன் அப்போ உண்மையா நடந்துக்கலே.''

இப்போது ஒரு சிறு இடைவெளி உருவானது. பின் துணை கமிஷனர் கேட்டார்:

''ஐஸக் மோரீஸ் செத்துட்டதா சொன்னீங்க... எப்ப செத்தான் அவன்?''

''அடுத்து இதைத் தான் கேட்கப் போறீங்கன்னு தெரியும், ஸார். ஆகஸ்ட் 8ஆம் தேதி ராத்திரி செத்திருக்கான் அவன். அளவுக்கதிகமான தூக்க மாத்திரைகள் சாப்பிட்டிருக்கான்னு கேள்வி. எதிர்பாராம நேர்ந்ததா அல்லது அது தற்கொலையானு காட்ட எதுவும் இல்லே.''

''அடுத்து நான் எதைப் பற்றி நினைக்கிறேன்னு தெரியுதா, இன்ஸ்பெக்டர்...?!''

''ம்... என்னால ஊகிக்க முடியுது, ஸார்!''

''திட்டமிட்டபடி அதிர்ஷ்டவசமா நடந்திருக்கிற ஒரு தில்லுமுல்லுனு தோணுது -அந்த மோரீஸின் மரணம்...!''

இன்ஸ்பெக்டர் ஒப்புதலாய் தலையசைத்தார். சொன்னார்: ''இந்த முடிவைத் தான் சொல்லப் போறீங்கன்னு எதிர்பார்த்தேன், ஸார்!''

கை முஷ்டியை இறக்கி மேஜையில் ஒரு பெரிய இடியோசையை

உண்டுபண்ணும்படி குத்தினார் துணை கமிஷனர். பின் பேசினார்:

''நடந்திருக்கும் அத்தனையும் - விநோதமானவை – கற்பனைக் கெல்லாம் அப்பாற்பட்டவை - ஜஸ்ட்... சாத்தியமேயில்லாதவை. வெறும் பாறை மட்டுமே கொண்ட... ஒளிய ஓரிடம் கூட இல்லாத ஒரு திறந்த வெளி மைதானம் போன்ற தீவுல... பத்து கொலைகள். விலாவாரியா இவ்வளவு துப்பு துலக்கிப் பேசியும்... நமக்கு இதையெல்லாம் செஞ்சது யார்னு தெரியலே, ஏன்னு தெரியலே, எப்படினும் தெரியலே.''

இன்ஸ்பெக்டர் சின்னதாய் இருமி தொண்டையைச் சரிசெய்துக் கொண்டார். பேசினார்:

''ஸார், இந்த விஷயம்... நீங்க சொல்றபடி கிடையாது, ஸார். நமக்கு - ஏன்னு தெரியும் - கிட்டத்தட்ட. ஒரு கிறுக்கன்... 'தான் தான் தீர்ப்பு!' என்ற கூறுகெட்ட குழப்பத்துல, சட்டம் தொட முடியாத குற்றவாளி களைக் குறி வெச்சிருக்கான். சட்டத்தின் பிடிகளுக்கு மிகவும் அப்பாற்பட்ட கொலைக் குற்றவாளிகளைத் தேடி அலைஞ்சிருக்கான். அதன் மூலமா – பத்து பேரைப் பொறுக்கியெடுத்திருக்கான். நிஜமாவே அவங்க குற்றவாளிங்க தானா... அல்லது இல்லையா... போன்றவை யெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டே இல்லே --- ''

துணை கமிஷனர் துணுக்குற்றார். கறாராய் சொன்னார்: ''அப்படியா? ஆனா, எனக்கு என்ன தோணுதுனா --- ''

முடிக்காமல் நிறுத்தி விட்டார். இன்ஸ்பெக்டர் மிக மரியாதையாய் காத்திருந்தார். ஒரு பெருமூச்சுக்குப் பிறகு மறுப்பாய் தலையசைத்துக் கொண்டார் துணை கமிஷனர். ''தொடருங்க...'' என்றார் அவர். ''ஏதோ ஒரு முக்கியமான துருப்புக் கிடைச்சுட்டதா நினைச்சேன். அது, இந்த முழு வழக்கையும் முடிச்சுப் போட்டுடும் என்பது போன்ற பிரமை. ஆனா, தொடர்பு விட்டுடுச்சு. மறந்துட்டேன். ம்... நீங்க சொல்லிக் கிட்டிருந்த விஷயத்தைத் தொடருங்க.''

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்:

''பத்து பேரைக் கொன்னாகணும் - ஒரு பேச்சுக்கு சொல்வோம். அவங்களைக் கொன்னாச்சு. U N ஓவன், தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றிட்டாரு. பிறகு எப்படியோ தன்னை ஓர் ஆவி போல ஆக்கிக்கிட்டு அந்தத் தீவிலேயே காற்றோட காற்றாக் கரைஞ்சுட்டாரு.''

துணை கமிஷனர் பேசினார்: ''கரைஞ்சுட்டார். சரியா சொன்னீங்க. ஆனாலும் இன்ஸ்பெக்டர் - இதை விளக்க ஒரு விளக்கம் அத்தியாவசியமில்லையா...?''

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்:

'' 'அவன்' - அந்தத் தீவுல இருந்திருக்கக் கூடாது... அப்ப தான் அவனால தப்பிச்சு வெளியே போயிருக்க முடியாதுனு நீங்க நினைக்கிறீங்க, ஸார்...! ஆமாம்... அங்கே கொலையாகவே வந்த அந்தப் பத்து பேர் சாட்சியா சொல்றேன்... அந்தக் கொலைகாரன், தீவிலேயே இருந்த ஒருத்தன் கிடையாது. அப்படினா... இதுக்கு ஒரே ஒரு விளக்கம் மட்டும் தான் இருக்கு, ஸார். *'அவன்' – அந்தப் பத்து நபர்களில் ஒருவன்.*''

துணை கமிஷனர் அழுத்தமாய் தலையசைத்து ஒப்புக் கொண்டார்.

விசுவாசமாய் தொடரலானார் இன்ஸ்பெக்டர்:

''நாங்களும்... நீங்க நினைக்கிற இதையே தான் நினைச்சோம், ஸார். இந்த ஊகத்தை ஆழமா அலசினோம். இப்போ இது பற்றிப் பேசுவோம். முதல்ல... அங்கே **சிப்பாய் தீவுல** அப்படி என்ன தான் நடந்ததுனு சுத்தமா தெரியாத முழு இருட்டுல நாம இல்லே, ஸார். வெரா க்ளேதார்னுக்கு டைரி எழுதும் பழக்கமிருந்திருக்கு... எமிலிக்கும். வயதான வார்க்ரேவும் சில விஷயங்களைக் குறிச்சு வெச்சிருக்கார் - கிறுக்கலா, ரொம்ப விவரமா புரியாத குறிப்புகள் - ஆனா, விஷயத்தைக் கிரகிச்சுக்க முடியுது. இந்த ப்ளோர் கூட எழுதியிருக்கார். இந்தத் தனித்தனியான அனைத்து குறிப்புகளும் - ஒத்துப் போகின்றன, ஸார். மரணங்கள் இந்த வரிசையில தான் நடந்திருக்கு: ஆன்டனி மார்ட்ஸன், திருமதி ஏத்தல் ரோஜர்ஸ், ஜெனரல் மார்கரெட், ரோஜர்ஸ், மிஸ் எமிலி ப்ரெண்ட், வார்க்ரேவ். நீதிபதியின் மரணத்துக்குப் பிறகு டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங் தனியா கிளம்பி வெளியேறினதாகவும் அவரைப் பின்தொடர்ந்து பிலிப் லாம்பர்ட்டும் ப்ளோரும் கிளம்பிப் போனதாகவும் குறிப்பு எழுதியிருக்காங்க, வெரா. கூடுதலா இன்னுமொரு விஷயத்தை ப்ளோர் எழுதியிருக்கார். ரெண்டே வார்த்தைகள் அவை. *'ஆர்ம்ஸ்ட்ராங் மறைஞ்சுட்டார்.'*

''இந்தக் கட்டத்துல தான் ஸார், பேசிய அனைத்தையும் நாம் கருத்தில் எடுத்துக்கிட்டுப் பார்க்கும் போது, மிகச் சிறப்பான ஒரு

தீர்வினை நம்மால அடைய முடியும்னு எனக்குத் தோணிச்சு. ஆர்ம்ஸ்ட்ராங் மூழ்கி இறந்திருக்கார் - நினைவிருக்கட்டும், ஸார். இந்த ஆர்ம்ஸ்ட்ராங் தான் நாம குறி வைத்துத் தேடிக்கிட்டிருக்கும் அந்தக் கொலைகார பைத்தியக்காரன் எனும் பட்சத்தில்... எல்லோரையும் கொன்னுத் தீர்த்தாச்சு எனும் திருப்தியின் ஆதிக்கத்தால, நேரா மலை உச்சிக்குப் போய் நிம்மதியா கீழே குதிச்சு தற்கொலை பண்ணிக் கொள்வதிலிருந்து... இவரைத் தடுத்து நிறுத்த என்ன இருக்கு...?! இல்லேனா, போன வேலையை வெற்றிகரமா முடிச்சுட்டக் கையோட, கடல்ல குதிச்சு தப்பி விடுவதிலிருந்து இவரைத் தடுக்கத் தான் என்ன இருக்கு...?!

இது சூப்பரான தீர்வு தான் - ஆனால், இது வேலைக்கு ஆகாது! இது சரியான தீர்வாகாது, ஸார், ஆகாது. முதல்ல இதுக்கு எதிரா நிற்பது போலீஸ் மருத்துவருடைய சாட்சியம். 13ஆம் தேதி காலையில **சிப்பாய் தீவை** இவர் அடைஞ்சிருக்கார். இவரோட பரிசோதனை முடிவுகளை வெச்சுக்கிட்டு அதிகமா இவரால எதுவும் சொல்ல முடியலே. முப்பத்தாறு மணி நேரங்களோ அல்லது அதற்கும் முந்தைய காலத்திலோ தான் அத்தனை பேரும் இறந்திருக்காங்கனு மட்டும் தான் இவரால சொல்ல முடிஞ்சுது. ஆனா, இந்த ஆர்ம்ஸ்ட்ராங் பற்றி மட்டும் நல்ல ஸ்திரமா இவரால அறிக்கைத் தர முடியுது. கரையோரமா அவருடைய உடல் ஒதுங்குவதற்கு முன்னால, எட்டு அல்லது பத்து மணி நேரங்கள், அவர் உடல் கடல் நீரிலேயே தான் இருந்திருக்கணும்னு சொல்றார். இதிலிருந்து, ஆர்ம்ஸ்ட்ராங், 10ஆம் தேதி கடந்த நள்ளிரவு பொழுதிலே தான் வெளியேறியிருக்கணும் என்பது விளங்குது. ஏன்னு விளக்கறேன். எந்த இடத்துல டாக்டருடைய உடல் கரை ஒதுங்கி யிருந்தது என்பதை நாங்க பார்த்தோம். அது, இரு பாறைகளுக்கு இடைபட்ட ஓரிடம்... அங்கே துணியின் சிதறல்கள்... கொஞ்சம் முடி... இத்யாதிகள் இருந்தன. இதெல்லாம் 11ஆம் தேதி காலைல, ஒரு பதினோரு மணி வாக்குல... எழும்பி எழும்பி அடிச்ச அலைகளின் தாக்கத்தால அங்கே கொண்டு வந்து செருகப்பட்டிருக்கணும். அதுக்குப் பிறகு புயல் அடங்கிடுச்சு. புயலுக்குப் பிந்தைய கடலலை களின் சீற்றமும் அப்படியே வடிஞ்சிடுச்சு.

ஆர்ம்ஸ்ட்ராங் வெளியேறி கடலுக்குள்ளே இறங்கறதுக்கு

முன்னாடியே... மீதமிருந்த மூன்று பேரையும் ஏதோ ஒரு தினுசுல தீர்த்துக் கட்டியிருப்பார்னு நீங்க சொல்ல வரலாம். ஆனா இங்கே சிக்கலா இன்னொரு விஷயம் வந்து நிக்குது... இதை யாராலேயும் விளக்க முடியலே. கரையிலிருந்து விலகி, கடல் நீர் தீண்டவே முடியாத ஓர் உயரத்துக்கு, டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கின் உடல் இழுத்துப் போடப் பட்டிருந்தது. எத்தனை பெரிய அலை வந்தாலும் தொட முடியாத தூரத்துக்கு அவருடைய உடல் இழுத்துப் போடப்பட்டிருப்பதை நாங்களே கவனிச்சோம். மேலும், அந்த உடல், மிகச் சரியா, நேர்த்தியா கிடத்தப்பட்டு, தரையிலிருந்தது – கடல் நீரால் அடித்துக் கொண்டு வந்து போடப்பட்டது போல இல்லாமல்!

ஆக, இது, ஒரு விஷயத்தை, சர்வ சாதாரணமா விளக்கிடுது. யாரோ தீவுல உயிரோடு உலவியிருக்காங்க – ஆர்ம்ஸ்ட்ராங் இறந்தப்பிறகு!''

இங்கு சற்று நிறுத்திக் கொண்ட இன்ஸ்பெக்டர் பின் தொடர லானார்:

''இது நமக்கு எதை சரியா விளக்குதுனு தெரியுதா, ஸார்? 11ஆம் தேதி இளங்காலைப் பொழுதின் நிலைமையை. ஆர்ம்ஸ்ட்ராங் 'மறைஞ்சுட்டார்' – அதாவது, மூழ்கிட்டார். இது, மூணே மூணு நபர்களை நமக்கு முன்னாடி நிறுத்துது. பிலிப் லாம்பர்ட், ப்ளோர் மற்றும் வெரா க்ளேதார்ன். லாம்பர்ட் சுடப்பட்டிருக்கான். அவனுடைய உடல் கரையிலேயே கிடந்தது – ஆர்ம்ஸ்ட்ராங் உடலுக்குப் பக்கத்திலேயே. அவளுடைய படுக்கையறையிலேயே தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில, வெரா க்ளேதார்னின் உடல் கிடைச்சுது. ப்ளோரின் உடல், வாசல் சமவெளிப் பகுதியில இருந்தது. அவருடைய தலை, அவர் உடல் கிடந்த பகுதியின் மேலிருந்த ஒரு ஜன்னல் வழியா வீசப்பட்ட கனமான ஒரு சலவைக் கல்லால், கூழாகியிருந்தது.''

துணை கமிஷனர் விறுவிறுவென கேட்டார்:

''அது யாருடைய ஜன்னல்?''

''வெரா க்ளேதார்னுடையது. இப்ப ஸார்... இந்த ஒண்ணொண் ணையும் தனித் தனியா எடுத்துப்போம். முதல்ல பிலிப் லாம்பர்ட். அந்த கனமான சலவைக் கல்லை ப்ளோரின் தலை பார்த்துத் தள்ளி விட்டது இவன் தான்னு வெச்சுப்போம் - பிறகு வெராவை அடிச்சு வீழ்த்தி

அவளைத் தூக்குலத் தொங்க விட்டதா இருக்கட்டும். இதுக்கெல்லாம் பிறகு கடற்கரை போகும் அவன் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்துப் போகிறான். சரியா...?!

இப்படித் தான் நடந்ததுனா... இவனிடமிருந்த துப்பாக்கியை எடுத்துப் போனது – யார்? மாடியிலிருந்த வார்க்ரேவ் அறை வாசல்ல துப்பாக்கிக் கண்டெடுக்கப்பட்டிருக்கு.''

துணை கமிஷனர் கேட்டார்: ''அதுல ஏதாவது கை ரேகை?''

''ஆமாம், ஸார். இருந்தது. வெராக்ளேதார்னின் ரேகைகள்.''

''அதெப்படி? அப்படினா - ''

''நீங்க சொல்ல வர்றது புரியுது, ஸார். சுட்டது – வெரா! இவ தான் பிலிப்பைச் சுட்டுப் பொசுக்கிட்டு, துப்பாக்கியையும் கையோட எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போய், கீழே தேடி வந்த ப்ளோரின் தலையில கல்லைப் போட்டுட்டு, தனக்குத் தானே தூக்கு போட்டுக் கிட்டா!

''இது வரைக்கும் எல்லாமும் சரி தான் --- பிறகு இன்னொரு விஷயம் குழப்பாம இருந்தால்! ஆனா – குழப்பமிருக்கே! வெரா படுக்கையறையில ஒரு நாற்காலியிருக்கு. அதுல இருக்கும் கடல் மண்... ஈரம்... இவையெல்லாம், வெரா கால்ல இருந்த தடயங்களோட அப்படியே ஒத்துப் போகுது. இதை வெச்சுப் பார்த்தா – வெரா நாற்காலியில ஏறிக்கிட்டு, சுருக்கை சரியா தன் கழுத்துக்குப் பொருத்திக்கிட்டு, கடைசியா நாற்காலியை உதைச்சு எத்தி விட்டதா தான் தெரியுது.

ஆனா, அந்த நாற்காலி, உதைச்சு எறியப்பட்ட நிலையில இல்லையே. அது, மற்ற ஏனைய நாற்காலிகளைப் போலவே, மிக அழகா, சுவரை ஒட்டி, அடக்கமா, உட்கார ஏதுவா இல்லே போடப் பட்டிருந்தது...?! இது, வெராவின் மரணத்துக்குப் பிறகு செய்யப் பட்டிருக்கு – யாரோ ஒருவனால...!

இப்போ மிஞ்சுவது – ப்ளோர் மட்டும் தான். இவர் தான் பிலிப் லாம்பர்டைக் கொன்னுட்டு – வெராவை இழுத்துக்கிட்டுப் போய் தூக்குல தொங்க விட்டுட்டு – அங்கேயிருந்த ஜன்னல் தட்டுல ஒரு பெரிய சலவைக்கல்லை வெச்சுட்டு – அதன் நுனியில பெரிய கயிறைக் கட்டி அதைக் கீழே வரை தொங்கும்படி செஞ்சுட்டு – மளமளனு கீழே

போய், அந்தக் கயிறைப் பிடிச்சிழுத்துக் கல்லை விழச் செய்து, அந்த மனுஷன் போய் சேர்ந்தான்னு சொன்னா – இது நம்பும்படியாவா இருக்கு...?! எந்த ஆம்பிளையும் இப்படியெல்லாம் தற்கொலை செஞ்சுக்கிட்டதா வரலாறே கிடையாது – மேலும் ப்ளோர் அப்படிப் பட்ட ஒரு கோழை கிடையவே கிடையாது. நமக்கு ப்ளோரைத் தெரியும் - கொல்வாரே தவிர, கொன்னுக்க மாட்டார்!''

துணை கமிஷனர், ''ஒத்துக்கறேன்'' என்றார்.

இன்ஸ்பெக்டர் பேசினார்:

''ஆகவே, ஸார், அங்கே, யாரோ இன்னொருத்தன் தீவுல இருந்திருக்கணும். யாரோ ஒருவன்... அத்தனை சுவடுகளையும் முழுக்கத் துடைத்தெறிந்து விட்டு, தன் திட்டத்தையும் வெற்றிகரமா நிறைவேற்றி விட்டு வெளியேறியிருக்கணும். 'அவன்' – முழுக்க முழுக்க அங்கேயே தான் இருந்திருக்கான் - ஆனா பிறகு எங்கே போனான்? அவங்களைக் காப்பாற்ற படகு போய் சேருவதற்குள்ளே, ஒரு ஈகாகம் கூட அங்கிருந்து தப்பித்திருக்க முடியாது என்பதில் மிக ஸ்திரமா இருக்காங்க, 'ஸ்டிக்கில்-ஹேவன்' மீனவர்கள்! இந்த நிலைமையில --- --- ---''

நிறுத்தி விட்டார் இன்ஸ்பெக்டர்.

துணை கமிஷனர் கேட்டார்: ''இந்த நிலைமையில --- --- ---?''

இன்ஸ்பெக்டர் பெருமூச்செறிந்தார். மறுப்பாய் தலையை அசைத்துக் கொண்டார். முன்னால் வளைந்து, துணை கமிஷனருக்கு சற்று நெருக்கமாய் வந்தார். ''இந்த நிலைமையில --- --- ---?'' என்று மறுபடியும் குறிப்பிட்டு விட்டு கேட்டார்: ''யார் அவங்களைக் கொன்னது?''

ஸ்காட்லாண்ட் காவல் துறைக்கு,
மீனவப் படகுப் பயிற்சியாளர்
ஒருவரால் அனுப்பி வைக்கப்பட்ட,
கையால் எழுதப்பட்டிருந்த
ஒரு நீண்ட வாக்குமூலம்

நினைவு தெரிய ஆரம்பித்த காலத்திலிருந்தே என்னை நான் கவனித்திருக்கிறேன்... என் இயல்பானது, முரண்பாடுகள் மட்டுமே நிறைந்த ஒரு மூட்டை என்று. தீர்த்து வைக்கவே முடியாத விசித்திரமான கற்பனைகளாலும், ஜோடனைகள் பல நிறைந்த விந்தையான கதைகளாலுமே என்னை நான் ஆக்கிக் கொண்டு வளரலானேன் - இதிலிருந்து ஆரம்பிக்கிறேன். ஒரு பாட்டிலுக்குள் மிக முக்கியமான ஆவணம் ஒன்றினை மடக்கி உள்ளடக்கி திணித்து அதை அப்படியே கடலின் நடுவில் தூக்கி எறிந்து விடுவது போன்ற செயல்... சிறு வயதில் சாகசக் கதைகளைப் படிக்கும் போதெல்லாம் என்னை அந்த அளவுக்கு கிளர்ச்சியூட்டி சிலிர்க்க வைத்திருக்கின்றது. இத்தனை வயதாகி விட்ட இன்றும் கூட அக்கற்பனை என்னைக் கிளுகிளுக்கவே வைக்கின்றது. அதனாலேயே, என் வாக்குமூலத்தை ஒரு பாட்டிலுக்குள் போட்டு அடைத்து, அதனை மூடி, சாவகாசமாக கடலலைகளின் கைகளில் ஒப்படைத்து விடும் அந்த முறையை... நான் இப்போது பயன் படுத்தினேன். இந்த எனது வாக்குமூலம் கண்டெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு, ஆயிரத்தில்... அல்ல அல்ல... லட்சத்தில் ஒரு பங்கு தான் உள்ளது; அப்படி நடந்தால், அது வரை தீர்க்கப்படாமலே முட்டிக் கொண்டு திண்டாடிய ஒரு கொலை வழக்கு பற்றிய மர்மம், விளக்கப்படும். (ஆஹா... என்ன ஒரு தற்பெருமை...!)

பற்பல விசேஷத் திறமைகளைச் சுமந்துக் கொண்டு, கூடவே தணிக்கவே முடியாத கற்பனைகளின் ஆளுமையோடும்... நான் பிறந்தேன். மரணத்தைப் பார்ப்பதிலோ அல்லது ஒரு மரணத்தை உண்டாக்குவதிலோ, திருப்தி ததும்பும் குரூர சந்தோஷத்தை நான் எனக்குள் சர்வ நிச்சயமாக அனுபவிப்பேன். கூடு கட்டி

அதனுள்ளேயிருக்கும் குளவிகளிடமும்... தோட்டத்தில் இலைகளிலும் பூக்களிலும் கிடக்கும் பல வகையான புழு பூச்சிகளிடமும்... அவற்றைக் கொன்று போடும் கொடுமையை இழைத்து அதனால் என் ஆவியெங்கும் நான் அனுபவித்த கட்டுக்கடங்கா மகிழ்ச்சி – இப்போது நினைவுக்கு வருகின்றது...

என் சிறு பிராயத்திலிருந்தே கொன்று விட வேண்டும் என்று எனக்குள் ஒரு தணியாத தாகம் தகித்துக் கொண்டேயிருப்பதை நான் உணர்ந்து விட்டேன்.

ஆனால், இதனோடு கூடவே, இதற்கு சற்றும் ஒத்து வராது முற்றிலும் எதிர்ப்பதமாக இருக்கும் மற்றொரு முக்கிய குணமும் என்னுள் ஓடிக் கொண்டிருந்தது – 'நீதி... நேர்மை...' எனும் தர்ம உணர்வு! தவறுகள் ஏதும் இழைக்காத குற்றமற்ற ஒரு மனிதனோ... அல்லது ஏதாவது ஒரு ஜீவனோ... என்னுடைய கொன்றுக் குவிக்கும் ஆசைக்குத் தீனியாகிப் போவதை, என்னால் துளியும் ஏற்றுக் கொள்ள முடியாது. சரியான தீர்ப்பு தான் வழங்கப்பட்டது என்ற தீர்க்கமான முடிவினை எதிர்பார்த்தவன் நான் - எதிர்பார்ப்பவன் நான்.

சுலபமாக புரியும்... ஒரு மன நல நிபுணரால் சட்டென விளக்கவும் முடியும்... இப்படிப்பட்ட ஒரு மனோ நிலையில் நான் உலவி வருவதை முழுவதுமாக நானே உணர்ந்திருந்ததால், சட்டத்தை என் தொழிலாக ஏற்றேன்! என்னுள் கனன்றுக் கொண்டிருந்த அணையாதாகத்தை, சட்ட மன்றம்... நீதி மன்றம்... வெகு சுலபமாக திருப்தி செய்து வைத்தது.

கொலைக் குற்றங்கள்... அவற்றிற்கு வழங்கப்படும் விதம் விதமான தண்டனைகள்... இவை என்னை மிக கிளுகிளுக்க வைத்த சமாச்சாரங்கள். வெளியாகும் அத்தனை துப்பறியும் கதைகளையும் சாகசக் கதைகளையும் விரும்பி விரும்பிப் படிப்பேன். மற்றவர்கள் கண்டே பிடிக்க முடியாத அளவுக்கான கொலை திட்டங்களை... என் ஆத்ம திருப்திக்காக நானே வடிவமைத்து, புளகாங்கிதமடைந்துப் போவேன்.

காலப் போக்கில், நீதிமன்ற சபையின் நடுவிலேயே வந்து அதிகார பூர்வமாக நின்று சட்டத்தை நானே என் கைகளில் எடுத்து ஆளும் நிலைமை உருவான போது, எனக்குள்ளிருந்த இன்னொரு ரகசிய தாகம் வளர்ந்து பெருக ஆரம்பித்தது. குற்றவாளிக் கூண்டில் பரிதாபமாய் ஏறி

நின்றுக் கொண்டு, அங்கு குழப்பமும் கலவரமும் ஒன்று சேர நெருக்க... அவனால் கொல்லப்பட்டவன் கடைசி நிமிடங்களில் துடித்த அதே துடிதுடிப்பை, ஒரு புழுவாய் நெளிந்து அந்த துர்பாக்கியசாலியான குற்றவாளியும் அனுபவிப்பதை – வாவ்... ஈடு இணைற்ற மகிழ்ச்சியாய் நான் கொண்டாட துவங்கினேன். ஆனால் இதே கூண்டில், அனலிடைப் புழுவாய், ஒரு குற்றமற்ற நிரபராதி பரிதவிப்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்பதும் நினைவிலிருக்கட்டும். இரண்டு முறை, குற்றம் சுமத்தப்பட்டிருந்த குற்றவாளிகள் நிஜத்தில் குற்றவாளிகளே அல்ல என்று எனக்குத் தெளிவாய் புலப்பட்டதால், வழக்கையே தள்ளுபடி செய்து அவர்களை நான் விடுவித்திருக்கிறேன். இந்நேரத்தில், கண்ணியம் தவறாது சிறப்பாய் பணியாற்றும் நமது போலீஸ் துறையை நான் பாராட்டியே ஆக வேண்டும்... கொலை குற்றத்தை நிரூபிப்பதற்காக எனக்கு முன்னால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட ஏறத்தாழ அனைத்து குற்றவாளிகளும்... கடைசியில் குற்றவாளிகளே என்றல்லவா நிரூபணமானார்கள்!

இதைப் போன்றவன் தான் எட்வர்ட் ஷெல்ட்டன் என்பதை இப்போது அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவனது தோற்றமும் நடவடிக்கைகளும் திசை திருப்பும் விதமாய் இருந்து விட... நீதி சபை அங்கத்தினர்களிடம் (அதாவது, ஜூரி) மிக நல்லவன் என்ற ஓர் எண்ணத்தை அவனால் சுலபமாக விதைத்து விட முடிந்தது. பிறகு, ஒரு நீதிபதியாய், நான் பிரத்யேகமாக விசாரித்த சாட்சிகள் ஷெல்ட்டனின் குற்றத்தைத் தெள்ளத் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டிய உண்மைகளின் அடிப்படையில் மட்டுமல்ல... எனக்குக் குற்றவாளிகளுடன் இருந்து வரும் பல்லாண்டு கால அனுபவமும் சேர்ந்து... அவன் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றம் சரியே என சொல்லின. அவன், ஒரு வயதான மூதாட்டியை ஈவிரக்கமற்றுக் கொன்று விட்டான் என்ற அவன் மீதான குற்றச்சாட்டு, சரியே என தெளிவாய் உணர்த்தின.

எனக்குத் 'தொங்கு நீதிபதி' என்ற பெயர் உண்டு... குற்றவாளி என நிரூபணமாகி விட்டால், அவனைத் தூக்கில் தொங்கவிட நான் சுணங்கவே மாட்டேன்! ஆனால் இந்தப் பட்டம் கொஞ்சம் கம்மியே! மிக ஜாக்கிரதையாய் கவனம் செலுத்தி, குறைகளற்று,

செதுக்கப்பட்டாற் போல வடிவமைத்து ஒரு வழக்கின் இறுதித் தீர்ப்பை நான் எழுதுவது – மிகச் சிறப்பான ஒன்றாகும்! இத் திறமைக்குத் தான் எனக்குப் பட்டம் தந்திருக்க வேண்டும்!

நீதி சபை அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்று கூடி ஷெல்ட்டன் குற்றமற்றவன் என சொல்லும் போது, ஒரு நீதிபதியாகவே இருந்தாலும், அவன் மீது குற்றமுள்ளவன் என்ற ஒரு முத்திரையை நான் தனி மனிதனாகக் குத்துவது மிக கஷ்டமான ஒன்று. சட்ட ரீதியாக ஆபத்தானதும் கூட. இந்த இக்கட்டிலிருந்து ஒன்றே ஒன்று தான் என்னைக் காப்பாற்றும்... அது --- உணர்ச்சி பூர்வமான சில நீதி சபை அங்கத்தினர்களின் உணர்ச்சிக் கொப்பளிக்கும் அறிக்கைகள் உருவாக்க வல்ல உணர்வுபூர்வக் கொந்தளிப்புகளிலிருந்து நீதி சபை அங்கத்தினர் களைத் தனிமைப்படுத்தி விடுவதே ஆகும்! இப்படிச் செய்து விட்டால் மட்டுமே, ஷெல்ட்டனை ஒரு குற்றவாளி என நான் சொல்வதை, அப்படிக் கிடையாது என சிபாரிசு செய்திருந்த நீதி சபை வக்கீல்களை என்னால் லகுவாகக் கையாள முடியும். இல்லையென்றால், அவர்கள் சிபாரிசே தீர்ப்பாகிப் போகும்! இங்கு தான், நான் பிரத்யேகமாக விசாரித்த அனைத்து சாட்சிகளையும் என்னுடைய தீர்ப்புக்கு ஏற்ற சீட்டுகளாய் முன் வைத்தேன். அவற்றின் அடிப்படையில், மறுக்கவே முடியாத தீர்ப்பினை எழுதினேன். திறமையான, சிறப்பான எழுத்து! வாயடைத்துப் போனார்கள்... ஷெல்ட்டன் தூக்கேறினான்.

இப்படி கடந்து கொண்டிருந்த கால ஓட்டத்தில், எனக்குள் ஒரு மாற்றம் நிகழ்ந்துக் கொண்டிருப்பதை என்னால் கவனிக்க முடிந்தது. அது – தளரும் கட்டுப்பாடு. தீர்ப்பு எழுதி அது நிறைவேறும் வரை பொறுத்திருக்க முடியாது, தளரும் கட்டுப்பாடு. இதனால், தீர்ப்பின் படி, துரிதமாக நானே இயங்கி விட துடிக்கும் ஓர் அவசரம்...!

வெளிப்படையாகவே சொல்கிறேன்... கொலைக் குற்றவாளி என்று எனக்குப் புரிந்து விட்டால்... தீர்ப்பெழுதியெல்லாம் கால விரயம் செய்யாமல், அவனை நானே போட்டுத் தள்ளி கதையை முடித்து விட வேண்டும் என துடிக்க ஆரம்பித்தேன். ஆம்... அப்படிப்பட்ட 'கொலைகளை' நானே செய்யத் துடித்தேன். ஒரு கலைஞன், அவனது கலை மூலம், அவனையே வர்ணிக்கத் துடிக்கும் ஒரு தாகமாய் இதைச் சொல்லலாம். நான், ஒரு வேளை, கொலைக் கலைஞனோ என்னவோ!

எனது இந்தப் புது மனோ நிலை, அப்போது என் பதவி ஏற்படுத்தித் தந்த சாதகமான சூழ்நிலையால், பிரம்மாண்டமான ஒரு விசையாய் எழுந்தது.

நான் - நான் - நான் - கொலை செய்தாக வேண்டும்! இதிலும் ஒரு கட்டுப்பாடு உண்டு – செய்யும் கொலை மிக சாதாரணமான ஒன்றாய் இருந்து விடக் கூடாது! ஆஹா! மிக மிக விநோதமான கொலையாய் - அளவிலும் முக்கியத்துவத்திலும் பிரமிக்கத்தக்கதாய் - வழக்கமான தினுசிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய் - மொத்தத்தில் 'அசாதாரண மானதாய்!' இந்த ஒரு நிலைப்பாட்டில் மட்டும், நான் இன்னும் என் விடலைப் பருவ தாகத்தை விட்டு வெளியேறவேயில்லை என்றே கருதுகிறேன். கற்பனைக்கு அப்பாற்பட்டதாய் இருந்தாக வேண்டும்!

கதைகளில் மட்டுமே இடம்பெற வல்லவை போல... 'இயலவே இயலாது...' என்ற பட்டத்துக்கு ஏற்றதைப் போல!

நான் கொல்ல விரும்பினேன்... ஆமாம், நான் கொல்லத் துடித்தேன்...

சுத்தமாய் பொருத்தமேயற்ற பேச்சாய் சிலருக்கு படலாம்... இருந்தாலும் உண்மை இது தான். ஆகவே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். கொல்ல நான்துடிதுடித்தாலும், எனக்குள்ளேயே ஊறிக் கிடந்த நீதி-நேர்மை போன்ற குணங்களால் முழுவதுமாய் இழுத் தடிக்கப்பட்டேன்... அலைக்கழிக்கப்பட்டேன்... குழப்பப்பட்டேன். குற்றமற்ற ஒருவன் - கொல்லப்பட்டு விடக் கூடாது.

இதற்கு வழி?

திடுதிப்பென்று இக்கேள்விக்கு எனக்கு விடை கிடைத்தது. சாதாரண ஒரு சம்பாஷணையின் போது உதிர்ந்த குறிப்பால் ஆரம்பமான வழி! ஒரு டாக்டருடன் பேசிக் கொண்டிருந்தேன் - ஒரு சாதாரண ஆனால் பிரபலமான பொது மருத்துவர் அவர். சட்டத்தின் கிடுக்கிப் பிடி கைகளுக்கு அகப்படாமல் எத்தனை சுலபமாக கொலைகள் நடந்து விடுகின்றன என பேச்சுவாக்கில் குறிப்பிட்டார் அவர்.

இதனை விளக்க ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை உதாரணமாக்கினார் அவர். அவருடைய நோயாளி தானாம்... வயதான மூதாட்டி... அப்போது தான் சமீபத்தில் இறந்திருந்தார் அவர். அந்த மூதாட்டிக்கு

சமயத்தில் தந்திருக்க வேண்டிய ஒரு அதிமுக்கிய உயிர் காக்கும் மருந்தினைத் தராமல் அப்படியே மறுத்து விட்டதால் தான் அவள் மரணித்து விட்டாள் என ஸ்திரமாக சொன்னார் டாக்டர் - இது, அந்தக் கிழவியைக் கவனித்து வந்த ஒரு கணவன் மற்றும் மனைவி ஆகிய இரு வேலைக்காரர்களாலும் நடத்தப்பட்டுள்ளது – இரண்டு பேரும் நல்லபடியாய் பாட்டியைக் கவனித்து வந்தபடியால், திருப்தியடைந்து, கிழவி இவர்களிருவர் மீதும் எழுதி வைத்த அதீத சொத்தினை அபகரிக்க அவர்களால் நடத்தப்பட்டுள்ள திட்டம்! இது போன்ற வற்றை... டாக்டருக்கே கூட சந்தேகமறத் தெரிந்தாலும் கூட... எப்படி நிரூபிப்பது என்று கேட்டார் அவர். தினந்தோறும் இப்படிப்பட்ட பல சமாச்சாரங்கள்... திட்டமிட்ட வெளிப்படையான கொலைகள்... அரங்கேறிக் கொண்டே தானிருக்கின்றன என்ற அவர், அனைத்துமே சட்டத்தால் தொட்டு விட முடியாதவை என்றார்.

இது தான் - நடந்துள்ள அத்தனைக்குமான முதல் புள்ளி. வழி தெரியாது முட்டிக் கொண்டு நின்றபடியிருந்த நான், என் வழி மிகத் துல்லியமாக வகுக்கப்பட்டு விட்டதை உணர்ந்தேன். இந்த உணர்தல் பிரகாசமானபோது, ஒரு கொலை கிடையாது... பெரிய அளவில் பிரம்மாண்டமாய் பல கொலைகள் செய்து காட்ட முடிவு கட்டினேன்.

நர்ஸரி பள்ளிகளில் இன்னும் பிரபலமாயிருக்கும் அந்தப் பாப்பா பாட்டு என் நினைவில் வந்தது... **பத்து சின்ன சிப்பாய் பையன்கள்** பற்றிய கவிதை. சின்ன பொழுதிலேயே என்னை அப்படி ஈர்த்த கவிதையிது. இரக்கமற்ற முறையில் காணாமல் போகும் ஆட்கள் - நிச்சயம் நடந்தே தீரும் என்ற அறிவிப்போடு இடையறாது தொடரும் கிலி – தயை துளியுமற்ற கொலைகள்...

மிக மிக ரகசியமாக என் சுற்றவாளிகளைச் சேகரிக்க ஆரம் பித்தேன்...

இது எப்படி இயன்றது என்பதை விளக்க இங்கு அதிக பக்கங்களை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஏறத்தாழ நான் சந்தித்த அனைவரிடமும் ஒரே ஒரு வகையான அணுகுமுறையில் தான் நான் உரையாடலைக் கொண்டு போனேன் - இதனால் எனக்குக் கிடைத்த தகவல்கள், என்னை அப்படி ஆச்சரியப்பட வைத்தன! ஆஸ்பத்திரியில் ஒரு முறை தங்கி சிகிச்சை பெற நேர்ந்தபோது டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்

குறித்த தகவல்களைச் சேகரிக்க முடிந்தது. செவிலிப் பணியை மகத்தான சேவையாக மதித்துப் பணியாற்றிய ஒரு செவிலி, கணக்கற்று மது அருந்துவதால் ஏற்படக் கூடிய உயர்ந்தபட்ச குற்றங்களை எனக்கு போதிக்கும் ஆர்வத்தில், சில வருடங்களுக்கு முன்னால் அவர் செவிலிப் பயிற்சியில் இருந்த போது நடந்து முடிந்திருந்த ஒரு கொடிய சம்பவத்தை நினைவு கூர்ந்தார்... மது அருந்தியிருந்த ஒரு டாக்டர் அதன் தாக்கத்தால் அவர் அறுவை சிகிச்சை செய்த ஒரு நோயாளியையே தவறான ஆபரேஷனால் கொன்று விட்ட சம்பவத்தை விளக்கிக் கூறினார். ஈடுபாடு ரொம்பக் காட்டாமல் அவர் எங்கு பயிற்சி எடுத்துக் கொண்டார் என்ற என் கேள்விக்கு கிடைத்த பதிலின் பேரில்... எனக்குத் தேவையான அனைத்து நிரூபணங்களும் கிடைத்தன. அது எந்த டாக்டர் என்பதையும், அப்படி மரணித்த நோயாளி யார் என்பதையும் சுலபமாக திரட்டினேன்.

நான் அடிக்கடி போகும் க்ளப்'பில், இரண்டு ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகளிடையே இடம் பெற்றுக் கொண்டிருந்த கிசுகிசுப் பேச்சு, ஜெனரல் மார்கரெட் குறித்த வழக்கினை எனக்குக் கஷ்டமில்லாமல் அறிமுகம் செய்து வைத்தது. அமேஸான் பகுதியில் சில கரடு முரடான பகுதிகளில் அலைந்துத் திரிந்து தப்பி வந்திருந்த ஒருவனால், பிலிப் லாம்பர்ட் என்பவனுடைய வாழ்க்கைச் சுருக்கம் முழுக்கவும் கிடைத்தது. எமிலியின் நடவடிக்கையின் பால் கோபத்தில் இருந்த ஒரு வேலைக்காரியின் மூலமாய் எமிலி ப்ரெண்ட் மற்றும் அவரின் கூரிய வார்த்தைகள் தாங்காது மரணமடைந்த அவருடைய தோழி ஆகியோரது சரித்திரம் கிடைக்கப் பெற்றேன். ஆன்டனி மார்ட்ஸனை - இவனைப் போலவே ஏகமாய் சாலைக் குற்றங்களில் பதிவாகியிருந்த ஒரு பட்டியலிலிருந்து பிரித்தெடுத்தேன். அவனுடைய இரக்கமற்ற கடினமான மனம்... அவனால் எடுக்கப்பட்ட உயிர்கள் குறித்து அவனிடம் கொஞ்சமும் காணப்படாத இரக்கம்... பொறுப்பற்ற போக்கு... இவையெல்லாம் அவனை சமுதாயத்தில் உலவும் அபாயகரமான ஒரு மனிதனாகவும் வாழத் தகுதியிழந்து விட்டவனாகவும் என் முன் நிறுத்தின. என்னுடன் உரிமை எடுத்துக் கொண்டு லாண்டர் வழக்கின் போக்கினை உத்வேகமாக விவாதித்த சில சட்ட வல்லுநர்களின் வாயிலாக முன்னாள் இன்ஸ்பெக்டர் ப்ளோருடைய

இரட்டை வேஷம் எனக்கு அம்பலமாயிற்று. நீதியின் மீதே அவமதிப்பையும் சேற்றையும் அள்ளி வீசி விட்ட கொடூரனாக அவரைக் குறி வைத்து நான் அணுகினேன். காவலர்கள்... நீதியைக் கட்டிக் காப்பவர்கள் எனும் அந்தஸ்தில் உயர இருப்பவர்கள்... கண்ணியமும் கட்டுப்பாடும் குறையாதவர்களாக இருத்தல் அவசியம். அதுவும், அவர்கள் வகிக்கும் பதவியின் அனுகூலத்தால், அவர்கள் என்ன சொன்னாலும் அது விசாரணைக்கு அப்பாற்பட்டு முக்கிய சாட்சியாக எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை இருக்கும் போது... கடமையுணர்வு அத்தனை அத்தியாவசியம்!

கடைசியாக மிஞ்சியிருப்பது – வெரா க்ளேதார்னின் வழக்கு! அட்லாண்டிக் பகுதியைக் கடந்து நான் இங்கிலாந்து நோக்கிப் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்த போது இவர் பற்றிய குலை நடுங்க வைக்கும் சேதி கிடைத்தது. புகைப் பிடிப்பவர்களுக்கான தனிப் பகுதியில் அப்போது நானும் ஹ ூகோ ஹாமில்ட்டன் என்ற இன்னோர் ஆளும் மட்டுமே தனித்திருந்தோம்.

ஹ ூகோ ஹாமில்ட்டன் சந்தோஷமற்று இருந்தான். துக்கத்தை மறக்க மிக அதிகமான அளவு சாராயம் குடித்திருந்தான் அவன். தொட்டால் போதும் - அவனுடைய அந்தரங்கங்களையெல்லாம் கொட்டித் தீர்த்து விடும் தன்னிலை இழந்த உச்சத்திலிருந்தான் அவன். தொட்டேன்! அவன் இதற்கு தந்த பதில்கள், பிரமிப்பூட்டின. அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும்... இதோ தீவில் தனியே உட்கார்ந்துக் கொண்டு நான் இந்த வாக்குமூலத்தை எழுதும் போது கூட எனக்கு பூரணமாய் நினைவுள்ளன:

'நீங்க நினைக்கிறது சரி தான், ஸார், சரி தான்! நான் நிம்மதியா யில்லே! ஸார்... மற்றவங்க மனசுல கொலைனா இருக்கிற விளக்கங்கள் மாதிரியே – அதாவது, தூக்க மாத்திரை கலந்து கொடுத்துடறது... மலையுச்சிக்குக் கூட்டிட்டுப் போய் தள்ளி விடறது – இதெல்லாம் மட்டுமே கிடையாது, ஸார், ஒரு கொலைங்கிறது!' இப்படிச் சொல்லி விட்டு, அவனுடைய குழம்பிய போதை முகத்தை என் முகத்துக்குள் வைத்துத் திணித்து விடுவதைப் போல மிக நெருக்கமாய் வந்தான். தொடர்ந்தான்: 'எனக்கு ஒரு கொலைகாரியைத் தெரியும் சார்... தெரியும்னா தெரியும்...! இதுல வேடிக்கை என்னனா... அவ மேல

எனக்கு அப்படி ஒரு கிறுக்கு, ஸார்...! அஆங்...! பைத்தியம்னு வெச்சுக்கங்களேன்...! ஓ கடவுளே... இத்தனை நடந்தும் இன்னும் நான் அவளைக் காதலிக்கிறேன் என்பது தான் கொடுமை... ஓ, நரகம் ஸார் அது நரகம்...! ஸார், ஸார்... அவ அதை எனக்காகத் தான் செஞ்சா...! அப்படிப் போய் அவ செஞ்சுத் தொலைப்பானு நான் கனவுல கூட நினைக்கலியே, ஸார்... பொண்ணுங்க பேய்ங்க, ஸார், பேய்ங்க... அப்பழுக்கற்ற பேய்ங்க... நான் சொல்றேன், நம்புவீங்கள்லே...! அந்த அளவுக்கு நாகரீகம் தெரிஞ்ச ஒரு பொண்ணு போய்... இப்படி... ஒரு... ஒரு... ஓ... அவ போய் இப்படிச் செய்வான்னு நினைக்க முடியுதா, ஸார் உங்களால? ஒரு சின்ன குழந்தையைக் கடலுக்குள்ளே ஆழத்துக்கு சிரிச்சுக்கிட்டே கூட்டிட்டுப் போய், அப்புறம் அங்கே அப்படியே முங்க விட்டுட்டு ஓடி வந்து... ஒரு பொண்ணா ஸார் இப்படிப் பண்ணும்...? பேய் தானே ஸார் பண்ணும்...! அதான் ஸார்... பொண்ணுன்னா, பேய் தான்... பேய் தான், ஸார்...!'

நான் கேட்டேன்: 'அவ தான் பண்ணினான்னு உனக்கு நல்லா தெரியுமா?'

அவன் பதில் சொன்னான்... சொன்ன பதிலில் திடீர் ஆற்றாமையும் சோகமும் அப்பிக் கொண்டன:

'நிச்சயம் தான் ஸார்-ங்கறேன். யாருமே அப்படி ஒரு கொலையை கனவுல கூட நினைச்சிருக்க மாட்டாங்க. நான் அப்புறம் திரும்பி வந்து விஷயமெல்லாம் கேள்விப்பட்டதும்... அவளைக் கண்ணோட கண்ணா பார்த்த நொடியிலேயே நான் தெரிஞ்சுக்கிட்டேன்... நான் தெரிஞ்சுக்கிட்டேன் என்பதும் அவளுக்குத் தெரியும்... அவ தெரிஞ்சுக்காத ஒண்ணு என்னனா... அந்தக் குழந்தையை நான் என் உயிருக்கு மேலா நேசிச்சு வளர்த்து வந்தேன் என்பது தான்...'

பிறகு அவன் ஏதும் பேசாமல் சோஃபாவில் சரிந்து விட்டான்... ஆனால் பிறகு பின்னுக்குப் போய், முழுக் கதையையும் அறிந்து, வெராவைக் குற்றவாளியாக தீர்ப்பெழுத எனக்கு அதிக சங்கடங்கள் ஏற்பட்டு விடவில்லை.

எனக்குத் தேவைப்பட்டது பத்தாவது பலி கடா! மோரீஸ் எனும் பெயர் கொண்ட நபரிடம், அந்தப் பத்தாவது குற்றவாளியை நான் கண்டெடுத்தேன். மோரீஸ் ஒரு குள்ள ஜந்து. இவன் பல இருட்டடிப்பு

வேலைகளை செய்து வந்தாலும், பிரதானமாய் ஈடுபட்டிருந்தது போதைத் தொழிலில். என் நண்பர்கள் சிலரது மகள்களை வலுக் கட்டாயமாக இழுத்து போதை மருந்து பழக்கத்தில் புகுத்தியவன் இவன். இவனால் உருவாக்கப்பட்ட இப்பழக்கத்திலிருந்து விடுவிக்க முயன்ற போது, அதைப் பொறுக்க முடியாத இருபத்தியொரு வயது இளம்பெண்ணொருத்தி தற்கொலை செய்துக் கொண்டாள்.

இப்படி சட்டத்தின் கைகளுக்கு அப்பாற்பட்ட குற்றவாளிக்ளை நான் தெரிவு செய்துக் கொண்டிருந்த தேடலின் போதே, இவர்களனைவரை யும் பூமிப் பந்திலிருந்து தூக்க வேண்டிய திட்டமும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மெருகேறி வளர்ந்த வண்ணமிருந்தது! அந்தத் திட்டமும் முழுவதுமாய் உருவாகி முடிந்திருக்க, இதனைச் செயல்படுத்துவதற்கான முதல் படி, ஹார்லி தெருவில் ஒரு டாக்டருட னான சம்பாஷணையின் போது கிடைத்தது. எனக்கு ஏற்கெனவே ஓர் ஆபரேஷன் நடந்துள்ளது. குடல் - ஏறக்குறைய எனக்கு காலி. நான் படும் அவதிக்கு தீர்வாய் அமையக் கூடிய இன்னோர் ஆபரேஷனை உடம்புத் தாங்காது என்றார் டாக்டர். அது செய்யா விட்டால் உயிரும் அதிக நாட்கள் உடலில் தங்காது என்று முடித்தார். என் வியாதி சீக்கிரத்திலேயே என் உயிரைக் குடித்து விடும் என்பதை எவ்வளவு மறைக்க முடியுமோ அவ்வளவு மறைத்தார் டாக்டர்... நான் பிடுங்கி விட்டேன்!

என் சாவு, நோயின் தீவிரம் அதிகமாகி உயிர் குடிக்கும் வரை, மிக நெடியதாகவும் மெதுவானதாகவும் இருந்து விடக் கூடாது... என நான் அப்போது சட்டென எடுத்த முடிவினை டாக்டரிடம் சொல்லி விடவில்லை. என் சாவு - என் ஆசை நிறைவேறிய அதிகபட்ச சந்தோஷத்தில் நான் கிளர்ந்தெழுந்து துள்ளும் போது இடம்பெற வேண்டும். அந்த வாழ்க்கையை நான் வாழ்ந்து பார்த்து விட வேண்டும் - இறக்கும் முன்.

இந்த முன்னுரையோடு நுழைகிறேன் - **சிப்பாய் தீவில்** நடந்துள்ள கொலைக் குற்றங்கள் எப்படி இடம்பெற்றன என்ற முறைகளை விளக்கிக் காட்ட! நான் சொன்ன படி இந்த மோரீஸை இயக்கி **சிப்பாய் தீவினைக்** கையகப்படுத்துவது ஒன்றும் அவ்வளவு கடினமாய் அமையவில்லை. இது போன்ற கொடுக்கல் வாங்கல் விஷயங்களில்

அவன் ஒரு மன்னன். வரப்போகும் பரிதாபத்துக்குரியவர்களைக் குறித்து நான் கறந்திருந்த அத்தனை தகவல்களையும் வரிசைக்கிரமாய் பட்டியலிட்டு முடித்திருந்த என்னால், அவர்கள் ஒவ்வொருவரையும் மிகப் பக்குவமாக என் பொறிக்குள் வந்து விழ வைக்கத் தேவையான ருசிகரமான காரணத்தை, வெகு சுலபமாய் உருவாக்கி விட முடிந்தது. என் எந்தவொரு திட்டமும் தவறவில்லை. என் அத்தனை விருந்தாளிகளும் ஆகஸ்ட் எட்டு அன்று **சிப்பாய் தீவுக்குள்** வந்து விழுந்திருந்தனர். அக்கூட்டத்தில் - நானும் ஒருவன்.

மோரீஸ் முன்னமேயே என்னால் மேலே 'அனுப்பப்பட்டு' விட்டான்! திடுமென அவனுக்கு அஜீரணம் ஏற்பட்டு துடியாய் துடித்தான். என் வாயுத் தொந்தரவுகளுக்கு மிகவும் உன்னதமாய் உதவிய மருந்து இது எனச் சொல்லி நான் லண்டனை விட்டு இங்கு கிளம்புவதற்கு முன்னிரவன்று, மோரீஸுக்கு ஒரு மாத்திரையைத் தந்தேன். தயக்கமின்றி அம்மருந்தினை வாங்கிக் கொண்டான் அவன் - சாக, அத்தனை நம்பிக்கை, பாவம்! இதையோ... அல்லது **சிப்பாய் தீவு** பேச்சு வார்த்தைகள் பற்றியோ காட்டிக் கொடுத்து விடும்படி எவ்வித தஸ்தாவேஜுக்களையும் அவன் விட்டு வைக்க மாட்டான் என்பதில் நான் துளி பயமற்று ஸ்திரமாயிருந்தேன். அவன் அப்படிப்பட்டவன் - எந்த ஆவணங்களையும் அவன் வசம் வைத்துக் கொள்வதில்லை.

தீவில் இறக்க வேண்டியவர்களின் வரிசையைப் பிரத்தியேகமான கவனம் செலுத்தி எச்சரிக்கையாக தயார் செய்தேன் நான். என் அழைப்பை வேண்டி வந்த என் விருந்தாளிகளுள், சட்டத்தைக் கொஞ்சமாக மீறியவர்கள்... நீதியை, மிக அதிகமாக ஏமாற்றியவர்கள்... என, பலதரப்பட்ட தரங்களில் குற்றவாளிகள் இருப்பதாய் கணித்தேன். எல்லாமும் கொலைகள்தான் - ஆயினும் சட்டத்தைக் குறைந்த அளவே மீறியதால் குற்றம் இழைத்தவர்கள், சட்டத்தை அதிதமாக வளைத்து கொலை புரிந்தவர்களைப்போல - 'அடுத்து ஆபத்து வருகிறது... கொலை வரப்போகிறது...' என்ற பயமுறுத்தலுக்குள் விழுந்து நரக வேதனையை அனுபவிக்காமல், ஆரம்பத்திலேயே போய் விட வேண்டும் என தீர்மானித்தேன்.

ஆன்டனி மார்ட்ஸனும் திருமதி ரோஜர்ஸும் முதலில் செத்தனர் -

இளையவன் உடனடியாகவும், அந்தப் பெண்மணி நிம்மதியான தூக்கத்திலும். இயல்பாகவே நமக்கெல்லாம் இருக்கும் 'மாரல்' எனப்படும் நீதி தவறா நல்லொழுக்கம் இல்லாது, விளையாட்டுப் போக்கிலேயே வளர்ந்து விட்ட விடலை இந்த ஆன்டனி என்பதை நான் அறிந்தேன். அவன் ஒரு வளர்ந்த குழந்தை. திருமதி ஏத்தல் - பாவம், ஒரு பேதை – முழுக்க முழுக்க அவளுடைய கணவன் கொடுத்த சாவிக்கு மட்டுமே ஆடிய ஒரு பொம்மை.

இந்த இரண்டு பேரும் எப்படி மரணத்தை சந்தித்தனர் என்பதை நான் விலாவாரியாக விளக்க வேண்டிய தேவை தெரியவில்லை. போலீஸ் அழகாய் கண்டுபிடித்து இந்நேரத்தில் விளக்கியிருக்கும். பூச்சி, வண்டு இவற்றையெல்லாம் அழிக்க உதவும் பூச்சி மருந்தான பொட்டாஷியம் சயனைட், சாதாரண பலசரக்குக் கடையிலேயே கூட இப்போதெல்லாம் விற்கப்படுகின்றது. அது என் கைவசமிருந்தது... அதனை, கிராமஃபோன் ரெக்கார்டு ஏற்படுத்தியிருந்த குழப்பம் மிகுந்த சூழலில், ஒருத்தருக்கும் தெரியாது, மார்ட்ஸனின் காலிக் கோப்பைக்குள் நழுவ விடுவது, அப்படி கஷ்டமான ஒன்றாய் எனக்கு அமையவில்லை.

அந்த இசைத் தட்டு, குற்றங்களைச் சுமத்தியபடி சுழன்றுக் கொண்டிருந்த போது, அங்கிருந்த ஒவ்வொருவருடைய முகத்தையும் நான் ஊடுருவினேன்; என்னுடைய நீண்ட கால நீதிமன்ற ஜட்ஜ் அனுபவத்தை வைத்து சொல்கிறேன்... அங்கிருந்த ஒவ்வொருவரும் கொலைக் குற்றவாளிகளே என்பதை அப்போது என்னால் வெகு விமரிசையாய் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

என் உடலில் உண்டாகியிருந்த அந்தத் தீரா வியாதி, மெது மெதுவாய் உடலெங்கும் உருவாக்கத் தொடங்கியிருந்த விளக்கவொண்ணா வலியின் தீவிரத்திலிருந்து தாற்காலிகமாக பிழைத்து வாழ, தூக்க மாத்திரை வாங்கும் வழக்கம் இருந்தது – க்ளோரல். உயிர்க் குடிக்கும் அளவுக்கு அதன் எண்ணிக்கை என் வசம் சேரும் வரை அதனை பத்திரப்படுத்தி சேகரிப்பதில் எனக்கு சிரமமிருக்கவில்லை. ரோஜர்ஸ், அவனுடைய மனைவியின் மயக்கத்தைத் தெளிய வைக்கக் கொஞ்சம் பிராண்டி கொண்டு வந்த போது, அதை அங்கிருந்த மேஜையில் வைத்தான் அவன்; அதனைத் தாண்டி போகும் சாக்கில், அத்தனை

தூக்க மாத்திரைகளையும் பிராண்டிக்குள் போட்டேன் நான். இது வெகு சுபமாய் முடிந்தது, ஏனென்றால், அப்போது, **சிப்பாய் தீவு** குறித்த எந்த சந்தேகமும் எழுந்திருக்கவில்லை.

ஜெனரல் மார்கரெட், அவரது மரணத்தை, வலியேதுமின்றி சந்தித்து முடித்தார். அவருக்குப் பின்னால் நான் வரும் ஓசையையே அவர் கேட்கவில்லை. அடிவானம் தாண்டி அப்படி என்னத்தையோ படு ஈடுபாடு நிறைந்த கவனத்தோடு தேடிக் கொண்டிருந்தார் அவர். வாசல் தோட்டப்பகுதியில் உட்கார்ந்திருந்த நான், அங்கிருந்து எழுந்து போய் காரியத்தை முடித்து விட்டுத் திரும்ப ஏதுவான ஒரு நேரத்தைத் தேர்ந்தெடுப்பதில் தான், அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் இதுவும் சுபமே.

இந்த சமயத்தில், நான் ஏற்கெனவே கணக்கிட்டிருந்தபடி, தீவு முழுக்க சல்லடையிட்டு அலசப்பட்டு ஒரு தேடுதல் வேட்டை நடந்தது. இதன் மூலம், தீவில் வேறு எவரும் கிடையாது... நாங்கள் ஏழு பேர் மட்டும் தான் இருக்கிறோம் என்ற புரிதல் பிரகடனமாயிற்று. இது, சொல்லப்பட்ட அக்கணத்திலேயே, எங்களைச் சுற்றியிருந்த காற்று நெடுகிலும் சந்தேகம் தூவி விதைக்கப்பட்டது. நான் போட்டிருந்த திட்டப்படி, அடுத்த கட்ட நடவடிக்கைக்கு, நான் சொல்வதை மறு பேச்சுக் கேட்காமல் ஏற்கும் ஓர் இணை... ஒரு துணை... ஒரு நட்பு (?) – எனக்குத் தேவை. இதற்கு டாக்டர் ஆர்ம்ஸ்ட்ராங்கை நான் தெரிவு செய்தேன். வெகு சுலபமாக அவரை ஏமாற்றி விடலாம்... அவரது ஆக்கம் அப்படி! வெறுமனே அவர் என்னிடம் இங்கு அறிமுகமாகியிருந்த அளவிலும், மேலும், நான் வகித்து வந்த நாட்டின் மிக உயர் பதவியின் படியும் தான்... என்னை அவருக்குத் தெரியும்; இவற்றின் படி, இத்தனை அருமை பெருமை வாய்ந்த என்னைப் போன்ற ஒருவன் தான் அந்தக் கொலைகாரன் என்பது, அவரால் ஜீரணிக்க முடியாத ஒன்று! அவருடைய அத்தனை சந்தேகமும் லாம்பர்ட் நோக்கிப் பரவ, அதனை அப்படியே ஒத்துக் கொண்டு பாதுகாப்பது போல் நான் நடித்தேன். அப்போது, என்னிடம் ஒரு திட்டம் இருப்பதாகவும் அதனை செயல்படுத்தினால் கொலைகாரனை நாமாக கொண்டு வந்து வலையில் விழ வைத்து விடலாம் என்றும் அவருக்கு சின்ன குறிப்பு தந்தேன் நான்.

அந்த சமயத்தில் ஒவ்வொருவருடைய அறையும் சுத்தமாக ஆராயப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு நபருமே அடி முதல் நுனி வரை சோதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அதுவும் கூடிய விரைவில் வந்து விடக் கூடும்.

ஆகஸ்ட் 10 அன்று விடிகாலை வேளையில் நான் ரோஜர்ஸைக் கொன்று போட்டேன். அடுப்பு மூட்ட சுள்ளிக் கட்டைகளை அடித்து ஒடித்து எடுத்துக் கொண்டிருந்த அவன், பின்னால் நான் வருவதைக் கேட்கவில்லை. சமையல் அறைக் கதவுக்கான சாவியை அவனுடைய சட்டைப் பையிலிருந்து எடுத்திருந்தேன் நான். அடுக்களைக் கதவை அன்றைய தினத்துக்கு முந்தைய இரவு அவன் பூட்டியிருக்கிறான்.

ரோஜர்ஸின் உடல் எங்கிருக்கிறது என்று குழப்பமாய் எல்லோரும் ஓடிக் கொண்டிருந்த அவசரத்தில் சட்டென பிலிப் லாம்பர்டின் அறைக்குள் நழுவி அவனுடைய ரிவால்வரை நான் அமுக்கினேன். அவனிடம் ஒரு ரிவால்வர் இருந்தாக வேண்டும் என்பது கணிப்பு - சொல்லப் போனால், பிலிப்பைப் போய் இந்த மோரீஸ் சந்தித்து இங்கு அழைத்து வர முயன்ற போது, மறவாது கூடவே துப்பாக்கி ஒன்றையும் கொண்டு போகுமாறு அறிவுறுத்தும்படி நான் சொல்லியிருந்தேன்.

அன்றைய காலை உணவு சாப்பிடும் போது, என்னிடமிருந்த கடைசி க்ளோரல் தூக்க மருந்தினை, எமிலியின் காபிக் கோப்பையை மறுபடியும் நிரப்பும் போது அதனுள் போட்டேன் நான். நாங்கள் அவளை அப்படியே சமையலறையிலேயே விட்டு விட்டு நகர்ந்தோம். அதற்கு பிறகு கொஞ்ச நேரத்திலேயே மூச்சு காட்டாது அங்கு மறுபடியும் நழுவி நுழைந்தேன் நான். அவர் ஏறத்தாழ மயக்கமாய் கிடந்தார்... இது, கடுமையான சயனைடை அவர் உடம்புக்குள் ஏற்ற எனக்கு வசதியாய் அமைந்தது. அங்கு பறந்துக் கொண்டிருந்த தேனீ இத்யாதி யெல்லாம் முழுக்க முழுக்க குழந்தைத்தனமானவை... ஆனால், அது, எப்படியோ, என்னை வெகுவாக திருப்தி செய்தது. எனக்குத் தெரிந் திருந்த அந்த நர்ஸரிப் பாட்டோடு எத்தனை ஒத்துப் போய் கொலை களைச் செய்ய முடியுமோ அத்தனை ஒத்துப் போக விரும்பினேன் நான்.

இது நடந்து முடிந்தவுடனேயே நான் எது நடக்குமென்று முன் கூட்டியே எதிர்பார்த்திருந்தேனோ அது வந்தது – ஓ, அப்படிச் செய்ய

வேண்டுமென்று ஆலோசனை தந்ததே நான் தானே! நாங்கள் அனைவரும் தீவிரமான பரிசோதனைக்கு எங்களை சமர்ப்பித்தோம். ரிவால்வரை ஜாக்கிரதையாக நான் பதுக்கியிருந்தேன்... தவிர சயனைடோ, க்ளோரலோ என்னிடம் பாக்கியில்லை.

இந்தக் கட்டத்தில் தான், 'நமது திட்டத்தை செயல்படுத்த வேண்டிய காலம் வந்தாகி விட்டது...' என்று ஆர்ம்ஸ்ட்ராங்கை நான் தூண்டினேன். அந்த சிம்பிள் திட்டம் இது தான்: 'அடுத்த பலி ஆளாக நான் தோன்ற வேண்டும்! இது, நிஜக் கொலைகாரனை (?!) உலுக்கி ஸ்தம்பிக்கச் செய்து விடும் - தவிர, நான் இறந்தாகி விட்டது என முடிவுக் கட்டி என்னையும் கொண்டு போய் கட்டிலில் போட்டு துணியை மூடிய பிறகு யாரும் என்னறைக்குள் வரப் போவதில்லை - நான் எழுந்து கவனமாக உளவு பார்த்து 'அந்த'க் கொலைகார பாவியைக் கண்டுபிடித்து விடுவேன்.'

நம்பியது, இந்த ஆர்ம்ஸ்ட்ராங்! அன்றைய மாலைப் பொழுதிலேயே இத்திட்டத்தைச் செயல்படுத்தினோம். செம்மண்ணைக் கொஞ்சமாய் தண்ணீரில் குழைத்து முன் நெற்றியில் - உடம்பின் மீது பாத்ரூமிலிருந்து எடுக்கப்பட்ட சிகப்புத் திரைச்சீலை - கம்பளி நூல் கிரீடம் - இவற்றால் நாடக மேடை தயாரானது. அருகிலிருந்த மெழுகுவர்த்தியின் தீபங்கள் மிகவும் ஆடியபடி நிச்சயமற்று இருந்தன... மேலும் என்னை மிக அருகில் வந்து பரீட்சித்து முடிவு சொல்லக் கூடிய ஒரே ஆள் - இந்த ஆர்ம்ஸ்ட்ராங் தான்!

இது எப்படித் திட்டமிட்டோமோ அப்படியே அச்சு அசலாக முடிந்தது. வெரா, அவளுடைய அறையின் மேலிருந்து தொங்கிக் கொண்டிருந்த கடல் பாசி மாலையைக் கண்டதும் அந்த வீட்டையே தலைகீழாகத் திருப்பிப் போடும்படி அலற - அவள் அலறுவாள்... தன்னிலை இழப்பாள் என்ற அவளது மனோ நிலை தெரிந்தே நான் போட்டிருந்த திட்டமது - எல்லோரும் மாடி நோக்கி மளமளவென ஓடி விட - நான் இங்கு கீழே சாவகாசமாக கொலையாகி விட்டவனைப் போன்ற பாத்திரத்தை ஏந்தினேன்!

அவர்கள் திரும்பி வந்து என்னைப் பார்த்ததும் உண்டான விளைவு, எதிர்பார்த்தது தான். ஆர்ம்ஸ்ட்ராங் அவருக்குத் தரப்பட்டிருந்த டாக்டர் வேஷத்தைக் கனக்கச்சிதமாக செய்தார். என்னை அவர்கள் தூக்கிப்

போய் என் படுக்கையில் போட்டனர். என்னைப் பற்றி எவ்வித கவலையும் அவர்களுக்கு இல்லை... அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றிய பயமும் சந்தேகமும் இவை உண்டாக்கியிருந்த அபாய உணர்ச்சியும் தான் அவர்களைக் கட்டிப் போட்டிருந்தன.

முன்னரே செய்துக் கொண்டிருந்த ஏற்பாட்டின்படி, ஒன்றே முக்கால் மணிக்கு, வீட்டுக்கு வெளியே, எனக்கும் டாக்டருக்கும் ஒரு சிறு சந்திப்பு நிகழ்ந்தது. வீட்டின் அருகாமையிலிருந்து பிரித்து அவரைக் கொஞ்சதூரம் இழுத்துப் போனேன்... வீட்டுக்குப் பின்னாலிருந்த ஒரு மலை உச்சி வரை. வீட்டிலிருந்து யாரேனும் பார்த்தால் நாங்கள் தெரியக் கூடாது என வலியுறுத்தியிருந்தேன்... நாங்கள் இருந்த திசைக்கு எதிர் திசையில் தான் வீட்டின் அனைத்து ஜன்னல்களும் இருந்தன; மேலும், அந்த மலையுச்சியிலிருந்தால் தான் எங்களை நாடி யாராவது வந்தாலும் உடனடியாக தெரியும் என்று சொல்லி வைத்தேன். அப்போதும் கூட அவருக்கு துளி சந்தேகம் எழவில்லை – ஆயினும் அவருக்குள் எச்சரிக்கை மணி அடித்திருக்க வேண்டும்... அந்த நர்ஸரிக் கவிதை போன போக்கு மட்டும் அவருக்கு ஞாபகமிருந்திருந்தால்...! **கடலுக்குள் ஆட சென்றனர்; குட்டி மீனொன்று ஒருவனை விழுங்கி விட... ... ...!** அந்தக் குட்டி மீன் தான் - நான்.

இவரை வீழ்த்துவது சுலபமாய் போயிற்று. மலையுச்சியிலிருந்து வளைந்து குனிந்து கீழே பார்த்து 'அட... அது ஒரு குகை போல இல்லை...?' என நான் ஆச்சரியம் வெளியிட்டதே போதுமான தாயிற்று! என்னை விடவும் அதிகமாக குனிந்து எட்டிப் பார்த்தார் ஆர்ம்ஸ்ட்ராங். விரைவாய் நான் இயங்கி, கொடுத்த ஓர் அழுத்தமான உந்துதல், அவர் சுயக் கட்டுப்பாட்டினை இழக்கப் போதுமானதாய் அமைந்தது... கீழே வாய் திறந்து தவித்துக் கொண்டிருந்த கடலுக்கு இரையானார் அவர். நான் வீடு திரும்பினேன். ப்ளோர் கேட்டவை, என்னுடைய காலடிச் சத்தங்களாய்த் தானிருக்க வேண்டும்.

என் அசைவுகளை யாராவது கேட்க வேண்டும் என்பதற்காகவே இம்முறை நான் பல வித ஓசைகளை எழுப்பினேன். நான் படிக்கட்டுகள் இறங்கி வரவேற்பறைக்குள் பிரவேசிக்கும் போது மேலே ஏதோ ஒரு கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது – நான் எதிர்பார்த்தது போலவே! வீட்டை விட்டு நிலைக் கதவு வழியாக

வெளியேறிப் போன என் உருவத்தைத் தான் அவர்கள் கண்டனர்.

அடுத்த ஓரிரு நிமிடங்களில் அவர்கள் என்னைப் பின் தொடர லாயினர். வெளியேறியிருந்த நான் சடுதியில் வீட்டைச் சுற்றிப் பிரயாணப்பட்டிருந்தேன்... ஏற்கெனவே திறந்த நிலையில் நான் வைத்து விட்டு வந்திருந்த சமையல் கட்டு ஜன்னல் வழியே உள்ளே குதித்தும் விட்டேன். அந்த ஜன்னலை மூடிய நான் பிறகு உடைத்தேன். பின்னர் மாடியேறிப் போய், என் படுக்கையில் என்னை சமர்த்தாகக் கிடத்திக் கொண்டேன்.

அவர்கள் மறுபடியும் நிச்சயமாக வீட்டினைப் பரிசோதனை செய்வார்கள் என்பது என் கணக்கு... ஆனால் ஒவ்வொரு பிணமாக வந்து திறந்து மோப்பம் பிடிப்பார்கள் என நான் எண்ணவில்லை. இதுவே தான் நடந்தது.

ஆங்... லாம்பர்டின் அறைக்குள் துப்பாக்கியைத் திருப்பி வைத்த சங்கதியைச் சொல்ல மறந்து விட்டேனே. வீடு முழுவதையும், மேலும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சோதனையிட்ட போது, அது எங்கு ஒளித்து வைக்கப்பட்டது என்பதை அறிந்துக் கொள்ள யாருக்காவது ஆவலிருக்கும். சேந்தியில், வரிசையாக டின்களில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த உணவு பதார்த்தங்கள் இருந்தன. அவற்றில், அடியிலிருந்த ஒரு டின்னைத் திறந்தேன் நான் - அதில் பிஸ்கெட்டுகள் இருந்ததென ஞாபகம் - அதனடியில் துப்பாக்கியை வைத்து, டின்னையும் மூடி, பழையபடி அதனை 'டேப்' போட்டு ஒட்டி வைத்தேன்.

எடுக்கப்படாத டின்களைப் போய் திறந்து சோதனையிட ஒருவரும் தலைப்பட மாட்டார்கள் என, நான் மிகச் சரியாக கணக்கிட்டிருந் தேன்...! அதிலும் குறிப்பாக மேலிருக்கும் அத்தனை டின்களும் 'டேப்' போட்டு ஒட்டப்பட்டு திறக்கப்படாமலிருக்கும் போது அடி டின்னைப் போய் யாரும் திறக்கவே மாட்டார்கள் என்பது என் – சரியான – கணிப்பு...!

நான் களவாடியிருந்த குளியலறை சிகப்பு திரைச்சீலையை, நாற்காலி ஒன்றின் தடிமனான குஷனுக்கு அடியில் மடித்துப் போட்டு மறைத்திருந்தேன்... அந்தக் குஷனில் சிறு துளையிட்டு, கையகப் படுத்தியிருந்த கம்பளி நூல் கண்டினைச் செருகி மறைத்திருந்தேன்.

இந்தக் கட்டத்தில் தான், நான் எதிர்பார்த்துக் காத்திருந்த தருணம்

வந்தது... அடுத்து என்ன நடக்குமோ என்ற பயக்கலவரத்தோடு, மூன்று பேரும் கதிகலங்க வைக்கும் பயத்தோடு ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டிருக்க... அப்படிப்பட்ட மூவரில் ஒருவரிடம் இருக்கிறது, துப்பாக்கி. வீட்டின் ஜன்னல் வழியே இவர்களைக் கண்காணித்துக் கொண்டேயிருந்தேன் நான். வீட்டை நோக்கித் தனியாய் ப்ளோர் வந்த போது, தயாராய் அந்தக் கரடி பளிங்கு கடியாரத்தைக் குறி பார்த்து வைத்தேன்... அனுப்பு ப்ளோரை...

என் ஜன்னல் வழியே வெரா கீளேதார்ன், பிலிப் லாம்பர்டைச் சுட்டுப் பொசுக்கியதைப் பார்த்தேன் நான். எதற்கும் பயப்படாது துணிந்து முடிவெடுக்கும் பெண்மணி. அவனுக்கு ஏற்ற துணை இவள் தான் என்றெல்லாம் நினைத்தவன் நான். ஆஹ்! இது நடந்து முடிந்த தருணத்தில், வெராவின் அறையில், நாடகத் தளத்தைத் தயாராக்கினேன் நான்.

அது ஒரு விறுவிறுப்பான மன நல பரிசோதனை.

வெராவின் மனச்சாட்சிக்கு மட்டுமே தெரிந்து அவளுக்குள் புதைந்துக் கிடக்கும் கொலைக் குற்றவுணர்வும், ஒரு வாட்ட சாட்டமான அழகனைக் கொன்று போட்டு விட்டதால் நரம்புகள் அத்தனையும் முடங்கிப் போய் விட்ட ஒரு நிராதரவான நிலையும்... ஆகிய இவ்விரண்டும் இணைந்து... அவள் எது நடக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறாளோ அப்படிப்பட்ட ஒரு சூழலை உண்டு பண்ணித் தந்தால், அந்தக் கற்பனைக் காட்சியை நிஜம் என நம்ப வைத்து அவளை இயங்க வைக்குமா? ஹிப்னாட்டிஸம் எனப்படும் சுயத்தை மறக்க வைத்து கற்பனைக்குள் இயங்க வைக்கும் ஒரு வித மனோநிலை இது. கற்பனைக்குள்ளே தன்னை அடிக்கடி இழந்து விடவல்ல வெராவிடம் இது நடக்கும் என நினைத்தேன் நான். *வழக்கம் போல் – நான் சரியே!*

அங்கிருந்த அலமாரியின் நிழலில் மறைந்து நின்று ஆவலாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த என் கண்களுக்கு முன்னாலேயே, வெரா, தூக்குக் கயிறை அன்புக் கயிறாய் பாவித்து மாட்டிக் கொண்டு, தொங்கிப் போனாள்.

இனி தான் – உச்சகட்டக் காட்சி.

முன் வந்து, நாற்காலியை எடுத்து, சுவரை ஒட்டி அழகாய்

போட்டேன். ரிவால்வரைத் தேடி நான் போக, அதனை, இந்த வெரா பெண் தவற விட்டிருந்த மாடிப்படியில் கண்டெடுத்தேன். அதில் வெராவின் கை ரேகைகள் பிசகி விடாதிருப்பதைக் கவனமாய் பார்த்துக் கொண்டேன்.

ம் - இனி? அடுத்து? இப்பொழுது?

எழுதிக் கொண்டிருக்கும் இதனை நான் முழுக்க முடிப்பேன். இதனை ஒரு பாட்டிலுக்குள் போட்டு அதனை நல்ல தக்கைப் போட்டு அடைத்து நீர் புகா வண்ணம் மூடுவேன். பிறகு பாட்டிலைக் கடலுக்குள் வீசியெறிந்து விடுவேன்.

ஏன்? எதற்காக இப்படி? சொல்கிறேன்...! ஒரு கொலைக் குற்றத்தை, யாராலும் தீர்க்க முடியாத வண்ணம் தீட்டி நிறைவேற்ற வேண்டும் என்பது என் வாழ்நாள் குறிக்கோள்!

இப்பொழுது தான் எனக்கு ஒன்று புரிந்தது... எந்த ஒரு கலைஞனும், அவனுடைய கலையில் மட்டுமே பூரண திருப்தி அடைந்து விட முடியாது. அத்தனை தத்ரூபமாக எப்படி முடித்தார் என்று கண்டே பிடிக்க முடியாத வண்ணம் ஒரு மர்மம் உள்ளடங்கியிருந்தால் மட்டுமே அவன் வெற்றி தரும் சந்தோஷத்தின் உச்சியை எட்டுகிறான். இந்த வகையில், எத்தனை பெரிய திறமைசாலி என என் 'கொலைக் கலை'யையும் பலர் பாராட்ட வேண்டும் எனும் பரிதாபகரமான அவா – எனக்குள்ளும் இருந்தது!

ஆங்... ஆங்... இன்னும் கொஞ்சம் சொல்ல பாக்கியிருக்கிறது என நினைக்கிறேன்...!

எனது வாக்குமூலம் அடங்கிய பாட்டிலைக் கடலுக்குள் நான் வீசியெறிந்த பிறகு, நேராக எனது படுக்கையில் போய் நான் படுத்துக் கொள்வேன். எனது மூக்குக் கண்ணாடியோடு கூட சற்றே நீளமான ஒரு கயிறு உண்டு... இழுக்க இழுக்க அறுந்து விடாமல் வாகாய் நீண்டுக் கொண்டே போகும் நல்ல எலாஸ்டிக் திறன் கொண்ட கயிறு அது. எலாஸ்டிக் கயிறின் ஒரு நுனியில் துப்பாக்கியைக் கட்டுவேன் - ரொம்ப இறுக்கமாய் இல்லாமல் சற்றே தொளதொளவென்று. மறு நுனியை வாசல் கதவு கைப்பிடியைச் சுற்றி ஒரே ஒரு இறுக்கமற்ற சுற்று சுற்றுவேன். நான் என்ன நடக்க வேண்டும் எதிர்பார்த்தேன், தெரியுமா?!

கைக்குட்டையைப் பிடித்திருக்கும் என் கை, உச்சந்தலையில் அழுத்தி பதிக்கப்பட்டிருக்கும் துப்பாக்கியின் ட்ரிக்கரை ஓர் அழுத்து அழுத்தும்... என் கை தொய்ந்து விழுந்து விட, எலாஸ்டிக்கின் இழுப்பால் வேகமாய் இழுக்கப்படும் துப்பாக்கி, கதவில் போய் மோதி, அப்படியே நழுவி அங்கு கீழே விழுந்து விடும். இந்த வேகத்தில் சுற்றிய சுற்று தளர்ந்து அந்தக் கயிறும் கதவின் கீழே ஒரு குப்பையைப் போல சின்னதாய் விழுந்துக் கிடக்கும். கைக்குட்டையால் ஒரு சேதியும் விளையாது.

என் படுக்கையில், தலையில் துளை போட்டு இறந்த நிலையில், என்னுடனிருந்தவர்கள் எழுதி வைத்த குறிப்புக்கு பங்கம் விளைவிக்காமல், நான் கிடப்பேன். நான் இறந்த நேரம் குறித்த பரிசோதனை முடிவு, இந்த ஏற்பாட்டில் அப்படி ஒன்றும் பெரிய குழப்பத்தை உண்டு பண்ணி விடாது.

கடலலை ஓய்ந்து சமனானதும், கடற்கரையிலிருந்து படகுகள் வரும்... மக்கள் வரலாம்...

அவர்கள், பத்து பிணங்களையும், எப்படி இறந்தார்கள் என்ற மர்மமே குதிராத ஒரு கொலை வழக்கையும், சிப்பாய் தீவில் எதிர் கொள்வார்கள்.

ஜஸ்டிஸ் லாரன்ஸ் வார்க்ரேவ்

(கையொப்பம்).

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

வேறு யாருமற்ற ஒரு தீவில்,
உல்லாசமாய் சில தினங்களைக்
கழிக்க முன் பின் அறிமுகமில்லாத
பத்து பேர் அழைத்துப் போகப்படுகிறார்கள்.
அன்று மாலையே, யாரென்று விளங்காத
ஒரு மர்மக்குரல், அவர்கள் பத்து பேருமே
மனச்சாட்சிக்கு விரோதமாய் குற்றங்கள்
செய்துள்ள துரோகிகள் என்று
குற்றஞ்சுமத்துகிறது.

யாருடையது அந்தக் குரல்?

மறுநாள் விடியும் முன்பு, பத்தில் ஒருவர்
கொல்லப்பட்டு விடுகிறார். அவர் செய்த
பாவத்துக்கான சம்பளம் என அந்த மர்மக்குரல்
சூசகமாய் சுட்டிக்காட்டி விடுகின்றது.
மீதமிருக்கும் ஒன்பது பேர் வயிற்றிலும்
- புளி கரைகின்றது!
யாருமற்ற தீவு அது, ஆகவே கொன்றிருப்பது
இருக்கும் ஒன்பது பேரில் ஒருவர் தான்.

அது யார்?

பத்து, ஒன்பது, எட்டு, ஏழு...
என எண்ணிக்கைக் குறைந்து கொண்டே போகின்றது -
மீதமிருப்பவர்களில் யாரந்தக் கொலையாளி
என்ற திடுக்கிடும் தேடலோடு!